


ஊரக வளர்ச்சிச் சிறப்பிதழ்
தமிழரசு








# தந்தை பெரியார் நூற்றாண்டு விழா

புதுக்கோட்டை

4-8-'79




85368

"எனக்கு" என்ற எண்ணம் வராமல் 'நமக்கு' என்ற எண்ணம் வரவேண்டும். அப்படிப்பட்ட எண்ணம் வளர்ந்தால் நாட்டில் ஒற்றுமை வளரும். சாதிக்கொள்கை ஒற்றுமையை ஏற்படுத்தாது. மதத்தின் பெயரால் தூய்மை தெரியவில்லை. தாழ்வு தான் தெரிகிறது. சாதி உணர்வுகளை அகற்ற இந்த விடுதலை நாளில் சூளுரை எடுப்போம்."

— மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி ஆர்.

(சென்னைக் கோட்டை கொத்தளத்தில் 15.8.79 தேசியக் கொடியேற்றி வைத்து ஆற்றிய உரையில்.)





# தமிழரசு

மலர் 10 இதழ் 5

1.9.1979


Verified

## ஊரகவளர்ச்சிச் சிறப்பிதழ்



# பெருமிதம் தரும் திருநாள்

என்னை வாழவைக்கும் தமிழகப் பெரியோர்களே! சுதந்திரத் தியாகிகளே! தாய்மார்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக்கள்.

ஒரு நாட்டின் வரலாற்றில் சுதந்திர தினம் என்பது பெருமிதத்துடன் குறிக்க வேண்டிய திருநாளாகும். இந்தியத் திருநாட்டைப் பொறுத்த வரையில் எண்ணற்றோரின் தியாகங்களுக்குப் பிறகு விடுதலைக் கனியை நாம் பெற்று, சுவைத்து, மகிழ்ந்து கொண்டு இருக்கின்றோம். விடுதலை பெற்ற நாம் முறையான பாராளுமன்ற ஜனநாயகத்துக்குச் சொந்தக்காரர்களாகி இருக்கிறோம். அமைதியாகப் பொதுத் தேர்தல்களை நடத்தி, மக்களுக்கும் ஆட்சிக்கும் இடையில் தொடர்பை நெருக்கமாக்கி—மக்களால், மக்களுக்காக மக்களது அரசு செயல்படுகின்ற ஜனநாயக அமைப்பு உருவாக்கப் பெற்றிருப்பது இந்தியத் துணைக் கண்ட மக்களின் அரிய சாதனைகளில் ஒன்றாகும்.

நாட்டு விடுதலைப் போரில் பெருந்தொண்டாற்றிய மூதறிஞர் ராஜாஜி மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று வற்புறுத்தியதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

மூதறிஞர் ராஜாஜி சொல்லுகிறார்:—

''மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கும்போது பிராந்தியச் சிந்தனைகள் குறைந்து போக வழி பிறக்கும். மத்திய அரசின் மீது பிராந்தியங்களின் நிர்ப்பந்தம் ஏற்படுவது குறைய முடியும். இதன் விளைவாகச் சிறு பிரச்சினைகளில் நேரத்தை வீணாக்காமல் பெரிய கொள்கை விஷயங்களிலும், திட்டமிடும் விஷயங்களிலும் மத்திய அரசு அதிகமான கவனத்தைச் செலுத்த சந்தர்ப்பம் ஏற்படும்.''

மூதறிஞர் ராஜாஜியின் இந்தக் கருத்தும் சுதந்திரத் திருநாளில் நாம் சிந்திக்கவேண்டிய ஒன்றாகும்.

**ஏழை எளியவர் நல்வாழ்வுக்காக...**

மாற்றங்களின்றி முன்னேற்றமில்லை. முன்னேற்றமில்லையேல் வரலாறு இல்லை. மாறுதல் என்பது சிறப்பாக அமையும்போது தான், அதுவே முன்னேற்றத்திற்கான சீரான பாதையினையும் அமைத்துக் கொடுத்துவிடுகிறது. சமூக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும், அதன் பலன்கள் ஏழை எளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்.

தமிழ்ச் சமுதாயத்தில் 90 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் பரம ஏழைகள். இவர்களில் பலருக்கு வயிறார உணவு கிடைப்பதில்லை. இருக்க இடமில்லை. குடிநீர் வசதி போதுமான அளவில் இல்லை. தமிழக அரசின் திட்டங்கள் அனைத்தும் இவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் கவனம் வைத்தே போடப்பட்டு வருகிறது.

மக்கள் நல்வாழ்வுக்குக் கல்வி வளர்ச்சி அவசியம். அந்தக் கல்வி வளர்ச்சியைப் பெற, வறுமை தடையாக இருந்து விடக்கூடாது. வறுமை நிலையை வருமானத்தைக் கொண்டு தான் அளவிட்டு அறிய வேண்டியுள்ளது. எனவே, கல்விச் சலுகையின் பலன் ஏழை, எளியோருக்குக் கிடைக்க வருமான வரம்பை நிர்ணயிப்பது அவசியமாகிறது.

பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் சமுதாயத்தைப் பற்றிக் கூறியுள்ள உண்மைகள் ஒன்றிரண்டை இங்கே குறிப்பிட விழைகிறேன்.

பேரறிஞர் அமரர் அண்ணா அவர்கள் தனது சட்டப்பேரவை உரையில் இந்தக் கொள்கையினைச் சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.



## முதல்வர் உரை

அண்ணா சொல்கிறார்:

''இலவசக் கல்வி என்று நாம் தத்துவ ரீதியாகச் சொல்லுகிறபோது பணமில்லை என்பதற்காக, ஒரு மாணவன் மேலே படிப்பதற்குரிய வாய்ப்பை இழந்துவிடக் கூடாது. ........................................கல்வியை இலவசமாகச் செய்து விடலாம் என்று சொல்கிறார்கள். பாகுபாடே பார்க்காமல் இருப்பது நல்லது தான். சில விஷயங்களில் பாகுபடுத்தத்தான் வேண்டியிருக்கிறது. நெல்லும், பதரும் ஒன்றாகத்தான் இருக்கும். நெல்லைப் பாகுபடுத்திப் பார்க்கத்தான் வேண்டும். கல்லும், அரிசியும் ஒன்றாகத்தான் இருக்கும். கல்லை அரிசியிலிருந்து விலக்கத்தான் வேண்டும்.''

அண்ணா அவர்களின் அணுகு முறையைத்தான் தமிழக அரசு கடைப்பிடித்துச் செயல்பட்டு வருகிறது. பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் காண விரும்பிய சமத்துவச் சமுதாயத்தைக் காண்பதில் ஏற்படுகின்ற தடை எதுவானாலும் அதை அப்புறப்படுத்தி செயல்பட தமிழக அரசு உறுதிபூண்டுள்ளது. சலுகைகள் ஓர் அரசு வெளியிடும்போது அந்தச் சலுகைகள் யாருக்காக வெளியிடப்படுகின்றனவோ அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும். இல்லாவிட்டால் அரசின் நோக்கம் பூர்த்தியடையாது. இந்தக் கருத்தினை அண்ணாவே சட்டப் பேரவையில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

''சர்க்கார் மூலமாகக் கிடைக்கின்ற சலுகைகள் ஏற்கெனவே சமுதாயத்தில் வசதியோடு உள்ளவருக்குப் போய்ச் சேரவேண்டும். அதுதான் சமத்துவம் என்று யாராவது சொல்லுவார்களேயானால் அந்தச் சமத்துவத்தைப் பற்றி, அதனுடைய இலக்கணத்தைப் பற்றி, மறுபடியும் படிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்''.

—என்று அண்ணா அவர்கள் கூறியுள்ளதை எனது மதிப்பிற்குரிய நண்பர்களுக்கு இந்த நேரத்தில் நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். பெரியாரும், ஜாதியில் தாழ்த்தப்பட்டவர்கள் பொருளாதார விடுதலை பெறுவது அவசியம் என்று அடித்துச் சொல்லி இருக்கிறார்கள்.

1938-ல் ஆதித் திராவிடர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பெரியார் அவர்கள்,

''உங்களுடைய கிளர்ச்சியானது பொருளாதாரத் துறையில் நீங்கள் மற்றவர்களால் ஏமாற்றப்படுவதும், வஞ்சிக்கப்படுவதும் ஒழிய வேண்டுமென்பதையே அஸ்திவாரமாகக் கொண்டிருக்க வேண்டும். அதில் தான் உங்களது விடுதலை இருக்கிறது.''

எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக அரசைப் பொறுத்த மட்டில் பெரியார் அவர்களின் கொள்கைப்படி பேரறிஞர் அமரர் அண்ணா காட்டிய வழியில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழை எளிய மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

தமிழகத்தின் நாலரைக் கோடி மக்களில் பாதிக்கப்பட்ட சில ஆயிரம் பேர் மட்டுமே எதிர்க்கிறார்கள் என்பதற்காகத் தமிழகஅரசு அண்ணாவின் பாதையிலிருந்து மாறிச் செயல்படாது என்று உறுதியுடன் கூறிக் கொள்கிறேன். மத்தியில் நிலையான ஆட்சி இருந்தால் தான் மாநிலங்கள் மக்கள் நலனுக்கான பணிகளில் அமைதியுடனும், ஆர்வத்துடனும் ஈடுபட முடியும்.

மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள், தேசிய மொழிகள் -அனைத்துக்கும் சமநிலை, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களின் முன்னேற்றம், உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகள் காக்கப்படுதல், தேர்தல்களில் தாய்க்குலத்திற்கென்று குறைந்தது தொடக்கத்தில் இருபத்தைந்து சதவிகிதமாவது தனித்தொகுதி ஏற்படுத்துதல், மதுவிலக்கை உறுதியுடன் அமல் செய்தல் போன்ற அடிப்படைக் கொள்கைகளை வைத்துத்தான் தமிழக அரசு சில பல நிலைகளை மேற்கொண்டு வருகிறது. இதில் சந்தர்ப்பவாதத்துக்குத் துளியும் இடமில்லை.

மதுவின் கொடுமையை ஒழிக்க வேண்டுமென்பதில் அண்ணல் காந்தியடிகள் பிடிவாதமாக இருந்தார். பெண்களும், மாணவர்களும் மதுக்கொடுமையை ஒழிப்பதில் தீவிர பங்கேற்க வேண்டும் என்று விரும்பினார். இந்த அரசைப் பொறுத்தவரையில் குடிப்பவர்கள் மீது அனுதாபமே தவிர ஆத்திரமில்லை. பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் தொல்லை கொடுக்காத குடிப்பழக்கமுள்ளவர்களைத் திருத்த விரும்புகிறதே தவிர தண்டிக்க விரும்பவில்லை. ஆனால், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், கடத்துபவர்கள், விற்பவர்கள் இவர்கள் சமூகத்தையே பாழ்படுத்துகின்றவர்கள். இவர்களை மக்களே காவல்துறையினருக்கு அடையாளம் காட்ட முன் வர வண்டும்.

''தாய்க்குலமும், மாணவர்களும் மதுவிலக்கை வெற்றி பெறச் செய்வதில் சிறப்பான தொண்டாற்ற முடியும். குடிப்பழக்கம் உடையவர்களிடம் அன்பு செலுத்துவதன் மூலமாகவும், அவர்களுக்கான நற்பணிகளில் ஈடுபடுவதன் மூலமாகவும் அவர்களுடைய மனத்தைத் திருத்தி நல்வழிப்படுத்த இவர்களால் முடியும்'' என்று காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்.


காந்தியடிகளின் புத்திமதியைச் சுதந்திரத் தின நாளில் நினைவுபடுத்துவது பயனுடையதாக இருக்குமென்று கருதுகிறேன்.

நமக்கு வழி காட்டிச் சென்றுள்ள பெரியோர்களின் கருத்தை மனத்தில் கொண்டு ஏற்றத்தாழ்வற்ற, சாதி பேதமற்ற சமுதாயத்தை நிறுவ நாம் அனைவரும் இந் நன்னாளில் சூளுரை மேற்கொள்வோமாக!

வாழ்க இந்திய சுதந்திரம்!

வாழ்க அண்ணா நாமம்!

**[விடுதலை நாள் விழாவை முன்னிட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 15-8-1979 அன்று தொலைக் காட்சியிலும், வானொலியிலும் ஆற்றிய உரை]**



# தனிச் சரிதம் படைத்து வரும் ஊராட்சி நிறுவனங்கள்

**மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் 'தமிழரசு' இதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டி.**

* ஊர்வளர்ச்சி என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. தங்களுடைய விளக்கம் என்ன?

கிராமங்களை எல்லா துறைகளிலும் வளர்ச்சி பெறச் செய்து, கிராம மக்களை மகிழ்ச்சியுடன், தன்னிறைவான கிராமத்தில் வாழ வழிவகை செய்வதே ஊர்வ்ளர்ச்சி என்று பொதுவாகக் கூறப்படுகிறது.

ஆனால் ஒவ்வொரு கிராமத்தையும், அதன் தேவைகளைப் பற்றியும் நன்கு அறிந்து செயல்படக் கூடியவர்கள் அக் கிராமத்தின், மக்களேயாவர். இதில் இளைஞர்களும், மகளிரும் நன்கறிந்தவராயிருப்பார்கள்.

ஆனால், தற்போதிருக்கும் சூழ்நிலையிலே, இவ்விரு சாராரும் வாளா விருக்கின்றனர். திறமை, ஆற்றல் மிகுந்த இவர்களிடையே வெளிப்படாவண்ணம் மறைந்து கிடக்கும் தலைமைத் தன்மையை வெளிக் கொணர்ந்து, அவற்றிற்குச் செயல் உருவம் தந்து திட்டங்கள் தீட்டி, நிறைவேற்றப்பட்டால், கிராமங்களின் இன்றைய நிலை மேலும் வளம் பெறும்; வலுப் பெறும்; நிறைவடையும்.

* மக்களின் ஒத்துழைப்பில்தான் ஊராட்சித் தத்துவத்தின் வெற்றி அடங்கியுள்ளது என்பது உண்மை. மக்களிடமிருந்து தாங்கள் எத்தகைய ஒத்துழைப்பை எதிர் பார்க்கிறீர்கள்?

தேவைகள், வாழ்க்கை வசதிகள் நாள் தோறும் பெருகிக் கொண்டே வருகின்றன. அவை ஒரு நிலையில் முற்றுப் பெறுவதில்லை. எனவே, வளர்ச்சி என்பது முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டியதொரு தொடர்ந்த செயலாகும். இதில் அரசியலுக்கோ, சாதி, சமய, ஏழை செல்வந்தர் போன்ற வேறுபாடுகளுக்கோ சிறிதும் இடமேயில்லை; இடம் தரவும் கூடாது. கிராம மக்கள் தங்களுடைய கிராமங்களின் வளர்ச்சியையே முழுநோக்காகக் கொண்டு முழு ஒத்துழைப்பைத் தர வேண்டும். அரசு மேற்கொள்ளும் அனைத்துத் திட்டங்களுக்கும் அவர்கள் உளமார்ந்த ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்பது என்னுடைய அவா.

* பிற மாநிலங்களுக்கும் நமது மாநிலத்திற்கும் ஊர்வளர்ச்சி முன்னேற்றத்தில் வேறுபாடு ஏதேனும் உள்ளதா? அந்த வேறுபாடுகளில் விளைந்துள்ள முன்னேற்றம் குறித்து தங்கள் கருத்து யாது?

பற்பல வேறுபாடுகளைக் கூறலாம். ஆனால் குறிப்பாக இரண்டு வேறுபாடுகளைக் கூற விரும்புகிறேன். பிற மாநிலங்களில் ஊராட்சித் தலைவர்கள் மக்களாலேயே நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. தமிழகத்தில் ஊராட்சித் தலைவர்கள் அனைவரும் நேரடியாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இம்முறையால் ஊர்ப்புறங்களில் தலைவர்களிடையே பொறாமையும், பூசலும் வெகுவாகக் குறைந்துவிட்டதை நாம் கண் கூடாகக் காண்கிறோம். இதே முறையில் ஒன்றியப் பெருந்தலைவரைத் தேர்ந்தெடுப்பதிலும் கொண்டுவர முனைந்துள்ளோம். இவற்றால் சிறந்த, நிறைந்த பயன்கள் கிட்டும் என்பது உறுதி.

மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் தமிழகத்தில் ஆலோசனைகள் கூறும் ஒரு மன்றமாகவே செயலாற்றுகிறது. இம்மன்றங்களுக்கு நிர்வாக அதிகாரங்கள் அளிக்கப்படவில்லை. மற்ற மாநிலங்களில் இம்மன்றங்கள் அதிகாரங்களைப் பெற்று செயலாற்றி வருகின்றன. இம்முறை சிறப்புடன் இயங்கவில்லையென்று அம் மாநிலங்களைச் சார்ந்தவர்களே கூறுகின்றனர்.

இவ்விரண்டு வேறுபாடுகளினால் தமிழகத்தில் சிறந்த முன்னேற்றம் விளைந்துள்ளது.

* குடிநீர்ப் பிரச்னை இன்று வரை முழுவதும் தீர்க்க முடியாததாகக் குறை காணப்படுகிறது. அந்தப் பிரச்னையைச் சமாளிக்க அரசு கையாளும் வழி முறைகள் யாவை?

இன்று வரை தீர்க்க முடியாததாகக் கூறுவது தவறாகும். இவ்வரசு பதவி ஏற்ற நாளிலிருந்து இக்குறை தீவிரமாகத் தீர்க்கப் பட்டு வருகிறது என்பதை மக்கள் நன்கறிவர். இந்த ஆண்டின் இறுதியில் நல்ல குடிநீர் வசதி இல்லாத குடியிருப்பே இல்லாமல் ஆகி விடும் என்று திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன்.

ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை நீர் நிலைகளே இல்லாத அல்லது குடிக்கத் தகுதியற்ற நீர்நிலைகள் மட்டுமே உள்ள குடியிருப்புக்கள் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டு, குடிநீர் வசதி செய்து தரப்பட்டு முடியும் தறுவாயிலுள்ளது. இவை 5,783 குடியிருப்புகளாகும். இவற்றில் வாழும் மக்கள் தொகை 17 இலட்சம். இவ்வாண்டு மார்ச்சு 31 முடிய 6.5 இலட்சம் மக்கள் அடங்கிய 2866 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப் பட்டுள்ளது. எஞ்சியுள்ள குடியிருப்புகளுக்கு இவ்வாண்டு முடிவிற்குள் குடிநீர் வழங்கப் பட வேண்டும். இது தவிர 27 இலட்சம் மக்கள் தொகை அடங்கிய 3 வகைக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.



இத்திட்டங்களுக்காக இந் நிதியாண்டில் ரூ. 600 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலமாக ரூ. 150 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினையும் ஒருங்கிணைந்து வேகமாக வேலைகள் மேற்கொள்ளப்படும்.

* அகில இந்திய அளவில் சிறந்த கிராமமும் சிறந்த கிராம சேவிகாவும் தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது குறித்து தங்கள் கருத்து என்ன?

அனைத்திந்திய அளவில் சிறந்த கிராமங்கள் சிறந்த முக்கிய சேவிகாவைத் தேர்ந்தெடுப்பதற்கென, இந்திய அரசு கையாளும் முறை,





மிகக் கடினமானதாகும். பற்பல தகவல்களை மைய அரசு சேகரித்து, அவற்றினை வல்லுனர் குழுவொன்று, புள்ளி விவர அடிப்படையில் ஆய்ந்து, மதிப்பெண்கள் அளித்து, நாட்டளவிலே சிறந்த முக்கிய சேவிகாக்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். இம்முறை எளிதானதே அல்ல.

எனவே, தமிழகத்திலிருந்து சிறந்த கிராமமும், முக்கிய சேவிகாவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், அவற்றிற்காக நாம் பெருமையடைவதில் வியப்பேதுமில்லை.

இப் பெருமை அந்தந்தக் கிராமங்கள், முக்கிய சேவிகாவிற்கு மட்டுமல்ல. தமிழக மக்கள் அனைவருக்கும் உண்டு.

மேலும் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் உழைப்பினால்தான் இப்பெரும் பரிசுகளை நாம் பெற முடிந்தது. அந்நிறுவனங்களையும் நாம் பாராட்டத் தவறக்கூடாது.

* நெல்லை மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டு வரும் கிராம முழு வளர்ச்சித் திட்டம் பற்றித் தங்கள் மேலான கருத்துக்கள் யாவை?

நெல்லை மாவட்டத்தின் மேலநீலித நல்லூர் ஒன்றியத்திலுள்ள சின்னகோயிலான் குளம், பெரிய நடுவக்குறிச்சி, சிறிய நடுவக்குறிச்சி, பட்டாடைக்கட்டி ஆகிய கிராமங்களில் கிராம முழு வளர்ச்சித் திட்டம் செயலாக்கப்படுகிறது.

கிராம சமுதாயம் முழுவதிலும் வளர்ச்சியை உண்டு பண்ணுவதையும், கிராமப் பிரச்சினைகளைத் தீர்ப்பதையும் கிராம முழு வளர்ச்சித் திட்டம் நோக்கங்களாகக் கொண்டுள்ளது. கிராமம் மற்றும் கிராமச் சமுதாயத்தின் வளர்ச்சியே இத் திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்தைப் பல சூழ்நிலைகளில் செயலாக்குவதன் மூலமாகக் கிடைக்கக் கூடிய போதுமான அனுபவத்தைக் கொண்டு சில மாதிரிகளை உருவாக்கி இதை நாடு முழுவதும் செயலாக்குவதே இத்திட்டத்தின் மற்றும் ஒரு குறிக்கோளாகும். முதல்படியாக வேளாண்மையிலும் இரண்டாவது படியாக வேளாண்மை அல்லாத இதர துறைகளின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தப்படுவதால் கிராமப் புறத்திலுள்ள அனைத்து மக்களும் பயன் பெறுவர்.

* இத்திட்டம் பிற முன்னேற்றத் திட்டங்களைக் காட்டிலும் எவ்வாறு மாறுபடுகிறது?


அரசு பற்பல திட்டங்களைச் செயல்படுத்துகிறது. பெரும்பாலான திட்டங்கள் வாயிலாக, பயனடைவோர்க்குக் கடன், உதவித்தொகை, குறைந்த விலையில் உழுபடைக் கருவிகள், உரம், பூச்சி மருந்துகள் போன்றவை அளிக்கப்படுகின்றன. கடன்கள் நேரடியாகவே அளிக்கப்படுகின்றன. ரொக்கமாகக் கொடுக்கப்படும் கடன்களுக்குச் சிறிது வட்டியும் வசூலிக்கப்படுகிறது.

ஆனால் கிராம முழுவளர்ச்சித் திட்டத்தில் நூறு சதவீத மானியத்தை இந்திய அரசு அளிக்கிறது. பயனடைவோர் வட்டியில்லாமல் சுலபத் தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டும். சிறு விவசாயிகள் மேம்பாட்டுக் குழு மூலமாக மாநில அரசு அளிக்கும் உதவித் தொகை தனிப்பட்டவருக்கு அளிக்கப்படுவதில்லை. திட்டத்தைச் செயல்படுத்தும் குழுவிடம் அளிக்கப்படும். அதை ஈடுகட்ட பயனடைவோர் தாம் பெற்ற கடனை ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில் வட்டியில்லாமல் செலுத்திவிடலாம். திருப்பிச் செலுத்தப்பட்ட பணம், திட்டத்தைச் செயல்படுத்தும் குழுவே அதன் நிதியுடன் சேர்த்து மீண்டும் பயனடைவோருக்கு அளிக்க வாய்ப்புள்ளது.

அட்டைப்படம்:

உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மானாம்பதி குடிநீர்க்குளம், 'உழைப்புக்கு உணவு' திட்டத்தின் கீழ் ஆழமாக்கப்பட்டது.





இத்திட்டத்தால் பல திறப்பட்ட வருமானங்களை உடைய 1,102 குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன. இதனால் 4 விழுக்காடாக இருந்த வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 8 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

மேலும் இந்தக் கிராமங்களில் எல்லாம் கிராமதானங்களானதினால் கிராமச் சபைகள் இத்திட்டங்களை நிறைவேற்றுவதில் மிகச் சிறப்பாகப் பொறுப்பேற்றுப் பணியாற்றுகின்றன.

* தமிழகத்தில் நடைபெறும் உள்ளாட்சி அமைப்புகளையும் திட்டங்களையும் கண்டறிவதற்காகவும் பின்பற்றுவதற்காகவும் வெளிமாநில அலுவலர்களும் அமைச்சர்களும் அடிக்கடி தமிழகம் வரும் செய்திகளைக் காண்கிறோம். அவ்வாறு வெளிமாநிலத்தவரையும் கவரும் வண்ணம் அமைந்துள்ள சிறப்பு அம்சங்கள் என்னென்ன?

தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களின் அமைப்பு நிதி வசதி ஏற்பாடு, அதிகார முறை போன்ற அனைத்துமே வெளிமாநிலத்தவர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

எனினும் குறிப்பாகச் சில அம்சங்களைக் கூறலாம்.

முதலில் அவர்களைக் கவர்ந்தது திட்டவாரியான நிதிநிலை ஏற்பாடாகும். ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத் தொடர்பான வளர்ச்சித் துறைகளின் நிதி ஒதுக்கீடுகள் வளர்ச்சிப் பணிகளைப் பொறுத்தவரையில் ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகும். ஒன்றியங்களின் நிதிநிலையினை நாம் நோக்கும்போது, ஒவ்வொரு துறையும் இன்னின்ன பணிக்கென இவ்வளவு தொகைகளை ஒன்றியங்களுக்காக அளித்துள்ளதென்பது தெளிவாகத் தெரியும். இவ்வேறுபாட்டால், ஒன்றியங்கள் அரசுத் துறைகளை அவ்வப்போது எதிர் நோக்காது முனைந்து செயலாற்ற முடிகிறது.

இரண்டாவது சிறப்பு அம்சமாகக் கூறுவது ஒன்றியங்களுக்கும் ஊராட்சிகளுக்கும் அளிக்கப்படும் இணை மானியமாகும். உள்ளாட்சி நிறுவனங்கள் திரட்டும் வரித் தொகைகளுக்கேற்ப, மானியங்களை அளிக்கும் ஏற்பாடு வேறு மாநிலங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. இதனை அவர்கள் வெகுவாகப் புகழ்கின்றனர்.

பிற மாநிலங்களில் அரசின் பல்வேறு துறைகள், அவற்றிற்கெனத் திட்டங்களைத் தீட்டிக் கொண்டு, ஊராட்சி அமைப்புகளைத் தழுவிக் கொள்ளாமலேயே திட்டங்களை நிறைவேற்றிக் கொள்கின்றன. இதனால் ஊராட்சி நிறுவனங்களுக்கும், அரசுத் துறைகளுக்கும் சச்சரவுகள் ஏற்படுகின்றன.

ஆனால் தமிழ்நாட்டிலோ இந்நிலையில்லை. வளர்ச்சித் துறைகளின் விரிவாக்க அலுவலர்கள், ஊராட்சி ஒன்றியங்களிலேயே வட்டார வளர்ச்சி அலுவலரின் தலைமையில் ஒருங்கிணைந்து, பணியாற்றி சீரிய முன்னேற்றம் காண்கிறோம். இதனால் பலவித இடையூறுகளும் தவறுகளும் தவிர்க்கப்படுகின்றன அல்லவா?

நான் ஏற்கெனவே கூறியது போல, மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் செயல் முறையையும் பெரிதும் போற்றுகின்றனர்.

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் நிதிகள் வெவ்வேறு கணக்குகளாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளன. ஊராட்சிகளுக்குத்

தேவையான பணத்தை, ஊராட்சித் தலைவர்கள், ஒன்றிய ஆணையர்களிடமிருந்து, காசோலை மூலமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் ஒன்றியத்திற்குத் தேவையான தொகைகளை ஆணையர்கள் கருவூலத்தின் மூலம்தான் பெற வேண்டும். இவ்வாறு தனித்தனியே நிதிகள் வைக்கப்பட்டிருப்பதால், ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய நிதிகளுக்குச் சிறந்த பாதுகாப்புக் கிடைக்கிறது. இச்சிறந்த முறையைப் பிற மாநிலத் தலைவர்கள் மிகவும் புகழ்கின்றனர்.



இறுதியாகக் கூறுவோமாயின், தமிழக உள்ளாட்சிகள் சட்டமே ஒரு புதுமையானதாக அவர்களுக்குத் தோன்றுகிறது.

* மகளிர் நலனுக்காக ஊரக வளர்ச்சித் துறை ஆற்றுகின்ற சிறப்பான பணிகள் யாவை?

1962-63-ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே, ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் வீதம், ஊராட்சி ஒன்றியத்திற்குக் குறைந்தது 30 மன்றங்கள் ஊர்ப்புறங்கள் அனைத்திலும் நிறுவப்பட்டுள்ளன. இம்மன்றங்களின் மூலம் மக்களிடையே கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. தற்போது கிராமப்புறப் பகுதிகளில் 12,308 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. வாழ்க்கையில் முன்னேற சிறப்பான வழிமுறைகளை அம்மன்றங்களின் மூலம் கற்று வருகின்றனர். மகளிர், குழந்தைகள் நலத்தைப் பேணுவதற்கெனத் தற்போது ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 4,000 ஒதுக்கப்படுகிறது.

* அரசின் பல்வேறு வளர்ச்சித்துறைகளும் ஊரக வளர்ச்சித்துறையுடன் இணைந்து செயலாற்றுகின்றன. அவை மேலும் வலுப்பெற்றுச் சிறப்பாக ஒருங்கிணைந்து செயலாற்ற தாங்கள் கூறும் கருத்துக்கள் யாவை?

ஊரக வளர்ச்சித் துறையுடன் பல்வேறு துறைகளும் இணைந்து செயலாற்றுவதாகக் கூறுகிறீர்கள். மிக்க மகிழ்ச்சி.

இப்போதே பல துறைகளும் சிறப்பான முறையில், நெருக்கமாக, சுமுகமாக ஆர்வத்துடன் திட்டங்களை நிறைவேற்றுகின்றன. மேலும் வலுப்பெற ஆவன செய்வோம்.

* வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களின் நல்வாழ்விற்கு உள்ளாட்சித்துறை மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்து தங்கள் கருத்து யாவை?

5 பேர்களை உள்ளடக்கி, மாதம் ரூ. 400-க்குக் குறைவாக வருவாய் பெறும் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்கள் என்கிறோம்.

இக்குடும்பங்களின் தேவைகளை அறிந்து அவர்களின் ஆர்வத்திற்கேற்ற முறையில் தொழில்களை அமைத்துத் தருகிறோம். சான்றாக கோழி, மாடு, ஆடு, பன்றிப் பண்ணைகள் ஏற்படுத்திக் கொள்ள உதவி செய்வதுடன், உழவுக் கருவிகளையும் அரசு அளிக்கிறது. குடிசைத் தொழில்களில் இவர்கள் ஆர்வம் காட்டினால், அவற்றிற்கும் உதவி செய்ய அரசு தயாராக உள்ளது.

இவை போன்ற பல்வேறு திட்டங்களால் அவர்களுக்குக் கூடுதல் வருவாய் கிடைப்பது உறுதி.

## கிராமங்களில் வேலை உத்தரவாதத்திட்டம்



தமிழ்நாட்டில், குறிப்பாகக் கிராமப்புறங்களில் வறுமையை ஒழிக்கவும், வேலை இல்லாத் திண்டாட்டத்தை நீக்கவும் தமிழ்நாடு அரசு பல்வேறு ஆக்கத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இப்போது புதிதாகக் கிராமப்புற வேலை உத்தரவாதத் திட்டத்தைச் செயல்படுத்தத் தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டம் பற்றி ஏற்கெனவே 1979–80-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டது.

கிராமப்புற வேலை உத்தரவாதத்திட்டத்தின்படி, 18 வயதுக்கு மேற்பட்ட எல்லோரும் அந்தந்தக் கிராமங்களில் உள்ள கிராம சேவக்குகளிடமோ ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலோ பதிவு செய்து கொள்ளலாம். சாதாரணமாகப் பதிவு செய்த 30 நாட்களில் அந்தந்த மாவட்டத்திற்குள் வேலை வாய்ப்பு வசதி செய்து கொடுக்கப்படும். செய்கின்ற வேலை அளவின் அடிப்படையில் சம்பளம் கொடுக்கப்படும். சாதாரணமாக, சம்பளத்தில், குறைந்தது 50 சதவிகிதம் உணவு தானியமாகக் கொடுக்கப்படும்.

இத்திட்டம் சம்பந்தப்பட்ட எல்லா முடிவுகளையும் மேற்கொள்ள உயர்தரக் குழு ஒன்று தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையில் நியமிக்கப்படும். பாசனத் துறையின் தலைமைப் பொறியாளர், இக்குழுவின் உறுப்பினர்-செயலாளர் ஆக இருப்பார். மாநில அளவில் இத்திட்டதை நிறைவேற்றும் பொறுப்பு இக்குழுவைச் சார்ந்தது. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் இத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக்கொள்வார். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எல்லா வேலைகளையும் நிறைவேற்றுவதற்கு வளர்ச்சித் துறைகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவி அளிக்கும். எல்லாத் துறைகளும் இத்திட்டத்தில் முழுமையாக ஈடுபடும். மாநில அளவில் உள்ளாட்சி–ஊர்வளர்ச்சித் துறை இத்திட்டம் செயல்படுவதைக் கவனித்துவரும்.





# உழைப்புக்கு உணவு

புதிதாகப் போடப்பட்ட பாடிச்சேரி – ராமாபுரம் சாலை.

உழைப்பதற்காக உண்பதும், உண்பதற்காக உழைப்பதும் மனித வாழ்வில் இயற்கை சுழற்றி விட்ட சக்கரமாகும். இச்சக்கரம் மனிதன் மண்ணுலகில் தோன்றிய காலத்திலிருந்தே சுழன்றுகொண்டிருக்கிறது. அது எப்போதுமே சுழன்று கொண்டிருக்கும். அதற்கு ஓய்வு கிடையாது.

உணவை நாடும்போது உழைக்க வேண்டும் என்ற எண்ணம் மனிதன் சிந்தனையில் துளிர்க்கிறது. அவ்வெண்ணம் செயலாக்கம் பெறும்பொழுது, உழைப்புக்கு ஈடாக வரும் காசுகளும், காகித நோட்டுக்களும், வயிறு ஏற்கும் வகையான உணவுப் பொருட்களை வாங்க உதவுகிறது. பசி அடங்குகிறது. பசிக்கும்போது உழைக்க வேண்டும் எனத் தோன்றும் எண்ணம் பசி பறந்ததும் ஓய்வெடுக்கத் தூண்டுகிறது. ஆனால் அத்தகைய ஓய்வு, காலைப் பனி நீரைப் போன்றது தான். குடலென்னும் மேகக் கூட்டத்தில் மீண்டும் பசிக் கதிரவன் தம் வெம்மை பரப்பும் போது ஓய்வு மறைய, உழைப்பு எண்ணம் குமிழிடுகிறது.

அத்தகைய உழைப்புக்கும் உணவுக்கும் இடையிலுள்ள எண்ணற்ற இடையூறுகளைக் களைந்தெறிவதற்காகவே அறிமுகப் படுத்தப்பட்ட திட்டம்தான் 'உழைப்பிற்கு உணவுத் திட்டம்'.

ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வெங்கட்ரங்கம் பிள்ளை சத்திரம் குடிநீர்க்குளம் 'உழைப்புக்கு உணவு' திட்டத்தின் கீழ் தூர் வாரப்பட்டது.

உழைப்பிற்கு உணவுத்திட்டம் மைய அரசால் 1977-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்

டி.வி. வாசுதேவன், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்
ஊரக வளர்ச்சி- உள்ளாட்சித் துறை





தில் மைய அரசு மாநிலங்களுக்குக் கோதுமையையும், மைதாவையும் இலவசமாகவே அளித்து வந்தது. நிலையான சமுதாய நற்பணிகளை உண்டாக்கவேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தில் கோதுமை மட்டுமே வழங்கப்பட்டதால், அரிசியை உணவாகக் கொள்ளும் தமிழகம் இதில் பங்கேற்றுப் பயனடைய இயலவில்லை.

எனவே தமிழகஅரசு இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு, நம் மாநிலத்திற்கு அரிசியை அளித்தால் 'உழைப்பிற்கு உணவு திட்டத்தைச் செம்மையாக நிறைவேற்றி, கிராம மக்களுக்குப் பெரிதும் பயன்கிட்டச் செய்யலாமென்று கருதியது.

தளரா முயற்சிக்குப் பின்னர், நம்முடைய அரசு இதில் வாகை சூடியது. அதற்கேற்ப, தமிழ் நாட்டிற்கு 66,300 டன் அளவு அரிசி வேண்டுமெனக் கோரப்பட்டது. மைய அரசு 1979-80 ஆம் ஆண்டிற்கெனத் தற்போது 47,000 டன்களை நமக்கு அளித்துள்ளது. இதில் 30,000 டன்கள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்கள் :—

*(அ) ஊர்ப்புற மக்கள் சோம்பித் திரியாமல் சுறுசுறுப்புடன் உழைக்கத் தூண்டுவது.*

*(ஆ) ஊர்ப்புறங்களில் உயிரோட்டமான பாசன அமைப்புகள், சாலைகள் ஆகியவற்றை நிரந்தர சொத்துக்களாகப் பராமரித்தல்.*

(இ) பொதுப்பணி அமைப்புகளை பொலிவுடன் காத்தல்.

(ஈ) இருப்பிலுள்ள உணவு மணிகளை உழைப்பவர்க்கு அளித்தல்.

'உழைப்பிற்கு உணவு திட்டம்' பிற திட்டங்களிலிருந்து பெரிதும் மாறுபடுகிறது. வேலை செய்வோருக்குரிய தானியங்கள் அவர்களுக்கே நேரிடையாகத் தரப்படுகின்றன. இடைப்பட்டதரகர்களுக்கோ, குத்தகைக்காரர்களுக்கோ இதில் சிறிதும் இடமேயில்லை. எவ்விதச் சூழ்நிலையிலும் உணவு தானியங்கள் குத்தகைக் காரர்கள் மூலமாக வழங்கப்படவே மாட்டாது. இதன் பயனாக, உழைப்பிற்கேற்ற ஊதியத்தை, அவர்கள் நேரிடையாக அதிக அளவிலேயே பெற்றுப் பயனடைகின்றனர்.

இத்திட்டத்திற்காகும் உணவு மணிகளை மைய அரசு அளித்த போதிலும் இதை நிறைவேற்றும் பெரும் பொறுப்பை மாநிலங்கள் ஏற்று நடத்துகின்றன.

இத்திட்டத்தின் மூலம், பெரிய சிறிய பாசனத் திட்டங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்படுகின்றன. ஏற்கெனவே நடைமுறையிலுள்ள பாசன அமைப்புகளுக்கு புதுப்பொலிவூட்டப் படுகின்றன. வெள்ளத் தடுப்புப் பணிகள் விரைவுபடுத்தப்படுகின்றன. நெளிந்து கிடக்கும் நிலப்பகுதியின் கூன் முதுகுகள் நிமிர்த்தி விடப்படுகின்றன. அவை, கலப்பை முத்தமிடும் போது நாணத்துடன் நெகிழ்ந்து கொடுக்கும் நிலைக்கு பக்குவப்படுத்தப்படுகின்றன. சிறு நீர்த் தேக்கத் திட்டங்கள் காகிதக் கட்டோடு முடிந்து விடாமல் நனவாகத் தோற்றுவிக்கப்படுகின்றன. பள்ளிக்கட்டிடங்கள் நிமிர்ந்தெழுகின்றன. சாலைகள் மேம்படுத்தப்படுகின்றன. சிற்றூர்களுக்கெல்லாம் போக்குவரத்து வசதிகள் அதிகப்படுத்தப்படுகின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல திட்டங்கள் நனவாக்கப் படுகின்றன. இதனால் உழைக்கும் வர்க்கத்தினர் நாளொன்றுக்குப் பத்தாயிரம் பேர் பயனடைகின்றனர்.

**'ஊர்ச் சொத்து' நமக்கு உரிய சொத்து என்ற பொது எண்ணத்தை மக்கள் மனத்தில் வேரூன்றச் செய்து, மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தி பண நடமாட்டத்தைக் குறைத்து அதனால் பண வீக்கத்தை அகற்றி வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளைச் சமப்படுத்தும் இத்திட்டம் கிராமப்புற வளர்ச்சியின் புதிய மைல் கல்!**

**முதன் முதலாக சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தில் 'உழைப்புக்கு உணவு' திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.**





# கிராம மக்களுக்குக் குடிநீர்

—கே. மாதவ சர்மா, ஐ.ஏ.எஸ்.,
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

நமது நாட்டில் பெரும்பாலான கிராமங்களில் குடிநீர் நிலைகளே இல்லாமல் தொலை தூரங்களில் உள்ள குடிநீர் நிலைகளில் இருந்து தண்ணீர் கொண்டு வருகின்ற இடர்ப்பாட்டினை மக்கள் அனுபவித்து வந்தனர். பல கிராமங்களில், குறிப்பாகக் கடற்கரையோரப் பகுதிகளில், கிடைக்கும் தண்ணீர் உவர்ப்பாகவும் குடிக்கத் தகுதியற்றதாகவும் இருப்பதன் காரணமாக, தொலை தூரங்களிலுள்ள பாதுகாக்கப்படாத மாற்று நீர் நிலைகளை மக்கள் நாடவேண்டியிருந்தது. இதனால் கிராம மக்கள் காலரா, டைபாய்டு, டயரியா முதலிய நோய்களுக்கு ஆளாகி விடுகின்ற அவல நிலை இருக்கின்றது. அத்துடன், பல கிராமங்களில் நீர்நிலைகள் கோடைக் காலங்களில் வறண்டு விடுவதன் காரணமாகத் தண்ணீர் கிடைக்காமல் மக்கள் பெரிதும் அவதியுறுகின்றனர்.

### சிற்றூர்களிலுள்ள நீர்நிலைகள் பற்றிய ஆய்வு

1974, 1975, 1976-ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து நிலவிய வறட்சியின் காரணமாகப் பல கிராமங்களுக்கு உடனடியாகக் குடிநீர் வழங்கும் பணிகள் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டன. எனினும் பல கிராமங்களில் நிலவிய குடிநீர் பற்றாக் குறை காரணமாக, தமிழ்நாட்டிலுள்ள அனைத்துச் சிற்றூர்களிலும் உள்ள நீர் நிலைகள் பற்றிய ஆய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டது. இந்த ஆய்வுக்காக, மாநிலத்திலுள்ள அனைத்துச் சிற்றூர்களும் அடியிற்கண்ட ஆறு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டன:

| பிரிவு எண் | | சிற்றூர்களின் எண்ணிக்கை | மக்கட் தொகை (இலட்சங்களில்) |
|---|---|---|---|
| பிரிவு 1. | குடிநீர் நிலைகளே இல்லாத சிற்றூர்கள் | 3454 | 11.18 |
| பிரிவு 2 | குடிக்கத் தகுதியற்ற நீர்நிலைகளைஉடைய சிற்றூர்கள் | 1966 | 10.20 |
| பிரிவு 3. | குடிக்கத் தகுதியான நீரைத் தொடர்ந்து வற்றாது கொடுக்க இயலாத நீர் நிலைகளை உடைய சிற்றூர்கள் | 6487 | 26.78 |
| பிரிவு 4 | தனியாருக்குச்சொந்தமானதாகவோ அல்லது பாதுகாக்கப்படாத தன்மையுள்ள குடிக்கத் தகுதியான தண்ணீரைத் தொடர்ந்து வற்றாது கொடுக்கவல்ல நீர் நிலைகளை உடைய சிற்றூர்கள் | 4955 | 25.48 |
| பிரிவு 5 | சிற்றூரின் எல்லைக்குள் குடிநீர் குடிக்கத் தகுதியான தண்ணீர் இல்லாத நீர் நிலைகள் ஆயினும் ஒரு கிலோ மீட்டர் வட்டாரத்தில் நல்ல நீர் நிலையுள்ள சிற்றூர்கள் | 1107 | 4.16 |
| பிரிவு 6 | குடிக்கத் தகுதியான பாதுகாக்கப்பட்ட தன்மையுடன் கூடிய நல்ல நீர்நிலைகள் உள்ள சிற்றூர்கள் | 29106 | 177.76 |
| மொத்தம் | | 47075 | 255.56 |



# நல்வாழ்வுச் சிறு நிலையங்கள்

நல்வாழ்வுச் சிறு நிலையம் என்பது 1000 குடும்பங்கள் அல்லது 5000 மக்கள்தொகை கொண்ட கிராமப்புற அல்லது நகர்ப்புறத்தில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளை அளிப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட ஓர் இயக்கம். இதன் தலைசிறந்த குறிக்கோள்களாவன: பரவலானதும், தொடர்ச்சியானதும், ஒத்துழைப்பு மிக்கதுமான, சமுதாய, நல மேம்பாடேயாகும்.

**பரவலான சிகிச்சை:** குறைந்த வசதிகளைக் கொண்டு எல்லாவிதமான தடுப்புமுறைகளை மற்றும் நிவாரண சிகிச்சை முறைகளை கீழே கூறப்பட்டுள்ள வழி முறைகளில் நல்வாழ்வுச்' சிறு நிலையங்கள் அளித்து வருகின்றன.

**(அ) சுகாதாரப் பதிவேடு:** ஒரு குடும்பத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் வைத்தியப் பரிசோதனை செய்தல், வியாதிகள் வரக்கூடிய சூழ்நிலை உள்ளவர்களின் வரலாற்றுப் பதிவேடு தயாரித்தல், குடும்பத்திலுள்ள அனைவருக்கும் சத்துணவு பராமரிப்புகளை வழங்குதல், தேவையானபோது சோதனைக்கூட ஆய்வுகள் நடத்துதல், மருத்துவ மற்றும் சோதனைக்கூட ஆய்வுகளின் முடிவுகளுக்கு ஏற்ப சிகிச்சை அளித்தல், சிகிச்சைக்குப் பிறகு பாதுகாப்பு அளித்தல்; கடுமையான வியாதிகளால் அவதிப்படும் நோயாளிகளை அந்த வட்டாரத்திலுள்ள குறிப்பிட்ட மருத்துவ மனைக்கு அனுப்புதல் போன்ற குறிப்புகள் அடங்கிய சுகாதாரப் பதிவேடுகளை நிர்வகித்தல்.

**(ஆ) மகப்பேறு வசதிகள்:** கர்ப்பமுற்று இருக்கும் தாய்மார்களுக்கு, குழந்தை பிறப்பதற்கு முன்னரும், பிறக்கின்ற சமயத்திலும், பிறந்த பின்னரும் தேவையான உதவிகளைப் பல்நோக்குப் பெண் மருத்துவ உதவியாளர் பொதுசுகாதாரச் செவிலி, பெண் சுகாதாரப் பார்வையாளர் ஆகியோர் செய்து கொடுத்தல். குடும்ப நல ஆலோசனைகளைப் பெறத் தகுதியான தம்பதிகளுக்குஅதுபற்றித் தகுந்த ஆலோசனைகளை வழங்குதல். கர்ப்பமுற்றிருக்கும் பெண்களுக்கு 5வது மாதத்திலிருந்து, குழந்தை பிறக்

**கே. எஸ். சஞ்சீவி,**
**தன்னியக்க சுகாதாரப் பணிகள் மருத்துவமனை,**
**சென்னை 20.**

கும் வரையிலும், பின்னர் குழந்தை பிறந்த ஆறு மாதம் வரை தொடர்ச்சியாகவும் போலிக் ஆசிட் மற்றும் இரும்புச் சத்து நிறைந்த மாத்திரைகளை வழங்குதல். தாய்மார்களுக்குக் கர்ப்பக் காலத்திலும், தாய்ப்பால் கொடுக்கும் காலத்திலும் மாதத்திற்குக் குறைந்தது ஒரு முறையாவது இந்நிலையங்களில் சிகிச்சை அளித்தல்.

**(இ) குழந்தைகள் நல்வாழ்வு:**

1. குழந்தைகளின் பொதுவான உடல்வளர்ச்சி மற்றும் முன்னேற்றங்கள் பற்றிய குறிப்பேட்டினை நிர்வகித்தல்.

2. குழந்தைகள் அனைவருக்கும் அம்மை, காசநோய், தொண்டை அடைப்பான், வலிப்பு நோய், கக்குவான் இளம்பிள்ளை வாதம் போன்றவை வராமல் தடுப்பதற்காகத் தடுப்பு ஊசிகளைத் தக்க சமயத்தில் போடுதல் மற்றும் இதர வசதிகள் செய்து கொடுத்தல்.

3. குழந்தைகளைச் சத்துணவு குறைவிற்காக, நிலையத்திலுள்ள பயிற்சி பெற்ற சத்துணவு ஆலோசகர்களைக் கொண்டு பரிசோதித்து, அம்மாதிரி ஏற்படும் குறைகளையும், கேடுகளையும் போக்கும் பொருட்டு வைட்டமின் 'ஏ' சத்து நிறைந்த மருந்துகள் அளித்தல்.

**(ஈ) குடும்ப நல்வாழ்வுத் திட்டம்:** குடும்ப நல்வாழ்விற்குத் தேவையான அறிவுரைகளைத் தகுந்த தம்பதிகளுக்கு அளித்து வருகிறது. தொடர்ந்து அவர்களுக்குச் சுகாதார வசதிகளையும் கட்டுப்பாட்டு முறைகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் அளித்து வருகிறது. அறுவைச் சிகிச்சை தேவையானவர்களை, சம்பந்தப்பட்ட குடும்ப நல மருத்துவமனைக்கு ஆலோசனைக்கு அனுப்புகிறது.

**(உ) மருத்துவக் கண்காணிப்பு:** சிறந்த மருத்துவரைக் கொண்டு ஒரு நாளைக்கு 3 மணி நேரம் வீதம் வாரத்திற்கு 3 நாட்களுக்கு நிரந்தர மருத்துவ சிகிச்சையினை நோயாளிகளுக்கு அளித்து வருகின்றது. மருத்துவச் சிப்பந்திகள் வாரத்தின் எல்லா நாட்களிலும் அங்கு இருப்பார்கள். மற்ற தடுப்பு முறைகளை மிக எளிதில் மிகச் சிறந்த முறையில் மக்களுக்குத் தடுப்பு முறைகளில் ஊக்க மூட்டுவதற்காக மருத்துவக் கண்காணிப்பு அளிக்கப்பட்டு வருகிறது. சமுதாயத்தின் தன்னம்பிக்கையைப் பெற்றவுடன் சிகிச்சை அளிப்பதை வாரத்திற்கு 3 நாட்களிலிருந்து 2 நாட்களாகக் குறைத்து 3-வது நாளினை வெளிப்புற மேற்பார்வைக்கு மருத்துவர் பயன்படுத்துகிறார். மருத்துவக் கண்காணிப்பு அங்கத்தின் முக்கியக் கூறுபாடுகளாவன:

* சாதாரண வியாதிகளுக்குச் சிகிச்சை அளித்தல்.
* அவர்கள் வசிக்குமிடத்திலேயே காசநோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்தல்.
* 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரத்த அழுத்தப் பரிசோதனை மற்றும் சிறுநீர் சோதனை போன்றவற்றால் இரத்த அழுத்தம், நீரிழிவு வியாதி உள்ளவர்களைக் கண்டறியச் சோதனை செய்தல்.
* கர்ப்பமுற்றிருக்கும் பெண்களுக்கு இரத்தச்சோகை ஜன்னி போன்ற நோய் பற்றி முன்கூட்டியே கண்டுப் பிடித்துக் கூறுதல்.
* குழந்தைகளின் வயிற்றில் இருக்கும் நாக்குப்பூச்சி முதலிய பூச்சிகளைக் கண்டுபிடித்தல்.
* பள்ளியில் மருத்துவச் சோதனை செய்தல்..
* குறிப்பிட்ட நோய்களுக்கு அவற்றில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற மருத்துவர்களிடம் சிகிச்சைக்காகக் குறிப்பிட்ட மருத்துவ மனைக்கு அனுப்புதல்.

**இடைவிடாத கண்காணிப்பு:** சுகாதாரக் கண்காணிப்பு அளித்தல் என்பது நடமாடும் மருத்துவ மனையோ தாற்காலிக முயற்சியோ அல்லாமல் நிலையான அஸ்திவாரத்தில் ஏற்படுத்தப்பட்டு தொடர்ந்து இயங்கக் கூடிய ஓர் அமைப்பு ஆகும்.

4. கூட்டுறவுக் கண்காணிப்பு: இத்தகைய நல்வாழ்வுச் சிறு நிலையங்கள் திறம்பட இயங்குவதற்கு அப்பகுதியில் வாழும் மக்களுடைய முழு ஒத்துழைப்பும், ஆழ்ந்த அக்கறையும் இத்திட்டத்துடன் நெருங்கிய தொடர்பும் மிக இன்றியமையாதவை. பட்டி



ளப் பிரதேசங்களில் வாழும் டணக்கார மக்கள் தங்களிடம் க்ருணைகாட்டி நன்கொடை யாகக் கொடுக்கிறார்களே என்ற தாழ்ந்த எண்ணம் வராமல் இதனைத் தங்களுக்காகவே ஏற் படுத்தப்பட்ட தங்களுடைய திட் டமாகக் கருத வேண்டும். அவர் களை உறுப்பினர்களாகவோ சந்தாதாரர்களாகவோ ஆக்கக் கூடிய திட்டம் இதனைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஒவ் வொரு குடும்பமும் இந்தத் திட் டத்தின் மூலம் முன் கூட்டியே தன் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு வருக்கும் தேவையான உணவு [illegible] ஆகிய [illegible] செய்து கொள் வது போல ஒவ்வொருவரு டைய உடல் நலத்தையும் பேணிப் பாதுகாக்க ஒரு தொகையை ஒதுக்கவேண்டும். இங்கு குடும் பம் என்பது சந்தாதாரர், அவ ரது மனைவி, குழந்தைகள் ஆகி யோர் அடங்கியது. அவர்கள் தவிர அக்குடும்பத்தில் இருக்கும் மற்றவர்கள் அக்குடும்பத் தலை வரை, அதாவது சந்தாதாரரைச் சார்ந்து வாழ்பவராக இல்லா விட்டால் அவர்கள் சிகிச்சைக்குத் தனியாக நிலையத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒரு குடும்பத்தின் மாத வருமானம் ரூ. 99- வரையில் இருந்தால் மாதம் 0.50 காசும், மாத வருமா னம் ரூ. 100/- முதல் ரூ. 200/- வரையில் இருந்தால் மாதம் ரூ. 1/-ம், ரூ. 200/-க்கும் அதிகமாக இருந்தால் அவர்களுடைய வரு மானத்தில் ½ சதவீதமும் மாதாந் திர சந்தாக்களாக தன்னியக்க சுகாதார பணிகள் மருத்துவ மனையால் வசூலிக்கப்படுகின் றன.

இக் காரணத்திற்காக ஒவ் வொரு குடும்பத்தினரும் சந்தா பதிவேடு (Subscription Record) ஒன்றைத் தொடர்ந்து நிர்வகிக்க வேண்டும். ''சிகிச்சைக் கட்ட ணம்'' என்ற பெயரில் பணம் கட் டத் தவறியவர்களிடமிருந்தும், சந்தாதாரர் அல்லாதவர்களிட மிருந்தும் பெறப்படும் தொகை யும் மற்றும் அன்பளிப்புகளாகப் பெறப்படும் தொகையும் வசூலில் ஏற்படும் பற்றாக்குறையை ஈடு செய்கின்றன.

**சமுதாயத்தின் பங்கு:** சமு தாயம் தான் இத்திட்டத்தின் உயிர் நாடி. பதிவு செய்யப்பட்ட சந்தாதாரர்களைத் தவிர கீழ்க் கண்ட பல வகைகளில் சமுதாயத் தின் பங்கு இத்திட்டத்தில் இடம் பெறுகிறது.

அ. சுகாதார நல்வாழ்வுச் சிறு நிலையங்கள் அமைப்பதற்கான இட வசதியும்; குறைந்த அளவு மேஜை, நாற் காலி, அலமாரிபோன்ற வைகளையும் இலவச மாகக்கொடுத்து உதவுதல் [illegible]

ஆ. உள்ளூர்த் தலைவர்கள், ஊராட்சித் தலை வர்கள், ஆபீஸர்கள் மற் றும் சில உள்ளூர்வாசி களைக் கொண்ட சங் கங்கள் ஏற்படுத்துதல்.

இ. அவ்வப்போது பொதுக் கூட்டங்கள், சினிமாக் காட்சிகள், செய்முறைப் பயிற்சி நடைபெறச் செய்தல்.

ஈ. கிராமத் தலைவர்களுக் காகப் பெருவாரியாக எல்லா இடங்களிலும் பரவும் தொத்துவியாதி பற்றி புதிய திட்டத் தின் படி போதனைகள் ( Orientation Course ) செய்தல்.

**சிப்பந்திகள் வரையரை:** இச்சுகாதாரச் சிறு நிலையங்களில் ஒரு பகுதிநேர மருத்துவர், 3 முழுநேர மருத்துவச் சிப்பந்திகள் 3 சமுதாய நலச் சிப்பந்திகள் ஆகி யோர் பணிபுரிகின்றனர். தன்னி யக்க நிறுவனத்தின் ஏற்பாட்டின் படி ஒரு மேற்பார்வையாளர் குறிப்பிட்ட காரியத்தைச் செய் வதற்காக நியமிக்கப்பட்டுள் ளார். ஒரு முழு நேரப் பொது சுகாதார செவிலி-பெண் சுகா தாரப் பார்வையாளர் 4 நல் வாழ்வுச்சிறு நிலையங்களை மேற் பார்வை செய்து வருகிறார். ஒவ் வொரு பிரிவு அலுவலர்களுக்கும் அவரவர்களின் வேலை பற்றிய விளக்கங்கள் விரிவாகக் கூறப்பட் டுள்ளன.

**முதல் உதவியாளர்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் நல் வாழ்வு நிலையங்கள்:** இத்திட் டத்தின்படி ஒரு நல்வாழ்வுச் சிறு நிலையத்தின் கீழ் 3 முதற் சிகிச்சை நிலையங்கள் (Health Posts) ஏற்படுத்தப்பட்டு முதல் உதவியாளர்களால் நிர்வகிக்கப் பட்டு வருகின்றன. உயர்ந்த பட்சம் 1000 மக்கள் தொகை கொண்ட பகுதிக்கு ஒரு முதற் சிகிச்சை நிலையம் அமைக்கப்பட் டுள்ளது.

நல்வாழ்வுச் சிறு நிலை யம் அருகிலுள்ள 2000 மக்கள் தொகை கொண்ட பகுதிக்கு அருகில் ஒரு முதற் சிகிச்சை நிலையம் தேவையில்லை. நம் முடைய இத்திட்டத்தில் ஓரள விற்கு ஆரம்பக் கல்வி பயின்று சமுதாயத்துடன் ஒன்றி இயங்கக் கூடியவர்களாகிய பெண்களே முதலுதவியாளர்களாக வேலை செய்து வருகின்றார்கள். ஒரு நாளைக்கு 4 மணி நேரம் வீதம் வாரத்திற்கு 5 நாட்களாக 4 வாரங்களுக்கு அவர்களுக்குச் சுகா தாரக் கல்வி, சாதாரண நோய் களுக்குச் சிகிச்சை அளித்தல், சுகா தாரத் தடுப்புமுறை வசதிகளை அளித்தல்; தொடர்ந்து முதற் சிகிச்சை நிலையத்தின் முத [illegible] அளிக்கப் [illegible] பயிற்சி

போன்ற முதலுதவியாளர்களுக் கான பயிற்சிகள் அளிக்கப்படுகின் றன.

அவர்கள் அருகிலுள்ளவர் களுக்குத் தேவையானபோது உட னடியாக முதலுதவி அளித்து முதலுதவியாளர்களாகப் பணி புரிவதுடன் அக்கிராமத்தில் அவ் வப்போது நிகழும் முக்கிய நிகழ்ச் சிகளைச் சுகாதாரக் குழுவிற்கு முதன்முதலில் தெரிவிக்கும் தக வல் கொடுப்பவராகவும் பணி புரிகின்றார்கள். மேலும் அவர்கள் கிராமத்திலுள்ள வீடுகளுக்கு வருகை தருவதன் மூலம் கிரா மத்திலுள்ள தடுப்பு ஊசிபோட வேண்டிய குழந்தைகளின் எண் ணிக்கை, கருவுற்றிருக்கும் பெண் டிர்களுக்கு அளிக்க வேண்டிய கர்ப்பக்காலக் கண்காணிப்பு விவ ரம் குடும்ப நல அறிவுரை பெறு வதற்குத் தகுதியான தம்பதிகள் பற்றிய விவரம், பொதுவாக மனிதர்களுக்குள்ள அபாயநிலை கள் போன்றவை பற்றிய விவரங் களைச் சுகாதாரக் குழுவிற்கு (Health Team) அவ்வப்போது தெரிவித்து உதவி வருகின் றனர். கூடுமான வரையில் கட்டுப்பாடான முறையில் பெண் களையே இத்தகைய முதலுதவி பணியாளர்களாகத் தேர்ந் தெடுத்து வருகின்றோம்.

**தன்னியக்க நிறுவனங்களால் நடத்தப்படும் நல்வாழ்வுச் சிறு நிலையங்களுக்குப் பொருளுதவி செய்யும் தமிழக அரசின் திட்டம்:** இத்தகைய நல்வாழ்வுச் சிறு நிலையங்கள் திறம்படச் செயல் பட ஆண்டுக்கு ரூ. 18,000 வரையில் செலவு செய்யப்படு கின்றது. தன்னியக்க நிறுவனத் தாரால் நடத்தப்படும் இத் தகைய நல்வாழ்வுச் சிறு நிலையங் களைத் தமிழ்நாட்டின் பல பகுதி களிலும் விரிவுபடுத்தும் வகையில் தமிழக அரசு இத்திட்டத்தின்கீழ், செலவில் 50 ஐ அதாவது ஆண் டுக்கு ரூ. 9,000-க்கு அதிகப்படா மல் இதற்கென ஒதுக்கி வருகி றது. அதைத் தவிர நல்வாழ்வுச் சிறு நிலையங்களுக்காக அம்மைப் பால், 'ஏ' அண்டு 'டீ' மாத்திரை கள், இரும்புச் சத்து மற்றும் போலிக் ஆசிட் (Folic Acid) மாத்திரைகளை இலவசமாக அரசு வழங்குகிறது.

தற்போது தமிழ் நாட்டில் இத்திட்டத்தின் கீழ் சுமார் 70க் கும் மேலான நல்வாழ்வுச் சிறு நிலையங்கள் இயங்கி வருகின் றன. மேலும் பல தன்னியக்க நிறுவனங்கள் இத்தகைய [illegible] டத்தை ஏற்று நடத்த முன்வந் [illegible] நிலையில், இந்த நல்வாழ்வுச் [illegible] நிலையங்களின் [illegible] கணிசமான [illegible]



[illegible] தேசிய பொருளாதாரத் [illegible] குடிசைத் தொழில்கள் வகிக் [illegible] பங்கு முடிவு பெறாத விவா [illegible]துக்குரிய பொருளாக அமைந் [illegible]ளது. இந்தியா கிராமங்கள் [illegible]றைந்த நாடு. நாடு முன்னேற [illegible]ராமங்களின் பிரச்னைகளில் [illegible]க்கியமானது வறுமையே [illegible]கும். விவசாயத்தின் மீதான [illegible]ரயல் கமிஷனின் குறிப்பில் ''விவ [illegible]ாயிகள் லாபத்திற்காகவோ அல் [illegible]து வருமானத்திற்காகவோ அல் [illegible]ாமல் தாங்கள் உயிர் வாழ்வ [illegible]த்கே விவசாயம் செய்கிறார்கள்'' [illegible]னக் கூறப்பட்டுள்ளது.

[illegible] நம் நாட்டின் மக்கள் தொகை [illegible]ல் 80 சதவீதத்துக்கு மேல் [illegible]ராமப்புறங்களில் வசிக்கிறார் [illegible]ள். கிராமப்புற மக்கள் எல்லோ [illegible]ம் தாங்கள் வாழ்வதற்கு விவ [illegible]ாயத்தையே நம்பியுள்ளனர். நம் [illegible]ாட்டின் விவசாயம் பெரிதும் [illegible]ருவ மழையையே நம்பியுள்ளது [illegible]டிக்கடி பருவ மழை தவறுவ [illegible]ால் விவசாயப் பொருளாதாரம் [illegible]ரிதும் பாதிக்கப்படுகிறது. [illegible]ளுக்கு நாள் நிலத்தின் தேவை [illegible]திகரித்துக் கொண்டே போகி [illegible]து. இத்தகைய நிலை ஒரு [illegible]லையான பொருளாதாரத்தை [illegible]ற்படுத்த இயலாது. விவசாயத் [illegible]ற்கேற்ற நிலத்தின் பரப்பளவு [illegible]ரே அளவில் இருந்து வருகிறது. [illegible]னால் அதன் உற்பத்தித் திறன் [illegible]றைந்துகொண்டே வருகிறது.

[illegible] விவசாயத்தில் மேற்கொண்டு [illegible]ற்படும் நலிவினைத் தவிர்க்க [illegible]ராம மக்களுக்கு மாற்றுப் பணி [illegible] அளிக்க ஒருங்கிணைந்த [illegible]யற்சி எடுக்கப்படவேண்டும். [illegible]ற்போதைய மக்கள் தொகை [illegible]ல் குறைந்த பட்சம் 50 சத [illegible]த்தினரையாவது விவசாயத்தி [illegible]ருந்து வேறு மாற்றுத் தொழில் [illegible]ல் ஈடு படுத்த வேண்டும். [illegible]தற்கான வேலை வாய்ப்பு வச [illegible]ளை அவர்கள் வசிக்கும் கிரா [illegible]களிலேயே அமைத்துக் [illegible]ாடுக்க வேண்டும். நுணுக்க [illegible] இயந்திரங்களை இயக்கச் [illegible]ய்வதற்கு கிராம மக்களுக்கு [illegible]ர நாளில் பயிற்சியளிக்க இய [illegible]து. மேலும் உத்தேசிக்கப் [illegible]ட தொழில்களில் அவர்க [illegible]ல் கணிசமான தொகையை [illegible]லீடு செய்யவும் இயலாது. [illegible]ர்களிடமிருந்து உழைப்பைத் [illegible] எதிர்பார்க்க முடியுமே [illegible]ர முதலீடு செய்வார்கள் என [illegible]ர்பார்க்க இயலாது. கிராம- [illegible]றும் குடிசைத் தொழில்களில் [illegible] இத்தகைய வாய்ப்பினை [illegible]க்க முடியும். இந்நிலையில் [illegible]ய தொழில் நிறுவனங்களும் [illegible] உயர்ந்த இயந்திரங்களும் [illegible]த்குப் பரிகாரம் ஆகாது.

[illegible] உழைப்பை மூலதன [illegible]ண்ட சிறிய குடிசைத்

[illegible] நிலைக்கு ஏற்றதாகும். கிராமப் புறங்களில் அவர்கள் குடியிருக் கும் இடத்திலேயே வேலைவாய்ப் பினை ஏற்படுத்தித் தருவதுதான் ஒரு நிரந்தரப் பரிகாரமாகும். இந் நிலை ஏற்கனவே மக்கள் தொகை மிகுந்துள்ள நகர்ப்புறங்களுக்குக் கிராம மக்கள் குடியேறுவதைத் தவிர்க்க ஏதுவாகும். குடிசைத் தொழில்களினால் ஏற்படும் முன் னேற்றம் அவர்கள் வாங்கும் சக் தியை அதிகப்படுத்துவதோடு அவர்களின் ஓய்வு நேரத்தை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் தங்களுடைய பொருளா தார வாழ்க்கையை அவர்கள் மாற்றி அமைத்துக் கொள்ளவும் முடியும்.

யில் தேர்ந்தெடுக்கப்பட [illegible] யிருந்தும் அவை பரீட்சார்த்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட் டன. இவ்வாறு தேர்ந்தெடுத்து நடத்தப்பட்ட தொழில்களின் மூலம் கிடைத்த முடிவின்படி அணுகும் முறையில் மாற்றம் தேவைப்படுகிறது.

பொது வசதிகள் செய்து கொடுப்பதும், பொதுவாகக் கிரா மப்புறக் கலைத் தொழிலாளர்க ளுக்கு உதவி புரிந்து அவர்கள் தங்கள் சுய முயற்சியிலேயே வாழ்ந்து கிராமப் பொருளாதார



# மாவட்டத் தொழில் மைய[illegible]

பி.சோமசுந்தரம்
கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர்

முதலிரண்டு ஐந்தாண்டுத் திட் டங்களில், கிராமப்புறத் தொழில் களின் முன்னேற்றம் குறிப்பிடத் தக்க அளவிற்கு இல்லாமல் மந்த நிலையிலேயே இருந்து வந்துள் ளது. எனவே கிராமப் பொருளா தாரத்தில் எந்தவிதமான முன் னேற்றமும் காணப்படவில்லை. முதல் இரண்டு திட்டங்களில் ஒரு சில தொழில்கள் தான் முன் னேற்றத்திற்காக எடுத்துக்கொள் ளப்பட்டது. இத்தகைய தொழில் கள் தலத்தில் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்கள், திறன் மற்

நிலையை உயர்த்தவும் புராதன திறமை வாய்ந்த கலைகளை விருத்தி செய்வதிலும் புதிய திறமை வாய்ந்த கலைகளை உரு வாக்குவதும், கிராமப் புறத் தொழில் மேம்பாட்டுத் திட்டத் தின் குறிக்கோள்களாக இருக்க வேண்டும்.

சமுதாயத் திட்டத்தில் கிரா[illegible] கலை-கைவினை மற்றும் [illegible] தொழில்திட்டத்தின்கீழ்தொ[illegible] அபிவிருத்திக்காகத் [illegible] ஒதுக்கப்பட்டது. [illegible]

குறிப்பு: வகை 1 முதல் 4 வரையுள்ள சிற்றூர்களுக்கு ஒரு கிலோ மீட்டர் வட்டாரத்திற்கு மாற்று நீர் ஆதாரங்கள் கிடையாது.

**பணித் திட்டங்கள் :**

தமிழ்நாட்டிலுள்ள (பிரிவு 1 மற்றும் 2 ஐச் சேர்ந்த) சுமார் 5,420 சிற்றூர்களுக்கு உடனடியாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணிகளைத் திட்டமிட்டு 1.9.77 முதல் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 25 கோடி ஆகும். 1979-ஆம் ஆண்டு மே மாதம் வரை, இவ்விரண்டு பிரிவுகளைச் சேர்ந்த 2700 சிற்றூர்களில் உள்ள 10 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில், சுமார் 11.4 கோடிச் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 2720 சிற்றூர்களில் வாழும் 11.38 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இவ்விரண்டு பிரிவுகளைச் சேர்ந்த அனைத்துச் சிற்றூர்களுக்கும் 1980ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் குடிநீர் வழங்கப் பெற்றுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பணி முடிவடைந்ததும் இதனைத் தொடர்ந்து 3-வது வகையைச் சேர்ந்த (குடிக்கத் தகுதியான நீரைத் தொடர்ந்து வற்றாது கொடுக்க இயலாத நீர் நிலையுள்ள சிற்றூர்கள்) 6487 சிற்றூர்களில் வசிக்கும் சுமார் 26.8 இலட்சம் மக்களுக்குக் குடிநீர் வசதியளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வகை 1 மற்றும் 2ஐச் சேர்ந்த பெரும்பாலான சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்கும் பணிகள் 1979ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் நிறைவு பெற்றுவிடும். இதனைத் தொடர்ந்து வகை 3 ஐச் சேர்ந்த 6487 சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ரூ. 46.44 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தை 1982ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறைவேற்றி முடிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைத் தொடர்ந்து எஞ்சியுள்ள மூன்று பிரிவுகளைச் சேர்ந்த சிற்றூர்களுக்கான குடிநீர் வழங்கும் திட்டம் வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும். அரிசன காலனிகளில் வாழும் மக்களுக்காகத் தனி குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**கிராமக் குடிநீர்த் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:**

**(அ) இரும்புச் சத்து நீக்கும் உபகரணம் அமைத்தல்:**

பிரிவு-2ஐச் சேர்ந்த சிற்றூர்களில் உள்ள நீர்நிலைகள் குடிக்கத் தகுதியற்றவையாக உள்ளன. இந்த நீர் நிலைகளில் உள்ள நீரில் இரும்புச் சத்து அதிகமாகக் காணப்படுவதே இதற்குக் காரணமாகும். பாதுகாக்கப்பட்ட நல்ல குடித்தண்ணீர் வழங்கப்பட வேண்டும் எனில் தண்ணீரில் உள்ள இரும்புச் சத்தை நீக்கி அதனைக் கட்டுப்படுத்துவது மிகவும் அவசியமாகும். இதற்குத் தேவையான உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவை சிற்றூர்களில் உள்ள குடிநீர்த் திட்டங்களில் பொருத்தப்பட்டு நன்முறையில் இயங்கி வருகின்றன.

**(ஆ) புளோரைடு நீக்கி உபகரணம் அமைத்தல்**

தமிழ்நாட்டில் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் தண்ணீரில் அதிக அளவில் புளோரைடு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. புளோரைடு அதிக அளவில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்துவதால் பல்லில் காறை படிதல், பற்சொத்தை, எலும்பு சம்பந்தமான பல நோய்கள் பரவி மக்கள் தங்களின் பணியினை மேற்கொள்ளவியலாத நிலையில் உள்ளனர். புளோரைடு அதிகம் உள்ள பகுதிகளில் குடிநீர் வழங்க அதிக அளவில் செலவாகும் எனப் பட்டதால் கடந்த காலங்களில் இந்தப் பகுதிகளில் குடிநீர் வழங்க நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை. ஆயினும் தமிழ்நாடு அரசு எவ்வளவு செலவாயினும் இந்தப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கியே தீரவேண்டும் என்ற உறுதியான முடிவை மேற்கொண்டுள்ளது. தண்ணீரில் அதிமாக உள்ள புளோரைடு சத்தை நீக்கி நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கத் தேவையான உபகரணங்கள் வடிவமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. விரைவில் இந்த உபகரணங்கள் உபயோகத்திற்குக் கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



**(இ) கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்**


வகை 1 மற்றும் 2ஐச் சேர்ந்த சிற்றூர்களுக்குத் தனித்தனியாகக் குடிநீர்த்திட்டம் அமைப்பதில் செலவு அதிகமாகுமெனக் கணக்கிடப்பட்டதால் இம்மாதிரியான சிற்றூர்களைக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் கீழ் கொணர்ந்து பயன்பெறச் செய்வதில், அச்சிற்றூர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதுடன் செலவுத் தொகையும் கணிசமாகக் குறைகிறது. இம்மாதிரியான பல கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், தமிழ்நாட்டில், இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, மதுரை மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் இதுவரை ஒவ்வொன்றும் ரூ.2 இலட்சத்திற்கும் மேல் மதிப்பீடு கொண்ட 47 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு இவைகள் செயலாக்கத்தில் உள்ளன. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 10 கோடியாகும்.

**பராமரிப்புப் பணிகள்**

கைப்பம்பு மற்றும் மின்விசைப் பம்பு திட்டங்களை நன்முறையில் பராமரிக்காவிட்டால் இத்திட்டங்களின் முழுப் பயனைக் கிராம மக்கள் பெறவியலாது. எனவே, தமிழ்நாடு அரசு கிராமக் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்புத் துறைக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளது.

**கைப்பம்புகள் பராமரித்தல்:**

தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் சுமார் 18000 கைப்பம்புகள் உள்ளன. இவைகளை நன்முறையில் பராமரிக்க வேண்டியது அவசியமாகும். கைப்பம்பு பொருத்தப்பட்ட ஒரு ஆழ்துளைக் கிணறு சுமார் 200 முதல் 300 மக்களுக்குப் பயனளிக்கவல்லது என்று கணக்கிடப்பட்டுள்ளது. எல்லாக் கைப்பம்புகளும் 1976 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் முதல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.



கிராம அளவில் பாதுகாவலர்களும், ஒன்றிய அளவில் பொருத்துநர்களும், மாவட்ட அளவில் நடமாடும் பராமரிப்புக் குழுவும் கொண்ட ''மும்முனைப் பராமரிப்புத் திட்டம்'' என்ற திட்டத்தின்கீழ் இந்தக் கைப்பம்புகள் நன்முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

கைப்பம்புகள் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் 245 பொருத்துனர்கள் நியமிக்கப்பட்டு 17 நடமாடும் பராமரிப்புக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இந்த மும்முனைப் பராமரிப்புத் திட்டம் மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நன்முறையில் இயங்கி வருகின்றது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதி நிறுவனமும், மத்திய அரசும் சேர்ந்து நடத்திய தேசிய கருத்தரங்கில் தமிழ்நாட்டில் கையாளப்படும் இந்தப் பராமரிப்பு முறை நாட்டில் எல்லா மாநிலங்களிலும் கையாள வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டது.

**மின்விசைப் பம்புகள் பராமரிப்பு:**

தமிழ்நாட்டின் கிராமப்புறங்களிலுள்ள சுமரர் 10,570 மின்விசைப் பம்புகளை நன்முறையில் பராமரிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, செங்கற்பட்டு, வடஆர்க்காடு மற்றும் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள சுமார் 3000 மின்விசைப் பம்புகளைத் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் முன்னோடித் திட்டமாக 1.4.78 முதல் ஒப்படைத்துள்ளது.

தமிழ்நாட்டில் 1972-73 மற்றும் 1973-74ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் கிராமக் குடிநீர்த் திட்டங்களுக்காகச் சுமார் 1.5 கோடி ரூபாய்தான் செலவு செய்யப்பட்டது. 1977-78ம் ஆண்டிலும் 1978-79ம் ஆண்டிலும் முறையே ரூ. 6.75 கோடியும், ரூ. 8.60 கோடியும் கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் செலவு செய்யப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் (1979-80) அரசினரால் மத்திய அரசு உதவியுடன் கிராமக் குடிநீர்த் திட்டத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் நிதி ஒதுக்கீடு 1972-73 மற்றும் 73-74 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதியைப்போல சுமார் 10 மடங்காகும். எவ்வளவு செலவானாலும், அதைப் பற்றிக் கவலைப்படாமல், கிராம மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கச் செய்வது அரசின் தலையாய கடமைகளில் ஒன்று என்பதைத் தமிழக அரசு தெளிவுற உணர்ந்து உள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் இத்துறையில் நிறைவு தரும் வகையில் பணிகள் நடைபெற்றிருக்கின்றன.

வரும் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசின் பணிகள் மேலும் மேலும் பெருகி கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் நல்ல குடிநீர் இல்லாத கிராமமே தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலையை வெகு விரைவிலேயே அடைவோம் என்பது உறுதி.

சித் திட்டத்தில் இத்தகைய ஒதுக்கீடு இல்லை. பின்னர் 1958-ம் ஆண்டில் தேசீய வளர்ச்சித் திட்டத்திலும் சமுதாய வளர்ச்சித் திட்டத்திலும் உள்ள வேறுபாடு நீக்கப்பட்டு மாற்றப்பட்ட நிதி அடிப்படையில் வட்டார நிலை அனுசரித்து தொகை ஒதுக்கப்பட்டது.

அதன் பின்னர் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அனைத்து வட்டாரத்துக்கும் ரூ. 50,000 - சரி சமமாக ஒதுக்கப்பட்டது. கிராமக் கலை கைவினைக்காக ஒதுக்கப்பட்ட தொகையை மையமாக வைத்து அகில இந்தியக் கைவினைத் தொழில் வாரியம், மற்றும் கதர் கிராமக் கைத்தொழில் வாரியம மூலமாக ஒதுக்கப்பட்ட தொகை வட்டாரத்தில் உள்ள தொழில்களை அபிவிருத்தி செய்ய முழுமையாக ஈடுபடுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட ஒதுக்கீடு தொழில் மற்றும் வணிகத் துறை இயக்குநர் மூலமாகக் கொடுக்கப்பட்டது.

1947-ம் ஆண்டிலிருந்து 1961-ஆம் ஆண்டு வரை தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநரின் கீழ் இயங்கிவந்த கிராமக் கலை கைவினைத் தொழில் திட்டம் 1.4.61 முதல் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பிறகு மேற்கண்ட திட்டம் கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியத்தால் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், தொழில் நுட்பத்திற்கு அனுமதி வழங்கும் பொறுப்பு மட்டும் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்திடமே ஒப்படைக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் திட்டங்கள் தீட்டப்பட்டு தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியத்தின் தொழில் நுட்ப அனுமதியுடன் நடத்தப் படுகிறது. பின்னர் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்ட அலகுகள் பயிற்சி நிலையமாகவும் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையமாகவும் நடத்தப்பட்டன. தச்சு, கொல்லு, மற்றும் கொல்லு அலகு, தையல் நிலையம், கம்பளி நெய்தல், பாய்முடைதல், வெண்கல வார்ப்பு, நெட்டி அலகு, பிரம்பு மற்றும் மூங்கில் அலகு, சாக்கு கட்டி உற்பத்தி அலகு ஆகியவைகளில் சில உற்பத்தி செய்யும் அலகுகளாக மாற்றி அமைக்கப்பட்டன.

இத்தகைய அலகுகள் மாற்றி அமைக்கப்படுவதற்கு முன்னர் அதில் பணிபுரிந்த கலைத் தொழிலாளர்களுக்குத் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டு அதன்மூலம் — அவர்கள் அத்தகைய பயிற்சியின் மூலம் தங்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டது. இத்தகைய நிலையங்கள் கலைத்தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை அளித்து அதன் மூலம் தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டது.

மற்ற தொழிலாளர்கள் தங்களுடைய ஓய்வு நேரங்களில் தாங்கள் பெற்ற பயிற்சியின் வாயிலாகக் கூடுதல் வருமானத்தைப் பெற்றனர். ஊராட்சி ஒன்றியங்களில் இயங்கி வரும் கிராமக் கலை கைவினைத் தொழில் திட்டங்களில் 198 அலகுகளும் 28 தேனீ வளர்ப்புத் திட்டமும் உள்ளன. இவைகளில் 389 பணியாளர்கள் (28 தேனீ களப்பணியாளர்கள் உட்பட) பணியாற்றி வருகின்றனர். இது தவிர 3,000 நபர்களுக்கு மேற்படி அலகுகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

புதிய தொழில் கொள்கைக்கிணங்க மத்திய அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு, மற்றும் கிராமத் தொழில்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் ஒருங்கிணைந்த அமைப்பின் மூலம் அளிக்க மாவட்டத் தொழில் மையங்களை நிறுவ பரிந்துரை செய்துள்ளது.

இத்தொழில் கொள்கைக்கிணங்க, முதற்கண் எட்டு மாவட்டங்களில் கிராமப்புற மற்றும் பின் தங்கிய இடங்களில் தொழில் நிறுவனங்களை அமைத்து அதன்முலம் அதிக அளவில் வேலை வாய்ப்பினை அளிக்க மாவட்டத் தொழில் மையங்கள் நிறுவப்பட்டன. மேற்படி தொழில் மையங்களுக்குத் தேவையான பணியாளர்களும் அரசினரால் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய மாவட்ட தொழில் மையங்களை அமைத்து அதன் மூலம் புதிதாகத் தொழில் தொடங்குபவர்களுக்குத் தேவையான நிதி மற்றும் இதர வசதிகளை ஒரே நிறுவனத்தின் மூலம் அளிப்பதே அரசின் நோக்கமாகும். கிராமப்புறங்களில் தொழில்களைத் தொடங்க ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து உரிமங்கள் மற்றும் அனுமதி பெறுவதில் உள்ள கால தாமதங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

மாவட்டத் தொழில் மையங்களின் மூலமாக, புதிதாக தொழில் தொடங்கப்படவும் உள்ளது. ஏற்கனவே தொடங்கி கைவிடப்பட்ட தொழில்களுக்கு மறுமலர்ச்சி அளிக்கவும் தேவையான நிதி உதவியினை வங்கிகள் மூலம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய தொழில் மையங்கள் அமைக்கப்பட்டபின் கிராமப்புறங்கள் மற்றும் பின் தங்கிய இடங்களில் உள்ள தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்கள் தொழில் மையங்கள் மூலம் கிடைக்கும் நிதி வசதியினைப் பயன்படுத்தி புதிய தொழில்களை ஆரம்பிக்க முன் வந்துள்ளனர்.

தொழில் மையங்கள் அமைக்கப்பட்ட பிறகு 31.5.79 வரை 23,580 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 900 அலகுகளுக்கு வங்கிகள்மூலம் ரூ. 167.14 லட்சம் நிதி வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 3081 கலைத் தொழிலாளர்களுக்கு நிதி உதவியாக ரூ. 17,33,795- அளிக்கப்பட்டுள்ளது.

கிராமத் தொழில்கள் - குறிப்பாக குடிசை மற்றும் சிறு கைத்தொழில்கள் மூலமாக எந்த அளவுக்கு வேலை வாய்ப்பினை அளிக்க இயலும் என்பதைப் பரிசிலனை செய்ய தமிழ்நாடு அரசு கடந்த 1978-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் டாக்டர் நாயுடம்மா தலைமையில் ஒரு குழு அமைத்தது. அந்தக் குழு தன்னுடைய பரிந்துரைகளை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. தன்னுடைய பரிந்துரைகளில் மேற்படி குழு கிராமப்புறங்களில் கிடைக்கும் மூலப் பொருட்களின் அடிப்படையில் பல புதிய தொழில்களைத் தொடங்க ஆலோசனை வழங்கியுள்ளது. குழுவினால் அளிக்கப்பட்ட பரிந்துரைகளை அரசு பரிசிலனை செய்து வருகிறது. அத்தகைய பரிந்துரைகளின் அடிப்படையில் சிறு தொழில்கள் பல கிராமங்களில் தொடங்கி நடத்தப்படும்.

கிராமப்புறப் பொருளாதார முன்னேற்றம், கிராமப்புறங்களை அதிக அளவில் தொழில் மயமாக ஆக்குவதைப் பொறுத்துள்ளது. கிராமப் புறங்களில் புதிய தொழில்களைத் தொடங்கி மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிப்பதன்மூலம் கிராம மக்கள் நகரங்களுக்குக் குடி பெயர்வது தடுக்கப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களில் ஏற்படும் தொழில் மறு மலர்ச்சியினால் கிராம மக்களின் பொருளாதாரம் உயர்வதோடு அவர்களது வாங்கும் சக்தியும் அதிகரிக்கிறது. அதே நேரத்தில் அவர்கள் தங்களுடைய அன்றாடத் தேவைகளுக்கு நகர்ப்புறங்களை நம்பியிருப்பதும் குறைக்கப்பட்டுள்ளது.

மாநில மற்றும் மத்திய அரசின் இடைவிடாத முயற்சியின் காரணமாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் இதர அதே போன்ற நிறுவனங்கள் மூலமாகக் கிராமப்புறங்கள் எல்லாவகையிலும் முன்னேற்றமடைந்து புதிய சகாப்தம் தொடங்க வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகிறது.


## ஒன்றியங்கள் பிரியும்—இணையும் !


தமிழ்நாட்டில் மொத்தம் 374 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.

நிர்வாகச் சீரமைப்பைக் கருதி, மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியங்களாக உள்ள புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கந்தர்வகோட்டை, புதுகோட்டை, திருவரங்குளம், அறந்தாங்கி, ஆவுடையார்கோயில் ஒன்றியங்கள்-இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள போகலூர், மற்றும் நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பெரிய ஊராட்சி ஒன்றியங்கள் பிரிக்கப்படவிருக்கும் அதே நேரத்தில் நமது மாநிலத்தில் உள்ள சிறிய ஊராட்சி ஒன்றியங்களை ஒன்றாக இணைக்கவும் அரசு எண்ணியிருக்கிறது. இதுபற்றி நன்கு பரிசீலித்து முடிவெடுக்கப்படும்.

## ஊராட்சி ஒன்றியங்களின் வருவாயைக் காட்டும் பட்டியல்:





| | | | |
|---|---|---|---|
| ஆண்டு | : 1975-76 | 1976-77 | 1977-78 |
| வருவாய் (ரூ. லட்சத்தில்): | 731·40 | 1524·00 | 1541·19 |

1979–80 ஆண்டில், ஊராட்சி அமைப்புகளுக்காக அரசு ஒதுக்கியிருக்கும் மானியத் தொகை மட்டும் ரூ. 9495/- லட்சம்.

தமிழகத்தில் இன்று 375 ஊராட்சி ஒன்றியங்களும், 12,602 ஊராட்சிகளும், 609 பேரூராட்சிகளும், 12 நகரியங்களும் இயங்கி வருகின்றன.


தமிழ்நாடு பரப்பளவில், 1,12,099 சதுர கிலோ மீட்டர் அளவு ஊராட்சி ஒன்றியங்களின் ஆளுகையில் உள்ளன.

ஊராட்சி ஒன்றியங்கள் பராமரிக்கும் தாய் சேய் நல விடுதிகளின் எண்ணிக்கை 2806.

ஊராட்சி ஒன்றியங்களில், 69,367 ஆசிரியர்களும், 26,577 ஆசிரியைகளும் பணிபுரிந்து வருகின்றனர். உதவித் தொகை பெறும் தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 20,440. ஆசிரியைகள் 14,156.

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத் துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித் தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI




# ஒன்றிய வருமானத்திற்கு உபரித் தொழில்கள்

ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள பலவகைத் தொழில்களை மேற்கொள்ளுவதுண்டு.

கலப்பை, மண்வெட்டிபோன்ற இரும்புக் கருவிகள் செய்தல்.....

டிராக்டர், ஸ்பிரேயர் போன்ற வேளாண்மைக்கு உதவுபவற்றை விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுதல்....

—இப்படிப்பட்ட இன்னும் பல தொழில்கள் ஊராட்சி ஒன்றியங்கள் பலவற்றாலே நடத்தி வரப்படுகின்றன.


ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் இந்த வகையில் மேற்கொள்ளப்பட்டிருப்பது தச்சுத் தொழிலாகும். மேஜைகள் நாற்காலிகள், பீரோக்கள் போன்றவை இந்த ஊராட்சி ஒன்றிய தச்சுப் பிரிவினரால் சிறப்புறச் செய்து தரப்படுகின்றன.

உழவர் பெருமக்களுக்குக் கடனில் தரப்படும் வண்டிகளும் இங்கே வண்ணமுறச் செய்யப் படுகின்றன.

கடந்த ஆண்டில் மட்டும் இவ்வகைத் தொழில் மூலம் ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஏறத்தாழ 25,000 ரூபாய் வருமானம் கிட்டியிருக்கிறது! இதிலிருந்தே தச்சுத் தொழில் இங்கே எந்த அளவுக்கு மற்றவர்கள் மெச்சுந் தொழிலாக வளர்கிறது என்பது விளங்கும்.

படப்பை, பூவிருந்தவல்லி உட்பட தமிழ்நாட்டில் பல்வேறு ஒன்றியங்களும் இவ்வகைத் தச்சுத் தொழிலை மேற்கொண்டிருக்கின்றன.

ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத் தச்சுப் பிரிவில், இத்தனைக்கும் இரண்டே பேர்தான் நிரந்தர அலுவல் செய்பவர்கள். மற்றவர்கள், அவ்வப்போது உள்ள வேலைக்குத் தக்கபடி தற்காலிகமாகப் பணியாற்ற அழைக்கப் பட்டுக் கொள்கின்றனர்.



இப்போது இந்தப் பிரிவில் பதினோரு பேர் தற்காலிகப் பணியாளர்களாக வேலை பார்க்கிறார்கள். ஆண்டு முழுவதும் வேலையிருப்பதால் அவ்வப்போது இதற்கு மேலும் தச்சுத் தொழிலில் திறமையாளர்கள் கூட்டிக் கொள்ளப்படுவதுண்டே தவிர, பத்துக்கும் கீழே இதுவரை குறைத்துக் கொள்ளப்பட்டதில்லை!

பெரும்பாலும் இங்கு செய்யப்படும் பொருள்களுக்கான மரங்கள் சென்னையிலிருந்தே வாங்கி வரப்படுகின்றன. வண்டிச் சக்கரங்களுக்கான அச்சுகள், ஆரங்கள் போன்றவற்றுக்கான மரத்துண்டுகள் நாகர்கோயிலிருந்து வரவழைக்கப்படுகின்றன.

அலுவலகங்களுக்காகவும், விஞ்ஞானப் பரிசோதனைக் கூடங்களுக்காகவும் தேவைப்படும் மேஜைகள், நாற்காலிகள் அலமாரிகள், பெஞ்சுகள் போன்றவை மொத்தமாகச் செய்து அனுப்பி வைக்கப்படுகின்றன. இங்கே அஞ்சலகம் போன்ற மத்திய அரசு நிறுவனங்களுக்கும் அலுவலகங்களுக்கும் இங்கிருந்தே மரச்சாமான்கள் செய்து தரக் கோரப்படுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள அலுவலகங்களுக்கு மட்டுமல்ல, புதுவை ஆந்திரப் பிரதேசம் போன்ற பிற மாநில அரசுகளாலும் ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத் தச்சுப் பிரிவு மூலம் மரச்சாமான்களுக்கான டெண்டர்கள் கேட்கப்பட்டு பொருட்கள் பெறப்படுகின்றன.

நேர்த்தியான மரத்தில் நேர்த்தியான பொருட்கள் செய்யப்படுவதால் மட்டுமே இந்த ஒன்றிய மரச்சாமான்களுக்கு நல்ல வரவேற்பிருக்கிறது என்பதல்ல; கேட்கிறவர்கள் குறிப்பிடுகிற தேதிக்குள் அவை செய்தும் தரப்படுகின்றன என்பதுதான் முக்கியம்!

—ஆர்




# வானொலி வளமைக்கு உதவும்

**ஏ. சத்தியபாமா,**
நிலைய இயக்குநர்,
திருச்சி வானொலி நிலையம்.

படிக்காத-படிப்பறிவு இல்லாத எத்தனையோ மக்களுக்கு அறிவூட்டும் பணியில் வானொலி ஒன்றுதான் பெரும் பங்கை வகிக்க முடியும். அவர்களின் உயர்ந்த வாழ்வுக்கு உறுதுணையாகப் பணியாற்ற முடியும். இதை அறிந்தவர்கள் வானொலியைத் தங்களோடு சேர்த்துக்கொண்டு அறிவியல் தொழில் நுட்ப அறிவையும் இன்னும் பிற அடிப்படை அறிவையும் கிராம மக்களுக்கு அளிக்க, அவர்கள் புரிந்து கொள்ள, புரிந்து செயலாற்ற வானொலியோடு கைகோத்துக் கொண்டார்கள். இந்த இணைந்த கரங்கள் இந்திய கிராமங்களின் முன்னேற்றப் பணியில் அரும் பெரும் தொண்டாற்றியுள்ளன.

அரசு இதனை நன்குணர்ந்து வானொலி நிலையங்களில் கிராம மக்களுக்கெனத் தனிப்பட்ட நிகழ்ச்சிகளை ஒலிபரப்பு செய்ய ஏற்பாடு செய்தது. பல ஆண்டுகளுக்கு முன்பே இந்தப் பணி செய்யப்பட்டாலும், அது நெறிப்படுத்தப்பட்டு வானொலியில் ஒரு சிறப்பு அங்கமாகப் பங்கு வகிக்கச் செய்யப்பட்டது 1966-ம் ஆண்டு தான்.

1966-ஆம் ஆண்டுக்குப் பிறகு வானொலியில் பண்ணை இல்ல ஒலிபரப்புப் பகுதிகள் அறிமுகப் படுத்தப்பட்டன. இதனால் கிராம மக்களுக்குத் தனிப்பட்ட நிகழ்ச்சிகள் தோன்றின. கிராம மக்கள் தங்களின் அன்றாட உழவடைப் பணிகளை முடித்து வீட்டுக்குத் திரும்பிய பின்னர் அவர்கள் கேட்டுப் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் பண்ணை இல்ல நிகழ்ச்சிகள் மாலை நேரங்களிலும் முன் இரவு நேரங்களிலும் ஒலிபரப்பப்படுகின்றன. இம்மாதிரியான கிராமிய நிகழ்ச்சிகளுக்கு, கிராமங்களுக்கு அருகில் உள்ள வானொலி நிலையங்கள் அதிக சிறப்பு கொடுத்து அரும்பாடுபட்டு, கிராம மக்களைப் பயிற்றுவித்தது. அந்தப் பணியில் இந்தியாவிலேயே சிறந்த இடம் நமது திருச்சிராப்பள்ளிவானொலி நிலையத்திற்கு உண்டு.

வானொலிப் பெட்டி வாங்குவது வீண் செலவு அல்லது ஆடம்பரச் செலவு என்று கருதிய கிராம மக்கள் இன்று தங்கள் இல்லங்களில் வானொலிப் பெட்டியை வாழ்க்கைக்கு அவசியம் என்று கருதி அதை வாங்கி வைத்துள்ளனர். ஊராட்சிகள் வானொலியின் கிராமிய நிகழ்ச்சிகளின் சிறப்பினை உணர்ந்து தங்கள் ஊராட்சிகளில் எத்தனை வானொலிப் பெட்டிகள் தேவையோ அவற்றை வாங்கிப் பொது இடங்களில் வைத்துப் பலர் கேட்டுப் பயன் பெறும் வண்ணம் அமைந்துள்ளன. இப்போது மாலை நேரத்தில் முன்னிரவு நேரத்தில் தமிழ்நாட்டில் எந்த கிராமத்திற்குச் சென்றாலும் அவர்களை வரவேற்பது வானொலியின் கிராமிய நிகழ்ச்சிகள்தான்.

கிராம மக்கள் கூடி நின்று வானொலி நிகழ்ச்சியை ஆர்வத்தோடு கேட்டு அலசிப் பார்க்கும் இந்த இனிய சூழ்நிலையை எல்லா கிராமத்திலும் காண முடியும். இப்படி கிராம மக்கள் ஓரிடத்தில் கூடி நிகழ்ச்சிகளைக் கேட்டுப்பயன்பெறுவதைக்கண்ட தமிழ்நாடு அரசு ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையினர் கிராம வானொலி மன்றங்களைத் தோற்றுவிக்க உதவி பல செய்து கிராமங்களில் கிராம வானொலி மன்றங்களைத்தோற்றுவித்தனர். இதன் விளைவாக இன்றும் பல கிராமங்களில் கிராம வானொலி மன்றங்கள் கிராம முன்னேற்றத்திற்கு வானொலியின் உதவியோடு அரும்பெரும் பணியைச் செய்து வருகின்றன.

இப்போது திருச்சிராப்பள்ளி பண்ணை இல்ல ஒலிபரப்புப்பகுதி கிராம மக்களுக்கு என்று தனிப்பட்ட நிகழ்ச்சிகளைச் சிறப்பான முறையில் அமைத்து வழங்குகின்றது. மாலை 6.05 முதல் 6.30 வரை 'கிராம சமுதாய' நிகழ்ச்சி இரவு 7.25 முதல் 8.00 மணி வரை 'உழவர் உலகம்' நிகழ்ச்சி, நண்பகல் 2.40 முதல் 3.00 மணி வரை வேளாண்மை அரங்கம் நிகழ்ச்சி வியாழக்கிழமைதோறும் காலை 8.20 முதல் 8.30 மணி வரை 'ஊர் மணம்' புதன் மற்றும் சனிக்கிழமைகளில் மாலை 6.40 முதல் 7 மணி வரை, 'கிராமியக் கலை' என நிகழ்ச்சிகள் பல அமைக்கப்பட்டு திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. நாள் ஒன்றுக்கு ஒரு மணி 25 நிமிடங்கள் கிராமிய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன.

கிராம சமுதாய நிகழ்ச்சியில் கிராமச் சிறுவர்களுக்கு ''சிறுவர் அரங்கம்'', கிராம இளைஞர்களுக்கு ''இளைஞர் மன்றம்'' மகளிருக்கு,''கிராம மகளிர் அரங்கம்'' இப்படிப் பல சிறப்பு நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டு ஒலிபரப்பாகின்றன. கிராம குடும்பங்களை ஒன்றாக இணைத்துப் பார்த்து நிகழ்ச்சிகள் வழங்கப் படுவதால் குடும்பநலம், நல்வாழ்வு, ஊராட்சிப் பணிகள் இப்படி பலவகைப்பட்ட அன்றாட வாழ்வுக்குத் தேவையான விவரங்களும் விளக்கங்களும் வழங்கப் படுகின்றன. இந்த நிகழ்ச்சியில் வானொலியோடு பெரும்பங்கு வகிப்பது ஊராட்சி ஒன்றியங்கள் தாம். கிராமங்கள், உணவு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள். வேளாண்மை தான் கிராம மக்களின் அடிப்படைத் தொழில். இன்று இந்த வேளாண்மையில் பசுமைப்புரட்சி ஏற்பட்டு உழவர்களைத் தேடிச் சென்று வற்புறுத்தி விளை பொருட்களை வாங்கிய நிலை மாறி, உழவர்கள் தங்களின் விளைச்சல் பெருக்கத்தால் உரிய விலை கொடுத்து வாங்குவோர் இல்லையே என்று ஏங்கும் நிலை ஏற்பட்டு, தன்னிறைவையெய்தி ஏற்றுமதிக்குத் தயாராகி விட்டோம்.

இந்நிலை ஏற்பட உழவர்க்கு உதவிய பலரில் வானொலியின் உழவர் உலகம் நிகழ்ச்சியும் ஒன்று என்று சொன்னால் மிகையில்லை. நெல்லுக்கு 'ரேடியோநெல்' என்று பெயரிட்டு அழைத்த வரலாற்றை ''ரீடர்ஸ் டைஜஸ்ட்'' குறிப்பிடும் அளவிற்கு புகழ்ப் பெற்றவை இவ்வொலி பரப்புகள்.

உழவர்களுக்கென்று தனிப்பட்ட நிகழ்ச்சிகளைமிகஉயர்ந்த தொழில் நுட்பத்தோடு ஒலி பரப்புவதால் இன்று உழவர்களின் நுண் அறிவுக்கு அடிப்படைத் தேவை வானொலியின் உழவர் உலகம் நிகழ்ச்சி என்ற நிலையை உருவாக்கியுள்ளோம். இதன் இன்றியமையாமையை உணர்ந்து நம் மத்திய அரசு, மாநில அரசின் உதவியோடு, உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமாகக் கிராம வானொலி மன்றங்களைப் போன்று, உழவர் ஆய்வு மன்றங்களையும் தோற்றுவித்து உழவர் உலகம் நிகழ்ச்சி கேட்டு கழனியெல்லாம் பொன் கொழித்திட உதவியது.



# இதயம் சீராக இயங்க வேண்டும்

—ஏர்வாடி. எஸ். இராதாகிருட்டினன்.


உடலுக்குள் ஓடுகின்ற குருதி, மற்றும்
ஒளிந்துள்ள நரம்புகளும் எலும்பும், அந்த
உடலியங்க உயிர்மூச்சைச் செலுத்து கின்ற
உறுப்புகளும் இருக்கையிலே, வெளிப்ப கட்டாம்
நடையுடையும் பாவனையும் முகமும் தானே
நமக்கெல்லாம் பெரிதாகத் தோன்றும்! இங்கே
உடலைப்போல் விளங்குவது நகரம் என்றால்
உள்ளுறுப்பாம் இதயமது கிராம மன்றோ!

நகர்ப்புறத்து மக்களிங்கே சுவைக்கும் மேலாம்
நல்லுணவு விளைவதெல்லாம் கிராமத்தில் தான்
அகம்மகிழ அணிகின்ற ஆடைக் கெல்லாம்
ஆரம்பம் பருத்தியெனில் கிராமம் நல்கும்!
சுகபோகச் சொர்க்கத்தின் தோற்று வாயாய்த்
துலங்குவதும் கிராமம்தான் என்ப தாலே
நகர்ப்புறத்தை வாழ்விக்கும் கிராமம் தன்னை
நல்லிதயம் என்றுரைத்தார் காந்தி அண்ணல்!

இதயமது சீராக இயங்கி னால்தான்
இருக்கின்ற உடல்வாழும் செயலும் ஓங்கும்.
அதற்காகத் தான்நமது அரசு நம்மை
அகம்குளிர வைப்பதற்கு முயன்று நாளும்
உதவுகின்ற உள்ளாட்சித் துறையின் கீழே,
ஊர்நலத்தின் பொறுப்புணர்ந்து உள்ளூர் ஆட்சி
நிதமிங்கே ஆற்றலுடன் செயல்பட் டால்தான்
நல்லரசின் திட்டங்கள் வெற்றி காணும்!

குடியாட்சி முளைக்கின்ற நாற்றங் காலாய்க்
கூறிடுவர் கிராமத்தை; மிகவே போற்றும்
முடிசூடா மன்னரென விளங்கும் மக்கள்
முனைந்துழைக்கும் பேருழவர் ஆவர், மெல்லத்
துடித்துடலில் குருதியோட்டம் செலுத்தி, நல்ல
தூய பணி செய்கின்ற இதயம் போல.
அடித்தளமாய் ஊரகங்கள் விளங்க வேண்டும்
அதுவன்றோ நமக்கெல்லாம் பெருமை நல்கும்!





மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் 15.8.79 அன்று சைதாப்பேட்டை டாடண்டர் நகரின் அருகில் உள்ள அரிசன மக்கள் குடியிருப்புப் பகுதிக்கு சென்னை ரோட்டரி சங்கம் சார்பில் அமைக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.



சென்னை ராஜாஜி மண்டபத்தில் அரசு உதவித் தொகை பெறும் முதியோருக்கும் ஆதரவற்ற விதவை களுக்கும் உடல் ஊனமுற்றோருக்கும் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், இலவச உடைகளை 11.8.79 அன்று வழங்கினார். மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி உடன் உள்ளார்.



தமிழ்நாடு இயலிசை நாடகமன்றத்தின் சார்பில் திண்டுக்கல்லில் நடைபெற்ற முத்தமிழ்க் கலைவிழா வின் நிறைவு விழாச் சொற்பொழிவை 28.7.79 அன்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆற்றினார்.

# படமும் செய்தியும்



அரசு உதவித்தொகை பெறும் ஏழை முதியவர்களுக்குச் சென்னை மாநகராட்சிப் பள்ளியில் விடுதலை நாள் அன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் இலவசமாக உடைகளை வழங்கினார்.



விடுதலைநாள் விழா அன்று சென்னையில் நடைபெற்ற சாரணர், சாரணியர் அணிவகுப்பில் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார்.



அரசு உதவித்தொகை பெறும் ஏழை முதியோர் களுக்கு சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி யில் விடுதலைநாள் அன்று மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திரு பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள் இலவச உடைகளை வழங்கினார்.

# ஊரை உயர்த்தும் ஊராட்சி நிறுவனங்கள்

—ஆர். பெருமாள்சாமி
ஊரக வளர்ச்சி இயக்குநரின் கூடுதல் நேர்முக உதவியாளர்.

ஒரு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ள 1979 ஜூலைத் திங்கள் 15ஆம் நாள் கோபிசெட்டிப்பாளையம் சென்றிருந்தேன். மணவிழா நிறைவுற்றதும் ஒவ்வொருவராக புறப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் நான்நின்று கொண்டிருந்த இடத்தைத் தேடி ஒருவர் மகிழ்ச்சி பொங்க விரைந்து வந்து என் கரங்களைப் பற்றிக் கொண்டார். அவர் கோபியின் அருகிலிருக்கும் குள்ளம்பாளையம் ஊராட்சிக்குத் தலைவராகவும், நான் கோபி செட்டிபாளையம் ஒன்றியத்தில் ஆணையராக இருந்தபோது பதவி வகித்த முன்னாள்ஒன்றியப் பெருந்தலைவராகிய திரு கே. எம். சுப்பிரமணியம் ஆவார். அவர் தன்னுடைய இல்லத்திற்கு அழைக்கவே, நானும் இசைந்தேன்.



கோபிசெட்டிப் பாளையத்திலிருந்து ஈரோடு செல்லும் நெடுஞ் சாலையிலிருந்து சுமார் 2கிலோ மீட்டர்கள் தூரத்தில் தெற்காகக் குள்ளம்பாளையம் கிராமம் அமைந்துள்ளது. குள்ளம்பாளையத்திற்குள் நுழையும் முன்பே சாலையின் இருபுறங்களிலும் 30 அடிக்கு ஒன்றாக நடப்பட்டிருக்கும் தென்னை மரங்கள் வரவேற்க ஊருக்குள் நுழைகிறோம். நுழைவாயிலில், கட்டப்பட்டுள்ள ஆசிரியர் குடியிருப்பும் ஊருக்குத் தெற்கே கருங்கல்லால் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டியும்கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. ஓரிரு பெண்கள் 'எவர்சில்வர்' தவலைகளில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தனர்.

கார் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. ஒரு அம்மையாரும் இளம் பெண்ணும் முற்றத்தில் அன்றைய காலைச் செய்தித் தாள்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். புதிய மனிதன் ஒருவன் வீட்டின் தலைவருடன் வரவே வீட்டிற்குள் செல்வதா அல்லது விருந்தாளியை வரவேற்பதா என்ற ஐயப்பாடு அவர்களிடத்தில் தோன்றுகிறது.

''இவள் எனது சிறிய பெண். அமெரிக்காவில் இருக்கிறாள். பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்துள்ளாள். மாப்பிள்ளை அங்கு டாக்டராக இருக்கிறார். பெரிய பெண்ணும் பெரிய மாப்பிள்ளையும் கூட அமெரிக்காவில் தான் இருக்கின்றார்கள்.'' என்று எனது நண்பர் சொன்னார். 'கேட்க வியப்பாகவும் பெருமிதமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது.

''நம்ம பொண்ணு, பிள்ளைகள் யாரும் அமெரிக்காவுக்கும், லண்டனுக்கும் போய்வரக்கூடிய வாய்ப்பு கிடைக்குமென்று முன்பு நான் எண்ணியதில்லை. நானே ஊராட்சி மன்றத்திற்குத் தலைவராக வந்திருக்கவில்லை என்றால் உலக விவகாரங்களேதெரிந்திருக்காது. வீடு உண்டு, தோட்டம் உண்டு, வயல் உண்டு என்று இருந்திருப்பேன். தலைவர் பதவி தானாக வந்தது. ஒன்றிய அலுவலகம் சென்று வரவும் கலெக்டர் அலுவலகம் போய் வரவும் பல பேரைப் பார்க்க நம் குழந்தைகளும் முன்னேற வேண்டும், நம் ஒன்றியம் முன்னேறவேண்டும் என்று ஆசைகள் அடுக்கடுக்காக ஏற்பட்டன''என்றார் அவர்.

''அந்த குள்ளம் பாளையத்தியத்திற்குத் தெற்கே 5 கிலோ மீட்டர் தொலைவில் நாகதேவன் பாளையம் என்று ஓர் ஊர் இருக்கிறது. ஒரு வண்டிப்பாதை தான் முன்னால் இருந்தது. 1967-இல் சாலை அமைக்கப் பாதைக்கு இரு பக்கமும் இருந்த நிலச் சொந்தக்காரர்கள் 10 அடி அகலத்திற்கு நிலம் தானமாகக் கொடுத்து உடல் உழைப்பினால் சாலையை அமைத்தார்கள். கோபிசெட்டிப் பாளையம் ஒன்றியம் பாதையின் குறுக்கே சென்ற ஓர் ஓடையில் பாலம் அமைத்து மக்கள்உழைப்பின் மூலம் அமைத்த சாலையை மேம்படுத்தி இன்று பேருந்து செல்லும் அளவிற்கு ஏற்றமுள்ளதாகச் செய்ததை அவர் தொடர்ந்து விவரிக்கும் போது, அந்த ஊர் விவசாயிகளிலேயே குறிப்பிடத்தக்க முற்போக்குவாதியாகத் திகழ்ந்த திரு வெங்கடாசலம் என்பவரின் நினைவு வந்தது. ஒரு முறை ஒரு வேளாண்மைக் கண்காட்சிக்காக அவர் விளைவித்த மஞ்சள் கொத்து இன்னும் என் மனக்கண்ணில் ஆடிக் கொண்டிருக்கிறது. அந்த மஞ்சள் கொத்து ஒரு அடி நீளமும் ஒன்றரை கிலோ எடையும் இருந்தது. அதே ஊரில் 120 மிகப் பெரிய காய்கள் கொண்ட ஈரோடு மொந்தம் வாழைத்தாரும், 64 கரும்புகள் கிளைத்திருந்த ஒரு கரும்புத் தாரும், நாலரை கிலோ எடையிருந்த ஒரு கருணைக்கிழங்கு தாரும் 70 கதிர்கள் வந்திருந்த ஒரு ஐ.ஆர். 20ம் வேளாண்மைக் கண்காட்சியில் வியப்பூட்டின. அந்த வியப்பிற்கு விடை கூறிய அவ்வூர் வேளாண்மை வீரர்களின் சொற்றொடர் இன்றும், என்னைச்சிந்திக்கத்தூண்டுகிறது. ''ஊர்நல உதவியாளரும் விவசாய அலுவலரும் என்னென்ன கட்டுக்கோப்பான சாகுபடிமுறைகள் என்று சொல்கிறார்களோ அவர்கள் சொன்னதைப்போல் அப்படி கடைப்பிடிக்கின்றோம்'' என்ற அவர்களின் விடை அனுபவத்தின் எதிரொலியாக ஒலித்துக் கொண்டிருக்கிறது.

''அடுத்து நாகதேவன்பாளையம் விவசாயிகள் எப்படியிருக்கின்றார்கள், வேளாண்மை எல்லாம் எப்படி'' என்று கேட்







ஒவ்வொரு குடிமகனும் எண்ண வேண்டிய எண்ணமாகும்.

கவே முன்னாள் பெருந்தலைவர் கூறினார்—

'' அனைவரும் நன்றாகவே இருக்கிறார்கள். எல்லோர் வீடு களிலும் பெரும்பாலும் மோட் டார் சைக்கிள்கள் இருக்கின்றன. நிலம் வாங்கி வசதியுடன் வாழ் கின்றனர். அவரவர்கள் பெண்களைக் கல்யாணம் செய்து கொடுக்கும் போது மருமகன்களுக்கு மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுத்து தனது பெண்ணும் மருமகனும் மோட்டார் சைக்கிளில் சென்று வயல் வேலைகளை முடித்து விட்டு கோபிக்கு திரைப் படம்பார்க்கச் செல்ல வேண்டும். வாழ்வை வளமுடன் வாழ வேண் டும் என்று எண்ணுகின்றனர்'' என்று சொன்னார். அவர் சொன் னவைகள் என்னை வியப்பில் ஆழ்த்தின. கிராமங்களில் வாழ்க்கைத் தரம் உயர்ந்து வரு கிறது. அன்றாட இன்றியமை யாத தேவைகள் மட்டுமின்றி ஆடம்பர வாழ்க்கை நடத்தவும் ஒரு சிலருக்கு வாய்ப்புகள் கிடைத்து வருகின்ற உண்மை புலனாயிற்று.

வட்டார வளர்ச்சி திட்டங்கள் கிராம முன்னேற்றங்களுக்கு அடிகோலியது என்பது மட்டுமில்லாமல் கிராம மக்களிடையே சமுதாய விழிப்புணர்ச்சிகளைத் தூண்டிவிட்டுள்ளன என்பதையும் எவரும் மறப்பதற்குஇல்லை. ஊராட்சிகள் ஒரு குடியரசு நாட்டில் சம உரிமையுடன் எல்லா இனத்தவரும் ஏழை பணக்காரன் படித்தவன், பாமரன் என்ற பாகுபாடுகளை மறந்து பொருளாதார எழுச்சியை எல்லோரும் பெறுவதற்கான வாய்ப்புகளை அளித்துள்ளது என்பதையும் யாரும் மறப்பதற்கில்லை. அந்தந்தப் பகுதிகளில் இருக்கக் கூடிய வருவாய் வசதிகளைக் கொண்டும் அரசின்பல்வேறு மானியங்களைக் கொண்டும் ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் ஒருமித்த முடிவுகளைப் பின்பற்றிக்கிராமப் பகுதிகளை மேம்பாடு செய்வதிலே பெருமுயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்பதினை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

திட்டப்பட்ட திட்டங்களும், திட்டங்கள் ஆற்ற வேண்டிய பணிகளின் நோக்கங்களும் முழுமையாக நிறைவேற வேண்டும் என்பதும் இந்நாட்டிலே சுதந்திர மகனாகப் பிறந்த கடமை மிக்க



வேளாண்மையில் வளர்ச்சி, கால் நடை அபிவிருத்தியில் வளர்ச்சி, நல்ல சாலைகள், குடிநீர் வசதிகள், சாக்கடை வசதிகள், பள்ளிக்கூடம், மருத்துவ வசதி, மகளிருக்குத் தையல் மற்றும் சத்துணவு ஆகியவைகளிலே பயிற்சி, விளை பொருள்களை நல்ல விலைக்கு விற்பதற்கான வசதி, குறைந்த வட்டியிலே கூட்டுறவு மற்றும் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளிலே கடன்கள் ஆகிய வசதிகளை ஏறக்குறைய எல்லா கிராமங்களும் பெற்றுவருகின்றன. இப்பொழுது நம் உரிமைகளையும், தன்மானத்தையும், தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால் நாமும் நம்மைச் சார்ந்த அனைவருமே ஒருமித்த வளர்ச்சியை அடைந்தோமா என்று எண்ணிப் பார்த்து எவர் பின் தங்கியுள்ளாரோ அவரை நம்முடன் சரிசமமாக இணைத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு குடியரசு நாட்டிலே வாய்ப்பு இருப்பவர்கள் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளத் தடையில்லை என்ற கோட்பாட்டிற்கு இணங்க நிலமுள்ளவர்கள் புதிய நீர்ப் பாசனத் திட்டங்களைப் பயன்படுத்தியும், ஒன்றிய விவசாயத்தொழில் நுணுக்க வல்லுநர்கள் ஆலோசனைப்பெற்றும் தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டனர். நிலமற்றோர், கூலிவேலை செய்வோர், அடித்தளத்திலேயே இருப்பவர்கள் முன்னேறுவதற்கான வாய்ப்புக்களை மேலும் அதிக அளவில் பயன்படுத்திக் கொண்டு முன்னேற வேண்டும். வேலை வாய்ப்புக்களைப் பெருமளவில் ஏற்படுத்தி ஒருங்கிணைந்த கிராம முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றி சிறு தொழில் வாய்ப்புக்களைப் பெருக்கி வறுமைக் கோட்டிற்குக் கீழே ஒதுங்கியுள்ளோரை வளம் பெறச் செய்வதை இன்றையப் பணியாக ஊராட்சிகளும், ஒன்றியங்களும் மேற்கொண்டுள்ளன.



# தமிழ் நாட்டில் பூதான இயக்கம்

தனது புனிதப் பயணத்தை திருமிகு வினோபாவே அவர்கள் 1956-ஆம் ஆண்டு தமிழகத்தில் தொடர்ந்தபோது பூதான இயக்கம் பொலிவு பெற்றது. தன்னுடைய நிலத்தை நிலமற்றவர்க்கு அளிக்க ஒப்புக் கொள்ளும் சான்றிதழ்கள் ஆயிரக்கணக்காக அவர் காலடியில் காணிக்கையாக வைக்கப்பட்டன. அத்தகைய நிலங்களைச் சட்ட பூர்வமாக அளிப்பதற்காக பூதானச் சட்டம் 1958 இல் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து, பூதான வாரியம் 1959-இல் தொடங்கப்பட்டது.

சட்டத்தை நடைமுறைப்படுத்த பூதான வாரியம் முனைப்புடன் இயங்கத் தொடங்கியபோது, 20,157 பூமிதானப் பத்திரங்கள் வந்து குவிந்திருந்தன. அப் பத்திரங்களில் குறிப்பிட்டுள்ள நிலங்கள் பார்வையிடப்பட்டன. நிலவளம ஆய்வு செய்யப்பட்டது. மொத்தம் 23,472 ஏக்கர் பரப்பளவு நிலம் பூதான இயக்க நிலமாக அறிவிக்கப்பட்டது. இந்நிலப்பரப்பில் 22,786 ஏக்கர், 15,409 நிலமற்ற ஏழைமக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. 1978-79 ஆம் ஆண்டில் மட்டும் 309 பூமிதானப் பத்திரங்கள் வந்து சேர்ந்திருந்தன. இந்த ஆண்டில் 207 ஏக்கர் பரப்பளவு நிலம் 264 நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கப்பட்டது. இதன் விளைவாகத் தமிழகத்தின் பல பகுதிகளில் பசுமைப் போர்வைக்குள் பதுங்கிக் கிடக்கிறாள் நிலமகள். 'எதுவுமே இல்லை' என்றவர்கள் இன்று 'என்ன வேண்டும்' என்று நம்மைக் கேட்கும் அளவிற்கு உயர்ந்திருக்கிறார்கள். பொருள் கொடுத்து வாங்கிய நிலத்தைவிட சிலர் அருளால் கிடைத்த இத்தகைய நிலங்களை-நிலமற்றோர் பேணிக் காத்து தனக்கு மட்டுமின்றி-நாட்டுக்கும் விளை பொருளை அளிக்கும்போது-நிலம் அளித்தவரைப் பாராட்டுவதா? அல்லது நிலம் பெற்றவரைப் பாராட்டுவதா என்ற சிக்கல் நம் சிந்தனையில் இடறுகிறது.



தனிப்பட்டவர்கள் அளிக்கும் தனித்தனி நிலங்களில் நம் எண்ணச் சுவடுகள் பதித்து எழும்போது, நமது காலடிகள் கிராமதான நிலங்களில் பதிகின்றன.

தமக்குச் சொந்தமான நிலங்களை—ஊர் சமுதாயத்திற்கு அளிக்க ஒப்புக் கொண்டு, நில உரிமையாளர்கள் அனைவரும் ஒரே பத்திரத்தில் கையெழுத்திட்டு அளிக்கும் பகுதிகள் 'கிராமதானப் பகுதிகள்' என்ற சிறப்புப் பெயரைச் சூட்டிக் கொள்கின்றன. தமிழகத்தில் இதுவரை இத்தகைய பகுதிகளின் எண்ணிக்கை 22,030. கிராமதானப் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட சிற்றூர்கள் மொத்தம் 1232. 1978-79 ஆம் ஆண்டு மட்டும் 422 கிராமதானப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டம், திண்டுக்கல் வட்டம் சாணர்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 161 சிற்றூர்களும் கிராமதானச் சிற்றூர்களாகும் என்ற உண்மையைக் கேட்கும்போது வியப்படைகின்றோம். தானமளிப்பதில் தமிழன் தாழ்ந்து விடவில்லை என்ற எண்ணத்தால் நெஞ்சு நிமிர்கிறது.

மேலும் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த நத்தம் ஒன்றியத்திலுள்ள அனைத்துக் கிராமங்களையும், பூமிதான அரவணைப்புக்குள் கொண்டுவர முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராம முழுவளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வரும் நெல்லை மாவட்ட மேலநீலிதநல்லூர் பகுதி கிராமதானப் பகுதி என்று அறியும்போது, பெருமிதம் கொள்கிறோம். திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த நாங்குநேரியில் எண்ணற்ற சிற்றூர்கள் கிராமதானச் சிற்றூர்களாகும் என்னும்போது மகிழ்வு இரட்டிப்பாகிறது.

இத்திட்டங்களிலிருந்து கிளைத்தெழுந்த திட்டம்தான் ''அனைத்துச் சேவைப் பண்ணைகள்'' இத்திட்டத்தின் கீழ் முன்னேற்றத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பகுதிகளைக் காட்டும் பட்டியல் இதோ:

| பகுதியின் பெயர் | பகுதியின் பரப்பளவு | செலவு மதிப்பீடு (ரூபாயில்) |
|---|---|---|
| **மதுரை மாவட்டம்** | | |
| உச்சபட்டி ... | 33.45 | 84568.00 |
| நூதலாபுரம் ... | 27.00 | 93570.00 |
| எதிலோடு ... | 21.00 | 104030.00 |
| சங்கரெட்டி கோட்டை ... | 22.82 | 104470.00 |
| சின்னமாணிக்கன் கோட்டை ... | 21.00 | 104130.00 |
| செல்லபணிக்கன் பட்டி ... | 26.25 | 136080.60 |
| காந்தி கிராமம் ... | 17.00 | 70000.00 |
| வெப்படைப்பு ... | 21.00 | 87400.00 |
| **இராமநாதபுரம் மாவட்டம்** | | |
| சேவலூர் ... | 70.00 | 130000.00 |
| கொம்மபட்டி ... | 28.56 | 128080.00 |
| எஸ். கோடிகுளம். | 49,93 | 155040.00 |
| தோப்பூர் ... | 30.80 | 78030.00 |
| **கோயம்புத்தூர் மாவட்டம்** | | |
| கல்லாபுரம் ... | 75.00 | 210313.00 |
| வடுகப்பட்டி ... | 100.00 | 250000.00 |
| வடுகப்பட்டி-2 ... | 150.00 | 135302.00 |
| கொங்கார் பாளையம் ... | 258.00 | 2629030.00 |
| **புதுக்கோட்டை மாவட்டம்** | | |
| மேல்பட்டி ராசி மங்கலம்... | 33.77 | 118110.00 |
| **நெல்லை மாவட்டம்** | | |
| பத்மநாப மங்கலம் | 35.94 | 154340.00 |
| **திருச்சி மாவட்டம்** | | |
| மலையாளப்பட்டி. | 110.00 | 600000.00 |
| **செங்கற்பட்டு மாவட்டம்** | | |
| வெள்ளைப்புதூர் | 52.00 | 30000.00 |
| மாகறல் ... | 62.52 | 481500.00 |
| மொத்தம் ... | 1246.04 | 6168993.00 |

## கிராமச் சாலைகள்

கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட வேண்டியுள்ள சாலைகளின் நீளம் 7126 கிலோ மீட்டர்.

நடப்பாண்டில் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமச் சாலைகளின் நீளம் 1143 கிலோ மீட்டர்.

இவற்றுக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 80 இலட்சமாகும்!

மேற்குறிப்பிட்ட பண்ணைகளுள் 1978-79 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட பண்ணைகளின் வேலைகள் விரைவாக நடந்துகொண்டிருக்கின்றன.

| பகுதியின் பெயர் | பரப்பளவு | மதிப்பீடு |
|---|---|---|
| **மதுரை மாவட்டம்** | | |
| வெப்படைப்பு | 21.00 | 87,400.00 |
| **கோயம்புத்தூர் மாவட்டம்** | | |
| கொங்கார் பாளையம் | ...258.00 | 26,29,030.00 |

செங்கல்பட்டு மாவட்டம்

| | | |
|---|---|---|
| மாகறல் | ... 62.52 | 4,81,500.00 |
| மொத்தம் | ...341.52 | 31,97,930.00 |

இவை தவிர, தமிழகத்தில் 19 இடங்களில், மொத்தம் 886.79 ஏக்கர் பரப்பளவில் ரூ. 35,99,815 மதிப்பீட்டில் பண்ணைகள் நிறுவ எண்ணப்பட்டுள்ளது.

இத்தகைய கிராமதானப் பகுதிகளின் முன்னேற்றத்திற்காக, தஞ்சாவூர், கோயம்புத்தூர், இராமநாதபுரம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களுக்கு மொத்தம் 20 லட்சம் நிதி உதவி அளிக்கும் செயற்குறிப்பை அரசு தீவிரமாக ஆய்ந்து வருகிறது. இவற்றை விடுத்து 'மேயர் அறக்கட்டளை' என்ற 'உதவி நிறுவனம்' பல்வேறு கிராமதானப் பகுதிகளில் ரூ. 59,19539.94 கடனுதவி அளித்துள்ளது.

கிராமதானத் திட்டத்தின் மற்ருெரு குறிப்பிடத்தக்க சிறப்புக் கூறு கிராமதான சர்வோதயக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாகும். தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு சங்கமும், மதுரை மாவட்டத்தில் 30 சங்கங்களையும் கொண்டு திகழும் இக்கூட்டுறவு அமைப்பு உறுப்பினர்களின் எண்ணிக்கை 3497. 2416 ஏக்கர் நன்செய் நிலத்தையும், 1770.55 ஏக்கர் புன்செய் நிலத்தையும் கொண்டு திகழ்கின்றன இச்சங்கங்கள். அரசு மற்றும் சங்க உறுப்பினர்களின் உதவியோடு, சங்கம் அமைத்த கிணறுகளின் எண்ணிக்கை 343. மேலும், மதுரை மாவட்டத்திலுள்ள ''ஜாரி உசிலம்பட்டி, காமாட்சிபுரம், நாதகோட்டை, சொக்கலிங்கபுரம் இலக்குமிபுரம் ஆகிய பகுதிகளில் பண்ணைகளை அமைக்க, ரூ. 5 லட்சம் நீண்ட காலக் கடனாகவும், ரூ. 2.18 லட்சம் மானியமாகவும் அரசு வழங்கியுள்ளது. இக்கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கிளைத்தெழுந்தது தான் கூட்டுறவு பால் சங்கம். அமுல் பால்பண்ணை முறையில் இயங்கும் பத்து பால் பண்ணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

கிராமதானக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிக்கு அணி செய்யும் விதத்தில் பூமிதானக் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்படுகின்றன.

தமிழகத்தில் மொத்தம் பதின்மூன்று பூமிதானக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. 765 உறுப்பினர்களைக் கொண்ட இச்சங்கங்கள் 1726 ஏக்கர் பரப்பளவு நிலத்தைக் கொண்டதாகத் திகழ்கின்றன.

இச் சங்கங்களின் பணிகள் தொடர்கின்றன. அவைகளுக்கு முடிவில்லை. ஏனெனில், வறுமையை ஒழிக்க, சாகா வரம் பெற்றவை அவை!



## ஒன்றியச் சாலைகள்

ஊராட்சி ஒன்றியங்கள் ஆண்டுதோறும் 31559 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருகின்றன.

இந்தப் பராமரிப்புச் செலவுக்கென அரசு இந்த ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ. 2.50 கோடி வழங்கிட இருக்கிறது. தீவிர வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் போடப்பட்ட புதிய பாதைகள் ஆகியவற்றையும் ஊராட்சி ஒன்றியங்களே ஏற்றுக் கண்காணித்து வருகின்றன.

அரசு வழங்கும் நிதி உதவிக்கு மேல் ஒன்றியங்களும் தங்கள் நிதியிலிருந்து பராமரிப்புக்கெனச் செலவிட்டு வருகின்றன.

* * *

## நிர்வாகப் பணியாளர் சீரமைப்பு

ஊர்வளர்ச்சி நிர்வாகக் கிளைகளில் பணியாற்றும் தொழில் நுட்பமில்லா பிற பணியாளர்களின் பணிவிதிகளைச் சீராக்கவும், எல்லா நிலுவைகளிலும் தேக்கத்தைப் போக்கவும் வேலை உயர்வில் எல்லோருக்கும் சமவாய்ப்புகள் அளிக்கவும் 'பணி விதிகளை' அமைத்திட தமிழக அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

* * *

## மகளிர் மன்றங்கள்

ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் என்ற விகிதத்தில், ஓர் ஒன்றியத்திற்கு 30 மகளிர் மன்றம் நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

இவ்வகையில், தமிழகத்தில் இப்போது செயல்பட்டுவரும் மகளிர் மன்றங்களின் மொத்த எண்ணிக்கை 12,308 ஆகும்!



# சேவைக்கு ஒரு மாணிக்கம்

ஆண்களுக்குப் பெண்கள் சமம் எனப் பல்வேறு பணிகளை ஆற்றிடும் புதுமைப் பெண்கள் பலரையும் காண்கிறோம் இன்று. அவர்களில் ஒருவர்தான் செல்வி எம்.மாணிக்கம்.

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வளத்தோட்ட கிராமத்தில் பிறந்தவரான இவர், 1974-75ஆம் ஆண்டில் நாட்டிலேயே சிறந்த கிராம சேவகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமைக்குரியவராவார்.

1962-ஆம் ஆண்டு முதலே கிராமசேவகியாகப் பணியாற்றி வருபவர் இவர். பம்பரம் போலச் சுழன்று சுழன்று பாடுபடக்கூடியவர்.

குடும்பநலத் திட்டம், ஊட்டச் சத்துணவுத் திட்டம், 'கேர்' உணவு வழங்கு திட்டம், தொழு நோய்த் தடுப்புப் பயிற்சி, முதலுதவிப் பணி எதுவானாலும் சரி; அதில் செல்வி எம். மாணிக்கம் எடுத்துக் கொள்ளும் பங்கு மகத்தானதாகும்!

இனிய பேச்சு, எளிய தோற்றம், எல்லோருடனும் பேதமின்றிப் பழகும் சுபாவம், எடுத்த காரியம் எவ்வளவு சிக்கலுடையதானாலும் சோர்வின்றி அதை முயன்று முடிக்கும் ஆற்றல் ஆகியவற்றுக்குச் சொந்தக்காரர் இவர்!


இப்போது காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் கிராம சேவகியாகப் பணியாற்றும் இவர் இதற்குமுன் விக்கிரவாண்டி, ஒலக்கூர், குறிஞ்சிப்பாடி ஒன்றியங்களில் பணியாற்றியவர்.

பொறுப்பேற்றுள்ள ஒன்றியத்தில் உள்ள நகரங்களில் மட்டுமல்ல; குக்கிராமங்களில் கூட செல்வி எம். மாணிக்கத்தின் பொதுப்பணிப் பாதங்கள் படாத இடமே இல்லையென்று கூறலாம்!

—'மருதம்'





# நடுவக்குறிச்சி தொடுக்கும் போர்

தேசிய மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திட்டம்-கிராம முழுவளர்ச்சித் திட்டம். நாடு முழுவதும் நான்கு இடங்களில் பரிசோதனை முறையில் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் மிகப் பின்தங்கியப் பகுதிகளில் ஒன்றான நடுவக் குறிச்சிப் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் இக்கிராமப் பகுதிகள் விரைவான வளர்ச்சியையும் முன்னேற் றத்தையும் அடைந்து வருவதை இக்கட்டுரை விளக்குகிறது.

கிராம மக்களின் முன்னேற் றத்தை நோக்கமாகக் கொண்டதே கிராம முழு வளர்ச்சித் திட்டம் ஆகும்.

*வறுமைக் கோட்டிற்கும் கீழ் மட்டத்தில் வாழும் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக ஆவன செய்தல்;

*நகர்ப்புற மக்களுக்கும் நாட்டுப்புற மக்களுக்கும் வரு வாய் வேறுபாட்டைக் குறைத் தல்;

*கிராமங்களில் வசதி படைத் தோருக்கும், சிறு உழவர்கள் மற் றும் விவசாயக் கூலிகளுக்கு மிடையேயுள்ள வாழ்க்கைத் தரத்தின் வேறுபாட்டினைக் குறைத்தல்;

*கிராமத்தில் பலவகைப்பட்ட பிரச்சினைகளையும், ஒரே முனை யில் சந்திக்கும் வகையில் வளர்ச் சிப் பணிகளை ஒருங்கிணைத்தல்.

ஆகியவை இத்திட்டத்தின் இதர நோக்கங்களாகும். துவக் கத்தில், வேளாண்மை வளர்ச்சி யில் கவனம் செலுத்தி நாளா வட்டத்தில் மற்ற துறைகளிலும் கவனம் செலுத்தப்படும். கிராம தானப் பகுதிகளில் இத் திட்டத்தை மேற்கொள்வது இதன் பிறிதொரு சிறப்பு அம்ச மாகும். அரசுச் சார்பற்ற நிறு வனங்களே திட்டத்தை வடிவ மைத்தும் செயல்படுத்தியும் வரு கின்றன. இந்த அம்சம், அண் மையிலுள்ள கிராமங்களிலும் இத்திட்டத்தில் மக்களின் ஒத்து ழைப்பைக் கவர்கிறது.

## முழு வளர்ச்சித் திட்டம்

திருநெல்வேலி மாவட்டம், மேலநீலிதநல்லூர் வட்டாரத்தி லமைந்த நடுவக்குறிச்சிதொகுதி கிராமங்களில் இத்திட்டம் 10-3-'77 முதல் துவக்கப்பட்டது. மேற்குத் தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பிரதேசத்தில் அமைந்த தமிழ்நாட்டின் மிகப்



## வீட்டுவசதி — சில செய்திகள்

● தமிழகத்திலுள்ள 17,000 கிராமங்களில் இருபது முதல் முப்பது இலட்சம் குடும்பங்கள் குடியிருக்க நல்ல வீடு இல்லாத குறையுடன் வாழ்கின்றன.

● இவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்றால் ஏறத்தாழ ரூ. 1,500/- கோடி தேவைப்படும்.

● அதிக அளவில் முன்னேறியுள்ள நாடுகளில் கூட தம் நிதி மதிப்பீட்டில் பதினைந்து விழுக்காடு தொகையைத் தான் வீட்டு வசதிக்கென ஒதுக்க முடிகிறதாம்.

● தமிழகத்தைப் பொறுத்தவரையில் வீட்டு வசதிக்கெனப் பலவகைத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

* வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள் மூலம் கட்டப்படும் வீடுகள்.
* பர்மா மற்றும் இலங்கை அகதிகளுக்கான குடியிருப்பு இல்லங்கள்.
* மீனவர்களுக்கான குடியிருப்புகள்.
* நெசவாளர்களுக்கான குடியிருப்புகள்.
* முன்னாள் இராணுவத்தினருக்கான குடியிருப்புகள்.
* தோட்டப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள்.
* ஆண்டு வருவாய் ரூ. 8,000/-க்குக் குறைவான அனைத்து நிலையினருக்கும் குடியிருப்புகள்.
* அரிசன மக்களுக்கான குடியிருப்புகள்.
* தொழிலாளர்களுக்கான குடியிருப்புகள்.

● வீடுகள் கட்டுவதற்காகத் தேவையான இடம் எளிதில் கிடைப்பதற்காக நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தை அரசு நிறைவேற்றியுள்ளது.

● வீடுகள் கட்டுவது வேலை இல்லா நிலையைப் போக்குகிறது. ஒரு லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும் ஒரு கட்டிடத்தின் மூலம் 20,000/- முதல் 25,000/- வரை மனித தொழில் திறன் நாட்கள் (Man power days) கிடைக்கிறது.

● வீடுகளை மலிவாகக் கட்டுவது பற்றித் தமிழ்நாடு பொறியியல் ஆராய்ச்சி நிலையம் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

● மலிவு வீடுத திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் அருகே கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கான கட்டுமானச் செலவு சதுர அடிக்கு ரூ. 10/- மட்டுமே.

● அனைத்திற்கும் மேலாக, நம் வீட்டை மட்டு மல்ல, வீட்டைச் சுற்றியுள்ள இடமும் தூய்மையாக இருக்க வேண்டும், என்ற எண்ணம் அனைவருக்கும் தோன்ற வேண்டும்.

பின்தங்கிய பகுதிகளுள் இப்பகுதியும் ஒன்றாகும். நடுவக்குறிச்சி மேஜர், நடுவக்குறிச்சி மைனர், சின்னக்கோவிலான்குளம் மற்றும் பட்டாடைகட்டி ஆகிய 4 வருவாய் கிராமங்களிலும் இத்திட்டம் செயல்படுகிறது. 9009 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட இத்திட்டப் பகுதியில் தற்போது 2343 ஏக்கர் அளவே பயிரிடப் படுகிறது. அதிலும் 525 ஏக்கர் அளவில்தான் இருபோாகம் சாகுபடியாகிறது. சாகுபடிக்குத் தகுதியான 3379 ஏக்கர் நிலங்கள் தரிசாக உள்ளன.

5100 மக்கள்தொகை கொண்ட இப்பகுதியில் 1102 குடும்பங்கள் வாழ்கின்றன. இக்குடும்பங்களில் 73 சதவீதத்தினரின் ஆண்டு வருவாய் ரூ. 2400-க்கும் குறைவாக உள்ளவர்கள். எனவே இப்பகுதி பொருளாதார ரீதியில் எவ்வளவு பின்தங்கியது என்பதற்கு இதுவே சான்றாகும்.

### பொது நிலை

வறண்டதட்பவெப்ப நிலையே இங்கு பெரும்பாலும் உள்ளது. ஆண்டுக்கு 450 மில்லி மீட்டர் முதல் 950 மில்லி மீட்டர் வரை மழை பெய்கிறது. இதுவும் உறுதியற்ற நிலையிலேயே இருக்கும். செவ்வலும், மணலும் கலந்த நிலைப்பாடான நிலவளம், நீரைத் தாங்கி நிறுத்தி வைக்கும் தன்மை மிகவும் குறைந்த அளவே கொண்டது. மானாவாரிக் கிணறுகளையும் இறவைக் கிணறுகளையும் நம்பியே நஞ்சை சாகுபடியுள்ளது. குளங்களில் மாரிக் காலத்தில் மட்டுமே தண்ணீர் உண்டு. கிணறுகளும் 10 முதல் 16 மீட்டர் வரை ஆழமானவை. அவற்றில் காலநிலையைப் பொறுத்து 1 முதல் 10 மீட்டர் வரை தண்ணீர் இருக்கும்.

### சாகுபடி

நெல், சோளம், மிளகாய், பருத்தி நிலக்கடலை. இப்பகுதியின் முக்கியப் பயிர்களாகும். சில குறிப்பிட்ட இடங்களில் மல்லிகை, பிச்சி போன்ற பூச்செடிகளும் பயிராகின்றன. இப்பகுதியில் மழையின் நிச்சயமில்லாத தன்மையை முன்னிட்டு விவசாயத்தை மட்டும் நம்பி வாழ முடியாத நிலை உள்ளது.

### கால்நடைச் செல்வம்

கிராமங்களில் செம்மறி, வெள்ளாடுகள், கோழிகள் முதலியவை உண்டு. ஆனால் தேசிய வகை வெளியினங்கள்-இன்னும் அதிகமாக இங்கு அறிமுகமாகவில்லை. வறட்சியும் தீவனப்பற்றாக்



குறையும் சிறந்த கால்நடை — கோழி அபிவிருத்திக்குத் தடையாக உள்ளன.

### பாசனக்குட்டைகள்

அருகிலுள்ள கிணறுகளில் நீர் மட்டத்தை உயர்த்தும் நோக்கத்துடனும் கால்நடைகளுக்கு நீரருந்தவும், திட்டப் பகுதியில் 78-79-ம் ஆண்டில் 3 கசிவு நீர் குட்டைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. ரூ. 66,000 மதிப்பீட்டில் இம்மூன்று வேலைகளும் நடைபெற்று வருகின்றன. 1979-80-ஆம் ஆண்டில் ரூ. 1 இலட்சம் மதிப்பீட்டில் இன்னும் 5 குட்டைகள் அமைக்கப்படும்.

### பெரிய அளவு சமுதாயக் கிணறுகள்:

பருவமழையை எதிர்பார்த்து முன்னதாகவே நாற்றுகள் தயாரிக்கவும் குளம் வற்றியபோது, தண்ணீர் தட்டு ஏற்பட்டால் அதைச் சமாளிக்கவும் இப்பகுதி பாசனக் குளங்களில் மூன்று பெரிய சமுதாயக் கிணறுகள் தோண்ட ரூ. 2.25 இலட்சம் மதிப்பீட்டில் வேலை நடந்து வருகிறது. 1979-80-ல் 3.75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இன்னும் ஐந்து கிணறுகள் தோண்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### சிறிய அளவு சமுதாயக் கிணறுகள்

இதுவரை பாசன வசதியில்லாத சிறிய நிலத்துண்டுகளை ஒருங்கிணைத்துப் பாசன வசதியளிக்க ஆறு சிறிய அளவு சமுதாயக் கிணறுகள் ரூபாய் 1.5 இலட்சம் மதிப்பீட்டில் தோண்டப்படுகின்றன. இக்கிணறுகளின் மூலம் குறைந்தபட்சம் 30 ஏக்கர் தரிசு நிலங்கள் பாசன வசதி பெறும். 1979-80 ஆண்டில் இன்னும் 100 ஏக்கர் பாசனவசதி பெறும் வகையில் ரூ. 6 இலட்சம் மதிப்பீட்டில் 20 கிணறுகள் தோண்டப்படும்.

### கிணறுகள் ஆழப்படுத்துதல்

ரூ. 74,080 செலவில் 12 பாசனக் கிணறுகள் 78.79-ல் ஆழப்படுத்தப்பட்டன. திட்டம் துவங்கிய நாள் முதல் ஈராண்டுகளில் 59 மின்மோட்டார்கள் ரூ. 2,95,000 செலவில் வழங்கப்பட்டன. இதன் மூலம் மேலும் 60 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

### உழவு மாடுகள்

இரண்டாண்டுகளில் சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு 92 ஜோடி மாடுகள் கடனாக வழங்கப்பட்டன. இக்கடன், 5 ஆண்டு சமதவணைகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

123 நபர்களுக்கு பயிர்க்கடனாக ரூ. 62,698 கொடுக்கப்பட்டது. 40 ஏக்கர் நிலத்தில் முசுக்கட்டைச் செடி பயிரிட உத்தேசிக்கப்பட்டது. ஏற்கெனவே 1.5 ஏக்கர் நிலத்தில் நடுவக்குறிச்சி கிராமத்தில் முசுக்கட்டைச் செடி பயிரிடப்பட்டு விட்டது.

### கால்நடைத்தீவன அபிவிருத்தி:

கறவை மாடுகளுக்குப் போதிய தீவனம் உறுதிப்படுத்த நான்கு கிராமங்களிலும் பரவலாக என். பி. 21 ரக தீவனப்புல் வளர்க்கப் பெற்றுள்ளது. இன்னும் கூடுதலான அளவில் பயிரிடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

60 விவசாயிகள் ரூ. 5,500 செலவில் வேளாண்மைப் பயிற்சி நோக்குடன் அரசு வேளாண்மைப் பண்ணைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ரூ. 22,732 செலவில், தெளிப்பான் போன்ற நவீன வேளாண்மைக் கருவிகள் வழங்கப்பட்டன.

### கால்நடை வளர்ச்சி

ரூ. 2,74,075 செலவில் 129 கறவை மாடுகள் கடனாக வழங்கப்பட்டுள்ளன. இக்கடன் 5 ஆண்டுத் தவணைகளில் திரும்பச் செலுத்தப் பெற வேண்டும். இதன் மூலம் கடன் பெற்றோர் ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 கூடுதலான வருவாய்பெற, வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு ஆடுகள் வாங்குவதற்காக ரூ. 98,000 கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டது 20 ஆடுகளும் ஒரு கிடாவும் கொண்ட ஒரு யூனிட் ரூ. 2,000 மதிப்பில் வழங்கப்பட்டன. இத்தொகையும் 5 ஆண்டு சமதவணைகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். 3379 ஏக்கர்தரிசு நிலங்கள் உள்ளதால் மேய்ச்சல் செலவு ஏதும் கிடையாது. ஆகையால் திட்டத்தில் அதிக வெற்றியைத் தந்துள்ள திட்டமாகும் இது. இத்திட்டத்தினால் யூனிட் ஒன்றுக்கு வருடம் ரூ. 960 நிகர வருமானமாக கிடைக்கிறது. இதுவரை 49 நபர்கள் பயன் பெற்றுள்ளனர். 1979-80-ஆம் ஆண்டில் மேலும் 150 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 150 யூனிட் ஆடுகள் வழங்கப்படும்.

### திட்டத்தின் பயன்

வறுமைக்கோட்டின்கீழ்மட்டத்தில் வாழும் தனிநபர்கள் வருமானம் எந்த அளவு உயர்ந்துள்ளது என்பதே இத்திட்டம், எந்த அளவு பயனளித்துள்ளது என்பதன் அளவு கோலாகும்.

அந்த வகையில் கணக்கெடுத்த பொழுது கடந்த இரண்டுஆண்டுகளில் நடுவக்குறிச்சி மேஜர், நடுவக்குறிச்சி மைனர், பட்டாடைக்கட்டி சின்னக் கோவிலான்குளம் ஆகிய ஊர்களில் உள்ள குடும்பங்களின் ஆண்டு வருமானம் கூடியுள்ளது. குறைந்த அளவு வருமானமுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

இத்திட்டம் ஏற்கனவே பயனளிக்கத் தொடங்கியுள்ளது. இதுவரை இயலாத ஒன்று எனக் கருதப்பட்ட ஒரு காரியத்தை நமது மக்கள் முடியும் என நிரூபித்துவிட்டனர். இத்திட்டம் உண்மையிலேயே சமுதாய மக்களின் முன்னேற்றத்தை மையமாகக் கொண்ட மக்களின் திட்டம். அரசும் திட்டத்தில் பங்கு கொள்கிறது. கிராம வளர்ச்சியின் வரலாற்றிலேயே ஈடுஇணையற்ற ஓர் அரிய சாதனையாகவே இத்திட்டத்தைக் கொள்ளலாம்.

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**
  இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.
- **கிராம ஏற்புத் திட்டம்:**
  விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.
- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**
  விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.
- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**
  நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பலவேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

MFL 2111





# இரவில் சென்னை!

இரவு நேரம்!

குப்பை லாரி ஒன்று, தெருத் தெருவாகச் சென்று குப்பைகளை அள்ளிப் போட்டுக் கொண்டு செல்கிறது.

இரவென்றும் பாராமல் கண் விழித்துக் குப்பை, கூளங்களை அகற்றும் அந்தத் துப்புரவுத் தொழிலாளர்கள் சுறுசுறுப்பாக இயங்குகின்றனர்.

சென்னை நகரத்தில் இரவு நேரங்களில் நடைபெறும் இந்தத் துப்புரவுப் பணிகளை ஏறத்தாழ மூன்று மணிநேரம், உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் பார்வையிட்டார்.

அதிக நெரிசலான போக்குவரத்தினால் பகல் நேரத்தில் துப்புரவுப் பணிகள் செவ்வனே செய்ய முடியாத பகுதிகளில், இரவு துப்புரவுப் பணி 15.6.'79 முதல் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

முதல் பகுதியாக 12 இடங்களில் அண்ணாசாலை, திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலை, தேனாம்பேட்டை, பிராட்வே, சென்ட்ரல், மூர் மார்க்கெட், பூக்கடை, சௌகார் பேட்டை, மண்ணடி ஆகிய இடங்களில் துப்புரவுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மொத்தம் 120 தொழிலாளர்களும், 12 துப்புரவு ஆய்வாளர்களும், 12 லாரி ஓட்டுநர்களும் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். உதவிச் செயற் பொறியாளர் இருவரின் தலைமையில் இவர்கள் இயங்கி வருகின்றனர்.

மாநகராட்சித் துறைத் தலைவர் ஒருவர் இவர்களது பணிகளைக் கண்காணித்து வருகிறார். சிறப்பு அலுவலர் திரு சி.ராமதாசு, ஆணையாளர் திரு சி.ஆறுமுகம் ஆகியோர் இரவு நேரங்களில் திடீர்ச் சோதனைகள் செய்து வருகின்றனர்.

பிராட்வேயில் உள்ள பூ அங்காடிக்குச் சென்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் பார்வையிட்டார். மங்களலட்சுமி என்ற பெண்மணி, ''எப்போதும் இல்லாத வகையில் தினமும் குப்பைகளை மாநகராட்சியினர் இரவு நேரத்தில் அகற்றுகின்றனர்'' என்று மகிழ்ச்சி தெரிவித்தார்.


அண்ணா சிலை அருகேயும், டி.வி.எஸ். அருகேயும் சோதனைக்காகச் சோடிய வேப்பர் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. மற்ற இடங்களில் எலக்டிரிக் வேப்பர் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அண்ணா சிலை அருகே உள்ள சோடிய வேப்பர் விளக்கினை அமைச்சர் பார்வையிட்டபோது, இது பயன் அளித்தால் மற்ற பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும் என்று தெரிவித்தார்.

ஜெனரல் பேட்டர்ஸ் சாலையில் தானியங்கு துப்புரவு இயந்திரத்தின் பணியினையும் அவர் பார்வையிட்டார். பாரதிசாலையில் உள்ள ஜாம்பஜார் மார்க்கெட் பகுதியையும் பார்வையிட்டார். பின்னர், மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அவர் பார்வையிட்டார். அங்கிருந்த துப்புரவுப் பணியாளர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, இரவு நேரத்தில் எல்லோருக்கும் மாநகராட்சியின் செலவில் தேநீர் வழங்க அமைச்சர் உத்தரவிட்டார்.

மாம்பலம் ரங்கநாதன் தெருவில் உள்ள மார்க்கெட் பகுதிகளில் துப்புரவுப் பணிகளையும் அமைச்சர் பார்வையிட்டார்.

அரசும், உள்ளாட்சித் துறையும் ஆயிரம்தான் முயற்சிகள் மேற்கொண்டாலும், சென்னை மாநகரத்தின் சுகாதார ஒளி சென்னைவாழ் பொதுமக்கள் கையில்தான் இருக்கின்றது என்று சொல்லலாம்!

# பூரியின் பூரிக்கும் சிரிப்பு: ஸனேலாவின் சிறப்பு!



ஸனேலா

சூரியகாந்தி எண்ணெய்

சுத்தம், சிக்கனம், சத்து
நிறைந்தது. குடும்பத்தினர்
அனைவருக்கும் உகந்தது.
கொலஸ்டிராலைக் குறைக்கும்
ருசியைக் கொடுக்கும்.
ஊட்டத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏற்றது.

மலிவான விலை




தயாரிப்பு:
தி தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்டிரீஸ்
கார்ப்பொரேஷன் லிமிடெட் சென்னை 600 032

ADWAVE T.A.I.C 862

சென்னை நகர விநியோகஸ்தர்கள்:

புஷ்பா அண்டு கம்பெனி, 30, ஜோன்ஸ் தெரு, சென்னை-600 001
போன்: 30887

அஜேய் அண்டு சன்ஸ்,
149, அண்ணா பிள்ளை தெரு, சென்னை-600 001 போன்: 32177

எஸ்.எஸ்.வி. ஏஜென்ஸீஸ், 854, டி.எச். ரோடு, சென்னை-600 019
போன்: 551980.

சென்னையில் எல்லா கடைகளிலும் கிடைக்கும்.


# சோமங்கலம்



அகில இந்திய அளவில் நிறைவேற்றப்பட்டு வரும் 'ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்' (Integrated Rural Development Scheme) சோமங்கலத் திட்டத்தின் அடிப்படையில் எழுந்த ஒன்றாகும்.

தமிழகத்தின் தலைநகரான சென்னைக்கு அருகிலுள்ள சோமங்கலம் கிராமப் பகுதியில் மொத்தம் 2240 குடும்பங்கள் வாழ்ந்துகொண்டிருந்தன. அக் குடும்பங்களில் 644 குடும்பங்கள் மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய்க்கும் குறைவான வருவாயைக் கொண்டும், 939 குடும்பங்கள் நூறு முதல் இருநூறுவரை வருவாய் உள்ளவையாகவும் இருந்தன. 310 குடும்பங்கள் மட்டுமே மாதம் ஒன்றுக்கு ரூ. 200 முதல் ரூ. 300 வரை வருவாயைப் பெறும் நிலையில் இருந்தன.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் அக் குடும்பத்தின் பின்னணி ஆராயப்பட்டு, அவர்களுக்கு ஏற்ற வகைப் பணிகள் ஒப்படைக்கப் பட்டன. குடும்பமுன்னேற்றத்திற்கான மூன்றாண்டுத்திட்டம் வரையப்பட்டது. சோமங்கலத்தின் உயிர் நாடியான 'வேளாண்மை' மீண்டும் உயிர்ப்புடன் செயல்படத் தொடங்கியது. நீர்ப்பாசனக் குளங்கள் புதுப் பொலிவைப் பெற்றன. இணைப்புச் சாலைகள் மெருகூட்டப்பட்டன. மக்களுக்கு மட்டுமின்றி கால்நடைகளுக்கும் மருத்துவ வசதி அளிக்கப்பட்டது. செய்தித் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன. அரசின் ஆக்கப் பணிகளுக்கு அரசுடைமை வங்கிகள் உதவிக்கரம் நீட்டி ஊக்கம் கொடுத்தன. மூன்றாண்டுக் கால இறுதிக்குள் அரசு வங்கிகள் மட்டும் 67½ இலட்ச ரூபாயை உதவியாக அளித்துள்ளன. அதன் விளைவாகவும் அரசின் அயராத உழைப்பினாலும் விளைந்த நன்மைகள் எண்ணற்றவை.

நிலம் சீர்திருத்தப்பட்டது. நிலவளம் சோதிக்கப்பட்டது. பாசனம் ஒழுங்குபடுத்தப்பட்டது. உயர்ரக விதைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. வேளாண்மையுதவிக் கூட்டுறவுச் சங்கங்கள் ஓய்வில்லாமல் செயல்பட்டன. அதன் விளைவாக இன்று நீரேற்று மின் எந்திரங்கள் வயல் வெளிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன.

கால்நடைகளின் மீது தனிக் கவனம் செலுத்தப்பட்டது. கால்நடை மருத்துவ மனை திறக்கப்பட்டது. மக்களுக்கு மட்டுமின்றிக் கால்நடைகளுக்கும் நல்வாழ்வு பிறந்தது.

கைத்தொழில் முன்னேறியது. சொந்தத் தொழில் தழைத்தோங்கியது.

உழைத்த பின் ஓய்வெடுக்கவும் பொழுது போக்கவும் தொலைக் காட்சிப் பெட்டிகளும், திறந்த வெளி திரை அரங்கமும் நிறுவப்பட்டன.

அரசுத் துறைகள் தளரா முயற்சியில் ஈடுபட்ட மூன்றாண்டுக் கால முடிவிற்குள், 1616 குடும்பங்களின் வருவாய் மாதமொன்றுக்கு ரூ.351 வரை உயர்ந்தது. மாத வருவாய் நானூறு என்ற குறிக்கோளையும் மிஞ்சி உயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை 644. அரசும் அரசுடைமை வங்கிகளும் இணைந்து இத் திட்டத்தில் முதலீடு செய்த தொகை ஏறத்தாழ ரூ. 91 இலட்சம்.

மொத்தத்தில், 'சோமங்கலம் இன்று பிற கிராமங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வதற்கு இன்றியமையா' இரண்டு காரணங்களுள் ஒன்று அரசின் ஊக்கம். மற்றொன்று மக்களின் உழைப்பு.

முறைசாராக் கல்வித் திட்டத்தை ஒன்றியங்கள் ஏற்று நடத்துவதில் இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டுவது தமிழகம் தான்.

# அரசின் - அறிவிப்புகள்

## ஆணைகள் — ஆக்கப் பணிகள்

### (1-8-79 முதல் 15-8-79 முடிய)

1—8—'79

ஊனமுற்றவர்களுக்கு அளிக்கப்படும் அனைத்து உதவிகளும் தூத்துக்குடி திரை அரங்கு தீ விபத்தில் ஊனமுற்றவர்களுக்கு அளிப்பதோடு, அவர்களின் குடும்ப நிலைக்கு ஏற்ப சிறு தொழிலுக்கு உரிய நிதி ரூ.10 ஆயிரம் வரை மானியமாக அளிக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தெரிவித்துள்ளார்.

3—8—'79

வருவாய்த்துறை ஆய்வாளர் அனைவருக்கும் அவர்கள் வேலை பார்க்கும் இடத்திலேயே வீடுகள் கட்டித்தர தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

4—8—'79

சென்னைப் புறநகர்ப் பகுதியில் காய்கறி உற்பத்திப் பெருக்கத்திற்காக ரூ.85 இலட்சம் செலவில் புதிய திட்டம் ஒன்று போடப்பட்டுள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்துள்ளார்.

ரூ. 75 இலட்சம் முதலீட்டில், சென்னையில் 'மண்டல விநியோக நிலையம்' அமைத்து, சென்னை, வடஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்ட மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் குறைந்த விலையில் விநியோக்கப்படும் என்று மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்துள்ளார்.

6—8—'79

பிச்சைக்காரர்கள் ஒழிப்பு மறுவாழ்வுத் திட்டம் தமிழ்நாடு முழுவதிலும் தீவிரமாக அமல்படுத்தப்படும் என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி.டி. சரசுவதி அவர்கள் கூறியுள்ளார்.

7—8—'79

தமிழ்நாட்டிலுள்ள 'டூரிங்' திரைப்படக் கொட்டகைகளில் பகல் (மாட்னி) காட்சிகளை நடத்தக்கூடாது என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

8—8—'79

சென்னை நகரிலுள்ள குடிசைப்பகுதிகளை மாற்றி அங்கு வசிப்பவர்களுக்குக் குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்ய ரூ.12 கோடிச் செலவில் குடிசை மாற்று வாரியம் புதிய திட்டமொன்றை மேற்கொண்டுள்ளது என்று வாரியத் தலைவர் திரு பி. ராமபத்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

9—8—'79

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் இந்த ஆண்டோடு முடிந்துவிடாமல், தொடர்ந்து நீடிக்கும் என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி.டி. சரசுவதி அவர்கள் தெரிவித்துள்ளார்.

11—8—'79

தமிழ்ப் புலவர்கட்கு நினைவுச் சின்னம் அமைக்கும் வகையில், தமிழ்ப் பண்பாட்டு மையம் ராஜாஜி மண்டபத்திற்கு எதிரே சிறப்பாக அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்துள்ளார்.

12—8—'79

'டூரிங்' கீற்றுக் கொட்டகைகளைத் தீப்பிடிக்காமல் பாதுகாப்பாக ஆஸ்பெஸ்டாஸ் கூரையுடன்ஒரு ஆண்டுக்குள் மாற்றியமைக்க ரூ.50 ஆயிரம் கடன் உதவி வழங்குவது குறித்துத் தமிழக அரசு ஆலோசனை செய்து வருவதாக மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் கூறியுள்ளார்.

13—8—'79

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் விவசாயிகளுக்கு உயர்ரக கறவை மாடுகளை வாங்க நிதி உதவி செய்வதன் மூலம் அவர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கோடு பால்வளத் திட்டம் ஒன்று அமைக்கப்பட உள்ளது.

14—8—'79

கிராமப்புறங்களிலுள்ள கைவினைஞர்களுக்குத் தங்களின் தொழில் திறமையை வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சி அளிக்க அரசு ஒரு திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. அதன்படி 19 தொழிற் பயிற்சி நிலையங்களில் இவர்களுக்குப் பகுதிநேரப் பயிற்சி ' வழங்கப்படும்.

தமிழ் ஓலைச் சுவடிகளைச் சேகரிக்கவும், மாவட்டங்களில் பழைமையான கிராமக் கலைகளை ஆய்வு செய்து அவற்றைப் போற்றிப் பாதுகாக்கவும், திருநெல்வேலி, கன்னியாகுமரி, செங்கற்பட்டு, தென்னார்க்காடு, சேலம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பிரிவு என்ற அளவில் மேலும் 5 தொல்பொருள் இயல் பிரிவுகளை அமைக்க அரசுஆணையிட்டுள்ளது.

15—8—'79

அண்மையில் குஜராத் மாநிலம் மோர்வி நகருக்கு அருகே உள்ள மாச்சு அணைக்கட்டு உடைந்ததனால் ஏற்பட்ட வெள்ள விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிவாரணத்திற்காகத் தமிழக முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கப்பட்டது



## காலத்தை வென்ற கவிதை

# தமிழன் பாட்டு

தமிழ னென்று சொல்லடா! (தமிழ)
தலைநி மிர்ந்து நில்லடா!

அமுத மூறும் அன்பு கொண்டிங்
கரசு செய்த நாட்டிலே
அடிமை யென்று பிறர்ந கைக்க
முடிவ ணங்க நிற்பதோ!
இமயம் தொட்டுக் குமரி மட்டும்
இசைப ரந்த மக்கள்நாம்
இனியும் அந்தப் பெருமை கொள்ள (தமிழ)
ஏற்ற யாவும் செய்குவோம்


குஞ்சைக் காக்கும் கோழி போலக்
குடியைக் காத்த மன்னர்கள்
கோல்ந டத்த அச்ச மின்றி
மேல்நி னைப்புக் கொண்டுநாம்
பஞ்ச பூத தத்து வங்கள்
பக்தி யோடு முக்தியைப்
பார்சி றக்கச் சொன்னநாமும் (தமிழ)
சீர்கு றைந்து போவதோ?

உலகி லெங்கும் இணையிலாத
உண்மை பாடும் புலவர்கள்
உணர்ச்சி தன்னை வானைத் தாண்டி
உயரச் செய்யும் நாவலர்
கலக மற்றுக் களிசிறக்கக்
கவிதை சொன்ன நாட்டிலே
கைகு வித்துப் பெயர்கள் பாடிக் (தமிழ)
காலந் தள்ளல் ஆகுமோ?

கங்கை யோடு பெருமை கொண்ட
காவி ரிப்பொன் னாட்டிலே
கவலை யின்றிச் சோறி ருக்கக்
கலைக ளெண்ணி வாழ்ந்தநாம்
மங்கி மங்கி வறுமை மிஞ்ச
மதிம யங்கி மாய்வதோ!
மாநி லத்தில் சோற்றுப் பஞ்சம் (தமிழ)
மறையு மாறு மாற்றுவோம்.



நாமக்கல்
வெ. ராமலிங்கம் பிள்ளை





# 200 சிவப்புக் கம்பளிப் புழுக்களுக்கு 1 கிலோ அரிசி

**மா**னாவாரி நிலக்கடலையின் மகசூல் ஒருவகை கம்பளிப் புழுக்களால் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

கடலைப் பயிரின் வேரில் குடிகொண்டிருக்கும் இந்த சிவப்புக் கம்பளிப் புழுக்கள், பயிரின் வளர்ச்சியையும், அதன் செழிப்பையுமே பாதித்துவிடுகின்றன. செடிக்கே இதனால் நாசம் விளைகிறபோது, கடலை விளைச்சலை எப்படிக் காணமுடியும்?

**முட்டைமுட்டையாய் முட்டைகள்**

பெரும்பாலும் ஆடி, ஆவணி மாதங்களிலே தான் இந்தச் சிவப்புக் கம்பளிப் புழுக்களின் கொட்டம் அதிகமாகிறது. இப் புழுக்களின் தாய்ப் பூச்சியானது மண்ணிலிருந்து வெளிப்பட்ட 35 மணி நேரத்திற்குள் தன்னுடைய இனவிருத்தி வேலையில் தீவிரம் காட்டும். பிறகு சுமார் ஒருவார காலம் முட்டையிட்டுக் கொண்டேயிருக்கும்.

ஒரு பூச்சி எத்தனை முட்டைகள் வரை இடும் தெரியுமா? ஐந்தோ,, பத்தோ அல்ல. 800 முட்டைகள் வரை இடும். இந்த முட்டைகள் மூன்றே நாட்களில் சிவப்புக் கம்பளிப் புழுக்களாய் மாறும்.

கடலைச் செடிக்குச் செடி குடித்தனம் நடத்தும் இப்பூச்சிகளின், உடல் வெல்வெட் துணிபோல 'மொச மொச' வென்றிருக்கும். கடலைச் செடிகளின் இலையே இவற்றுக்கு உணவாகின்றன. இப் புழுக்களில் பல, செடிகளின் வேருக்கே வேட்டு வைக்கும்.

'உழைப்புக்கு உணவு' திட்டத்தின் கீழ், ஸ்ரீபெரும்புதூர், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு திட்டம் இந்த சிவப்புக் கம்பளிப் பூச்சி ஒழிப்புக்கெனச் செயலாக்கப்பட்டு வருகிறது.

**திட்ட மகத்துவம்**

சிவப்புக் கம்பளிப் புழுக்களுக்கு மூலகாரணமான கூட்டுப் புழுக்கள் இருநூறை யார் பிடித்துத் தந்தாலும் அவருக்கு ஒரு கிலோ அரிசி தருவது என்பதே இத் திட்டம்.

இதை அறிவித்த பின், இப்பகுதி மக்களில் வேலையற்றிருக்கும் ஆண்-பெண் சிறார் அனைவரும் இப்புழுக்களைப் பிடிப்பதில் உற்சாகத்தோடு ஈடுபடுகிறார்கள்.

இத் திட்டத்திற்கென 5 ஆயிரம் கிலோ அரிசி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 18 இலட்சம் பெறுமானமுள்ள நிலக்கடலைப் பயிர் காப்பாற்றப்படும்.

ஸ்ரீபெரும்புதூர், வாலாஜாபாத் ஒன்றியத்தில் மட்டும் ஏறத்தாழ இரண்டாயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படும் நிலக்கடலைப் பயிர் சிவப்புக் கம்பளிப் புழுக்களால் சேதப்பட்டு, இதனால் 80 சதவீதம் மகசூல் பாதிக்கப்படுவது இத்திட்டத்தினால் தவிர்க்கப்படுமென உறுதியாக நம்பலாம்.

—'பி.எல்.ஆர்.'





# வளநாடு கண்மாயில் புதிய பாலம்!

**ஒ**ரு நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்குச் சாலைப் போக்குவரத்து இன்றியமையாத தேவையாகும். விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்ட பெரும்பகுதி மக்கள் வாழும் கிராமப்புறங்களில் விளையும் பொருட்களை நகர்ப்புற அங்காடி நிலையங்களுக்கு எடுத்துச் செல்ல சாலை வசதி செய்து தருவது இன்றியமையாப் பணியாகும். சாலை அமைப்பு கிராம முன்னேற்றத்தின் ஆரம்பப் பணியாகும். பிற வளர்ச்சியெல்லாம் இதன் தொடர்பேயாகும். கிராம வளர்ச்சிக்கான உயிர்நாடி சாலை அமைப்பே. ஆகவே இந்த அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கிராமச் சாலைத் திட்டங்கள் தீட்டப்பட்டு எல்லா கிராமங்களுக்கும் இணைப்புச்சாலை போடும் பணி சீரிய முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்திற்குப் பல சிறப்புக்கள் உண்டு. தமிழகத்தில் நிருவாக வசதிக்காகப் புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டம் இது. அரசர் ஆட்சியின்கீழ் இருந்த புதுக்கோட்டை மாநகரம் அழகான, அகலமான சாலை அமைப்புக்களுடன் கூடியது.

இம்மாவட்டத்தில் விவசாயம் பெரும்பாலும் பருவகால மழையை நம்பித்தான் இருக்கின்றது. இதனால் நம் முன்னோர்கள் ஆயிரக்கணக்கான கண்மாய் (குளம்)களைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அமைத்திருக்கின்றார்கள். இந்தக் (குளம்) கண்மாய்கள் தான் இன்று புதுக்கோட்டை மாவட்டத்துக்குப் பெரும் சொத்து.

அரசின் சாதாரண திட்ட முறைப்படி அண்மையில் 3 பாலங்கள், சுமார் 17 இலட்ச ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியப் பெருந்துச் சாலைகளை மேம்பாடு செய்து அரசாங்கச் சாலைகளாக எடுத்துக் கொள்ளும் திட் ... மாவட்டத்தில் 42.5 கி.மீ. தூரமுள்ள சாலைகளை மேம்பாடு செய்ய, முதல் கட்டமாக தற்போது ரூ.14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேலைகள் துவக்கப்பட உள்ளன. மேற்கொண்டு 83 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி, ஊராட்சி ஒன்றியச் சாலைகளை இந்த நிதியாண்டிலேயே மேம்பாடு செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது.

இம்மாவட்டத்தில் கிராமப்புறச் சாலைகள், சமச்சீர் பருவ சாலைகள் ஆகிய திட்டத்தின் கீழ் பல வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை இவ்விரண்டு திட்டங்களின் கீழ் 252கி.மீ நீளமுள்ள சாலைகள் 39 இலட்ச ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் இன்னும் சுமார் 40 கி.மீ. சாலைகள் 25 இலட்ச ரூபாய் செலவில் எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 161 கிராமங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைகின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி வட்டம், வல்லத்திராக்கோட்டை அருகிலுள்ள வளநாடு கண்மாயில் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ள இப்பாலம் 1978-79ஆம் ஆண்டு இரண்டாவது பகுதி புறச்சாலைகள் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டதாகும். இதற்கான அடிக்கல் நாட்டுவிழா 18.5.78 அன்று நடைபெற்றது. 6மீட்டர் நீளமுள்ள மூன்று கண்களைக் கொண்ட இப்பாலம் ரூ. 2.5 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்பாலத்தின் மேல்தளம் 7.5 மீட்டர் அகலம் ஆதலால் பேருந்துகள் போக்குவரத்துத் தடையின்றிச் செல்லலாம்.

பொதுப்பணித்துறையின் பராமரிப்பிலுள்ள இக் கண்மாயில் சாதாரணமாக அக்டோபர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை பாசனத்திற்காக நீர் தேக்கப்படுகிறது. இக் கண்மாயில் நீர் தேங்கியுள்ள காலங்களில் நேரிடையாக வல்லத்திராக்கோட்டைக்கோ, புதுக்கோட்டை — அறந்தாங்கிச் சாலைக்கோ கிராம மக்களோ, வாகனங்களோ செல்லவியலாத நிலைமையிருந்தது. அதுசமயம் திருவுடையாபட்டி, வாண்டான் கோட்டை வழியாக சுமார் 2 கி.மீ. தூரம் அதிக தொலைவு சென்று, சுற்றி வரவேண்டியிருந்தது. நீர் மட்டம் குறைந்த காலத்திலும் மிகவும் இன்னல்பட்டு சுமார் மூன்று அல்லது நான்கு அடி தேங்கியுள்ள நீரில் கண்மாயைக் கடந்து செல்லவேண்டிய சூழ்நிலை இருந்தது. கிராம மக்களின் நலன் கருதியும் விவசாயப் பொருட்களின் துரிதப் போக்குவரத்திற்காகவும் இக் கண்மாயின் குறுக்கே பாலம் கட்டப்பட்டுள்ளது.

இப்பாலத் திறப்பு விழா 5.8.79 அன்று நடைபெற்றது.

இவ்விழாவிற்கு மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அ.கொ. விஜயபானு, வல்லத்திராக்கோட்டை ஊராட்சித் தலைவர் திரு சி. ராமச்சந்திரன், திரு புஷ்பராஜ், எம்.எல்.ஏ., திரு சின்னையா எல்.எம்.ஏ., திரு வீ.சா இளஞ்செழியன் எம்.பி., மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் திரு எஸ்.திருநாவுக்கரசு ஆகியோர் உரை ஆற்றினார்கள்.

பாலத்தினைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி.ஆர் அவர்கள் உரையாற்றினார்கள்.

விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் தலைமைப் பொறியாளர் திரு ஈ.சி. சந்திரசேகரன் வரவேற்றார். கண்காணிப்புப் பொறியாளர், (திருச்சி) திரு எம். முத்து நன்றி கூறினார்.

இப்பாலத்தைக் கட்டி முடித்ததனால் இப்பகுதி மக்களின் நீண்டநாளைய தேவை பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது என்பதைப் பெருமையுடன் குறிப்பிட வேண்டும்!

அ.ம. விநாயகம்

கிராமப்புறங்களில் தொழில் வளம் பெருக்கு வோர்க்கு வருமான வரியிலிருந்து சில சலுகைகளை அரசு அறிவித்துள்ளது. விவரம் வேண்டுவோர் ஊரக வளர்ச்சி இயக்குநர், குறளகம், சென்னை-1 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்க.

* * * *

- தன்னுடைய பணியாளர்களுக்காக, ஊராட்சி ஒன்றியங்கள் கொண்டுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை 4129.
- தமிழகத்தின் பல்வேறு ஊராட்சி சமுதாய களில் மொத்தம் வானொலிப் பெட்டிகள் 46,913 இயங்கி வருகின்றன.
- தமிழகத்தில் கிராம மக்கள் கண்டு களிப்பதற்காக, தொலைக் காட்சிப் பெட்டிகள் 267 அரசால் நிறுவப்பட்டுள்ளன.

**ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள்**

| | |
|---|---|
| வட ஆர்க்காடு | — 36 |
| தென் ஆர்க்காடு | — 35 |
| செங்கற்பட்டு | — 27 |
| கோயம்புத்தூர் | — 41 |
| தர்மபுரி | — 16 |
| கன்னியாகுமரி | — 9 |
| மதுரை | — 34 |
| நீலகிரி | — 4 |
| புதுக்கோட்டை | — 10 |
| இராமநாதபுரம் | — 32 |
| சேலம் | — 35 |
| தஞ்சாவூர் | — 34 |
| திருச்சிராப்பள்ளி | — 31 |
| திருநெல்வேலி | — 31 |
| | 375 |


சித்தி ரத்தின் மிகஉ யர்ந்த
சிற்ப நூலின் அற்புதம்
சின்னச் சின்ன ஊரிற் கூட
இன்று மெங்கும் காணலாம்;
கைத்தி றத்தில் ஈடிலாத
கல்வி தந்த தமிழர்நாம்
கைந்நெ றித்து வேலை யின்றிக்
கண்க லங்கி நிற்பதேன்? (தமிழ)

எண்ண மற்றும் விசன மற்றும்
எங்கும் செல்வம் பொங்கவே
எந்த நாளும் ஆடல் பாடல்
எழிலு ரங்கம் ஓவியம்
பண்ண மைந்த குழலும் யாழும்
பக்க மேளம் யாவையும்
பாருக் கீந்து மகிழ்ச்சி யின்றி
நாமி ருத்தல் பான்மையோ! (தமிழ)

விண்ம றைக்கும் கோபு ரங்கள்
வினைம றக்கும் கோயில்கள்
வேறு எந்த நாட்டி லுண்டு
வேலை யின்வி சித்திரம்?
கண்ணி றைந்த காவ ணங்கள்
கனிகள் மிக்க சோலைகள்
கண்ட போது பண்டை யெங்கள்
நாக ரீகம் காட்டுமே! (தமிழ)

மனித வாழ்வில் இன்ப மென்று
சொல்லு கின்ற யாவையும்
மற்ற வாழ்வில் உதவு மென்று
நம்பு கின்ற ஞானமும்
தனிமை யான முறையில் யார்க்கும்
தந்த திந்தத் தமிழகம்
தட்டி டாது தெய்வ மின்னும்
கிட்டி நம்மைக் காக்குமே. (தமிழ)


('லிப்கோ' வெளியிட்டுள்ள 'நாமக்கல் கவிஞர் பாடல்கள்' என்னும் நூலிலிருந்து)








# புயல் எச்சரிக்கைகள்






* புயல் எச்சரிக்கைகள் நம்மைக் காத்துக் கொள்ள உதவுகின்றன. அவற்றைப் புறக் கணிக்காதீர்கள் !
* வானொலி வழங்கும் புயல் எச்சரிக்கைகளைக் கவனமாகக் கேளுங்கள். பிறருக்கும் சொல்லுங்கள்.
* தாழ்வான பகுதிகளில் தஞ்சம் புகவேண்டாம்; மேடான இடங்களுக்குக் காலம் தாழ்த்தாமல் செல்லுங்கள் !
* வீட்டின் கதவுகளுக்குப் பலமான முட்டுக் கொடுங்கள். காற்றின் வேகத்தில் கண்ணாடி உடைந்து சிதறாமல் இருக்கக் கண்ணாடிகளின் மேல் காகிதத்தை ஒட்டுங்கள்.
* லாந்தர், டார்ச் லைட் ஆகியவற்றை எப்போதும் தயாராக வைத்திருங்கள்.
* புயல் ஓய்ந்துவிட்டதுபோல் தோன்றினாலும், எதிர்த் திசையிலிருந்து தாக்கக்கூடும். இதில் அஜாக்கிரதை கூடாது.
* மின் கம்பங்களிலிருந்து அறுந்து தொங்கும் கம்பிகள் அபாயகரமானவை. அவற்றின் அருகில் செல்லாதீர்கள்.
* இருப்பிடங்களைக் காலி செய்யுமாறு அலுவலர்கள் கூறினால், அதற்குக் கீழ்ப் படிந்து புகலிடங்களுக்குச் செல்லுங்கள்.
* புயல் அபாயம், முற்றிலும் நீங்கிய பின்னர் தான் வெளியில் நடமாட வேண்டும்.
* அச்சமின்மை-அமைதி-நிதானத்துடன் செயல் படுதல் இம்மூன்றும் அவசியத் தேவைகள்.







# மேலுரமிட்டு மகசூல் பெருக்குவீர்!
# மேலுரமிட மேன்மையான உரம்
# ஸ்பிக் யூரியா



* அழகிய வெண்முத்து வடிவங்கள்
* அதிகத் தழைச்சத்து 46.2%
* மிகக் குறைவான பையூரேட்-0.3% தான்
* ஆசியாவிலேயே மிகப் பெரிய. ஸ்பிக் தொழிற்சாலையில் தயாராகிறது.

சிறப்பான யூரியா வேண்டுமா? **ஸ்பிக் யூரியா** என்று கேட்டுவாங்குங்கள்.

CAS SPIC 4 TM 77




# செயல் முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம்

—சி. பு. பெருமாள்
ஊரக வளர்ச்சி இணை இயக்குநர்.

நமது நாட்டில்குழந்தைகளுக்கு ஊட்டமிலாவுணவூட்டுதலுக்கு வறுமை ஒரு காரணமாகும். இருப்பினும் தங்கள் குழந்தைகளுக்குச் சரியான உணவூட்டு முறை பயிற்சியும் எளிமையான குழந்தைகள் பாதுகாப்பு முறைகளும் நமது தாய்மார்களுக்குத் தெரியாமலிருப்பதும் முக்கியமான ஒரு காரணமாகும்.

தங்கள் வருவாயிலும் தங்களிடையே கிடைக்கும் எளிமையான, உணவுகளிலுமே ஊட்டச் சத்து நிரம்பிய உணவினைப் பெற முடியும் என்பதும் அவர்களுக்குத் தெரிவதில்லை. தாய்மார்களிடையே நிலவும் இவ்வறியாமையைப் போக்க உருவாக்கப்பட்டது தான் செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டமாகும்.

கிராமம், மற்றும் ஒவ்வொரு குடும்ப அளவிலும், சுய உதவி ஊட்ட நிறைவுணவுப் பொருட்களையே உற்பத்தி செய்தல், அதனை அதிகமாக உட்கொள்ளுதல் முதலியவற்றில் மேம்பாடு காணத்தக்க கல்வி முறையினை அளித்துச் செயல்படுவதுதான் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் சிறப்பு அம்சங்களாவன:—

தாய்மார்களையும் பள்ளிக் குழந்தைகளையும் மற்றும் இதரச் சாரார்களையும் எத்தகு ஊட்டம் நிறை உணவு வகைகளையும் தயாரித்து உண்ணவேண்டும் என்பது குறித்து அறிவூட்டுதல்.

தங்களைச் சுற்றியுள்ள இடங்களிலேயே தங்களுக்குக் கிடைக்கக்கூடிய பருப்பு விதைகள், பசுமை மிகு கீரைகள், காய்கறிகள், கனிவகைகள் உற்பத்தி செய்து, உட்கொள்ளச் செய்யுமாறு அறிவுரை கூறுதல்.

மத்திய அரசின் உதவியுடன் 'யூனிசெப்' உதவியுடனும் 1962-63ல் முதன்முதலில் 7 ஊராட்சி, ஒன்றியங்களில் இத்திட்டம் தமிழ் நாட்டில் துவக்கப்பட்டது. இப்பொழுது 75 ஒன்றியங்களில், 38 ஒன்றியங்களில் இத்திட்டம் முடிவு பெற்றுவிட்டது. மீதம் 37 ஒன்றியங்களில் இத்திட்டம் நடைமுறையில் உள்ளது.

இத்திட்டத்திற்கு 'யூனிசெப்' நிறுவனம் சுமார் 1.6 இலட்சம் என்ற அளவிலும், மத்திய அரசு ஆண்டுக்கு ஒன்றியம் ஒன்றுக்கு 0.34 இலட்சம் என்ற அளவிலும், மாநில அரசு உற்பத்தி இனங்களின் வளர்ச்சிக்காக ரூ. 0.51 இலட்சம் என்ற அளவிலும், மற்றும் இதர அம்சங்களுக்கென ஆண்டுக்கு ஒன்றியம் ஒன்றுக்கு ரூ. 0.76 இலட்சம் என்ற விகிதத்திலும் நிதியுதவி அளிக்கின்றன. 1978-79ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு 'யூனிசெப்' நிறுவனத்தின் உதவி கிடையாது. அதற்கு மாறாக, மத்திய அரசு கூடுதலாக ரூ. 0.30 இலட்சம் உதவியாக அளிக்கிறது. ஊராட்சி ஒன்றியம் தன் பங்காக ரூ. 1.5 இலட்சம் என்ற அளவில் ஒன்றியப் பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்கிறது. வருவாய் வழிவகைகளைக் கொண்ட ஒவ்வொரு ஒன்றியத்துக்கும் தேவையானவைகளை அந்தந்த ஒன்றியத்தின் மாறுபடும் பொருளாதார நிலைகளைக் கணக்கிட்டு முழுமைத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டுக்குச் (1979-80) சுமார் ரூ. 45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

இத்திட்டத்தின் ஊட்டக் கல்வி முறையின் முக்கியமான அம்சம் 'பயிற்சி' ஆகும். எல்லா ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களிலும், பவானிசாகர் சமுதாய வளர்ச்சிப் பயிற்சி நிலையத்திலும், மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை ஆகிய இடங்களிலும், திட்டத்தின் பங்குபெறும் எல்லா அலுவலர்களுக்கும் அலுவரல்லாதவர்க்கும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதுவுமின்றி ஒன்றிய மட்டத்திலும் மகளிர் மன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் பெருந்தலைவர்கள் கோழிப் பண்ணையாளர்கள் ஆகியவர்களுக்கும் சிறப்புப் பயிற்சி கோவை

## முதல் தமிழன் !



இந்திய நாட்டை ஆட்சி புரிந்து வந்த அந்நியரை எதிர்த்துக் கூட்டுறவு முறையில் வணிகக் கப்பல் நிறுவனத்தை உருவாக்கிய முதல் தமிழன் வ. உ. சிதம்பரனார் ஆவார்.

அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி துணை கொண்டும் அளிக்கப்படுகிறது. சற்றேறக் குறைய 450லிருந்து 500 வரையிலானவர்கள் ஒவ்வொரு ஒன்றியத்துக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள்.

ஊட்ட உணவு பற்றியும்அதன் அவசியம் பற்றியும் துல்லியமாக விளக்கிடும் வண்ணம், இளம் மங்கையினருக்கும் பெண்மணிகளுக்ரும் ஒவ்வொரு ஊட்டச் சத்துணவு ஒன்றியத்திலுமுள்ள 30 மகளிர் மன்றங்களுக்கும் பிரதி மாதமும் இரண்டு செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. இதற்குத் தேவையான உபகரணங்களும் செலவினத்திற்கென நிதியுதவியும் இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படுகின்றன.

மேலும், செயல்முறை உணவூட்டு விளக்கத் திட்டமும் அமல் செய்யப்படுவதுடன், உடல் நலம் பேண ஒவ்வொரு ஒன்றியத்திலும், 30 காப்பகங்கள் வீதம் துவக்கி ஒவ்வொரு காப்பகத்திலும் 120 பேர்களுக்குக் 'கேர்' உணவு கொண்டும் உணவூட்டப்படுகின்றன. மேலும் துவக்கப்படுகின்ற இத்தகு 30 குழந்தைகள் காப்பகங்களுக்கு நிலையான கட்டடம் கட்டி முடிக்க கட்டடம் ஒன்றுக்குச் சுமார் ரூ.10,000 என்ற அளவில் செலவு செய்யப்படுகிறது. இதில் மாநில அரசு ரூ.5,000 வழங்குகிறது. எஞ்சியதொகையை ஒன்றியம் தன் பங்காகச் செலவு செய்கிறது. இதுவரை 75 சத்துணவுத் திட்ட ஒன்றியங்களில் 600க்கு மேற்பட்ட கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1979-80ல் மேலும் 280 கட்டடங்கள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன. இக்காப்பகங்களினால் சுமார் 0.34 இலட்சம் குழந்தைகளும் 0.17 இலட்சம் கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் பயனடைகின்றனர்.

மக்கள் தங்களிடமுள்ள எளிய வசதிகளையும் வாய்ப்புக்களையும் கொண்டே தாங்களாகவே தங்கள் உடல் வளர்ச்சிக்கு ஊட்டம் நிரம்பிய பசுமையான காய்கறிகள், பச்சைக் கீரைகள், பருப்பு வகைகள், பழ வகைகள் முதலியன உற்பத்தி செய்து உண்ணும் நற்பழக்கத்தை அதிகமாகத் தூண்டுவதும் ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் நோக்கமாகும்.

ஒன்றியமே, ஒன்று அல்லது இரண்டு சமுதாயத் தோட்டங்களை அமைக்கின்றன. ஊட்டம் அளிக்கும் காய்கறிகளும் பழ வகைகளும் உற்பத்தி செய்யப்பட்டு குழந்தைகள் காப்பகங்களின் உணவூட்டுத் திட்டத்திற்கு வழங்கப்படுகின்றன. 1970-71 முதற்கொண்டு இதுவரை சுமார் 55-க்கும் அதிகமான தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட எல்லாத் தோட்டங்களிலிருந்தும் கிடைத்த காய்கறிகள் துவக்க கால முதல் இதுவரை சுமார் 2 இலட்சம் கிலோ காய்கறிகள் குழந்தைகள் காப்பகங்களுக்கும் பள்ளிச் சிறார்களுக்கும் உணவூட்டுத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இதுவன்றி, கிராம மக்களும், குழந்தைகளும்; தாய்மார்களும் ஊட்டம் பெறவும் பொருளாதார வசதிகள் மேம்படவும் ஒவ்வொரு ஒன்றிய அளவிலும் 10 குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளும் ஆரம்பிக்கப்படுகின்றன. இது போலவே ஆழ்கூழ் கோழிப்பண்ணைகள் (20 வீரிய இன கோழிகள் வீதம்) கிராம மக்களே அமைக்கவும் அவர்கள் பொருளாதார நிலை மேம்படவும் உதவி செய்யப்படுகின்றன.



(இதில் 50 சதவிகிதம் விலையைக் காசாகவோ அல்லது முட்டைகளாகவோ திரும்பப் பெற்று குழந்தைகள் காப்பகங்கள் உணவூட்டுக்குப் பயன்படுத்தப்படுகிறது). ஆண்டுக்கு ஒன்றியம் ஒன்றுக்குச் சுமார் 10 குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளும், 50 ஆழ்கூழ்ப் பண்ணைகளும், 100 புறக்கடைப் பண்ணைகளும் துவக்கப்படுகின்றன.

ஊராட்சிகளில் காணப்படும் நீர் நிரம்பிய குளங்களில் மீன் வளர்ப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இத்தகு திட்டங்கள் மட்டுமின்றி, சமுதாயத்தில் பொருளாதாரத்தில் பின்னடைந்துள்ள, ஆனால் ஆர்வமிக்க தாய்மார்கள் பயனடையத்தக்க வகையில் வேறு சில சிறப்புத் திட்டங்களும் ஊட்டச்சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. மகளிர் மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு உயர்ரக வெள்ளாடுகள், கோழிகள், பாய்முடைதல், தேனீ வளர்ப்பு முதலிய தொழில் நடத்த எல்லா வசதிகளும் அளிக்கப்படுகின்றன.

வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊட்டச் சத்துத் திட்டத்தில் தீவிர அணுகுமுறை என்ற புதுத் திட்டம் அமலாக்கப்பட்டுள்ளது.

ஊட்ட சத்துணவுத் திட்டம் கிராமப்புற மக்களுக்கு ஊட்ட உணவூட்டு முறையின் அவசியத்தை உணர்த்திடும் பயனுள்ள ஒரு சிறந்த திட்டமாகும்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.












# தந்தை பெரியார் நூற்றாண்டு விழா
## கடலூர் 5-8-'79










## பெருமை மிக்க பெரியார் விழா

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர்.

வாழ்வின் அடிமட்டத்தில உள்ள ஏழை எளிய மக்களுக்காகவே தந்தை பெரியார் அவர்கள் பாடுபட்டார். அத்தகைய ஐயா அவர்களின் கருத்துக்களை மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

பெரியார் விழா நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதன் வாயிலாக, சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் பரவுகின்றன. ஏற்கெனவே தெரிந்து கொண்டவர்கள், சுறுசுறுப்பு அடையவும்—மறந்தவர்கள் நினைவுபடுத்திக்கொள்ளவும் இத்தகைய விழாக்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

பெரியார் விழாக்கள் — பட்டம் பெறவோ, வாக்குச் சேகரிக்கவோ நடத்தப்படவில்லை. பத்துப் பதினைந்து ஆண்டுகள் படித்தாலும் தெரிந்து கொள்ள முடியாத கருத்துக்களைச் சில மணி நேரம் இந்த விழாச் சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமே நாம் பெறலாம்.

(4-8-1979-ல் புதுக்கோட்டை மாவட்டத்தில் தந்தைபெரியார்நூற்றாண்டு விழாவில் பேசியது)

தமிழரசு
16-9-1979
மலர்:10 இதழ்:6

பதிவு எண். M. 8676





# வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி



மாண்புமிகு மின்துறை அமைச்சர்

**திரு. எஸ். ராமச்சந்திரன்**

**போ**ருளாதார ஏற்றத் தாழ்வு மட்டுமே . இருந்தால் - ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு போதும். சமூக வேறுபாடு மட்டுமே இருந்தால் பின்தங்கிய சாதி, முன்னேறிய சாதி என்ற பாகுபாடு போதுமானது.

ஆனால், ஒரு சமுதாயம், சமூகம், பொருளாதாரம் ஆகிய இரண்டு வேறுபாடுகளையும் கொண்டிருந்தால் என் செய்வது?

அறிவும், ஆழ்ந்த சிந்தனையும் கொண்ட பகுத்தறிவின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பாகுபடுத்துவதே சரியானது:

1. ஏழைகள், மேலும் பின்தங்கிய சாதியினர்.
2. இதர ஏழைகள்.
3. இதர பின்தங்கிய சாதியினர்.
4. மற்ற முன்னேறிய சாதியினர்.

தமிழகத்தில், வேறெதற்குப் பஞ்சமிருந்தாலும், ஏழைகளுக்குப் பஞ்சமில்லை. இந்தியாவின் சராசரி ஏழைகள் விகிதத்தைவிட தமிழகத்தில் ஏழைகள் விகிதம் அதிகம். ஏழைகளின் எண்ணிக்கை வளர்ந்து வருவது வேதனைச்குரியது.

நகர்ப்புறத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 63-க்குக் குறைவாக வருமானம் பெறுபவர் ஏழை. கிராமப்புறத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 50க்குக் குறைவாகப் பெறுபவர் ஏழை.

இந்த வருமான எல்லைக்குப் பெயர்தான் வறுமைக்கோடு.

நான்கு அல்லது ஐந்து பேர் கொண்டது ஒரு சராசரிக் குடும்பம். குடும்பத்தில் ஒருவர்தான் சம்பாதிக்கிறாரென்றால், மாத வருமானம் ரூ. 250-க்கு மேலிருந்தால்தான் வறுமைக்கோட்டுக்கு மேலே ! இல்லையெனில் அது ஏழைக்குடும்பம்!

இதன்படி ஆண்டு வருமானம் ரூ. 3000 -க்குக் குறைவாக உள்ள குடும்பங்களே ஏழைக் குடும்பங்கள். அம் மக்களின் எண்ணிக்கை தமிழகத்தில்இரண்டரைக்கோடி!

சாதி அடிப்படையில் பார்த்தால், அந்த ஏழைகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் முக்கால் கோடிப் பேர். ஏழைகள் வரிசையில் நூற்றுக்கு நூறு இடம் பெறுபவர் இவர்கள். மீதமுள்ளது ஒன்றே முக்கால் கோடி. அதில், முன்னேறிய வகுப்பு ஏழைகள் சில இலட்சங்களே. ஏனெனில், முன்னேறிய வகுப்பாரின் மொத்த மக்கட் தொகையே குறைவு.

சிறிது தாராளமாகவே 25 இலட்சம் பேர் என்று வைத்துக் கொண்டாலும், பின்தங்கிய சாதிகளைச் சேர்ந்த—ஆண்டொன்றுக்கு மூவாயிரம் ரூபாய்க்குக் குறைந்த வருமானமுள்ள ஏழைகள் ஒன்றரைக் கோடிப் பேர்

இவர்கள், பின்தங்கிய சாதியினர் மட்டுமல்ல, ஏழைகளுங்கூட! முடவர்கள் மட்டுமல்ல; குருடர்களுங்கூட!

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள இந்தப் பின்தங்கிய ஏழைகளுக்கே அரசின் சலுகைகள் செல்லவேண்டும் என்பதுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆசை.

இருப்பினும் அவரே யோசித்தார்.

இதுவரை இருந்த சலுகைகளை ஒரேடியாக எடுத்துவிட்டோம் என்பது வேண்டாம். படிப்படியாகப் போவதே மேல் என்று ஆண்டு வருமானம் ரூ. 3000- என்பதை(வறுமைக்கோடு) ரூபாய் 6000 என வைத்துக் கொள்ளலாம் என்றார்.

பின்பு—வருமான வரம்பை நிர்ணயம் செய்வதற்கு ஓர் அடிப்படை வேண்டும்.

ஒன்று, வறுமையை அடிப்படையாகக் கொள்ளலாம். ஆனால் ஒரே சமயத்தில் பெரும்பாலோர் பாதிப்புக்கு ஆளாவர். ஆகவே, அது வேண்டாம்; பின்தங்கியோர் நலக்குழு பரிந்துரையை ஏற்கலாம் என்றார் மாண்புமிகு முதல்வர்.

பின்தங்கியோர் நலக்குழு, திரு கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அமைத்த குழு. திரு சட்டநாதன் அக்குழுவின் தலைவர்.

அக்குழுவின் பரிந்துரையே, ஆண்டு வருமானம் ரூ. 9000க்கு மேல் உள்ள பிற்பட்ட சாதியினருக்கு அரசு சலுகை- தேவையில்லை என்பதுதான். ஆகவே, அதை ஏற்றுக் கொண்டு இடப்பட்ட அரசு உத்தரவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பிறப்பித்த பின்தங்கியோர் நல ஆணை!

இதற்கிடையில் ஒரு சுவை மிக்க சம்பவம். இன்றைய நிகழ்ச்சிகளுக்கு அன்றைய காலக் கண்ணாடி.

வருமான வரம்பு பற்றி, முதல் வரும் அரசு அதிகாரிகளும் விவாதிக்கின்றனர். ஒரு அதிகாரி, ''இந்த உத்தரவு தேவைதானா என்பதை யோசியுங்கள். பின்தங்கியோரில் ஏற்கெனவே படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், பதவி வகிப்பவர்கள், செல்வநிலையில் உள்ளவர்கள், டாக்டர்கள், எஞ்சினியர்கள், வக்கீல்கள், வணிகர்கள் ஆகியோரெல்லாம் பாதிக்கப்படுவர். அவர்கள் தான் மிகுந்த சப்தம் போடும் பிரிவினர்; மிகப் பெரிய எதிர்ப்பைக் கிளப்புவர். ஆனால், நீங்கள் எந்தப் பாமர மக்களுக்காக இக் காரியத்தை மேற்கொள்கிறீர்களோ, அவர்கள் பெரும்பான்மையினர்; ஆனால், பேசத்தெரியாதவர்கள்! ஆகவே, எதிர்ப்புத்தான் மிஞ்சும். மீண்டும் சிந்தியுங்கள்'' என்றார்.

உடனே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த அதிகாரியைப் பார்த்து, ''நீங்கள் எந்தப் பாமர மக்களைப் பார்த்து, அதாவது உடலுழைப்பை மட்டுமே நம்பி வாழும் மக்களைப் பார்த்து, பேசத் தெரியாத பெரும்பான்மையினர் என்கிறீர்களோ, அவர்கள் சார்பில் பேசுவதற்குத் தானே அவர்கள் என்னை இங்கே அனுப்பியிருக்கிறார்கள்'' என்று, தான் அமர்ந்திருந்த முதலமைச்சர் நாற்காலியைச் சுட்டிக் காட்டிப் பதிலளித்தார்கள்.

அந்த நிகழ்ச்சி மறக்க முடியாதது மட்டுமல்ல; பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய வரலாற்று நிகழ்ச்சியுங்கூட!

# விடிவெள்ளி



**த**ந்தை பெரியார்

ஒரு தலைவரின் பெயர் அல்ல......

ஒரு சகாப்தத்தின் பெயர்!

தமிழகத்தின் 75 ஆண்டுக்கால வரலாற்றைத் தன்வாழ்வின் மூலம் எடுத்துக் காட்டியவர் பெரியார்.

உலகத்தில் ஒப்பற்ற தலைவர்கள், உயர்ந்த சிந்தனையாளர்கள், தத்துவமேதைகள், விடுதலை வீரர்கள், சமுதாயப் புரட்சியாளர்கள் எனப் பலர் தோன்றியுள்ளனர். அத்தனைத் தலைவர்களின் ஆற்றலையும் சேர்த்துப் பேராற்றல் மிக்க ஒரு மகத்தான சக்தியாகத் திகழ்ந்தவர் பெரியார்.....சனாதனம் உண்டாக்கிய சாதிக் கொடுமைகள், சமுதாய பேதங்களை, பெண்ணடிமையை, பேதத்தை வளர்க்கும் மதவெறியை, மனிதனைத் தாழ்த்தும் மூடநம்பிக்கைகளை, வேரோடு களையப் பாடுபட்டார்! இல்லை...இல்லை..




மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை
அமைச்சர்
**திரு இராம. வீரப்பன்**

போராடினார். இருள் சூழ்ந்த சமுதாயத்தில் ஒளிவிளக்கேற்றினார்..... புரையோடிப்போன சமுதாயப் பழக்க வழக்கங்களைச் சாடினார். புதிய உலகுகாணப் புரட்சிப் பாதை அமைத்தார்....அறுபது ஆண்டுகளுக்கு மேலாக எதிர் நீச்சல் போட்டார்!

அத்தகைய ஒரு போராட்டத் தந்தையின்-சிறைக்கஞ்சா சிங்கத்தின் செயல்களை-திட்டங்களை-கூர்ந்து கவனித்தால் நாமெல்லாம் உணர்ந்து பின்பற்றக்கூடிய ஒரு தூய்மையான அறநெறியை அவர் வகுத்துக் கொண்டு வழி நடந்து சென்ற வரலாறு நமக்குப் பாடமாக அமையும்.

இவ்வளவு இழிவுகளுக்கும், சமுதாயக் கொடுமைகளுக்கும், சில கோட்பாடுகளும், சில நம்பிக்கைகளும் தான் காரணம் என்று நம்பினார்... நம்பியது மட்டுமல்ல; கண்டு தெளிந்தார்....ஆகையால்தான் அந்தக் கோட்பாடுகளை, நம்பிக்கைகளை எதிர்த்தார்,...அவைகளைச் சமுதாயத்தில் பரப்பிடக் காரணமாக இருந்தவர்களைக் கடுமையாக எதிர்த்தார். அதற்கு அடிப்படையாக அமைந்த சில அமைப்புகளைத் தயவு தாட்சணியமின்றி எதிர்த்தார்!

அவருடைய எதிர்ப்புக் குரல் மேடைகளில் ஒலித்தபோது புரட்சிக்கனல் வீசியது.. அவருடைய பேனாவிலிருந்து எழுத்துக்கள் அணு குண்டுகளைப் போல் வெளிவந்தன....



சமுதாயத்தின் அயரங்களைச்சகித்துக் கொள்ள முடியாத அவரதுஉள்ளம்எரிமலை யாக வெடித்தது... போர்க்குரல் எழுப்பினார்..போராட்டங்களை நடத்தினார். உலகத்தில் சமுதாயப் புரட்சியாளர்கள் யாரும் நடத்தியிராத அள

வில் தன்னுடையபோராட்டங்களை அமைத்துக் கொண்டார்.

ஆனால், இவ்வளவு மகத்தான போராட்ட உணர்வுமிக்க ஒரு தலைவர்-மகத்தான மக்கள் சக்தியைத் திரட்டும் ஆற்றலைப் பெற்ற மாபெருந்தலைவர் - சுட்டு விரலை நீட்டினால், அதன் எதிரிலே இருப்பவைகளைத் தூள் தூளாக்கும் ஆற்றல் மறவர்களை ஆயிரம் ஆயிரமாகப் பெற்ற அருந்தலைவர் இவ்வளவு சக்திகளையும் தன்னிடத்திலே வைத்துக் கொண்டிருந்த ஈடு இணையற்ற தலைவர், தனது வாழ்நாளில்,

**தான் எதிர்த்த எந்தப் பிரிவினர்க்கும், அழிக்கப்பட வேண்டும் என்று விரும்பிய எந்தச் சின்னங்களுக்கும், அல்லது தன்னை எதிர்த்த எந்தக் கொள்கையினருக்கும், ஒரு சிறு ஊனமும், பங்கமும் விளையாமல், பாதுகாத்த பாங்கினை, அறநெறியை, அமைதி வழியை தந்தை பெரியாரின் வழிநடக்கும் அனைவரும் கற்றுத் தெரிந்துகொள்ள வேண்டும்.**

தந்தை பெரியாரை, வகுப்புத் துவேஷி என்பவர்கள், அவருடைய வாழ்க்கையை ஒருமுறை திரும்பிப் பார்க்கவேண்டும்.

தந்தை பெரியாரை, ஆத்திக மக்களின் விரோதி என்பவர்கள், அவர்களது அறுபது ஆண்டுக்கால வரலாற்றைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

வாழ்நாளெல்லாம், அவர் எதிர்த்துப் போராடிய சில மூடப் பழக்க வழக்கங்களை, சமுதாயக் கொடுமைகளை உருவாக்கியவர்கள், அதை வளர்ப்பவர்கள், அப்படியே இருக்க வேண்டுமென வாதாடுபவர்கள் - அதைப் பாதுகாக்கப் பாடுபடுபவர்கள் என்று கருதப்படும் ஒரு வகுப்பாருக்கு, தம்முடைய இயக்கத்தால் சிறு தீங்கும் நேராமல் பாதுகாத்த மாபெருந் தலைவர் பெரியார்......

கண்மூடித்தனமான சில கொள்கைகளை -நடைமுறைகளை அவர் எதிர்த்தார்... கடுமையாக எதிர்த்தார்! ஆனால், அவற்றின் நிலைக்களனான மனிதர்களையோ, சமூகத்தையோ எதிர்க்கவில்லை! மனிதர்களை நேசிப்பதில் மிகச் சிறந்த தலைவராகவே, மனிதாபிமானம் மிக்கவராகவே அவர் விளங்கினார். இந்தப் பேருண்மையைத் தெரிந்து கொண்டால்தான், பெரியாரின் பேராண்மையைத் தெரிந்து கொள்ள முடியும்.

அதனால்தான், எந்தச் சீர்திருத்தவாதிகளும் பெறமுடியாத வெற்றியைத் தந்தை பெரியார் பெற்றார்...இதைத்தான் பேரறிஞர் அண்ணா எடுத்துக்காட்டிப் பாராட்டினார்.

இந்திய மக்களின் அரசியல் விடுதலைக்காகத் தன் பணியைத் துவக்கிய பெரியார், அரசியல் விடுதலை கிடைத்தாலும், சமுதாய விடுதலை கிடைத்தால் தான், மனிதன் சுதந்திரமுள்ளவனாக வாழமுடியும் என்ற பேருண்மையை, உத்தமர் காந்தியடிகளின் தத்துவங்களிலிருந்து உணர்ந்தார்.

அதனால்தான், அரசியல் ஆசாபாசங்களுக்கு, ஆதிக்க உணர்விற்கு, பதவிச் சுகத்திற்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்ளாமல், தனது வாழ்க்கைப் பயணத்தை வகுத்துக் கொண்டார்.

தந்தை பெரியார் நடத்திய பயணம் கரடுமுரடான காட்டுப்பாதையில், அமைந்தது. அந்தப் பயணத்தை மேற்கொள்ள அசாதாரணத் துணிவும், அளப்பற்கரிய ஆற்றலும் வேண்டும். அந்தத் துணிவும், பேராற்றலும் தந்தை பெரியாரிடத்தில் தான் இருந்தன. அதனால்தான் அவரால் அந்தப் பயணத்தை மேற்கொள்ள முடிந்தது. அந்தப் பயணத்தில் அவர் முதற்கட்ட வெற்றியைப் பெற்றார். அந்த வெற்றிதான் தமிழகத்தில் அண்ணாவின் அரசு 1967ல் அமைந்த சம்பவமாகும்!

அண்ணாவின் அரசு அமைந்ததால், சமுதாயத்தில் தந்தை பெரியார் காண விரும்பிய இலட்சியங்களின்-முதற்படியைத் தமிழ் மக்கள் அடைய முடிந்தது. அந்தப் பணி தொடருகிறது. தந்தை பெரியார் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை! அவர் தமிழ்ச் சமுதாயத்திற்கு அளித்த பேரறிஞர் அண்ணாவும் இன்று இல்லை! ஆனால், அண்ணா அமைத்த அரசு இருக்கிறது. பெரியாரின் இலட்சியங்களை நிறைவேற்றும் அண்ணாவின் அரசுதான், தமிழகத்தின் விடிவெள்ளியாம் தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவை ஒரு ஆண்டு முழுவதும் கொண்டாடி, அதன் மூலம், பெரியாரின் உணர்வுகளைப் பசுமையாக வைத்துக் கொள்ளும் பணியிலே ஈடுபட்டுள்ளது.

இந்த நூற்றாண்டின் இணையற்ற தலைவனை - தமிழகத்தின் வரலாற்றில் ஒரு சகாப்தத்தை நினைந்து வணங்குவோம். அவருடைய வழியில் நடக்க உறுதிமொழி ஏற்போம்!

**பெரியார் அவர்கள் 94 வயது நிரம்பிய நிலையிலும் 'விடுதலை' இதழுக்கான தலையங்கத்தையும், கட்டுரையையும், சொற்பொழிவின் சுருக்கத்தையும் தாமே தான் எழுதினார்.**

**அவர் வாயால் சொல்லிப் பிறரைக் கொண்டு எழுதுவிக்கும் பழக்கம் அவரிடம் அந்த நிலையிலும் இல்லை. நண்பர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் தாமேதான் கைப்பட எழுதி வந்தார்.**

**பெரியார் அவர்கள் அதிகமான மை கொள்ளக் கூடிய மிக மொத்தமான பெரிய பேனாவால்தான் எழுதுவார். சிறிய பேனாவைப் பிடிக்க மாட்டார்,**

**அவர் எழுதும்போது சொல்லின் எழுத்துக்களைத் தனித்தனியாக எழுத மாட்டார். ஆங்கிலத்தை எழுதுவது போன்று எழுத்துக்களையெல்லாம் ஒன்றாகத் தொடர்புபடுத்திதான் எழுதுவார்,**

## இப்படித்தான் எழுதுவார்



# பெரியார்- வென்று விட்டார்!

பகுத்தறிவுப் பகலவன்!

சுயமரியாதைச் சுடரொளி!

வெண்தாடி வேந்தர்!

தன்மான இயக்கத் தளபதி!

என்ற அடைமொழி இல்லாமல்—'பெரியார்' என்றாலே—எவரும் புரிந்து கொள்ளத்தக்க அளவுக்கு—தமிழ் மக்களின் நெஞ்சில் நிறைந்தவர் தந்தை பெரியார்.

அரசியல் பணி—பொருளாதாரப் பணி—இவைகளையெல்லாம்விடக் கடுமையான பணி, கண்டன மழையைத் தாங்க வேண்டிய பணி—சமூக சீர்திருத்தப்பணி. அந்தப் பணியை—வாழ்நாள் முழுதும் வளைந்து கொடுக்காமல்



மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்

**திரு கா. காளிமுத்து**

செய்தவர் பெரியார். மலை உச்சியில் ஏறி, மூலிகை தேடுவது போன்ற அந்த அரும் பணியை—மெய்வருத்தம் பாராமல்—பசி நோக்காமல்—கண் துஞ்சாமல்—பாராட்டு, அவமதிப்பு இரண்டையும் சமமாகக் கருதி—எழுச்சி குன்றாமல் அவர் செய்தார்.

அவரது பணியின் விளைவுதான்—நம் கண்ணெதிரே காணக் கூடிய சமுதாயம்.

இன்னும்—இந்தச் சமுதாயத்தில் துடைத்தெறிய வேண்டிய தீமைகள் பல உள. அவைகளைத் துடைத்துத் தூய்மைப்படுத்தப் பெரியாரின் கருத்துக்கள் நம் கைவசம் இருக்கின்றன. ஓராண்டு—ஈராண்டுக்குப் பிறகு மாறி விடக் கூடிய நிலையற்றதல்ல அவரது கருத்துக்கள். அவைகள் காலத்தை வென்ற—இருபதாம் நூற்றாண்டின் குறட்பாக்கள்!

வேறு நூல்களை மேற்கோள் காட்டியோ 'அவர் சொன்னார்—இவர் சொன்னார்' எனக்கூறிப் பிறர் கருத்துக்களால்-தன் கருத்துக்கு முட்டுக் கொடுத்தோ-தன் கொள்கையை அவர் வலியுறுத்தியதில்லை.

அவரது கொள்கைகள் அனைத்தும்-அவரது சுயசிந்தனை எனும் பொழிலில் பூத்த புது மலர்கள்.

''பெரியார் ஓர் விஞ்ஞான மனிதன்—என்றும் பின் திரும்பிப் பார்க்காத கால ஓட்டம். நொடிக்கு நொடி மாறுகின்ற புதுமை—தினம் நூறுமுறை வளருகின்ற வளர்ச்சி'' எனக் கவிஞர் ஒருவர்—பாடினார். முன்னோர் கருத்து—எனும் ஒரே காரணத்துக்காக சமூகத்துக்குப் பயன்படாதவைகளை பின்னே போற் போற்றும்—பிற்போக்குத் தன்மை—பெரியாருக்கு ஒத்து வராதது.

அவர்—எதிர்காலத்தைச் சிந்தித்தார். இன்னும்— நூறாண்டுகளுக்குப் பின்வரும் தலைமுறையைச் சிந்தித்தார். வாழ்வின் அந்திமப் பருவத்திலே இருந்த அவர்—எதிர்காலத் தலைமுறையின் இளங்காலை நேரம் பற்றிய நினைவுகளில் திளைத்தார். அவரது சுயநலம் கலவாத பெரும் பணியால்தான்—'ஜாதீயம்' எனும் சர்ப்பத்தின்' கொட்டம் குறைந்திருக்கிறது.

பிராமணரல்லாதார்—என்பதே சமூகச் சுமையாக இருந்த இழிநிலை அகன்றிருக்கிறது. பெரியாரின் விருப்பத்தை அனைத்துத் துறைகளிலும் ஈடேற்றுகின்ற அரசு—புரட்சித் தலைவரின் தலைமையில் அமைந்திருக்கிறது.


தந்தையின் சிந்தையில் பூத்த இலட்சியப் புதுமலர்கள்—என்றும் வாடாதவை. அவைகளின் நறுமணம்—மூடநம்பிக்கை எனும் நாற்றம் அகற்றுபவை! பணியினால் மட்டுமன்று!—பண்பினாலும் உயர்ந்தவர் தந்தை பெரியார்!

பொதுவாழ்வில் அவரது எதிரியாக இருந்த மூதறிஞர் ராஜாஜி-தனி வாழ்வில் அவரது நெருங்கிய நண்பர்!

தனியாக அவரைச் சந்திக்கிற குழந்தையைக்கூட—மரியாதையோடு அழைக்கும் பண்பின் பெட்டகம் அவர்!

எந்தப் பதவியும் வகிக்காமலே அவர் ஆற்றிய பேருழைப்பால்தான்—தமிழகம் தலை நிமிர்ந்திருக்கிறது.

பெரியார் காட்டிய வழியில்—நடப்பதற்குச் சில தனி மனிதர்கள் முன்வருவதற்கே பெரும்எதிர்ப்பைச்சந்திக்க வேண்டியதாக இருந்தது! இன்று—அவர் வழியில் அரசேநடக்கிறது!



**பெரியார்—வென்று விட்டார்!**



# பழுத்த பகுத்தறிவுவாதி

நாவலர் இரா. நெடுஞ்செழியன்
பெரியார் நூற்றாண்டு விழாக் குழுத்தலைவர்

இருபதாம் நூற்றாண்டின் புத்தர் என்றும், இந்தியாவின் சாக்ரடீஸ் என்றும், தென்னாட்டின் ரூசோ என்றும், தென்னகத்தின் வால்டேர் என்றும், செந்தமிழ்நாட்டின் கரிபால்டி என்றும், நம் தமிழ்நாட்டின் சன்யாட்சன் என்றும், இன்றைய சமூகத்தின் இங்கர்சால் என்றும், எல்லோராலும் வாயார மனதாரப் போற்றிப் புகழப்படும் பகுத்தறிவு இயக்கத்தின் தந்தை—சுயமரியாதை உணர்வின் சுடரொளி—சமூகச் சீர்திருத்தப்பணி ஆற்றவந்த செம்மல்—உரிமை வேட்கையைத் தட்டி எழுப்பிய உரவோர்—விடுதலைப்போர் நடத்திய வீரர்—சிறைகள் பலவற்றையும் கண்ட சிங்கம்—திராவிடப் பெருங்குடி மக்களின் ஒரு பெருந்தலைவர் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதில், பெருமகிழ்ச்சி அடைகிறோம்!.

என்னைப்போன்ற பலரையும் அரசியல் உலகில் ஆளாக்கிவிட்ட பெருமை, அறிஞர் அண்ணா அவர்களைச் சாரும். அறிஞர் அண்ணா அவர்களையும், பிறரையும் பகுத்தறிவு உலகில் நெறிப்படுத்திய பெருமை, தந்தை பெரியார் அவர்களையே சாரும்.

பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களை மனக்கண்ணால் பார்க்கிறேன். வெள்ளியதாடி அசைய, விரிந்தமுகம் மலர, பரந்த நெற்றி ஒளிர, அகன்ற கண்கள் ஒளியுமிழ, எடுப்பான மூக்கு எழில்சார, பொன்னிற மேனி துலங்க, பருத்த உடல் பெருநடை போட, கருநிற மேலாடை சரிய, தாங்கிய தடியுடன்



தலைதாழாச் சிங்கமெனத் தமிழகம் முழுவதும் பெரியார் வலம் வந்த காட்சி, என் மனக் கண் முன்னால் வந்து நிற்கிறது.

பெரியார் வாழ்ந்த நாளில் வாழ்ந்தோம்; அவரோடு கூட உடன் இருந்தோம், அவரோடு சேர்ந்து பொதுத்தொண்டு புரிந்தோம்; அவருடைய கருத்துரைகளைக் கேட்டு மகிழ்ந்தோம், அவருடைய அறிவுரைகளைப் பின்பற்றி நடந்தோம்; அவரை வழிகாட்டியாகக் கொண்டோம்; அவரைத் தலைவராகக் கொண்ட அறப்போராட்டங்கள் பல நடத்தினோம். அவரால் பெருமை பெற்றோம்-புகழ் அடைந்தோம்-பூரிப்புக் கொண்டோம் என்றெல்லாம் எண்ணுந்தோறும், எண்ணுந்தோறும் எனக்குத் தனி இன்பவுணர்வு ஏற்படுகிறது.

''பெரியாரின் பெரும்பணி ஒரு தனி மனிதனின் வரலாறு அல்ல. அது ஒரு சகாப்தம்-ஒரு காலக் கட்டம்-ஒரு திருப்பம்'' என்று அறிஞர் அண்ணா ஒரு முறை குறிப்பிட்டுள்ளார்கள்.

> **''தொண்டு செய்து பழுத்த பழம்**
> **தூய தாடி மார்பில் விழும்**
> **மண்டைச் சுரப்பை உலகு தொழும்**
> **மனக்குகையில் சிறுத்தை எழும்**
> **அவர்தாம் பெரியார்.''**

என்றார் புரட்சிக்கவிஞர்.

பகுத்தறிவு நெறியறிந்து நடக்கத் தெரியாத காரணத்தால், கோடானு கோடி மக்களின் நேரம்-நினைப்பு-உழைப்பு-உடைமை-அறிவு-ஆற்றல் குருட்டு நம்பிக்கைகளுக்கும், மூடப் பழக்கவழக்கங்களுக்கும் இரையாகிப் பாழாகிக் கொண்டிருக்கின்றன. மக்கள் வாழ்விற்குரிய வகையான நெறி, பகுத்தறிவு நெறிதான் என்பதைப் பெரியார் அவர்கள் தமிழகத்தைப் பொறுத்தவரையில் நிலை நாட்டிக் காட்டிவிட்டார்கள்.

இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களோடு தமிழகத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழகத்தில் சாதி வேற்றுமையும், சமய வேற்றுமையும் மிகவாகக் குறைந்திருக்கின்றன. சாதி சமயத்தின் பேரால் இழிவுபடுத்தும் கொடுமை பெருமளவுக்குக் குறைந்திருக்கின்றது. சாதியின் பெயரால் இழிவு கற்பிக்க நாணப்படும்படியான நிலை ஏற்பட்டிருக்கின்றது. கோவில்களிலும்-குளங்களிலும்-கிணறுகளிலும்-தெருக்களிலும்-ஊர்களிலும்-சேரிகளிலும்-தண்ணீர்ப் பானைகளிலும் தாண்டவமாடிக் கொண்டிருந்த சாதி, பெருமளவுக்கு வெருண்டோடியிருக்கின்றது. பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் எல்லாவழிகளிலும்-வகைகளிலும் - நிலைகளிலும் தலைநிமிர்ந்து நடக்க முடிகிறது. பன்னெடுங்காலந்தொட்டு நின்று நிலவி வந்த குருட்டு நம்பிக்கைகளும், மூடப்பழக்க வழக்கங்களும் ஆட்டங்கண்டு ஒன்றன்பின் ஒன்றாகப் படிப்படியாக வீழ்ந்து கொண்டு வருகின்றன.. திராவிடன் தன் இனவுணர்ச்சியோடும், தமிழன் தன்மதிப்பு—தனிமொழியுணர்ச்சியோடும் தலை நிமிரத் தலைப்பட்டிருக்கிறான். இவற்றிற்கெல்லாம் இன்றைய நிலையில் முழுமுதல் காரணமாக விளங்கியவர் பெரியார் அவர்களே ஆவார்!

மனித சமூகம் பல்வேறு வழிகளிலும் முன்னேற முடியாமல் தத்தளித்துக் கொண்டிருப்பதற்குக் காரணங்களாக இருப்பன குருட்டு நம்பிக்கைகளும், மூடப் பழக்கங்களுமே ஆகும் என்பதைப் பெரியார் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் சுட்டிக்காட்டி வந்தார்கள். 'கடவுள்'—'சமயம்' — 'சாதி' — 'சாத்திரம்' — 'புராணம்' — 'இதிகாசம்' — 'வேதம்'—'உபநிடதம்'—மந்திரம் — 'சோசியம்'—'பில்லிசூன்யம்' போன்றவைகளால் ஏற்படும் சிந்தனைகளும், செயல்களும், நிகழ்ச்சிகளும் மனிதச் சமுதாய முன்னேற்றத்திற்கு எவ்வளவு பெரிய முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகின்றன என்பதைப் பெரியார் எடுத்துக் காட்டி வந்தார்.

தந்தை பெரியார் அவர்களின் அறுபது ஆண்டுக் காலத்திற்கு மேற்பட்ட அருந்தொண்டு வீண்போகவில்லை. குமரி முதல் இமயம்வரை இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் சுற்றிப் பார்த்து வந்தால், பகுத்தறிவுக்கு ஏற்றவகையில் ஓரளவுக்கு வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழ்பவர்களைத் தமிழகத்தில்தான் காண முடியும். அதற்குக் காரணம் பெரியார் தமிழகத்தில் நீண்ட பெருங்காலமாகச் சமூகச் சீர்திருத்தத்தொண்டு செய்து வந்ததுதான்.

அறிந்தோ அறியாமலோ, தெரிந்தோ தெரியாமலோ, புரிந்தோ புரியாமலோ, உணர்ந்தோ உணராமலோ எப்படியோ தமிழகத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொருவரது உள்ளத்திலும் பெரியாரின் சீர்திருத்தக் கருத்துக்கள் ஊடுருவிப் பாய்ந்து, எதிரொலித்து நிற்கின்றன.

எம்.ஏ., படித்த அறிஞர் அண்ணா அவர்களும், எம்.ஏ., படித்த நானும், பி.ஏ., பி.எல்., எம்.பி.பி.எஸ். போன்ற பட்டப் படிப்புப் படித்தவர்களும், ஐந்தாவது வரையிலுமே படித்த பெரியாரைத் தலைவராக ஏற்றுக்கொள்ளக் காரணம் என்ன? வேறு எந்தத் தலைவரும் கூறாத பகுத்தறிவு நெறிக் கருத்துக்களை-நாட்டுக்கும் சமூகத்திற்கும் பயன்படும் நல்ல கருத்துக்களை-மக்களை வாழ வைக்கும் சீரிய கருத்துக்களைப் பெரியார் அவர்கள் துணிவோடும் திட்பத்தோடும் பரப்பி வந்தார்கள் என்பதேயாகும்.

கடவுள் பேரால்—மதத்தின் பேரால்—சாத்திர சம்பிரதாயத்தின் பேரால்—புராண இதிகாசங்களின் பேரால் நடைபெறும் மோசடிகளும், பித்தலாட்டங்களும், ஏமாற்றுக்களும், சுரண்டல்களும், இன்னல்களும், இழப்புக்களும், வீண்செலவுகளும், வெற்று ஆரவாரங்களும் பெரியார் அவர்களின் பெருமுயற்சிகளால் ஓரளவுக்குக் குறைந்திருக்கின்றன என்றாலும், அத்தகைய கொடுமைகள் இன்னும் பெருமளவுக்குப் போக்கப்படவேண்டியிருக்கின்றன.

நல்ல காலம் - இராகுகாலம் - குளிகைக் காலம் -யமகண்டம் - சகுனம் ஆகியவைகளைப் பார்த்து, காலத்தையும், பொருளையும், முயற்சியையும் வீணாக்கிக் கொண்டிருப்பவர்கள், நமது நாட்டில் இன்னமும் பல பேர்கள் இருக்கிறார்கள். செய்ய வேண்டியவைகளைச் செய்ய வேண்டிய காலத்தில், செய்ய வேண்டியவைகளைச் செய்ய வேண்டிய வழியில், செய்ய வேண்டிய முறைப்படி செய்யாமல், இராகுகாலம்—சகுனம் பார்ப்பதன் மூலம் எத்தனைப் பேர்கள் எவ்வளவோ இழப்புக்களுக்கு ஆளாகியிருக்கின்றனர். ஒரு மணி நேரம் தவறிப் போய் விடுவதன் மூலம், எத்தனையோ பொருளாதார இழப்புக்கள் நேரிட்டு விடுகின்றன.

நமது நாட்டில் மூடபக்திக்கு இரையான மக்கள் சாலையின் குறுக்கே போகும் பூனையைக் கண்டு அஞ்சுகிறார்கள்; விட்டத்திலிருந்து குரல் எழுப்பும் பல்லியின் ஓசையைக் கேட்டு அஞ்சுகிறார்கள்; ஒற்றைப் பார்ப்பான் எதிரிலே வருவதைக் கண்டு அஞ்சுகிறார்கள்; ஆந்தை இரவில் அலறுவதைக் கேட்டு அஞ்சுகிறார்கள். இப்படி பலவற்றிற்கு அஞ்சி அஞ்சிச் சாகிறார்கள். ''நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலை கெட்ட மாந்தரை நினைத்து விட்டால், இவர் அஞ்சி அஞ்சிச் சாவார், இவர் அஞ்சாத பொருள் இல்லை!'' என்று பாரதியார் வேதனையோடு குறிப்பிட்டார்.

குருட்டு நம்பிக்கைகள், மூடப் பழக்க வழக்கங்கள் பகுத்தறிவுக்கு ஒவ்வாப் போக்குகள், ஆகியவற்றை அகற்ற தந்தை பெரியார் அவர்கள், தம் வாழ்நாள் முழுவதும் ஓய்வு ஒழிவின்றிப் பாடுபட்டு வந்தார்கள்.

கற்பனைக் கடவுள் தத்துவத்தை ஒழிப்பது—மூடப் பழமையைக் காப்பாற்றும் மதங்களை அழிப்பது—மக்களைப் பிளவுபடுத்திப் பாழ்படுத்தும் சாதிப் பிரிவுகளை நீக்குவது—குருட்டு நம்பிக்கைகளை அகற்றுவது—மூடப்

**மனிதர்களுக்கு இடையே வேறுபாடு கூடாது என்றார் பெரியார் அவர்கள். அந்த வேறுபாடுகளைக் கண்டபோது எரிமலையாக வெடித்தார்.**

**ஆகவே, மனிதனை வேறுபடுத்த மாட்டோம் என்கிற உறுதிமொழியை நாம் ஒவ்வொருவரும் ஏற்றாக வேண்டும். இதை நாம் நிறைவேற்றினால்தான் தந்தை பெரியார் அவர்களின் புகழ் நிலைத்து நிற்கும்!**

**—குன்றக்குடி அடிகளார்.**

**(26-8-79 திருவாரூர், தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவில்)**



# ஏழை எளிய கிராம மக்கள் ஏற்றம் பெற்றிட....

## பிற்பட்ட வகுப்பினர் வருமான வரம்பு ஆணை செல்லும்

### சென்னை உயர்நீதிமன்ற பெரும்பான்மைத் தீர்ப்பின் சாரம்

“கல்வி அமைப்புக்களிலும், அரசு வேலைகளிலும் பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களை அந்த வகுப்பினர் பெறுவதற்கு வருமான வரம்பு நிர்ணயித்து மாநில அரசு போட்ட உத்தரவு அரசியல் சட்டப்படிச் செல்லும்'' என்று சென்னை உயர்நீதிமன்ற ‘ஃபுல்பெஞ்ச்’ பெரும்பான்மை மூலம் தீர்ப்பளித்தது.

அந்தப் பெரும்பான்மைத் தீர்ப்பின் முக்கிய அம்சங்கள் சில வருமாறு:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15(4) பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள், மாநில அரசுக்குச் சமூக அடிப்படையிலும், கல்வி அடிப்படையிலும். பின்தங்கியுள்ள இந்தியக் குடிமக்களை மேம்படுத்த அதிகாரம் வழங்கியுள்ளது.

நுணுக்கி ஆராய்ந்து பார்த்தால், பெரும் அளவில் சமூகத் துறையிலும், கல்வித் துறையிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டிருப்பதற்கு மூல காரணம், ஏழ்மையே!

உண்மையாகவே சமூகத்துறையிலும், கல்வித் துறையிலும் பின்தங்கியுள்ள குடிமக்களுக்கு முன்னேறுவதற்கான வாய்ப்புகளை மறுப்பது, சமூக அநீதியாகும்.

பிற்பட்ட சமுதாயத்தில் உள்ள முன்னேற்றம் அடைந்துள்ள மக்களுக்கு, மாநில அரசின் பாதுகாப்புகள் தேவையில்லை என்பதை மாநில அரசு அறிந்துள்ளது.

சமதர்மக் கண்ணோட்டத்தில் முன்னேற்றம் அடைந்த இப்பிரிவினருக்கு, பிற்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட சலுகைகளில், வாய்ப்புகளில் உரிமை கொண்டாட எந்த விதமான நியாயமும் இல்லை.



பல்வேறு பிற்பட்ட சாதிகளில் உயர்ந்த இனமாக இருக்கும் இக் குழு மக்களை, பிற்பட்டோர் பட்டியலிலிருந்து நீக்கிவிட பிற்பட்டோர் நலக் குழு செய்த பரிந்துரைகளைத்தழுவி அரசு ஒருதிட்டம் கொண்டுவந்துள்ளது.

சமூக நீதி வழங்குவதற்காக அரசு ஒரு ஆணையைப் பிறப்பித்துள்ளது என்றும், எப்பொழுதும் பிற்பட்டோர் பட்டியலில் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கவேண்டும் என்று உரிமை யாருக்கும் அளிக்கப்படவில்லை.

எந்த ஒரு இனத்தையும் பிற்பட்டோராகக் கருதுவதோ, கருதாமல் இருப்பதோ அரசின் சொந்த விருப்பத்திற்கு உட்பட்ட தீர்ப்புரிமையாகும். எந்த ஒரு பிற்பட்ட இனமும், தாங்கள் பிற்பட்ட இனம் என்று உரிமை கொண்டாட முடியாது.

## ரூ. 9000 வருமான வரம்பு பிற்பட்ட வகுப்பினரைப் பாதிக்கவில்லை

தமிழ்நாட்டில், பொறியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுத்ததில், பிற்பட்டோருக்கு அதிக இடங்கள் கிடைத்துள்ளன.

பின்தங்கியவர்களுக்கு இதுவரை கிடைத்து வந்த இட விகிதம் 75-76ல் 51.6 சதவீதம்; 76-77ல் 53.5 சதவீதம்; 77-78ல் 53.5 சதவீதம்; 78-79ல் 55.15 சதவீதம்.

இப்போது 79-80ல் 59 சதவீதம் பெற்றிருக்கிறார்கள்.

பொறியியல் கல்லூரியில் மொத்தம் 1220 இடங்கள் உள்ளன. இதில் முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகள், மத்திய அரசுக்கு ஒதுக்கப்படும் இடங்கள், வெளிநாட்டு அகதிகட்கு ஒதுக்கப்படும் இடங்கள் அண்டை மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் இடங்கள் போக உள்ளவை 1,172 இடங்கள்.

இதில் 51 சதவீதத்துக்கான எல்லாருக்கும் பொதுவான முன்னேறிய வகுப்பினர்க்கான இடங்கள் 598 ஆகும்.

பின்தங்கியவர்களில் 651 ஆண்களுக்கும், 39 பெண்களுக்கும் ஆக 690 பேருக்கு இப்போது இடம் கிடைத்துள்ளது. ஆனால், கிடைக்க வேண்டிய இடம் 363 தான்.

தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களின் ஆண்கள் 208 பேருக்கும், பெண்கள் 9 பேருக்கும் ஆக 217 பேருக்கு இடம் கிடைத்துள்ளது. அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய இடம் 211 தான்.

முன்னேறிய சமுதாயத்தினர் பெறவேண்டிய 598 இடங்களில், 265 பேர்தான் இடம் பெற்றிருக்கிறார்கள்.


அதுபோல, பின்தங்கியவர்களில் 363 பேருக்குப் பதில் 690 பேர் இடம் பெற்றிருக்கிறார்கள். அதுபோல தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களில் 211 பேருக்குப் பதில் 217 பேர் இடம் பெற்றுள்ளனர்.

இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, எக்காரணம் கொண்டும் பின்தங்கியோருக்கோ தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கோ வருமான வரம்பு விதிக்கப்பட்டதனால் ஆபத்து எதுவும் வந்துவிடவில்லை. என்பது புரியும். அதற்கு மாறாக,

1. தேர்வு செய்யப்பட்டவர்களில், ஊரகப் பகுதி(Major Panchayat Minor Panchayat) யைச் சேர்ந்த மாணவர்கள் 52 சதவீதம் ஆகும்.
2. பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை (ரூ. 9000க்குக் குறைவாக ஆண்டுவருவாய் உடையவர்கள்) ......363
3. தேர்ந்தெடுக்கப்பட்ட 363 மாணவர்களில், ரூ.3000க்குக் குறைவான ஆண்டு வருமானமுடைய பெற்றோர்களின் பிள்ளைகளின் எண்ணிக்கை ...246

இந்த 246 பேர்களில், ஆண்டொன்றுக்கு 2 ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளோரின் பிள்ளைகள் 121 பேர். 2 ஆயிரத்திலிருந்து 3 ஆயிரம் வரை ஆண்டு வருமானமுள்ளோரின் பிள்ளைகள் 125 பேர்!

இந்த அளவுக்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களின் ஏழை, எளிய கிராமப் பிள்ளைகள் இப்போது இடம் பெற முடிந்திருக்கிறது. ஏழை, எளிய கிராம மக்களின் பிள்ளைகள் இவ்வளவு பேர் பொறியியல் கல்லூரியில் இடம் பெற்றதற்குக் காரணம், தமிழக அரசு விதித்துள்ள ரூ. 9000 வருமான உச்சவரம்பே யாகும் என்றால் அது மிகையாகாது!



முன்னாள் முதலமைச்சர்
**திரு எம். பக்தவத்சலம்**

**“பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களுக்கு ரூ. 9 ஆயிரம் வருமான வரம்பு என்ற சலுகையை முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். பிறப்பிக்கவில்லை என்றால், பிற்பட்ட மக்களில் இருக்கும் அடித்தள ஏழை மாணவர்கள் இந்த அளவுக்குப் பொறியியல் கல்லூரியை எட்டிப் பார்த்தும் இருக்க முடியாது; வகுப்பறையைத் தொட்டுப் பார்த்தும் இருக்கமுடியாது.'' என்று முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்.**

பிற்பட்ட சமூகத்தினர் அரசின் சலுகை பெற ரூ. 9 ஆயிரம் வருமான வரம்பு விதித்து இருப்பதால் பிற்பட்ட சமுதாயத்தில் சாதாரண ஏழை மக்களின் பிள்ளைகளுக்குப் பொறியியல் கல்லூரியில் அதிக இடங்கள் இப்போது கிடைத்து இருப்பது தெரிந்ததே.

இது குறித்து முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் கூறிய கருத்துக்களாவன:—

பின்தங்கிய சமுதாயத்திலும் ஏழை-எளியவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆண்டுக்கு ரூ. இரண்டாயிரம் கூட சம்பாதிக்க முடியாதவர்கள் நிறைய இருக்கிறார்கள்.

ஆண்டுக்கு ரூ. 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்களும் இருக்கிறார்கள்.


வசதி வாய்ப்புப் பெற்றவர்கள் எப்படியும் முன்னேறமுடியும்.

ஆனால், வசதியற்ற அடித்தள.சாதாரண ஏழை எளிய மக்கள் அந்த வாய்ப்பை எந்தக் காலத்தில் பெற்று முன்னேறுவது?

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிற்பட்ட சமுதாயத்தினருக்கு ரூ.9 ஆயிரம் வருமான வரம்பு உத்தரவைப் பிறப்பிக்கவில்லை என்றால், என்றும் இல்லாத அளவுக்கு அந்த ஏழைகளின் பிள்ளைகள் பொறியியல் கல்லூரியை எட்டிப் பார்த்தும் இருக்க முடியாது. வகுப்பறையைத் தொட்டுப் பார்த்தும் இருக்க முடியாது.

முதல்வர் பிறப்பித்த இந்த உத்தரவால் பிற்பட்ட சமுதாயத்திற்கு ஒதுக்கிய 31 சதவிகித இடங்களும், வேறு எந்தச் சமுதாயத்திற்கும் சென்று விடவில்லை.


இதனை முக்கியமாகப் பார்க்கவேண்டும். அதுமட்டுமல்ல, 31 விகித இடங்கள் மட்டும் அல்லாமல் அவர்கள் திறமை மூலம் பொது இடத்தில் இருந்தும் பெரும் அளவு இடம் பெற்று இருக்கிறார்கள். இது பாராட்டுக்குரியதாகும்.



**திரு ஏ. என். சட்டநாதன்**

**“பிற்பட்ட சமுதாயத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கும் ஏழைகள் வளம் பெற பல யோசனைகளை நான் சொல்லி இருக்கிறேன். அதற்குச் செயல் வடிவம் கொடுப்பதாக மாண்புமிகு தமிழக் முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் அறிவித்துள்ள ரூ. 9 ஆயிரம் வருமான வரம்பு இருக்கிறது'' என்று பிற்பட்டோர் நலக்குழுவின் தலைவராக இருந்த திரு ஏ. என். சட்டநாதன் அவர்கள் தெரிவித்த கருத்துக்களாவன:**

பிற்பட்டவர்களில் ஏழைகள் பொருளாதாரத்தில் முன்னேற வருமான வரம்பு வைக்க வேண்டும் என்ற யோசனை எப்படி ஏற்பட்டது?



பிற்பட்டோர் நலனை அறிய தமிழகத் தின் எல்லா மாவட்டங்களிலும்-மூலை முடுக்குகளிலும் சென்று அவர்கள் நிலை பற்றி ஆராய்ந்

பெரியார் அவர்கள் விட்டுச் சென்ற வேலைகளைத் தொடரும் வேலை இன்னமும் நமக்கிருக்கிறது.

இப்போதுள்ள நிலையைப் பார்த்தால், இந்தி படித்தால் தான் வேலை என்கிற காலம் வந்துவிட்டதோ என்று தோன்றுகிறது. ஆகவே, இன்றைய இளைஞர்களுக்கு நிறையப் பொறுப்பு இருக்கிறது.

ஆகவே, இந்தி எதிர்ப்பை, பெரியாரைப் பின்பற்றி ஆயிரம், பத்தாயிரம் மடங்கு நாம் செய்யாவிட்டால் தமிழுக்கு ஆபத்துத் தான்!

—டாக்டர் ராஜாசர் முத்தையா.

## பின்பற்றுவோம்



(26-8-79 தந்தை பெரியார் நூற்றாண்டு விழா, திருவாரூர்)

பழக்க வழக்கங்களைக் களைவது—கவைக்குதவாத சாத்திர புராண இதிகாச வேதங்களை எதிர்ப்பது-தீண்டாமையை ஒழிப்பது-பெண்ணடிமையை அகற்றுவது-பெண்ணுரிமைக்காகப் பாடுபடுவது-சீர்திருத்தத் திருமண முறைகளைப் போற்றுவது—அறிவுக்கொத்த முறையில் நீத்தார் நினைவு நாட்களைக் கொண்டாடுவது—சமூகக் கொடுமைகளை எதிர்த்துப் போராடுவது-நியாயத்தை நிலைநாட்ட சிறை வாழ்வை ஏற்பது—இந்தித் திணிப்பை முழுமூச்சோடு எதிர்ப்பது-தமிழை எல்லாவகைகளிலும் போற்றிக் காப்பாற்றி வளர்ப்பது—அறிவியல் மனப்பான்மைக்கு ஆக்கந்தருவது போன்ற பல்வேறு பணிகளில் தந்தை பெரியார் அவர்கள் காட்டிய ஆர்வம் ஈடு இணையற்றதாகும்.

தந்தை பெரியார் அவர்கள் சின்னஞ்சிறு வயது முதலே, புரட்சிச் சிந்தனையாளராய்ப் பகுத்தறிவுவாதியாய்ப், புரட்சி வீரராய் இருந்து வந்திருக்கிறார். பெரியார் அவர்களே தம்மைப்பற்றிக் கூறும்போது;

''நான் 1900-க்கு முன்பே கடவுள், மத, சாதி விஷயங்களில் நம்பிக்கையில்லாதவனாக இருந்து வந்தேன், அந்தக் காலத்தில் யாரிடமும் தர்க்கமும் விவகாரமும் பேசுவதில் ப்ரியமும், உற்சாகமும் உடையவனாக இருந்து வந்தேன்,

மாடு-எருமை கன்று போட்ட நேரங்களைக் குறித்து வைத்துக் கொண்டு, ஜோசியர்களிடம் அதைக் கொடுத்து ஜோசியம் கேட்பேன். அவர்கள் அவை மனிதர்களுடையவை என்று நினைத்துக் கொண்டு ஜோசியம் சொல்லுவார்கள்.

1900 இலிருந்தே எனக்கு ஜோசியம், முகூர்த்தம், சகுனம் முதலியவைகளில் நம்பிக்கை இருந்ததில்லை. அப்போது என்னிடத்தில் 'வாய் கொடுத்து மீளமுடியாது' என்று எல்லோரும் பேசிக் கொள்வார்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

நான் பெரியாரை முதன் முதலில் 1929-ஆம் ஆண்டில்தான் கண்டேன். அப்பொழுது எனக்கு வயது ஒன்பது. நான் நான்காவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்த நேரம். அப்போது பட்டுக்கோட்டையில் நடைபெற்ற ''சென்னை மாகாண முதலாவது சுயமரியாதைத் தொண்டர்கள் மாநாட்''டில் கலந்து கொள்ளப் பெரியார் வந்தார். அவருக்குத் தாடி இல்லை; அவர் முரட்டு மீசை வைத்திருந்தார். அந்த மாநாட்டிலிருந்து பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு வந்துள்ளேன்.

பட்டுக்கோட்டைக்கு எப்பொழுது பெரியார் வந்தாலும் அவரது பேச்சைக் கேட்க நானும், எனது இளவல் செழியனும், எனது தந்தையாரும் தவறமாட்டோம். எனது தந்தையார் இராசகோபால் அவர்கள் மூலம்தான் நானெல்லாம் அழுத்தந்திருத்தமான பகுத்தறிவுவாதி ஆனோம்.

1943-44-ஆம் ஆண்டில் நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், தமிழ் மன்றத்தின் செயலாளராக இருந்தபோதுதான், பெரியாரை அழைத்தேன். அவரும் தமிழ் மன்றத்தின் சிறப்புக் கூட்டத்திற்கு வந்து சீரிய சொற்பொழிவாற்றினார். அப்போது நான் பல்வேறு பேச்சுப் போட்டிகளிலும், எழுத்துப்போட்டிகளிலும் பெற்ற கேடயங்களையும், வெள்ளிக் கோப்பைகளையும் பார்வையிட்டார். என் மீது பெரியார் அவர்களுக்குத் தனிப்பற்று ஏற்பட்டு, ஈரோட்டில் 1944-இல் நடைபெற இருந்த இளைஞர் மாநாட்டில் நான் கலந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார். 1944 ஆம் ஆண்டில் பெரியார் ஆணையை ஏற்று நான் குடந்தை திராவிட மாணவர் மாநாட்டிற்கும், கோபி திராவிட இளைஞர் மாநாட்டிற்கும், இலால்குடி திராவிட இளைஞர் மாநாட்டிற்கும், கரந்தை திராவிட இளைஞர் மாநாட்டிற்கும் முதன் முதலாகத் தலைமை தாங்கினேன்.

1944-ஆம் ஆண்டிலிருந்து 1949 ஆம் ஆண்டு வரையில் பெரியார் அவர்களோடு இணைந்தே பல சுற்றுப் பயணங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் கலந்துகொண்டேன். மீண்டும் 1967-ஆம் ஆண்டிலிருந்து அவர் மறையுங்காலம் வரையில் அவரது அன்பையும், ஆதரவையும், பாராட்டுதலையும், போற்றுதலையும் பெற்றேன்.


தந்தை பெரியார் அவர்களோடு நெருங்கிப் பழகிய நினைவுகளெல்லாம் என் உள்ளத்தில் எழும்போதெல்லாம் நான் பூரிப்பும், பெருமையும், பெருமிதமும் கொள்கிறேன்.

பெரியார் பழுத்த பகுத்தறிவுவாதி; சிறந்த சீர்திருத்தக்காரர்; அரிய அறப் போராட்ட வீரர்; போற்றுதலுக்குரிய விடுதலை வீரர்; கொள்கைப் பிடிப்புக் கொண்டவர்; பிடிவாதப் போக்கு உடையவர்; துணிச்சல்காரர்; உறுதியான உள்ளம் படைத்தவர்; எதற்கும் அஞ்சாத தீரர்; மாற்றார் போற்றும் மாண்புடையவர்; சிக்கனக்காரர்; அடக்கம் உடையவர்; எளிமையைப் போற்றுபவர்; விடாமுயற்சி கொண்டவர்; எப்பொழுதுமே தலைவராகத் திகழ்ந்தவர்; பகுத்தறிவுக் கொள்கைக்காகவே வாழ்ந்தவர்.

சுருங்கக் கூறினால், தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரியார்களுக்கெல்லாம் பெரியாராகத் திகழ்ந்தவர்.

பெரியார் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை, அவரதுசீரிய கொள்கைகளை வளர்க்கும் பெருவிழாவாகக் கொண்டாடுவதில் நாம் பூரிப்பும், பெருமையும் கொள்கிறோம்.

வாழ்க பெரியாரின் புகழ்! வளர்க அவரது பகுத்தறிவு இயக்கம்! வெல்க அவரது பகுத்தறிவுக் கொள்கைகள்!





# தனிப்பெரும் தலைவர்

திருமதி ஈ. வெ. கி. சுலோசனா சம்பத்

பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவினைக் கடந்த ஓராண்டுக் காலமாக, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் சிறப்பாக நடத்திய தமிழகஅரசு, இப்போது நிறைவு விழாவினை முன்னைய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரம்-மணிமுடி வைத்தாற் போல, தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் கோலாகலமாகக் கொண்டாடுகிறது.

கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தமிழகவரலாற்றில் தந்தை பெரியார் அவர்களுக்குத் தனிச் சிறப்பான இடம் உண்டு என்பதை அனைவரும் ஒப்புவர்.

பல்வேறு துறைகளிலும் சிறப்பான தொண்டுபுரிந்திருந்தாலும், சமுதாயப் புரட்சிக்குவித் திட்ட அவரதுமுழுமுதற்பணிக்கு நமது துணைக்கண்டத்திலேயே இணை காண முடியாது. எத்தனையோ இழிவுகளையும், பழிகளையும் எதிர்ப்புக்களையும் ஏளனங்களையும், தாக்குதல்களையும் தாங்கிக்கொண்டு பெரியார் அவர்கள் நடத்திய போராட்டத்தின் பலன்களைத் தான் இன்று இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பெரும்பாலான மக்கள் உரிமைகளாகப் பெற்று அனுபவித்து வருகின்றனர்.

தந்தை பெரியாரின் பணிகள் தமிழகத்துக்கு மட்டும் பயனளித்தன என்ற நிலைமாறி, பரந்த இந்திய உபகண்டம் முழுவதிலும் பலனளிக்கத் தொடங்கியிருப்பது கண்டு மகிழாத மனம் இல்லை.

பகுத்தறிவுப் பணிக்காக மட்டுமே அவர் திராவிட சமுதாயம் பற்றிப் பேசினாரேயன்றி, பெரியார் அவர்களுக்கு இன வெறி, மொழிவெறி என்றைக்குமே இருந்தது கிடையாது.

உண்மையாகப் பார்க்கப் போனால், தந்தை. பெரியார் அவர்களின் தத்துவம் என்பது மனிதனை மனிதனாக மாற்றவும் மதிக்கவுமான உயர்ந்த மனிதாபிமான தத்துவம்தானே தவிர வேறன்று.

பகுத்தறிவுத் தத்துவத்தை-மனிதாபிமான தத்துவத்தை தந்தை பெரியாருக்கு முன் பல அறிஞர்கள் போதித்திருக்கிறார்கள். சாக்ரடீஸூம், பர்ட்ராண்ட் ரஸ்ஸலும், டால்ஸ்டாயும், எம்.என். ராயும் இந்த தத்துவம் பற்றி நிறைய எழுதியிருக்கிறார்கள். ஆனால், அவர்களில் எவரும் பெரியார் அவர்களைப் போல் இந்த உயர்ந்த தத்துவத்தை நமது மண்ணுக்கும்—மணத்துக்கும் ஏற்ற வகையில் மக்களிடம் நேரிடையாக எடுத்துக் கூறி அதன் வெற்றிக்காகக் கடுமையாக உழைத்தவர்களில்லை.

பெரியார் அவர்கள்தான் கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக, கிராமம் கிராமமாகச் சுற்றி, நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்களிடம் நேரிடையாக இந்தப் பகுத்தறிவு வாதத்தைப் பரப்பி, மக்களைப் பகுத்தறிவாளர்களாக மாற்றும் பெரும் பணியினைச் செய்து, உலகிலேயே தனியொரு சிறப்பைப் பெற்றவர்.

தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா நிறைவெய்தும் இந்நன்னாளில், அவரது இலட்சியம் முழுமையாக ஈடேறவும், பெரியாரின் கொள்கைகள் நாடெங்கிலும் பரப்பப்படவும், பகுத்தறிவுச் சமுதாயம் உதயமாகவும் தமிழக அரசு மேற்கொண்டு வரும் பணிகள் முழு வெற்றிபெற கைகொடுத்து நிற்பது தமிழினத்தின் கடமையாகும்.



## கேள்விகளுக்கு அளித்த பதில்

பல வருடங்களுக்கு முன்பு! தருமபுரியில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்ய வந்த தந்தை பெரியார் அவர்களிடம் ராஜகோபால அய்யர் என்னும் ஒருவர் 100 கேள்விகளை அச்சடித்துக் கொடுத்து-அதே மேடையிலேயே அனைத்திற்கும் பதிலைத் தரவேண்டுமென்று கேட்டார். மிகுந்த ஆக்ரோஷத்துடன் 100 கேள்விகளுக்கும், அதே மேடையில் 3 மணி நேரத்தில் மடமடவென்று பதில் சொல்லி-அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார் பெரியார்.

—மாண்புமிகு தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி

திரு க. இராசாராம்..

(தர்மபுரியில் 30.6.1979ல் நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவில்.)

# தீர்ப்பளியுங்கள்

## பேரறிஞர் அண்ணா

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய சிறுகதை



என் நண்பர், மாஜிஸ்ரேட் மருதவாணம் பிள்ளை, கோர்ட்டிலே மட்டுந்தான் கோபமாகக் காணப்படுவார். அதைக்கூட அவர் கோபமென்று ஒப்புக் கொள்வதில்லை. நீதியின் உருவம்! என்று கூறுவார். ''என்னமோ மருது! நீதி இப்படி மிரட்டும் உருவிலே இருப்பது எனக்குப் பிடிப்பதில்லை'' என்று நான் கூறுவதுண்டு-கோர்ட்டு நேரத்தில் அல்ல!


அன்று மாலை, மருதவாணம் பிள்ளை, என்னைக் கண்டதும், ''வா, வா! உன்னைத்தான் தேடிக் கொண்டிருந்தேன். நாளைக்கு ஒரு வழக்கிலே தீர்ப்பளிக்க வேண்டும், உன்னிடம் அதைக் கூறி, உன் தீர்ப்பு என்ன என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்'' என்று கூறினார்.

''இதுதானா எனக்கு வேலை! உனக்குத்தான் சர்க்காரிலே சம்பளம் தருகிறார்கள். சட்டத்தைப் படித்துச் சம்பவங்களை அலசி, துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம செய்ய; எனக்கேன் அந்த வேலை?'' என்று நான் கேலியாகக் கூறினேன்.

''உனக்கே மாஜிஸ்ட்ரேட் வேலை கிடைத்து விடுகிறது என்று வைத்துக் கொள்ளேன்'' என்றார் மருதவாணம், மாலை வேளையிலே அவருக்கு இயல்பாகவே மலரும் மகிழ்ச்சியுடன்.

''எனக்கு அந்த வேலை கிடைத்தால்தானே!'' என்று நான் கொஞ்சம் கெம்பீரமாகக் கூறினேன். மருதவாணர், மாஜிஸ்ட்ரேட் குரலிலே ஆரம்பிததார்.

''பெயர் மகாலிங்கம். வயது முப்பது, தொழில், நிலையாக ஒன்றுமில்லை; குற்றச்சாட்டு, பித்தளைச் சங்கிலியைத் தங்கச் சங்கிலி என்று ஏமாற்றி விற்றான்-இதுதான் வழக்கு. இதிலே தீர்ப்புக் கூற வேண்டும்''.



''சரி! மகாலிங்கத்தின் வாக்கு மூலம் என்ன?'' என்று கேட்டேன், ஒரு அதிகாரிபோலவே.

''அதிலே சிக்கல் ஒன்றும் இல்லை. அவன் ஒப்புக்கொள்ளுகிறான் என்றார் மருதவாணம.

''இவ்வளவுதானா? இதிலே யோசனைக்கு என்ன இடமிருக்கிறது? குற்றவாளி, குறறத்தை ஒப்புக் கொள்ளுகிறான. உடனே சட்டப் புத்தகத்திலே அந்தக் குற்றத்திற்காகச் செக்ஷன் என்ன, அதற்கான தண்டனை என்ன என்று பார்க்க வேண்டியதுதானே. இதற்கு என்னைப் பரீட்சிக்க என்ன இருக்கிறது''' என்று நான் கூறினேன்.

''தங்கச் சங்கிலி என்று முலாம் பூசியதை விற்றிருக்கிறான். ஒப்புக் கொண்டுமிருக்கிறான், சாட்சியங்களும், அதே போல அப்பு அழுக்கு இல்லை என்றாலும் இது சிக்கலான பிரச்சினை'' என்றார் மருதவாணர்.

''வேடிக்கையாகவன்றோ நீர் பேசுகிறீர்'' என்று நான் கொஞ்சம் மரியாதையாகவே சொன்னேன், நண்பரின் முகத்திலே, கோர்ட்டுக் களை தட்டுவது கண்டு. கொஞ்ச நேரம் மௌனமாகவே இருந்தார் மருதவாணர், கவலையுடன் காணப்பட்டார். எனக்கு ஏதாவது பேசி வைப்போம் என்ற எண்ணம் உண்டாயிற்று.

''மகாலிங்கம் என்ற ஆள் தெரிந்தவனா?'' என்றேன் நான். உடனே மருதவாணரின் உடல் குலுங்கிற்று, முள் தைத்தவர் அலறுவது போன்ற குரலிலே, ''தெரிந்தவனானால் என்ன, தெரியாவிட்டால் என்ன? நீதியின் கண்களுக்குச் சினேகிதன், பந்து, இவைகள் உண்டா? பைத்தியக்காரா! எனக்கு எப்போதும அம்மாதிரி எண்ணம் வருவதே கிடையாது. யாருக்கும் வரக் கூடாது. நீதியின் சக்கரம் சாமான்யமானதல்ல'' என்று கூறினார். இதேது, இன்று இரவு நெடுநேரம் வரையிலே இவருடைய உபதேசத்தைக் கேட்க வேண்டும் போலிருக்கிறதே!'' என்று நான் சற்று பயந்தேன்.

''மகாலிங்கம், கள்ளன், அயோக்யன், குடியன்; இவற்றிற்கு ருஜு இருக்கிறது'' என்று தனககுததானே கூறுக் கொளபவர்போலப் பேசினார் என் நண்பர்.

''சரி! ருஜு இருக்கும்போது, கள்ளனை, அயோககியனைத தண்டிக்க வேண்டியதுதானே! இதிலே தயவு தாட்சணியம் என்னமோ இல்லை. கூடாது. ''இன்னும் யோசனை ஏன்?'' என்று நான் மாஜிஸ்ட்ரேட்டானேன். மாஜிஸ்ட்ரேட் மருதவாணம் பிள்ளையோ ஒரு விசித்திர வக்கீலானார்.

''மகாலிங்கம், கள்ளன், அயோக்யன், குடியன் என்பதற்கு எப்படி ஆதாரம் இருக்கிறதோ அதே போலவே அவன் சாது, யோக்யன், ஏமாந்தவன் என்பதற்கும் ருஜு இருக்கிறது'' என்றார்.

உண்மையிலேயே இது சிக்கலான பிரச்சினைதான், என் நண்பர் கவலைப்படுவதற்குக் காரணம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டேன்.


''வேடிக்கையாக இருக்கிறதே சொல்வது! யோக்யன், அயோக்யன், என்று ஒரே ஆளை எப்படிக் கூறுவது? அமாவாசை பௌர்ணமி தினத்தில் எனக் கூறுவது போல இருக்கிறதே!'' என்று நான் உவமையை உதவிக்கு இழுத்தேன். மருதவாணர், அதிலும் சளைக்கவில்லை. ''பச்சை ஓணான், அடிக்கடி நிறம் மாறும் தெரியுமா?'' என்று கேட்டார். ''ஆமாம்!'' என்று நான் இழுத்தேன். ''என்ன ஆமாம், எதற்கும் ஆமாம் சாமி போடுகிறாய்? ஊரைக் கொளுத்துவது தவறுதானே?'' என்று வேறோர் கேள்வியைக் கேட்டார். திடுக்கிட்டு, ''நிச்சயமாகத் தவறுதான்'' என்றேன். ''தவறுதான்! ஆனால் இலங்காதகனம் புண்ய காரியமாகப் பாவிக்கப்படவில்லையா?'' என்றார் நண்பர். இதேது வம்பு வளர்ந்தபடி இருக்கிறதே என்று அஞ்சி, ''அது வேறு விஷயம்! அரக்கனுடைய ஊரை அனுமார் கொளுத்தினார், அது....'' என்று முடிக்க வேண்டிய அவசியமில்லாத வாசகத்தை வீசினேன். ''அது கடவுள் விஷயம், அதுதானே உன் வாதம்' என்று என் நண்பர் என் வாசகத்தை முடித்துவிட்டு, மேலே பேசலானார்: 'மகாலிங்கம் யோக்யன் தான், அயோக்யனுந்தான்! ஏமாற்றினான் என்பதும் உண்மை, ஏமாந்தான் என்பதும் உண்மைதான்!'' என்றார்.

''எனக்கு விளங்கவில்லையே! கோர்ட்டிலே வந்த சாட்சிகள், அவன் யோக்யன், சாது, ஏமாந்தவன் என்றா சொன்னார்கள்?'' என்று கேட்டேன். ''அதுதானே கிடையாது! கோர்ட்டிலே அவ்வித சாட்சியே கிடையாது'' என்று கூறிவிட்டு, உள்ளே சென்றார்; சில கடிதங்களுடன் வந்து சேர்ந்தார்; ஒன்றை எடுத்தார்.

''இதோ பார், இது குலாப் சந்த் சௌகார் சாட்சியம்.''

''நம்பள் கடையிலேதான் இந்த மனுஷன் வந்தான். கொஞ்சம் இருட்டு. நம்பள் கடையிலேயும் விளக்குச் சரியா இல்லை. எண்ணெய் ரேஷன் காலம். சங்கிலி கொடுத்தான், எத்தனை சவரன்? இது நம்பள் கேட்டது. எடை போட்டுப் பார் சேட்! அவன் சொன்னான். நம்பள்கி சந்தேகம். என்ன? சங்கிலி கொண்டாந்தவன் எடை சொல்லாம ஏன் இருக்கான்னு யோசிச்சான். நாம்பள் சந்தேகம் வந்தார்ச்சா, உடனே போலீசுக்கு ஆள்விடுவான். பத்து வருஷமா நம்பள் வியாபாரம் இப்படித்தான். சாயா சாப்புட்டு வர்ரேன்னு சொல்லி போனேன், 308 கான்ஸ்டெபிள் மூலைக் கடை பக்கம் இருந்தான், கூப்பிட்டு வந்து, காட்டினேன். லாக்கப் ஆனான், நம்பள் ராம்ஜீ தயவிலே ஆபத்திலே மாட்டாமே தப்பினான்.''.

இது மற்றொரு சாட்சி, சதாசிவம் வாக்குமூலம்:



## பெருந்தன்மை மிக்க பெரியார்



...தேன். நான் ஆராயாத இடம் இல்லை என்றே சொல்ல வேண்டும். அப்படிப் பல இடங்களுக்கும் சென்றேன்.

பல பிரிவுகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்டவர்களில் இருக்கும் பள்ளர்கள், பறையர்கள் போல பின்தங்கிய பிரிவில் பல பிரிவுகள் இருக்கின்றன.

ஒட்டர்கள்-வலையர்கள் போன்ற பிரிவினர் கல்வியில்-உத்தியோகங்களில், மிக மிகப் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் முன்னேற்றம் பெற்றாக வேண்டும். அந்த எண்ணத்தில் தான் என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்து இருக்கிறேன்.

அதே சமயத்தில் பின்தங்கிய சமுதாயத்தில் முன்னேறியவர்களும் இருக்கிறார்கள். அவர்களை இதில் இருந்து அகற்றுவதுகூட நல்லது.


இதனை இரண்டு வகையாகச் செய்ய வேண்டும். பின்தங்கிய பிரிவில் முழுமையாக முன்னேறிய சமுதாயம், பின்தங்கியப் பிரிவில் முன்னேறியக் குடும்பம் இப்படிப் பார்த்து அகற்றவேண்டும்.

இதனைத் துணிந்து செயலாற்ற இது வரை இருந்த அரசு இறங்கவில்லை.

பின்தங்கியவர்களுக்கு அரசு தரும் சலுகை ஒரு தலைமுறை பெற்று ஆயிரம், இரண்டாயிரம் மாதம் சம்பாதிக்கிறார் என்ற நிலை ஏற்படும்போது, அடுத்த தலைமுறைக்கு இந்தச் சலுகை அகற்றப்பட வேண்டும்.

அடுத்த தலைமுறை அவர்கள் சொந்தக் காலில் நிற்க வேண்டும். இதையெல்லாம் எனது அறிக்கையில் சொல்லியிருக்கிறேன்.

முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் பிறப்பித்திருக்கும் வருமான வரம்பு உத்தரவு இவைகளையெல்லாம் செயலாக்கமுற்படும்.



இப்போது எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்திருக்கும் வருமான வரம்பு ரூ. 9 ஆயிரம் என்பது போதுமானது ஆகும்.

கிராம மக்கள் முன்னேற வேண்டும் என்று சொல்லுகிறோம். அந்தக் கிராம மக்கள் முன்னேற இந்த உத்தரவு பயன்படும்.

வறுமைக் கோட்டின் கீழே 70 சதவிகித மக்கள் இருக்கிறார்கள். மாதம் ரூ. 100 கூட சம்பாத்தியம் இல்லாதவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பிள்ளைகள் படித்து எப்போது முன்னேறுவது?

தச்சர், கொல்லர், கொல்லத்து வேலை செய்பவர், கூலிவேலை செய்பவர் இப்படி ஏராளம் பேர் இருக்கிறார்கள். இவர்களுக்கு மாதத்தில் பாதி நாள் வேலை கிடைக்காது. விவசாயத் தொழிலாளிகளுக்கு வருடத்தில் சில மாதங்கள்தான் வேலை இருக்கும். மற்ற நாட்களில் வருமானம் இராது.

வீடுகளில் வேலை செய்யும் தாய்மார்கள் மாதம் 15 ரூபாய்க்கு வேலை செய்கிறார்கள். இவர்கள் பிள்ளைகள் எல்லாம் படிக்கவேண்டாமா? முன்னேற வேண்டாமா? இதற்கெல்லாம் முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்திருக்கும் இந்த உத்தரவு வழி செய்யும்.

'இதுதான் ஜனநாயகம்' என்று ஒரு நூலை பல வருடங்களுக்கு முன்பு எழுதினேன். அதற்கு அணிந்துரை கேட்டு, நூலின் பிரதியை தந்தை பெரியார் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அனுப்பி 2 மாதம் ஆயிற்று, 3 மாதம் ஆயிற்று. பெரியாரிடமிருந்து அணிந்துரை வரவில்லை. உடனே, பொறுமையிழந்த நான், ''தங்களின் அணிந்துரை தேவையில்லை. நான் அனுப்பிய பிரதியைத் திருப்பி அனுப்புங்கள்!'' என்று அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். நான் இவ்வாறு கடிதம் எழுதியதை அறிந்த நண்பர்கள் ''இப்படி எழுதலாமா'' என்று என்னிடம் கொதிப்புடன் கேட்டனர். நான் ஒரு பாப காரியத்தைச் செய்துவிட்டதாக அவர்கள் எல்லாம் கருதினார்கள். ஆனால் பெரியார் அவர்கள் அவ்வாறு நினைக்கவில்லை. அணிந்துரை எழுதி-நூலின் பிரதியையும் உடனே அனுப்பிவைத்த பெரியார் ஒரு கடிதத்தையும் எனக்கு எழுதியிருந்தார். அவர் அதில் என்ன குறிப்பிட்டிருந்தார் தெரியுமா?

''சுற்றுப் பயணத்தில் இருந்ததனால் அணிந்துரை எழுதி அனுப்புவதற்குத் தாமதம் ஆகிவிட்டது. மன்னிக்கவும்!'' என்று குறிப்பிட்டிருந்தார்; பெரியாரின் பெருந்தன்மையை அந்தக் கடிதம் தெரிவித்தது!

மாண்புமிகு நிதியமைச்சர்
**திரு கே. மனோகரன்.**

*(சேலத்தில் 1.7.1979ல் நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவில்.)*

## சென்னை நகரில்

## தந்தை

# பெரியார்

## நூற்றாண்டு நிறைவு விழா



தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை நகரில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா செப்டம்பர் 15 ஆம் நாளன்றும், தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா 16, 17 ஆகிய இரு நாட்களிலும் ஒருமித்த விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

செப்டம்பர் 16ந் தேதியன்று காலை வள்ளுவர் கோட்டத்தில் துவக்க இசையுடன் விழா ஆரம்பமாகிறது. விழாத்தொடக்க உரையை அடுத்து, தந்தை பெரியார் கொள்கை விளக்க கருத்தரங்கம் நடைபெறுகிறது. பெரியார் வாழ்க்கையைச் சித்திரிக்கும் கண்காட்சித் திறப்பு விழாவும் தொடர்ந்து நடைபெறும்.

பிற்பகல் மகளிர் அரங்கமும், மாலை கலை நிகழ்ச்சியும் நடைபெறும். இரவு, ராஜாஜி மண்டபத்தின் எதிரில் தந்தை பெரியாரின் வாழ்க்கை விளக்க ஒலி—ஒளி வடிவக் காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து ஒரு மாத காலத்துக்கு இக்காட்சி சென்னையிலும், அதற்குப் பிறகு மற்ற மாவட்டங்களிலும் நடைபெறும்.

17.9.1979 அன்று காலை, வள்ளுவர் கோட்டத்தில் இரண்டாம் நாள் விழா ஆரம்பமாகும். இவ்விழாவின் தொடர்பாக, மாநகராட்சி நேரு விளையாட்டு அரங்கில் மாணவர் விளையாட்டு நிகழ்ச்சி ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிற்பகல் பெரியார் வாழ்க்கையைச் சித்திரிக்கும் சிறப்பு அணி வகுப்பு ஊர்வலம் பூந்தமல்லி நெடுஞ்சாலை காவல்துறை துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு பூந்தமல்லி நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை வழியாக அண்ணா மேம்பாலம் வழி சென்று பெரியார் சிலையை அடையும். பின்னர் அலங்கார வண்டிகள் தீவுத் திடலில் பொது மக்களின் பார்வைக்கு நிறுத்தி வைக்கப்படும். சிறப்பு அணிவகுப்பு ஊர்வலத்தில் தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை இயலையும், கோட்பாடுகளையும் சித்திரிக்கும் 25 அலங்கார வண்டிகளும், மாணவ, மாணவியர், சாரணர், என்.சி.சி, ஊர்க்காவல் படையினர் ஆகியோர் கலந்து கொள்வதோடு தமிழகத்தின் பல்வேறு கிராமிய நடன நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

அன்று சீரணி அரங்கத்தை அடுத்து அமைக்கப்படும் சிறப்பு அரங்கத்தில் சிறப்புக் கூட்டம் மாண்புமிகு முதல்வர் தலைமையில் நடைபெறும்

சிறப்புக்கூட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா மண்டபம், அறிவியல் அரும் பொருட்காட்சி நிலையம் (Science Museum), 94 அடி உயரத்தில் அமையும் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா நிறைவுத்தூண், பெரியார் பொன்மொழிகள் அடங்கிய கல்வெட்டுத்தூண் ஆகியவற்றுக்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெறும்.

''பெரியார் புரட்சி மொழிகள்'', ''பெரியாரியல்'' ஆகிய நூல்களும் வெளியிடப்படும்.

''தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும்'' என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி ஒன்று மாவட்ட அளவில் ஏற்பாடு செய்யப்பட்டு மாநில அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு இரண்டு பரிசுகள் வழங்கப்படும்.

தந்தை பெரியார் நினைவாக சென்னையில் 94 இலட்சம் ரூபாய் செலவில் பிரும்மாண்டமான மண்டபமும் ஒன்று கட்டப்படும். அந்த மண்டபம் டெல்லியில் உள்ள ''விஞ்ஞான் பவன்'' மாதிரி ஒரே நேரத்தில் இரண்டு அல்லது மூன்று பெரிய மாநாடுகள் நடத்துவதற்கு வசதியாக அமைக்கப்படும்.



பரோபகாரி வருகிறார். இவருக்கு வேலை வெட்டி எதற்கு? என்று கண்டித்து அனுப்பி விடுவார்கள். குடும்பமோ பெரிது. அதை நடத்திக்கொண்டு போவதே சிரமம். தன் சக்தியையும் உணராமல் உதவி செய்யும் சுபாவம். அதற்கு வேறு செலவு; இந்த நிலையிலே, நடந்திருக்கிறது இவன் வாழ்க்கை, இச்சமயத்திலே, இவன் அதிருஷ்டச் சீட்டுக் கட்டியிருந்தான். அதிலே நூறு ரூபாய் கிடைத்தது. ஆனந்தமடைந்தான். கடன் தீரும், குடும்பத்துக்குச் சௌகரியமாகும், மற்றவர்களுக்கு உதவி செய்யவும் முடியும் என்று மகிழ்ந்தான்.

அழுக்கு உடையும், தலைவிரி கோலத்துடனும், தள்ளாடி நடந்து கொண்டு, யாரோ ஒருவன் மகாலிங்கத்திடம் வந்து சேர்ந்தான் சனியன்போல, அவனுடைய நிலைமையைக் கண்டதும் மகாலிங்கத்தின் மனம் பாகாக உருகிவிட்டது. ''ஐயோ! சாப்பிட்டு எத்தனை நாளாயிற்றோ? பார்க்கவே பரிதாபமாக இருக்கிறதே!'' என்று சொல்லித் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போயிருக்கிறான். அவன் தண்டச் சோற்றைத் தாராளமாக தின்று விட்டு, ''ஐயா! நான் பர்மாவிலிருந்து கால்நடையாக வந்தவன். ரங்கூனில் பெரிய வியாபாரி. போதாத வேளையால் இந்தக் கோலம் வந்தது'' என்று தன் கதையைக் கூறலானான். பர்மாவிலிருந்து பயங்கரமான ஆபத்துக்குள்ளாகிப் பல மக்கள் வதைபட்டதை மகாலிங்கம் ஏற்கெனவே கேள்விப்பட்டவன். பத்து நாள் அன்னாகாரம் இல்லாமல் அவதிப்பட்டவர்கள்! பாம்பு கடித்து இறந்தவர்கள், பாம்புக்குப் பலியானவர்கள்! காட்டு ஜாதியாரால் கொலையுண்டவர்கள்! என்று பல சோகச் சேதிகளைக் கேட்டிருந்தான். ஆகவே பர்மாவிலிருந்து வந்தேன் என்று சொன்ன உடனே மகாலிங்கத்துக்குக் கண்களிலே நீர் ததும்பிற்று.

வந்தவன், ''என் குடும்பம் அடியோடு நாசமாகி விட்டதப்பா!'' என்றான். மகாலிங்கம் அழுதுவிட்டான். ''எப்படியோ நான் வந்து சேர்ந்தேன். திக்கு இல்லை, திசை தெரியவில்லை. நீ கிடைத்தாய் பழனியாண்டவர் போல'' என்று சொல்லிக் கும்பிட்டான். ''ஐயோ! பெரியவங்க நீங்க இந்தப் பஞ்சைப் பயலைக் கும்பிடக்கூடாதுங்க. நான் என்ன பிரமாதமான உதவி செய்துவிட்டேன் உங்களுக்கு'' என்று மகாலிங்கம் கூறினான். அப்பொதான், வந்தவன், மெதுவாக மடியிலிருந்து, சங்கிலியை எடுத்தான். ''அப்பா இது மூணு சவரன். இதை விற்க வேண்டும். விற்றால் நான், ஊர் போய்ச் சேர்ந்து ஏதாவது கடை வைத்துக் கொண்டு பிழைப்பேன். இந்த ஊருக்கோ நான் புதியவன். கடைவீதிக்கு நகையை எடுத்துக் கொண்டு போனால், சுலபத்திலே வாங்க மாட்டார்கள். அதிலும் நான் இருக்கிற அலங்கோலத்தைக் கண்டால், இது திருட்டுச் சொத்தோ என்றுகூடச் சந்தேகப்படுவார்கள். ஆகையினால் எனக்கொரு உபகாரம் செய். இது மூன்று சவரன். இன்றையவிலையிலேயே இருநூறு ரூபாய் தாளும். எனக்கு ஒரு நூறு ரூபாய் கொடு போதும். சங்கிலியை நீ எடுத்துக் கொள் என்று கெஞ்சினான்.

மகாலிங்கம் மறுக்கவில்லை. அதிர்ஷ்டச் சீட்டுப் பணத்தை அப்படியே அந்தப் பர்மா அகதிக்குக் கொடுத்தனுப்பி விட்டான். அந்தச் சங்கிலியைத்தான் பிறகு, மார்வாடி கடையிலே விற்க வந்தான், பிடிபட்டான்.


இது மகாலிங்கத்தின் மனைவி, தன் நாலு மக்களோடு என் காலிலே விழுந்து சொன்ன வாக்கு மூலம் என்றார். நான் சந்தோஷத்தால் துள்ளிக் குதித்து, ''இந்த வாக்குமூலத்தைக் கொண்டே மகாலிங்கத்தை விடுவித்து விடலாமே'' என்று சொன்னேன். மருதவாணர் சிரித்துக் கொண்டே, ''குற்றவாளியின் மனைவியின் வாக்கு மூலத்தைக் கொண்டே எப்படித் தீர்ப்பளிக்க முடியும்? சட்டம் இடந்தராதே. மேலும் பர்மா அகதியாக நடித்தவன் யார் என்று தெரியவில்லை. அது மட்டுமல்ல, முலாம் பூசுவதற்கான சாமான்கள் மகாலிங்கத்தின் வீட்டிலேயிருந்து போலீசார் கண்டுபிடித்து எடுத்திருக்கிறார்கள்'' என்று கூறினார்.

''அந்தப் பர்மா அகதியாக வந்த புரட்டனே, முலாம் பூசும் சாமானை அங்கே வைத்திருப்பான்'' என்று நான் கூறுகிறேன்.

''இருக்கலாம்! ருஜு வேண்டுமே! மகாலிங்கம் நிரந்தரமான தொழிலற்றவன். அவன் முலாம் பூசிய நகையை விற்க முயற்சித்தான். அதை அவனே ஒப்புக் கொள்கிறான். அவன் வீட்டிலே முலாம் போடும் கருவி கிடைத்தது. தண்டனைக்கு ஏற்றபடி ருஜுக்கள் உள்ளனவே, நான் என்ன செய்வது?'' என்று கேட்டார்.

''சிக்கலான பிரச்சினைதான்!'' என்று மட்டுமே என்னால் சொல்ல முடிந்தது. நானா, தீர்ப்பளிக்க வேண்டியவன்! என் தீர்ப்பு நெடுநாட்களுக்குமுன்பே பதிவாகிவிட்டது. ஒரு வழக்குக்கு மட்டுமல்ல, பொதுவாகவே அதாவது, ஏழைகள் செய்யும் குற்றங்களுக்குக் காரணம் அவர்களின் ஏழ்மை, ஆகவே, தண்டிக்கப்பட வேண்டியது ஆட்களல்ல பொருளாதார பேத அமைப்பு முறை. இது என் தீர்ப்பு! ஆனால் மாஜிஸ்ட்ரேட் மருதவாணம் பிள்ளை, சட்டப்படி, இந்த மகாலிங்கம் வழக்கிலே, என்ன தீர்ப்பு அளிப்பது என்று கேட்கிறார்! சொல்லுங்கள் பார்ப்போம்!!

## இப்படித்தான் எழுதுவார் அண்ணா



பேரறிஞர் அண்ணா அவர்கள் காலை மடக்கிப் போட்டுக் கொண்டு உட்கார்ந்த நிலையில் இருந்து எழுதுவதைத் தான் பெரும்பாலும் விரும்புவார்கள். தனித்தனி தாள்களைக் கத்தை கத்தையாக நறுக்கிவைத்துக்கொண்டு எழுதி எழுதித் தாள்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டே வருவதுதான் அவரது பழக்கம்.

இரவு பன்னிரண்டு மணிக்குமேல் விடியற் காலை ஆறு மணிக்குள் இடைப்பட்ட நேரத்தில், அதாவது ஊரடங்கிய அமைதியான நேரத்தில் எழுதுவதுதான் அவர்களுக்குப் பிடித்தமானதாக இருக்கும்.

பேனா பிடித்த அவரது கை நகர்ந்து கொண்டேயிருக்கும், எழுதப்பட்ட தாள்கள் பக்கத்தில் ஒன்றின்மேல் ஒன்று விழுந்து கொண்டேயிருக்கும், மிகவான அடித்தல் திருத்தல் இல்லாமல் - கட்டுரையோ - கதையோ - நாடகமோ - திரைக்கதை உரைநடையோ - அறிக்கையோ அறிவிப்போ ஓடிக்கொண்டேயிருக்கும்.



# பெரியாரின் துணிச்சல்

ஏ.பி. சனார்த்தனம், எம்.பி.

பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாக்களில் பெரியாரின் சிறப்பியல்புகள், சாதனைகள் இவை குறித்து கவியரங்கங்களிலும், கருத்தரங்கங்களிலும், சிறப்புக் கூட்டங்களிலும் கடல் மடை திறந்தது போல் நிறைய பேர் முழங்கியிருக்கிறார்கள். பல இடங்களில் கேட்டுக் கேட்டு மகிழ்ச்சியில் திளைத்தேன்.

1934லிருந்து 1973 வரை பெரியார் என்னை முடுக்கிவிட்டார். அவர்து கருத்துக்களை எடுத்து விளக்குவதில், அவற்றிற்காக வாழ்வதில், துடிப்பதில், நான் என் வாழ்க்கையின் பயனைக் காண்கிறேன்.

கடந்த இரண்டாண்டுகளாகப் புதுதில்லியில் பெரியாரின் பெருமைகளைப்பல மாநிலத்தார்க்கும் எடுத்துச் சொல்கிறேன். அவரது சாதனைகளைக் கேட்டு வாய் பிளந்து நிற்கின்றனர். அவருடன் தொண்டாற்றிய நம்மை மிகவும் பாராட்டுகின்றனர். அவரது கருத்துக்கள் தத்தம் மொழிகளில் தரப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர்.

அவர் கல்லூரி காணாதவர், ஆனால், சிறந்த சிந்தனையாளர் என்னும்போது அவர்களது ஆர்வம் பெருகுகின்றது.

அவரது உழைப்பு அறுபது ஆண்டுகட்கு மேல் நீண்டது என்னும்போது அவரை வாய்விட்டுப் புகழ்கின்றனர்.

1920 — அந்தக் காலக்கட்டத்தில் அவர் மிக அழுத்தமான காந்திய வெறியராக இருந்தார், தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தார். கோர்ட்டுக்குப் போக கூடாது என்ற ஆர்வத்தில் பாண்டுகளைக் கிழித்தெறிந்தார். தோளில் இராட்டை சுமந்து கதர் விற்பனைக்கு ஊக்கமளித்தார். இந்தியாவிலேயே முதன் முறையாகப் பெண்களைச் சிறைக்கனுப்பியது, அதுவும் தன் மனைவி, தங்கையை, என்றெல்லாம் எடுத்துக்காட்டும்போது காந்திய வாதிகள் நெகிழ்கின்றனர்.

1930லேயே ரஷ்யாவுக்குச் சென்று வந்தவர்; அறிஞர் சிங்காரவேலு அவர்களின் கட்டுரைகளைக் 'குடி அரசி'ல் வெளியிட்டவர்; பிறவி முதலாளித்துவத்தைக் கடுமையாக எதிர்த்தவர்; லெனின் கருத்துரைகளை அச்சிட்டுப்புத்தமாக வெளியிட்டவர், என்னும் போது கம்யூனிஸ்டுத் தோழர்கள் பெரியாரை வாழ்த்துகின்றனர்.

பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோருக்காகக் காலமெல்லாம் போராடியவர், வைக்கம் முதல் தமிழ்நாட்டுக் கோவில் வரை பல களங்களைக் கண்டவர், புராணப் புரட்டுகளைப் பிட்டுப் பிட்டுக் காட்டியவர், சாதிப் படைக்குப் பகுத்தறிவு மருந்து தந்தவர், என்னும்போது, "இப்பக்கங்களில் நாங்கள் இப்போது இவைகளுக்காகத் துடிக்கிறோம். பெரியாரின் தொண்டு எங்களுக்கு எடுத்துக் காட்டாக ஊக்கமளிக்கிறது" என்று பாராட்டுகிறார்கள்.

பெரியார் எவ்வளவு எளிமையைக் கடைப்பிடித்தார், எப்படி 90 வயதிலும் வசதி தேடாது ஊர் ஊராகப் பம்பரம் போல் சுற்றினார் என்பதைச் சொல்லும் போது நம்மை மனந்திறந்து பாராட்டுகிறார்கள். தங்கள் பகுதிகளில் பெரியார் இல்லாததால் இன்னமும் பழமைப்பிடி, சாதிவெறி மிகவும் இறுக்கமாக இருப்பதை எடுத்துக்காட்டுகிறார்கள்.

தெளிவில், உறுதியில், நம் சமூகப். பிரச்சினைகளின் ஆணி வேரையே அசைத்துக்காட்டியதில் பெரியார் புத்தரைப்போல், என்னும்போது, உண்மைதான் என ஏற்றுக் கொள்கின்றனர்.

பெரியாரைச் சாக்ரடீசுக்கு, பெர்ட்ராண்டு ரசலுக்கு, பெர்னாட்ஷாவுக்கு, இங்கர்சாலுக்கு, பிராட்லாவுக்கு ஒப்பிட்டுப்பேசும் போது ஆர்வமுடன் அவரைக் குறித்து மேன்மேலும் அறியத் துடிக்கிறார்கள்.

என்னால் இயன்றவரை ஆங்கிலத்தில் பலரிடம் பெரியார் முரசு தட்டுவது எனக்கு மிகவும் நிறைவைத் தருகிறது. பெரியாருக்குப் புரட்சித் தலைவர் விழா எடுப்பதை விளக்கும்போது உவகை மேலிடுகிறது.

பெரியாரின் சிறப்பியல்புகள் பலப்பல. நாணயம், சிக்கனம், மாற்றாரையும் மதித்துப் பழகும் பண்பு, காலந்தவறாமை, பம்பரம் போல் உழைத்தல், எளிமை, இப்படிப்பட்ட அருங்குணங்கள் அவரது அணிகலன்கள்.

அவரது தெளிந்த அறிவு, ஆராய்ச்சி, உண்மை நாடல், உலகப் பள்ளியில் தேர்ச்சி இவை வியக்கத்தக்கனவாம்.

ஆனால், அவரது அத்தனைச் சிறப்புக்களிலும் என்னை மிகவும் கவர்ந்ததும், அவரை இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இராவணனாக, மடமைக்கு வேட்டு வைத்த மாவீரராக, புத்தருக்குப்பின் பழமை, பிறவி முதலாளித்துவத்தின் முதுகெலும்பை முறிக்கத் துடித்தவராக முடுக்கிவிட்டது அவரது துணிச்சல், அஞ்சாமைதான். பத்தாம் பசலிகளை, பஞ்சாங்கக் குழுக்களை, குள்ளநரிக் கூத்துக்களை, மூவாயிரம் ஆண்டு மூடநம்பிக்கை முட்புதர்களை, மடமை இருட்காட்டை, தன் பகுத்தறிவுத் தாக்குதல்களால் தவிடுபொடியாக்கிய இந்த ஈரோட்டுச் சிங்கத்தின் துணிச்சல் உலக வரலாற்றிலேயே மிகவும் உயர்ந்த இடத்தைப் பெறுவது. சிறு துரும்பு கூட தயக்கமில்லாமல், விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் லாபநட்டக்கணக்குப் போடாமல்

அவர் களத்தில் குதித்தார்
நாடு தெளிவு, ஊக்கம்
எழுச்சி, உணர்ச்சி, உறுதி
புதுவாழ்வு பெற்றது!



பெரியார் வாழ்க!


''தங்க முலாம் பூசிய சங்கிலியை விற்றுத் தந்தால் எனக்குப பாதி பாகம் தருவதாக மகாலிங்கம் என்னைக் கூப்பிட்டான், சங்கிலியையும் காட்டினான். நான் இம்மாதிரி திருட்டுக் 'காரியத்துக்கு உடந்தையாக இருக்க முடியாதென்று சொல்லிவிட்டேன்.'

308ஆம் நம்பர் கான்ஸ்டெபிள், ''சேட் வந்தழைத்ததும், நான் கடைக்குப் போனேன். என்னைப் பார்த்த உடனே இவன் முகத்திலே பயம் வந்து விட்டது. ஏதடா சங்கிலி என்று கேட்டேன். பதில் சொல்லாமல் மரம் போலிருந்தான். இதற்குள் சேட் உரைத்துப் பார்த்து, அரேரே! இது பொன் இல்லை, பித்தளை என்று சொன்னார். உடனே இவனை லாக்கப் செய்தேன்'' இப்படியே சாட்சியங்கள் உள்ளன—என்று மருதவாணர் கூறிவிட்டு, ஆயாசத்தோடு இருந்தார். இவ்வளவு வெள்ளையாக வழக்கு இருக்க இவர் ஏன் வேதனைப்படுகிறார் என்பது விளங்கவில்லை எனக்கு.

''சரியானபடி சிக்கிக் கொண்டிருக்கிறான். இனி என்ன இருக்கிறது நான் கூற'' என்று சொன்னேன்.

** ** **

''எனக்கோ கடுமையான ஜுரம்! வைத்தியர்கூட மிரண்டுவிட்டார். மார்புச் சளி அதிகமாக இருக்கிறது. சுவாசம் வருவதுகூடச் சிரமமாக இருக்கிறது என்று கூறினார். என் மனைவி என்ன செய்வாள்? அவள் மேலே, ஒரு நகையும் கிடையாது. இருந்தது ஒரு வளையல், அது போனமாதம் தீர்ந்து விட்டது. வீட்டிலே பாத்திரங்கள் கூடக் கிடையாது. இந்த நிலையிலே, பத்து ரூபாயாகும் ஊசி போட என்று டாக்டர் கூறிவிட்டார். கையிலே பணம் வந்தாக வேண்டும் என்றார். நிர்க்கதியாக விடப்பட்ட நான், பிராண அவஸ்தையிலே இருப்பதை எடுத்துச் சொல்லி, நான் வண்டியோட்டும் முதலாளியிடம் போய் அழுதாள் என் மனைவி. பத்து நாளாகப் படுத்த படுக்கையாக இருக்கிறேனே பாதிப் பிராணன் போய் விட்டதே என்று ஈவு இரக்கம் கொஞ்சமும் இன்றி, அந்தக் கொலைகாரப் பாதகன், 'ஒரு பைசாகூடத் தர முடியாது, அவன் ஏற்கெனவே ஆறு ரூபாய் பாக்கி' என்று கூறி விட்டான். மாங்கலியப் பிச்சை தர வேண்டும் என்று என் மனைவி கேட்டாளாம். அதற்குக் 'கோயில்' கூற்று என்று சொல்லித் துரத்தி விட்டானாம்! மாடாக உழைத்தேன், எனக்கு உயிர் போ





கிறது என்றால் பத்து ரூபாய் தர மறுத்து விட்டான். இப்படிப் பட்ட கன்னெஞ்சர்கள் வாழ்கிறார்கள். கஷ்டாளிகள் கால் வயிற்றுக்குக் கால முழுதும் உழைக்கிறார்கள், சரி, சாக வேண்டியதுதான் என்று எண்ணி ஏங்கினேன். நான் மாண்டு போனால் மங்காவின் கதி என்னாகும்? என் ரங்கன், நாலு வயதுப் பையன், அவன் தெருவிலே அலைவான். இந்த இலட்சணத்திலே அவள் எட்டாம் மாதம்! இந்த உலகிலே, என்னைக் காப்பாற்ற, மரணத்திலிருந்து என்னைத் தப்பவைக்க யாரும் இல்லை, மங்கா அழுதவள், அழுதபடியே இருந்தாள்.

அந்த நேரத்திலே. புண்ய மூர்த்தி மகாலிங்கம் வந்தான். அவன் பூர்ணாயுசுடன் நோய் நொடியின்றி வாழ வேண்டும். என் நிலைமையைக் கண்டதும், கோவெனக் கதறினான், ''வரதா! உனக்கு இவ்வளவு அதிகமாக ஜுரம் என்று எனக்குத் தெரியாமல் போச்சே'' என்று விசனித்தான். ''அக்கா! அழாதே. ஆண்டவன் நல்லவழி காட்டுவார்'' என்று என் மனைவிக்குத் தேறுதல் கூறினான். அவனுடைய அன்பு எனக்கு ஆயிரம் டாக்டர்களின் உதவியை விட மேலானதாக இருந்தது. உயிருக்கு ஊசலாடிக் கொண்டு, ஊரிலே ஒருவர் உதவியின்றி, வேலை செய்து வந்த இடத்திலே கைவிடப்பட்ட இந்தத் தர்மக்கட்டையிடம் தயை காட்டி, ஆறுதல் கூறினான். அவனுடைய தர்ம சிந்தனையைப் பார்த்தபோது, கைதூக்கிக் கும்பிட்டேன். அதுவரையிலே அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தைக் கொட்டினாள் என் மனைவி.

''ஆண்டவன் எனக்கு என்ன வழியப்பா காட்டப் போகிறார்? ஆண்டவன் இருக்கிறானா? எங்கே இருக்கிறான்! இதோ என் புருஷர் வதைகிறார். கண்ணைத் திறக்கிறேன்; கலம் தண்ணீர் விடுகிறேன். தெய்வம் என்ன செய்கிறது? தெருவிலே ஏழைகளை அலைய வைக்கிறது. தெய்வமாம் தெய்வம்! திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணை என்பது பாட்டி கதை'' என்று அழுது கொண்டே கூறினாள்.

''அழாதே அக்கா! ஆண்டவன் இருந்துதான், என்னை இங்கே அனுப்பி வைத்தார்'' என்று சொன்னான் அந்தச் சாந்தமூர்த்தி. 'ஆமாம், உன்னைப் போல, ஈரமுள்ள நெஞ்சுகொண்டவர்கள் வந்துதான் ஆண்டவனின் மானத்தைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது'' என்று அவள் பதறிப் பேசினாள். பத்து ரூபாய் கேட்கிறார் டாக்டர் என்பதைக் கூறினாள். பத்து ரூபாய் என்றதும் பாவம், மகாலிங்கம், பயந்து போனான்; அவனிடம் ஏது அவ்வளவு பணம்? அவன் என்னைப் போல் ஒரு ஏழை. எனக்காவது ஒரு குழந்தை. அவனுக்கு நாலு. எனக்கு ஒரு இடம் இருந்தது வேலை செய்ய, அவனுக்கு ஒரு வேலையும் நிலையாக இருப்பதில்லை. நோயாளி மனைவி, வயதான தாய், வருமானம் கட்டை. இந்த இலட்சணத்தில் பத்து ரூபாய் தர முடியுமா அவனுக்கு? அப்பா! நீ பக்கத்திலே இருந்தாலே போதும், பத்து ஆயிரம் கொடுத்த மாதிரிதான். என் பிராணன் போகிற சமயத்திலே உன்னைப் போன்ற ஒரு உத்தம சிநேகிதன் பக்கத்திலே இருந்தால், அதுவே என் மரண வேதனையைக் குறைக்கும் என்று நான் ஈனக்குரலிலே கூறினேன். எழுந்தான். ''இதோ வருகிறேன் என்றான். வெளியே போனான்.

வேதனையைக் காணச் சகியாமல் வெளியே போனான் என்று நான் நினைத்தேன். அரைமணி நேரத்திற்கெல்லாம் டாக்டருடன் வந்தான். ஊசி போட்டார். என்னைப் பணம் கேட்கவில்லை. அதிலிருந்து ஜுரம் படிப்படியாகக் குறையத் தொடங்கிற்று. நான் எழுந்து நடமாடும் சக்தி பெறுகிறவரையிலே, ரொட்டியும் அவன்தான் வாங்கித்தந்தான்.

'ஏது மகாலிங்கம் பணம்?' என்று எத்தனையோ தடவை கேட்டேன். பதிலே சொல்லவில்லை. அந்தத் தர்மசீலன், தயாளமூர்த்தி, புண்யாத்மா, அவதார புருஷன், என் உயிரைக் காப்பாற்றினான். ஏழைக்கு ஏழை உதவி; ஏழையே, ஏழைக்கு உயிர் கொடுக்கும் தெய்வம். மகாலிங்கம், சாதாரணப் பிறப்பல்ல. அவன் தெய்வப் பிறப்பு.''

''இது, வண்டிக்கார வரதன் வாக்குமூலம்-கோர்ட்டில்சொன்னதல்ல. என்னிடம் நேரில் சொன்னான், காலில் விழுந்து, 'எப்படியாவது அந்தக் காருண்யவானைக் காப்பாற்ற வேண்டும்'' என்று கெஞ்சிக் கேட்டான்.

''உண்மையிலேயே ஒரு டாக்டருக்கு, ஒரு உயிர் போகுமே, நம்மாலான உதவி செய்வோம் என்ற எண்ணம் தோன்றவில்லை. நம்மிடம் நாய்போலக் கிடந்தானே. உயிருக்கே ஆபத்தாக இருக்கிறதாமே, ஒரு பத்துரூபாய் கடன் தருவோம் என்ற எண்ணம் ஒரு பணக்காரனுக்குத் தோன்றவில்லை. பராரி மகாலிங்கத்தின் மனத்திலே, அவ்வளவு அன்பு ததும்பி இருந்தது. ஒரு உயிர் துடிப்பதைக் கண்டு அவன் துடித்தான். ஒரு குடும்பத்தின் கண்ணீரைக் கண்டு கலங்கினான். மகாலிங்கம், யோக்யன், தர்மவான், குணசீலன், அந்த வரதன் சொன்னதுபோல அவன் தெய்வப் பிறப்பு-என்று இந்த வாக்குமூலம் ஒன்றைக்கொண்டே சொல்லிவிடலாம்'' என்று கூறிவிட்டுப் பெருமூச்செறிந்தார். மாஜிஸ்ட்ரேட்.

நான் ஆச்சரியத்தால் என்னையே மறந்தேன். ''மகாலிங்கம் எவ்வளவு பெரிய கர்மயோகி! அவன் மனத்திலே எவ்வளவு கருணை! அவனுடைய செயல் எவ்வளவு சிலாக்கியமானது!'' என்று புகழ்ந்தேன்.

''ஆனால் மறந்து விடாதே, மகாலிங்கம் செய்திருக்கும் குற்றத்தை'' என்று மாஜிஸ்ட்ரேட் கவனப்படுத்தினார். 'ஆம்! அவன் தண்டிக்கப்பட வேண்டியவன்' என்பதை நினைத்ததும், என் உடல் குலுங்கிற்று. இப்படிப் பட்டவனுக்குத் தண்டனை!! அவன் காட்டிய சினேக வாஞ்சை, மனிதாபிமானம், ஆபத்தில் உதவுதல், இவைகளுக்குப் பரிசு கிடையாதா? இவைகளைக் கவனிப்பார் இல்லையா? இல்லை! ஏன்? அவன் திருடன்! தியாக புருஷன் திருடனானான்! பௌர்ணமியிலே அமாவாசை இருக்க முடியுமா என்று நான் கேட்டேன் பைத்யக்காரத்தனமாக! இதோ இருக்கிறதே!! கருணையைப் பொழிந்த மகாலிங்கம் களவாடியிருக்கிறான்!!

''இன்னொரு வாக்குமூலம் கேள்: 'தர்மதுரையே! மகாலிங்கம் மகாயோக்யனுங்க. பெரிய குடும்பம். பிழைப்புக்காக, யார் காலால் இட்ட வேலையையும் தலையால் செய்பவனுங்க என் மகன். அவன் சின்ன வயசிலிருந்தே யோக்யனுங்க. கஷ்ட ஜீவனம். 'அந்தக் கஷ்ட ஜீவனத்திலேயும், பசி என்று சொல்லி, யாராவது வந்து விட்டால் போதுங்க, தன் வயிற்றுக்குப் போதாவிட்டாலும்பரவாயில்லை என்று சொல்லி அவர்களுக்குச் சோறு போடுவானுங்க. கெட்ட நினைப்பே கிடையாதுங்க. அவனை நீங்க காப்பாற்றாமே போனா நாலு குழந்தையோடு அவன் பெண்ஜாதி நடுத் தெருவிலே நிற்கும். நானும் அப்படித்தான். வயசு அறுபதுக்கு மேலே ஆகுதுங்க' என்று கூறி என் காலில் விழுந்து அழுதாள் மகாலிங்கத்தின் தாய்.

அவள் வாக்குமூலத்திலிருந்து மகாலிங்கம், சாது, யோக்யன், அன்பு காட்டுபவன் என்று ஏற்படுகிறது. ஆனால் வழக்கோ விளக்கமாக இருக்கிறது; அவன் கள்ளன், அவனே குற்றத்தை ஒப்புக்கொண்டுமிருக்கிறான். இப்படிப் பட்ட யோக்யன் ஏன் அயோக்யனானான்!'' என்று மருதவாணர் கேட்டார். ''எனக்குத் தலை சுழலுகிறது இதைக் கேட்கக் கேட்க'' என்று நான் சொன்னேன், உண்மையாகவே எனக்கு அப்படித்தான் இருந்தது.


''நம்ம வீட்டுத் தோட்டக்காரன் இருக்கிறானே துரைசாமி, அவன் சொன்னதோ இதைவிட அதிகம். மகாலிங்கம், எப்போதும் ஏழைகளுக்கு உதவி செய்வானாம். யாராவது வீதியிலே தூக்க முடியாமல் பாரமான மூட்டையை வைத்துக் கொண்டு கஷ்டப்பட்டால் அவன் தான், உதவிக்கு வருவானாம். போக்கிரி எவனாவது யாரிடமாவது வம்புக்குப் போனால், இவன் போய்ச் சமாதானம் செய்வானாம், அந்தப் போக்கிரி அடித்தால்கூடப் பட்டுக் கொள்வானாம். அனாதைகள் இருந்தால், வீடு வீடாகப் பிடி சோறு எடுத்து அவர்களுக்கு உணவளிப்பானாம்.

ஒரு தடவை, நம்ம தோட்டத்திலே தேங்காய் திருடிவிட்டானாம் எவனோ, மகாலிங்கந்தான் திருடினான் என்று நினைத்துக் கொண்டு, துரைசாமி மகாலிங்கத்தைச் சண்டைக்கு இழுத்துப் பலமாக அடித்து விட்டானாம். மகாலிங்கம் அவ்வளவு அடியும் பட்டுக் கொண்டு, சத்தியமாக நான் திருடவில்லை என்று சொன்னானாம். கடைசியில் திருடன் வேறு ஒருவன் என்று தெரிந்ததாம். நம்ம துரைசாமிக்கு மனந்தாளாமல், மகாலிங்கத்திடம் போய் மன்னிப்புக் கேட்டானாம். ''இது என்ன பிரமாதம்! என்னமோ விஷக்கடி வேலை'' என்று மகாலிங்கம் பொறுமையாகப் பேசினானாம்.

அப்படிப்பட்ட பொறுமைசாலியை நான் கண்டதே கிடையாதுங்க. ரொம்ப யோக்யன். எப்போதாவது அதிகக்கஷ்டமான வேலை செய்தால், குடிப்பான். ஆனால் குடித்துவிட்டுக் கூத்தாடுகிறவனுமல்ல. 'என் கையிலே பணம் ஏராளமாக இருந்தால் ஏழைகளுக்கெல்லாம் உபகாரம் செய்வேன். நான் இல்லாதவன். என்ன செய்வது' என்று ஏக்கப்படுவானாம் மகாலிங்கம்'' என்று கூறினார் மாஜிஸ்ட்ரேட், துரைசாமி சொன்னான் என்று.

''ஐயோ பாவம்! இப்படிப் பட்டவனுக்கு ஏன் கெட்ட எண்ணம் பிறந்தது'' என்று நான் பரிதாபத்துடன் கேட்டேன்.

''அதை ஏன் கேட்கிறாய்? அதைச் சொன்னால் நீ மூர்ச்சையாகி விடுவாய், எங்கெங்கு விசாரம் இருந்ததோ அங்கெல்லாம் மகாலிங்கம் முன்னாலே நின்று உதவி செய்வான். நோயாளிக்கு மருந்து வாங்கித் தருவான். ஏழையின் வீடு இடிந்தால், இவன் கூலி இல்லாமல், வெறும் கூழுக்கே வேலை செய்வான், குழந்தை ஏதாவது தவறி வந்து விட்டது. என்றால், வீடு கண்டுபிடித்துக் கொண்டு போய்ச் சேர்க்கிற வரையிலே, வேறு வேலையைக் கவனிக்க மாட்டான். இப்படி மற்றவர்களுக்கு உதவி செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்ததால் அவனுக்குக் கிடைக்கும் வேலையும் நிலைப்பதில்லை.









லண்டன் நகரிலே ஒரு தமிழ்ப் பள்ளி; வாரத்திற்கு ஒரு நாள் தமிழ் கற்றுத்தரப் படுகிறது அங்கே. பள்ளியின் பெயர் என்ன தெரியுமா? **இராமசாமி பள்ளி.**

தந்தை பெரியாரின் பெயரால் நடத்தப் பெறும் இந்தப் பள்ளியை உருவாக்கித் திறம்பட நடத்தி வருகிறார் சி. சுப்ரமணியம் என்னும் தமிழர்.

ஈழத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி. ராஜம்மா தம்பதியரின் மகனான இவர், சீர்திருத்த நோக்கம் கொண்டவர்; தந்தை பெரியாரின் தத்துவங்களில் பெரும் பற்றுக் கொண்டவர். இன்றுபெரியாரின் சுயமரியாதைக் கருத்துக்களை லண்டன் நகரத்தில் பரவச் செய்யும் தொண்டினைப் புரிந்து வருகிறார். தந்தை பெரியார் ஆதரித்து வந்த - வலியுறுத்திச் சொன்ன கலப்பு மணக்கொள்கையை மனப்பூர்வமாக ஏற்று லண்டனில் ஆங்கில இனத்துப் பெண்ணான BERNADETTE என்பவரை மணந்து கொண்டவர்.

சுப்ரமணியத்தின் தந்தையாரும் பெரியாரின் மீது மாறாத பற்றுக் கொண்டவர். அதனால் தந்தை டெரியாரைச் சந்திக்குமாறு ஒரு கடிதம் கொடுத்து, தம் மகனைச் சென்னைக்கு அனுப்பி வைத்தார். சுப்ரமணியம், பெரியாரைச் சந்தித்து, அவரது வீட்டில் சில காலம் தங்கியிருந்தார். அப்போது சுப்ரமணியத்துக்கு வயது 14. அப்போதெல்லாம் தந்தை பெரியாரின் தத்துவம் அவருக்குப் பிடிபடவில்லை. லண்டனுக்குச் சென்று அங்கு கல்லூரியில் தத்துவத்தை (Philosophy) பாடமாகப் படித்தபோது தான் பெரியாரின் புதுமைக் கருத்துகள் அவருக்குத் தெளிவாகப் புரிந்தன. அதன் பின்னர் ,பெரியாரின் தத்துவங்களில் அசைக்க முடியாத நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டு, அய்யாவின் கொள்கையை மனப்பூர்வமாக இதயத்தில் ஏந்தி வருகிறார்.



தற்சமயம் தென் கிழக்கு லண்டன் கல்லூரியில் பொருளாதாரத்தைப் பயிற்றுவிக்கும் சுப்ரமணியம் பிரிட்டனில் உள்ள கடல் கடந்த இந்தியர் சங்கத்தின் தலைவராகவும் லண்டன் போர்க்குவரத்துத் துறை, (London Transport Authority) போக்குவரத்துப் பயணிகளின் குழு ( Passengers.' Transport Committee) ஆகியவற்றில் உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

பிரிட்டனில் உள்ள தொழிற் கட்சியில் 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பங்கேற்றிருந்த இவர், பல்வேறு பொது நிறுவனங்களிலும் பங்கேற்றுப் பெரும் வரலாற்றைப் படைத்திருக்கிறார். அல்ஜீரியா அதிபரின் அரசியல் ஆலோசகராகவும் இவர் இருந்திருக்கிறார்.

தமிழகத்தில் வாழ்ந்து வந்த காலத்தில் பல்வேறு பத்திரிகைகளில் பணி புரிந்து அனுபவம் பெற்றிருக்கிறார். லண்டனில் உள்ள பல்வேறு இதழ்களிலும் கட்டுரைகள் எழுதி வருவதுடன், வானொலி - தொலைக்காட்சி ஆகியவற்றில் அவ்வப்போது உரையாற்றி வருகிறார்.

''திராவிட சமுதாயம் இணையற்ற வரலாறு படைத்திருக்கிறது. லண்டனில் உள்ள திராவிட அறக்கட்டளை ( Dravida Charity) என்னும் நிறுவனத்தின் வாயிலாக, திராவிடப் பண்பாட்டையும், திராவிட இயக்கக் கருத்துக்களையும் நாங்கள் பிரச்சாரம் செய்து வருகின்றோம். உலகத்தில் உள்ள திராவிட மக்களுக்கு உழைப்பதுதான் இதன் இலட்சியம். இது, முறையான நிறுவனம். அரசினரால் அனுமதிக்கப்பட்ட நிறுவனம். திராவிட சமுதாயம் விஞ்ஞானமுறையில் முன்னேறுவதற்கு வேண்டிய பல்வேறு உதவிகளையும் இது செய்து வருகிறது'' என்று குறிப்பிடுவதன் மூலம் ,கடல் கடந்து சென்று, வெளிநாடுகளில் வாழும் திராவிட இனத்தவர் எல்லாரும் திராவிட சமுதாயத்துக்குத் தேவையான தொண்டு செய்து-நிலையான வரலாற்றை உருவாக்க வேண்டும் எனத்தெளிவாகஉணர்த்துகிறார் சுப்ரமணியம்.

# சொல்லழகர் அண்ணா

வாணிதாசன்




கடல்மல்லைத் திருநாட்டுக் காஞ்சிதந்த செம்மல்!
கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பேற்றும் நீண்ட
மடற்றாழை மலர்மணந்து வருந்தென்றற் காற்று!
வளர்புன்னைப் பூவிருந்து வண்டெழுப்பும் பாடல்
இடமகன்ற தமிழகத்தின் இருள்போக்கி வானில்
எழுந்தசுடர்! மாற்றாரும் எண்ணியெண்ணி ஏங்க
நடமாடும் அறிவூற்று! தமிழகத்தில் வாய்த்த
நல்லறிஞர்! சொல்லழகர் எங்களரும் அண்ணா

அலைபிறந்த முத்தாரம்! அழகுமணிக் கோவை!
அடர்தென்னை மரத்தோப்பு சுவைஇளநீர்க் காய்கள்
மலைபிறந்த நீள்அருவி! மயிலாடு பாறை!
வள்ளுவனார் உலகளித்த குறட்பாக்கள்! நீண்ட
குலைபிறந்த செவ்வாழை! குளிர்ந்தமலர் ஓடை!
குழலோசை! தமிழ்நாட்டுக் கொடுமைக்கு வேட்டு!
கலைபிறந்த தமிழகத்தின் அரசுக்கு வாய்த்த
கதிர்க்கோமான் சொல்லழகர் எங்களரும் அண்ணா!

முகம்தந்த இளஞ்சிரிப்பு! மூதறிஞர் நெற்றி
முனிவில்லா ஒளிக்கண்கள் போக்கின் எண்ணம்!
அகம்தந்த தமிழ்ச்சுவையே அடுக்குமொழிப் பேச்சாம்!
அன்புள்ளம் அறச்செயலே அவர்வாழ்வின் நோக்கம்!
பகைதந்த ஏச்செல்லாம் பதறாமல் ஏற்கும்
பண்பாளர்! அன்பாலே பகைவெல்லும் சூரர்!
வகைதந்த அறிவாலே தமிழகத்தை ஆண்ட
வழிகாட்டி! சொல்லழகர் எங்களரும் அண்ணா!

கற்றவர்கள் வியக்கின்ற தனித்தமிழ்மா மேதை!
கலையுலகில் எழுத்துலகில் தனிப்பாதை காட்டி
மற்றவர்கள் துயர்காணின் மனங்கலங்கும் நெஞ்சர்!
வாய்இனிக்க செவிஇனிக்க வாதாடும் செம்மல்!
நற்றமிழ்த்தாய் ஈன்றுலக நாட்டிற்கே தந்த
நல்லோருள் நமதண்ணா வல்லவராம் கண்டீர்!
பெற்றோர்கள் பெயர்வாழ்த்த பெரும்புகழைச் சேர்த்த
பேரறிஞர் சொல்லழகர் எங்களரும் அண்ணா!

# நம்பிக்கைக் குன்றம்



டாக்டர்

இப்படி ஒருவர் இருந்தார் என்றும்
இன்னின் னவைகள் புரிந்தார் என்றும்
இருநூறு ஆண்டு கழிந்தபின் சொன்னால்
எவரும் நம்பார்;-இதுமிக உண்மை!

ஆறா யிரமாண்டு ஆழ இறங்கிய
சாதியின் வேரைத் தனியொரு மனிதர்
அசைத்துக் கழற்றினார் என்றுரை செய்தால்
நம்பவோ முடியும்? அற்புதம் அல்லவோ?

அடுக்கடுக் காக ஆயிரம் காவலில்
வீற்றிருந்து ஆண்டதாம் மேல்சாதித் தனத்தை
அடித்து வீழ்த்தியது ஒருதனித் தடிஎனில்
எப்படி நம்புவது?-அற்புதம் அல்லவோ?

பழக்கப் படியே படித்துப் படித்து,
வழக்கப் படியே வணங்கிக் குனிந்த
பெரும்பா லோரின் பிடரி நிமிர்ந்தது
ஒருவரால் என்றால், அற்புதம் அல்லவோ?

பள்ளிக் கூடம் முடிந்திட வில்லை;
பட்டக் கொடிகள் பிடித்தது மில்லை;-
கள்ளம் அனைத்தும் தெள்ளத் தெளிவாய்க்
கண்டறிந் தாரெனில், அற்புதம் அல்லவோ?

உண்மையில் இவர்நடை ஒருபுதுத் தனிநடை;
உண்மையின் பக்கமே பிடித்திடும் சரிநடை!
இவர்நறுஞ் சுடரொளி யாதலின் அல்லவோ,
எதிர்நெடும் பேரிருள் இடிந்து வீழ்ந்தது!

எத்தனை கும்பல்கள் கூடினும் காரிருள்,
எத்தனை காலத்து மூத்ததே யாயினும்
சிற்றொளி ஒன்றெதிர் நிற்க ஒண்ணுமோ?-
தீர்த்திடு வேனுனை என்றெதிர் நண்ணுமோ?

ஒளிவரும் வரைஇருள் உலகை ஆள்கிறது;
ஒருதுளி ஒளிவரின் ஓடியே போகிறது!
இதுகதை-, ஈரோட்டுப் பெரியவர் என்கிற
இன்னொளி நந்தமக்கு எழுதிய நற்கதை!

பற்பல ஆயிரம் ஆண்டுக ளாகவே
பதர்களைப் பெற்றிட்ட இத்தமிழ்த் தாயகம்
இப்புது நாளிலே ஈரோட்டு ஏந்தலை
ஈன்றது; ஏற்றத்தை ஈன்று தந்தது!

அற்புதம் என்னெனில், இந்தமண் இத்தனை
ஆண்டுகள் நன்மக வின்றி இருந்ததே:
உண்மைதான் என்னெனில், உதிர்ந்த மண்ணிலும்
ஒப்பிலாக் குன்றமொன்று உயரும் என்பதே!


தந்தை பெரியார் நூற்றாண்டு விழா
மதுரை -1978 அக்டோபர் 21, 22
தந்தை பெரியார் நூற்றாண்டு விழா
அழைப்பிதழ்
காஞ்சிபுரம்-1979 மார்ச் 10




திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்.
—பாரதியார்.
மண்டைச் சுரப்பை உலகு தொழும்.
—பாரதிதாசன்.



*தந்தை பெரியாரையும் அவரது தொண்டுகளையும் குறித்து வெளி நாட்டு நூலாசிரியர் பலர் நூல்கள் எழுதியுள்ளனர். அவர்களில் சிலரது கருத்துகள் இங்கே இடம் பெற்றுள்ளன. இந்தத் தொகுப்பை உருவாக்க உதவிசெய்த பெரியார்நூலகத்துக்கு நன்றி.*

பெரியாரின் பிரச்சாரத்தில் மனிதனை மையமாகக் கொண்ட — சமூக அறக்கோட்பாட்டின் அடிப்படையைக் காணலாம். கண்கண்ட இந்த உலகியல் வாழ்வை அவர் மிகவும் போற்றுகிறார். புறத்திலிருந்து உதிப்பதாகச் சொல்லப்படுகின்ற அருள் ஒளியையோ, தெய்வீக மணத்தையோ அவர் உறுதியாக மறுக்கிறார்.

மனிதன் ஒரு பகுத்தறிவாளன் என்பதைப் பெரியார் மிக உறுதியாக — பெருமிதமாக எடுத்துரைக்கிறார். மனிதனிடம் நல்ல இயல்புகளையே நம்பிக்கையுடன் எதிர் நோக்குகிறார்.

இங்கர்சாலின் கோட்பாடுகள் பெரியாரின் இதயத்தை ஏன் கவர்ந்தன என்ற கேள்வி, மிக முக்கியமான கேள்வியாகும். இர்ஷிக் என்னும் அறிஞரின் கருத்துப்படி—அமெரிக்கச் சிந்தனையாளரான இங்கர்சாலின் நூல்களால் கவரப்பட்ட திரு சி. என். அண்ணாதுரை அவர்களின் வழியாகவே பெரியாருக்கு இங்கர்சால் மோகம் ஏற்பட்டது. 1931 - ஆம் ஆண்டில் அவரது ரஷ்யப் பயணத்திற்குப் பின்னர்தான் இங்கர்சாலைப் பற்றிய ஆர்வம் அவருக்குப் பெரிதும் ஏற்பட்டது.

சுறுசுறுப்பாக இயங்கிய நடைமுறை அரசியல்வாதி என்ற முறையில் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்களின் தெளிவான ஏற்ற இறக்கங்களின் விளைவாகவே பெரியாரின் குண இயல்புகள் வடிவெடுத்தன. பெரியாரின் பிரச்சாரம் அவரது குண இயல்புகளையே பிரதிபலிக்கின்றது. தென் புலத்தின் அண்மைக் காலவரலாற்றில்—நிகழ்ந்த நிகழ்ச்சிகளும், வலுவான போக்குகளும் அவரது குண இயல்புகளைத் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்கின்றன. அதே நேரத்தில் அவரது செல்வாக்குக்குரிய மூல காரணத்தையும் சுட்டிக் காட்டுகின்றன.

தென்னகத்தில் பார்ப்பனர்கள் சார்புடைய சமுதாய-மத-அமைப்பின் மீது தாம் தொடுத்த கடுங்கணைகளின் மூலம் தமிழரின் உணர்வுகளை வளர்த்து விட்டார் பெரியார். இந்து சமயத்தில் மறைந்து நின்ற 'விதியோ விதி' என்னும் தத்துவத்தை உடைத்தெறிந்தார். தம்முடைய பகுத்தறிவு வாதத்தினால் மாறுதல்களையும், வளர்ச்சிகளையும் ஆணையிட்டுக் கூறினார். அவர் தொடுத்த எதிர்ப்புக் குரல்களுக்கு இவைகளே பின்னணியாக இருந்தன.


புராணங்கள் வெறும் பழங்கதைகள், வெறும் கற்பனைகள் மட்டுமன்று—அவை அறிவுக்கு முரண்பட்டவை—ஒழுக்கத்திற்கு முற்றிலும் மாறுபட்டவை என்று பெரியார் மேடைகளில் அம்பலப்படுத்தினார்.


நாயக்கர் துறவுக் கோலம் பூண்டநாட்களில் ஏற்பட்ட கசப்பான நினைவுகளால் உந்தப்பட்டு, பார்ப்பனிய ஆதிக்கத்தின் கருவியாக இருந்த சமயத்தைத் தாக்கிப் பேசினார். இந்து புராண நினைவுகளில் அடிமைப்பட்டுக் கிடந்த மக்களை விடுவிக்க வேண்டும் என்று சுறுசுறுப்பாகப் பிரச்சாரம் செய்து வந்தார்.

பார்ப்பனர்கள் புரோகிதர்களாகப் பயன்படுத்தப்படும் சமயச் சடங்குகளிலிருந்து மக்களை விடுவிக்க விழைந்தார். ஜாதி நெறிகளையும் குழந்தைத் திருமணங்களையும் கட்டாயமாகத் திணிக்கப்பட்ட விதவைக் கோலங்களையும் சாடினார்.

ஜாதி தழுவிய இந்து சமூகத்தின் முழு அடிப்படையான மனுதர்ம நெறி முறைகளைக் கண்டித்தார். அவை, முழுக்க முழுக்க மனிதத் தன்மைக்கு முரண்பட்டவை என்றும் கூறினார். பார்ப்பனர்களின் தலைமையை நிலை நாட்டுவதற்கும்—அவர்களைத் தட்டிக் கேட்க முடியாத அளவு அவர்கள் ஆணை செலுத்தி வாழ்வதற்கும் எழுதப்பட்டது மனுதர்ம சாத்திரம் என்பதைச் சுட்டிக் காட்டினார்.

—Robert. L. HARDGRAVE Jr.
University of Chicago






ஈ. வெ. ராமசாமி நாயக்கர் திராவிட இனங்களின் தனித் தன்மை பொருந்திய கருத்துக்களையும், சரிந்திருந்த நீதிக் கட்சியையும் பயன்படுத்தி, மெச்சத் தக்க, தமது சொந்தக் கிளர்ச்சி நுணுக்கங்களின் மூலமாக தமிழ் மக்களின் நன்றியுணர்வை ஒருங்கிணைத்தார்.

காங்கிரஸ் வட்டாரத்துக்குள் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனர் அல்லாதாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலைப் பதம் பார்க்க வேண்டுமென்று பெரியார் வலியுறுத்தினார். முழுக்க முழுக்க அதன் விளைவாகவே அவர் 1925–ல் காங்கிரசை விட்டு வெளியேறினார்; காங்கிரஸ் கட்சியின் உள் வட்டாரத்திற்குள் இருந்த "பெருந் தலைகளுக்கு", பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதார் என்ற வேற்றுமை இல்லாதிருப்பது போல மூடி மறைப்பது மூட்டாள்தனம் என்று எடுத்துக் கூறினார். இது தான் அவரது சகல விதமான பிரச்சாரங்களுக்கும் அடிப்படையான ஆதாரம்.

கடந்த கால திராவிட மரபுகளைக் கொண்ட பார்ப்பனரல்லாத மக்களுக்கு பெருமித உணர்வு ஊட்டுவதற்காக அவர் சுய மரியாதை இயக்கத்தை உருவாக்கினார். பார்ப்பனர்களும் வைதீக அமைப்பும் தட்டிக் கேட்க முடியாத அளவு உயர்ந்தவை என்னும் கொள்கை மட்டம் தட்டப்பட்டது.

சுயமரியாதை இயக்கத்தின் போக்கையும், தீவிரத்தையும் அவரே முடிவு கட்டினார். ஆங்கிலக் கல்வி இல்லாமல் — பொதுமக்களின் பேச்சுத் தமிழையே பயன்படுத்திய அவரது தலைமை — தமிழக அரசியலில் முற்றிலும் புதுமையான தலைமையாகும்.

ஒரு நாட்டு மக்கள் தம்மைத் தாமே ஆண்டு கொள்ளும் திறனைப் பெறுவதற்கு அல்லது சுதந்தரம் பெறுவதற்கு முன்னதாக தன்மான உணர்வினை, அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். எப்படி இருப்பினும் இந்தப் பண்பாடு• மற்றவர்கள் தங்களுக்குள் என்ன போக்கினைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டுமே நம்பி இருக்கவில்லை. மக்களுக்குத் தன்மான உணர்வு வளர வேண்டுமென்றால் திராவிட மக்கள் தங்களுக்குள்ளும் — தங்களுடன் வாழ்ந்து வரும் நாட்டு மக்களுடனும் கொண்டுள்ள தங்களது போக்கினை வெகுவேகமாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்று எப்பொழுதும் வலியுறுத்தி வந்தார் பெரியார். நீண்ட நெடிய நூற்றாண்டுக் காலமாக — பார்ப்பனர்கள் வசப்பட்டுக் கிடந்த திராவிட மக்கள் தங்களைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்த எண்ணங்களும் தாழ்ந்து போய் விட்டன என்பது பெரியார் அவர்களின் ஆணித் தரமான கருத்தாகும்.





நாங்கள் தத்து எடுத்திருப்பது
இந்தக் குழந்தைகளை
மட்டுமல்ல...



இவர்களின் பெற்றோர்களையும் கூடத்தான்.

பெற்றோர்கள் பணிபுரியப் போகும் போதும் வயது வந்த குழந்தைகள் பள்ளிக்கோ விளையாட்டுக்கோ போகும் போதும், தத்து எடைபோடும் இந்தக் கண்மணிகளை 'பால்வாடியில்' நாங்கள் கண்காணிக்கிறோம். மதுரையைச் சேர்ந்த ஜீவலஸாகுவின் கிராம வாசிகள் அளித்த நன்கொடையினால் கட்டப்பட்ட குழந்தை வளர்ப்பகம்தான் பால்வாடி. இந்தப் பச்சிளங் குழந்தைகளைப் பேணி வளர்க்கும் செவிலித்தாய்களுக்கு சம்பளத்தைத் தர ஸ்டேட் பாங்கின் கிளை அலுவலர்கள் தவருமல் தங்களாலான உதவியைச் செய்கிறார்கள்.
பாங்க் தந்த பண உதவியினால் பஞ்சாயத்து யூனியன் தோண்டிய குழாய்க் கிணற்றிலிருந்து கிராம வாசிகளுக்கு சுத்தமான, தெளிவான குடி தண்ணீர் கிடைக்கிறது.
எங்களது ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அடங்கிய 250 கிராமங்களில் ஒன்றுதான் ஜீவலஸாகு. கடன் நிபந்தனைகளைத் தளர்த்தல், தொழில் நுட்பம் மற்றும் மார்க்கெடிங் சர்விஸ்களை வழங்குதல், மற்றும் புதிய பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊக்கம் ஊட்டுதல் போன்றவைகளால் நமது கிராம மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவது மட்டுமல்ல தனி ஆர்வங் கொண்ட சமூக நல மன்றங்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் கிராம வாசிகளின் ஒத்துழைப்புடன் சமுதாயத்திலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, சமுதாயத் தேவைகளை நிறைவேற்றுவதும் இந்தத் திட்டத்தின் லட்சியமாகும்.

எங்களுடைய ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம் 250 கிராமங்களில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மனமுவந்து உழைக்கும் நேசக்கரங்களை உருவாக்கி வருகிறது.



ஸ்டேட் பாங்க்
நேசக் கரம் நீட்டி நெருங்கியே வளர்வோம்

CHAITRA SBI 350 TAM

நீங்களே கண்டுகொள்ளுங்கள்

# மின்னலடிக்கும், ஸூப்பர் ரின் வெண்மை.. இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை







வேளை தவறாமல் உபயோகியுங்கள் ஸூப்பர் ரின், எத்தகைய வெள்ளைவெளேர் சலவை கிடைக்கிறது பாருங்கள்—இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை அது. காரணம், மேம்பட்ட வெளுப்பூட்டும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின். நீங்களே கண்டுகொள்ளுங்கள்.




**இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் விட அதிக வெளுப்பூட்டும் சக்தி.**

ன்டாஸ்-RIN 34-2317 TM (RR)

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



# எழுத்தாளர் பெரியார்

டி. கே. சீனிவாசன்

சமுதாயத்தின் வளர்ச்சிக்காகத் தம்வாழ்வை அர்ப்பணித்தவர்கள் இரண்டு வகையானவர்கள்.

முதல்வகை, ஏற்கெனவே மக்கள் இதயங்களில் படிந்திருந்த நம்பிக்கைகளையும் உணர்வுகளையும் அடித்தளமாகப் பயன்படுத்திக் கட்டிடங்களை எழுப்பியவர்கள்..

இரண்டாவது வகை, மக்களுக்கு அறிமுகமாகாத கருத்துக்களையும் உணர்வுகளையும் அவர்களுக்குப் புலப்படுத்தி, அவைக்கு வலிவூட்டி அவற்றின் அடிப்படையில் சமுதாயத்தை வளர்த்தவர்கள்.

தந்தை பெரியார் இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்.

நம்முடைய சமுதாயம் சிந்திக்கிற உரிமையையே ஒரு சிலரிடம் மட்டும் ஒப்படைத்திருந்தது. எப்போது சிந்தனை தேவைப்படுகிறதோ, அப்போதெல்லாம் அவர்களிடமிருந்து கருத்துக்களைக் காசுகொடுத்துப் பெற்றுக்கொண்டிருந்தது. அப்படிப்பட்ட சமுதாயத்தைச் சொந்தமாகச் சிந்தித்து, தள்ள வேண்டியவைகளைத் தள்ளி—கொள்ள வேண்டியவைகளைக் கொள்ளத் தூண்டி அதில் வெற்றி பெற்றவர் தந்தை பெரியார்.

''கர்ப்பத் தடையின் அவசியத்தைப் பற்றி நாம் கருதும் காரணங்களுக்கும் மற்றவர்கள் கருதும் காரணங்களுக்கும் அடிப்படையான வித்தியாசம் இருக்கிறது''.

இப்படித் தொடங்குகிறார் தந்தை பெரியார், 'கர்ப்பத் தடை' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை, 'குடியரசு' இதழில்.

''மற்றவர்கள் பெண்கள் உடல் நலத்தை உத்தேசித்தும், பிள்ளைகளின் நன்மையை உத்தேசித்தும், நாட்டின் தரித்திரதிசையை உத்தேசித்தும், குடும்பச் சொத்துக்குறையாமல்இருக்க வேண்டும் என்பதை உத்தேசித்தும், கர்ப்பத்தடை அவசியம் என்று கூறுவார்கள்.''

பலர் கூறும் காரணங்களைப் பெரியார் ஒதுக்கிவிடுகிறார்; பிறகு அவர் கூறும் காரணத்தை எழுதுகிறார்.


''பெண்கள் விடுதலையடையவும், சுயேச்சை பெறவும் கர்ப்பத்தடை அவசியமென்றும் நாம் கருதுகிறோம். 'நான் தனியாக இருந்தால் எங்காகிலும் ஒரு தலையின்மேல் துணியைப் போட்டுக் கொண்டு போய்விடுவேன்; அல்லது ஒரு குளத்திலாவது ஆற்றிலாவது இறங்கிவிடுவேன்; இந்தக் கஷ்டத்தைச் சகித்துக்கொண்டுஅரைநிமிடமும் இருக்கமாட்டேன்; ஆனால், இந்தக் குழந்தைகளையும் குஞ்சுகளையும் எப்படி விட்டுவிட்டுப் போகமுடியும்?'' என்று பெண்கள் கூறுகிறார்கள்.

''உலகத்தில் மக்கள் கஷ்டப்பட்டு தன் தன் ஜீவனத்துக்கே பொருள் தேடுவதற்குச் சுதந்தரத்தை விட்டு அடிமையாக வேண்டிய நிலையில் இருக்கும்போது பிள்ளைகளையும் குட்டிகளையும் காப்பாற்ற வேண்டிய அவசியமும் தலைமேல் இருக்குமானால், அந்த இடத்தில் எப்படி சுயேச்சை இருக்கமுடியும்?''

*1930-ஆம் ஆண்டில்-அதாவது 49 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட கட்டுரை இது.*

சுயேச்சை - சுதந்தரம்! தனி மனிதனுக்கு இவை இரண்டையும் உண்டாக்கித் தருவதையே தன் உயிர்மூச்சாகக் கொண்டு உழைத்தவர் பெரியார்—ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகட்கு முன்பிருந்தே!

வரையறைகளை வைத்துக் கொண்டு வாழ்வைப்பற்றிச் சிந்தித்தவர் அல்ல பெரியார்; வாழ்வை முன்னிறுத்தி வரையறைகளை வகுக்கச் சொன்னவர் அவர்.



உலகச் சிந்தனையாளர்களில் [illegible] தங்கள் முடிவு[illegible] ஏடுகளாக்கியதோடு தம் பணியை முடித்[illegible] கொண்டனர்.




# பெரியார் வாழ்க்கை வரலாறு!
## வல்லுநர் குழு முயற்சிகள்

பேராசிரியர் மா. நன்னன்

தந்தை பெரியார் நூற்றாண்டை ஒப்பற்ற முறையில் கொண்டாடுவதற்காகத் திட்டமிட்டுத் தமிழக அரசு அதற்கென்று டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் குழு ஒன்றை அமைத்தது. அக்குழு, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் தொண்டுக்கு நிலைத்த புகழும், நீங்காப் பயனும் விளைவிப்பதற்காகப் பல திட்டங்களை அரசுக்குப் பரிந்துரைத்தது. அவற்றில் ஒன்று, தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை முழுமையாகவும், செம்மையாகவும் வெளியிடுவது. இரண்டு, தந்தை பெரியார் அவர்களின் கருத்துக்களைத் திரட்டிப் ''பெரியார் புரட்சி மொழிகள்'' (பொன் மொழிகள்) என வெளியிடுவது. மூன்று, பெரியார் வரலாற்றைச் சிறுவர்களுக்காக வரைபட உருவில் வெளியிடுவது, நான்கு, பெரியாரின் புரட்சிமொழிகளைக் கல்வெட்டுக்களாகப் பதிவு செய்து மாவட்டம் தோறும் நிறுவுவது. இந்நான்கு முடிவுகளையும் அரசு பெரு மகிழ்ச்சியுடன் நிறைவேற்ற ஒப்புதல் அளித்ததோடு, அதற்கு வேண்டிய நிதி உதவிகளையும் தாராளமாக ஒதுக்கியது.

இந்நான்கு பணிகளையும் நிறைவேற்றுவதற்காக வல்லுநர் குழு ஒன்றையும் அரசு நியமித்தது. அக்குழுவுக்கு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைவராகவும், சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் துணைத் தலைவராகவும் மதுரை—காமராஜ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திரு எஸ். வி. சிட்டிபாபு, திரு ஏ.பி.சனார்த்தனம், எம்.பி., டாக்டர் இரா. சனார்த்தனம், எம். எல். சி., பேராசிரியர் மா. நன்னன், திரு. திருவாரூர் தங்கராசு, திரு இராசகோபாலன் (ஓய்வு பெற்ற மாவட்டப் பதிவாளர்) ஆகியோர் உறுப்பினராகவும், திரு சு. நல்லரசு அவர்கள் செயலாளராகவும் கொண்டு இக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் அவர்களின் விழுமிய கண்காணிப்பிலும், டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் சீரிய தலைமையிலும் முழு மூச்சுடன் செயல்பட்டுக் கொண்டு வருகிறது.



இவ்வல்லுநர் குழு நான்கு உட்குழுக்களாகப் பிரிக்கப்பட்டது. முதல் குழு பேராசிரியர் மா. நன்னன் அவர்கள் பொறுப்பில், பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை உருவாக்குவது என்றும், இரண்டாம் குழு திரு திருவாரூர் தங்கராசு அவர்கள் பொறுப்பில் பெரியார் பொன்மொழிகளை உருவாக்குவது என்றும், மூன்றாம் குழு திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் பொறுப்பில் சிறுவர்களுக்கான வரைபட வரலாற்றை உருவாக்குவது என்றும், நான்காம் குழு திரு. ஏ. பி. சனார்த்தனம், எம். பி. அவர்கள் பொறுப்பில் கல்வெட்டு அமைப்புப் பணியை நிறைவேற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இப்பணிகளுக்கு உதவியாக நன்கு கற்றுத் தேர்ந்த 6 உதவியாளர்கள் பேராசிரியர் நன்னன் தலைமையில் இராசாசி மண்டபத்தில் அலுவலகத்தை அமைத்துப் பணியாற்றி வருகின்றனர். உட் குழுவின் பணிகள் 1979 மே திங்களில் தொடங்கப் பெற்றாலும், சூன் திங்களில்தான் முழுமையாகச் செயல்படத் தொடங்கியது.

தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக்கு ஆதாரக் கருத்துக்களைத் திரட்டும் பணி நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் முற்றுப் பெறவில்லை. அந்த ஆதாரங்கள் மிகமிகப் பரவலாகவும், திரட்டுவதற்கு அரியனவாகவும் உள்ளன. ஏனெனில், தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு பொதுவாகத் தென் இந்தியாவினுடையவும் சிறப்பாகத் தமிழகத்தினுடையவும் ஒரு நூற்றாண்டுக் காலவரலாறாக உள்ளது. இந்நூற்றாண்டு அளவில் வெளிப்படையாகவோ பிற வகையிலோ பெரியார் தொடர்பு கொள்ளாத தமிழகத்து நிகழ்ச்சிகள் மிகமிகக் குறைவு என்றே சொல்லலாம்.

தந்தை பெரியாரை வைக்கம் போராட்டத்தில் ஈடுபடுத்த முயன்றவர்களில் ஒருவராகிய குரூர் நீலகண்டன் நம்பூதிரி என்பவர் இன்னும் நலமுடன் வாழ்ந்து வருவதை அறிகிறோம். மற்றும் பெரியாரின் மிக மிக நெருங்கிய நண்பரும் கூட்டாளியும் ஆகிய ஈரோடு திரு அங்கப்பச் செட்டியார், சிதம்பரம் தண்டபாணி பிள்ளை போன்ற மிகப் பலர் வாழ்ந்து வருவது நமக்கு ஒரு நல் வாய்ப்பாகவும் அரும் பேறாகவும் உள்ளது.

ஆகவே, அவர்களையெல்லாம் நேரில் கண்டு அவர்களின் கருத்துக்களையெல்லாம் கேட்டுப் பெற வேண்டும். இந்தியா தவிர மலேயா, சிங்கப்பூர், இலண்டன், ரஷ்யா போன்ற வெளிநாடுகளிலிருந்தும் பெரியாரின் வாழ்க்கை வரலாற்றுக் கருத்துக்கள் திரட்டப்பட வேண்டியனவாக உள்ளன. கேரளம், ஆந்திரம், உத்திரப் பிரதேசம் போன்ற வெளி மாநில அரசுகளின் ஆவணக் காப்பகங்களிலிருந்தும் ஏராளமான வரலாற்றுக் கருத்துக்கள் திரட்டப்பட வேண்டியுள்ளன.

'நவசக்தி' போன்ற மறைந்த செய்தித்தாள்கள் பிற இதழ்கள் ஆகியவற்றிலிருந்தும், இப்பொழுது இயங்கி வரும் 'இந்து' 'மெயில்' போன்ற செய்தித்தாள்களிலிருந்தும்; தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம், போன்ற பிற மொழிகளிலுள்ள பல இதழ்கள், நூல்களிலிருந்தும் ஆதாரங்களைத் திரட்ட வேண்டியுள்ளது. கல்கத்தாவிலுள்ள நேஷனல் லைப்ரரி போன்ற பல நூல் நிலையங்களிலிருந்தும் பல செய்திகள் திரட்ட வேண்டியுள்ளது. பெரியார் அவர்கள் தம் இயக்கத் தோழர்களுக்கும் நண்பர்களுக்கும் எழுதிய பல வகைக் கடிதங்களையும் திரட்டித் தொகுக்க வேண்டியுள்ளது.

பெரியார் நூல்கள், எழுத்துக்கள் ஆகியவற்றோடு அவர்களின் இயக்கத் தோழர்கள், எண்ணற்ற நண்பர்கள் ஆகியோரிடம் இருந்தும் ஏராளமான தகவல்களைத் திரட்டியாகவேண்டும். இவ்வளவையும் திரட்டி நூலை வெளிக்கொண்டு வர இக்குறைந்த காலத்தில் இயலவில்லை. ஆகவே, இப்பொழுது திரட்டி இருக்கிற ஆதாரங்களோடு மேலும் திரட்ட வேண்டிய ஆதாரங்களையும் முழுமையாகத் திரட்டி நூலை ஓராண்டுக் காலத்திற்குள் வெளிக்கொண்டுவருவது என்று வல்லுநர் குழு முடிவு செய்துள்ளது. மேலும், நூலை 4 பாகங்களாக வெளியிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. அவையாவன:

**முதல் பாகம் :**

**தொடக்கம் முதல் சுயமரியாதை இயக்கத் தொடக்க காலம் வரை.**

**இரண்டாம் பாகம் :**

**சுயமரியாதை இயக்க காலம் முதல் திராவிடர் கழகத் தொடக்க காலம் வரை.**

**மூன்றாம் பாகம் :**

**திராவிடர் கழக காலம் (இறுதி வரை).**

**நான்காம் பாகம் :**

**வரலாற்றுத் திறனாய்வுத் தொகுப்பு.**

இந்நான்கு பாகங்களும், தந்தை, பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், அவருடைய குறிக்கோள், அதனை அடைவதற்கு அவர் வகுத்த திட்டம், அத்திட்டத்தை நிறைவேற்ற அவர் மேற்கொண்ட முயற்சிகள், அம்முயற்சிகளின் விளைவு, அதனால் தமிழகம் பெற்ற பயன் ஆகியவைகளையும் முழுவதாகவும் தெளிவாகவும், சரியாகவும் விளக்குவனவாக அமையும். அந்தப் பணி தொடர்ந்து ஊக்கத்துடன் நடைபெற்று வருகிறது. இந்நூற்றாண்டு நிறைவு விழாவில் (1979-செப்டம்பர் 15, 16, 17) தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றுத் திட்டச் சுருக்கம் மட்டுமே வெளியிடப்படுகிறது.

''பெரியாரின் புரட்சி மொழிகள்'' என்னும் பெயரில் அவர்தம் பொன்மொழிகள் அச்சாகிக் கொண்டிருக்கின்றன. பெரியார், மக்கள் வாழ்க்கையில் இடம் பெறும் எல்லாப் பொருள்களைப் பற்றியும் கருத்துத் தெரிவித்து இருக்கிறார். அவைஎல்லாம் பேரளவு திரட்டப்பட்டன. அவை ஏறத்தாழ 6,000 புரட்சி மொழிகளாக அமைந்துள்ளன. ஆனால், அவ்வளவையும் இப்பொழுது வெளியிட முடியாது. அவற்றை ஓரளவு சுருக்கி இப்பொழுது வெளியிடுவது என்னும் நோக்கத்துடன் ஓரளவு சுருக்கி வெளியிடப்படுகிறது. இப்புரட்சி மொழிகள் 47 பெரும் தலைப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பெரும் தலைப்பும் பல உள்தலைப்புக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு உள் தலைப்பிலும் பற்பல புரட்சி மொழிகள் இடம் பெறும். பெரும் தலைப்புக்களும், உள் தலைப்புக்களும் அகர நிரல் படி அமைக்கப்பட்டுள்ளன. புரட்சி மொழிகள் எல்லாம் அவை வெளியிடப்பட்ட கால அடிப்படையில் முறைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பொன்மொழிக்கும் அடியிலேயும் ஆதாரங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. சில பொன்மொழிகள் வேறு தலைப்புகளுக்கும் பொருத்தமானவையாகக் காணப்படுவதால் அத்தகையவற்றை மிகச் சிறந்த ஒரு தலைப்பில் கொடுத்துவிட்டு, அது பொருத்தமாக உள்ள பிற தலைப்புகளிலும் குறிப்புக்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. அக்குறிப்புகளை நூலின் இறுதியிலுள்ள பொருள் அடைவு அகர நிரல் என்றும் பகுதியில் காணலாம். அப்பகுதியின் துணை கொண்டு ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் போன்றவர்கள் மிக மிகக் குறுகிய காலத்தில் தாம் விரும்பும் ஒரு சிறு பொருள்பற்றியும் அய்யா என்ன கூறியிருக்கிறார் என்பதை எளிதில் தெரிந்து கொள்ள முடியும். இப்பொன் மொழியை ஒருவர் முழுமையாகப் படித்தால் தந்தை பெரியார் அவர்களின் பல கருத்துக்களையும் பொதுவாக ஓரளவு தெரிந்து கொள்ள முடியும். மனித நல உணர்வுள்ள அனைவரின் கையிலும் இருக்கத் தகுந்த அருஞ் செல்வமாகப் புரட்சி மொழிகள் என்னும் நூல் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

பெரியார் ஓர் ஆல மரம். அவ்வால மரத்தில் எண்ணற்ற பழங்கள் பழுத்தன. ஒவ்வொரு பழத்திலும் ஏராளமான வித்துக்கள் உள்ளன. அவ்வித்துக்களில் சிலவே புரட்சி மொழிகள் என்னும் இந்நூலில் இடம் பெறுகின்றன. அவ்வொவ்வொரு ஆலம் வித்தும் ஒவ்வொருகருத்து மிக்க ஆல மரத்தை உருவாக்க வல்லன என்று சொல்லவும் வேண்டுமோ?

பெரியாரின் புரட்சிகரமான எண்ணத்திலிருந்து சிதறிய கருத்துப் பொறிகளாகிய இப்புரட்சி மொழிகள் கற்பார் உள்ளத்தில் அறிவுப் புரட்சியை விளைக்க வல்லன. பெரியாரின் சிந்தனை என்னும் சுமையில் அமிழ்ந்து உருவான இவ்வைர மொழிகள் நமது விலை மதிப்பற்ற வைரங்களாகும். அய்யாவின் எண்ண அலைகளால் உருவாக்கப்பட்ட இக்கருத்துக்கள் பொதுவாக மனிதனுக்கும் சிறப்பாகத் தமிழர்க்கும் என்றென்றும் பயன்படக்கூடிய கருவூலமாகும்.

பெரியாரின் கருத்துக்கள் இவ்வளவுதான் என்று யாரும் முடிவு செய்து விடக்கூடாது. ஏனெனில், யாம் திரட்டியவை குறைவு. திரட்டியவற்றில் இப்பொழுது வெளியிடுவது மிகவும் குறைவு. ஆகவே, விரிவாக அறிய அவர்தம் ஏடுகளை நாடுதலே முறையாகும்.


பெரியார் அவர்களின் கருத்துக்கள் தமிழக மக்களின் உள்ளத்தில் புகுந்து, பரவித் தங்கி அவரவர்தம் சொந்தக் கருத்தாகும்படி ஆக்கப்பட வேண்டும். சுருங்கச் சொன்னால் தமிழ் மக்கள் பெரியார்போல் சிறந்த சுயசிந்தனையாளர்களாக ஆக வேண்டும். மேடைப் பேச்சு, எழுத்து, கல்வி நிலையங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் இப்புரட்சி மொழிகள் பரவ வேண்டும். இத்தகைய விழுமிய நோக்கத்தோடு இந்நூல், வல்லுநர் குழுவால் தமிழக அரசின் ஆதரவோடு வெளியிடப்படுகிறது.

சிறுவர்க்கான வரைபட வரலாற்று நூல் முன்னாள் துணைவேந்தர் திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் பொறுப்பில் காண்போர் கண்ணுக்கும் கருத்துக்கும் அரிய, இனிய விருந்தாகும் வண்ணம் உருவாகிறது. கல்லின் எழுத்தாக நின்றிலங்கித் தமிழர்தம் உணர்வையெல்லாம் வில்லின் கணையாக்கிச் செயற்படுத்தும் கல்வெட்டுப் பணியும் நன்கு நடைபெறுகிறது.



# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத்துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித்தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI



அவர்களில் யாரோ சிலர் தான் தம் கருத்துக்களை வளர்க்க இயக்கங்களைக் கண்டவர்கள். அப்படிப்பட்டவர்களிலும் தனனுடைய தொண்டினால் சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்று அதன் தலைவர்களில் ஒருவராக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் தந்தை பெரியார்.

ஆண்டானுக்குக் கட்டுப்பட்டு வாழும் அடிமை-ஆணுக்குப் பயந்து இயங்கும் பெண்-மேல் ஜாதிக்காரனுக்குப் பணிந்து போகும் தாழ்ந்த ஜாதிக்காரன்-இவர்களுக்கென்று ஒரு பாசறை அமைத்து அவர்கள் சார்பில் போர் தொடுத்தவர் பெரியார்.

'ஆண்மை' - இந்தச் சொல்லை யார் யாரோ எந்தெந்தக் கோணங்களிலோ ஆராய்ந்திருக்கிறார்கள். பெரியார் அதைத் தன் தராசில் எடை போடுகிறார்.

''ஆண்மை என்னும் பதமே பெண்களை இழிவுபடுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப்பட்டு வருகிறது என்பதைப் பெண்கள் மறந்துவிடக் கூடாது'' இதுதான் அந்தக் கட்டுரையின் தொடக்கம்.

கட்டுரை தொடருகிறது:

''சுதந்தரம், வீரம் முதலிய குணங்கள் உலகத்தில் ஆண்மைக்குத்தான் உரியதாக ஆக்கப்பட்டிருக்கின்றன. பெண் இல்லாமல் ஆண் வாழ்ந்தாலும் வாழலாம். ஆனால் ஆண் இல்லாமல் பெண் வாழமுடியாதென்று ஒவ்வொரு பெண்ணும் கருதிக்கொண்டிருக்கிறாள்'' - இது அந்தக் கட்டுரையின் தொடர்ச்சி.

அடுத்து வளர்ச்சியைப் படிப்போம்.

''பெண்களுக்குப் பிள்ளைகளைப் பெறும் தொல்லை ஒன்று இருப்பதால், தாங்கள் ஆண்கள் இல்லாமல் வாழமுடியும் என்று ருசுப்பித்துக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆண்களுக்கு அந்தத் தொந்தரவு இல்லாததால், தாங்கள் பெண்கள் இல்லாமல் வாழமுடியும் என்று சொல்ல இடமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.''

கட்டுரையைப் பெரியார் முடிக்கவில்லை. இந்த நிலைக்குப் பரிகாரம் என்ன என்பதை



அடுத்துச் சுட்டிக் காட்டுகிறார்.

''எனவே, உண்மையான பெண்கள் விடுதலைக்கு, பிள்ளைபெறும்தொல்லை அடியோடு ஒழிந்துபோகவேண்டும்''

இதைப் படித்ததும் பலர் சிரிப்பார்கள்; சிந்திக்கமாட்டார்கள்; காரணம் நாம் அப்படித்தான் பழக்கப்பட்டிருக்கிறோம்.

தொடர்ந்து பெரியார் எழுப்பும் வினாக்களுக்கு யாராவது விடைதர முடிகிறதா என்று சிந்தியுங்கள்.

''பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்திவிட்டால், உலகம் விருத்தியாகாது, மானிட வர்க்கம் விருத்தியாகாது என்று தர்ம



நியாயம் பேசச் சிலர் வருவார்கள். உலகம் விருத்தியாகாவிட்டால் பெண்களுக்கு என்ன நஷ்டம்? மானிட வர்க்கம் பெருகாவிட்டால் பெண்களுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டுவிடக் கூடும்? இதுவரை பெருகிவந்த மானிட வர்க்கத்தால் மானிட வர்க்கத்துக்கு ஏற்பட்ட நன்மைதான் என்ன?''

பழிப்பவர்களில் யாருக்காவது இவைகளுக்குப் பதில் சொல்லத் தெரியுமா? வித்தகர்களைக்கூடத் திணறவைக்கும் கேள்விகள் இவை!

கெட்டியான ஓர் உணவுப் பொருளை பல் இல்லாதவர்கள் கூடச் சாப்பிடும்படி உடைத்து நுணுக்கித் தருவதைப்போல விளக்கங்களைத் தொகுத்துத் தருவதில் வல்லவர் தந்தை பெரியார்.

சமுதாயத்தில் சமத்துவம் காணப் பாடுபட்டோர் பலருண்டு. அவர்களுக்கும் பெரியாருக்கும் அடிப்படையிலேயே மகத்தானதொரு முரண்பாடு உண்டு.

மற்றவர்கள் சமுதாயத்தின் மேல்தளத்திலிருந்து அதை இயக்கியவர்களுக்கு இதோபதேசம் செய்தனர். அன்பு காட்டச் சொன்னார்கள். கருணை பொழியச் சொன்னார்கள்; கட்டுப்பட்டு இருப்போருக்குப் பாதுகாவலர்களாகக் கட்டுப்படுத்தியவர்களைப் பணியாற்றச் சொன்னார்கள்.

பெரியார் ஒருவர்தான் சமுதாயத்தின் அடித்தளத்திலே இருப்பவர்களைத் தட்டி எழுப்பி சமத்துவ உணர்வை அவர்களிடம் உண்டாக்கினார். 'சமத்துவம் என்பது எவரும் கருணை காரணமாக இடும் பிச்சை அல்ல; அது அனைவருடைய பிறப்புரிமை'. என்று அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

அரைகுறையான மாற்றங்களை அவர் ஆதரிக்கவேஇல்லை; படிப்படியான சீர்திருத்தங்களையும் அவர் விரும்பவில்லை; அனைத்தையும் அடியோடு மாற்ற வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார்.

தாழ்த்தப்பட்டோர் கோவில் நுழைவைப் பற்றித் தன் 'குடியரசுப்' பத்திரிகையில் பெரியார் எழுதுகிறார்.

''தீண்டப்படாதவர்கள் மற்றவர்களுடன் சமத்துவமாகக் கோவிலுக்குள் செல்லும் உரிமை பெறுவதன் மூலம் ஓரளவு தீண்டாமை ஒழிகிறதென்பதையும், சமத்துவம் கிடைக்கின்றது என்பதையும் நாம் ஒத்துக்கொள்ளுகிறோம்.''

அந்த ஓரளவு சமத்துவத்தைப் பற்றி விளக்கம் தருகிறார் பெரியார்.

''இதுவும்-இரயில் வண்டிகளிலும், திருவிழாக் காலங்களிலும், கோவில்களின் தேர்களை இழுக்கும் காலங்களிலும் எந்த அளவு தீண்டாமை ஒழிந்து சமத்துவம் ஏற்படுகின்றதோ, அந்த அளவில்தான் கோயில் நுழைவினாலும் தீண்டாமை ஒழிந்து சமத்துவம் ஏற்படும் என்பதே நமது கருத்தாகும்.''

அடுத்து, முழு அளவு சமத்துவத்துக்கு என்ன செய்யவேண்டும் என்பதை விளக்குகிறார்.

''உண்மையில் தீண்டப்படாத சகோதரர்கள் சமூக சமத்துவம் பெற வேண்டுமானால், அவர்கள் கல்வியிலும் திறமையிலும் செல்வத்திலும் செல்வாக்கிலும் ஒற்றுமையிலும் அவர்கள் மற்றவர்களைப்போல சமநிலை அடைய வேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது''.

## பெரியார் மாவட்டக் கருவூலம்

புதிதாக அமைக்கப்படும் பெரியார் மாவட்டத்திற்குப் புதிய மாவட்டக் கருவூலம் ஒன்று அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இம்மாவட்டக் கருவூலம் ஈரோட்டில் அமைக்கப்படும். பவானி, தாராபுரம், ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம், காங்கேயம், பெருந்துறை, சத்தியமங்கலம் ஆகிய இடங்களிலுள்ள துணைக் கருவூலங்கள் பெரியார் மாவட்டக் கருவூலத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

எந்தக் கூட்டத்தாரின் இழிவு நீக்கத்துக்காக அவர் வாழ்நாள் இறுதிவரை போராடினாரோ அவர்களுடைய சிந்தனை வளர்ச்சிக்கும் மன உணர்ச்சிகட்கும் ஏற்றாற் போலவே அவருடைய எழுத்துக்களும் பேச்சுகளும் அமைந்திருந்தன.

'அவர் பிராமண விரோதி-வகுப்புவாதி - நாஸ்திகம் பேசியவர்',என்றெல்லாம் கூறி அவரை எதிர்த்தவர்கள் பலர் உண்டு.

அவருடைய வாக்குமூலத்தையே படித்துக் காட்டுகிறேன்.

'பிராமணர்களுக்கும் நமக்கும் பிரமாதமான பேதம் ஒன்றுமில்லை. அவர்கள் அனுசரிக்கிற சில பழக்கங்களையும் முறைகளையுந்தான் நாங்கள் எதிர்க்கிறோம். இது அவர்கள் மனம் வைத்தால் மாற்றிக்கொள்வது பிரமாதமான காரியம் இல்லை!'

இதைக் கேட்ட பிறகும் அவர் பிராமண விரோதி என்று சொல்லுபவர்கள் அவரைப் புரிந்து கொள்ளாதவர்களே தவிர வேறல்ல. அவர் சொன்னதைக் கேட்டதாலோ என்னவோ எத்தனையோ பிராமணர்கள் தங்கள் பழக்கங்களை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

வகுப்பு வாதத்தைக் கண்டித்துத் தந்தை பெரியார் ஒரு கட்டுரையே எழுதி இருக்கிறார். அதில் ஒரு பகுதி இதோ;

''வகுப்புக்கு வகுப்பு அவநம்பிக்கை, துவேஷம் ஆகியவைகளாலும், வகுப்பை வகுப்பு அடக்கி ஆளவேண்டும் என்கிற எண்ணத்தாலும், ஏதோ ஒரு காலத்தில் எந்தக் காரணத்தாலோ கிடைத்துவிட்ட ஆதிக்கத்தையும் அதிக உரிமையையும் எப்படி விட்டுக்கொடுப்பது என்கின்ற கெட்ட எண்ணத்தாலும், முட்டாள் பிடிவாதத்தாலும், வகுப்பு வாதம் நாளுக்கு நாள் வளர்ந்து உரம் பெற்று வருகின்றதைச் சென்ற 30 வருஷ காலமாக நேரில் பார்த்து வருகிறோம்.''

கடவுளைப் பற்றி அவர்கூறிய கருத்துக்கள் பலருக்குக் கசப்பாகத் தோன்றுகின்றன. எப்படித் தொடங்கின; எங்கே போய் முடிந்தன அவை என்ற விவரம் மட்டும் புரிந்தால் அந்தக் கசப்பு நம்மை விட்டுக் காணாமல் போய்விடும்.

பெரியார் எழுதுகிறார்:

''நம் குறைபாடுகளுக்குக் கடவுள் ஒருபோதும் காரணகர்த்தராகமாட்டார். கடவுள் மீது பழிபோடுவது என்பது அற்பத்தனம், அயோக்கியத்தனம். ''ஏனப்பா திருடினாய்?'' என்று மாஜிஸ்டிரேட் ஒரு திருடனைப் பார்த்துக் கேட்டால், ''நான் என்ன செய்யட்டுங்க, கடவுள் செயல் என்னை அப்படி செய்துட்டுதுங்க'', என்று சொன்னால் மாஜிஸ்டிரேட் ஒப்புக்கொள்ளுவாரா? எவனாவது ஒரு போக்கிரி உங்கள் பாக்கெட்டில் கை போட்டால், ''எல்லாம் கடவுள் செயல், ''என்று நீங்கள் யாராவது சும்மா இருந்துவிடுவீர்களா? ''கடவுள் இருக்கிறார், எல்லாம்பார்த்துக்கொள்ளுவார்'' என்று எந்த பக்தனாவது தனது பெட்டியைப் பூட்டாமல் விட்டுவிடுகிறானா? ''கடவுள் காப்பாற்றுவார்'' என்று நினைத்து எவனாவது காசு, பணம் தேடாமல் தெருவில் சோம்பித் திரிகிறானா? அப்படியிருக்க நம் இழிவு நீக்கத்துக்கு மட்டும் ஏன் ''எல்லாம் கடவுள் பார்த்துக்கொள்ளுவார்'' என்று நாம் விட்டு வைக்கவேண்டும்? நமது இழிவுக்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லை.''

சமுதாயச் சமத்துவத்துக்குக் கேடுவிளைவிக்கும் சாஸ்திர புராணங்களை அவர் சாடினார். ஆனால் இருக்கிற கேடுகள் அனைத்தும் புராணங்களால் ஆண்டவனோடு இணைக்கப்பட்டிருந்தன.

தன் குறிக்கோள் ஒன்றிலேயே நிலைத்திருப்பவர் தந்தை பெரியார்; இடையில் குறுக்கிடுபவைகளை எடுத்தெறிந்து விடுவார். அவரும் தட்டித் தட்டித்தான் பார்த்தார். திறக்க மறுத்து விட்டார்கள். அடுத்துச் செய்யவேண்டியதைச் செய்தார். கதவை உடைத்துப் போட்டு விட்டார். அவ்வளவுதான்.

இறுதியில், அரசியலைக் கலக்காவிட்டால் தலைப்பு முழுமை பெறாது. ஆகையால் அதில் ஒரே ஒரு துளியை மட்டும் அவருடைய கட்டுரை ஒன்றிலிருந்து காட்டுகிறேன்.

''ஜனநாயகம் என்றால் மக்களாட்சி என்பதுதான் உண்மையான கருத்து. அப்படிப்பட்ட ஜனநாயகத்துக்கு மக்கள் அறிவாளிகளாகவும், ஓரளவுக்கு யோக்கியர்களாகவும் ஒழுக்கமுடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

''நமது ஜனநாயக மக்கள் இயற்கையில் மூட நம்பிக்கையுடைய காட்டுமிராண்டி மக்களென்பதோடு அல்லாமல் கல்வி-எழுதப் படிக்கவே அறியாத நிலையில் தற்குறிகளாக—பகுத்தறிவென்பதே இன்னதென்றறியா பாமர மக்களாக ஏராளமான பேர் இருக்கிறார்கள்.''

தந்தை பெரியாரின் பேச்சுக்கள் ஆதிக்கக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்ட கசையடிகள்.

ஆனால் அவருடைய எழுத்துக்கள் அப்படி அல்ல; ஆற அமரப் படித்துச் சிந்தித்தால் அத்தனையும் அறிவுக் கருவூலங்கள்!



***(21.3.79 அன்று இரவு 8,30 மணிக்கு சென்னை வானொலியில் ஆற்றிய உரை.)***

# வாழ்த்து

—புலவர் தமிழ்ப்பித்தன்

*தமிழ்த்தாய் வணக்கம்*

இயல்கூத்தும் இசைஊற்றும்
இணைந்ததமிழ் ஒருமூன்றை
எமக்குச் சேர்த்து
அயல்நாட்டும் புகழ்நிறுத்த
அருள்வழங்கும் தமிழ்த்தாயை
அன்பு செய்வாம்

புயல்என்றே புவிவியக்கப்
பழமையெல்லாம் பயந்தோடப்
புதுமை ஓங்க
வயல்பாயும் புனல்போலும்
வாய்த்ததிருப் பெரியார்தாம்
வாழ்க வென்றே!

*தமிழ்நாட்டு வணக்கம்*

ஆழிசூழும் உலகமுற்றும் அருந்திறந்தால் நெடி துயர்ந்த
மேழிசூழும் தமிழகத்தை மிகவிருப்பாய்ப் பரவுதுமே
சீரோங்கத் திருநாட்டில் சீர்திருத்தச் சிங்கமெனப்
பேரோங்கும் ராமசாமிப் பெரியார்தாம் வாழ்க வென்றே!

*தமிழ்இன வணக்கம்*



முன்தோன்றி மூத்தகுடி என்றுபெயர் பெற்ற
மூவாத தமிழினத்தை நாவுமிசை வைப்பாம்
பின்தோன்றிப் பெரும்புரட்சி மோதிஎழச் செய்த
பெருமானாம் ஈரோட்டார் வாழ்கஇனி தென்றே!

*தமிழ்ப் பண்பு வணக்கம்*

தூய தோழரவர் தூய்மை மாறிவிடம்
தோய்ந்த சோறளிக்கும் போதிலும்
நேய மோடுவுனும் நாக ரீகமின்ன
நேர்ந்த பண்புதொழு தேத்துமே
சாதி பேதமெனும் தீய பூதமதைச்
சாய்த்து வெற்றிமாலை சூடிடும்
நீதி நாதனவர் சோதி யானதந்தை
நேர்மைப் போர்க்குணம்த ழைக்கவே!

*வாழ்த்து*

நெறிதரு கருத்துரை நிறைகவே
நிறைதலின் நலம்நனி பெருகவே
வெறிதவிர் உணர்வுகள் பொழிகவே
பொழிதலின் உயர்நிலை பொலிகவே

பகுத்தறி வெனுஞ்சுடர் படர்கவே
பெரியவர் அரும்பணி தொடர்கவே
புகுத்திடும் புதுமைகள் மலர்கவே
பெரியவர் புகழ்க்கதை வளர்கவே!

*வைக்கம் அறப்போரில் பங்கு பெற்றுத் திரும்பி வந்த தந்தை பெரியாரையும் - அவருடன் சென்று திரும்பிய வீரர்களையும் காண வருமாறு மகளிரை அழைத்தல்.*



# கடை திறப்பு

—கவிஞர் மதுரைவாணன்

புதுமைகள் மலர்ந்திட மலர்ந்திட
புரட்சிகள் குவிந்திட குவிந்திட
பதுமைகள் மறைந்திட மறைந்திட
பனிமொழி யவர்கடை திறமினோ!

நெறிமுறை வலுவுற வலுவுற
நெஞ்சகம் உரமுற உரமுற
பெரியவர் மகிழ்வுற மகிழ்வுற
பெருங்கத வுடனுடன் திறமினோ!

(வேறு)

அறிவி லாதயினம் அறிவி லோங்கதினம்
அரிய பாதைதரு தந்தையின்
உரிய தானபணி விளைவு காணஇனி
உயர்ந லீர்கடைகள் திறமினோ!

அறையில் வாடிவந்த அழகு மாதரினம்
அணிபெற் றோங்கச்செயும் தந்தையின்
பொறையி லானவெற்றி நினைத்துப் பார்க்கஇனி
பூவைந லீர்கடைகள் திறமினோ!


வருமின் பொங்குதுயர் களைமின் எனறுவைக்கம்
வருந்திக் கேட்டதொரு நிகழ்ச்சியால்
திருந்த வேவைத்த தந்தை யின்திறன் பெற
செங்கை யீர்கடைகள் திறமினோ!

(வேறு)

பாவலர் அவர்திறம் பாடவும்
பாரெலாம் அவரணி சேரவும்
காவலர் எனத்திகழ் தந்தையைக்
காணக் கபாடம் திறமினோ!

பெரியார் உழைப்பின் பெருக்கத்தால்
பெரிதாய் நிறையும் நலமெல்லாம்
அரியார் அவரென் றுணர்ந்துதொழ
அம்பொற் கபாடம் திறமினோ!

பெரியார் தலைமை கிடைத்ததனால்
பேதம் உலகில் மறைந்துவிடும்
உரியார் அவரை வணங்குதற்கே
ஓங்கும் கபாடம் திறமினோ!







பைந்தமிழ் மொழியில் உருவாகிய 96வகை சிற்றிலக்கியங்களில் ஒன்று, பரணி. தமிழ் இலக்கிய வீதியில் ஜெயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணி—ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப் பரணி எனச் சில பரணி நூல்கள் உலா வந்துள்ளன. இவையெல்லாம் மன்னர்களைப் பாட்டுடைத் தலைவர்களாக்கிப் பெருமிதம் கொண்டுள்ளன.

அண்மைக் காலத்தில் ஈரோட்டில் தோன்றி—தமிழ் மக்களால் 'தந்தை' என்றும், 'பெரியார்' என்றும் பாராட்டப் பெற்று—தமிழ்ச் சமுதாயத்தின் நலன்களைக் காக்கும் வகையில் மாபெரும் போர் வீரராக—புரட்சிக்காரராகத் திகழ்ந்த பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் புகழ்—தொண்டு—பணி—வெற்றிச் செய்தி ஆகியவற்றைப் 'பெரியார் பரணி' என்ற மகுடமிட்டு பெரியாரின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி, 'தமிழரசு' பெருமையுடன் வெளியிடுகிறது.

பரணியின் அமைப்புக்குள் புதுயுகத்திற்கு ஏற்ற வகையில், பொருந்துகின்ற அமைப்புகளை எடுத்துக் கொண்டு புதிய கோணத்தில்—ஒவ்வொரு அமைப்பையும் ஒவ்வொரு கவிஞரைக் கொண்டு உருவாக்கி வெளியிட்டுள்ளோம்.



# நாடு பாடியது

—கவிஞர் செங்கைப் பொதுவன்

தமிழ்ப்ப டைக்க ளத்திடைத்
தனிப்ப டச்சி றக்கவே
அமைப்பி னைப்ப டைத்தவர்
அமர்ந்த நாடு பாடுவாம்.

(வேறு)

நீட்டு கின்றவெயில் நீள்வி ரல்கள்பட
நீரெ லாம்வறல் காடென
வாட்டு கின்றஇன வன்சு ரண்டல்களில்
வாழ்வி ழுந்தவர் நாடரோ!

நப்பி னோடுதழை பூம ரங்களடி
நச்சுத் தீயெரி காடென
அப்பர் பாடுதமிழ் கேட்டி ருந்தஇறைக்
காரி யந்திணி நாடரோ!

ஆந்தை பொந்தில்வர ஆடிப் பாடும்நரி
அல்லி ருட்கடுங் காடென
மாந்தர் பேய்கள்வர வாட்டும் பூதமென
மாய்ந்தி டுங்கொடு நாடரோ!

(வேறு)

ஆனைபோய் வயற்கரும்பை அழிக்கும் காடு
ஆவின்பால் கல்தலையில் கொட்டும் நாடு
தானேநண் டளைநீங்க நரிதின் காடு
தற்பலியாய் வீரர்தலை தரும்பாழ் நாடே!

ஒட்டுணிகள் மரஞ்செடியை உறிஞ்சும் காடு
உயர்வென்றே பெண்ணுரிமை ஒடுக்கும் நாடு
பட்டுடையார் தலைக்கேறப் பூக்கும் காடு
பசித்திருந்தே பணம்உண்டி சேர்க்கும் நாடே!

கழுகனையும் மாடனையும் கடவுள் என்றே
கருதியதன் பொருளுணராக் கசடர் நாடு
கழுதென்றும் பேயென்றும் காட்டும் காட்டும்
காட்டாதேல் விதியென்றே தீட்டும் தீட்டும்

கோயிலுக்குள் சிலர்நுழையக் கூடா தென்றே
கொடியவர்கள் கொக்கரித்துக் கூறும் நாடு
தாயிடத்தில் பிள்ளைகளைத் தாரார் தாரார்
தந்தாலும் பிள்ளைதொடப் பாரார் பாரார்!

# கோயில் பாடியது

—கவிஞர் ஈரோடு தமிழன்பன்



*(தாழிசைகள்)*

வருண பேதமாம் மடமை நோயினை
வளர்க்கும் சமயமே நாட்டின் பீடையாம்.
திருடர் கூட்டமே கோயில் ஆகுமேல்
தேசம் எங்குமே மாசின் வாடையாம்!

பழைய தேதிகள்—பாழ்மைச் சாதிகள்;
பறித்து வீசிட மறுக்க லாகுமோ?
தழைத்து வேற்றுமை சிலரைக் கோயிலில்
தடுத்து வைத்தது வைக்கம் ஊரினில்.

ஆதி திராவிடர் நாதி யற்றனர்
அந்த ஊரினில் நொந்து வாடினர்.
தாதை கண்டனன் மோதிப் பாய்ந்தனன்
*கோயில் தாழினை யார்க்கும் நீக்கினன்*

நாதம் வாடினால் கீதம் வாழுமோ?
நாடு வாழுமோ பேதம் கூடினால்?
நீதிப் பார்வையில் யாரும் ஒன்றென
நேரச் செய்வதே தந்தை கொள்கையாம்!

# பாரம்பரியம்

—கவிஞர் இரா. வைரமுத்து



அக்கினிக் குழம்புகள் அள்ளி எடுத்துப்
பக்குவ லேகியம் படைத்த கிழவனே!

இளைத்துக் கிடந்த ஈசல் களுக்கு
வண்ணத்துப் பூச்சியின் வாழ்வளித் தவனே!

விழித்தால் மரணம் விளையுமென் றஞ்சித்
தூங்கிக் கிடந்த வேங்கையை எழுப்பி
நகங்களை நீதான் ஞாபகப் படுத்தினாய்:
முகங்களில் மீசை முளைப்பதைச் சொன்னாய்.

தள்ளாடும் வயதிலும் சருகான தில்லைநீ
ஓலையாய்த் தானே உபயோக மானாய்.

இத்தனை சாதனை வித்தைகள் புரிய
எத்தனை பரம்பரை இருந்தது உனக்கு?

இரணிய மின்னல் எழுந்ததே அதுவும்
சித்தரின் நெருப்புச் சித்தார்ந் தங்களும்
மட்டுமா உன்னை மாற்றின? இல்லையே!

வால்டேர் செய்த வார்த்தைப் புரட்சிகள்!
டார்வின் வீசிய தத்துவ வெடிகள்!
காரல் மார்க்சின் கனத்த கருத்துகள்!
ரஸ்ஸல் புரிந்த ரசவா தங்கள்!
விஞ்ஞா னிகளின் மெய்ஞ்ஞா னங்கள்!
இத்தனை உரங்கள் இட்டத னால்உன்
மூளையில் மூலிகை முளைத்தது தந்தையே.

சூரிய மருந்து பட்டதும் வானில்
உடுக்கள் என்னும் வடுக்கள் மறையும்.

உன்கரம் பட்டதும் எம்முடல் தன்னில்
காயம் மறைந்தொரு மாயம் நிகழ்ந்தது

பூனைஉன் குறுக்கே போனால் அந்தப்
பூனைக் குத்தான் மரணம் நிச்சயம்.

வேருக்கு மூலம் விதையெனச் சொன்னால்
விதைக்கு மூலம் எதுவெனச் சொல்வோம்?

நீயே உனது பாரம் பரியம்
சிந்தித் தால்,உன் சாரம் புரியும்.



# பேய் முறைப்பாடு

—கவிஞர் இ. முத்துராமலிங்கம்

(...சாதியப் பேய், தீண்டாமைப் பேய், சனாதனப் பேய், மூடநம்பிக்கைப் பேய், அறியாமைப் பேய் ஆகிய பேய்களெல்லாம் அறிவுலக தேவன் பெரியாரிடம் முறையீடு செய்கின்றன...)

சாதியப் பேய்

சமுதாயப் புற்றினிலே வளர்ந்த
சாதியச் சர்ப்பங்கள்! நாங்கள்
அமுதல்ல; ஆலகாலம்! அறிந்தே
விழுங்கிய ஐயா நீ, நீலகண்டன்!...

தீண்டாமைப் பேய்

ஆதியில் நாங்களில்லை; அண்டவந்தோர்
பாதியில் எமை வளர்த்தார்! சமூக
நீதியின் எரிமலை நீ! எங்கள்
நீள்கரம் பொசுக்கலாமோ?...

சனாதனப் பேய்

மானிடர் வியர்வை நெய்தே
மனு(அ)தர்ம ஆடை பூண்டோர்
கூனிக் குறுகுடுத்தோம்! உன்றன்
குறுந்தடியால் குடை சாய்ந்தோம்!...

மூடநம்பிக்கைப் பேய்

விழிகளை மேயும் வேதஇமை; நாங்கள்
விடியலையே தின்னும் வெறுமை இருட்பூச்சி!
பலிகளின் இரத்த பீடம்! உன்னால்
பகுத்தறிவுச் சலவைக் கல்லானோம்!...

அறியாமைப் பேய்

விழுதனைய வெண்தாடி! வேதியர்க்கோ
வினாக்குறி! புராண இருட்புதரின்
பொழுது புலர்சூரியன்! அறியாமைப்
பேயோட்டும் அறிவுலக மாந்திரீகன்!...

அனைத்துப் பேய்கள்

வெண் தேக்கு மரங் கொளுத்தி
வெறுஞ் சாம்பல் பூசிவிட்டோம்!
வேள்வித் தீயையே விழுங்கிய நீ
வெண்தாடித் தீக் கோழி...!



சுயமரியா தையென்னும்
சுடர்கொளுத்தித் தமிழ்நாட்டின்
இருள்கி ழிக்கப்
பயமறியா ஆண்சிங்கம்
போன்றேவந் தவதரித்தார்
எங்கள் ஐயா!

சின்னத்தாய் அம்மைக்கும்
சீர்த்திமிகு வெங்கடப்பர்
தமக்கும் சொக்கப்
பொன்னொத்த திருமேனிப்
பெரியார்தாம் வந்துதித்தார்
ஈரோட்டு ஊரில்!

"கடவுள்இல்லை இல்லை; அதைக்
கற்பிப்பான் முழுமூடன்
முட்டாள்! சாதித்
தடைகள்இல்லை! எல்லாரும்
சமம்" என்ற அவர் சொல்லுக்
கிணையா உண்டு?

சொந்தமொழி தமிழ்எனினும்
சொரணைகெட்ட சிலதமிழர்
தரத்தில் தாழ்ந்து
இந்திமொழி இங்குவர
நடைபாவாடை விரித்தல்
கொடுமை என்றே...
எங்கேயும் தனதுகுரல்
எதிரொலிக்க முழங்கியஎம்
பெரியா ருக்கு

'வெங்காயம்' பிறர்எதிர்ப்பு!
வெல்லமல்ல உயிர்அவர்க்கு!
பகைதித் திப்பு!

குடிக்காதே, அதனால்உன்
குடிகெடுமே! பழிவருமே!
புராண மெல்லாம்
படிக்காதே! அவையாவும்
புனைசுருட்டே! அறிவியலில்
ஊக்கம் கொள்க!

தன்மானம் கருதிடுக!
தமிழ்மானம் காத்திடுக!
அதன்மூ லம்தான்
உன்மானம் மரியாதை
உயரும்என் றறிந்திடுக'
என்று ரைத்தார்!

எழுத்துச்சீர் திருத்தத்தால்
இனியதமிழ் பிறமொழிகள்
தமக்கீ டாகச்
செழித்துச்சீர் பெறும்;வளரும்!
செம்மையுறும் எனச்சொன்னார்!
அறிஞர் ஏற்றார்!

அடுப்பூதும் பெண்படித்தல்
அவசியமா என்றோரை
அவர்கண் டித்தார்!
துடிப்போடும் நாடுயரத்
துவளாமற் பாடுபட்டார்
வெற்றி பெற்றார்!

—கவிஞர் இல. இராசேந்திரன்

*மற்றொரு புறம்*
*(குலக்கல்வி எதிர்ப்புப் போர்க்களம்)*

பள்ளிஎலாம் சனாதனத்து நஞ்சைக் கல்விப்
பாலோடு கலந்துவைத்துக் கொடுக்க வந்த
குள்ளநரிச் செயல்செய்தோர் ஆதிக் கங்கள்
குற்றுயிராய்த் துடிப்பதனைக் காண்மின்!
காண்மின்!

சாதிகளால் பிரித்துவைத்து நமது மானச்
சமுதாயம் தனைத்தாழ்த்திச் சுரண்டி வந்த
நீதியிலாக் கசடரவர் மணிமு டிக்கு
நெருப்பிட்டுக்கொளுத்தியபின் சாம்பல் காண்மின்!

*பரணி பாடீரோ!*

தென்னர் படையின் செருவீரம்
திசைகள் எட்டும் உணர்வித்த
மன்னர் தந்தை பெரியாரின்
மகிமைப் பரணி பாடீரோ!

இந்நூற் றாண்டின் செயங்கொண்டான்
என்னும் புதுவைப் பாவேந்தன்
தன்னைத் தொடர்ந்து கவிப்பெரியீர்!
தந்தை பரணி பாடீரோ!

வையம் அறியாப் பேரறிஞன்
வளரும் சமுதா யப்புரட்சி
செய்யும் யுகத்தின் தனித்தலைவன்
சிறப்பைத் தமிழால் பாடீரோ!

எங்கள் தமிழர் சூத்திரர்கள்
என்போர் திமிரை அடக்கிவைத்த
சிங்கத் தலைவன் பெரியாரின்
திருப்பேர்ப் பரணி பாடீரோ!

கடவுள் சாதி மதமென்னும்
கழுவில் நம்மை ஏற்றிவைத்த
மடமைத் தனத்தின் தோலுரித்த
மன்னன் பரணி பாடீரோ!



வைக்கம் வீரன், செந்தமிழர்
வாழ்வை உயர்த்தி நலம்காத்து
வைக்கும் வீரன் எனவாழ்ந்த
வாகைப் பரணி பாடீரோ!

புரட்சித் தலைவன் நம்முதல்வன்
புவனப் பெரியார் புகழ்க்கெல்லாம்
அரண்செய் முகந்தான் விழாநடத்தும்
அருமை நினைந்து பாடீரோ!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



# தந்தை பெரியார்

## நூற்றாண்டு விழா


திருவாரூர்

ஆகஸ்ட் 25 26 - 1979

பதிவு எண். M. 8676







புலவர் புலமைப்பித்தன், எம்.எல்.சி.

வடதிசை இமமுடி தெறித்திட
வளர்தமிழ் மகள்தளை அறுத்திட
விடுதலை விளைவது குறித்திட
விழிகளில் சினஅனல் தெறித்திட

பொருபடை ஒருபடை அமைத்தனன்
புதுநெறி அறநெறி வகுத்தனன்
செருவிடை மதகரி நிகர்த்தவன்
செகமுழு துணர்புகழ் நிகழ்த்துவன்

*வீரர்கள்*

கருநிற உடைகளை அணிந்தனர்
கலிகடல் எனஉடன் எழுந்தனர்
பெரியவர் வழியினில் நடந்தனர்
பிழையற மொழியரண் அமைக்கவே!



கொடிகரும் முகிலினை மறைத்தன
குரல்களும் இடிஒலி குறைத்தன
வடிநறை அமுதெனும் தமிழ்க்குயிர்
விடுவிடு எனும்ஒலி மிகுத்ததே!

பலகையில் வடபுல எழுத்தினை
பலகைகள் கருமையில் அழித்தன
அலகைகள் எனுமவர் வெறிச்செயல்
அறவழி மறவர்கள் ஒழித்தனர்

சிறைகளின் கதவுகள் திறந்தன
சினவிழி அரிகளும் புகுந்தன
பெறலரும் உயிர்பல பிரிந்தன
பிரிவினில் உரிமைகள் இணைந்தன

*குலக்கல்வி எதிர்ப்புப்போர்*

குலத்தினின் அடிப்படை தனிற்றொழில் புகுத்திடு
சதிச்செயல் தடுத்து நமனோர்
நலத்தினை நிலைப்பட நிறுத்திட அறச்சமர்
நடத்திட நினைத்த பெரியார்

பகுத்தறி வினப்படை கலித்தெழு திரைக்கடல்
எனத்தமிழ் முழக்கி மறியல்
வகைப்படு தனிச்சமர் இமைப்பினில் அமைத்தனன்
மடைத்தடை உடைத்த புனல்போல்

நகர்ப்புற மனைத்திலும் சிறுச்சிறு பதிக்குளும்
நயத்தகு விளக்க வுரையால்
இகற்றடை அகற்றினன் செயக்கொடி பொறித்தனன்
எடுத்ததை விடுத்த திலையே!

நாடு முற்றுங் காரு டைத
ரித்த வீரர் கூட்டமே!
கேடு கெட்ட தீய சூழ்ச்சி
வீழ்ந்த தென்று காட்டுமே!
பாட சாலை எங்கும் அன்று
பாடிவீ டமைந்ததே!
தாடி கொண்ட வேந்தன் ஆணை
தானைகண் டெழுந்ததே!

சாதி பார்த்து நீதி சொல்ச
னாதனங் கவிழ்ந்ததே!
நீதி காத்த தாதை காலில்
வெற்றியும் குவிந்ததே!



## களம் பாடியது

*(இந்திப்போர்)*

வடவோர்மொழி கடிபோலியின்
உதிரங்கரு நிறமாய்
அடல்சேர்தமிழ் மறவோர்படை
வழியச்சினம் தணியும்

தார்கொண்ட வெண்தாடி வேந்தன் தானை
தார்கொண்டு பூசிவட ஆதிக் கத்தின்
வேர்கண்டு வீழ்த்தியதால் இந்திப் பேயின்
விலாநொறுங்கிக் கிடக்கின்ற விளைவு காண்மின்!

தாலமுத்து நடராசன் மாண்ட பின்னும்
தளராத பெருவீரம் காட்டிக் காட்டிச்
சீலமற்ற வடஇந்தி ஆதி பத்யம்
செருக்களத்தில் உருக்குலைத்த சேதி காண்மின்!



தளபதியாம் அண்ணாவும் அய்யா வோடு
தமிழ்காக்கச் சிறைபுகுந்த கணமே அந்தக்
களமுழுதும் புரட்சிஎனும் குருதிப் பூக்கள்
கால்வைத்த இடமெல்லாம் சிவக்கக் காண்மின்!

கொத்தடிமை நமையாக்க எண்ணி, வந்த
கொற்றத்தின் முற்றுகைக்குத் துணையாய் அன்று
முத்தமிழர் நாட்டினிலே இடம்கொ டுத்த
மூர்க்கரவர் முதுகெலும்பின் சிதறல் காண்மின்!

புகைவண்டி நிலையத்தின் பலகை எல்லாம்
போர்க்களத்துச் சயத்தம்பம் போலத் தொன்மை
வகைகண்ட தமிழ்‘எழுத்தின்’ வடிவம் கண்டு
வாய்பிளந்த இந்திப்பேய் அவலம் காண்மின்!



# தவறு செய்வோர் திருந்திட...

குடித்ததாக மட்டுமே கைது செய்யப்பட்டிருப்பவர்களும், தண்டனை அடைந்து சிறையில் இருப்பவர்களும் உடனடியாக விடுதலை செய்யப் படுவார்கள். ஆனால், குடித்துவிட்டுக் கலாட்டா செய்து வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டதற்காகக் கைதானவர்களும், தண்டனை விதிக்கப் பட்டவர்களும் விடுதலை செய்யப்படமாட்டார்கள்.

சாராயம் காய்ச்சியதாகவும், சாராயம் கடத்தியதாகவும், அப்படிப்பட்டவர்களுக்கு உதவியதாகவும் கைதானவர்களும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களும் விடுதலை செய்யப்படமாட்டார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள்மீதும், சாராயக்கடத்தல்காரர்கள் மீதும் தொடர்ந்து கடும் நடவடிக்கை எடுக்கப் படும்.

தவறு செய்கிறவர்களின் உள்ளத்தில் அச்சத்தை ஏற்படுத்தவே மதுவிலக்குச் சட்டத்தைக் கடுமையாக்கினோம். மதுவிலக்கைத் தீவிரப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டத்தால் ஒரு பாவமும் அறியாத ஏழைக் குடும்பங்கள் தவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றி வந்த கணவன்மார்கள் சிறையில் இருப்பதால் பல ஏழைக் குடும்பங்கள் அவதிப்படுகின்றன. அதன் காரணமாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப் படுகின்றது.

எங்களைப் பொறுத்தவரை, அடித்தளத்தில் உள்ள மக்கள் துன்பப்படக் கூடாது; அவர்கள் திருந்த வேண்டும் என்பதற்காகவே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தோம்.

இதைச் செய்வதால் குடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டது என்று அர்த்தமல்ல; முதல் தடவையாகக் குடித்துவிட்டுக் குற்றம் செய்தவர்களுக்குத் திருந்த வாய்ப்புத்தர வேண்டும் என்பதற்காகவே இதைச்செய்கிறோம். ஆனால், குடித்துவிட்டு வன்முறையில் ஈடுபட்டவர்களையெல்லாம் என்னால் காப்பாற்ற முடியாது. அவர்களை அவர்கள்தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

மது அருந்திவிட்டு வீட்டிலேயே இருக்கலாம் என்று நினைப்பவர்கள் அதைச் சட்டப்படி செய்ய வேண்டும். இப்படி நான் கூறிவிட்டதால் எல்லோரும் இனி கள்ளச் சாராயம் குடிக்கலாம் என்று கருதி விடாதீர்கள். அப்படிச் செய்வது நமது நாட்டிற்கும் நல்லதல்ல; உங்கள் வீட்டிற்கும் நல்லதல்ல; கொண்டிருக்கும் கொள்கைக்கும் நல்லதல்ல.

குடித்துவிட்டு வரும் கணவனிடமிருந்து அடிவாங்கும் தாய்மார்களை, அதனால் சோற்றுக்கு வழியின்றித் திண்டாடும் குடும்பங்களைக் காக்க வேண்டும் என்பது எனது ஆசை. அதை நிறைவேற்றத்தான் சட்டம் கொண்டு வந்தேன்.

அந்தச் சட்டத்தால் ஏதேனும் விபரீதம் ஏற்பட்டால், அதைத் தவிர்க்க வேண்டியதும் அரசின் கடமையாகும்.

குடிப்பதனால் கைது செய்யப்படுகிறவர்கள் தண்டிக்கப்படும்போது தாய்மார்கள் கஷ்டப்படுவதைப் பற்றியும், சம்பாதித்துப் போட ஆளில்லாமல் கஷ்டப்படுவது பற்றியும் சிந்தித்துப் பார்க்காமல் இருக்க முடியாது.

அப்படியிருந்தால் அண்ணாவின் தம்பியாக இருக்க முடியாது !

நான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்று சொல்ல நான் விரும்பவில்லை. இந்தச் சட்டத்தைக் கடைப் பிடிக்கும் போது கூட, தாய்மார்கள் கண்ணீர் சிந்தக் கூடாது என்பதே என் நோக்கமாகும்.

அதே நேரத்தில் மதுவிலக்கைத் தீவிரமாக அமலபடுத்தவும் செய்வோம்.

—மாண்புமிகு முதல்வர்

**திரு எம். ஜி. ஆர்.**

*(தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில் பேசியது. 20-9-1979)*



# 10 கேள்விகள்

**மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர்**
**திரு பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள்**
**'தமிழரசு' இதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டி**



**தமிழகத்தில் புதிய அரசு மலர்ந்தபின், அரிசன நலத்துறையின் ஆக்க பூர்வமான பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு என்ன?**

*தமிழகத்தில் புதிய அரசு மலர்ந்த பின் அரிசன ஆதிவாசிகள் நலத்துறையின் ஆக்கப்பூர்வ பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு பின்வருமாறு:*

| | ஆண்டு முதலில் ஒதுக்கிய நிதி ஒதுக்கீடு ரூ. இலட்சங்களில் |
|---|---|
| 1977—78 | 1595.09 |
| 1978—79 | 1694.46 |
| 1979—80 | 1941.13 |

**அந்த நிதி ஒதுக்கீட்டின்படி இந்த இரண்டாண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள முக்கியத் திட்டங்கள் யாவை?**

2. *அந்த நிதி ஒதுக்கீட்டின்படி இந்த இரண்டாண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள முக்கிய திட்டங்கள் வருமாறு.*
*1977-78-1978-79*

**அரிசனங்கள்-பழங்குடியினர்.**

1. **கல்வி**
   1. படிப்புதவித் தொகைகள்
   2. பள்ளிகள்
   3. நண்பகல் உணவு
   4. பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் பழுது பார்த்தல்
   5. உடைகள்
   6. புத்தகங்கள், பலகைகள், பள்ளிச் சாதனங்கள் வழங்கல்
   7. ஆசிரியர்களுக்கு வீடுகள்
   8. மாணவர் சுற்றுலா
   9. பரிசுப் பொருட்கள்
   10. மாணவர் இல்லங்கள் பராமரிப்பு
   11. மாணவர் இல்லங்கள் கட்டுதல்
   12. பகுதி நேர ஆசிரியர்கள்
   13. உணவு மானியம்
   14. தேர்வு முன் பயிற்சி நிலையம்
   15. தொழிற்பயிற்சி நிலையங்கள், கல்வி நிலையங்கள், பல்கலைக் கழகங்களுக்கான இழப்பீட்டுத் தொகை
   16. தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சி
   17. குழந்தைகள் நல நிலையங்கள் திறத்தல்

2. **வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றம்**
   18. வேளாண்மை (உழவு மாடுகள் வழங்குதல், பாசனக்கிணறு மான்யம் வழங்குதல்)
   19. பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்.
   20. குடிசைத் தொழில், உற்பத்திப் பயிற்சிப் பணி நிலையங்கள்
   21. தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோருக்கு உதவித்தொகை






# தீண்டாமை கொடிய பாவம்

தீண்டத் தகாதவர்களென ஒரு வகுப்பைத் தனியாகப் பிரித்து வைத்திருக்கிறோம். அது இந்து மதத்திற்கே ஒரு தனிப் பெரும் அவமானச் சின்னமாய் இருந்து வருகிறது.

தீண்டாமை என்பது ஒரு கொடும் பாவமாகும். கொடூரமான ஒரு குற்றமாகும். தீண்டாமை என்கிற இந்தப் பாம்பை உரிய காலத்தில் கொல்லாவிட்டால் அது இந்து மதத்தையே தின்று விழுங்கிவிடும்!

தீண்டாமை இன்னும் உயிர் வாழ்ந்தால் இந்து மதம் இறந்து போகும்.

தீண்டாமை என்பது இந்து மதத்தின் ஓர் அம்சமாக இருந்தால் என்னை இந்துவெனச் சொல்லிக் கொள்ள மறுத்திருப்பேன்.

தீண்டாமை என்கிற அதி கோரமான கொள்கையை நிலை நிறுத்துவதற்காகச் செத்துப்போன புராதன சாஸ்திரங்களையும், பழக்கவழக்கங்களையும் புதை குழியிலிருந்து இழுத்து வந்து காட்டுகிறார்கள்.

சாஸ்திரிகள் அனைவருமே திரண்டு என்னை எதிர்த்தாலும், தீண்டாமை இந்து மத அனுஷ்டானத்தில் சேர்ந்தது என்று அவர்கள் சொல்லை முற்றிலும் தவறு எனக் கோபுர உச்சியின் மீது ஏறி நின்று பகிரங்கமாகப் பறை சாற்றவும் தயங்கமாட்டேன்.

வேதம் உபநிஷத்துகள், பகவத்கீதை, ஸ்மிருதி போன்ற சாஸ்திரங்கள் முதலானவையெல்லாம் தீண்டாமையை ஆதரித்து அதற்குத் தெயவீக ஆதாரத்தைக் காட்டித் தெளிவாக வற்புறுத்துமேயானால் என்னை இந்து மதத்தில் பிடித்து வைத்துக் கொள்ள இந்தப் புவியில் எந்தச் சக்தியாலும் முடியாது. அழுகிய ஆப்பிள் பழத்தை எப்படித் தூரத் தூக்கியெறிந்து விடுவேனோ அதுபோல நான் இந்து என்பதையும் தூரத் தூக்கி எறிந்து விடுவேன்.

தீண்டாமை என்பது இந்து மதத்தின் ஒரு அம்சமல்ல; அது இந்து மதத்தின் ஒரு களங்கம் ஆகும்!

தீண்டத் தகாதவர்களையும், அரைக் காட்டுமிராண்டிகளெனச் சொல்லப்படுகிறவர்களையும் பார்த்து வருந்தி, அவர்களுக்குக் காலுங் கடந்தேனும் நியாயம் வழங்கி நாம் பிராயச்சித்தம் தேடாவிட்டால், நாம் இழைக்கும் கேடுகளையெல்லாம் அவர்கள் எதிர்க்கத் தொடங்கிவிடுவார்கள்.

தீண்டாமை என்னும் விஷமும் ஏற்றத் தாழ்வு என்கிற வேறுபாடுகளும் இந்து சமுகத்தினரின் இருதயத்திலிருந்து வேரோடு கெல்லியெறியப்பட வேண்டும்!

இன்று நமது சமுதாயம் கெட்டகாலத்தை அறிவிக்கிறது என்றால் அரிசனங்களை நாம் நடத்திய முறையும் பங்கு வகிக்கிறது என்றே நான் கருதுகிறேன்.

இந்து மதம் என்கிற உடலில் தீண்டாமை என்னும் விஷம் இருக்கும்வரை வெளித்தாக்குதல்களுக்கு இடமாகிக் கொண்டேயிருக்கும்.

தீண்டாமை என்னும் பாவத்திலிருந்து இந்து மதத்தைப் புனிதப்படுத்த வேண்டும். இனம் கண்டுகொள்ள முடியாத வண்ணம் இந்து மதத்தை உருக்குலைத்து, விகாரப்படுத்தியிருக்கும் இநதத் தீண்டாமை என்னும் பேயை விரட்ட வேண்டும்.

—காந்தியடிகள்.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்
—திருக்குறள்.



# அறிவாயுதம் வேண்டும்

தயை, தர்மம், அன்பு, நேசம் முதலிய பண்புகள் நாட்டு மக்களிடம் வளரவேண்டும். அதுதான் அவர்கள் நாகரிக வாழ்வு வாழ்கிறார்கள் என்பதற்கு அடையாளம் என்றெல்லாம் அறிஞர்கள் கூறக் கேட்டு அகமகிழ்கிறோம். விவேகானந்தரின் உபதேசத்தைப் புகழ்கிறோம். வடலூர் இராமலிங்கரின் சமரச சுத்த சன்மார்க்கத்தை வாழ்த்துகிறோம். ராஜாராம்மோகன்ராய், தயானந்தர் ஆகியோருக்கு விழா நடத்துகிறோம். நம்முடைய நாட்களிலேயே அரிஜன் நிதிக்குப் பணம் கூடத் தருகிறோம். ஆனால் தீண்டாமையை அறவே ஒழிக்கவேண்டும் வாரீர் என்று அழைத்தால், தர்மம், தயை, அன்பு, நட்பு முதலிய குணங்களெல்லாம் ஓட்டுக்குள் மறைந்து கொள்ளும் ஆமைகளாகிவிடுகின்றன. எங்கிருந்தோ கிளம்பி வைதிகம் என்னும் நாகம் சீறுகிறது. அதை அடக்க அறிவாயுதம் வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா.


தமிழரசு
மலர் 10 இதழ் 7
1—10—1979

**மாணவ மாணவியருக்கு இலவசப் புத்தகம் நோட்டுகள், சிலேட்டு முதலியன வழங்குதல்:**

ஒவ்வோராண்டும் அரிசன ஆதிவாசி நலத்துறைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், சிலேட்டு முதலியன வழங்கப்படுகின்றன. 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவர்களுக்கும் பாடப் புத்தகங்களும் 3 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்களும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவர்களுக்கும் சிலேட்டும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்கென நடப்பு நிதியாண்டில் 25,82,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மதிய உணவு:**

அரிசன நலப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு வழங்கப்படும் (120 நாட்கள்) நாட்களில் மாணவர் ஒருவருக்கு ஒரு நாளைக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் நண்பகல் உணவில் அளவு பின்வருமாறு:

| | ரூ. காசு. |
|---|---|
| 80 கிராம் அரிசி | 0.15 |
| சுவையூட்டும் பொருட்கள் காய்கறிகள் | 0.5½ |
| எரிபொருள் | 0.1½ |
| மொத்தம் | 0.22 |

'கேர்' நிறுவனம் வழங்கும் உணவுக்கான செலவு (0.29) பின்வருமாறு:

| | ரூ. காசு. |
|---|---|
| 90 கிராம் உணவு தானியங்கள் | 0.21½ |
| 6 கிராம் எண்ணெய் | 0.4½ |
| சுவையூட்டும் பொருட்கள் எரிபொருள் | 0.3½ |
| மொத்தம் | 0.29½ |

மதிய உணவுக்காக ரூ. 42,60,000- 79-80ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு மாணவனுக்கு வழங்கும் அரிசியின் அளவை 90லிருந்து 100 கிராமாகவும், 6கிராம் எண்ணெய்யை 4 கிராமாகவும் அரசு குறைத்துள்ளது. சென்னைப் பள்ளிக்கல்வி இயக்குநர் வழங்கப்படும் எண்ணெய்யின் அளவை 4 கிராமிலிருந்து 7 கிராமாக அதிகரித்துள்ளனர்.

**தனியார் இல்லங்களுக்கான உதவித்தொகை:**

உதவித்தொகை பெறும் சென்னை நகரிலுள்ள அனைத்து இல்லங்களுக்கும் மற்றும் மாவட்ட, வட்டத் தலைமை இடங்களிலுள்ள அனைத்து இல்லங்களுக்கும் ஒவ்வொரு மாணவருக்கான கட்டணம் ரூ. 35-ம் ஏனைய இடங்களிலுள்ள அனைத்து மாணவரில்லங்களுக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு மாணவனுக்கு ரூ. 30-ம் வழங்கப்படுகிறது. தனியார் இல்லங்களுக்கான உதவித்தொகைக்கு 79-80ல் ரூ. 5,69,000- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1976-77ஆம் ஆண்டு வரையில் 1 முதல் 11ம் வகுப்பு வரையில் படித்த அரிசன பழங்குடி மாணவர்களுக்கும், கிறித்துவர்களாக மதம்மாறிய அரிசன மாணவர்களுக்கும் புத்தகச் செலவுக்கும், சிறப்புக் கட்டணங்களுக்கும் படிப்பு உதவித்தொகை பணமாக வழங்கப்பட்டது. இப்படிப்பு உதவித் தொகையை வழங்குவதற்குப் பெற்றோர் காப்பாளரின் ஆண்டு வருமானம் ரூ. 3000- ஆகும். 1977-78ஆம் ஆண்டில் இருந்து 4 முதல் 10வது வகுப்பு வரையில் படிக்கும் அரிசன பழங்குடி மற்றும் கிறித்துவர்களாக மாறிய அரிசன மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரது ஆண்டு வருமானத்தைக் கருத்திற்கொண்டு பாராமல் எல்லாப் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. (1 முதல் 3 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கும் கல்வித்துறை இலவசமாகப் புத்தகங்களையும் பலகைகளையும் வழங்குகிறது) சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்கள் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தையும் தேர்வுக் கட்டணத்தையும் அரசே வழங்கி விடுகிறது. இதனால் பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1976—77 | 5,15,361 |
| 1977—78 | 6,10,070 |
| 1978—79 | 6,69,691 |

1976-77ஆம் ஆண்டு வரை மெட்ரிக்குக்குப் பிந்திய வகுப்புகளில் படிக்கும் அரிசன பழங்குடி மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரின் வருமானம் ரூ. 2500- வரை இருந்தால் மட்டுமே படிப்புக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டது. 1977-78ஆம் ஆண்டில் இருந்து அவர்களது பெற்றோரின் வருவாயைக் கருதிப் பாராமல் படிப்புக் கட்டணச் சலுகை எல்லா அரிசனப் பழங்குடி மாணவர்களுக்கும் அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு எல்லா நிலைகளிலும் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படுகிறது.





அரிசன பழங்குடி மாணவர்களுக்கு வழங்கும் இந்திய அரசு படிப்பு உதவித்தொகையில் அடங்கும் பராமரிப்புத் தொகையை, மாணவ விடுதிகளில் உள்ள மருத்துவம், பொறியியல், பட்டப்படிப்பு மாணவர்களுக்கு 1978ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1ஆம் நாளிலிருந்து மாதமொன்றுக்கு ரூ. 60- கூடுதலாக வழங்கப்படுகிறது.

**கடன் படிப்பு உதவித் தொகை:**

புகுமுக வகுப்புக்கு மேற்பட்ட பட்டப்படிப்பு படிக்கும் அரிசன பழங்குடி மற்றும் கிருத்துவர்களாக மதம் மாறிய அரிசன மாணவர்களில் கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிப்பவர்களுக்கு அளிக்கப்படும் படிப்பு உதவித் தொகையைவிட அதிகமாக தொகை செலவிட வேண்டியுள்ளதால் நிதி உதவி தேவையான மாணவர்களுக்குக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் பயன்பெற்றோர் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| ஆண்டு | பயன்பெற்றவர்கள் எண்ணிக்கை | செலவான மொத்த தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1976—77 | 2438 | 11.24 |
| 1977—78 | 2984 | 22.76 |
| 1978—79 | 4061 | 29.35 |

புகுமுக வகுப்பில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கல்வியில் சிறந்த ஒரு அரிசன மாணவருக்கும், ஒரு அரிசன மாணவிக்கும் வழக்கமாக அளிக்கப்படுகின்ற படிப்பு உதவித் தொகையுடன் ''காந்தியடிகளின் நினைவு சிறப்புக் கல்வித் தொகை'' முதல் ஆண்டு ரூ. 1,500 மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000-ம் அளிக்கப்படுகிறது. இதுபோல பழங்குடி மாணவர்களுக்கும், கிருத்துவர்களாக மதம் மாறிய அரிசனங்களுக்கும் சிறப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும், எஸ். எஸ். எல். சி. தேர்வில் முதலாவதாகவும், இரண்டாவதாகவும் வெற்றிபெறும் அரிசன மற்றும் கிருத்துவ மதத்திற்கு மதம் மாறிய அரிசன மாணவர்கள் அவர்கள் கல்லூரியைத் தொடருவதற்கு உதவி செய்யப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 80 சிறப்புக் கல்வி உதவிப் பணம் அளிக்கப்படுகிறது. மேற்கண்ட இரண்டு திட்டங்களுக்கும் வருமான வரம்பு கிடையாது. இந்த ஆண்டிலிருந்து (1979-80) ஒவ்வொரு மாவட்டத்திலும் எஸ். எஸ். எல். சி. தேர்வில் முதலாவதாகவும், இரண்டாவதாகவும் வெற்றி பெறும் அரிசன மற்றும் கிருத்துவர்களாக மாறிய அரிசன மாணவியர்களுக்கும், பழங்குடி மாணவ, மாணவியர்களுக்கும சிறப்புக் கல்வி உதவிப் பணம் வழங்க அரசு ஆணையிட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரத்தில் உள்ள அரிசனங்கள் மற்றும் பழங்குடி வகுப்பைச்சேர்ந்த பெண்கள் 20 பேருக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் முதன் முறையாக 1978-80-ஆம் ஆண்டில், வானொலி, தொலைக் காட்சி, இயந்திரவியல் பயிற்சி அளிக்க அரசு ஆணையிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும்அரிசன பழங்குடி மற்றும் கிருத்துவர்களாக மதம் மாறிய அரிசன மாணவர்களுக்குப் புகுமுக வகுப்பில் படிப்போருக்குக் கொடுக்கப்பட்டு வந்த படிப்பு உதவித் தொகை வழங்க அரசு தற்போது ஆணையிட்டுள்ளது.

**கலப்புத் திருமணங்களில் அரிசன துறையின் பங்கு என்ன?**

கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குத் தங்கப்பதக்கம் (1.5 சவரன் 14 காரட்டு) மற்றும் ரூ. 200 பண உதவி அளிக்கப்படுகிறது. சென்னையைத் தவிர மற்ற மாவட்டங்களில் அரசு நிலம் உள்ள இடங்களில் 3 செண்டு நிலம் கையகப்படுத்தப்பட்டு வீட்டுமனைக்கென வழங்கப்படுகிறது சென்னையிலுள்ள கலப்புமணத்தம்பதிகளுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் ஆகியவைகளால் ரொக்க தவணையில் வீடு கட்டித்தரும் திட்டத்தில் வீட்டுமனை வாங்க ரூ. 1,200 மான்யமாக வழங்க வழி செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1977-78-ல் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | 79 |
| 1978-79-ல் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | 55 |
| 1979-80-ல் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | 6 |

**தற்போதைய அரசு பதவி ஏற்ற பிறகு செய்த சலுகைகள்:**

1. விதவைகள் மற்றும் மனைவியை இழந்தவர்கள் கலப்பு மணம் செய்தாலும், சட்டப்படி விவாகரத்து செய்த பின் (ஆண்-பெண்) செய்யும் முதல் மணம் கலப்புத் திருமணமாக இருந்தாலும், கலப்புமணச் சலுகைகள் பெற தகுதியுடையவர்கள் என ஆணை பிறப்பித்துள்ளது.
2. கலப்பு மணத் தம்பதிகளுக்கு மேலே குறிப்பிடப்பட்ட சலுகைகளுக்குப் பதிலாக ரூ. 5,000 பணமாக (ரூபாய் 1,000 ரொக்கப் பணமாகவும் ரூபாய் 4,000 தம்பதியர் இருவரின் பெயரில் 5 ஆண்டுகளுக்கு அரசுடைமையாக்கப்

22. தோட்டக்கலை
23. சிறு தொழில்களுக்கான கடன்கள்.
24. அரிசன பழங்குடி வகுப்பைச் சார்ந்த மகளிருக்கு வானொலி தொலைக்காட்சிப் பொறிகளை இயக்குவதற்காகப் பயிற்சியளிக்கும் திட்டம்.

**3. சுகாதாரம், வீட்டு வசதி, ஏனைய திட்டங்கள் :**

25. வீட்டு வசதி
26. வீட்டு மனைகள்
27. பொதுச் சுகாதாரம்
28. குடிநீர்க் கிணறுகள்
29. மருத்துவம்
30. மின்வசதி
31. சாலைகள்
32. விளம்பரம் (அரிசன வார விழா)
33. தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குப் பரிசுகள்
34. துப்புரவான அரிசன குடியிருப்புகளுக்குப் பரிசுகள்
35. சமுதாய நிலையங்கள் - சமுதாயக் கூடங்கள்
36. கலப்புத் திருமணம்
37. சலவை செய்வதற்கான துறைகள் கட்டுதல்
38. ஈமக்கடன்கள் செய்வதற்காகத் தொகை அளித்தல்.

**4. பழங்குடியினரின் பகுதிகளின் துணைத் திட்டம் :**

39. பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத் திட்டம்
40. பழங்குடியினருக்கு வீடுகளுடன் கூடிய பள்ளிகளைத் திறத்தலும், நிர்வகித்தலும்
41. பழங்குடியினர் கிராமங்களுக்கு நீர் வழங்கும் திட்டம்.
42. பழங்குடியினர் கிராமங்களுக்கு மின்வசதித் திட்டம்.

அது தவிர 1978-79ல் கொத்தடிமைகள் புதுவாழ்வுத் திட்டங்கள் இத்துறைக்கு மாற்றப்பட்டு கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன:



1. கொத்தடிமைகள் வாழ்வில் மறுமலர்ச்சி.
2. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கான செலவுகளுக்காக ரொக்கக் கடன்கள் வழங்குவதற்கான மானியம்.
3. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு வீட்டு வசதிக்கான உதவி.
4. கொத்தடிமைகளுக்கான நிலக் குடியேற்றத் திட்டம்

மேற்சொன்ன 42 திட்டங்களுள் 1977-78-1978-79 ஆண்டுகளில் புதிதாகச் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் வருமாறு.

1 குழந்தைகள் நல நிலையங்கள் திறத்தல்.

2 . அரிசன பழங்குடி வகுப்பைச் சார்ந்த மக்களுக்கு வானொலி, தொலைக்காட்சிப் பொறிகளை இயக்குவதற்காகப் பயிற்சி அளிக்கும் திட்டம்

37 சலவை செய்வதற்கான துறைகள் கட்டுதல்

38 ஈமக் கடன்கள் செய்வதற்காக தொகை அளித்தல்

39 பழங்குடியினருக்கு விடுதிகளுடன் கூடிய பள்ளிகளைத் திறத்தலும், நிர்வகித்தலும்

40 பழங்குடியினர் கிராமங்களுக்கு நீர் வழங்கு திட்டம்.

41 பழங்குடியினர் கிராமங்களுக்கு மின் வசதி திட்டம்

மற்ற திட்டங்கள் ஏற்கெனவே செயல்பட்டிருந்தவை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன.

**அரிசனச் சமுதாய மக்களுக்கான வீட்டு வசதி வாரியத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள குடியிருப்புகள்—வீடுகள் பற்றிய விவரங்கள் என்ன ?**

1974-75ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் (தாட்கோ) மூலமாக வீடுகள் கட்டி அரிசன மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வீடுகள் ஒவ்வொன்றும் ரூ. 4000- (மலைப்பகுதிகளில் ரூ. 6000-) மதிப்பில் கட்டப்பட்டு வந்தது. 1977-78ஆம் ஆண்டில் இவ்வீட்டில் மேலும் அதிக இடவசதியளிக்கும் வகையில் நல்ல முறையில் வீடுகளைக் கட்ட ஒவ்வொன்றும் ரூ. 6000- மலைப்பகுதிகளில் ரூ. 9000- மதிப்பீட்டில் 5000 வீடுகளைக் கட்ட அரசு உத்தரவிட்டது. அதில் 31.5.79 முடிய 3909 வீடுகளைக் கட்டி முடித்தாகி விட்டது. மீதியுள்ள 1091 வீடுகளைக் கட்டும் பணியானது பல்வேறு நிலைகளில் உள்ளன. அரிசன மக்களுக்கு வீடுகளைக் கட்ட 1977-78ல் ரூ. 2.20 கோடி தாட்கோவிற்கு வழங்கப்பட்டது. அதேபோல் 1978-79ல் 1660 வீடுகளைக் கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் வீடுகளைக் கட்ட ரூ. 2.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரிசனங்களுக்கு வீட்டுமனை கையகப்படுத்தல்:**

தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி வீடற்ற அரிசனங்களுக்கு இலவசமாக வீட்டு மனை வழங்கும் திட்டமானது கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1977-78ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 63.17 இலட்சம் செலவில் 1282.66 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 20.799 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன. இவற்றிற்கு முந்தைய ஆண்டுகளில் ரூ.50 இலட்சத்திற்கும் ஒவ்வொரு ஆண்டும் செலவு செய்யப்பட்டது.

1978-79ம் ஆண்டில் ரூ. 111.29 இலட்ச செலவில் 1842.36 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 31,304 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன.

1979-80ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஈமக் கடன் செய்ய நிதி உதவி :**

அரிசனக் குடும்பங்களில் இறந்துபோகும் நபர்களுக்கு ஈமக் கடன் செய்வதற்கென நபர் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் நிதி உதவி வழங்கும் புதிய திட்டம் 1978ஆம் ஆண்டு சூலை மாதம் அரசினால் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தினை ஊரக ஆய்வாளர், ஆணையர், சென்னை மாநகராட்சி, ஆணையர், மதுரை மாநகராட்சி ஆகியோர் செயல்படுத்தி வருகின்றனர். இதற்கான நிதி ஒதுக்கீடு அரிசன நலத்துறையிலிருந்து வழங்கப்படுகிறது.

1978-79ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 5309 அரிசனக் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இதற்கான செலவு ரூ. 2,65,400- ஆகும்.

நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரிசன நலத்துறை மூலம் அரிசன-மற்றும் மலைவாழ் சமுதாய மக்களின் கல்வி வசதிக்கென அமலாக்கப்பட்ட திட்டங்கள், அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் யாவை ?**

தமிழ்நாட்டில் அரிசன நலப்பள்ளிகள் 942 உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| தொடக்கப்பள்ளிகள் | 841 |
| நடுநிலைப்பள்ளிகள் | 80 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 17 |
| மேல்நிலைப்பள்ளிகள் | 4 |
| | 942 |

இப்பள்ளிகளில் அரிசன பழங்குடியினர் மற்றும் ஏனைய வகுப்பைச் சேர்ந்தவர் சுமார் 1.66 இலட்சம் மாணவ மாணவிகள் பயிலுகின்றார்கள்.






**மாணவ மாணவிகளுக்குச் சீருடைகள் வழங்குதல்:**

அரிசன ஆதிவாசிகள் நலப்பள்ளிகளில் அல்லது அரசினர் மாணவியர் இல்லங்களில் தங்கிப்பயிலும் மாணவிகள் அனைவருக்கும் இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. அரசினர் மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் அனைத்து மாணவர்களுக்கு இரு ஜோடி சீருடைகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. அரிசன பழங்குடியினரின் நலப்பள்ளிகளில் 1 முதல் 5 வரையில் உள்ள வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் ஒரு ஜோடி சீருடை வழங்கப்பட்டு வருகிறது. 1979-80 ஆண்டில் ரூ.56.14 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**தகுதிக்கென்றே உள்ள மானியம் (Adhoc Merit Grant)**

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 60 சதவீதம் மதிப்பெண்களும் அதற்கு அதிகமாகவும் பெற்றுள்ள அரிசன பழங்குடியினர் கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய அரிசன மாணவ மாணவியர் ஒவ்வொருவருக்கும் தகுதி மான்யமாக ரூ. 300- வழங்கப்பட்டு வருகிறது. இதேபோல் கல்லூரி புகுமுக வகுப்புத் தேர்வில் முதல் வகுப்பில் தேறிய அரிசன-பழங்குடி கிறித்துவ மதத்திற்கு மாறிய அரிசன மாணவ மாணவிகளுக்கு ரொக்க மானியமாக ரூ.300- வழங்கப்பட்டு வருகிறது.

பட்ட வங்கியில் வைப்புத் தொகையாகப் போட்டு அளித்தல்) வழங்கும் மாற்றுத் திட்டத்தை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

**தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கெனத் தமிழகத்தில் உள்ள விடுதிகள் எத்தனை? அவற்றின் எண்ணிக்கை வளர்ச்சியாகும் வாய்ப்புண்டா?**

தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கெனத் தமிழகத்தில் உள்ள விடுதிகள், மாணவ மாணவியர் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| விடுதிகள் எண்ணிக்கை | மாணவ, மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|
| 615 | 38,886 |

பள்ளிகள், கல்லூரிகள், தொழிற் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு மாணவர் இல்ல வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. இதற்கான எண்ணிக்கை விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

கல்லூரி மாணவர் இல்லம் :—

| ஆண்கள் | | பெண்கள் | |
|---|---|---|---|
| | மாணவர் எண்ணிக்கை | | மாணவர் எண்ணிக்கை |
| 31 | 3,009 | 6 | 305 |

தொழிற் கல்வி மாணவர் இல்லம் :—

| ஆண்கள் | | பெண்கள் | |
|---|---|---|---|
| | மாணவர் எண்ணிக்கை | | மாணவர் எண்ணிக்கை |
| 6 | 503 | — | — |

உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லம் :—

| ஆண்கள் | | பெண்கள் | |
|---|---|---|---|
| | . மாணவர் எண்ணிக்கை | | மாணவர் எண்ணிக்கை |
| 406 | 25689 | 166 | 9380 |



அரிசன மாணவர்கள் தங்கியுள்ள அரசு இல்லங்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| மாணவர் இல்லங்களின் வகை | மாதம் ஒன்றுக்கு மாணவருக்கு ஆகும் கட்டணம் ரூபாய் |
|---|---|
| சென்னை நகரத்திலுள்ள அரசுக் கல்லூரி மாணவ மாணவியர் இல்லங்கள் | 80 |
| சென்னை மாநகரிலுள்ள அரசுத் தொழிற் பயிற்சி மாணவர் இல்லங்கள் | 65 |
| வெளியூர்களிலுள்ள அரசுக் கல்லூரி மாணவர் மாணவியர் இல்லங்கள் | 65 |
| வெளியூர்களிலுள்ள அரசுத் தொழிற் பயிற்சி மாணவர் இல்லங்கள் | 55 |
| உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான அரசு இல்லங்கள் | 45 |

ஒவ்வொரு ஆண்டும் 10 முதல் 15 விடுதிகள் கட்ட அரசுக்குப் பரிந்துரை அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் நடப்பு ஆண்டு 1979-80-ல் மேற்கொண்டு 15 விடுதிகள் கட்ட அரசு ஒப்புதல் அளித்து அதற்கான அரசு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டு 1979-80 அரசு விடுதிக்கான பராமரிப்புக்காக 229 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரிசன மக்கள் சிறுதொழில் - பெருந்தொழில் துவக்கிட என்று அரசு மூலம் எந்த அளவில் ஊக்குவிக்கப்படுகிறார்கள்?**

தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதார மேம்பாட்டைக் கண்டிடவும் சுயவேலை வாய்ப்பைப் பெற்றிடவும் வேண்டி சிறு தொழில் நடத்த வட்டி இல்லாக் கடன் அளிக்கும் திட்டம் 1968-69-ல் துவங்கப்பட்டது. இத்திட்டம் இந்து அரிசனங்களுக்கு மட்டும் ஆரம்பத்தில் செயல்படுத்தப்பட்டாலும் கிருத்துவ மதம் மாறியவர்களுக்கும் 1975-76-ம் ஆண்டு நீட்டிக்கப்பட்டது. சிறு தொழில் துவங்க அளிக்கும் கடனுதவி ரூபாய் 125-ல் இருந்து ரூ. 15,000 வரை ஆகும். 1978-79 முடிய 13439 இந்து அரிசனங்களுக்கு ரூ.94,62,460-ம் 278 மதம் மாறிய கிருத்துவர்களுக்கு ரூ. 1,75,175-ம் இத்திட்டத்தின்கீழ் கடனாக அளிக்கப்பட்டது.

அச்சகம் வைத்தல், செருப்பு தைத்தல், மோட்டார் மெக்கானிக், மருந்துக் கடை வைத்தல் மற்றும் இதர தொழில்கள் நடத்தவும் வட்டி இல்லாக் கடன் 1968-69 முதல் வழங்கப்பட்டு வருகிறது. அரிசன மக்களுக்காக வருடந்தோறும் ரூ. 10 இலட்சமும் மதம் மாறியவர்களுக்காக ரூ. 1.25 இலட்சமும் மலை சாதியினருக்காக ரூ. 0.40 இலட்சமும் ஒதுக்கப்பட்டு வருகிறது.

**தற்போதைய அரசு பதவி ஏற்ற பிறகு செய்தவை**

அரிசன மக்களுக்கு வியாபாரக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா, பெட்ரோல் பங்க் வைத்து நடத்துதல் போன்றவைகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. சைக்கிள் ரிக்ஷா விலையில் நபர் ஒன்றுக்கு ரூ. 270 வீதம் 37 நபர்களுக்கு இறுதி நிலை ரொக்கமாக (மார்ஜின் மணி) இந்த அரசு வழங்கியுள்ளது. மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாவுக்கு ஐந்து நபர்களுக்கு தலா ரூ. 750 இந்த அரசு வழங்கியுள்ளது. மீதமுள்ள தொகையை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வழங்கியுள்ளது. ஒரு நபருக்கு ரூ. 1,300 இறுதி நிலை ரொக்கமாக (மார்ஜின் மணி) ஆட்டோ ரிக்ஷா வாங்குவதற்கு இந்த அரசு வழங்கியுள்ளது. மீதித் தொகையை யுனைடெட் கமர்ஷியல் வங்கி கொடுத்துள்ளது.

பெட்ரோல் வியாபாரத்திற்கான (Petrol Dealership ) ஒரு நபருக்கு ரூ. 12,000 இந்த அரசு வழங்கியுள்ளது. இதுவரை 13,717 நபர்களுக்கு ரூ. 96.38 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு நபருக்கு ரூ. 5000 வீதம் 98 உறுப்பினர் கொண்ட தீப்பெட்டி தயாரிக்கும் கூட்டுறவு தொழிற்சாலை இராமநாதபுரம் மாவட்டம் சிவகாசியில் துவங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**வேளாண் தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ள அரிசன மக்கள் அரசு மூலம் பெறும் உதவிகள் யாவை?**

வேளாண்மைத் தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ள அரிசன மக்கள் அரசு மூலம் பெறும் உதவிகள்

வேளாண்மைத் தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ள அரிசன மக்களுக்கு விவசாயக் கிணறு வெட்டவும், உழவு மாடுகளும், விவசாயக் கருவிகள் மற்றும் விதைகளும் வாங்கவும் மானியம் வழங்கப்படுகிறது.

**விவசாயக் கிணறு மான்யம் :**

விவசாயக் கிணறு வெட்ட ரூ. 2,500 மான்யமாக வழங்கப்படுகிறது. 1977-78-ம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 537 அரிசன மக்களும் 47 அரிசன கிருத்துவ மக்களும் பயனடைந்தனர். அதேபோல் 1978-79-ல் 152 அரிசன மக்களும் 15 அரிசன கிருத்துவ மக்களும் பயனடைந்தனர்.

**உழவு மாடு மான்யம் :**

அரிசன மற்றும் அரிசன கிருத்துவ விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உழவு மாடுகள், விவசாயக் கருவிகள் மற்றும் விதைகள் இலவசமாக வழங்கும் திட்டத்தின்கீழ் 1977-78-ல் அரிசன மக்களில் 150 பேர்களும் அரிசன கிருத்துவ மக்களில் 30 பேர்களும் 1978-79-ல் அரிசன மக்களில் 104 பேர்களும் அரிசன கிருத்துவ மக்களில் 16 பேர்களும் பயனடைந்தனர்.

மேற்கண்ட இரு திட்டங்களுக்காகவும் 1977-78-ல் ரூ. 6 இலட்சமும் 1978-79-ல். ரூபாய் 3,58,700-ல் செலவு செய்யப்பட்டது.

நடப்பு நிதியாண்டில் அரிசன மற்றும் அரிசன கிருத்துவ விவசாயிகளுக்கு விவசாயக் கிணறு வெட்ட மான்யம் வழங்க ரூ. 6.98 இலட்சமும் உழவு மாடு மான்யம் வழங்க ரூ. 1.52 இலட்சமும் ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்படுகிறது.

**அரிசனக் குடியிருப்பு மக்கள் மருத்துவ வசதி பெற, அரசு மூலம் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?**

வட ஆர்க்காடு மாவட்டத்தில் அம்பேத்கார் நகர் மற்றும், ஸ்ரீனிவாச நகர் அரிசனக் காலனிகளில் உள்ள அரிசன மக்களுக்கு இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதற்காக ஆண்டொன்றிற்கு ரூ. 2,000 ஒதுக்கப்பட்டு செலவிடப்படுகிறது.

**அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்வசதி, குடிநீர் வசதி பற்றி சிறப்பாகச் சொல்லும்படி என்ன செய்யப்பட்டுள்ளது?**

நிதி ஒதுக்கீடு:

| | | இலட்சம் |
|---|---|---|
| 1977—78 | ... | 56 |
| 1978—79 | ... | 56 |
| 1979—80 | ... | 56 |

அரிசன காலனிகளுக்கு மின்னொளி வழங்க மான்யமாக மின்சார வாரியத்திற்கு வழங்கப்பட்ட தொகையில் 1-3-79-லிருந்து ரூ. 85.73 இலட்சம் இன்னும் செலவிடவுள்ளதாக மின்சார வாரியத்தின் தலைமைப் பொறியாளர் கூறியுள்ளார்.

**தற்போதைய அரசு செய்த பணி :**

மொத்தம் உள்ள 25,526 அரிசனக் காலனிகளில் 31-3-78-ல் அனைத்து 25,526 காலனி

# தீண்டாமை வேண்டாமே!

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ?
கதிரவன் சிலரைக் காயேன் என்னுமோ?
வாழ் நான்கு சாதிக்கு உணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக்கு உணவு காட்டிலுமோ?
திருவும், வறுமையும், செய்தவப் பேறும்,
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே.
குலமும் ஒன்றே! குடியும் ஒன்றே!
இறப்பும் ஒன்றே! பிறப்பும் ஒன்றே!
வழிபடு தெய்வமும் ஒன்றே! ஆதலால்,
முன்னோர் உரைத்த மொழிதவ றாமல்
எந்நாள் ஆயினும், இரப்பவர்க்கு இட்டுப்
புலையும், கொலையும், களவும் தவிர்த்து,
நிலைபெற அறத்தில் நிற்பதை அறிந்து,
ஆணும், பெண்ணும் அல்லதை உணர்ந்து,
பேணி யுரைப்பது பிழையெனப் படாது,
சிறப்பும் சீலமும் அல்லது,
பிறப்பு நலந்தருமோ பேதை யீரே!
—கபிலர்



சாதிப் பிரிவுகள் சொல்லி—அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார்—அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்

சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்;—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.
... ... ... ...

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை யில்லை.
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்—இங்கு
யாவர்க்கு மொன்றெனல் காணீர்.



நிகரென்று கொட்டு முரசே—இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்;
தகரென்று கொட்டு முரசே—பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்.
—பாரதியார்.

உறுதி உறுதி உறுதி
ஒன்றே சமுகம் என்றெண்ணார்க்கே— இறுதி
உறவினர் ஆவார் ஒரு நாட்டார்—எனல் (உறுதி)
பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை—இந்தப்
பிழைநீக்குவதே உயிருள்ளாரின் கடமை—நம்மிற்

குறைசொல வேண்டாம் உறவினர்பகை நீக்குங்கோள் —உங்கள்
குகையினை விட்டே வெளிவருவீர் சிங்கங்காள்.
—பாவேந்தர் பாரதிதாசன்



தீண்டாமை என்கிற தீய வழக்கம்
தீர தொலைந்திட நல்லநா ளாச்சு!
ஆண்டவன் பொதுவென்று நம்பின யாரும்
அந்தப் பழியை அகற்றிட வாரும்.

இந்த வழக்கம் நாளுக்கு நாளாய்
இந்து மதத்தினை வெட்டுது வாளாய்;
நிந்தை மிகுந்து அழிந்திடு முன்னே
நீங்கிட யாரும் எழுந்திடும் இன்னே!


வேதத்தி னில்லை கீதையில் இல்லை
வேறுள சாத்திரம் யாருக்கினி?
சாதித்து யாரையும் சண்டாள னென்றிடும்
சாத்திரம் சத்தியச் சம்மதமோ?



—நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை

தீண்டாமைப் பேய் அறிவீரோ—அதன்
சேட்டைகள் முற்றும் தெரிந்திடுவீரோ!

பண்டுபண் டேயுள்ள பேயாம் —இந்தப்
பாரத நாட்டைப் பாழ் ஆக்கிய பேயாம்
சண்டைகள் மூட்டிடும் பேயாம்—அது
சாத்திரி மார்பூசை கொண்டிடும் பேயாம்.



கோவிலின் வாசற் படியில்—நிதம்
கும்மாளி கொட்டிக் குதித்தாடி நிற்கும்
வாவிக் கரையிலும் நிற்கும்—அங்கு
வந்த மனிதரை ஓட்டித் துரத்தும்.

முன்னம் பெரியோர் இதனை—வெட்டி
மூடிப் புதைத்தும் உயிர்வலி கொண்டு
பின்னும் முளைத்ததே ஐயா—இது
பேய்களும் அஞ்சும் பெரியபேய் ஐயா.

இப்பெரும் பேய்இனி மேலும்—நமது
இந்திய நாட்டில் இருந்திட லாமோ?
கப்பலில் ஏற்றிடுவோம் ஐயா—நடுக்
காயல் கடல்கண்டு தள்ளுவோம் ஐயா.

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

களுக்கும் மின்னொளி வழங்கப்பட்டன என்றும், தற்போது புதிதாகத் தோன்றியுள்ள சில காலனிகளுக்கு மட்டுமே மின்னொளி வழங்கப்படவேண்டும் எனவும், அவைகளுக்கு மின்னொளி வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தமிழ்நாடு மின்சார வாரிய செயலாளர் தெரிவித்துள்ளார்.

**குடிதண்ணீர் வசதி :**

அரிசன காலனிகளில் குடிதண்ணீர் வசதிக்காக கிணறு தோண்டுவதற்கு உச்ச வரம்புத் தொகை ரூ. 5,000-லிருந்து ரூபாய் 6,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

முன்பெல்லாம் அரசு அங்கீகாரத்தின் பேரில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு வந்தன. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எங்கெங்கே நீர்த் தொட்டிகள் அவசியமோ அங்கங்கே கட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் குடிதண்ணீர் வசதியில்லாத காலனிகளில் தண்ணீர் இருந்தும் குடிக்க லாயக்கில்லாத — வசதியற்றகாலனிகளுக்கும் 1978-79-ல் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கத் தீவிர திட்டம் வகுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தீண்டாமை ஒழிப்பை மூலநோக்கமாகக் கொண்டும், தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாக் கமிட்டியின் பரிந்துரையைக் கருத்தில் கொண்டும் அரிசன மக்களுக்கு இலவசமாக வீட்டுமனைக்காக நிலம் கையகப்படுத்தும் திட்டத்திலும், வீடுகள் கட்டி இலவசமாக வழங்கும் திட்டத்திலும் பிற்பட்ட வகுப்பினருக்கு 10 விழுக்காடு ஒதுக்கப்பட்டிருப்பதுபோன்று முற்பட்ட வகுப்பினருக்கும் 10 விழுக்காடு ஒதுக்கீடு செய்ய 1979 மார்ச் மாதம் அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

துப்புரவுத் தொழிலாளர்களுக்கு தள்ளு வண்டிகள், கரண்டிகள் ஆகிய உபகரணங்கள் விநியோகம்:

நகரப் பஞ்சாயத்து மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு தள்ளுவண்டிகள், கரண்டிகள் ஆகிய உபகரணங்கள் விநியோகிப்பதற்காக 1977-78-ல் அரசு ரூ. 1,31,730 வழங்கியது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு 1978-79 இல் ரூ. 9,66,400 கோரப்பட்டது. அது இன்னும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**நடமாடும் காவற்படை**

நடமாடும் காவற்படை ஏற்கனவே கோவை, மதுரை, தென்ஆர்க்காடு, தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நிறுவப்பட்டு, குடிமை உரிமைச் சட்டம் 1955-ன் கீழ் தீண்டாமை ஒழிப்பிற்காகப் பணிபுரிந்து வந்தது. அரசு ஆணை எண். 119, சமூக நலத் துறை, நாள் 23-1-79-ல் மேலும் 7 மாவட்டங்களில், முறையே செங்கற்பட்டு, இராமநாதபுரம், கன்னியாகுமரி, வடஆர்க்காடு, நீலகிரி, சேலம் தர்மபுரி, ஆகிய மாவட்டங்களில் நிறுவ ஆணையிடப்பட்டது.



**பழங்குடி மாணவர் இல்லங்கள் :**

அரிசன நலத் துறையில் பழங்குடி மாணவர்களுக்கென்று 19 உணவு விடுதிகள் அமைக்கப்பட்டு செவ்வனே செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 13 விடுதிகள் மாணவர்களுக்கும், 6 விடுதிகள் மாணவிகளுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விடுதிகள் சில அரசுக்குச் சொந்தமான இல்லங்களில் நடக்கின்றன. சில வாடகை இல்லங்களில் நடத்தப்படுகின்றன. 19 விடுதிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 845. இவர்களுக்கு மாதம் ரூ. 45 வீதம் உணவிற்காக செலவு செய்யப்படுகிறது. இவர்களுக்கு படுக்கை வசதிகள் ரூ. 10 முதல் 30 வரை செலவு செய்யப்படுகிறது.

பழங்குடி மாணவர் விடுதிக்காக இவ்வாண்டில் ரூ. 3,33,600 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**பழங்குடி மாணவர் பள்ளிகள் :**

பழங்குடி மாணவர்களுக்காக அரிசன நலத் துறை மூலம் உறைவிடப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | துவக்கப் பள்ளிகள் | ... 80 |
| 2. | நடுநிலைப் பள்ளிகள் | ... 11 |
| 3. | உயர்நிலைப் பள்ளிகள் | ... 2 |
| 4. | மேல்நிலை உயர்நிலைப்பள்ளிகள் | ... 2 |
| 5. | விடுதி வசதியற்ற பள்ளி | ... 1 |
| | | ... 96 |

இப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை : 5697

1979-80-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் பச்சை மலைக் குன்றுகளில் பெரியபாக்காளம் கிராமத்தில் அரசு பழங்குடியினர் தங்கிப்பயிலும் பள்ளியொன்று திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 1979-80-ம் ஆண்டில் ரூ. 0.50 இலட்சம் செலவில் நீலகிரி மாவட்டத்தில் இரண்டு அரசு பழங்குடியினர் நடுத்தரப் பள்ளிகளுக்கு பயிற்சிக் கூடங்கள் கட்டுவதற்கான அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# தாழ்த்தப்பட்ட மக்கள் நலம்

குமார. கோமேதகவேலு,
ஐ.ஏ.எஸ்,
அரிசன நல இயக்குநர்,

*'மேலிருந்தும் மேலல்லார்
மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்' —குறள்*

1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுக்குப்படி தமிழ்நாட்டில் 73,15,595 அரிசன மக்களும், 3,30,744 மலைசாதி மக்களும் வாழ்கின்றனர். இம்மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியும் மேம்பாடும் கண்டிட தமிழக அரசு பல சீரிய திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வருகிறது. அரிசன மக்கள் நல்வாழ்வுக்காகச் செலவு செய்யப்படும் ஒதுக்கீட்டுத் தொகையானது ஆண்டுக்காண்டு அதிகரிக்கப்பட்டு வருகிறது. அரிசன மற்றும் மலை சாதியினர் மேம்பாட்டிற்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 19.41 கோடி ஒதுக்கப்பட்டு செலவு செய்து வருகிறது.

அரிசன மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காகத் தமிழ்நாட்டில் அரிசன நலத் துறையினால் 942 நலப்பள்ளிகள் நடத்தப்பட்டுவருகின்றன. 87,369 மாணவர்களும், 78,844 மாணவியரும் இப்பள்ளிகளில் பயின்று வருகின்றனர். அதுபோல் மலைசாதியினருக்காக இம்மாநிலத்தில் 95 உறைவிடப்பள்ளிகளும், உறைவிடம் இல்லாத பள்ளி ஒன்றும், 19 மாணவ, மாணவியர் இல்லங்களும் உள்ளன. சுமார் 5697 மலைசாதி மாணவ மாணவியர் இதனால் சீரியமுறையில் பயனடைகின்றனர். மாணவ, மாணவியரின் தேவையைப் பூர்த்தி செய்ய ஆண்டுதோறும் புதிதாக மாணவ,மாணவியர் இல்லங்களை அரசு துவக்கியும் வருகின்றது.

தற்போது இம்மாநிலத்தில் அரிசன மாணவ, மாணவியருக்காக 615 அரசு மாணவ, மாணவியர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. 38,886 மாணவ மாணவியர் இதனால் உகந்த பயனையும், பலனையும் பெற்று வருகின்றனர்.

இச்சமூகத்தினரின் கல்வி வளர்ச்சிக்காக அரசு மேற்கொண்ட திட்டங்களில் கல்வி உபகாரச் சம்பளம் வழங்குதல் முக்கியமான ஒன்றாகும். பள்ளிக் கல்வி முதல், உயர்பட்டப்படிப்பு வரை பயிலும் இலட்சக்கணக்கான அரிசன மற்றும் மலைசாதி மாணவ மாணவியர் இத்திட்டத்தினால் பயனடைந்து வருகின்றனர்.

அரிசன முன்னேற்றத்தில் மிகவும் அக்கறை காட்டிய அண்ணல் காந்தி அடிகளின் நினைவாக, சிறப்பு உபகாரச் சம்பளம் வழங்கும் திட்டத்தையும் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. கல்வி உதவித் தொகை வழங்குவதற்காக மட்டும் கிட்டத்தட்ட மூன்று கோடியே பன்னிரண்டு இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. மருத்துவம், விவசாயம் மற்றும் தொழில் கல்வி, பொறியியல் பயிலும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு உகந்த உபகாரச் சம்பளத்திற்கு மேல் வட்டியில்லாக் கடன் உபகாரச் சம்பளத் திட்டமும் 1971-72-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றது. அரிசன மாணவர்கள் மத்திய அரசு உபகாரச் சம்பளம் பெறத் தகுதியானது அவர்களது பெற்றோர்களது வருமானம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.9,000-க்குள் இருத்தல் வேண்டும்.

அரிசன மாணவ,மாணவியரைச் சேர்த்துக்கொள்ளும் அரிசன நலத் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு அரசு மான்யம் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் பள்ளி இறுதியாண்டுத் தேர்வில் அதிக மதிப்பெண்களும், அதற்கு அடுத்தப்படியாக அதிகப்படியுள்ள மதிப்பெண்களும் பெற்றுதேர்ச்சி பெறும் இரண்டு மாணவர்களுக்கு





மேற்படிப்பில் தகுந்த ஊக்கம நல்குவதற்குச் சிறப்பு உபகாரச் சம்பளம் வழங்குதல் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 76,500- செலவிடப்பட்டு 120 அரிசன மாணவர்கள் பயனடைந்தார்கள். நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 2,34,000- ஒதுக்கப்பட்டு உள்ளது. 1979-80-ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் மாணவியர்களுக்கும் மற்றும் மலைசாதி மாணவ, மாணவியர் களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு தற்போது தனியார் வீடுகளில் உள்ள மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகளை அகற்றி, அரசு செலவில் விடுதிகள் 'தாட்கோ' நிறுவனம் மூலமாக கட்ட நடவடிக்கை ஏடுத்து வருகிறது. இதுவரையில் 45 விடுதிகள் முடிக்கப்பட்டுள்ளன.

அரிசன மக்கள் பொருளாதாரத்துறையில் மேம்பாடு கண்டிட, நீர்ப்பாசனக் கிணறு வெட்டுவதற்காகவும், உழவு மாடுகள் வாங்குவதற்காகவும், அரசு நிதி உதவி தொடர்ந்து அளித்து வருகிறது. கைத்தொழில் பயிற்சி பெற்ற ஆதிவாசிகட்கும் அரிசனங்களுக்கும், அவரவர்கட்கு உகந்த தொழில் கருவிகள் இலவசமாக வழங்கப் படுகின்றன.

பொருளாதார முன்னேற்றத் திட்டங்களில் மிகவும் முக்கியமானது, தொழில் நடந்த வட்டியில்லாக் கடன் அளிப்பதாகும். நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்து செலவிடப்பட்டு வருகிறது. சிறுதொழில் நடத்தித் தம்முடைய வாழ்வின் நலனை உயர்த்திக் கொள்ள விரும்பும் அரிசன மலைசாதியினர் இது குறித்து மாவட்ட நல அதிகாரியைச் சந்தித்து உகந்த ஆலோசனை பெறலாம். கடன் பெறக்கூடிய படிவங்கள் அவர் வசம் உள்ளன. பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை முழுமையாக அரிசன நலத்துறையின் மூலம் மட்டும் அல்லாமல், கூட்டுறவுத் துறையின் மூலமாகவும் செயல்படுத்தி வருகிறார்கள்.

**அரிசன மக்களுக்கு வீட்டு வசதி**

அரிசன மக்களுக்கு வீட்டு மனை வழங்க புறம்போக்கு நிலங்கள் இல்லாத இடங்களில் தனியார் நிலத்தைக் கையகப் படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகிறது. இத்திட்டத் திற்கென ஆண்டுதோறும் ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுச் செலவு செய்யப்படுகிறது.

வீட்டுமனை வழங்கப்பட்ட அரிசன ஆதிவாசி மக்களுக்குப் படிப்படியாக அரசு இலவசமாக வீடுகளைக் கட்டித் தருகிறது. இரண்டாவது திட்ட காலத்திலிருந்து 1973-74 வரை மான்யம் மற்றும் கடன் திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு வடிவமைப்புகளில் 21560 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டது. 1974-75 முதல் ''தாட்கோ'' மூலமாக வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. இதுவரை 'தாட்கோ' மூலமாக 38936 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

1977-78-லிருந்து அரிசன மக்களுக்குச் சமவெளியில் ரூ.6,000- மதிப்பீட்டிலும் குன்று மற்றும் மலைப்பகுதிகளில் ரூ. 9,000- மதிப்பீட்டிலும் இலவசமாக வீடுகளைக் கட்டித்தருகிறது. ஆண்டொன்றுக்கு ரூ. 220 இலட்சங்களை இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்து செலவு செய்யப்படுகிறது.

ஆதிவாசி மக்களுக்கு இதுவரை 4838 வீடுகள் கட்டிக்கொடுக்கப் பட்டுள்ளன. இது தவிர தமிழ் நாடு அரிசன வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் 199 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் எல்லா ஆதிவாசிகள் குடும்பங்களுக்கும் ஏற்ற வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஒரு கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கட்டுவதற்கென எடுத்துக் கொள்ளப்பட்ட 116 வீடுகளில் 31.3.79 முடிய 112 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தீண்டாமை ஒழிப்பிலும் அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது. உயர்சாதியினரால் ஏற்படும் அல்லல்களிலிருந்து அரிசனங்களைப் பாதுகாக்கும் பொருட்டு தென் ஆர்க்காடு, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சை மற்றும் கோவை மாவட்டங்களில் நடமாடும் தீண்டாமைக் குற்றம் ஒழிப்புக் காவல் பிரிவு செயல்பட்டு வருகின்றது. தீண்டாமை ஒழிப்பைத் தீவிரப் படுத்துவதற்காகக் கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும்பொருட்டு தங்கப் பதக்கம் பரிசளிக்கப்பட்டு வருகின்றது. கலப்புத் திருமணத் தம்பதிகளில் ஒருவர் அரிசனாகவோ மலைசாதியினராகவோ இருந்து மற்றொருவர் உயர்குடியைச் சேர்ந்தவராகவோ இருத்தல் வேண்டும். இத்தகு தம்பதிகளுக்கு 14 கேரட் தங்கத்தில் 1½ சவரன் எடையுள்ள தங்கப் பதக்கமும், நற்சான்றிதழும், 3 சென்ட் வீட்டுமனையும் பரிசாக அரசு அளிக்கிறது. கலப்பு மணம் புரிந்தவர்களுக்குத் தொழில் புரிய வட்டியில்லாக் கடனும் வழங்கப் படுகிறது. இதுவரை 713 தங்கப் பதக்கங்கள் பரிசளிக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடத்திவைத்த கலப்புத் திருமண நிகழ்ச்சி ஒன்றை இந்த இதழ் அட்டைப்படம் அணி செய்கிறது.**







தீண்டாமை ஒழிய சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு ரூ. 1000, ரூ. 500 என முறையே முதல், இரண்டாவது பரிசுகளாக ஆண்டுதோறும், மாவட்டந்தோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் சுமார் ரூ. 21,000 செலவிடப் படுகிறது.

நமது மாநிலத்தில் சுமார் 25,526 அரிசன குடியிருப்புகள் உள்ளன. தற்போது புதிதாகத் தோன்றியுள்ள சில காலனிகள் தவிர அனைத்துக் (25526) காலனிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. அவைகளுக்கு மின் இணைப்பு வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1977-78, 1978-79 ஆண்டுகளில் ஆண்டொன்றிற்கு 50 குழந்தைகள் காப்பகம் வீதம 100 குழநதைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டு செவ்வனே செயல்பட்டு வருகின்றன. 1979-80-ஆம் ஆண்டிற்கு 50 குழந்தைகள் காப்பகங்கள் திறக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் சனவரி திங்களில் தீண்டாமை ஒழிப்பு நாளாக அரிசன நல வார விழா கொண்டாடப்படுகிறது. இத்தகைய விழாக்களுக்கு ஆண்டு தோறும் செலவிடப்படும்தொகை ரூ. 31,000- ஆகும். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14-ஆம் நாள் டாக்டர் அம்பேத்காரின் பிறந்த நாளைத் ''தீண்டாமை ஒழிப்பு'' நாளாகக் கொண்டாடப்படுகிறது. அரிசன மலைசாதி மக்களது வேலை வாய்ப்பினைப் பெருக்குவதிலும் அரசு மிகவும் கவனம செலுத்திவருகிறது. அரசுவேலைகளில் 18 விழுக்காடு அரிசன மலை சாதி மக்களுக்கு ஒதுக்கப் படுகிறது.

தமிழ்நாடு பணியாளர் தேர்வுக் கழகத்தினரால் நடத்தப்படும் அரசு இளநிலை எழுத்தர், தட்டெழுத்தர் போன்ற போட்டித் தேர்வுகளுக்கு எழுதும் அரிசன மலைவாசி நபர்களுக்குச் சிறப்பு பயிற்சியானது இம் மாநிலத்தில் 15 பயிற்சி நிலையங்கள் மூலமாக அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் 60 நபர்கள் பயிற்சி பெற வசதியுள்ளது. பயிற்சியின் மொத்த காலம் 5 மாதங்களாகும். பயிற்சியின் போது பயிற்சிபெறும் நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 45 உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தினால் ஆண்டு ஒன்றுக்கு 900 நபர்கள் பயனடைவார்கள்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.போன்ற மத்திய பணியாளர்கள் தேர்வுக் கழகத்தினராக நடத்தப்படும் போட்டித் தேர்வுக்குச் செல்லும் அரிசன மற்றும் மலைசாதி நபர்களுக்கும் இலவசமாகச் சிறப்பு பயிற்சியளிக்க முன்னோடிப் பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் இயங்கி வருகிறது. பட்டயக் கணக்கருக்கான பயிற்சித் திட்ட ஒன்றும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மற்றும் பல நல்ல முன்னேற்றத் திட்டங்களை அரிசன மற்றும் மலை சாதி மக்களின் மேம்பாட்டிற்காக அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்காக அரசு செவ்வனே செயல்படுத்தி வருகின்றது. அரிசன மக்களும், மலைசாதியினரும் அச்சம், தாழ்வு மனப்பான்மை முதலியவற்றை விடுத்து, சமூகத்தில் நன்மதிப்புடன் வாழ அரசு ஆற்றும் பணிகளை செவ்வனே புரிந்துகொள்வதுடன் அவற்றினைப் பயன் படுத்த உள்ள உறுதியுடன் முன் வரவேண்டும்.



நீங்களே கண்டுகொள்ளுங்கள்

**மின்னலடிக்கும், ஸூப்பர் ரின் வெண்மை..**
**இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார்**
**எதனையும் மிஞ்சும் வெண்மை**




வேளை தவறாமல் உபயோகியுங்கள் ஸூப்பர் ரின்,
எத்தகைய வெள்ளைவெளேர் சலவை கிடைக்கிறது
பாருங்கள்—இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார்
எதனையும் மிஞ்சும் வெண்மை அது. காரணம்,
மேம்பட்ட வெளுப்பூட்டும் சக்தி அடங்கியது
ஸூப்பர் ரின். நீங்களே கண்டுகொள்ளுங்கள்.




**இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் விட அதிக வெளுப்பூட்டும் சக்தி.**

லின்டாஸ்-RIN 34-2317 TM (RR)
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

# 1924ல் தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து தந்தை பெரியாரின் அறப் போர்!

தந்தை பெரியார் மறைவதற்கு 4 மாதங்களுக்கு முன்னர் வானொலியில் அளித்த பேட்டி: பேட்டி கண்டவர் திரு. ஜி. சுப்ரமணியம்

<u>சுப்பிரமணியன்:</u>

வணக்கங்க!

<u>பெரியார்:</u>

வணக்கம்.

<u>சுப்பிரமணியன்:</u>

உங்களைப் பாத்ததிலே ரொம்ப மகிழ்ச்சி. வயதானவங்களைப் பார்த்தாலே ரொம்ப பாக்யம்னு சொல்லுவாங்க. நீங்கள் இவ்வளவு ஆண்டுக் காலம் இருந்து சமூகத்துக்கும் இந்த நாட்டுக்கும் செய்யற பணியை யாருமே மறக்க முடியாது. அப்படிப்பட்ட மகத்தான பணியை நீங்க செஞ்சிருக்கீங்க அப்படின்னு சாதாரண ஆட்களான நாங்கள் சொல்லக்கூடாது. அதைச் சொல்றதுக்கும் ஒரு தகுதி வேணும்.

<u>பெரியார்:</u>

என்னமோ அய்யா! எல்லாம் அப்படி நினைக்கிறீங்க, கௌரவத்துக்காக.

<u>சுப்பிரமணியன்:</u>

நான் மட்டும் நினைக்கலை.

<u>பெரியார்:</u>

நான் என்னமோ என்னுடைய கடமையைச் செய்யறேன். ஏதாவது பயன்படுதல் என்ற முறையிலே வாழ வேண்டுமே என்று



இருக்கிறேன், அவ்வளவு தான். நான் இன்ன இன்னது தான் செய்தாகணுங்கறது கணக்கில்லை. இருக்கிறதனாலே செய்யறேன். ஏதோ செய்துக்கிட்டு இருக்கிறேன். அவ்வளவுதான்.

சுப்பிரமணியன்:

வைக்கம் போராட்டத்திலே அய்யா ஈடுபட்டீங்களே அதைப்பத்தி கொஞ்சம் விவரமாச் சொல்லுங்க.

பெரியார்:

தீண்டாமை எதிர்ப்பு வேலையிலே நான் அப்ப முக்கியஸ்தனா போயிட்டேன். நிர்மாணத் திட்டத்தைப் பத்தி எடுத்து பேசறதிலே இந்தியாவிலே வெகு பேருக்கு அது புரியவே இல்லை. ராஜாஜி இதை முக்கியம் பண்ணினதாலே, தமிழ்நாட்டிலே அது ரொம்பப் பெரிசாப் போச்சு. வளர்ந்துட்டுது. இதுக்குள்ளே நானே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு செகரட்டரி ஆனேன். பின்பு நானே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவனானேன். தீண்டாமை எதிர்ப்புப் பிரச்சாரம் பெரிசா பிரச்சாரமாகிப் போச்சு. அது பிரபலமாகவும் போய்விட்டது.

இந்த நிலையிலே மலையாளத்திலே அது தமிழ்நாட்டோட்தானே இருந்தது .... திருவனந்தபுரம். ஆனால் ராஜாவோட ஸ்டேட். அந்த இடத்துலே ஈழவருன்னு ஒரு கம்யூனிட்டி உண்டு. அவங்க சாதாரணமா இங்கத்து நாடார் போல அங்க; ட்ரீட்மெண்ட் இங்க நாடாரை விட கடினம். ஆனா அவங்களைக் கடினமாக இழிவுபடுத்தி வந்தாங்க. அவங்க நிழலுகூட மேலே கூடப்படக்கூடாதுன்னு சொல்லுவாங்க. அந்த மாதிரியெல்லாம் — அதையும் சகிசசுக்கிட்டு இருந்தாங்க. இங்கத்து விளம்பரம் பெரிசான உடனே அவங்களுக்கு ஒரு எண்ணம் வந்தது. அந்த எண்ணம் வேணும்னு வாலே, இயற்கையாக வந்து சேர்ந்தது. அந்த ராஜாவோட பிறந்தநாளுன்னு கொஞ்ச நாள் வருஷந்தோறும் கொண்டாடுவாங்க. அந்தப் பிறந்த நாள் கொண்டாட்டம்கறது ஒரு கொட்டகை இருக்கும். பொது இடமாக கோர்ட் எல்லாம் அங்கேதான் இருக்கும். அந்த இடத்திலே பிறந்தநாள் கொண்டாடறது வழக்கம் இது வரைக்கும் கொண்டாடித்தான் வந்திருக்காங்க. அந்த வருஷமும் கொண்டாடினாங்க. அந்தக் கொண்டாடுற காலத்திலே அங்கே அந்த ஈழவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் யாவரும் நடக்கக் கூடாது.

அந்த வருஷம் நடந்தபோது அங்கிருக்கிற கோர்ட்லே ஈழவர் என்ற சுமாரான குடும்பத்தைச் சேர்ந்த வக்கீல் உள்ளே வரக் கூடாதுன்னு பகிஷ்காரம் பண்ணிட்டாங்க. இதுக்கு முன்னே அதுக்கு இணங்கியவர்தான். அந்தத் தடவை செய்த உடனே உணர்ச்சி மிக்கதினாலே அவர் அதைக் குறைவாக நினைத்து சில பேரோடு சேர்ந்து யோசனை பண்ண ஆரம்பித்தார். அப்போ காங்கிரஸில் பிரபலமாக இருந்த ஆட்களோட அவர் என்ன செய்தார், மீற வேண்டியதுதான் என்று முடிவெடுத்தார். அதாவது வேண்டாங்கறதை மீறணுங்கறது. ஜார்ஜ் ஜோஸப்புன்னு ஒருத்தர் இருந்தார். அவரு தமிழ்நாட்டிலே செல்வாக்கா இருந்தார். அங்கே அவருதான் சொந்த ஊர் சம்பனூருன்னு அதைச் சேர்ந்த பாகம்தான் அது. அவரையும் கலந்து என்ன செய்வது என்று கேட்டார்கள். தடையை மீறவேண்டியதுதான் என்று சொல்லிவிட்டார்கள்.

எங்கே மீறலாம், என்ன பண்ணணும், கொட்டாரத்துக்குள்ளே போகக்கூடாது. ஒரு இடம் செலக்ட் பண்ணலாம். பொதுஜனங்களுக்குப் பட்டு இருக்கிற மாதிரின்னு வைக்கத்தை அவங்க செலக்ட் பண்ணினாங்க. வைக்கத்தை செலக்ட் பண்ணினதுக்குக் காரணம் என்னன்னா அங்கே வைக்கத்தப்பன் கோவிலுன்னு ஒரு கோவில் இருக்கு. இந்தக் கோயில் மதில்—இந்த மதில் நாலு பக்கம் சுற்றி ஒரு மைலுக்கு. 1½ மைலுக்கு, 4 பர்லாங்குக்கு இப்படி வீதி இருக்கு. அந்த வீதியிலே ஜனங்க இருக்கறாங்க. சவர்ணாங்கற நல்ல ஜாதிக்காரங்க இருக்காங்க. அந்த சந்தர்ப்பத்திலே இந்த காரணத்தை அடிப்படையாக வைச்சு அந்த வீதியிலே இவங்கள்ளெல்லாம் (ஈழத்தவர்) போகக்கூடாது. ஆனால் அங்க முஸ்லீம், கிறிஸ்தவர்கள் போகலாம். ஆனால் ஈழத்தவர் போகக்கூடாது. பொறுத்துக்கொண்டே இருந்திருக்கிறார்கள். அங்கே கோர்ட்கூட இருக்கு. அங்கே அதிகாரிகளும் ஈழவராகப் போடமாட்டார்கள். பியூனையும் ஈழவராகப் போடமாட்டார்கள். குமாஸ்தாக்களாக போடமாட்டார்கள். அதுக்கு அவங்களும் வருத்தப்படமாட்டாங்க. ஆனாலும் அப்படி இருந்த ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து மீறதுங்கற எண்ணத்திலே புறப்பட்டாங்க. அதுலே 17 பேர் அந்தக் கூட்டத்திலே சேர்ந்தாங்க. பெரிய ஆட்களாகச் சேர்ந்தாங்க. அந்த 17 பேரும்னு சேர்ந்து ஆரம்பிச்சாங்க. தினமும் ஒண்ணு, ரெண்டு பேரா பிடிச்சு 17 பேரையும் ராஜா உள்ளே போட்டுவிட்டார். 18-வது போவதற்கு ஆளில்லே. ரகசியம் சொல்றேன். ஆளில்லாம போச்சு. அப்பொழுது ஜோஸப் இங்கே எனக்குக் கூட்டாக உதவியாக இருந்தவர் ஆதலால் அவரு ஜெயிலிலிருந்து எனக்கு ஒரு கடிதாசு எழுதினாரு. ‘ராமசாமி இங்கே நிலை இப்படி ஆகிவிட்டது; பட்டுவிட்டோம். நீ இங்கு வந்து எங்களை விடுதலை செய்தால் உண்டு; இல்லாவிட்டால் நாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வரவேண்டியதுதான். இல்லாவிட்டால் அதை நிறுத்திவிட வேண்டும். கடினமாக இருக்கு’ அப்படீன்னு ஒரு கடிதாசு ரகசியமாக எழுதினாரு.

இந்தக் கடிதாசு வந்தபொழுது நான் மதுரையிலே பண்ணைபுரங்கற ஊர்லே பிரச்சாரம்பண்ணிக்கிட்டிருக்கேன். கடிதாசியை கையிலே கொடுத்தாங்க. அவ்வளவுதான். உடனே நேராக ஊருக்குவந்தேன். ராஜாஜிக்கு ஒரு கடிதம் எழுதினேன். இந்த மாதிரி லெட்டர் வந்திருக்கிறது, நான் போகிறேன் என்று உடனே புறப்பட்டுப், போய்விட்டேன், வைக்கத்துக்கு! போன இடத்திலே ஒரு வேடிக்கைதான். அந்த ஊர் டெபுடி கலெக்டரும் போலிஸ் கமிஷனரும் ‘‘Pit இங்கிறவரும் என்னை வந்து வரவேற்று T.B.யில் கொண்டாந்து இறக்கி எனக்கு ஒரு ஆளைப் போட்டு எனக்கு வேண்டிய வேலைகளுக்கு ஏற்பாடு செய்தார்கள். நீங்க சர்க்காருக்கு விரோதமா இருக்கிறீங்க அப்படிங்கற எண்ணம் சர்க்காருக்கு இல்லை’ அப்படின்னு எனக்குச் சொல்லிவிட்டுப் போயிட்டாங்க. அந்த மாதிரி அவரு செய்யறதுக்குக் காரணம் என்னன்னா அதுக்கொரு 15 20 நாளக்கு முன்னாடிதான் திருவாங்கூர் மகாராஜா, நம்ம பங்களாவிலே இறங்கிட்டு குளிச்சு சாப்பிட்டுவிட்டு மதராஸ் போனார். அதுலே திருவாங்கூர்லேருந்து மதாாசுக்கு அப்போ அந்த வண்டி இல்லை. இந்த வண்டி வந்ததுன்னா ஈரோட்டிலே இறங்கி ஆகணும். அது அப்ப நம்ப பங்களா ரயில்வே ஸ்டேஷன் ஓரத்திலே இருந்தது. அதிலே இருந்தாங்க. அவர் போகிறபொழுது எங்களுடன் பேசிவிட்டு எங்களுக்கு ஆளுக்கொரு சால்வை கொடுத்துட்டுப் போனாரு. போன 15 நாளைக்குள்ளே இந்தச் சம்பவம் நடந்ததனாலே அவரு என்னை ரொம்ப மரியாதையாக வைச்சு அனுப்பணுங்கறதுக்காக செஞ்சார். இப்படி ஆகுமென்று நினைக்கவில்லை. நான் போனேன். போன உடன் அதேமாதிரி கூட்டத்திலே பேசினேன். என்னை அரெஸ்ட் பண்ணுவாங்கன்னு நினைச்சாங்க. அரெஸ்ட் பண்ணவில்லை. ராஜாவுடைய ஆட்கள் வரவேற்றார்கள். இதைப்பார்த்த உடனே பாமர ஜனங்களுக்கு என்னமாயிட்டுது, இவருக்கு ராஜாவே ஆதரவுங்கற மாதிரி போச்சு, கூட்டம் அதிகமாச்சு; வலுத்தது. 10,000 என்று சொன்னால் அது அதிகம் இல்லை. அவ்வளவுகூட்டம், ராஜா பொறுக்கும் வரையில் பொறுத்துப் பார்த்தார். அப்புறம் முடியவில்லை. செய்ய வேண்டாம் என்று சொல்வோம். கேட்காவிட்டால் அரெஸ்ட் பண்ணிவிடுவோம், என்று ராஜா நினைத்தார். அரெஸ்ட் பண்ணிக் கூட்டிப் போனார்கள். போன உடனே 1 மாதமோ என்னமோ தண்டித்தார்கள். அதுவும் ஒரு இடத்திலே தனியாக வைத்திருந்தார்கள். ரிலீஸ் ஆகி வந்தேன். என்னென்னா ஜெயில்லே வைக்கவில்லை. அயக்குட்டின்னு ஒரு இடம். அங்கே போலீஸ் ஸ்டேஷன். அங்கே வைத்து ஓட்டல்லே இருந்து சாப்பாடு வரும். அது முடிந்து வந்தவுடனே நான் போகமாட்டேன்னு கவர்னர் நினைச்சார். எப்படி போகாமல் இருக்க முடியும்? மறுபடியும் அந்தக் காரியத்துக்குப் போனேன். ஒரு வாரத்துக்குள் மறுபடியும் அரெஸ்ட் பண்ணிட்டாங்க. அரெஸ்ட் பண்ணி 6 மாதம் போட்டுவிட்டார்கள். அவங்க 6 மாதத்துக்கு வைக்கத்துலேருந்து திருவனந்தபுரம்சென்ட்ரல் ஜெயிலுக்குக் கொண்டு வந்து வைத்து விட்டார்கள். அங்கிருந்தேன். இருந்த பொழுது ரொம்பவும் செல்வாக்காக ஆகிவிட்டது. இரண்டு மூன்று காரணத்தினால் நான் ஜெயிலில் இருந்த பொழுது சத்ரு சம்ஹார யாகம் ஒன்று நடத்தினார்கள். ராஜா ஒத்துக் கொள்ளவில்லை. அப்புறம் ஒருவர் தலைமையேற்று யாகத்தை நடத்தினாராம். ஜெயில்லே நாங்கள் சிரிச்சிக்கிட்டு இருந்தோம். இப்படி இருக்கிறபோது 2 நாள்தான் வித்தியாசம் இருக்கும். ராஜாவுக்கு உடம்பு சரியில்லைன்னு சொன்னாங்க. அதை நாங்கள் அவ்வளவு முக்கியமாகக் கேட்கவில்லை. நடுஜாமத்திலே வேட்டு அதிர்ந்தது. என்னவென்று விசாரித்தோம். ராஜா திருநாட்டிலே இருந்து விட்டார் என்று சொன்னார். திருநாட்டிலே இருந்துட்டார்னா செத்துப் போனார்னு அர்த்தம். ராஜாவே செத்துப் போய் விட்டார். இருந்தும் நாங்க ஜெயிலில்தான் இருந்தோம். ராஜா செத்ததை முன்னிட்டு ராணி அம்மா பதவிக்கு வந்து கைதிகளை எல்லாம் விடுதலை செய்யணுன்னு சொல்லிட்டாங்க. செத்த 17 நாளிலே என்று நினைக்கிறேன் விடுதலை பண்ணிட்டாங்க. அந்த விடுதலையிலே நாங்க, 17, 1, 18பேரும் சேர்ந்தோம் நாங்க வெளியிலே வந்தோம்.

சுப்பிரமணியன்:

அதுலே தமிழ்நாட்டிலேருந்து அய்யாகூட யாராவது இருந்தாங்களா?

பெரியார்:

இருந்தாங்க. இரண்டு மூன்று பேர் இருந்தாங்க. ஒரு அய்யங்கார் இளைஞர். கால் கொஞ்சம் மொண்டியாக இருக்கும். பெயர் தெரியவில்லை. அந்த ஆள், மற்றும் பொள்ளாச்சிக்காரர் 3 பேரையும் அங்கே வைச்சிருந்தாங்க. 2-வது தடவையில் நான் மாத்திரந்தான் இருந்தேன். என்னைத்தான் அங்கே வைச்சிருந்தாங்க.



சுப்பிரமணியன்:

உங்களை காந்திஜி, நீங்க இதிலே பங்கெடுத்துக்கிட்டதாலே உங்களை வைக்கத்து வீரர் அப்படின்னு...

பெரியார்:

மன்னிக்கணும். . . அவரு சொல்லவும் இல்லே. ஒண்ணுமில்லே-இது நடந்தது. ஞாபகம் ரொம்பக் கோளாறாக இருக்கிறது. அது ஆன உடனே எங்களை ரிலீஸ் பண்ணினாங்களா? ரிலீஸ் பண்ணின உடனே எனக்கு ஒரு எல்லையைக் காட்டி 6 மாதத்துக்கு அதுக்குள்ளே போகக்கூடாதுன்னு ஒரு தடை விதிச்சிட்டாங்க. அந்த எல்லையை விட்டு விட்டு நான் மற்ற இடத்தைத் தேர்ந்தெடுத்துப் பிரச்சாரம் பண்ணிக் கொண்டு இருக்கணும். அப்போ இருந்த ஓர் ஆந்திரக்காரர் திவான், என்னமோ அய்யா, அவர் திவானாக இருந்தபோது நாங்கள் எங்களுடைய வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டே இருந்தோம். இது அடங்குவதாக இல்லை. இது நடக்கும்போது ரொம்ப வேடிக்கையெல்லாம் நடந்தது. காந்திஜி இதற்கு நேர் விரோதமாக இருந்தார். பஞ்சாபிலே இருந்த சீக்கியர்கள் நமக்கு உதவி புரிந்தார்கள். பணம் கொடுத்தார்கள். அரிசி பருப்பெல்லாம் போட்டார்கள். இதற்குள்ள சத்தியாக்கிரஹ கொட்டகை 100 அடி நீளத்திற்கும் பெரிதாகப் போட்டு 200, 300 பேர் சாப்பிடுவது போல் ஆகி பண்டிகை மாதிரி தடபுடலாகஎல்லாம் வளர்ந்து விட்டது. அந்த மறியல்லே இவங்க காந்திஜி கிட்ட, சொல்லி, காந்தி சீக்கியனுக்கு இங்கே வேலை இல்லை போகச்சொல்லு. முஸ்லீம் இதிலே கலக்கக் கூடாது; கிறிஸ்தவர்கள் இதிலே கலக்கக்கூடாது; தனியா நீந்தக்கூடிய விஷயம் அப்படி என்று சொல்லி மிகவும் மட்டம் தட்டுவதற்கு எவ்வளவு செய்ய வேண்டுமோ அவ்வளவு பண்ணினார். ராஜாஜிக்கு இஷ்டமில்லை. ''நீ வந்துவிடு. வேறே ஆளைப்போட்டு பார்த்துக்கலாம். அங்கே விட்டு விட்டு இங்கிருப்பது சரியில்லே. ஜனங்களுக்குத் திருப்தி இல்லை. வந்துவிடு. எனக்குச் செல்வாக்காக இருக்குது. எல்லாக் காரியம் நடக்கும்போல் இருக்குது.'' சீனிவாச அய்யங்கார் வந்து கூப்பிட்டார். அங்கே வந்து விடு. 'இங்கே வேண்டாம் என்று.' இருந்தாலும் ஒன்றும் கேட்கவில்லை. நடத்திக் கொண்டு தான் இருந்தோம். நடத்தினதிலே நான் துணிஞ்சுதான் இருந்தேன். கடைசியாகச் சொல்றேன். கவர்மெண்டுக்கு இது வளருது. அதனாலே இது அனுமதிச்சிட வேணும் அப்படீங்கிற எண்ணம் மஹாராணியாருக்கும் வந்துட்டுது. அந்த அம்மா சரி.. இதிலே ராஜாஜி செய்த காரியம் என்னன்னா ராகவைய்யான்னு இருந்தாரா, அந்த ஆள் என்னபண்ணினார். ராஜாஜிக்குக் கடிதாசு எழுதினார். அரசாங்கத்திலே இதுக்குச் சம்மதிச்சுட்டாங்க. இதை ஒழிச்சுக் கட்டிடலாம். நீ உடனே புறப்பட்டு வா பேசற அன்னிக்கு அப்படீன்னார். ராஜாஜி என்ன பண்ணினார், நமக்கு இதிலே ஏதாவது பெருமை வந்துடும்னு நினைச்சிட்டு ''காந்திக்குத்தான் எழுதிக் கேட்கணும்'' காந்தி வேண்டாம் என்று சொன்னவர். காந்திக்கு இதிலே சம்பந்தமே இல்லை. அரசாங்கம் ராஜிக்கு வந்துட்டுது. கூப்பிட்ட உடனே இவர் வாங்கிக்க வேண்டியது தான்; அப்புறம் காந்திக்கு எழுதினார். காந்தி அங்கிருந்து வந்தார். வந்தவுடனே இந்த மாதிரி சம்மதிக்குறாங்கன்னு தெரிஞ்ச உடனே ''சம்மதம் கொடுக்கணும்னா. ராமசாமி தானே அதிலே ஈடுபட்டுக்கிட்டிருக்கான். அவனைக் கேட்காத சம்மதம் கொடுத்தா அவன் தொடர்ந்து சத்தியாக்கிரகம் நடத்தினா என்ன பண்றது? அதனாலே அவனைக் கேட்டுக்கிட்டா தேவலாம்''னார். அப்புறந்தான் என்னை இந்த விஷயத்திலே கலக்க ஆரம்பிச்சாங்க. காந்திதானே....அப்பவும் அவர் காந்தியாகத்தான் இருந்தார். நான் அவர்கிட்டே போனேன். என்ன ராமசாமி அவர்கள் இந்தமாதிரி சொல்றாங்களே. ஒத்துக்கிட்டுப் போக வேண்டியது தானே என்ன செய்வது என்று கேட்டார். எனக்கு ஒன்னும் ஆட்சேபனை இல்லை என்றேன். அப்புறம் அந்த அம்மா கிட்ட கூப்பிடறாங்கன்னு சொன்ன உடனே காந்தியைத் தான் கூப்பிட்டாங்க அந்தம்மா. ராஜாஜியைக் கூப்பிட்டார்கள். என்னைப்பத்தி இல்லே. ஆனாலும் காந்தி எனக்குச் சம்மதம் இருக்கறதாகக் காட்டிக்கிட்டுப் போகணுங்கறதுக்காக என்னைக் கூப்பிட்டுக் கேட்டார். அவர் ஒரு இடத்திலே இறங்கினார். நான் ஒரு இடத்திலே இறங்கி இருந்தேன். அவர் திருவனந்தபுரம் கொட்டாரம்னு ரயில்வே சமுத்திரக்கரை ஓரம் இருக்கு. அங்கிருந்தார். நான் ஒரு இடத்திலே இறங்கி இருந்தேன். என்னைக் கேட்டார். எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லீங்கன்னு சொன்னேன். நான் போய்ப் பேசலாமா என்றார். போய்ப் பேசுங்களேன் என்று சொன்னேன். போனார். பேசினார். என்ன பேசினாங்க அந்த அம்மா அப்படீன்னா, இது ஆனா கோவிலுக்குள்ளே அடுத்தாப்பலே போறேன்னு பேசிக்கிட்டிருக்காரு. அது செய்யக்கூடாது. கோயில் பிரவேசத்தைப் பத்திக் கிளர்ச்சி பண்ணலைன்னு சொன்னா இப்பவே இதுலே நான் தலையிடலை. அவர் உடனே நானிருந்த இடத்துக்கே வந்தார். இந்த மாதிரி, கோவில் பிரவேசத்துக்குப் போகக்கூடாதுன்னு அந்த அம்மா சொல்றாங்க. அதுக்கு நாம என்ன சொல்றதுன்னு அவரு சாதாரணமா கேக்கறாப்பலே கேட்டார். நான் சொன்னேன். நம்ம லட்சியம் கோயில் வரைக்கும் தானே. தெருவில் போய்க்கிட்டிருந்தா என்ன ஆகும்? இந்த பேதம் ஒழியணுங்கிறதுக்குத்தானே செய்யற கிளர்ச்சி. ஆனா இப்போ அதைப்பத்தி நான் பிரஸ் பண்ணறது இல்லே. மக்களை அதுக்குப் பக்குவப்படுத்திக்கிட்டுத்தான் செய்யணும். ''அப்படிச் சொல்லலாமா'' என்றார். நல்லா சொல்லுங்க என்றேன். இவர் போனார்; 'இல்லேன்னு சொன்னார்.'' அந்த அம்மா அப்பொழுதே அனுமதிச்சுட்டாங்க. இப்ப அனுமதிச்சுட்டார். ஒரு இடத்திலே கொஞ்சம் தகராறு இருக்குது. அது வேலி போடறவரைக்கும். அதாவது ஒரு இடத்திலே என்ன தகராறுன்னா கோயில் சம்பந்தமான குளம் அங்கிருக்கு. அந்த ரோட்லே.அதுதீட்டாப்போயிடுது. கோயிலுக்குள்ளே போறாப்பலே ஆயிடும். அதுக்கோசரம் அதையும் சேர்ந்துக் கோயில் கட்டடத்தோடே வேலி போட்டு அதுக்கொரு 3 நாளோ 4 நாளோ வாய்தாக் கேட்டு அதைச் சேர்த்து அவங்க வேலி போட்டுட்டாங்க. அப்புறம் போகலாம் என்றார்கள். எல்லோரும் போய் விட்டார்கள். அந்தக் காரியம் முடிந்துவிட்டது. அப்புறம் கோயிலுக்குப் போறதைப்பத்தி அப்போ ஒண்ணும் இல்லை.



இது முடிஞ்ச உடனே பிரச்சாரம் பண்றதுக்கு ஆரம்பிச்சேன். அங்கே இங்கே அதுக்குள்ளே கோளாறு என்ன ஏற்பட்டுப் போச்சுன்னா சி. பி. ராமஸ்வாமி அய்யர். திவானா வந்தார். அவர் ரொம்பத் தந்திரமாகச் சரி செய்தார். அவங்களுக்குள்ளே ஏதோ கோளாறாக ரகளையானது. இவங்க போட்ட உத்திரவாலே கோயில் தவிர மற்றபடி உள்ள இடங்களிலே பேதமில்லை. எல்லோருக்கும் செல்றதுக்கு உரிமை உண்டு அப்படீன்னு போட்டாங்க. உரிமை இல்லாதபோது நடந்துக் கிட்டிருந்த சில இடங்களிலெல்லாம் இது வந்த உடனே ஆதிதிராவிடர்கள் எல்லாம் போக ஆரம்பித்தார்கள். இவர்கள் போன உடனே நாயர்மார்களுக்கு ஆத்திரம் பொறுக்க முடியல்லே. ஆதிதிராவிடன் எல்லாம் இங்கே வந்தாயே என்று அவர்களை அடித்தார்கள். இவர்களும் அவர்களைத் திருப்பி அடித்தார்கள். ஒரு ஆள் இறந்தார் எதிர்க்கட்சியிலே. அவர் யாரென்றால் ஈழவனாகவோ ஆதிதிராவிடனாகவோ இருந்து முஸ்லீமாக மாறினவர். அடித்த உடன் கலகம் ஆகி ஒரு ஆள் உயிரிழந்தார். கலகம் பலம் ஆகும் போலிருந்தது. சி. பி. இதை தந்திரமாக இதை வந்து ஜாதி கலகம்னு சொல்லாம தொழிலாளர் கலகம்னு சொல்லுங்கோ அப்படின்னு சொல்லி பேப்பரிலே தொழிலாளர் சண்டையினாலே ஒருத்தருக்கொருத்தர் அடிதடி ஆகிவிட்டது, என்று போட்டு உடனடியாக அந்த அம்மா கோயில் பிரவேசத்துக்கு அனுமதி போட்டுவிட்டாங்க. கோயில்லே கர்ப்பக்கிரகம் ஒண்ணைத் தவிர கோயில்லே எந்த இடத்திலும், சத்திரம், சாவடி சகலம் எல்லா ஜாதிக்காரர்களுக்கும் இந்துக்களுக்கும் அனுமதி உண்டுன்னு அந்த அம்மா ஆர்டர் போட்டுவிட்டார்கள். அதுதான் கோயில் பிரவேசம்.

சுப்பிரமணியன்:

அய்யா ரொம்ப சிரமத்தைப் பாக்காம இந்த தள்ளாத வயதிலே ஏதோ,... ரொம்ப உங்களுக்கு நாங்க சிரமம் கொடுத்திட்டோம்.

பெரியார்:

இவ்வளவு சொல்ல வேண்டியதில்லே. சொல்லக் கடமைப் பட்டிருக்கேன்.

சுப்பிரமணியன்:

ரொம்ப நன்றிங்க. வணக்கம்.

(திருச்சி வானொலி நிலையத்தில் 7.8.1973 அன்று ஒலிப்பதிவு செய்யப்பட்டு, 18.10.1973 அன்று ஒலி பரப்பப்பட்ட பேட்டியில் 'வைக்கம் போராட்டம்' குறித்த பகுதிகள் இங்கே இடம் பெற்றுள்ளன.)

## மன நிறைவைத் தரும் பணி!

—முன்னாள் அமைச்சர்

பி. கக்கன்



ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயத்தைக் காண அண்ணல் காந்தியடிகள் கனவு கண்டார்.

தீண்டாமை ஒழிப்புக்காகப் பேசியும், எழுதியும் பல தலைவர்கள், சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை உண்டாக்க அரும்பாடுபட்டார்கள்.

மகாத்மா காந்தியடிகள், அம்பேத்கார், காமராசர் போன்றவர்கள் இதற்காக அல்லும் பகலும் உழைத்தார்கள்.

'சாதிகள் இல்லையடி பாப்பா—குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்ற மகாகவி பாரதியின் வாக்கை மெய்ப்பிக்கின்ற வகையிலே, இன்று தமிழக அரசு, அரிசன நலனுக்காகப் பல்வேறு ஆக்கப் பணிகளைச் செயல்படுத்தி வருகின்றது.

அரிசன மக்கள், பழங்குடியினர் மேம்பாட்டுக்காகத் தமிழக அரசு ஆற்றி வருகின்ற பல சிறப்பான பணிகள் மன நிறைவைத் தருகின்றன.


கல்வி, தொழில், வீட்டுவசதி போன்ற பலப்பல வசதிகளை—வாய்ப்புகளை அரசு அளித்து வருவதை நாம் பாராட்ட வேண்டும்.

கிராமங்களில் அரிசனக் காலனிகளில் குடிநீர் வசதி, மின்வசதி போன்ற பணிகளையும் இன்றைய அரசு துரிதமாகச் செய்து வருகின்றது.

'சமுதாயத்தில் எல்லாரும் சமம்' என்கிற தத்துவத்தை உணர்த்துகின்ற வகையில் பணியாற்றி வருகின்ற தமிழக அரசுக்கு என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தமிழரசு' வெளியிடுகின்ற அரிசன நலச் சிறப்பிதழ், சிறந்து விளங்கிடவும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# காகிதம் பொன்போன்றது
# அதனை வீணாக்காதீர்கள்!



இன்று கல்வி வளர்ச்சிக்கும் செய்தித் தொடர்புக்கும் இன்ன பிறவற்றிற்கும் காகிதம் இன்றியமையாததாகி விட்டது. வருங் காலச் சந்ததியினரின் அறிவு வளர்ச்சிக்கும் காகிதம் பெரிதும் பயன்படும். காகிதம் பற்றாக்குறையினால் அதன் அருமையை மேலும் உணரும் காலம் வந்துவிட்டது. எனவே காகிதத்தை பயன்படுத்துவதற்குமுன் நன்கு திட்டமிட வேண்டும்.

- செய்திகளைச் சுருக்கமாக எழுதுங்கள்.
- ஒரு பக்கம் பயன் படுத்தப் பட்ட காகிதங்களை பத்திரப் படுத்தி, மீண்டும் பயன் படுத்தலாம்.
- மாணவர்கள் பழைய நோட்டுப் புத்தகங்களில் பயன்படுத்தாத காகிதங்களை ஒன்று சேர்த்து குறிப்பேடு களுக்குப் பயன்படுத்தலாம்.
- ஒரு பக்கத்தில் அச்சிடப்பட்ட அழைப்புகள், நாட்காட்டித் தாள்கள், இவற்றையும் வீணாக்கிவிடாமல் சேர்த்து மறுபக்கத்தில் எழுதுங்கள்.



- சினிமா, நாடக, பொதுக் கூட்ட, கலை நிகழ்ச்சிகள் பற்றிய விளம்பரச் சுவரொட்டிகளை மிகவும் சிக்கனமாகப் பயன் படுத்துவது நல்லது.



இப்படியெல்லாம் நாம் எலலாத் துறைகளிலும் சிந்தித்துத் திட்டமிட்டுக் காகிதங்களைச் சிக்கன மாகப் பயன்படுத்துவது அவசியமாகிவிட்டது.

## இப்போது காகிதத்தைச் சேமிப்போம்!
## எதிர்காலச் சந்ததியினருக்கு உதவுவோம்!

இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

m88 DIPR16



# மின்சாரக் கட்டுப்பாடு - புதுக் கருவி கண்டுபிடிப்பு!

குளிர்சாதன எந்திரத்தை இயங் கப் பண்ணினால்தான் உறக்கம் வரும் போலிருக்கிறது போட்டு விட்டுத் தூங்கிவிடுகிறோம். விடியற் காலத்தில் குளிரால் உடம்பு நடுங்கு கிறது. இதனால் தூக்கம் கெடு கிறது.

கிராமாந்தரங்களில் உள்ள தெரு விளக்குகள் மாலை ஆறுமணியள வில் போடப்படுகின்றன. காலை யில் அதை ஒருவர் வந்து அணைக்க வேண்டுமென்ற நிலை, அவர் வராவிட்டால் விளக்குகள் எரிந்து கொண்டேயிருப்பதால் மின்சாரம் பாழாகிறது.

இரவில், வானொலியை முடுக்கி விட்டு இசையில் மயங்குகிறோம். ஒலிபரப்பு முடிவதற்கு முன்பேயே உறங்கி விடுகிறோம். வானொலிப் பெட்டி, துண்டிக்கப்படாத மின் சாரத் தொடர்பால் பல விபரீத விளைவுகளை உண்டாக்கி விடு கிறது.

இதற்கெல்லாம் நிவாரணமே கிடையாதா என்றால், ''உண்டு'' என்று கூறி, தான் முயன்று கண்டு பிடித்த ஒரு நூதனக் கருவியை பெருமிதத்துடன் மேஜைமேல் வைக்கிறார், காமராசன் என்கிற 24 வயது இளைஞர்.

மதுரை மாவட்டத்தில், தேனி அருகே உள்ள ஓடைப்பட்டியைச் சேர்ந்தவரான இவர், அலாரம் கடிகாரத்தோடு நூதனக் கண்டு பிடிப்பு ஒன்றை இணைத்திருக் கிறார். அதில் குறித்த நேரத்திற்கு அலாரம் அடிக்க வைத்து விட்டுப் படுத்தால், நாம் நிறுத்தாத வானொலிப் பெட்டியை ஒலிபரப்பு முடிந்ததும் அதுவே நிறுத்தி விடு கிறது. மின் தொடர்பையும் துண்டித்து விடுகிறது!

குளிர் சாதன எந்திரம், மின் விசிறி, மாவு அரைக்கும் எந்திரம், குளிர்சாதனப் பெட்டி, கிராமாந் தரத் தெரு விளக்குகள் ஆகியவற் றோடு உள்ள மின்தொடர்பை குறித்த நேரத்தில் தானாகத் துண் டித்து விடுகிறது இந்த அலாரம் கடிகாரம். இதேபோல், குறித்த நேரத்திலிருந்து மின்சாரத் தொடர்பை உண்டாக்கவும், இத னால் முடியும்!


சிறு வயது முதற்கொண்டே ஏதாவது ஆராய்ந்து கொண்டிருக் கும் சுபாவம் உடையவரான திரு காமராசன் அரும்பாடுபட்டுக் கண்டு பிடித்துள்ள இந்தக் கருவி, அலாரத் தோடு சேர்த்து இருநூறு ருபாய் விலைதான் ஆகிகிறது.

எஸ். வெள்ளைச்சாமி என்பவ ரின் முதல் மகனாகப் பிறந்த இந்த இளைஞர், வேலை தேடி மட்டு மல்ல, தான் கண்டுபிடித்த 'மின் சாரக் கட்டுப்பாட்டுக் கருவி' பற்றி மேற்கொண்டு முயலவும் எண்ணி சென்னை மாநகருக்கு வந்தார்.

டி.டி.கே. நிறுவனப் பிரிவுகளின் முக்கியஸ்தர்களைக் கண்டு தனது அரிய கண்டுபிடிப்பைப் பற்றி விளக்கிச் சொன்னார். இளமையி லேயே இவருக்குள்ள ஆராய்ச்சித் திறன் கண்டு வியந்த அவர்கள், தங்கள் பிரிவு நிறுவனங்களில் ஒன்றான 'டைம் எய்ட்ஸ் இந்தியா லிமிடெட்' நிறுவனத்தின் கடிகாரப் பரிசோதனைப்பகுதியில் உடனேயே இவருக்கு ஒரு வேலை போட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

இதுபற்றி நன்றியறிதலோடு சொல்லிக் கொள்ளும் திரு காம ராசன், இந்த அரிய கருவியைத் தன் சொந்த முயற்சியிலேயே கண்டு பிடித்திருக்கிறார்.

—'ராஜு'



# அரசின் அறிவிப்புகள் - ஆணைகள் - ஆக்கப்பணிகள்

## [16 - 8 - 79 முதல் 14 - 9 - 79 முடிய]

*16—8—79*

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் உள்ள பின்தங்கிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மீன்பண்ணைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

*17—8—79*

தமிழக அரசின் சார்பில் ஏழை எளியவர்களுக்கு இலவச வேட்டி, சேலை அளிப்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, மதுரையில் மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள் 1,100 பேருக்குத் துணிகள் வழங்கினார்.

*18—8—79*

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மலைவாழ் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும், இவ்வினத்திலிருந்து கிறிஸ்துவ மதம் மாறியவர்களுக்கும் அவர்களது பெற்றோர் / காப்பாளர்கள் வருமானத்தைக் கருத்தில் கொள்ளாமல் அவர்களது எல்லா வகைப் படிப்பிற்காக முழு படிப்புக் கட்டணச் சலுகையினை 1977-78-ஆம் ஆண்டு முதல் அரசு அளித்து வருகிறது. இது போன்றே மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும் அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி (Denotified Tribes) வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்கள் / காப்பாளர்கள் ஆண்டு வருமானம் ரூ. 1500க்குள்ளாக இருப்பின் அவர்களுக்கு முழுப் படிப்புக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

*20—8—79.*

மதுரை மாவட்டத்தில் உள்ள மீன் வளர்ப்போருக்கு ஊக்கம் அளித்து, உள்நாட்டு மீன் வளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை என்ற அமைப்பினை ஏற்படுத்தி அதன் மூலம் தேவையான உதவிகளைச் செய்து வருகிறது.

*21—8—79.*

மேட்டூர் பகுதியில் 413 ஏழைகட்கு வீட்டு மனைப்பட்டாக்களை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் வழங்கினார். ரூ. 55 ஆயிரம் மதிப்புள்ள தொழிற் கருவிகளையும் அமைச்சர் வழங்கினார்.

*22—8—79.*

தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டத்தின்கீழ் நடைபெறும் குலுக்கலில் பரிசு பெற்ற பரிசுச் சீட்டுக்களுக்கு உரிய பரிசுத் தொகையைப் பெற பொதுமக்கள் விண்ணப்பிக்கும் காலத்தை அரசு ஒரு மாதத்திலிருந்து 90 நாட்களாக நீட்டித்து ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, 21—8—79 அன்று அதன் பின்னர் நடைபெறும் குலுக்கல்களிலும் பரிசு பெறும் பரிசுச் சீட்டுகளுக்குரிய தொகையைப் பொதுமக்கள் குலுக்கல் நடந்த நாளிலிருந்து 90 நாட்களுக்குள் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

*23—8—79.*

தமிழ்நாட்டில் நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் கரும்பு பயிராகின்றது. கடந்த 1977—78 ஆம் ஆண்டில் இந்தியாவில் சுமார் 80 இலட்சம் ஏக்கராவில் 1800 இலட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டது. அதில் தமிழ்நாட்டின் பாகம் 4 இலட்சம் ஏக்கரில் 170 இலட்சம் டன்.

*24—8—79.*

தமிழ்நாடு அரசின் புள்ளியியல் துறை மத்திய அரசின் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்துடன் பங்கேற்று, வர்த்தகம், போக்குவரத்து, உணவு விடுதி, தேநீர் விடுதி, கிடங்கு மற்றும் சேவைப் பிரிவு விவரங்களை 1979-80-ல் மாதிரி ஆய்வு செய்யத் துவங்கியுள்ளது.



*27—8—79.*

வாலாசாபாத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குக் கறவை மாடுகள், விவசாயக் கருவிகள், கடனுதவிகள் ஆகியவற்றை மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் வழங்கினார்.

*28—8—79.*

தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைகளில் கார் மூலம் செல்கிறவர்கள் தங்கி ஓய்வு எடுப்பதற்காக 100 மைல் தூரத்திற்கு ஒரு விடுதி வீதம் கட்டத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது என்று மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

*29—8—79.*

இந்த ஆண்டு தமிழகத்தில் 65 இலட்சம் டன் உணவுத் தானியம் உற்பத்தியாகும் என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்துள்ளார்.

*30—8—79.*

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு அடுத்த ஆண்டு (1980 ஜனவரி) முதல் வருடாந்திர சிறுவிடுப்பு ஆண்டிற்கு 20 நாட்களாக உயர்த்தப்படும். அரசு ஊழியர்கள் தொடர்ந்தாற்போல அதிகபட்சமாகப் பத்து நாட்களுக்கு (விடுமுறை உட்பட) சிறுவிடுப்பு எடுக்கலாம்.

*31—8—79.*

சென்னை நகரில் குடிசைப் பகுதிகளின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு உலக வங்கி 10 கோடி ரூபாய் உதவியைச் சென்னை மாநகராட்சிக்கு 2-வது கட்டமாகக் கொடுக்கிறது என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் தெரிவித்துள்ளார்.

*1—9—79.*

தமிழ்நாட்டில் ஒன்றரைக் கோடி குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கும் திட்டம் உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள் தெரிவித்துள்ளார்.

*2—9—79*

தமிழகம் முழுதுமுள்ள நிலமற்ற ஏழைகளுக்கு அரசு அளிக்கும் நிலம் கூட்டுப் பட்டாவாக இல்லாமல், தனித்தனியாக இருக்கவும், விரைவில் பட்டாக்கள் வழங்குவதற்காகவும் 28 புதிய யூனிட்டுகள் போடப்பட்டுள்ளன என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

*3—9—79.*

தமிழ்நாட்டில் பருப்பு வகை ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் 56 இலட்ச ரூபாய் அனுமதித்திருக்கிறது என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்துள்ளார்.

*4—9—79.*

உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் பாடப் படிப்பிலும், படிப்போடு தொடர்புடைய பிற நடவடிக்கைகளிலும் தர உயர்வுக்கு வகை செய்வதற்காக ஒவ்வொரு பள்ளியிலும் நான்கு தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. அவை : 1. கல்விக்குழு 2. விளையாட்டுக்குழு. 3. பண்பாட்டுக் குழு 4. இளைஞர் நலப் பணிக் குழு.

*5—9—79.*

ஊரக மின்சாரக் கழகம், தமிழ்நாட்டில் ஊரக மின்சாரக் கூட்டுறவுத் திட்டம் (Rural Electric Cooperative project) ஒன்றினை அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது. மாநிலத்திலேயே முதலாவதாக அமைக்கப்படும் இந்த மின்சாரக் கூட்டுறவுத் திட்டம் தஞ்சை மாவட்டத்திலுள்ள குடந்தையில் நிறுவப்படும்.

*7—9—79.*

கைத்தறிக்குத் தரப்படும் தள்ளுபடித் தொகை நெசவாளர்களுக்கு நேரடியாகக் கிடைக்க வழிவகை செய்யும் 4 அம்சத் திட்டம் பற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

*11—9—79.*

சென்னை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சிறு விவசாயிகள் விவசாயக் கூலிகள் வருமானத்தை அதிகரிக்க ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் தமிழக அரசு திட்டம் தீட்டியுள்ளது.

*13—9—79.*


தமிழகத்தில் விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச கூலி விகிதத்தை தமிழ்நாடு அரசு இம்மாதம் 15-ஆம் தேதியிலிருந்து மாற்றி அமைத்துள்ளது. இதன்படி விவசாயத் தொழிலாளர்களிடம் அதிக நேரம் வேலை வாங்கக்கூடாது. ஆண், பெண் ஊழியருக்குச் சமமான கூலி வழங்க வேண்டும். சிறுவர்களுக்கு முழுச் சம்பளம் தரவேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

*14—9—79.*

என்ஜின்கள் பொருத்தப்பட்ட படகுகள் வாங்குவதற்காக மீனவர்களுக்கு 5 சத விகிதம் உதவித் தொகை வழங்கும் ஓர் ஏற்பாட்டினைத் தமிழக அரசு பரிசீலனை செய்து வருகிறது என்று மாண்புமிகு உணவு அமைச்சர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் கூறியுள்ளார்.

# டி ஐ ஐ ஸி யின் குறிக்கோள்—
# தமிழ்நாட்டில் நலிவுற்ற பிரிவினர்களின் வாழ்வு வளம் பெறவும், பின்தங்கிய மற்றும் கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும் சிறப்பான பல திட்டங்களை அளிப்பதே!

## உங்கள் செழிப்பான தொழில் திட்டங்களைச் செயலாற்ற எங்கள் சிறப்பான நிதி உதவி!



### சிறு கடன் (Mini Loan)

இத்திட்டத்தின்படி பின்தங்கிய மற்றும் கிராமப் பகுதிகளில் பல்வேறு சிறு தொழில்கள் ஆரம்பிக்க நிதி உதவி அளிக்கப்படுகிறது. தொழில் நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், நடைமுறையில் ஒத்துவரக் கூடிய தொழில்களுக்குத் தவணைக் கடனாக குறைந்த பட்சம் ரூ. 5000/-ம் அதிக பட்சமாக ரூ. 25,000/-ம் அளிக்கப் படும். வட்டி வீதம் ஆண்டுக்கு 9%. கடனைத் திருப்பிச் செலுத்த முதல் 6 மாத காலம் விடுமுறை.
3 முதல் 5 வருடங்களில் கடனை மாதத் தவணைகளாகத் திருப்பிச் செலுத்தலாம்.
தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும், மலைச் சாதியினருக்கும் சிறப்பு சலுகைகளும் நிதியுதவியில் தளர்த்தப்பட்ட நிபந்தனைகளும் உண்டு. வட்டி வீதம் ஆண்டுக்கு 8% மட்டுமே.


### சுலப கடனுதவி/ஆரம்ப முதலீட்டு உதவி அளிக்கும் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் அமைப்புகள், தொழில்நுட்ப வினைஞர்கள் ஏற்றுமதிப் பொருட்களைத்



தயாரிக்கும் அமைப்புகள் மற்றும் அதிக வேலை வாய்ப்புகளை அளிக்கும் தொழிற் கூடங்கள் ஆகியவைகளுக்கு டி ஐ ஐ ஸி சிறப்பான சலுகைகள் வழங்கி ஆரம்ப முதலீட்டு உதவி அளிக்கிறது.

கடன் அளவு தொழில் திட்ட மதிப்பீட்டில் 20% அல்லது ரூ. 2 லட்சம் வரை. வட்டி விகிதம் ஆண்டுக்கு 1% மட்டுமே. கடனை 4 முதல் 6 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தலாம்.



### தொழில் வினைஞர்கள்:

தொழிலுக்குத் தேவையான நிலம் வாங்குதல், கட்டிடம் கட்டுதல், இயந்திரம் மற்றும் அடிப்படை உற்பத்திச் சாதனம் வாங்குதல் ஆகியவற்றிற்கு டி ஐ ஐ ஸி நிதி உதவி அளிக்கிறது. கடன் அளவு:

குறைந்த பட்சம் ரூ. 5,000 /- அதிக அளவு ரூ. 3 லட்சம். வட்டி விகிதம் 9.5%. பின்தங்கிய பகுதிகளில் வட்டி விகிதம் ஆண்டொன்றுக்கு 8%. கடனை 5 முதல் 8 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தலாம். கடனைத் திருப்பிச் செலுத்த சாதாரணமாக ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் விடுமுறையும் மற்றும் சில குறிப்பிட்ட இனங்களில் 4 ஆண்டுகள் விடுமுறையும் உண்டு.





### ஆட்டோ ரிக்ஷா

ஆட்டோ ரிக்ஷா வாங்குவதற்கு வண்டியின் விலையில் 85% வரை கடனுதவி அளிக்கப்படும். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 90% வரை கடனுதவி உண்டு. வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு 9.5%. வாங்கிய கடனை, 4 ஆண்டுகளில், மாதத் தவணைகளாகச் செலுத்தலாம்.



### மின்விசைப் படகுகள் வாங்க நிதி உதவி


மின் விசைப் படகுகள் வாங்க, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்புடன் டி ஐ ஐ ஸி தாராள நிதி உதவி அளிக்கிறது. மின் விசைப் படகின் அடக்க விலையில் அரசு மான்யம் நீங்கலாக மீதமுள்ள தொகையில் 80% வரை கடனுதவியாக அளிக்கப்படும்.



### தீப்பெட்டித் தொழில்

சின்னஞ்சிறு தீப்பெட்டி தொழிற்சாலை தொடங்குவதற்கான நிதி உதவியை, டி ஐ ஐ ஸி அந்தந்த பகுதிகளில் நடைமுறையில் இருக்கும் கடன் வழங்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டு, குறைந்த வட்டி வீதங்களில் அளிக்கும்.

மற்றும் தேவைப்பட்ட இடங்களில் எளிதான விதிமுறைகளில் சுலப கடனுதவியும், ஆரம்ப முதலீட்டு உதவியும் 1% வட்டி வீதத்தில் அளிக்கப்படும்.



### பட்டு நூல் தயாரிப்புக்கு நிதி உதவி

கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புக்கு அதிக ஊக்கம் அளிக்கும் நோக்கத்தில் பட்டு நூல் தயாரிக்கும் தொழில்களுக்கு டி ஐ ஐ ஸி எளிதான விதிமுறையில் நிதி உதவி அளிக்கிறது.

பட்டுப் பூச்சியிருந்து இழை எடுக்கும் (Reeling) தொழில்களுக்கு அதிக பட்ச உதவியாக ரூ. 25,000-ம், இழை முறுக்கேற்றும் (Twisting) தொழில்களுக்கும் மேலும் அதிக கடனுதவியும் அளிக்கப்படுகிறது. மற்றும் தமிழ் நாடு அரசு மூலமாக பங்கு மூலதன நிதி உதவி தொழில் தொடங்குவோரின் பங்கு மூலதனத் தொகை போன்ற மற்ற சலுகைகளும் அளிக்கப்படும்.


மேற்கொண்டு விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:
நிர்வாக இயக்குநர்,
**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்** ... ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014. தொலைபேசி: 83078 தந்தி: MINDVEST டெலக்ஸ்: MIIC - 7164
மண்டல அலுவலகங்கள்: கோயமுத்தூர், ம... கிளை அலுவலகங்கள்: கடலூர், தர்மபுரி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் வேலூர்.

TIIC ESTD. 1949

*புதிய தொழில்களை நிறுவவும், ... விரிவாக்கவும் விஸ்தரிக்கவும் மற்றும் புதிய துறைகளை அமைக்கவும் டி ஐ ஐ ஸி அளித்திடும் தாராள நிதி உதவியை நாடுவீர்.*

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத் துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித் தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI




# பணத்திற்குத் தூண்டில்

அவர் புகுமுக வகுப்பு தேறியவர். குளத்தில் வலைவீசி மீன் பிடித்துக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் பதட்டம், பரபரப்பு, மகிழ்ச்சி எனப் பல் வேறுவிதமான உணர்ச்சிகள் பிரதிபலித்தன. காரணம் அவர் இறங்கியுள்ள இந்த மீன் வளர்க்கும் தொழில் அவருக்குக் கை கொடுக்குமா? அல்லது கையைக் கடிக்குமா என்பதை நிர்ணயிக்கும் நாள் அது!

வாலிபர் வடமலை, திருச்சி மாவட்டம், திருவெள்ளறையைச் சேர்ந்தவர். புத்தனாம்பட்டி நேரு நினைவுக் கல்லூரியில் பி.யு.சி. படித்துத் தேறியவர். 24 வயது நிரம்பாத வடமலைக்கு வேறு வேலை கிடைக்காததால் வழிவழியாகச் செய்து வந்த விவசாயத்தில் ஈடுபட்டார். அவர் பகுதி, வானம் பார்த்த பூமி. எனவே, அவருக்குள்ள கொஞ்ச நிலத்தில் விவசாயத்தின் மூலம் மிகக் குறைந்த வருமானமே கிடைத்தது.

அப்போதுதான் அவருக்குக் கை கொடுக்க வந்தது, மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைத் திட்டம். அந்தத் திட்டத்தின் கீழ் தனது கிராமத்தில் ஆண்டிற்கு ஒரு குளத்திற்கு ரூ. 25 வீதம் 2 குளங்களை மீன் வளர்ப்பிற்காகக் குத்தகை எடுத்து, உயர் ரக மீன் குஞ்சுகளை (கட்லா, சாதா கெண்டை, சேல் கெண்டை போன்றவை) முகமையிலிருந்து பெற்று 2 குளங்களிலும் 5 மாதங்களுக்கு முன் விட்டார். இன்று ஒவ்வொரு மீனும் அரை கிலோ, முக்கால் கிலோ அளவு பருத்திருக்கிறது.

குளத்தில் தண்ணீர் வற்றக் கூடிய நிலையிலிருந்ததால் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் மேற்பார்வையில், தன்னைப்போல் மற்ற குளங்களைக் குத்தகைக்கு எடுத்த நண்பர்களுடன் சேர்ந்து குளத்தில் வலைவீசினார். காலை 4.30 மணிக்கே வேட்டை ஆரம்பம். ''அதிகாலையில் பிடித்தால்தான் மீன் கண்ணெதிரில் அகப்படுமாம்'' உற்சாகத்துடன் சொன்னார் வடமலை.

முதல் நாள் வலை வீச்சிலேயே சுமார் 50 கிலோ அளவில் அவருக்கு மீன்கள் கிடைத்தன. வலையிலே துள்ளிவிழும் கெண்டை மீன்களைப் பார்த்ததும் வடமலையின் நெஞ்சிலிருந்த படபடப்பு அடங்கி முக மலர்ச்சி ஏற்பட்டது.

'இந்தப் புதிய தொழில் பிடித்திருக்கிறதா' என்று கேட்டதற்கு, ''இருந்த இடத்திலிருந்தபடியே எந்தச் சிரமமுமில்லாமல் பணம் வரும்போது மகிழ்ச்சி இல்லாமலிருக்குமா'' என்று புன்னகையுடன் பதிலளித்தார்.

''எவ்வளவு வருவாய் எதிர்பார்க்கிறீர்கள்?''

''இந்த ஆண்டு ஆயிரம் ரூபாய் முதல், ஆயிரத்து ஐந்நூறு வரை கிடைக்கும்'' என்றார் வடமலை.

ஆம்! அவர் நம்பிக்கை வைப்பது போல், மீன்கள் வேகமாக விற்பனை ஆயின. கிராமத்துக்காரர்கள் ஒவ்வொருவரும் ஒரு கிலோ இரண்டு கிலோ என்று வாங்கிக் கொண்டு சென்றனர். வெளி மார்க்கெட்டில் கிலோ ரூ. 10 முதல் ரூ. 12 வரை மீன் விற்கிறது. இங்கு கிலோ 5 ரூபாய்க்கே விற்கப்படுகிறது. கிராமத்திலுள்ளோருக்குச் சத்துணவு கிடைக்க வேண்டுமென்பதற்காகக் கூடுமானவரை அங்கங்கே விற்க வேண்டுமென்று அரசு விதிமுறை ஏற்படுத்தியுள்ளது.

லால்குடியை அடுத்த காட்டூரைச் சேர்ந்தவர் மதியழகன், (22 வயது). இவரும் புகுமுக வகுப்பு படித்தவர்தான். இவர், காட்டூரில் ஆண்டுக்கு 200 ரூபாய் குத்தகைக்கு ஒரு குளத்தை ஏலம் எடுத்துள்ளார். கடந்த ஆண்டு இதே குளத்தை 60 ரூபாய்க்கு ஏலம் எடுத்தார். அப்போது மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை அறிமுகமாகவில்லை. எனவே, குளத்தில் தாமாக வளர்ந்த மீன்களைப் பிடித்து விற்றார். 40 ரூபாய் தான் கிடைத்தது.

ஆனால், இந்த ஆண்டு மேம்பாட்டு முகமையினர் தந்த 3000 மீன் குஞ்சுகளைக் (கட்லா, ரோகு, மிருகல், சேல் ஆகியவை) குளத்தில் விட்டார். அவர்கள் சொன்னபடி தினமும் அரிசித் தவிடும் கடலைப் பிண்ணாக்கும் கலந்து வைத்தார். இப்போது 5 மாதத்தில் ஒரு மீன், ஒரு கிலோ அளவிற்குப் பருத்துள்ளது. இவருக்கு இந்த ஆண்டு சுமார் 3,000 ரூபாய் இதன் மூலம் வருவாய் வரும்.

மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை என்ற திட்டம் (Fish Farmers Development Agency, FFDA) சென்ற ஆண்டில் முதலில் தஞ்சாவூர் மாவட்டத்தில் துவக்கப்பட்டது. பின்னர் திருச்சி, மதுரை, தருமபுரி மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டது.

1978 ஆகஸ்டு 16-ல் இந்தத் திட்டம் துவக்கப்பட்டு நவம்பர் மாதத்தில் மீன் வளர்ப்பு துவங்கியது. மாவட்ட அளவில் ஒரு முதன்மை நிருவாக அதிகாரியுள்ளார். திருச்சி மாவட்டத்தில் 3 வட்டங்களில் (7 பிளாக்குகள்) 65 குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், பொதுப் பணித்துறை, கோயில்களைச் சேர்ந்த குளங்கள். இவற்றைத் தேர்ந்தெடுத்து ஊராட்சி

அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் பரிந்துரைக்கும் நபர்களுக்குக் குளங்கள் ஏலத்திற்கு விடப்பட்டன. குளங்களில் முதல் தடவையில் இரண்டரை இலட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

திருச்சி மாவட்டத்தில் 1979 ஜூன் திங்கள் முடிய 7,950 கிலோ மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ. 14,260.85க்கு விற்கப்பட்டுள்ளது.

ஏலம் எடுக்கும் விவசாயிகள் குறைந்தது 8-வது படித்திருக்க வேண்டும். 15 நாட்கள் சென்னையிலும், சாத்தனூர், மேட்டூர், பவானி பகுதிகளிலும் மீன் வளர்ப்புப் பற்றிப் பயிற்சியளிக்கப்பட்டது.

தரமான மீன் குஞ்சுகள் தருவது, வலைகள் தருவது, வங்கிகளில் கடன் பெற்றுத் தருவது ஆகிய பணிகளை மேம்பாட்டு முகமையே செய்கிறது. ஆயினும், முகமையின் பணி, சேவையே ஒழிய இலாபம் அல்ல. குளத்தில் வரும் பலன் முழுமையும் மீன் வளர்க்கும் விவசாயிகளுக்கே போகிறது.

விவசாயியை ஊக்கப்படுத்தவும், அவருக்கு நிறைய வருமானம் வருவதற்கு வழி செய்வதற்காகவும், முகமை அலுவலர் வாரம் ஒரு முறை விவசாயியுடன் குளத்திற்குச் சென்று மேற்பார்வையிடுகிறார். அத்துடன் மீன்பிடிப்பு, விற்பனை ஆகியவையும் முகமையினர் பார்வையிலேயே நடைபெறுகின்றன.



மீன் வளர்க்கும் விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல், கிராமத்திற்கும் இத்திட்டத்தினால் நன்மை விளைகிறது. முதலாவது, மீன் வளர்ப்பதற்காகக் குளத்தை மராமத்து செய்யவும் இத்திட்டத்தில் வழியுள்ளது. இதற்காக ஒரு எக்டேருக்கு ரூ. 10,000 வரை வங்கி கடனுதவி செய்ய முன்வருகிறது. அதில் அரசு ரூபாய் 2,500 உதவித் தொகை வழங்குகிறது. குளம் ஆழப்படுத்தப்படுவதால் விவசாயத்திற்கு அதிக அளவு நீர் தேக்கி வைக்க முடிகிறது.

அண்மையில் திருச்சியை அடுத்த மண்ணச்சநல்லூர் ஒன்றியத்திலுள்ள மீன்வளர்ப்போருக்குக் குளங்களை மராமத்து செய்ய யுனைடெட் கமர்சியல் வங்கி மூலம் ரூ. 86,000 கடன் வழங்கப்பட்டது.

இரண்டாவது, சாதாரணக் குளத்து மீனைப் போலல்லாமல் இந்த மீன்கள் அதிகச் சத்துள்ளவை. எனவே, கிராம மக்களுக்குக் குறைந்த விலையில் நிறைந்த சத்துள்ள உணவு கிடைக்கிறது.

ஆனால், வழக்கமாகக் குளத்தில் சும்மா தூண்டில் போட்டு மீன் சாப்பிட்டுப் பழக்கப்பட்டுப் போனதால் சில கிராமங்களில் இந்த விலைக்கு மீன் வாங்க முன் வர மறுக்கிறார்கள். அம்மாதிரிப் பகுதிகளில் குறைந்த விலைக்கு விற்றால் மீன் வளர்ப்பவர் பாதிக்கப்படுவாராகையால், விற்காத மீன்களைத் திருச்சி நகருக்குக் கொண்டு வந்து விற்கும் பொறுப்பை மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை செய்கிறது. மீன்களைக் கிலோ ரூ. 5 விதம் விற்று அந்தத் தொகையை அப்படியே மீன் வளர்ப்போருக்குத் தருகிறது.

இத் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பது குறித்துத் திருச்சி மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் முதன்மை நிருவாக அலுவலர் திரு வெங்கட்ராமன் கூறியதாவது:

''திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 98 எக்டேர் பரப்பளவுள்ள (குளங்கள்) இடத்தில் மீன் வளர்க்கப்படுகிறது. நவம்பர் கடைசி வாரத்தில் குளங்களில் மீன் குஞ்சுகளை விட்டோம். மழைக் காலமாக இருந்தாலும், குளங்களில் அதிக நீர்த் தேக்கம் இருந்தாலும் குளத்தை மராமத்து செய்ய இயலவில்லை. எனவே, அதற்காக 1978-79-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் செலவிடப்படவில்லை. இந்த ஆண்டு, குளங்களை ஆழப்படுத்துவோம். ஆழப்படுத்தியபின் சென்ற ஆண்டைவிட அதிக வருவாய் கிடைக்கும்.

''இந்தத் திட்டத்தின் கீழ் மீன் வளர்க்க வருபவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு இருக்கிறார்கள். ஆனால், கிராமத்தில் பல்லாண்டுக் காலமாகக் குளங்களில் மீனைச் சும்மா பிடித்துப் பழக்கப்பட்ட பகுதிகளில் இந்தப் பெரிய மீன்களை விலை கொடுத்து வாங்கத் தயங்குகிறார்கள். கிலோ ஒரு ரூபாய்க்கு வாங்கத் தயங்குகிறார்கள். எல்லாக் கிராமங்களிலும் இந்நிலை இல்லை. உதாரணமாக திருவெள்ளறையில் சுமார் 2 மணி நேரத்திற்குள் கிலோ 5 ரூபாய் வீதம் எல்லா மீன்களும் விற்றுவிட்டன. இவ்வாறு விற்றால் தான் குளம் ஏலம் எடுத்தவருக்கும் இலாபம் கிட்டும், திட்டமும் வெற்றியடையும்.''

கேள்வி: மீன் குஞ்சுகள், தீனி போடுதல் ஆகியவற்றிற்கு எவ்வளவு செலவாகும்?

முதன்மை நிருவாக அலுவலர் பதில்: இதோ காளவாய்ப்பட்டி கிராமத்தை எடுத்துக் கொள்ளுங்கள். திரு சுப்பிரமணியம் 50 ரூபாய்க்கு குளம் ஏலம் எடுத்து இருக்கிறார். 5000 மீன் குஞ்சு வாங்கி விட்டார். அதற்காக ஆன செலவு ரூ. 300. தவிடு, கடலைப் புண்



## உயிரியல் கட்டுப்பாடு ஆய்வுக்கூடம்

பயிர்களுக்குச் சேதம் ஏற்படுத்தும் பூச்சிகளைக் கொல்லக்கூடிய எதிர் உயிர்கள், உயிரினக் கொல்லிகள் ஆகியவைகளை ஆராய்வதற்காக, கிருஷ்ணகிரியில் ஓர் உயிரியல் கட்டுப்பாடு ஆய்வுக்கூடம் இந்த ஆண்டில் அமைக்கப்படவிருக்கிறது.

ணாக்கு ஆகியவை போட 3 மாதத்திற்கு ரூ. 70 செலவு ஆகும். ஆனால், ஒரு தடவையிலேயே அவருக்கு ரூ. 1,500 வருவாய் கிடைக்கும். செலவிற்காக ரூ. 500 போனாலும் மீதம் ரூ. 1,000 கிடைக்கும். இவ்வாறு ஆண்டிற்கு மூன்று முறை மீன் பிடிக்க முடியும்.

கேள்வி : சாதாரணமாக என்ன வருவாய் கிடைக்கும்?

பதில் : ஒரு எக்டேர் நீளமுள்ள குளத்திலிருந்து ஆண்டுக்கு ரூ. 6,000 நிகர வருமானம் பெறலாம்.

நல்ல முறையில் மீன் வளர்த்தால், அதாவது வழக்கமான சாதாரண மீன்களையெல்லாம் அழித்துவிட்டுத் தரமான மீன் குஞ்சுகளை விட்டு, பின்னர் நாள்தோறும் தவிடு, கடலைப் பிண்ணாக்குக் கலந்து வைத்து வளர்த்தால் கட்லா, சில்வர் கார்ப் போன்ற ரக மீன்கள் 9 மாதத்தில் 1 கிலோ முதல் 1½ கிலோ வரை பருத்துவிடும். அப்படி வளர்த்தால் ஒரு எக்டேருக்கு 3 டன் அதாவது 3,000 கிலோ மீன் கிடைக்கும்.

கேள்வி: பழைய மீன் ரகங்களை அழிப்பது எப்படி?

பதில் : அது மிகவும் சுலபம். குளத்தை ஏலத்திற்கு எடுத்ததும் இலுப்பைப் பிண்ணாக்கைப் போட்டால் அதைத் தின்றுவிட்டுப் பழைய மீன்கள் எல்லாம் அழிந்துவிடும். ஒரு வாரம் கழித்துப் புதுக் குஞ்சுகளை விடலாம். பழைய மீன்களுக்கு விஷமாகயிருந்த இலுப்பைப் புண்ணாக்கு ஒரு வாரத்திற்கு, மீன் தீவனமாக மாறிவிடும்.

இந்த மீன் குஞ்சுகளை விடுமுன் குளத்தில் சாணமும், யூரியாவும் போட வேண்டும். குளத்து நீர், நிறம் மாறும் வரை இவ்வாறு போடலாம். இதன் மூலம் நுண்ணுயிர்ச் சத்துக்கள் மீன் குஞ்சுகளுக்குக் கிடைக்கின்றன. அதன் பின்னர் தவிடு, பிண்ணாக்குப் போடலாம். கடலைப் பிண்ணாக்கை ஊற வைத்துத் தவிட்டை அதனுடன் பிசைந்து உருண்டை, உருண்டையாகப் பிடித்துத் தண்ணீரின் ஓரத்தில் வைத்தால் மீன்கள் ஆவலோடு வந்து அதைச் சாப்பிடும். இவ்வாறு பழக்கப்படுத்தினால் மீன் எவ்வாறு செழித்து வளருகிறது என்பதைக் கண்ணெதிரிலேயே காணலாம். நாள்தோறும் கவனித்து வந்தால் மீன்கள் நன்றாக வளரும்; நல்ல இலாபம் கிட்டும்.



மேலும், பயிர்களுக்கு நாற்றங்கால் தயாரிப்பதுபோல், தரமான மீன் குஞ்சுகளை நாற்றங்காலில் அவர்களே தயாரிக்கக் கற்றுக் கொள்வார்களானால் அதற்கு அவர்கள் செலவிடும் தொகையும் மிச்சமாகும். அவ்வாறு செய்யவும் நாங்கள் பயிற்சி அளித்திருக்கிறோம்.

இது கிராமத்திற்கு மிக அவசியமான, எளிதாகச் செயல்படுத்தக்கூடிய திட்டம். இதற்குக் கிராமத்தார்கள், அதாவது மீன் வளர்ப்பவர்களும், வாங்குபவர்களும் நல்ல ஆதரவு தந்தால் இத்திட்டம் நல்ல பலனைத்தரும். —இவ்வாறு தலைமை நிருவாக அலுவலர் குறிப்பிட்டார்.

திருச்சி மாவட்டத்தில் இது குறித்துத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

தலைமை நிருவாக அலுவலர்,
மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை, 150-பி, பொன்னகர்,
திருச்சி-1.

**கே. நடராஜன்,**
**தனி உதவியாளர்,**
**(செய்தி-மக்கள் தொடர்பு).**
**திருச்சி.**

## கம்பம் பள்ளத்தாக்கில் காற்றுத் தடுப்பு

மதுரை மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் சில பகுதிகளிலும் மணல் காற்று வீசுவதால் வளம் மிகுந்த நிலங்களில் மணல் குவிகின்றது. இம் மணல் காற்றைத் தடுப்பதற்காக கடந்த ஆண்டில் 86 கிலோ மீட்டர் தூரத்திற்கு மணல் காற்றுத் தடுப்பிற்காக வேலி மரங்கள் நடப்பட்டுள்ளன. இதனால் திருநெல்வேலி மாவட்டத்தில் 1,692 எக்டேர் பரப்பும், மதுரை மாவட்டத்தில் 4,079 எக்டேர் பரப்பும் பயன் அடைந்துள்ளன.





# அரிசனக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி




கே. மாதவசர்மா, ஐ.ஏ.எஸ்.,
நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு குடிநீர்
வடிகால் வாரியம்



“நீரின்றி அமையாது உலகு” என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கேற்ப, அனைத்துச் சிற்றூர்களுக்கும் குடிநீர் வழங்கிடுதலைத் தமிழக அரசு தனது தலையாயக் கொள்கையாகக் கொண்டு, அனைத்து வழிமுறைகளையும் கையாண்டு வருகின்றது. தமிழக அரசின் இக் கொள்கையை ஏற்று, குறிப்பாக ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம முனைந்து செயலாற்றி வருகின்றது.

தமிழகத்திலுள்ள அனைத்துச் சிற்றூர்களிலுமுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கும பொருட்டு, குடிநீர் நிலைகள் பற்றிய அறிவியல் ரீதியான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன்படி சிற்றூர்களனைத்தும 6 பிரிவுகளாகப் பகுக்கப்பட்டன. இவ்வாறு சிற்றூர்களைப் பகுக்கப்பட்டதன் நோக்கமே, பெரும்பாலான அரிசனக் குடியிருப்புக்களுக்குக் குடிநீர் வழங்கப்படல் வேண்டும் என்பதாகும். தமிழகத்திலுள்ள சுமார் 5420 முதல் இருவகைச் சிற்றூர்களுக்கு (குடிநீர் நிலைகள் அறற சிற்றூர்கள் அல்லது குடிப்பதற்குத் தகுதியற்ற நீர்நிலையுள்ள சிற்றூர்கள்) உடனடியாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணிகளைத் திட்டமிட்டு 1.9.79 முதல் [illegible] இத்திட்டங்களுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 25 கோடி ஆகும். இவ்வாறு துவக்கப்பட்டு, பின்னர் நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டங்களில் தாழ்த்தப்பட்ட அரிசனக் குடியிருப்புகளும் அடங்கும்.

இனி அரிசனக் குடியிருப்புகள் மற்றும் மலை வாழ் மக்களுக்கு நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டப்பணிகளைக் காண்போம்:

**அரிசனக் குடியிருப்புகளுக்கு வழங்கப்பட்டவை:**

1971ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கீட்டுப்படி தமிழ்நாட்டில் சுமார் 73,15,595 தாழ்த்தப்பட்டவர்களும, 3,11,515 மலை வாழ் மக்களும் வாழ்ந்து வருகின்றனர். இம்மக்கட் தொகை மொத்த மக்கட் தொகையில் 18.52 விழுக்காடு ஆகும். எத்துறையாயினும் மொத்த ஒதுக்கீட்டுத் தொகையில் குறைந்தது [illegible] பயனுற வேண்டும் என்ற இந்திய அரசின் கொள்கையினை ஏற்று, ஊரகக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரை பிரதான சிற்றூர்களுக்கு உள்ளடங்கிய அரிசனக் குடியிருப்புகளுக்கும், பகிர்மானக் குழாய்களைப் பதித்துக் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரிவு 1 மற்றும் 2ல் அடங்கவில்லையாயினும் சிற்றூரையொட்டிய அரிசனக் குடியிருப்புகளுக்கு முன்னுரிமையுடன் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டு, இதுபற்றிய அறிவுரைகள் பணியிட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கடந்த இரு ஆண்டுகளில் ஜூன் திங்கள் 79 முடிய 2660 சிற்றூர்களில் 12,64,519 மக்கள் பயனுறும் வகையில் குடிநீர்த் திட்டப் பணிகள் முற்றுப்பெற்றுள்ளன. மேற்கண்ட முற்றுப் பெற்ற பணிகளில், 1977-78ல் சுமார் 419 அரிசனக் குடியிருப்புகளுக்கு 10,47,50 மக்கள் பயன் பெறும் வகையிலும், 1978-79ல் சுமார் 1,98 அரிசனக் குடியிருப்புகளுக்கு [illegible] மக்கள் பயனுறும் வகையிலும் தனிப்பட்ட குடிநீர்த்திட்டப்பணிகள் செயலாக்கப்பட்டுள்ளன. இது தவிர அரிசன நலத்துறை மூலமாகவும், [illegible] அரிசனக் குடியிருப்புகளுக்குக் குடி [illegible]



நீர்த் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**மலைவாழ் மக்களுக்குக் குடிநீர்த் திட்டப்பணிகள் :**

பண்டையத் தமிழகத்தின் நான்கு பிரிவுகளில் ஒன்றான குறிஞ்சி நில மக்களின் (மலைவாழ் மக்கள்) மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு, முக்கியமாகக் குடிநீர் வசதி அளித்திட தமிழக அரசு சிறப்புத்திட்டமாக ''ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுக் குடிநீர்த் திட்டம் (Integrated Tribal Development Project) ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இத்தகையத் திட்டங்களுக்குத் தமிழக அரசு சமூக நலத்துறையின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அக்குடிநீர்த் திட்டப் பணிகளைச் செவ்வனே செயலாற்றி வருகின்றது. இத்திட்டங்கள் சேலம், திருச்சி, தருமபுரி, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன. கடந்த இரு ஆண்டுகளில் மலைவாழ் மக்களின் மேம்பாட்டுக் குடிநீர்த்திட்டப்பணிகள் பற்றிய விவரம் வருமாறு:

| ஆண்டு | நிதிஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) | பயனடையும் சிற்றூர்கள் | பயனடையும் மக்கட் தொகை |
|---|---|---|---|
| 78—79 | 13.50 | 40 | 13,700 |
| 79—80 | 10.00 | 54 | 18,970 |

மேற்கண்ட திட்டங்களில் 15 குடிநீர்த்திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு, ஏனையவை செயலாக்கத்தில் இருந்து வருகின்றன.

இது தவிர, குடிநீர் வாரிய நிதியின் மூலம், 1978-79ஆம் ஆண்டு 2 குடிநீர்த்திட்டப்பணிகள் முடிக்கப்பெற்று, 35 பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. 1979-80ஆம் ஆண்டு 50 குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

இவ்வாறு தமிழ்நாடு அரசு, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களின் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதில், பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி நிறைவேற்றி வருகிறது. இனி வரும் ஆண்டுகளில் திட்டங்கள் மேலும் பல்கிப் பெருகி, அனைத்து அரிசனக் குடியிருப்புகளும் குடிநீர் பெற்றுவிடும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை!



# குடிசைகளுக்கு மின்வசதி

மீட்டர் இல்லாமல் கிராமங்களில் குடிசைகளுக்கும் மின் இணைப்பு வழங்குவதாகத் தமிழ்நாடு அரசின் 1979-80 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பை, தேசியமயமாக்கப்பட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும், தமிழ்நாடு மின்சார வாரியமும் இணைந்து செங்கற்பட்டு மாவட்டத்தில் இரண்டு கிராமங்களில் நடைமுறைப் படுத்தியுள்ளன.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்களைக் கொண்டு விளக்கேற்று விழா நிகழ்ச்சி 22-8-79 அன்று நடைபெற்றது.

இந்தத் திட்டம் பற்றி மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துக் கோவையின் விவரமாவது :

''செங்கற்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்திற்கு அண்மையில் உள்ள சோகண்டி, வடகடம்பாடி ஆகிய இரு கிராமங்களைத் தேசியமயமாக்கப்பட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ''தத்து'' எடுத்திருக்கிறது.

''தத்து'' எடுத்துக் கொள்வது என்றால் ''வசதி'' வேண்டும். இரண்டாவது ''நல்ல மனமும்'' இருக்க வேண்டும். இந்த வங்கியிடம் ''வசதி''யும் இருக்கிறது. ''நல்ல மனமும்'' இருக்கிறது!

"மின் வாரியத்தைச் சேர்ந்த அலுவலர்களும், பணியாளர்களும் இரவுபகலாகப் பாடுபட்டு, மின் இணைப்பை இந்த இரு கிராமங்களுக்கு வழங்கி இருக்கிறார்கள்.

"மின் வாரியத்தைப் பொறுத்த வரை குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்க தடை விதித்து இருந்தார்கள். அதற்குக் காரணம்-குடிசை தீப்பற்றி எரிந்தால் ''மீட்டர்'' எரிந்து போய்விடும் என்பதால் ஆகும்.

"தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் பார்த்தார்.

''குடிசையே எரிந்து போகும் போது மீட்டருக்கு மட்டும் கவலைப்படுவானேன்? என்றார். சரி. மீட்டரே இல்லாமல் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தை அறிமுகப் படுத்த உத்தரவிட்டார்.

"சாதாரணமாக வீட்டுக்கு ''ஒயரிங்'' செய்வதற்கு 90 ரூபாய், 100 ரூபாய் வரை செலவாகும். அதன் பிறகு மின் கம்பத்தில் இருந்து வீட்டுக்கு உள்ள இடைவெளிதூரத்தைப் பொறுத்து மின்வாரியத்திற்கு ''டெபாசிட்'' கட்டவேண்டும்.

"ஆனால், குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தில் குடிசைவாசி 10 ரூபாய் டெபாசிட் கட்டினாலே போதும். மின் வாரியத்தினர் கம்பத்தில் இருந்து ஒயர் இழுத்து குடிசைக்குள்-விளக்கு (பல்பு) எரியவைத்து விடுவார்கள்.

"மீட்டர் கிடையாது. தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எப்படி அளவு இல்லாமல் கொடுத்து பழக்கப்பட்டவரோ-அதேபோல மீட்டர் வைத்து அளக்காமல் மின்சாரத்தையும் கொடுக்கிறார். மின்விளக்கு வெளிச்சத்தையே பார்க்க முடியாத குடிசைகளில் மின்விளக்கை ஏற்றி வைத்தவர் புரட்சித் தலைவர்.

''மண்ணெண்ணெய்யைக் கொண்டு விளக்கு எரித்தால் மாதம் ஒன்றுக்குச் சுமாராக 6 ரூபாய்வரை செலவாகும். குடிசைக்குப் போடப்பட்டிருக்கும் மின் விளக்கிற்குக் கட்டணமாக மாதம் இரண்டரை ரூபாய் செலுத்தினாலே போதும்.

''மீட்டர் இல்லையே...எங்கெங்கே ''கம்பி'' இழுப்பார்களோ, எவ்வளவு விளக்குகளை எரிப்பார்களோ? நட்டம் வரும் என்றார்கள்.

''எங்களை நம்பிய மக்களை நாங்களும் நம்புகிறோம். குடிசைவாசிகளின் வீட்டுப் பிள்ளைகள் நல்ல விளக்கு வெளிச்சத்தில் நன்கு படித்து முன்னுக்கு வர வேண்டும் என்பதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் விருப்பம்.

''நான்கூட ''மினுக்'', ''மினுக்' என்று எரிந்த மண்ணெண்ணெய் விளக்கில் படித்தவன்தான்.

''பத்து ரூபாய்க் கட்டணத்தில் குடிசைவாசிகளுக்கு மட்டும்தான் மின் இணைப்பா என்று வசதி படைத்தவர்கள் கேட்கக்கூடாது. ஒரு குடும்பத்தில் உள்ள இரண்டு மூன்று குழந்தைகளில் கடைசிப் பிள்ளை மீதுதான். தாய்க்குப் பாசம் அதிகம் இருக்கும்.

''அதுபோல தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சமுதாயத்தில் அடிமட்டத்தில் உழன்று கொண்டு இருக்கும் மக்களின் முன்னேற்றத்திற்குச் சற்று அதிக கவனம் செலுத்துகிறார். ஏழைகளைக் கைதூக்கி விடுவது நம் எல்லாருடைய கடமையாகும்.



"வங்கிகளைத் தேசியமயமாக்கியதால், வங்கிகள் கிராமத்திற்கு வருகின்றன. கிராமத்தையே தத்து எடுக்கின்றன.

"வங்கி மட்டுமல்ல-அரசும் கிராமத்தை நோக்கி வந்திருக்கிறது. அதன் பிரதிபலிப்புதான் குடிசைக்கு மின்விளக்கு அளிக்கும் திட்டம்.

"இந்தத் திட்டத்தினால் மின்சார வாரியத்திற்கு எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது என்பதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. எத்தகையோருக்குப் பயன்படுகிறது என்பதுதான் முக்கியம்.

"இந்தத் திட்டம் தமிழகம் முழுவதும் நிறைவேறினால் மக்கள் மனத்தில் "மகிழ்வுப் புரட்சி'' ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

"மின் இணைப்பைப் பெறுகிற குடிசைவாசிகளுக்கு ஒரு வேண்டுகோள்.. மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள். மீட்டர் தான் இல்லையே என்று ''ராத்திரி பூராவும்'' விளக்கை எரிய விடாதீர்கள். உங்களுக்குத் தூக்கம் வராது. சிக்கனமாக மின்சாரத்தைப் பயன்படுத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கும் உண்டு. மாண்புமிகு புரட்சித் தலைவருக்கும் உள்ளது.''



# புதிய நந்தன்

## புதுமைப்பித்தன்

நந்தா சாம்பானை நந்த நாயனாராக்க, சிதம்பரத்தில் அக்கினிப்புடம் போட்ட பின்னர் வெகுகாலம் சென்றது.

அந்தப் பெருமையிலேயே ஆதனூர் சந்தோஷ-அல்லது துக்க-சாகரத்தில் மூழ்கி அப்படியே மெய் மறந்தது.

இங்கிலீஷ் சாம்ராஜ்யம் வந்த சங்கதிகூடத் தெரியாது. அப்படிபட்ட நெடுந் தூக்கம்.

இப்பொழுது, ஆதனூரிலே ரயில்வே ஸ்டேஷன், வெற்றிலைப் பாக்குக் கடை என்ற ஷாப்பு, காப்பி ஒட்டல் என்ற இத்யாதி சின்னங்கள் வந்து விட்டன. எப்படி வந்தன என்ற சமாச்சாரம் யாருக்கும் தெரியாது.

ஆனால், நந்தன் பறைச்சேரியில் விடை பெற்றுக் கொண்ட பிறகு, பறைச்சேரிக்கு என்னமோ கதி மோட்சம் கிடையாது. பழைய பறைச்சேரிதான்.பழைய கள்ளுக்கடைதான். ஆனால் இப்பொழுது பழைய வேதியரின் வழிவழி வந்த புதிய வேதியரின் ஆள் மூலம் குத்தகை, சேரிக்குப் புறம்பாக அல்லது தீண்டக்கூடாது என்ற கருத்துடனோ, மரியாதையான தூரத்திலே, ஒரு முனிசிபல் விளக்கு. அதை ஏற்றுவதைப் பற்றி ஒருவருக்கும் தெரியாது. சேரிப் பறையர்கள் ஆண்டையின் அடிமைகள். அத்துடன் அவர்களுக்குத் தெரியாத வெள்ளைத் துரைகளின் அடிமைகள்.

அந்தப் பழைய வேதியரின் வாழையடி வாழையாக வந்த (அவர்கள் குல முறை கிளத்துப் படலம் எந்தப் புராணத்திலும் இல்லை) வேதியர் அக்கிரகாரத்தில் பெரிய பண்ணை. 1,000 வேலி நிலம் இத்யாதி வகையறா. இது மட்டுமல்ல,. ஒரு பென்ஷன் பெற்ற சப்-ரிஜிஸ்திரார் விஸ்வநாத சிரௌதி. இவருக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலும் இறந்து போன ஸனாதன உண்மைகளிலும் அபார நம்பிக்கை. இதையறிந்து நடப்பவர்கள்தான் அவருடைய பக்தர்கள்.

அவருக்கு ஒரு பையன்;பெயர் ராமநாதன். எம். ஏ., படித்து விட்டு கலெக்டர் பரிட்சை கொடுக்கவிருந்தவன். ஏதோ பைத்தியக்காரத்தனத்தினால் — இது அவர்கள் வீட்டிலும் அக்ரகாரத்திலும் உள்ள கொள்கை-சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு விட்டான். பையனுக்கு இதிலிருந்து பிரேமையை ஒரு நல்ல சம்பந்தத்தில் ஒழித்துவிடலாம் என்பது சிரௌதியின் நம்பிக்கை. பிள்ளையின் பேரிலிருந்த அபார வாத்ஸல்யத்தின் பயன்.

சேரியிலே கருப்பன் ஒரு கிழட்டு நடைப் பிணம். 60 வயது. பெரிய நயினாரின் தோட்டக்காவல். இதில் ஒரு சுவாரஸ்யம். கருப்பன் சிறுபிராயத்தில் தெரியாத்தனத்தினாலோ, ஐயரவர்கள் இப்பொழுதும் சொல்லிக் கொண்டிருக்கிறபடி, 'பறக்கிறது' னாலோ, ஒரு நாள் இரவு அக்ரகாரத்தில் இருக்கும் தெப்பக்குளத்தில் இறங்கி ஒரு கை தண்ணீர் அள்ளிக் குடித்துவிட்டான். கோயில் தெய்வத்தின் உலாவுப் பிரதிநிதியான சுப்பு சாஸ்திரிகள் கண்டு விட்டார். அக்ரகாரத்தில் ஏக அமளி. அப்பொழுது சிறுவனாக இருந்த விஸ்வநாத சிரௌதி, தன்னை மீறிய கோபத்தில், அடித்த அடி கருப்பனைக் குருடாக்கியது. விளையும் பயிர் முளையிலே தெரியாதா?

ஆனால், சிரௌதி இளகிய மனம்உடையவர். கருப்பனுடைய ஸ்திதிக்கு மிகவும் பரிதபித்து தோட்டத்தில் காவல் தொழிலைக் கொடுத்தார். கல்யாணம் செய்து வைத்தார். தோட்டத்திலே குடிசை கட்டிக் கொடுத்தார். பிறகு தங்கக் கம்பியாகிவிட்டான் என்று எல்லோரிடத்திலும் சொல்லுவதில் வெகு பிரேமை.

அதெல்லாம் பழைய கதை.

கருப்பன் குருடனாகிவிட்டால் குழந்தைகள் பிறக்காதா? முதலில் ஒரு ஆண் குழந்தை. அவன் பெயர் பாவாடை. ஆண்டை சின்னசாமியும் ஏறக்குறைய இதே காலத்தில்தான் பிறந்தான். இராமநாதன் சில சமயங்களில் தோட்டக் காட்டிற்கு வரும் பொழுது பாவாடையுடன் கேணியில் முக்குளித்து விளையாடுவதிலும், மரக் குரங்கு விளையாடுவதிலும் பரம உத்ஸாகம்.

அதெல்லாம் பழைய கதை.

இரண்டு பேரும் வித்தியாசமான இரண்டு சமூகப் படிகளின் வழியாகச்சென்றார்கள். இரண்டு விதமாகக் கண்டார்கள்.

பரமண்டலங்களிலிருக்கும் பிதாவாகிய கர்த்தரின் நீதிகளை, ஆதனூரில் பரப்பும்படி ரெவரெண்ட் ஜான் ஐயர் ஒரு தடவை ஆதனூர் சேரிக்கு வந்தார். பாவாடையின் புத்தி விசேஷத்தைக் கண்டு அவனைத் தம் மதத்தில் சேர்க்க அனுமதித்து விட்டால், பெரிய பண்ணை மாதிரி ஆக்கி விடுவதாக ஆசை காட்டினார். கருப்பனுக்கு, தன் மகன் 'இங்குரூசி' (English) படிக்க வேண்டும் என்று ஆசை. நீட்டுவானேன்? பாவாடை ஜான் ஐயருடன் சென்றான்.

ஜான் ஐயருக்கு ஒரு பெண் உண்டு. மேரி லில்லி என்ற பெயர். நல்ல அழகு.

அவளும் மிஷன் பள்ளிக்கூடத்தில் ஆண் பிள்ளைகளுடன் படித்தாள். எல்லாவற்றிலும் முதல் மார்க் எடுக்கும, பாவாடையிடம் (இப்பொழுது அவனுக்குத் தானியேல் ஜான் என்ற பெயர்) சிறிது பிரியம். நட்பு, வரவரக் காதலாக மாறியது.

கிருஸ்தவ சமுதாயத்தில் இந்துக் கொடுமைகள் இல்லையென்று ஜான் ஐயர் போதித்ததை நம்பி, மனப்பால் குடித்த ஜான் தானியேல், ஒருநாள் ஐயரிடம் நேரிலேயே தன் கருத்தை வெளியிட்டான்.

ஜான் ஐயரவர்களுக்கு வந்து விட்டது பெரிய கோபம். ''பறக் கழுதை வீட்டை விட்டுவெளியே இறங்கு'' என்று கழுத்தைப் பிடித்து நெட்டித தள்ளினார்.

மனமுடைந்த தானியேலுக்குப் பாழ் வெளியாகத் தோன்றியது உலகம். இந்த மன நிலைக்கு மதம்தானே சாந்தி என்கிறார்கள். கிறிஸ்தவனாக இருந்த பொழுது வேத புத்தகத்தை நன்றாகப் படித்திருந்தான். சுவாமியாராகப் போயவிட வேண்டுமென்று கத்தோலிக்க மதத்தைத் தழுவி, சுவாமியார் பரிட்சைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட நாவிஸ் பிரதராக (Novice Brother) Father ஞானப் பிரகாசம் மேற்பார்த்த மடத்தில் இரண்டு வருஷங்கள் கழித்தான். சுற்றி நடக்கும அபத்தங்களும் சில சுவாமியார்களின் இயற்கைக்கு விரோதமான இச்சைகளும், மனத்திற்குச் சற்றும் சாந்தி தராத இருப்புச் சட்டம் போன்ற கொள்கைகளும் அவன் மனத்தில் உலகக் கட்டுப்பாடே ஒரு பெரிய புரட்டு என்ற நம்பிக்கைகளைக் கிளப்பிவிட்டன.

அதனிடமும் விடைபெற்றுக் கொண்டு, திரு இராமசாமிப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டு விட்டான். அதிலே அவன் ஒரு பெரும் தீவிரவாதி. இப்பொழுது தோழர் நரசிங்கம் என்ற பெயருடன் தனக்குத் தெரிந்த உண்மைகளை, அதில் ஒரு பைத்தியம் பிடித்தது போல், பிரசாரம் செய்து கொண்டு வந்தான்.

ஒரு தடவை தகப்பனாரைக் காண ஆதனூருக்கு வந்தான். பழைய எண்ணங்கள் குவிந்திருக்கலாம், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. அவனுககு இரண்டு உண்மைகள் தெரிநதன. தனக்கும் தனது குடும்பத்தினருக்கும இடையே எண்ணங்களில், செய்கைகளில், ஏன் எல்லாவற்றிலுமே ஒரு பெரிய பிளவு இருக்கிறது என்பது ஒன்று. இன்னும் ஒன்று, தான் சென்ற பிறகுதனக்கு ஒரு அழகான-பறைச்சிகளுக்கும அழகாயிருக்க உரிமையுண்டு—



தங்கை, பதினாறு பிராயத்தாள் இருப்பதையறிந்ததுதான்.

ஆனால், இவர்களை மனிதரின் நிலைமைக்குக் கொண்டுவர எந்தப் பகீரதன் உண்டாகப் போகிறானோ என்ற மலைப்பு ஏற்பட்டுவிட்டது. தனது பிரசங்கங்கள் படித்தவர்களிடத்தில் செல்லும்; இந்த வாயில்லாப் பூச்சிகளிடத்தில்?

ராமநாதன், வீட்டில் செல்லப் பிள்ளை. இட்டது சட்டம். பக்கத்து ஜில்லாத் தலைநகரில் மெட்ரிக்குலேஷன் வரை படித்தான். அவனுடைய படிப்பு வேறு ஒரு தினுசு. கெட்டிக்காரன். பள்ளிக்கூடத்தில் மட்டுமல்ல. சிலரைப்போல பள்ளிக்கூடத்தில் மூழ்கிவிடவில்லை. காலத்தின் சக்தி வசப்பட்டு அதன் நூதன உணர்ச்சிகளில் ஈடுபட்டு இன்பப்பட்டவன்.

சென்னைக்குச் சென்று மேல் படிப்புப் படித்தான்; எம். ஏ., வரையில். அதற்குள் 1930 இயக்கம் வந்தது. தந்தை கலெக்டர் பதவியைவிட்டுத் தடியடிபட்டு, ஜெயிலுக்குச் சென்றான்.

ஜெயிலில் இருந்து வந்ததும் ஹரிஜன இயக்கத்தில் ஈடுபட்டான். தகப்பனாருக்கு வருத்தம்தான். ராமநாதனின் அசையாத மனத்தின் முன் சிரௌதியின் அன்புதான் நின்றது. கொள்கைகள் பறந்தன.

ஒரு தடவை ஆதனூருக்கு வந்திருந்தான். அப்பொழுது கருப்பனின் மகளுக்கு வயது வந்துவிட்டது. நல்ல இயற்கையின் பூரண கிருபை இருந்தது.

ஒரு நாள் இரவு நல்ல நிலா. தோட்டத்திற்குச் சென்றான். இரவு கொஞ்ச நேரந்தான். அதுவும் ஆதனூரில் கேட்க வேண்டுமா?

தோட்டக் கிணற்றில் யாரோ குதிப்பதுபோன்ற சப்தம். ஓடிப் பார்க்கிறான்; ஒரு பெண் உள்ளே. அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. உடனே அவனும் குதித்தான்.

''சாமி, கிட்ட வராதிங்க, பறச்சி, கருப்பன் மவ. சும்மா னாச்சிங் குளிக்கிறேன்'' என்ற குரல்.

''சரி, சரி. நீ விழுந்துவிட்டாயாக்கும் என்று நினைத்தேன். ஏறி வா'' என்று கரை ஏறினான்.

''இல்லை, சாமி'' என்று தயங்கினாள். பிறகு என்ன? இயற்கை இருவரையும் வென்றது.



ராமநாதனுக்கு...பிறகு ஒரு மகத்தான பாபம் செய்து விட்டோம் என்ற நினைப்பு..கருப்பன் மகளுக்கு, சின்னப் பண்ணையின் தயவு கிடைத்ததில் திருப்தி.

ராமநாதன் அவளைக் கல்யாணம் செய்து கொள்வதாக. வாக்களித்தான். 'அதெப்படி முடியும் சாமி' என்று சிரித்தாள்.

கருப்பனிடம் போய் நடந்ததைச் சொல்லிப் பெண்ணைக் கொடுக்கும்படி கேட்டான். அவனுக்குப் புதிய கொள்கைகள் எப்படித் தெரியும்?

''அது நயிந்தோ மகாப் பாவம் கண்ணானே அப்படிச் செய்யக் கூடாது.''

ராமநாதனுக்கு இடிவிழுந்தது போலாயிற்று.

மகாத்மா காந்தி தென்னாட்டில் ஹரிஜன இயக்கத்திற்காகப் பிரசாரம் செய்ய வந்தார். ஆதனூரில் ஐந்து நிமிஷம் தங்குதல, எல்லாம் ராமநாதனின் ஏற்பாடு. சிரௌதிகள் அவருடன் வாதம செய்ய புராண ஆதாரங்களுடன் தயார். இதில் சிரௌதிகளுக்கு இரட்டை வெற்றி என்ற நமபிக்கை. ஒன்று காந்தியின் கொள்கையைத் தகர்ப்பது. இரண்டாவது காந்தியின் முன்பே தன் புத்திரனிடம் சனாதனத்தின் புனிதத்தைக் காண்பிப்பது.

தோழர் நரசிங்கம் காந்தியை எதிர்த்துக் கேள்விகள் கேட்க ஆதனூருக்கு வந்தான். தங்கையின் சமாசாரம தெரிந்துவிட்டது. தகப்பனாரிடம் கலியாணம் செய்து வைத்துவிட வேண்டுமென்றும், அதற்குப் பறையரின் சமுதாயத்தின் கட்டுப்பாட்டால் செய்யமுடியும் என்றும் தெரிவித்தான். தகப்பனாரின் முட்டாள்தனமான நம்பிக்கையைத் தகர்க்க முடியவில்லை. 'பாப்பானின் சாயத்தைத் துலக்கிவிடுகிறேன்' என்று காத்திருந்தான்.

ரயில்வே ஸ்டேஷன் பக்கத்திலிருந்த மைதானத்தில் ஒரு மேடை; கியாஸ் லைட்; இத்தியாதி, இத்தியாதி. பெருங்கூட்டம். வெற்றி கொள்ள ஆசைப்படும் சனாதனமும் அதில் கலந்திருக்கிறது.

கருப்பன் கிழவன், 'மவாத்துமா கிழவரைப் பார்க்க ஆசை. கண் ஏது? அதென்னமோ? குருடருக்கு என்ன செய்ய முடியுமோ?'

தட்டுத் தடுமாறிக் கொண்டு வந்தான். எங்கோ தன் மகன் சப்தம்போல் இருக்கிறது என்று தடுமாறிக் கொண்டு ஓடினான்.

மாலைகள் வந்துவிட்டனவா என்று கவனித்து ஓடிக்கொண்டிருக்கும் ராமநாதன், சற்றுப் பின்னால் வந்தான். குறுக்குப் பாதை வழியாகத் தோழர் நரசிங்கம் எங்கிருந்தோ வந்து கொண்டிருந்தான்.

நெற்றிக் கண்ணைத் திறந்த சிவபிரான்போல் தலைப்பு வெளிச்சத்தைப் போட்டுக் கொண்டு கோஷித்துக் கொண்டு வருகிறது மதராஸ் மெயில். ஆதனூர் அதன் மரியாதைக்குக் குறைந்தது; நிற்காது. நாற்பது மைல் வேகம்.

என்ஜின் டிரைவர் விசிலை ஊதுகிறான்; கோஷிக்கிறான். குருடன் கம்பி வழியாகவே கடக்கிறான். மனம் குழம்பிவிட்டதா?

தூரத்திலிருந்து இருவர் அவனைக் கண்டுவிட்டார்கள். மகனும் மருமகனும்; இயற்கைச் சட்டத்தின்படி அப்படித்தான். சமுதாயம் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்.

வேகமாக ஓடிவருகின்றனர்.

வெளிச்சம், வெளிச்சம்.

மூவரும் சேரும் சமயம்.
இழுத்துவிடலாம்.

''ஐயோ!''

ஹதம். ரத்தக் களரி.

மூவரின் இரத்தங்கள் ஒன்றாய்க் கலந்தன; ஒன்றாய்த்தான் இருக்கின்றன.

இதில் யாரை நந்தன் என்பது?

புதிய ஒளியை இருவர் கண்டனர். இருவிதமாகக் கண்டனர்.

இறந்த பிறகாவது சாந்தியா?
சமுதாயத்திற்குப் பலிதான். அதை யார் நினைக்கிறார்கள்?
பத்திரிகையில் பெரிய நீண்ட செய்திகள்...

பிறகு ஆதனூரில்....!

**('ஸ்டார் பிரசுரம்' வெளியிட்டுள்ள ''ஆண்மை'' என்ற சிறுகதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.)**



# பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் - முத்தமிழ் விழா



''காஞ்சியில் பேரறிஞர் அண்ணா வாழ்ந்த இல்லம் நினைவாலயம் ஆகும்.''

''திரு.வி.க. நினைவு நாளைக் கொண்டாட ஏற்பாடு செய்யப்படும்''

''பேரறிஞர் அண்ணாவின் நூல்களையும், எழுத்தாளர்களின் நூல்களையும் அரசு வெளியிடும்.''

—இந்த இனிக்கும் தகவல்களைப் பேரறிஞர் அண்ணா 71வது பிறந்த நாளையொட்டி நடந்த 'முத்தமிழ் விழாவில்' மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தெரிவித்தார்.

செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள், சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டுவிழா மண்டபத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா மிகச் சிறப்பாக நடந்தது.

அன்று காலை, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி மாணவர்களின் நாதசுர இசையோடு நிகழ்ச்சி தொடங்கியது.

## அண்ணாவின் இயற்றமிழ்

அன்று காலை நடந்த 'அண்ணாவின் இயற்றமிழ்' நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களை டாக்டர் அவ்வை நடராசன் அவர்கள் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு பு.ரா.கோகுலகிருஷ்ணன் அவர்கள் தொடக்க உரையில்''தூய்மையான அரசியல் வாழ்வு, தமிழ் வளர்ச்சிப் பணி ஆகியவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் அறிஞர் அண்ணா அவர்கள். குறுகிய மனப்பான்மை, சாதி மதக் கோட்பாடுகள், கட்சி அரசியல் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு விளங்கிய தமிழ் இனத்தின் தலைவர் அவர்'' என்றார்.

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு ம.பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில், ''அண்ணா அவர்கள் பண்பு மிக்கவர். அதிலும் அரசியலில் பண்பைக் காண்பது அரிது;இன்று அதைவிட அரிது. என்றார்.

'அண்ணாவின் திரை இலக்கியம்' என்பது பற்றி திரு ஏ.எஸ்.ஏ. சாமி அவர்கள் பேசுகையில், ''திரைப்படம் ஒரு இலக்கியம் என்றால், அந்தத் திரைப்பட இலக்கியத்துக்கே ஒரு இலக்கணம் படைத்தவர் அறிஞர் அண்ணா;'' என்றார்.

''அண்ணாவின் மேடை இலக்கியம்' என்பது பற்றி டாக்டர் இரா. சனார்த்தனம் எம்.எல்.சி. அவர்கள் பேசுகையில், ''பணம் சம்பாதிக்கவோ - தொழிலாகக் கொண்டோ - நாடகங்களையும், சினிமாவுக்கு வசனங்களையும் அண்ணா எழுதவில்லை. சமூகத்தில் தோன்றிய ஏற்றத் தாழ்வுகளைச் சுட்டிக் காட்டுவதற்காக-அப்படிப்பட்ட தீமைகளை அகற்றுவதற்காக அவர் இவைகளைச் செய்தார்'' என்றார்.

'அண்ணாவின் நெடுங்கதைகள்' என்பதுபற்றி திரு தில்லைவில்லாளன் அவர்கள் பேசுகையில், ''அண்ணா அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தில் ஒரு பேனாவை வைத்துக் கொண்டே, புரட்சியை ஏற்படுத்திக் காட்டினார்கள். அதில் இரத்தம் இல்லை; சத்தமும் இல்லை'' என்றார்.

'அண்ணாவின் சிறு கதைகள்' என்பது பற்றி திரு அகிலன் அவர்கள் பேசுகையில், '' புதிய வாசகர்களை - அவர்கள் எழுதுமாறு, சிந்திக்குமாறு தூண்டியது. அண்ணாவின் கதைகள். கலையம்சங்கள் நிறைந்த கதைகளை-கருத்துக்கு வலிவூட்டும் கதைகளை அவர் எழுதியிருக்கிறார்'' என்றார்.

'அண்ணாவின் பொருளியல் கட்டுரைகள்' என்பது பற்றி திரு கு. ராஜவேலு அவர்கள் பேசுகையில், ''அண்ணா பெரிய அரசியல் தந்திரியாகவும், பொருளாதார நிபுணராகவும் விளங்கினார்'' என்றார்.

'அண்ணாவின் அரசியல் கட்டுரை' என்பது பற்றி பாவலர் மா. முத்துசாமி அவர்கள் பேசுகையில், ''தமிழ்ச் சமுதாயம் ஒன்றுபடவேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - இதுதான் பேரறிஞர் அண்ணாவின் அரசியல் தன்மையாகும்'' என்றார்.

'அண்ணாவின் உவமை நயம்' என்பது பற்றி திரு டி.கே.சீனிவாசன் அவர்கள் பேசுகையில்,

''சாதாரண மக்களுக்குப் புரியும்படி உவமைகளை அள்ளித் தெளித்தார் அவர். அண்ணாவின் உவமை, காலம் முழுவதும் நிற்கக்கூடியது'' என்றார்.

'அண்ணாவின் இலக்கியக் கட்டுரைகள்' என்பது பற்றி மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு வ. சுப.

மாணிக்கம் அவர்கள் பேசுகையில் ''அண்ணாவின் எழுத்துக்களையெல்லாம் முழுப்பதிப்புகளாக வெளியிடவேண்டும், அவை எளிய மலிவுப் பதிப்புகளாக அரசு வெளியிட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

'அண்ணாவின் பேருரைகள்' என்பது பற்றித் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் பேசுகையில், ''அறிஞர் அண்ணா அவர்கள் இதய சுத்தியோடு ஒரே குறிக்கோளுடன் இருந்தார். அவரது பேருரைகள் இந்த நாட்டுக்கு, வரலாற்றுக்கு உந்து சக்திகளாக இருந்தன'' என்றார்.

சிறப்புரையாற்றிய மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் பேசுகையில், ''அண்ணாவின் பேச்சில் கனலும் இருந்தது; புனலும் இருந்தது. எதையும் தாங்கும் இதயம் பெற்ற அண்ணா வழி நடப்போம்'' என்றார்.

## இசைத்தமிழ்

மாலை 4 மணி அளவில், 'இசைத்தமிழில் அண்ணா' என்பது குறித்து திரு சீர்காழி கோவிந்தராசன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடந்தது.

## நாடகத்தமிழ்

மாலை 6 மணி அளவில் நடந்த 'அண்ணாவின் நாடகத் தமிழ்' என்னும் நிகழ்ச்சி சிறப்பாக இருந்தது. விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்ற மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''முத்தமிழ் என்ற தலைப்பில் அறிஞர் அண்ணாவின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம். முன்னாள் குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் பிறந்த நாளை ஆசிரியர் தினமாகவும், நேருவின் பிறந்த நாளைக் குழந்தைகள் தினமாகவும் கொண்டாடுவது போல, அண்ணாவின் பிறந்த நாளை முத்தமிழ் விழாவாகக் கொண்டாடுகிறோம்.



''அண்ணா அவர்கள் 30 ஆண்டுக்காலம் அரசியலுக்குத் தம்மை ஒப்படைத்துக் கொண்டார். 1938 லிருந்து 10 ஆண்டுக்காலம் மிகச் சிறந்த பேச்சாளராக, எழுத்தாளராகப் பெரிய இலக்கியவாதியாக இருந்தார். அதன் பிறகு தான் அவர் தன்னை முழுநேரமும் அரசியலுக்கு ஒப்படைத்துக் கொண்டார். அண்ணா யார் என்பதை நாட்டு மக்களுக்குச் சொல்லவே இந்த விழா''

தலைமை வகித்த மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில், ''அறிஞர் அண்ணா அவர்கள் பொருளாதாரச் சுரண்டல் மட்டுமல்ல, சாதி அடிப்படையிலான சுரண்டல் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் பாடுபட்டார்'' என்றார்.

அகில இந்திய எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர் தீபம். நா. பார்த்தசாரதி அவர்கள் பேசுகையில், ''இந்த விழாவின் நாயகன் ஒரு எழுத்தாளராக - பத்திரிகாசிரியராக - நாடகாசிரியராக விளங்கியவர்'' என்றார்.

தமிழ்நாடு அரசு வருவாய் வாரிய உறுப்பினர் திரு க. திரவியம் ஐ.ஏ.எஸ்., அவர்கள் பேசுகையில், ''அறிஞர் அண்ணா அவர்கள், வைதீகச் சூழ்நிலையிலேயே சுயமரியாதைக் கருத்துக்களைத் தம் நாடகங்களில் புகுத்தினார்கள். படித்தவர்களுக்கும், பாமரர்களுக்கும் பாலமாக விளங்கினார்கள். தாழ்ந்த தமிழகத்தை உயர்த்தித் தழைக்கச் செய்தவர் அறிஞர் அண்ணா'' என்றார்.

புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர், காலம் சென்ற ஜெகசிற்பியன் அவர்களின் இலக்கியப் பணியைப் பாராட்டி அவர் தம் குடும்பத்தாருக்குத் தமிழ்த் தென்றல் 'திரு.வி.க. விருது' வழங்கி விழா நிறைவு சொற்பொழிவாற்றிய மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''இங்கே எழுத்தாளர் ஜெகசிற்பியன் துணைவியாருக்குப் பரிசு அளிக்கப்பட்டது. அதனை பரிசு என்பதா? காணிக்கை என்பதா? இந்தக் காணிக்கையை ஜெகசிற்பியன் உயிரோடு இருந்து பெற்று இருந்தால் மகிழ்ச்சி அதிகமாக இருந்திருக்கும். தமிழகத்தின் துரதிருஷ்டம் பல நல்லவர்களை அவர்கள் மறைந்த பிறகுதான் மதிக்கிறோம். இந்த அம்மையாருக்குத் தந்த காணிக்கை, அவர் இழந்த இழப்புக்கு ஈடு ஆகாது.

''பல எழுத்தாளர்கள் நூல்களை எழுதுகிறார்கள். அதை வெளியிட எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை நான் அறிவேன். அச்சகங்களின் படிக்கட்டுகளில் ஏறி இறங்குகிறார்கள். இதனால் நல்ல எழுத்தாளர்கள் சோர்ந்து விடுகிறார்கள். நிறைய பணம் பெற வேண்டியவர்கள் சில ஆயிரத்தைப் பெற்றுக் கொண்டு கொடுத்து விடுகிறார்கள். யாரோ இலட்சக்கணக்கில் பெறுகிறார்கள். இந்த நிலையைத் தடுக்க எழுத்தாளர்களுக்குப் பாதுகாப்புத் தர அரசால் தான் முடியும்.

''எழுத்தாளர்கள் தாங்கள் எழுதிய நூல்களை அச்சடிக்க விரும்பி, அதனை அரசிடம் ஒப்படைத்து, அதன் பலனை அரசும் எடுத்துக் கொண்டு, எங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்கும் நிலை ஏற்படவேண்டும்.

''இதனைச் செயல்படுத்த ஒரு குழு அமைக்கப்படும். இதைச் செய்ய அரசுக்கு ஆசை இருக்கிறது. இதற்கு அறிஞர்களும், ஆன்றோர்களும் ஆசியும் ஒத்துழைப்பும் தரவேண்டும்

''அண்ணா அவர்கள் எழுதிய நூல்களை அரசே உரிமைபெற்று வெளியிட ஆவல் கொண்டுள்ளது. இதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்போம். அதுபோல் பலருடைய நூல்களையும் வெளியிட முயல்வோம்.

''அதேபோல் காஞ்சியில் அண்ணா அவர்கள் வாழ்ந்த இல்லத்தை 'அண்ணா நினைவாலயமாக ஆக்க ஆர்வம் கொண்டிருக்கிறோம்.

''இதனைச் செயல்படுத்த நல்ல விவரம் தெரிந்தவர்-இதில் நம்பிக்கை உள்ளவர்களைக் கொண்ட சிறுகுழு அமைத்து நடவடிக்கை எடுக்கப்படும். அண்ணா வாழ்ந்த இல்லத்தை விலைபேசி, விலைக்கு வாங்க இருக்கிறோம்.

''அண்ணா அவர்கள் பல நாடகங்களை எழுதி இருக்கிறார். சிந்திக்க வைக்கும நாடகங்கள் அவை. எழுத்தில் ஒரு புதிய மரபை உருவாக்கினார். அதனைப் பலரும் பின்பற்றுகிறார்கள்."

இறுதியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் இலக்கிய நாடகமான 'நீதிதேவன் மயக்கம்' என்னும் நாடகத்தினை, நடிப்பிசைப் புலவர் நாடக மன்றத்தார் சிறப்பாக நடித்து அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றனர்.

நிகழ்ச்சித் தொகுப்பு: **பி.வி. கிரி**




# தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா

**த**ந்தை பெரியர்ர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 16-9-79 காலையில் தொடங்கியது.

விழாவுக்கு வந்திருந்தவர்கள் அனைவரையும் தந்தை பெரியார் விழாக்குழு உறுப்பினர் முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் வரவேற்றுரை நிகழ்த்தினார்.

விழாவைத் தொடங்கி வைத்த மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், ''பெரியார் ஏழைகளுக்காக உழைத்தார். மக்கள் தமது மதிப்பை உணருமாறு செய்தார். கட்டுப்பாட்டுடனும் கடமையுணர்வுடனும் நடந்து கொள்வது அவசியம் '' என்று உணர்த்தினார்.

''மக்கள் ஒவ்வொரு பிரச்சினையிலும் சம்பிரதாயத்தையும், அதிகாரத்தையும் சார்ந்து விடாமல், தங்களது பகுத்தறிவையும் மனச்சாட்சியையும் கொண்டு பரிசீலிக்க வேண்டும் என்பதைப் பெரியார் வலியுறுத்தினார். சமத்துவம் சமநீதிக்காகப் போராடினார்.

''இந்தியா விடுதலை அடைந்து 32 ஆண்டுகள் ஆகியும்கூட மக்களில் பெரும்பாலானவர்கள் ஏழ்மை நிலைக்குக் கீழே வாழ்கிறார்கள். அண்ணல் காந்தியடிகள், பெரியார் ஆகியோர் போதித்த உணர்வுகளுடன் பணியாற்றினால் மக்கள் வாழ்க்கையை மதிப்புடன் நடத்தமுடியும்-குறைந்தபட்ச தேவைகளை யாவது நிறைவு செய்து கொள்ள முடியும்'' என்றார்.

விழாவில், தந்தை பெரியார் வாழ்க்கையைச் சித்திரிக்கும் கண்காட்சியை மாண்புமிகு கருநாடக மாநில முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் தொடங்கி வைத்தார். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது :—

''சமூகப் பொருளாதார சுரண்டல் பற்றி இப்போதுதான் வட இந்திய மக்கள் விழிப்படைந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பெரியார் அவர்களின் போதனை மிகவும் அவசியம்.

''தெற்கில் உள்ள மக்கள் மதம், சாதி, மரபு, இறைவன் பெயரால் நடைபெறும் சுரண்டல்களை அறிந்து விழிப்பாக உள்ளனர் என்பது ஓர் உண்மை. இதற்குப் பெரியார் அவர்களின் பெரும் பணியே காரணம்.

''சுதந்திர இந்தியாவில் ஒரு புதிய சுரண்டல் வர்க்கம் உரு

**இதுவரை எந்த அரசும் செய்திராத வகையில், தேசபக்தர்கள், தமிழறிஞர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் நல் அறிஞர்கள், கலைஞர்கள் ஆகிய பலருக்கு இந்த அரசு விழாக் கொண்டாடி மகிழ்ந்து வருகிறது. அவற்றில் ஒன்றே தந்தை பெரியார் நூற்றாண்டு விழா. இவற்றைச் செய்ய எண்ணி திட்டமிட்டு நடத்துகிற எம்.ஜி.ஆர். அவர்களுடைய உள்ளம் மிகப் பெரிய பேருள்ளமாகும். இதற்காக அவரைத் தமிழகம் முழுதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.**

**நாம் இவ் விழாவைக் கொண்டாடுவதின் மூலம் பெரியாருக்கு பொருளோ, புகழோ வந்து விடப்போவதில்லை. அவை இரண்டும் அவரிடம் நிறைய உள்ளன. இதைச் செய்ய வேண்டியது நமது கடமை. இது நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலி. இதைச் செய்யாவிடில் நாம் நமது கடமைகளில் ஒன்றைச் செய்யத் தவறியவர்கள் ஆவோம்.**

**—திரு கி. ஆ. பெ. விசுவநாதம்.**

*(சென்னை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவின் வரவேற்புரையில்......)*

வாக்கப்படுகிறது. ஏனென்றால் எல்லா வளர்ச்சியும் ஒரு வர்க்கத்தைச் சேர்ந்த மக்களுக்கே செல்கிறது. பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையே வேறுபாடு அதிகரிக்கிறது. இதைத் தடுக்கவும் சமூக அநீதியை எதிர்த்துப் போராடவும் வடநாட்டிலும் பெரியார் அவர்களின் கருத்துக்கள் பரவி வேரூன்ற வேண்டும்.

''சாதியின் பெயரால் பாரம்பரியம் என்பதன் பெயரால் மூட நம்பிக்கைகளினால், நலிந்து கிடக்கும் மக்கள் முன்னேற முடியாமல் செய்யப்படுவதை எதிர்த்துப் பெரியார் போராடினார். இவ்விதம் அவர் போராடி, அதில் வெற்றி கண்டிராவிட்டால் இன்று தமிழகத்தின் முதலமைச்சராக உள்ள திரு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களோ, இதற்கு முன்னர் முதலமைச்சர்களாக இருந்த திரு. அண்ணாதுரை அவர்களோ, ஓமந்தூர் ராமசாமி அவர்களோ முதல்வர்களாக வந்திருக்க முடியாது.

''தெற்கே உள்ள ஏழை எளிய மக்கள் அரசியல் சமுதாயத்துறைகளில் விழிப்புணர்ச்சி அடைந்திருக்கிறார்கள். இதற்காகப் பெரியார் அவர்களுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்''

அடுத்து, மாண்புமிகு நீதிபதி திரு எஸ். மோகன் அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் தொடங்கியது. கருத்தரங்கில் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்களும், திரு ஏ.பி. சனார்த்தனம், எம்.பி., அவர்களும், டாக்டர் ஹாண்டே எம். எல். சி. திரு நெ. து. சுந்தரவடிவேலு, திரு எஸ். வி. சிட்டிபாபு, திரு டாக்டர் பா. நடராசன். திரு டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, திருவாரூர் திரு கே. தங்கராசு, திரு டாக்டர் ஆறு. அழகப்பன், திரு டாக்டர் பொற்கோ, ஈரோடு திரு எம். சுப்பையா, திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் முதலியோர் பல்வேறு தலைப்புகளில் தத்தம் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

பிற்பகல் நிகழ்ச்சியாகக் கவியரங்கம் தொடங்கியது. மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் துவக்கி வைத்தார். கவியரங்குக்கு உவமைக் கவிஞர் சுரதா தலைமை ஏற்றார். கவிஞர்கள் திரு புலமைப்பித்தன் எம்.எல்.சி., திரு. நா. காமராசன், திரு முத்துலிங்கம், திரு இ. முத்துராமலிங்கம், திரு. தஞ்சைவாணன், திரு ஈரோடு தமிழன்பன், திரு சோம. இளவரசு, திரு. குமாரவேலன், திரு ஈரோடு ஆர். நாராயணசாமி ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் தமது கவிதைகளைப் பாடினர்.

மாலை நிகழ்ச்சியாக, திரு டி. எல். மகராசன் குழுவினர் அளித்த 'மெல்லிசை அமுது' நிகழ்ச்சி பெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு க. இராமச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்தார்.

**மாமூலன்**

## அரசு ஊழியர்க்குப் புதிய சலுகைகள்

அரசுப் பணிகளில் சேருவதற்கான வயது வரம்பு 28 ஆக உயர்த்தப்படுகிறது.

வருங்கால சேமிப்பு நிதியின் வட்டி விகிதம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அரசால் ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

அரசு ஊழியர்களின் வருங்கால சேமிப்பு நிதிக்கு இப்போது ஏழரை சதவீதம் வட்டி தரப் படுகிறது. இப்போது முதல், 25 ஆயிரம் ரூபாய் வரையில் இந்தப் பணத்திற்கு 8 சதவீத வட்டி அளிக்கப்படும்.

தானாக ஓய்வு பெற விரும்பும் ஊழியர்களுக்கு மருத்துவப் பரிசோதனை எதுவும் இன்றி அவர்களுக்குச் சேர வேண்டிய ஓய்வு ஊதியத்தின் மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு பணத்தை உடனடியாக அளிப்பது என்றும் அரசு முடிவு செய்திருக்கிறது.

பத்து ஆண்டுகளுக்குள் கட்டப்பட்ட வீடுகள் வாங்குவதற்காக இருந்தால்தான் கடன் கொடுக்கப்படும் என்பது மாற்றப்படுகிறது. இனி, முப்பது ஆண்டுகளுக்குள் கட்டப்பட்ட முதல் தரமான வீடுகளுக்கும் கடன் கொடுக்கப்படும்.

—மாண்புமிகு முதல்வர்

**திரு எம். ஜி. ஆர்.**

(20-9-79-ல், தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில் பேசியது.)



# மகளிர் அரங்கம்

தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா நாளின் இரண்டாவது கட்டமான 'மகளிர் அரங்கம்' சென்னையில், வள்ளுவர் கோட்டத்தில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

விழாத் துவக்கத்தில் குடந்தை சீனிவாசன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நிகழ்வுற்றது.

17.9.79 அன்று, விழாக் கோலம் பூண்டிருந்த வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தமிழக சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி.டி. சரசுவதி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

முன்னாள் மத்திய அமைச்சர் திருமதி தாரகேசுவரி சின்கா அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார். அவர் தனது தொடக்க உரையில் குறிப்பிட்டதாவது.

''பெரியார் விழா என்பது, இந்தியா முழுவதுமுள்ள பின் தங்கிய மக்களின் பெருமகிழ்ச்சிக்குரிய விழாவாகும். சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும், தீண்டாமையையும் ஒழிக்கப் பாடுபட்டவர்தான் பெரியார். அவர் இந்த விஷயத்தில் குமுறும் எரிமலையாக - கொந்தளிக்கும் கடலாக விளங்கினார். அவரது கொள்கைகள் ஆயிரமாயிரம் ஆண்டுக்காலங்கள் நிலைத்திருக்கும் பெருமையுடையவை.

''பெரியார் என்பது தனி மனிதனின் பெயரல்ல. ஒரு சகாப்தத்தின் பெயர். அவர் இறந்துவிடவில்லை; பிரிந்திருக்கிறார். அவ்வளவே! அவர் கொள்கைகள் என்றும் அழியாது.

''மாண்புமிகு பெரியார் அவர்களின் கொள்கைகளை நிறைவேற்றுவதில், நம்முடைய முதல்வர் அவர்கள் அவருடைய வாரிசாகத் திகழ்ந்து வருகிறார்''.



மகளிர் அரங்கத்திற்கு மத்திய சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. சத்தியவாணி முத்து அவர்கள் தலைமை தாங்கினார். தலைமை உரையில் அவர் கூறியதாவது:

''எல்லாம் ஆண்டவன் செயலே என்கிற மூட நம்பிக்கையில் மூழ்கித் துருப்பிடித்திருந்த சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றவர் தந்தை பெரியார் அவர்கள் ஆவார்.

''வடநாட்டில், மனிதாபிமானமற்ற மதச் சண்டைகளும், சாதிச் சண்டைகளும் உள்ளன என்றால் தந்தை பெரியார் அவர்களைப் போன்ற தனிப்பெருந் தலைவர்கள் யாரும் வடக்கே இல்லாததே காரணமாகும்.

''சமுதாயத்தின் அடிமட்டத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் மக்கள் தலைநிமிரச் செய்யவேண்டும். என்று தந்தை பெரியார் அவர்கள் கனவு கண்டார். அதை நனவாக்கி வருகிறார் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள்.''

இவ்வாறு அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

மகளிர் அரங்கத்தில் -திருமதி சௌந்தரா கைலாசம், பெ.சந்திரா, செல்வி பாகீரதி, திருமதி சிவகாமி சிதம்பரனார், திருமதி விசாலக்குமி சிவலிங்கம், திருமதி அரசு மணிமேகலை, செல்வி கஸ்தூரி, பாக்கியவதி ஆகியோர் உரையாற்றினார்கள்.

விழா முடிவில், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி செகதீசன் அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் நன்றி கூறினார்.




# சிறப்புக் கூட்டம்

தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா 20-9-79 அன்று தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

**ஊர்வலம்**

விழா நாளன்று பிரம்மாண்டமானதோர் ஊர்வலம் எழுச்சிமயமாக நடைபெற்றது. அன்று மாலை 4 மணியளவில், சைதாப்பேட்டையில் உள்ள ஒய். எம். சி. ஏ. திடலிலிருந்து புறப்பட்ட இந்த ஊர்வல முகப்பில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படம் அலங்கரிக்கப்பட்ட டிரக் ஒன்று வந்தது. அதைத் தொடர்ந்து தந்தை பெரியாரின் முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகளை சித்தரிக்கும் எழிலோவியங்கள் தாங்கிய 25 அலங்கார வண்டிகள் வந்தன.

அவற்றின் இடையிடையே என். சி. சி., சாரணர், ஊர்க் காவல் படையினர், மாணவர், மகளிர் ஆசிரியப் பெருமக்கள், பல்வேறுவகை வாத்திய இசைக் குழுவினர் ஆகியவர்களோடு கரக ஆட்டம், சிலம்ப ஆட்டம், கத்திச் சண்டை, புலிவேஷம், தீப்பந்த ஆட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் போன்ற கிராமியக் கலைக் குழுவினரும் காட்சி விருந்தளித்தவாறு வந்தனர்.

**முதல்வரும் அமைச்சர்களும்**

தேனாம்பேட்டையில் ஒரு மேடைமீது நின்று, மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் இந்த ஊர்வலத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

ஊர்வலம் வந்த அறிஞர் அண்ணா சாலையின் இருமருங்கிலும் மட்டுமல்லாமல், மாடிக் கட்டிடங்களின் மீதும், படிகளின் மீதும் நின்று பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்த ஊர்வலத்தைக் கண்டு களித்தார்கள்.

இந்த ஊர்வலம் ஏறத்தாழ 8 மணியளவில் தீவுத்திடலை வந்தடைந்தது.

**கடற்கரையில் இசைமழை**

அன்று மாலை ஆறு மணிக்கு மெரீனா கடற்கரையிலுள்ள சீரணி அரங்கத்தில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

நிகழ்ச்சியின் துவக்கமாக 6 மணியளவில், அரசுக் கலைஞர்



கலைமாமணி மதுரை எஸ்.சோமு அவர்கள் தம் குழுவினருடன் தந்தை பெரியார் அவர்களைப் பற்றிய பாடல்களைப் பாடி இசைமழை பொழிந்தனர்.

வங்கக் கடல் பெரிதா, மக்கட் கடல் பெரிதா என்ற திகைப்பை உண்டாக்குவதாக அமைந்திருந்தது கூட்டம்!

சீரணி அரங்கம், தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தோடு வண்ண விளக்குகளால்அலங்கரிக்கப்பட்டிருந்தது. கடற்கரையில் ஆங்காங்கே குழல் விளக்குகளும், பெரு விளக்குகளும் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன!

வாணவேடிக்கைகள் வசீகரம் காட்டுவதாயிருந்தன. வெடிச் சப்தங்களும், வேட்டு முழக்கங்களும் இடியோசையை மிஞ்சின!



## சிறப்புக் கூட்டம்

7.45 மணியளவில், தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், சிறப்புக் கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலோடு தொடங்கியது.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

## பெரியார் புரட்சி மொழிகள்

'பெரியார் புரட்சி மொழிகள்' என்ற தலைப்பின் கீழ், தமிழக அரசு தயாரித்துள்ள அரிய நூல் ஒன்றினை,மாண்புமிகுமேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு, ம. பொ. சி. அவர்கள் வெளியிட முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

24 தலைப்புகளின்படி தொகுக்கப்பட்ட அந்நூற்பெருமையினை விளக்கி மேலவைத் தலைவர் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

நூற்றாண்டு விழாக் குழுவின் பணிகள் பற்றிய நாவலர் அவர்களின் தலைமை உரைக்குப் பின்னர், செட்டிநாட்டரசர் முத்தையா அவர்கள் உரையாற்றினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு பி. இராமமூர்த்தி உரைக்குப் பின்னர், ஆசிரியர்களின் மாநிலப் பரிசு பெற்ற கவிதைத் தொகுப்பு நூல் 'பெரியார் எனும் பேரொளி' 'தமிழகப் பள்ளிக் கல்வித்துறையினர் பெரியாரியல் கருத்தரங்கு சிந்தனையாளர்களின் எழுத்துரைக்கோவை' ஆகிய இரண்டு நூல்களை வெளியிட்டு மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

டாக்டர் எம். சந்தோஷம் திருஆர். மார்க்கபந்து எம்.எல்.ஏ. திரு செய்குத் தம்பி, திரு. குமரி அனந்தன், திரு, கு. கிருஷ்ணசாமி, திருக்குறள் முனுசாமி, கே. எஸ். அப்துல் வகாப் எம்.எல்.சி., மாண்புமிகு இந்திய அரசு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, மாண்புமிகு இந்திய அரசு ரசாயனத்துறை அமைச்சர் திரு. பாலாபழனூர் ஆகியோர் தன்மானச் சிங்கம் தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவுக் கொள்கைகள் பற்றியும், அவர்கள் தம் அரிய சமுதாயத் தொண்டு குறித்தும் விளக்கி உரை நிகழ்த்தினார்கள்.

## மாண்புமிகு முதல்வர்

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் விழா நிறைவு உரையாற்றினார்.

தம்முடைய நீண்ட உரைக்குப் பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் - பூந்தமல்லி நெடுஞ்சாலையை தந்தை பெரியார் நெடுஞ்சாலை எனப் பெயர் மாற்றம் செய்யும் பெயர்ப் பலகையினைத் திறந்து வைத்தார்.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவினையொட்டி சென்னை மாநகரில் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில் அழகுற அமைய விருக்கும் 'பெரியார் நூற்றாண்டு விழா மண்டபத்'திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

## உதவித் தொகை

தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவுக் கொள்கைகளை ஏற்று, சீர்திருத்தப்பணிகளில் ஈடுபட்டு உயிர் நீத்த 18 பேர்களின் குடும்ப வாரிசுகளுக்குத் தலா 5 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை மாண்புமிகு முதல்வர் அவர்களால் அளிக்கப்பட்டது.

தந்தை பெரியார் அவர்களோடு நெருங்கிப் பழகி, பொதுத் தொண்டாற்றி, வயது முதிர்ந்து வலுவிழந்த நிலையில் உள்ள 11 பேர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூபாய் 2 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்பட்டது.

தந்தை பெரியார் அவர்களின் உருவோடுகூடிய கேடயங்களும் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களால் அளிக்கப்பட்டன.

தந்தை பெரியார் அவர்களைப் பற்றிய கட்டுரை — கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கான ரொக்கப் பரிசுகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

இந்த அன்பளிப்புகள் முடிந்த பின், செய்தி, மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு என். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நன்றி நவின்றார்.

சிறப்புக் கூட்டத்தில் பங்கேற்றுச் சிறப்பித்தவர்களுக்கு, விழாக் குழுவின் சார்பில், தந்தை பெரியார் அவர்களின் திருவுரு தாங்கிய கலை நுணுக்க மேம்பாடுடைய தஞ்சைத் தட்டு வழங்கிடப்பட்டது.

அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற, நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்கள் பலரும் இச்சிறப்புக் கூட்டத்திற்கு வருகை தந்தனர்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
—**இராசேந்திரன்.**



# வனவிலங்குகளை காப்போம்!

**தே. சு. பெரியசாமி**
வனப் பயன்பாட்டு அலுவலர்




கண்ணைக் கவரும் செடி கொடிகளும், மரங்களும், வனப்பு மிக்க விலங்குகளும் நிறைந்தது இந்தியா. இயற்கையின் எழிலை இந்தியாவில் நெடுகக் காணலாம். பலவித விலங்குகள், விதவிதமான பறவைகள் இவற்றைச் சித்திரிக்காத கலைப் பொருள்களும் உண்டோ! நாட்டின் கிராமிய கதைகளில், கவிதைகளில் சமய விளக்கங்களில், விலங்குகளும், பறவைகளும் முக்கியப் பாத்திரங்களாகவே இருக்கின்றன. நம் தமிழ்நாடு பலதரப்பட்ட உயிர் வகைகளுக்குப் பெயர் பெற்றது.

நூறு ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் ஏராளமான விலங்கினங்கள் இருந்தன. கறுப்புக் கலை மான், புள்ளிமான் போன்றவை இந்தியச் சமவெளிப் பகுதிகளில் கூட்டம் கூட்டமாக இருந்தன. காட்டெருது, புலி, யானை இவைகள் காடுகளில் நிறைந்திருந்தன. ஆனால், இப்போது நிலைமை வேறு.

கடந்த 2000 ஆண்டுகளில் 107 வகை பிராணி இனங்கள் முழுமையாக அழிந்துபோய் விட்டன. இவற்றில் 70 இனங்கள் கடந்த 100 ஆண்டுகளில் அழிந்து போனவை. என்று கூறப்படுகிறது. வனத்துறையிலும், பிராணிகள நலத்துறையிலும் ஈடுபட்டுள்ளவர்களின் கணக்குப்படி தற்போது ஏறத்தாழ 600 வகை பிராணி இனங்கள் ஏறக்குறைய முற்றிலும அழிந்துபோயவிடும் நிலையில் இருக்கின்றன என்று கூறப்படுகிறது.

ஒரு காலத்தில் வட இந்தியக் காடுகளில் எங்கும் காணப்பட்ட சிங்கம் இப்போது குஜராத்தில் கிர் காடுகளில்தான் வசிக்கிறது. ஒரு சமயம் மத்திய இந்தியாவில் சகஜமாகக் காணப்பட்ட ஒரு வகை சிறுத்தையை இப்போது மிருகக் காட்சிச் சாலையில்தான் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அம்மாதிரியே, முன்பு பல இடங்களில் இருந்த காட்டெருமையை இப்போது அஸ்ஸாமிலுள்ள காரசிங்கா, மானஸ் வனவிலங்கு காப்புக்கான இடங்களிலும், மத்திய பிரதேசம, ஒரிசா மாநிலகளில் சில பகுதிகளிலும் காணலாம். நீலகிரி வரையாடு, கருங்குரங்கு போன்ற இனங்கள் அறவே இல்லாமல் போகும்நிலை ஏற்பட்டிருக்கிறது. சதுபபு நிலை மான், நான்கு கொம்புகளுடைய மான், பனிச் சிறுத்தை, காஷ்மீர் மான், கஸ்தூரி மான், இந்திய நாரை, சிவப்புத்தலை வாத்து, வெள்ளைநிறக் காட்டுவாத்து ஆகியவையும் மறைந்து வருகின்றன.

மக்கள்தொகைப் பெருக்கம், நகர நெரிசல் இவற்றால், காடுகளிலும் புல் வெளிகளிலும், மக்களின் குடியிருப்புகள் தோன்றியிருக்கின்றன. மக்கள் வசதிக்காக மலைக்காடுகளும், அக்கறையின்றி அழிக்கப்படுவதால், வனவிலங்குகளுக்குத் தக்க இருப்பிடம் இல்லாமல் போய்விட்டது. மின்சாரப் பாசனத்திட்டங்கள் உணவு உற்பத்தி இயக்கம்,விரைவான தொழிலபிவிருத்தி இவற்றினாலும் வனவிலங்குகள் இருப்பிடம் மேலும் குறைந்திருக்கிறது.

காடுகள் அழிப்பு தவிர பிராணிகளை வேட்டையாடுவதும் பிராணிகள் அழிவதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. யானைகளின் தந்தத்திற்கும், புலி, மான் தோல்களுக்குக் கிடைக்கும் நல்ல விலையும் இவைகள் மனித வேட்டைக்குப் பலியாகக் காரணமாக உள்ளன.

இந்த அற்புத விலங்குகளையும், பறவைகளையும் காக்க தக்க முயற்சி தேவை. வனவிலங்குக்ளைப் பாதுகாக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. வேட்டையாட சட்டரீதியில் கட்டுப்பாடுகள், சில மிருகங்களையும், பறவைகளையும் கொல்லக் கூடாது என அறிவிப்பு தவிர அபூர்வ விலங்குகளையும் விலங்குப் பொருட்களையும் ஏற்றுமதி செய்யக் கட்டுப்பாடு விதித்தும், விலங்குகள் காப்புக் கேந்திரங்கள், தேசிய பூங்காக்கள், மிருகக் காட்சிச் சாலைகள் ஆகியவற்றை அமைத்தும், அரசு, விலங்கினங்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. வனவிலங்குகளின் பாதுகாப்புக்காக மக்களின் உதவியைப் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிராணிகளைக் காக்க பல்வேறு பிரசார முறைகள் சமீப காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஓரளவு பிராணிகளை அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி இருக்கிறது என்றாலும் அவைகளை முழுமையாக நிறுத்த முடியவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

இந்தியாவின் மற்ற பகுதிகளில் இல்லாத சில பிராணி மிருக வகைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இவற்றைக் காப்பாற்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிங்கமுகக் குரங்கு என்னும் ஒரு விசேஷ வகைக் குரங்கு மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும், திருநெல்வேலி அருகே உள்ள களக்காடு சரணாலயத்திலும் காணப்படுகின்றன. இந்த வகைக் குரங்கும் களக்காடு பகுதியில் 800 மட்டுமே இருக்கின்றன.

பிராணிகளின் அழிவு குறித்து விளக்கம் தர இந்தப் பிராணி இனமே போதுமானது.


கேரளாவில் உருவாக்கப்பட்டு வரும் ''சைலண்ட் வேலி மின் திட்டம்'' அந்தப் பகுதியிலும் உள்ள இந்த வகைக் குரங்குகளை அழித்துவிடும். இதைப் போலவே நீலகிரிதார் என்றழைக்கப்படும் மானைப் போன்ற ஆடு வகை தென் இந்தியாவிலேயே 2000 தான் இருக்கின்றதாம். இவற்றில் பாதி தமிழ்நாட்டில் இருப்பதாக அறியப்படுகிறது.

தமிழ்நாட்டில் முன்பெல்லாம் அதிக அளவில் காணப்பட்ட ''பிளாக் பக்'' என அழைக்கப்படும் மான் வகை இப்போது கிண்டி ராஜபவனத்தில் மான் சரணாலயப் பகுதியில் ஓரளவு காணப்படுகிறது. இதே வகை மான் கோடிக்கரையிலும், பவானி சாகர் பகுதியிலும் சிறிதளவு இருக்கின்றன. சிவப்புத் தலை வாத்து வகை, சீட்டா என்ற புலி வகை ஆகியவை ஏற்கெனவே அழிந்துபோன நிலையில் உள்ளன. இந்திய யானைகளின் எண்ணிக்கை குறைந்துவருவதும் வருத்தத்திற்குரியவையாகும்.

பிராணிகள் அழிப்பு தவிர சில பறவைகள் இனங்களின் அழிவும் ஏற்பட்டுள்ளது. பறவைகள் வேட்டையும், அவைகள் தங்கும் இடங்கள் விவசாயத்துக்காக அழிக்கப்படுவதும் பறவை இனம் அழிந்து போவதற்கு முக்கியக் காரணங்கள். வேடந்தாங்கல் பகுதியில் தற்போது அங்குள்ள மரங்கள் அழிக்கப்பட்டதால் முன்பு இருந்த அளவிற்கு அங்கு பறவைகள் இருக்கவில்லை. தமிழ்நாட்டின் வனங்களின் பிராணிகள் நலத்தைக் காப்பாற்றிட வனத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

தமிழ்நாட்டில் தற்போது 8 சரணாலயங்கள் இருக்கின்றன. முதுமலை விலங்குகள் சரணாலயம், முண்டந்துறை சரணாலயம், வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், கோடிக்கரை சரணாலயம், கிண்டி மான்கள் சரணாலயம், ஆனைமலை சரணாலயம், களக்காடு சரணாலயம், வேட்டங்குடி ஆகியவை தவிர, புதிதாக ''நீலகிரிதார்'' என்றழைக்கப்படும் மானைப் போன்ற ஒரு வகைச் சரணாலயம் ஒன்றை ஏற்படுத்தவும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

இவை தவிர அழிந்துபோன சிலவகை பிராணிகளை அவை வாழ்ந்த இடங்களிலேயே மீண்டும் வளர்க்கவும் வனத்துறை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் ''பிளாக் பக்'' என்ற மான்வகை செங்கற்பட்டு, வட ஆர்க்காடு பகுதிகளில் மீண்டும் வளர்க்கப்பட்டு வருகிறது. இவைகளைக் காடுகளில் விடும் நேரத்தில் அவை மற்றப் பிராணிகளால் அழிக்கப்பட்டு விடாமல் பாதுகாத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றது.




வனத்துறையில் குறிப்பிடத்தக்க மற்றொரு திட்டம் கிருஷ்ணகிரி அணைக்கட்டுப் பகுதியில் முதலை வளர்க்கும் திட்டமாகும். இந்த 'மார்ஷ்' வகை முதலைகள் மீன்களைத் தின்று வாழும் மீன்களை அழித்துச் சாப்பிடும் தன்மை கொண்டது. இதை வளர்ப்பதால் மீன்களைச் சாப்பிடும் மீன் இனத்தை அழித்து விட வாய்ப்பு இருக்கிறது. இந்த முறை எகிப்து நாட்டில் நைல் நதியில் அமலாக்கப்பட்டதாகவும், தற்போது இந்த வகை முதலைகள் கிருஷ்ணகிரி அணைப் பகுதியில் வளர்க்கப்பட்டு வருகிறது. இது தவிர யானைகளைப் பாதுகாக்கும் பணியிலும் வனத்துறை ஈடுபட்டுள்ளது.

வனச்சட்டத்தில் மிருகங்களை வேட்டையாடுவது தடை செய்யப்பட்டிருந்தாலும், அவற்றைக் கொன்று அவற்றின் பாகங்களை விற்பனை செய்வது பெருமளவில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. வனத்துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டாலும், அவற்றால் பலன் கிடைத்துவிடாது. மக்களும் தக்க ஒத்துழைப்புத்தந்தாகவேண்டும். ''ஒரு மிருகம் அழிந்து விட்டால் அதை மீண்டும் உருவாக்குவது என்பது எளிதானதல்ல'' இதைப் பொது மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

எனவே, வனங்களில் வாழும் மிருகங்கள், பறவைகள் அழியாமல் காத்திட அனைவரும் ஒத்துழைத்தால்தான் முடியும் என்பதால் அதற்கான பிரசாரத்தில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளார்கள்.

இதனைப் பொதுமக்கள் புரிந்து கொள்ளும் வகையில் வனத்துறையினர் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் வாரத்தில் வனவிலங்கு வார விழாவாக தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் கொண்டாடி வருகின்றனர். அந்த வகையில் இவ்வாண்டும் 25-வது ஆண்டு வனவிலங்கு வார விழாவாக அக்டோபர் முதல் வாரத்தில் நாட்டின் பல பகுதிகளிலும் விழாக் கொண்டாட திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வாண்டு நடைபெறும் விழாவில் பொதுமக்கள் அனைவரும் பங்குகொண்டு வனவிலங்குகளால் இந்நாட்டிற்கு ஏற்படும் நன்மைகளையும் வனவிலங்கு அழிந்துவிடாமல் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் அவசியத்தையும் நன்கு புரிந்து கொண்டு பொதுமக்கள் இதற்கான தங்களது ஒத்துழைப்பை நல்க வேண்டும் என வனத்துறையினர் கேட்டுக் கொள்கின்றனர்.





# காவிரியின் கதை!

ஜூன் 12, 1965 மேட்டூர் அணையிலிருந்து காவிரி நீரைத் திறந்துவிட்ட நாள்! 14 ஆண்டுகள் கழித்து மீண்டும் இவ்வாண்டு அதே ஜூன் 12ல் மேட்டூர் அணையிலிருந்து குறுவைப் பாசனத்திற்காக நீர் திறந்துவிடப்பட்டது. இடையிலுள்ள 14 ஆண்டுகளில் காலம் தாழ்த்தியே மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு வந்தது. பருவமழை சரியான காலத்தில் பெய்யாததே இதற்கு முக்கிய காரணமாகும்.

ஜூன் மாத மத்தியில் நீர்விடுவதால் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நிலங்களில் குறுவை அமோகமாகப் பயிரிட நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தஞ்சைத் தரணியைத் தமிழகத்தின் நெற்களஞ்சியமாக்கிடும் காவிரி ஆற்றின் கதை சுவையானது:

தலைக் காவேரி கர்நாடக மாநிலத்திலுள்ள குடகுப் பகுதியில் மெர்க்காரா என்று இடத்தில் உற்பத்தி ஆகிறது.

கர்நாடகத்தில் காவிரியுடன் வந்து சேரும் முக்கிய உபநதிகள் ஆறு: 1. கபினி, 2. ஏமாவதி, 3. இலட்சுமணதீர்த்தா 4. லோகபவானி. 5. சிம்சா 6. அரக்காவதி.

தமிழகத்தில் கீழ்க்கண்ட முக்கிய உபநதிகள் காவிரியுடன் வந்து கலக்கின்றன; 1. பாலாறு 2. சந்நத்குமாரநதி 3. பவானி, 4. அம[illegible] 5. நொய்யல்.

ஆக, 11 முக்கிய உபநதிகள் காவிரியுடன் வந்து சேருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் வந்ததும் காவிரி பிரிந்து, 36 கிளை நதிகளாக மாவட்டத்தின் பலவேறு பகுதிகளுக்குச் சென்று தஞ்சையை வளமுடையதாக்குகின்றது.

**காவிரியில் பிரியும் கிளை நதிகள் :**

1. அரசலாறு 2. குடமுருட்டி 3. நாட்டாறு 4. கீர்த்தி மன்னியாறு 5. நூலாறு 6. வஞ்சியாறு 7. நந்தலாறு 8. வீரசோழன் 9. மஞ்சலாறு 10. மகிழலையாறு 11. மன்னியாறு 12. புதுமன்னியாறு 13. பழவாறு 14. பொத்தரசனாறு 15. முடிகொண்டானாறு 16. புத்தாறு 17. வளம்பாறு 18. திருமலைராசன். 19. குமுக்கி மன்னியாறு.

**வெண்ணாற்றின் கிளைகள் :**

1. வெண்ணாறு 2. வெட்டாறு 3. கோரையாறு 4. வடவாறு 5. பாமணியாறு 6. முல்லையாறு 7. அடப்பாறு 8. அய்யனாறு. 9. அரிச்சந்திர நதி 10. வெள்ளையாறு 11. பாண்டவயாறு 12. சுள்ளனாறு. 13. ஓடம்போக்கியாறு 14. காட்டாறு 15. கடுவையாறு.

இதில் காவிரியின் கிளைகள் மூலம் 4,93,837 ஏக்கரும், வெண்ணாற்றின் கிளைகள் மூலம், 4,65,307 ஏக்கரும் பாசனமடைகின்றன.

காவிரி ஆற்றின் முன் கட்டப்பட்டவை இரண்டு நீர்த்தேக்கங்கள் ஆகும். முதலாவது நீர்த்தேக்கமான கிருஷ்ணராஜசாகர் அணை கர்நாடக மாநிலத்தில் உள்ளது. 60 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது இது. நீர் கொள்ளளவு 43934 மில்லியன் கன அடி. அதிகபட்ச நீர்மட்டம் 124 அடி. அதிகபட்ச நீர் தேங்கக் கூடிய பரப்பளவு 49.90 சதுர மைல்; அதிக அளவு தண்ணீர் இருக்கும்போது நீர்ப்பகுதியின் நீளம் 25 மைல்.

இரண்டாவது, மேட்டூர் அணை. 1925-1934ல் கட்டப்பட்டது. நீர் கொள்ளளவு 93470 மில்லியன் கன அடி. பரப்பளவு 59.25 சதுர மைல். அதிக அளவு தண்ணீர் தேங்கியிருக்கும் பொழுது நீர்ப் பகுதியின் நீளம் 33 மைல்.

மேலே கூறப்பட்ட இரண்டு அணைகள் தவிர, காவிரி ஆற்றில் 5 அணைக்கட்டுகளும் உள்ளன. அணையில் அல்லது நீர்த்தேக்கத்தில் தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது. இந்த அணைக்

பதிவு எண். M. 8676










# தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா,

சென்னை
20-9-79















# தமிழரசு



கடடுகள் வரும் தண்ணீரை நிறுத்திப் பல்வேறு பகுதிகளுக்குக் கால்வாய் மூலமாக நீரைப் பிரித்து வழங்கிடப்பயன் படுத்தப்படுவன வாகும். அந்த 5 அணைக்கட்டுகளின் விவரம் பின்வருமாறு:

1. சேடர்பாளையம் அணைக்கட்டு
2. கட்டளை அணைக்கட்டு
3. மேல் அணை
4. கல்லணை
5. கீழ் அணைக்கட்டு

கரிகாலன் கட்டிய கல்லணை-இதில் கல்லணை சரித்திரப்புகழ் பெற்றது. இரண்டாம் நூற்றாண்டில் சோழப் பேரரசன் கரிகாலனால்கட்டப்பட்டதுஇந்தஅணை. இலங்கையிலிருந்து கொண்டு வரப்பட்ட கைதிகள் மூலம் கரிகாலனால் இவ்வணை கட்டப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். கல், களிமண் இரண்டும் சேர்த்துக் கட்டப்பட்டதால் கல்லணை என்று பெயர் பெற்றது. பிற்காலத்தில் இந்த அணையின் மீது பாலமும் புதிய வகை மதகுகளும் ஆங்கில அரசு இருந்தபொழுது அமைக்கப்பட்டன.

1800-ல் இந்த அணையைத் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களிடமிருந்து ஆங்கில ஆட்சியினர் பெற்றனர். 1804ல் அணையின்மீது தண்ணீரை ஏற்றிப் பாசன வசதி கொடுப்பதற்காகக் குத்துக் கற்களைப் பாவினார்கள். 1804ல் இப்போது காண்கிற பாலம் அமைக்கப்பட்டது.

1886ல், தானே வெள்ளக் காலத்தில் கீழே விழும் இரும்புப் பலகைகள் பொருத்தப்பட்டன.

1899ல் 5 அடி உயரமுள்ள திருகுப் பலகைகள் பொருத்தப்பட்டன.

1910ல் மணற் போக்கிகள் கட்டப்பட்டுக் கல்லணைக்கு மேலே வரும் மணலைக் கொள்ளிடத்தில் தள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

1924ல் அதிக தண்ணீர் வரத்தைக் கட்டுப்படுத்தி கல்லணைக்குச் சேதம் வராமலிருக்க கல்லணைக்கு மேலே இடது கரையில் சுமார் ஒரு மைல் நீளமுள்ள படுக்கை அணை கட்டப்பட்டது.

1925-34ல் கல்லணைக் கால்வாய் வெட்டப்பட்டது.

பாசன வசதிக்காக ஏறத்தாழ 30,000 கால்வாய்கள் உள்ளன. கால்வாய்களின் நீளம் 25,000 மைல்கள். இந்தக் கால்வாய்களின் மொத்த தூரம் உலகத்தை ஒரு சுற்று சுற்றி வருவதற்குச் சமமாகும்!

# தருமபுரி மாவட்டத்தில் கிராமக் குடிநீர்த்திட்டம்



தருமபுரி மாவட்டத்தில் குடிநீர் வழங்கும் பொருட்டு தனியாக ஒரு கோட்டம் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

1976-77ல் வறட்சி மீட்புப் பணித் திட்டத்தின்கீழ் முதல் கட்டமாக 41 கை இயக்கு நீர் ஏற்றுக் குழாய்களும், 2,3-வது கட்டமாக 109 கை இயக்கு நீர் ஏற்றுக் குழாய்களும், 4-வது கட்டமாக 225 கை இயக்கு நீர் ஏற்றுக் குழாய்களும் கிராமங்களில் அமைக்கப்பட்டன. இக் கைக்குழாய் இயக்குத் திட்டத்தை 1977ல் விசை இயந்திரத் திட்டமாக மாற்றியமைத்திட அரசு ஆணையிட்டது.

மொரப்பூர் ஒன்றியத்தில் தெக்கலநாயக்கன்பட்டி, ஆவலாம் பட்டி, ஒபிலிநாயக்கன் அள்ளி ஆகிய குடிநீர்த் திட்டங்களும், ஓசுர் ஒன்றியத்தில் ஒன்னல்வாடி குடிநீர்த் திட்டமும் வேலைகள் முடியும் தறுவாயில் உள்ளன. 1977-78ல் 150 கை இயக்கு நீர் ஏற்றுக் குழாய்கள் வறட்சித் திட்டத்தின் முதல் கட்டமாக அமைக்கப்பட்டன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடிநீர்வசதி எதுவும் இல்லாத கிராமங்களுக்கும், நீர் இருந்தும் குடிக்கத் தகுதியில்லாத நிலையிலுள்ள கிராமங்களுக்கும் கிணறு இருந்தும் நீரற்ற நிலைமையில் உள்ள கிராமங்களுக்கும் கிணறு இருந்தும் பொதுமக்களின் உரிமை யில்லாத கிராமங்களுக்கும், குடிநீர்க் கிணறுகள் 1கிலோ மீட்டர் தூரத்தில் அல்லது அதற்கு மேலுள்ள தூரத்தில் உள்ள கிராமங்கள் குடிநீர்ப் பற்றாக்குறை இல்லாத கிராமங்கள் என்ற வகையில் பிரித்துத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1977-78ல் குடிநீர் வசதி எதுவும் இல்லாத கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது. குடிநீர் வாரியம் 343 கிராமங்களையும், ஒன்றிய ஆணையாளர்கள் 56 கிராமங்களையும் தேர்வு செய்து, இதில் 125கிராமங்களில் முதல் கட்டமாகக் குடிநீர் வழங்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டது. 143 ஆழ்துளைக் கிணறுகளும், 130 கிணறுகளும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றன.

1977-78ல் 143 ஆழ்துளைக் கிணறுகளும், 4 விசை இயந்திரமும், 136 கைஇயக்கு நீர் ஏற்றுக் குழாய்த் திட்டமும் வாரியத்தின் மூலம் இம்மாவட்டத்தில் முடித்து வைக்கப்பட்டன. ஒன்றிய அதிகாரிகளால் 130 கிணறுகள் அமைக்க ரூ 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் முற்றுப்பெற உள்ளன.

1977-78ல் 150 கைஇயக்கு நீர் ஏற்றுக் குழாய்கள் ரூ. 9,32,817 மதிப்பீட்டில் செய்யப்பட்டது. 1978-79ல் குடிநீர் வசதி சிறிதும் இல்லாத 274 கிராமங்களுக்கும், குடிநீர் இருந்தும் குடிக்க முடியாத நிலையில் உள்ள 18 கிராமங்களுக்கும் ரூ.36.79 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஆழ்துளைக்கிணறுகள் வெட்ட ரூ. 27,12,400 மதிப்பீட்டிலும், பொதுக் கிணறுகள் வெட்ட ரூ. 9,66,600 மதிப்பீட்டிலும் திட்டங்கள் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனால் பயனடையும் மக்களின் எண்ணிக்கை 53,782 ஆகும். இவ்வாரியம் 1155 கைப்பம்புகளை இம்மாவட்டத்தில் பராமரிப்பிற்காக எடுத்துக் கொண்டு செயலாற்றி வருகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் [illegible]
முகவரி : தமிழரசு அலுவலகம், [illegible] தோட்டம், சென்னை-[illegible]







தமிழரசு மலர் 10 இதழ் 8
16-10-1979


## ஜெயப்பிரகாஷ் நாராயண்

**1902** ஆம் ஆண்டு அக்டோபர் 11-ஆம் நாளன்று பீகார் மாநிலத்தில், சிதாப்தியாரா என்னும் கிராமத்தில் பிறந்தார். அவரது தந்தை ஒரு விவசாயியாக இருந்தபோதிலும் கல்வியில் மகனுக்கிருந்த அக்கறையை உணர்ந்த அவர் ஜெயப்பிரகாஷ் நாராயணனைக் கல்லூரி வரை படிக்க வைத்தார். மேற்படிப்புக்காக அமெரிக்காவுக்கும் அனுப்பினார். அங்கு அவர் ஆப்பிள் தோட்டத்தில் வேலை பார்த்து–பணம் சம்பாதித்து அதைக் கல்விச் செலவுக்குப் பயன்படுத்திக் கொண்டார். படிப்பு முடிந்து தாயகம் திரும்பியதும்—காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து, நாட்டு விடுதலைப் பணியில் ஈடுபட்டார். அதன் காரணமாகப் பன்முறை சிறைத் தண்டனை பெற்றார்.

1948-ஆம் ஆண்டு அரசியலைத் துறந்து சர்வோதய இயக்கத்தில் ஈடுபட்டார். பூமிதான இயக்கங்களில் வினோபா பாவேயுடன் தீவிரப் பங்கு கொண்டார். சாம்பல் பள்ளத்தாக்கில் வாழ்ந்த கொள்ளைக்காரர்களைச் சந்தித்துப்பேசி அவர்களை மனம் மாறவைத்து, காவல் துறையினரிடம் சரண் அடையவைத்த நிகழ்ச்சி வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்.

1975-ஆம் ஆண்டு முதல், அவரது உடல் நலம் சீர்கேடடைந்தது. உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாது நாட்டுப் பணி புரிந்து வந்தார். அண்மையில் உடல்நிலை பாதிக்கப்பட்டு, 1979-ஆம் ஆண்டு அக்டோபர் 8-ஆம் நாளன்று மறைவு எய்தினார்.

விடுதலைப் போராட்ட வீரர்களின் முன்னணியில் இடம் பெற்ற அந்த மாபெரும் தலைவரின் மறைவுக்கு 'தமிழரசு' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.



# புதிய சாதனை

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
திரு ஆர். சவுந்தரராசன்



உடல் நலமே மக்களின் முதலீடாகும். இம்முதலீட்டை வலுப்படுத்தும் நோக்குடன் நடைமுறையிலிருக்கும் உடல் நலத் திட்டங்களை வலுப்படுத்துவதில் இவ்வரசு தொடர்ந்து மிகுந்த ஈடுபாடு கொண்டிருக்கிறது. அத்துடன் முழுக் கவனம் செலுத்தப்பட்டு உருவாக்கப்படும் இவ்வுடல் நல முதலீட்டுத் திட்டங்களைப் புதியபகுதிகளில் விரிவடைய ஆவன செய்தும் வருகிறது. ஊரகப் பகுதியை முக்கியமாகக் கருதி உருவாக்கப்பட்ட புதிய திட்டங்களில் இவ்வரசின் முதலீடும், சிறப்புப் பணிகளுக்கான ஏற்பாடும் சென்ற ஆண்டை விட ஐந்து மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் மக்கள் நல்வாழ்வுத்துறை நிர்வாகத்தில் ஒரு புதிய சாதனை உருவாகியுள்ளது.

''நோய் வராமல் தடுப்பதே நோயைக் குணப்படுத்துவதை விட சிறந்ததாகும்'' என்ற பழமொழிக்கேற்ப, அரசின் பொது உடல்நல, மற்றும் தடுப்பு மருந்துத்துறை தெளிவமைந்த தீவிர உடல்நலப் பணிகளை ஏற்பாடு செய்து வருகிறது. இவ்வாறு அளிக்கப்படும் பலவகையான நல்வாழ்வுப் பணிகள், தொற்று நோய்கள் மற்றும் பிற நோய்களைத் தடுத்தல், தொற்று நோய்கள் தோன்றுமிடங்களில் அவற்றை அழித்தல், ஊரகப் பகுதி வாழ் மக்களுக்கு மருத்துவக் கவனம் செலுத்துதல், சுற்றுப்புறத் துப்புரவு மேம்பாடு, சுற்றுப்புற அசுத்தத்தைத் தடுத்தல், உணவுப் பொருள் மருந்துகளில் கலப்படங்களைத் தடுத்தல், தாய்மார்கள் கருவுற்றிருக்கும் பொழுதும், பேறுகாலங்களிலும் அவர்களுக்குப் போதிய மருத்துவ கவனமளித்தல், நல்வாழ்வுத் திட்டங்கள் வகுக்க பிறப்பு, இறப்புப் பதிவு உட்பட சுகாதாரப்புள்ளி விவரங்களைத் சேகரித்துத் தொகுத்தல், மற்றும் மக்கள் நல்வாழ்வு வழிமுறைகள் பற்றி மக்களுக்குக் கல்வி விளக்கம் அளித்தல் முதலியவற்றை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு விளங்குகின்றன.

சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு, ஊர் மக்களின் உடல்நல முன்னேற்றம் அத்தியாவசியமானதாகும். ஊரகப்பகுதியில் வாழும் விவசாயிகள், மாணவர்கள் மற்ற தொழிலாளர்களிடையே பரவியுள்ள நோயைக் குறைத்து அவர்களின் உடல்நலம் பேணி அவர்களுக்கு மேன்மேலும் மருத்துவ வசதிகள் அளிக்க வேண்டுமென்பதுதான் அரசின் எண்ணமாகும்.

ஆரம்பச்சுகாதார நிலையங்கள், அவற்றில் கிளை நிலையங்கள், நடமாடும் சுகாதாரக் குழுக்கள், சிறு சுகாதார நிலையங்கள் முதலியன அமைக்கப்பட்டுள்ளதன் மூலம் மேற்கூறிய நோக்கம் பிரதிபலிக்கிறது.

கிராம மக்களுக்கு அவர்கள் இருப்பிடங்களிலேயே மருத்துவ வசதிகள் அளிக்கும் நோக்குடன் இந்நாட்டிலேயே முதன்மையான புதிய ''நடமாடும் மருத்துவக் குழு'' திட்டத்தை, 1977-78-ஆம் ஆண்டில் 24 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இவ்வரசு துவக்கியுள்ளது. 1978-79-ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும், 100 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 1979-80-ஆம் ஆண்டில் ரூபாய் 62.43 இலட்சம் செலவில் மேலும் 100 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்படவுள்ளது.

கிராம மக்களுக்குக் கூட்டுறவு அடிப்படையில் சுகாதாரப் பணி புரிய பொது நல நிறுவனங்களை ஊக்குவிக்கும் குறிக்கோளுடன் சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சிறு சுகாதார நிலையத்திற்கு ஆண்டொன்றுக்கு ஏற்படும் தொடர் செலவு ரூ. 18,000 ஆகும்.

1977-78-ஆம் ஆண்டில் 54 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கவும், 1978-79-ஆம் ஆண்டில் மேலும் 66 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தனியார் நிறுவனங்களிடமிருந்து வரும் ஊக்கமான கோரிக்கையை முன்னிட்டு, 1979-80-ஆம் ஆண்டில் மேலும் 60 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

சுகாதாரத் திட்டத்திற்கும் மூலதனத்திற்கும் கிராம நிலை முதன்மைகளை ஏற்படுத்தக் கருதி ஒரு மிகப் பெரிய ஊரக சுகாதார அளவைத் திட்டத்தினை இவ்வரசு துவக்க இருக்கிறது. இந்த அளவைத் திட்டம் ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களின் சுகாதார வசதிகளையும், அதன் உபயோகத்தினையும், கணக்கெடுத்தலையும் கொண்டிருக்கும். கெடுதலான சுற்றுப்புறச் சூழ்நிலைகளை வெளிப்படுத்துகின்ற ஊரகப் பகுதிகளும் அரசு நிறுவனங்களின் மூலம் திறம்பட கவனிக்கப்படாமல் இருக்கும் பகுதிகளும் தெரிந்தெடுக்கப்பட்டு முதன்மையிடம் அளிக்கப்படுகின்றன. அதைப் போல் தடுப்புப் பணிகள் குறைவாக உள்ள பகுதிகளை மேம்படுத்தவும் தெரிந்தெடுக்கப்படுகின்றன. இவ்வாறு இந்த அளவைத் திட்டம் ஒரு விஞ்ஞான முறையில் சுகாதாரத் திட்டம் அமைய உதவி புரியும்.

பொதுச் சுகாதாரத் துறையின் கீழ் உள்ள பணியாளர்களும், ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் பணியாற்றும் சமுதாய முன்னேற்றப் பணியாளர்களும் இந்த அளவைத் திட்டத்தினை மேற்கொள்ளுவார்கள்.

(1979-80 மானியக் கோரிக்கைமீது ஆற்றிய உரையிலிருந்து...)



# வனவிலங்குகள் வாழ்ந்திட....




உலகிலேயே வனவிலங்குகளையும் மரம், செடி, கொடிகளையும், வகை வகையாகக் கொண்டுள்ள மிகச்சில நாடுகளில் நம் நாடும் ஒன்று. இவ்வரிய பழம்பெரும் செல்வத்தினை அழிந்துவிடாது காக்கவேண்டிய அவசியத்தை விளக்கவும், வற்புறுத்தவுமே இவ்வனவிலங்கு வாரம் ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் 1ந்தேதி முதல் 7ந் தேதிவரை கொண்டாடப்படுகிறது.

நகரங்களும், நாகரீகங்களும் பெருகப்பெருக, வனங்கள் அழிந்தன; மரங்கள் வெட்டப்பட்டன. வாழ்விடத்தை, புகலிடத்தை இழந்த வனவிலங்குகள் அலைந்தன - திரிந்தன - பின்பு அழிந்தன. வேடிக்கையான விளையாட்டு என்று கூறப்படுகிற விபரீதமான வேட்டைக்குப் பல விலங்குகளும் பலியாகின.

மிருகங்களும், தாவரங்களும் இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது. இதை உணர்ந்து பல நாடுகள் விழித்துக்கொண்டன. அவற்றைப் பாதுகாப்பதற்கென ஒவ்வொரு நாட்டிலும் பலவித கடுமையான சட்டங்கள் அமலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. கடலில் வாழும் பிராணிகளையும் பாதுகாக்க சர்வதேசச் சட்டங்கள் ஏற்பட்டன.

வனவிலங்குகள் ஒரு நாட்டின் தட்ப வெப்பச் சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு பிறந்து, வளர்ந்து வாழ்கின்றன. அவற்றுக்கு ஏற்ற இயற்கையான சூழ்நிலை அமையாவிட்டால், அவை அழிந்துவிடுகின்றன. இதனால்தான், உலகில் எல்லா நாடுகளிலும் மனிதர்களைக் காண முடிவதுபோல், சிங்கம், புலி, யானை, கரடி, மயில் போன்றவற்றை மேலை நாடுகளில் காணமுடிவதில்லை. சில நாடுகளில்தான் இவை அபூர்வப் பிராணிகளாய்க் காணப்படுகின்றன.

விலங்குகள் மனிதனை அழிக்கப் பிறந்தவை எனக் கருதுவது தவறு. அவை தாக்கப்படும் பொழுதுதான், ஆத்திரமூட்டப்படும் பொழுதுதான் எதிர்த்தாக்குதலில் இறங்குகின்றன. அவற்றின் அமைதியைக் குலைக்காமல் இயற்கைச் சூழலில் அருகே இருந்து அவற்றைப் பார்த்தால் கூட, அவை மக்களுக்குத் தீங்கிழைப்பது இல்லை.



மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்
திரு இராம. வீரப்பன்

மனிதனைப் போலவே, எல்லாப் பிராணிகளும் தாங்கள் பிழைத்திருக்கவே போராடி வந்துள்ளன. கரடிகளில் ஒரு சில தான் மனிதனைக் கொல்பவை. மனிதனைக் கண்டுவிட்டால் தப்பி விலகவே அவை முயலும். மாஸ்கோ விலங்குக் காட்சிச் சாலையில், ஒரு சமயம் ஒரு வெள்ளாட்டுக் குட்டி, உஸ்ஸுரிப் புலிகள் இருந்த தடுப்பிடத்திற்குள் புகுந்துவிட்டது. இந்தப் புலிகள், வெள்ளாட்டை இதற்கு முன்பு கண்டதே இல்லை. வெள்ளாட்டுக் குட்டி துணிச்சலாகத் தங்களை நோக்கி வரக் கண்டதும், அவை பயந்து விலவிலத்துப் போய் பற்களைக் காட்டி உறுமியவாறு சுவரோரத்துக்கு நகர்ந்தனவாம்! தவறான கருத்துக்களின் அடிப்படையில்தான் வனவிலங்குகளுக்கு மனிதன் தீங்கிழைக்கத் துணிகிறான்.

நல்ல பாம்பு, மனிதனை முதலில் தீண்டுவதில்லை. ஆனால், கலவரமூட்டப்பட்டால், சாவு விளைவிக்குமாறு கடிக்கக்கூடும். இந்தியாவில் யானைகள் பழக்கப்பட்டு, மரக் கட்டைகளைச் சுமந்து செல்வதுபோன்ற பார வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. யானைகளை நன்றாகப் பழக்க முடியும்.

பல நாடுகளில் வனவிலங்குகள் நிம்மதியாக வாழ்வதற்கென சில இடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு வனவிலங்குப் புகலிடங்கள் என்று பெயர். தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் உலகப் புகழ்பெற்ற இரண்டு புகலிடங்கள் உள்ளன.

நமது நாட்டிலும், சுமார், பன்னிரண்டு வனவிலங்குப் புகலிடங்கள் உள்ளன. யானை, சிங்கம் சிறுத்தை, காண்டாமிருகம், மயில் காட்டுக்கோழிகள் இன்னும் பல விதப் பறவைகள் முதலியவற்றைப் பாதுகாக்க இவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள முதுமலை வனவிலங்குப் புகலிடம் நம் நாட்டினரையும், அயல் நாட்டினரையும் ஒருங்கே கவர்ந்துள்ளது.

தென் அமெரிக்காவில் மேற்குக் கடற்கரையில் ''சில்லி'' ''பெரு'' என்ற இரு நாடுகள் உள்ளன. அங்கே கடற்கரையில் இலட்சக் கணக்கான கடற்பறவைகள் வசித்து வருகின்றன. அப்பறவைகளின் எச்சம் ஒரு சிறந்த எரு. அந்நாடுகளின் வருமானத்தில் பெரும்பகுதி இந்த உரத்தின் விற்பனையால்தான் கிடைக்கிறது. அதன் காரணமாக இவ்விருநாடு

களிலும், இக்கடற்பறவைகளைக் காக்க ஒரு அதிசயமான சட்டம் அமலில் உள்ளது. அதன்படி, அந்நாடுகளில் ஆகாய விமானங்கள் குறிப்பிட்ட உயரத்திற்குக் கீழே பறக்கக் கூடாது. குறிப்பிட்ட எல்லைக்குள் கப்பல்கள் எவையும் சங்கு ஊதக்கூடாது. சங்கின் சப்தத்தினாலும், தாழப் பறக்கும் விமானங்களினால் ஏற்படும் ஒலியாலும் கடற்பறவைகள் பயந்து வேறு அமைதியான இடங்களுக்குச் சென்று விடக் கூடாதே என்ற அச்சமே இந்தச் சட்டத்தின் நோக்கம்.

தாவரங்களோ, பிராணிகளோ இல்லாமல் மனிதன் வெகுகாலம் வாழமுடியாதென்பதையும், அவற்றிற்கும் வாழ உரிமை உள்ளதென்பதையும் நாம் நன்கு உணர வேண்டும்

உலகத்தில் பரிணாம வளர்ச்சியில் எல்லா உயிர்களுமே ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. மறைமுகமாக ஒவ்வொரு விலங்கும் (பறவையும், ஊர்வனவும், நீர்வாழினமும்) இயற்கையின் சமநிலையை நிலைநிறுத்தப் பயன்படுகிறது. இதனை ஒரு சிறு உதாரணம் மூலம் விளக்கலாம்.

புலி, சிறுத்தை போன்ற மிருகங்களின் இயற்கை உணவான மான், பன்றி முதலியவற்றை நாம் அழிப்போமேயாகில் அந்த மிருகங்கள் தமக்கு உணவில்லாத காரணத்தால் நமது கால்நடைகளை அழிக்க முயல்கின்றன. சில சமயங்களில் மனிதனையே அழிக்க முற்படுவதும் உண்டு. மேலும், நாம் இப்படிப்பட்ட புலி, சிறுத்தை போன்ற மிருகங்களை அழிப்போமேயானால், மான், பன்றி, முள்ளம்பன்றி போன்ற மிருகங்கள் இனம் பெருகி, விவசாயிகளின் பயிர்கள் அழிந்துவிடும் நிலை ஏற்படும். எனவே, ஒருவகையான மிருகங்கள் அழிக்கப்பட்டால், மற்றவை பெருகி நமது நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுகின்றது. எனவே, சீரான பாதுகாப்பு வனவிலங்குகளுக்கு அவசியமாகிறது. சில பறவைகள் மிகவும் சிறியதாயினும், தங்கள் சிறு வயிற்றினை நிரப்ப ஓரிரு சிறு பூச்சிகள் போதுமாயினும், கூட்டங்கூட்டமாய் வரும் வெட்டுக்கிளிகளைச் சந்திக்கும்போது, அவைகளைத் தங்கள் கத்தரிக்கோல் போன்ற அலகால் வெட்டித்தள்ளுகின்றன. இம்மாதிரியான சூழ்நிலையில் நாம் தரையில் நிறைய வெட்டுக்கிளிகள் துண்டாடப்பட்டுக் கிடப்பதைக் காணலாம். இவ்வகையில் விவசாயிகளின் பயிர்ப் பாதுகாப்பிற்கு அந்த மிகச் சிறிய பறவைகள், மிகப் பெரிய அளவில் உதவுவதைக் காணலாம்.

புல்பூண்டு போன்ற தாவரங்களில் வாழும் வண்ணத்துப்பூச்சி போன்ற பூச்சியினங்கள், பருப்பு வகைகள், கடுகு போன்ற பயிர் வகைகளின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவுகின்றன. அவைகள் வாழும் இடமான புல்பூண்டு, அழிக்கப்படுவதால் பூச்சிகள் குறைந்து பயிர் விளைவுகள் குறைந்துவிடுகிறது. இதனால் மக்களுக்கு அத்தியாவசியத் தேவையான உணவுப் பொருட்களின் பற்றாக்குறை நாட்டில் ஏற்படுகிறது. பயிர்களுக்கு அதிகமான பூச்சிக்கொல்லி மருந்துகளை உபயோகப்படுத்துவதால் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளோடல்லாமல் முன்பு கூறியதுபோல் நன்மை பயக்கும் பூச்சிகளும் அழிந்துவிடுகின்றன. இதனால் பயிர்களின் விளைவு காலப்போக்கில் பாதித்துக்கொண்டு வருகிறது.

இதைக் கருத்தில் கொண்டு நமது விஞ்ஞானிகள் பூச்சிக்கொல்லி மருந்துகளை உபயோகப்படுத்தாமலேயே, தீமைதரும் பூச்சி இனத்தைக் கட்டுப்படுத்த அவற்றை அழிக்கக்கூடிய தீமை தராத பூச்சி இனத்தைக்கொண்டு பயிர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன், காஷ்மீரத்துப் பள்ளத்தாக்கில் ''உலியாப்ஸிஸ்'' என்ற ஒருவகைப் பூச்சியினம் உலகப்புகழ் பெற்ற காஷ்மீரத்து ஆப்பிள் தோட்டங்களையே அழிக்கலாயின. எந்த ஒரு பூச்சிக்கொல்லி மருந்தும் பயனற்றுப் போனது. கடைசியில் இங்கிலாந்திலிருந்து ''அபிலுள்மலி'' என்ற ஒருவகை வண்டு இனம் கொண்டுவரப்பெற்று இப்பள்ளத்தாக்கினில் விடப்பட்டது. நீங்கள் நம்ப மாட்டீர்கள்! இதுபோன்ற 15 வண்டுகள் மட்டுமே அப்பகுதியில் விடப்பட்டு, மிகக் குறுகிய காலத்தில் மாதிரிக்கு ஒன்று கூட இல்லாமல் அத்தனை தீமை விளைவித்த பூச்சிகளும் அழிக்கப்பட்டுவிட்டன என்பதைக் கேள்வியுறும்போது, ''என்னே இயற்கையின் விநோதம்!'' என வியக்காமலிருக்க இயலவில்லை. இயற்கை முறைதான் இவ்வுலகிலேயே மிகவும் சிறந்ததும், சிக்கனமானதும் ஆகும் என்பது ' இதிலிருந்தே தெரிகிறதல்லவா?

மனிதன் தாவரங்களையும் விலங்குகளையும் நம்பியே உயிர் வாழ்கிறான். இவை அழிந்துவிட்டால் மனித இனம் உலகிலிருந்தே மறைந்து போவது உறுதி. விலங்குகளால் மனிதனுக்குப் பல நன்மைகள் உண்டாகின்றன. இறைச்சி, பால், முட்டை ஆகியவை அவனுக்கு உணவுப் பொருளாகக் கிடைக்கின்றன. ஆடைகளும், காலணிகளும் விலங்குகளிடமிருந்துதான் அவன் பெறுகிறான். கம்பளி, இயற்கைப் பட்டு, மென்மயிர், தோல் ஆகியவை கிடைக்கின்றன. குதிரைகள், கழுதைகள், எருதுகள், எருமைகள் ஆகியவை போக்குவரத்திற்கும், வயல் வேலைகளுக்கும் பயன்படுகின்றன. யானைத் தந்தமும், பாம்பின் தோலும், நஞ்சும், இன்று அந்நியச் செலாவணி ஈட்டுவதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்ட விலங்குகளைப் போற்றி வளர்ப்பதால் நாட்டுக்கு நன்மை விளைவது உறுதி.

வனவிலங்குகள் வனங்களில் வாழ்கின்றன. விலங்குகள் இருப்பதற்கு எப்படிக் காடுகள் அவசியமோ, அப்படியே காடுகள் அழிக்கப்படாமல் இருப்பதற்குக் காட்டு மிருகங்கள் அவசியம். கம்பீரமான காட்டு மிருகங்களும், கீதம் எழுப்பும் பறவை இனங்களும் இல்லாமல் போனால் மனித வாழ்க்கை எவ்வளவு சுவையற்றதாய் விடும் என நேரு ஒரு சமயம் சொன்னார். ஆம், இந்த வசீகர விலங்கினங்களும், பறவைகளும் நமது வாழ்க்கைப் பயணத்தில் வண்ணம் சேர்க்கின்றன.

இயற்கையைச் சமநிலையில் வைத்திருப்பதில் வன விலங்குகளும், பறவைகளும், பெரும்பணியாற்றுகின்றன. பயிர்களை அழிக்கும் மான் கூட்டமும், காட்டுப் பன்றிகளும் கட்டுக்கடங்காமல் பெருகிடாது புலி அவைகளை அழித்துப் பாதுகாக்கிறது; காட்டில் கோரைப் புற்கள் பெருகிடாதபடி மான் பாதுகாக்கிறது; இதனால் பொருளாதாரப் பயனுள்ள மரங்களைப் பயிராக்க முடிகிறது. மனிதனுக்கும் பயிருக்கும் தீங்கு இழைக்கும் புழு, பூச்சிகளைப் பறவைகள் உணவாகக் கொள்கின்றன. இவ்வாறு வன விலங்குகளும் பறவைகளும் இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே ஓர் இணைப்பாகப் பயன்படுகின்றன.

வனங்களும், வனவாழ் விலங்குகளும் நம் முன்னோர் வாழ்வில் எழுச்சியூட்டி நம் நாட்டின் கலை பண்பாடு செழிக்கக் காரணமாக இருந்திருக்கின்றன. வனவிலங்குகளையும், தாவரங்களையும் பாதுகாக்கும் பெரும் பணியில் அர்ப்பணிப்பு உணர்வுடன் ஈடுபட உறுதி கொள்ளுமாறு ஒவ்வொருவரையும் வேண்டிக்கொள்வது எனது நீங்காக் கடமையாகக் கருதுகிறேன்.

[வானொலியில் 2-10-79ல் ஆற்றிய உரை]



# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

**திரு ஆர். அருணாசலம்**
**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்**



**நோ**யற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - அப்படிப்பட்ட ஒரு வாழ்வினை அடைய தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து மக்களுக்காகச் சேவை செய்து வருகிறது.

இம்மாநிலத்தில் 14 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் இருந்து வந்தன. இவ்வாண்டில் புதியதாக ஏற்படுத்தப்பட்ட பெரியார் மாவட்டத்தைச் சேர்த்து 15 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் உள்ளன. 1977-78ஆம் ஆண்டில் இம்மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 4054 ஆக இருந்தது. சென்ற ஆண்டில் (1978-79) இம்மருத்துவமனைகளின் பொதுப்பிரிவிலும், மற்றும் தொழுநோயாளிகளுக்கான தற்காலிக சிகிச்சை அளிக்கும் பிரிவிலும் 281 படுக்கைகளும், 120 படுக்கைகளும் முறையே அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

தற்சமயம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மட்டும் தான் மருத்துவ ஆவணத்துறைகள் இயங்கி வருகின்றன. முதன் முறையாக சேலம், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய நான்கு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் மருத்துவ ஆவணத்துறைகள் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கி உள்ளது.

இம்மாநிலத்தில் 106 வட்டத் தலைமையிடம் அல்லாத மருத்துவமனைகளும், 5 காச நோய் மருத்துவம் மற்றும் நலம்பேணும் மருத்துவமனைகளும் உள்ளன. இவற்றில் மொத்தம் 2724 படுக்கைகள் உள்ளன. சென்ற ஆண்டில் ஐந்து மருந்தகங்கள் மருத்துவமனைகளாக மாற்றப்பட்டன. இவைகளில் 82 படுக்கைகள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால் இம்மருத்துவமனைகளில் மொத்தப்படுக்கைகளின் எண்ணிக்கை 2806 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் மேலும் சில மருத்துவமனைகளில் 36 படுக்கைகள் கூடுதலாகச் சேர்க்க அரசு அனுமதி வழங்கி உள்ளது.

இம்மாநிலத்திலுள்ள வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 1977-78ஆம் ஆண்டு முடிவில் 5653 படுக்கைகள் இருந்தன. இம்மருத்துவமனைகளில் சென்ற ஆண்டு 130 படுக்கைகள் கூடுதலாக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் அரசு மருத்துவமனை கூடலூரில் 40 படுக்கைகள் கூடுதலாகச் சேர்க்க அரசு அனுமதி அளித்துள்ளது.

இம்மாநிலத்தில் 162 மருந்தகங்கள் உள்ளன. அவைகளில் 244 படுக்கைகள் உள்ளன. சென்ற ஆண்டில் 7 புதிய அரசு மருந்தகங்கள் திறப்பதற்கு அரசு ஆணை வழங்கி உள்ளது. நடப்பு ஆண்டில் 3 புதிய அரசு மருந்தகங்கள் திறக்க அரசு அனுமதியளித்துள்ளது.

நடப்பு ஆண்டில் திருச்சி மற்றும் தூத்துக்குடி மாவட்ட மருத்துவமனைகளிலும், தென்ஆர்க்காடு மாவட்டத்தில் விருத்தாச்சலம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை, புதுக்கோட்டை மாவட்டத்தில் வளையபட்டி ஆகிய மருத்துவ மனைகளில் புதிதாக 'எக்ஸ்' கதிர் சாதனம் வழங்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

தற்சமயம் கல்விப் பயிற்சி மருத்துவமனைகளில் உள்ள சில தனித்துறைகளை மாவட்டங்களில் ஏற்படுத்துவதன் பொருட்டு இரத்தச் சேமிப்பு வங்கி, பல் மருத்துவச் சிகிச்சைப் பிரிவு, முடநீக்கியல் துறை, காது, மூக்கு, தொண்டை மருத்துவத் துறை போன்ற பல தனிப்பிரிவுகள் மாவட்ட, வட்ட மருத்துவமனைகளிலும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

சென்ற ஆண்டு வரை 132 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்ற அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் மூன்று ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்ற அரசு ஒப்புதல் வழங்கி இருக்கிறது. இதுவரை 121 மருந்தகங்கள் அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மீதமுள்ளவை எடுத்துக் கொள்ளப்படுவது வெவ்வேறு நிலைகளில் உள்ளது.

தமிழ்நாட்டில் ஆயிரத்தில் 10 பேர் முதல் 40 பேர்களிடம் தொழுநோய் காணப்படுகிறது. இந்நோய்க்கு ஆளானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தேசீய தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்ட மாதிரியின் அடிப்படையில் இத்திட்டம் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள், கிராமப்புறங்களிலுள்ள மருந்தகங்கள் ஆகியவற்றில் காசநோயினைக் கண்டறிதல், மற்றும் சிகிச்சை அளிக்க வசதிகள் உள்ளன.

மாவட்டக் காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் புறநகர் நிலையங்களில் நோயினைக் கண்டறிதலில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதிகமான அளவில் நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சைக்குள்ளாக்கப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் காசநோய் சிகிச்சைக்காக 3505 படுக்கைகள் மருத்துவமனைகளிலும், காசநோய் நிலையங்களிலும் உள்ளன.

நடப்பு ஆண்டில் சங்கரன் கோயில் மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட காசநோய்ப் பகுதி கட்டுவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

எத்துணை செல்வானாலும் தமிழக மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதில் தமிழக அரசு முன்னணியில் நிற்கிறது. மக்களின் ஒத்துழைப்போடு சமுதாயத்தில் பிணைந்திருக்கும் அனைத்துப் பிணிகளையும் ஒழித்துக் கட்டுவோம் என்ற உறுதியினை மேற்கொள்வோம்!

அனைத்து நாடுகள் குழந்தைகள் ஆண்டு 1979. எங்கு பார்த்தாலும் இதே முழக்கம். உலகின் எல்லா நாடுகளும் குழந்தை நலம் பேணும் பல்வேறு ஆக்கப்பணிகளில் ஈடுபட்டு பயனுள்ள திட்டங்களை நிறைவேற்றி வரும் நேரமிது. நலமான குழந்தையே நாட்டின் சொத்தென்றும், நலமான குழந்தைக்கே நம்பிக்கையான எதிர்காலம் என்றும், குழந்தை நலமே குடும்பநலமென்றும்-ஆக இப்படிப்பட்ட முழக்கங்களும் செயல் வடிவம் பெற்று வருகின்ற நேரமிது.

குழந்தை நலத்தைப் பேணிப் பாதுகாப்பதில் நாமனைவரும் முதலாவதாக உணர வேண்டிய உண்மை, நமது மக்கட் தொகையில் ஏறத்தாழ 40 சதவீதத்தினர் குழந்தைகள் என்பதையும் மற்றும் 3 சதவீதத்தினர் கர்ப்பிணித் தாய்மார்கள் என்பதையுமே! இந்த உண்மையை நாம் ஏற்றுக்கொள்கின்ற நேரத்திலே நமது முக்கியக் கடமையாக அமைவது சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவினர் என அழைக்கப்படும் (Vulnerable Section) கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் மற்றும் பள்ளி முந்நிலைப் பருவக் குழந்தைகள்-ஆகிய இவர்களுக்குத் தேவையான திட்டங்களே! சமுதாய நல்வாழ்வுத் திட்டங்கள் எதை எடுத்துக் கொண்டாலும் அதிலே முதல்நிலையில் கவனிக்கப்பட வேண்டியவர் இந்த மூவரே என்ற உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது.

**சத்துணவு**

குழந்தை நலம் என்பதில் முக்கியமாக மூன்று அம்சங்களைப் பெற்றோர்கள் கவனிக்க வேண்டும் :—

1. குழந்தைகளுக்குத் தேவையான சத்துணவு.

2. குழந்தைகளைப் பாதுகாக்கும் தடுப்பு முறைகள் .

3. சிறு நோய்களுக்கு ஆரம்ப கால உடனடி சிகிச்சை.

இந்த மூன்று அம்சங்களிலும் முதல் முக்கியத்துவம் பெறுவது சத்துணவுத் தேவையே. சத்துணவு, சத்துணவு என்றுசொல்லுகின்ற நேரத்திலே ஏதோ விலையுயர்ந்த, கடைகளில் விற்கப்படும் குழந்தை உணவுப் பண்டங்களில்தான் சத்து அதிகம் என்ற தவறான கருத்தைப் பொது மக்கள் கைவிட வேண்டும். உடைத்த கடலை, கேழ்வரகு, பருப்பு வகைகள், சாதம், பசும் பால், எருமைப்பால், பச்சைக் காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை வகையறிந்து வயதுக்கேற்ப கொடுத்து வருவோமேயானால் அதுவே வளரும் குழந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சத்துணவு ஆகும்.

ஒரு குழந்தையின் சத்துணவுத் தேவை என்பது தாய் கருத்தரிக்கும் காலத்திலேயே தொடங்கி விடுகிறது. எப்படிப் பிறந்த குழந்தைக்கு பிராண வாயு முக்கியத்தேவையோ அப்படி வளரும் குழந்தைக்குப் புரதச்சத்து மிகவும் தேவையானதாகும். குறிப்பாக, கர்ப்பிணித்தாய் தனது கடைசி 3 மாதக் காலத்தில் பருப்பு வகைகள், பச்சைக் காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை அதிக அளவில் தங்கள் அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிக உணவு சாப்பிட்டால் குழந்தை பெரியதாகிப் பேறுகாலம் கடினமாக இருக்கும் என்ற பல தாய்மார்களின் நம்பிக்கைக்கு எந்தவித ஆதாரமும் இல்லை. ஆனால், அதே நேரத்தில், நல்ல உணவில்லாத காரணத்தால் இரத்தச் சோகைக்கு ஆளான தாய்மார்கள் குறை மாதக் குழந்தைகளையும், எடை குறைந்த குழந்தைகளையும் ஈன்று வருவதைத்தான் நாங்கள் அன்றாடம் கண்டு வருகிறோம்.

**தாய்ப்பால்**

ஒரு குழந்தையின் சத்துணவுத் தேவையின் அடுத்த முக்கிய நிலை, குழந்தைக்குப் பாலூட்டப்படும் நேரம்தான். கொடுக்கக் கொடுக்கத்தான் பால் சுரக்கும் என்ற உண்மையைத் தாய்மார் மறந்துவிடக்கூடாது. பால் பற்றவில்லை என்று சொல்லும் தாய்மார்கள் கூட மீண்டும், மீண்டும்-தங்களது குழந்தைகளுக்குப் பாலூட்ட முயற்சித்தால் நிச்சயம் நல்ல பயன் பெறுவர் என்பது அனுபவ பூர்வமான உண்மையாகும். எனவே, இயன்ற வரை உங்கள் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்திடுங்கள். இயலாத அளவில்தான் பசும் பாலோ புட்டிப் பாலோ கொடுக்க வேண்டும். தாய்ப்பால் மட்டும் கொடுக்கப்படும் குழந்தைக்கு 4 அல்லது 5 மாதத்திலிருந்தே திட உணவு, கொடுத்துவிடப் பழக்குங்கள்.

மசித்த கீரை, சாதம், பருப்பு, முட்டையின் வெண்கரு, இட்லி, இடியாப்பம் முதலிய உணவு வகைகளைச் சிறிது சிறிதாக அறிமுகப்படுத்த வேண்டும். பசும்பால் கொடுப்ப தாயின் முதல் ஒரு மாதத்திற்கு மட்டும் சரிபாதி நீர் கலந்து கொடுக்கலாம். இரண்டாம் மாதம் முதலே தனிப் பசும் பாலை அப்படியே காய்ச்சிக் கொடுக்கலாம், எருமைப்பாலில் கொழுப்புச் சத்து அதிகம் இருப்பதால் மூன்று மாதம் வரையில் 2 பங்கு பால் ஒரு பங்கு நீர் என்ற விகிதத்திலும் அதற்குப் பிறகு தனிப்பாலாகவும் கொடுக்கலாம். புட்டிப்பால் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் ஒரு மாதத்திற்கு ஒரு கரண்டி பால் மாவு அந்த ஒரு கரண்டி மாவுக்கு 30 மில்லி தண்ணீர் என்ற விகிதத்திலே 6 அல்லது 8 கரண்டி அதற்கு 200 மில்லி தண்ணீர் என்ற விகிதத்திலே 6 மாதம் வரை பால் கொடுத்து பிறகு திட உணவு கொடுத்திடுங்கள். உங்களால் முடிந்தால் 6 மாதம் முதல் ஒரு வயது வரை உயிர்ச் சத்து சொட்டு மருந்துகள் ( Multivitamins drops ) கொடுத்திடுங்கள். கை மருந்துகள், க்ரைப் வாட்டர் எனப்படும் தண்ணீர் மருந்துகள், விளக்கெண்ணெய் ஆகியவற்றைப் பயன்படுத்தாதீர்கள்.

ஒரு குழந்தைக்கு மலச்சிக்கல் என்பது போதுமான பால் கொடுக்காததால் வருவதே. அதற்காக மலம் இலக்கி வில்லைகளைப் பயன்படுத்தவோ, ஆசனவாயில் சோப்பு வைக்கவோ கூடாது. மேலே சொன்னது போல் வகையறிந்து அளவறிந்து பால் கொடுத்தால் அதுவே போதும்.

நீங்கள் உங்கள் குழந்தைக்குச் சரியான முறையில் ஆகாரம் கொடுத்தால் அதன் எடை சீராகக் கூடிவரும்; பால் குடித்தவுடன் அது மகிழ்ந்து விளையாடும் அல்லது நிம்மதியாகத் தூங்கும்; அதன் மலம் கழிக்கும் பழக்கங்கள் சீராக அமையும். உங்கள் குழந்தையின் எடை கூடுதலைக்கொண்டு மட்டுமே அதன் வளர்ச்சியை எடைபோட்டு விடலாம். அது மிகவும் எளிது. அருகாமையிலுள்ள எந்த மருத்துவ மனையிலும் நீங்கள் அதனைக் கண்டறியலாம். அவ்வாறு எடைபோடும்போது அதை உங்களுக்குக் கொடுக்கப்படும் நல்வழிப் பாதை அட்டையிலே' ( Road to Health Chart) குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அப்படி வசதி இல்லாத இடங்களில் எடையை ஒரு தனித்தாளில் முறையாகத் தேதியிட்டுக்குறித்து வைத்து உங்கள் மழலையின் வளர்ச்சியைக் கணித்திடுங்கள்.

ஊட்டச் சத்துணவில் மூன்றாவது முக்கியநிலை பள்ளி முந்நிலைப் பருவக் குழந்தைகளின் உணவுத் தேவையே. அவர்களுக்கு இரும்புச்சத்து, சுண்ணாம்புச் சத்து, உயிர்ச் சத்து 'ஏ' மற்றும் 'பி' காம்ப்ளக்ஸ் கிடைக்கும் வகையில் சாதம், பருப்பு பச்சைக் காய்கறிகள் ஆகியவை அடங்கிய உணவுப் பொருள்களைக்கொடுக்க வேண்டும். வளர்ந்து வரும் இன்றைய நாகரிக உலகில் பள்ளி குழந்தைகளும் சரியான உணவின்றித் தவிக்கும் நிலை மாற வேண்டும். அன்றாடம் நாம் பயன்படுத்தும் உணவுப் பொருள்களை உரிய நேரத்தில் உரிய அளவில் கொடுத்து வந்தால் அதுவே போதுமானதாகும்.

அடுத்து கர்ப்பிணித்தாய்க்கும் பாலூட்டும் தாய்க்கும் நாம் முன்னே கூறியது போல பருப்பு வகைகள், பச்சைக் காய்கறிகள், சாதம், பால், தயிர் முதலியன உரிய அளவில் கொடுக்கப்பட வேண்டும். முக்கியமாக இவர்களுக்கு வரும் இரத்தச் சோகை இலவசமாக வழங்கப் பெறும் ஃபோலிபர் ( Folifer ) எனப்படும் இரும்புச்சத்து மாத்திரைகளை அவர்கள் உட்கொள்ள ஊக்குவித்தல் நமது கடமையாகும்.

**நோய்த் தடுப்பு :**

குழந்தை நலத்தின் மிக முக்கிய அடுத்த நிலை நோய்த்தடுப்பு முறைகள். உங்கள் அனைவருக்கும் தெரியும் பெரிய அம்மை தடுப்பு ஊசி, காசநோய்த்தடுப்பு ஊசி (பி. சி. ஜி.), தொண்டை அடைப்பான், வில்வாத ஜன்னி, மற்றும் கக்குவான் இருமல் வராமல் பாதுகாக்கும் முத்தடுப்பு ஊசி, இளம் பிள்ளை வாதத்தைத் தடுக்கும் இளம்பிள்ளை வாதத் தடுப்பு சொட்டு மருந்து மற்றும் காலரா, டைபாய்டு தடுப்பு ஊசிகளை உரிய நேரத்தில் நாம் குழந்தைகளுக்குப் போட வேண்டும் என்பது.

தற்போது நமது தமிழகத்திலே தட்டம்மை தடுப்பு ஊசித் திட்டமும் அமலுக்கு வந்துள்ளது. 3-வது மாதத்தில் பெரிய அம்மை பிசிஜி ஊசியும், 4, 5, 6 மாதங்களில் முத்தடுப்பு ஊசி மற்றும் இளம்பிள்ளை வாதச் சொட்டு மருந்தும், தேவையான நேரங்களில் டைபாய்டு, காலரா மற்றும் தட்டம்மை ஊசியும் போட வேண்டும். 3 ஆண்டுகட்கு ஒரு முறை பெரியம்மை மற்றும் பிசிஜி ஊசிகளை ஊக்குவிப்பு ஊசிகளாக (Booster doses) போட வேண்டும். முதல் மூன்று ஊசிகள் முடிந்ததும் 4-வது 5-வது முறையாக முறையே $1\frac{1}{2}$ வயதிலும் $4\frac{1}{2}$ வயதிலும் முத்தடுப்பு ஊசி மற்றும் இளம்பிள்ளை வாதச் சொட்டு மருந்து கொடுக்க வேண்டும்.

அரைகுறையாக விட்டு விட்டாலோ, ஊக்குவிப்புஊசிகள் போடாவிட்டாலோ போதுமான பாதுகாப்பு குழந்தைக்குக் கிடைக்கிறது. அதிக ஜுரம், வயிற்றுப் போக்கு இவை இரண்டு இருக்கும் நேரம் தவிர்த்து எல்லா நேரத்திலும் தடுப்பு ஊசிசொட்டு மருந்து கொடுக்கலாம். இளம்பிள்ளை வாதச் சொட்டு மருந்து கொடுப்பதற்கு குறைந்தது 2 மணி நேரம் முன்னரும் பின்னரும் தாய்ப்பால் மட்டும் கொடுக்காமல் இருப்பது நல்லது. அதற்காக குழந்தையைப் பட்டினி போடாதீர்கள். இதர பால் வகைகளைக் கொடுக்கலாம். அம்மை குத்திய இடத்திலே சுண்ணாம்பு, சாணம், செங்கல், சாம்பல் முதலியவற்றை வைக்காது சும்மா விட்டு வைத்தாலே போதும், எந்தத் தடுப்பு ஊசி போட்டாலும் ஏதாவது பின் விளைவுகள் இருந்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற்று அதன்படி நடந்திடுங்கள்.

அடுத்து குழந்தை நலத்தின் முக்கிய அம்சம் சிறு நோய்களுக்கு ஆரம்ப காலச் சிகிச்சை. எங்கள் குழந்தைகள் நல மருத்துவ மனையின் கணக்கெடுப்பு மூலமாகவும் உலகநலக் கழகத்தின் கணக்கெடுப்பு மூலமாகவும் பார்த்தால் குழந்தைகளுக்கு நமது தமிழகத்திலே வரும் முக்கிய நோய்கள்கீழ்க்கண்டவையே எனத் தெரிய வருகிறது :—

நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் —சளி, இருமல், மூச்சுத் திணறுதல், நுரையீரல் அழற்சி, அண்ணா மாந்தம் எனப்படும் கணைநோய், காசநோய் (Primary Complex) ஆகியவை.

வாந்திபேதி—வயிற்றுப்போக்கு வயிற்றுப் போக்கால் நீர் வற்றிய நிலை, வயிற்றில் பூச்சிகள், தாய்ப் பால், மற்றும் பசும்பாலிலுள்ள இயற்கையான சர்க்கரை ஒத்துக் கொள்ளாத நிலை ( Lactose intolerence) ஆகியவை.

**ஊட்டச் சத்துணவுக் குறை நிலை:**— நோஞ்சான் குழந்தை ( Marasmus ) சவலைக் குழந்தை ( Kwashiorker ) உயிர்ச் சத்துக் குறை நிலை (Vitamin Deficiency) குறிப்பாக உயிர்ச்சத்து 'ஏ' மற்றும் உயிர் சத்து 'பி' குறைநிலை, இரத்தச் சோகை (Anemia) பற்சொத்தை ( Dentalcaries ) ஆகியவை.

**இதர நோய்கள் ;**— சொறி, சிரங்கு ( Scabies ) கல்லீரல் நோய், மஞ்சள் காமாலை, சிறுநீரக நோய், இருதய நோய், நரம்பு மற்றும் மூளை சம்பந்தப் பட்ட நோய்கள், மனவளர்ச்சி குன்றிய நிலை ஆகியவை.

**அறுவைச் சிகிச்சை தொடர்புடைய நோய்கள்:**— ( Surgical Diseases ) குடல் அடைப்பு, தீக்காயங்கள், பிறவி ஊனங்கள், எலும்பு சம்பந்தப்பட்டநோய்கள், கட்டிகள் மற்றும் ரணங்கள் ஆகியவை.





டாக்டர்
கொ. அ. கிருட்டிணமூர்த்தி
இயக்குநரும் கண்காணிப்பாளரும்
குழந்தைகள் நல மருத்துவமனை
சென்னை.

டாக்டர் அ. பார்த்தசாரதி
குழந்தை இயல் துணைப் பேராசிரியர்
குழந்தைகள் நல மருத்துவ மனை
சென்னை.

அண்மையில் பிறந்த குழந்தைகளுக்கு வரும் பிரத்யேக நோய். (Infections of the new born).

ஆக, மேற்கூறிய நோய்களைப் பார்க்கின்ற நிலையிலே பெரும்பாலான நுரையீரல் சம்பந்தப்பட்ட வயிற்றுப் போக்கு சம்பந்தப்பட்ட நோய்கள், சொறி சிரங்கு, ஊட்டச்சத்துணவு குறை நிலை முதலியன ஆரம்ப காலத்திலேயே கவனிக்கப்பட்டால் அவற்றின் பின் விளைவுகளை நன்கு தடுத்து விடலாம். பிறவி ஊனங்கள் கூட ஆரம்ப நிலையில் மருத்துவ ஆலோசனை பெறப்பட்டால் உரிய காலத்தில் சீர் பெறச் செய்யலாம் என்பதையும் பொதுமக்கள் உணர்ந்து ஒத்துழைப்பு தரவேண்டும்.

**முக்கிய நோய்கள் :**

நாங்கள் மேற்கூறிய எல்லாத் துறைகளிலும் சேவையும் ஆலோசனையும் கிடைக்குமாறு நமது அரசு நகரமாயினும், கிராமப்புறமாயினும் நல்ல ஏற்பாடுகள் செய்துள்ளது. அவற்றைப் பெற்றோர்கள் நல்ல முறையில் பயன்படுத்திப் பலன் பெற வேண்டும் என்பதே எங்களது அவா. 'உலகக் குழந்தைகள் நல நிறுவனம்' தந்துள்ள கீழ்க்காணும் பன்னிரண்டு குறிப்புகள் குழந்தை நலம் பேணும் ஒவ்வொருவரும் நன்கு அறிதல் வேண்டும்.

உங்களால் எவ்வளவு மாதங்கள் முடியுமோ அவ்வளவு மாதங்கள் உங்கள் குழந்தைக்குத்தாய்ப்பால் கொடுத்திடுங்கள்.

உங்கள் குழந்தைக்கு 4 மாதம் நிறையும்போதே, அவனுக்குத் திட உணவு கொடுத்து பழக்குங்கள்.

உங்கள் மழலைக்குத் தினசரி 5 அல்லது 6 முறை உணவு கொடுத்திடுங்கள்.

உங்கள் குழந்தை உடல் நலம் குன்றிய நிலையிலும் அவனுக்குப் போதுமான உணவு கொடுத்திடுங்கள்.

உங்கள் குழந்தை நோயுற்றபோது குறிப்பாக வாந்தி பேதியால் பாதிக்கப்பட்டபோது — அவனுக்கு நிறைய காய்ச்சி வடிகட்டிய நீர் கொடுத்திடுங்கள்.

உங்கள் குழந்தையின் உடல் நலம் குன்றினால் உடனடியாக தாமதிக்காமல் அருகிலுள்ள மருத்துவமனையில் ஆலோசனை பெற்றிடுங்கள்.

உங்கள் குழந்தை தனது முதல் அடியை எடுத்து வைக்குமுன், முதற்படியாக அவனுக்குத் தடுப்பு ஊசி, சொட்டு மருந்து கொடுத்திடுங்கள்.

உணவுப் பண்டங்களை ஈக்கள் மொய்க்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்களது கைகளையும் உங்களது குழந்தையின் கைகளையும் அவனுக்கு உணவு கொடுக்குமுன் நன்றாக சுத்தம் செய்து கழுவிடுங்கள்.

உங்கள் குழந்தைக்குக் காய்ச்சி வடிகட்டிய நீரையே எப்போதும் கொடுத்திடுங்கள்.

இரண்டு அல்லது மூன்று குழந்தைக்கு மேல் எப்போதும் வேண்டாம் என ஒரு உறுதியான சபதம் எடுத்திடுங்கள்.

ஒரு குழந்தைக்கும் அடுத்த குழந்தைக்கும் இடையே குறைந்தது 2 அல்லது 3 ஆண்டுகள் இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

எனவே, குழந்தை நலம் பேணும் ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் கடமையை உரிய முறையில் ஆற்றுகிறார்களா எனக் கண்டறிய கீழ்க்காணும் 3 கேள்விகளைக் கேட்டுப் பாருங்கள் :—

(1) உங்கள் குழந்தைக்குப் போதுமான ஊட்டச் சத்துணவு கொடுக்கிறீர்களா?

(2) உங்கள் குழந்தைக்குத் தடுப்பு ஊசி மற்றும் தடுப்புச் சொட்டு மருந்து கொடுத்து விட்டீர்களா?

(3) குடும்பக் கட்டுப்பாடு முறைகளை மேற்கொள்ளும் நிலைக்கு நீங்கள் வந்துவிட்டீர்களா?

இந்த மூன்று கேள்விகளுக்கும் ''ஆம் ஆம் ஆம்'' என்று பதிலளிக்கும் பெற்றோரே குழந்தை நலம் பேணுவோர். குடும்ப நலம் பேணுவோர்! அது வேறு யாருமல்ல! நாம் தான்! எனவே, குழந்தை நலம் பேணி குடும்ப நலம் பேணுவது நமது கடமை தான். அந்தக் கடமை நமது தான்! அது மிகவும் பெரிதுதான். இந்த உண்மையை உணர்வோம். உணர்ந்து செயல்படுவோம். குழந்தை நலமே குடும்ப நலம்! வீட்டு நலமே நாட்டு நலம்! நலமான குழந்தையே நாட்டின் சொத்து! வளமான அதன் வாழ்வே வண்ணமலர்க்கொத்து!

வாழிய குழந்தை நலம்! வளர்க குழந்தைநலப் பணிகள்!

## சென்னை கண் மருத்துவமனையின் உலகப் புகழ்வாய்ந்த மருத்துவர்கள்!

சென்னை கண் மருத்துவமனையில் பணியாற்றியுள்ள மருத்துவர்கள் பலர் உலகப் புகழ் வாய்ந்தவர்கள் ஆவார்கள். அவர்களின் அருந்தொண்டால் கண் மருத்துவமனை பெருஞ் சிறப்புக்கு உரியதாக விளங்கியுள்ளது.


அவர்களில் முக்கியமானவராகத் திகழ்கிறார் எலியட். இங்கு பணியாற்றிய (1904-1913) அவர் கண் அழுத்த நோய் (Glaucoma) அறுவை சிகிச்சை முறையில் 'ஸ்கிலிரோ கார்னியல் ட்ரிபைன்' என்ற புதிய சாதனத்தைக் கண்டுபிடித்து உலகப் புகழ் பெற்றார்.

ரைட் என்ற கண் மருத்துவர் இந்த மருத்துவமனையில் உள்ள எலியட் ஸ்கூல் என்னும் பகுதியில் கண் மருத்துவத்துறை சம்பந்தமான மியூசியம் ஒன்றை உருவாக்கினார்.

திவான் பகதூர் டாக்டர் கோமன் நாயர் (1940-1945) கண் அறுவைச் சிகிச்சையில் பல சிக்கலான சிகிச்சைகளைக் கூடத் துணிவாக மேற்கொண்டு வெற்றி கண்டார். இன்று கண் மருத்துவமனை பெருஞ்சாதனை சாதிப்பவருக்கு அடிகோலியவர் என்று பாராட்டப்படும் டாக்டர் முத்தையா (1947-1956) கண் நோய் நிபுணராகவும், நோய் இயல் வல்லுநராகவும் இருந்தார்.

கருவிழி மாற்று அறுவை (Corneal Transplantation) முறையையும் கண் சேமிப்பு (Eye Bank) முறையையும் 1948-ல் முத்தையா அவர்கள் தொடங்கியது, சென்னை கண் மருத்துவமனையின் சிறப்புக்குப் பெருங்காரணமாகும்.





# தமிழ்நாட்டில் இந்திய மருத்துவம்

டாக்டர் அ. நீலாவதி.
இந்திய மருத்துவ இயக்குநர்.

இந்திய மருத்துவ முறைகளை குறிப்பாக தமிழகத்தில் தோன்றிய சித்தமுறை மருத்துவத்தையும் மற்றும்ஆயுர் வேதம், யுனானி ஆகிய மற்ற இந்திய மருத்துவ முறைகளுடன் இயற்கை வைத்திய முறை யோகாசனமுறை போன்றவற்றினை ஊக்குவித்து வளர்ச்சியடையச் செய்ய அரசு ஆர்வம் கொண்டுள்ளது.

இந்திய முறை மருத்துவத்தில் பொதுமக்களுக்கு அதிக மருத்துவ வசதிகள் அளித்திடவும், ஏற்கெனவே அமைந்துள்ள மருத்துவ வசதிகளை நன்கு பயன்படுத்திக் கொள்வதற்கும் வழிவகைகளை ஆய்ந்து அரசுக்கு ஆலோசனை வழங்கும் நோக்கத்துடன் அரசு, 'இந்திய மருத்துவ முறை மேம்பாட்டுக் குழு' ஒன்றினை அமைத்துள்ளது.

இந்திய மருத்துவத் துறை தனி இயக்ககமாக 1970-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்தியமுறை மருத்துவத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் இவ்வியக்ககத்தினால் செயற்படுத்தப்படுகின்றன.

**மருத்துவ வசதி:**

100 படுக்கை வசதிகளுடன் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனை 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் நாள்முதல் செயல்படத் துவங்கியது. சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி ஆகிய மூன்று மருத்துவமுறைகளிலும் ஒரே இடத்தில் நோயாளிகளுககுச் சிகிச்சை அளிப்பது இம்மருத்துவ மனையின் சிறப்பு அம்சமாகும். 1976-77-ஆம் ஆண்டிலிருந்து இம் மருத்துவமனையின் படுக்கை வசதிகள் 150 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாளையங்கோட்டை அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள 200 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையில் சித்த முறையின்கீழ் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**சித்த மருத்துவப் பிரிவுகள்:**

தற்போது 73 சித்த மருத்துவப் பிரிவுகள், 14 மாவட்டத்தலைமை மருத்துவமனைகளிலும், 59 வட்ட மற்றும் வட்டம் அல்லாத மருத்துவ மனைகளிலும் செயல்பட்டு வருகின்றன.

1979-80-ஆம் ஆண்டில் மேலும் 15 சித்த மருத்துவப் பிரிவுகளைத் தொடங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

அரசினர் இந்தியமுறை மருந்தகங்கள் கீழ்க்கண்ட அளவில் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன :

மருந்தகங்கள்

சென்னை நகரம்
—4 சித்த மருந்தகங்கள்

மாவட்டங்கள்
—4 சித்த மருந்தகங்கள்

4 ஆயுர்வேத மருந்தகங்கள்

1979-80-ஆம் ஆண்டில் கிராமப் பகுதிகளில் 20 இந்திய முறை மருந்தகங்களைத் துவக்க அரசு உத்தேசித்துள்ளது.

**கிராமப்புற மருந்தகங்கள்:**

மேற்படி, அரசு மருந்தகங்களைத் தவிர, நகராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களாலும் இந்த முறை மருந்தகங்கள் கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் நடத்தப்படுகின்றன.

1978-79-ல் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இடைக்காலில் இருக்கின்ற ஒரு ஆயுர்வேத மருந்தகம், ஒரு சித்த மருந்தக

மாக மாற்றம் செய்யப் பெற்றுள்ளது.

இம்மாநிலத்தில் அமைந்துள்ள முறைப்படுத்தப்பட்ட மற்றும் கிராமப்புற மருந்தகங்களின் (சித்தா, ஆயுர்வேதம், யுனானி)

| | மொத்த எண்ணிக்கை |
|---|---|
| ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கிராமப்புற மருந்தகங்கள் ... | 371 |
| ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள முறைப்படுத்தப்பட்ட மருந்தகங்கள். | 51 |
| நகராட்சி மருந்தகங்கள் ... | 51 |

**மாநகராட்சி மருந்தகங்கள்:**

| | |
|---|---|
| சென்னை மாநகரம் ... | 6 |
| மதுரை மாநகரம் ... | 6 |

**இந்தியமுறை மருத்துவ மருந்து செய் நிலையங்கள் :**

ஆயுர்வேதம், சித்தா மற்றும் யுனானி முறைச் சிகிச்சைக்கான மருந்துகள் தயாரிக்கும் ஓர் மருந்து செய் நிலையம் அறிஞர் அண்ணா அரசினர் மருந்துகள் தயாரிக்கும் ஓர் மருந்து செய் நிலையம் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையுடன் இணைந்துள்ளது. இம்மருந்து செய் நிலையத்தில் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனைக்கும், சென்னையிலுள்ள இதர நான்கு சித்த மருந்தகங்களுக்கும் தேவையான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. ஆண்டொன்றுக்கு இங்குத் தயாரிக்கப்படும் மருந்துகளின் மதிப்பு ரூ. 6 இலட்சம் ஆகும்.

அதிக மருந்துத் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, மத்திய அரசின் நிதி உதவியுடன் இம்மருந்து செய் நிலையத்தினைத் தேவையான நவீன இயந்திரங்கள் நிறுவி, மருந்துகள் செய்வதைத் துரிதப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி மருந்துசெய் நிலையத்தை, விரிவுபடுத்தும் நோக்கத்துடன் ரூ. 15 இலட்சம் செலவில் கூடுதல் கட்டட வசதிகளுக்காகவும், கொதிகலன்கள் மற்றும் நவீன காற்றடுப்பு வசதிகள் முதலியன அமைத்திடவும் அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்காக, 1979-80-ஆம் ஆண்டில் ரூ. 7.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் ஓர் மருந்துசெய் நிலையம் அமைந்துள்ளது. இந்நிலையத்தில் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கான மருந்துகள் சித்தமுறையில் தயாரிக்கப்படுகின்றன. மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் மருந்து செய்முறைப் பயிற்சிக் கூடமாகவும் இம்மருந்து செய் நிலையம் அமைந்து உள்ளது.

**மூலிகைப் பண்ணைகள் :**

சென்னை மாநகரில் அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனையில் 9.6 ஏக்கர் நிலப்பரப்பில் மூலிகைப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. மருத்துவமனையுடன் இணைக்கப்பட்ட மருந்து செய் நிலையத்தில் தயாரிக்கப்படும் மருந்துகளுக்குரிய மூலிகைகளையும், செடி கொடித் தாவரங்களும் இங்கு வளர்க்கப்படுகின்றன.

இந்த மூலிகைப் பண்ணை பட்டயப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு மூலிகைத் தாவரங்கள் பற்றி அறிந்து கொள்ளவும் பயன்படுகிறது.

**கன்னியாகுமரி மாவட்டம் வீரப் புலிக்காட்டில் மூலிகைப் பண்ணை:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் மகேந்திரகிரி மலையில் அதிக உயரத்தில் அமைந்துள்ள ஒதுக்கப்பட்ட வீரப்புலிக் காட்டில் ஐந்து எக்டேர் பரப்பளவில் மூலிகைப் பண்ணை ஒன்று நிறுவிட ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு ஆணை வழங்கியது.

அரசு இம்மூலிகைப் பண்ணைக்கென, ரூ. 1 இலட்சம் செலவில் தொழிலாளர் குடியிருப்பு ஒன்று கட்டவும், 1977-78-ஆம் ஆண்டில் அனுமதி வழங்கியுள்ளது.

கீழ்க்கண்ட இடங்களில் மேலும் சில மூலிகைப் பண்ணைகளை அமைத்திட அரசு திட்டமிட்டுள்ளது :



| | மாவட்டம் |
|---|---|
| கொல்லி மலை | சேலம் |
| காமராஜ் பல்கலைக் கழகப் பகுதி | மதுரை |
| முக்கோம்புக் கிராமம், ஸ்ரீரங்கம் | திருச்சி |
| சிறுமலைக் குன்றுகள் | மதுரை |
| வைகை அணை | மதுரை |

**அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்கு மாறு.**

முன் உண்ட உணவு செரித்துவிட்டால், பின் வேண்டிய அளவு அறிந்து உண்ணவேண்டும்; அதுவே உடம்பு பெற்றவன் அதை நெடுங்காலம் செலுத்தும் வழியாகும்.

**அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல**
**துய்க்க துவரப் பசித்து.**

முன் உண்ட உணவு செரித்த தன்மையை அறிந்து மாறுபாடில்லாத உணவுகளைக் கடைப்பிடித்து, அவற்றையும் நன்றாகப் பசித்த பிறகு உண்ண வேண்டும்.

**—திருக்குறள்.**

**மருத்துவக் கல்வி:**

1964-ல் இந்திய முறை அரசு மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டையில் துவக்கப்பட்டது. இக்கல்லூரி மதுரைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது. இங்கு பி. யு. எஸ். எம். & எஸ். பட்டப்படிப்பிற்கான கல்வி வழங்கப்படுகிறது. இம்மருத்துவக் கல்விக்கான கால அளவு ஆறு மாதக்கால மருத்துவப் பயிற்சி உள்ளிட்ட $5\frac{1}{2}$ ஆண்டுகளாகும்.

மேற்படி இந்திய மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர் மற்றும் பயிற்சி மருத்துவர்களுக்கு ரூ. 28.30 இலட்சம் செலவில் தனித்தனியே விடுதிகள் கட்ட அரசு திட்டமிட்டு, 1979-80-ஆம் ஆண்டில் மேற்படி கட்டடங்களைக் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**முதுநிலைப் பட்டப்படிப்பு :**

1972 டிசம்பரிலிருந்து மத்திய அரசு உதவியின்கீழ் பாளையங்கோட்டை அரசு இந்தியமுறை மருத்துவக் கல்லூரியில் சித்த முறை மருத்துவம் மற்றும் குணபாடம் ஆகிய துறைகளில் முதுநிலைப் பட்டப் படிப்பிற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பட்டப் படிப்பிற்கு ஆண்டுதோறும் 20 மாணவர்கள் முறையே மருத்துவம் -10; குணபாடம்-10 சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 200 உபகாரச் சம்பளம் வழங்கப்படுகிறது.

**மருந்தாளுநர் பட்டயப் படிப்பு :**

1974-75-ஆம் ஆண்டிலிருந்து சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனையில் ஆயுர்வேதம், சித்தா மற்றும் யுனானி ஆகிய முறைகளின்கீழ் இரண்டாண்டு மருந்தாளுநர் பயிற்சிக் கல்வி நடைபெற்று வருகிறது. பாளையங்கோட்டை அரசு இந்தியமுறை மருத்துவக் கல்லூரியில் சித்தாமுறை மருந்தாளுநர் பயிற்சிக் கல்வி மட்டுமே கற்றுக் கொடுக்கப்படுகிறது.

**யுனானி மருத்துவக் கல்லூரி :**

தற்போது தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் துறையினரால் நடத்தப் பெற்று வரும் இந்திய மருத்துவக் கல்லூரிகளில் சித்த மருத்துவமுறை பயிற்சியும் (அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி) ஆயுர்வேதத் துறை பயிற்சியும் (தனியார்) அளிக்கப்படுகின்றன. யுனானி மருத்துவ முறைக்காக இங்கு கல்லூரி ஏதும் அமைந்திருக்கவில்லை.

சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி ஆகிய மூன்று இந்திய முறை வைத்தியத்தையும் சமச்சீராக வளர்ச்சியடையச் செய்ய உறுதி கொண்டுள்ள தமிழக அரசு, அறிஞர் அண்ணா மருத்துவமனையில் இந்தியமுறை மருத்துவக் கல்லூரி (யுனானி முறை) ஒன்று நிறுவுவதற்கு எண்ணியுள்ளது.

இதற்காக, தென் இந்திய கீழ்த்திசை மருத்துவக் கழகம், யுனானி முறை மருத்துவக் கல்லூரி நிறுவுவதற்கான கட்டடம் கட்டுவதற்கான செலவுகளுக்கென ரூ. 3 இலட்சம் நிதி இனாமாக வழங்க முன்வந்துள்ளது.

சென்னை அறிஞர் அண்ணா இந்தியமுறை மருத்துவமனையிலுள்ள மருத்துவ வசதிகள், மேற்படி கல்லூரியினைத் துவக்க பயன்படுத்திக் கொள்ளப்படும். துவக்கப்படவுள்ள இக்கல்லூரியில் பி. யு. எம். & எஸ். என்ற பட்டப் படிப்பிற்கான கல்விப் பயிற்சி அளிக்கப்படும்.

**அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் ஆய்வக வசதிகளை அமைத்தல்:**

தற்போது சென்னை அண்ணா இந்திய மருத்துவமனையில் நோய்களைக் கண்டறிவதற்குத் தேவையான தகுந்த ஆய்வக வசதிகள் அமைந்திருக்கவில்லை. இந்திய மருத்துவத்தில் அமைந்துள்ள பல்வேறு நோய்களைத் தீர்க்கும் சிறப்பான மருந்துகளை நவீன உத்திகளைக் கொண்டு ஆய்ந்தறிய ஒரு முழு அளவிலான நோய்க் குறியியல் மற்றும் உயிர் இரசாயனயியல் ஆய்வகங்களையும், ஊடுகதிர் பிரிவு ஒன்றும் மேற்படி மருத்துவமனையில் ரூ. 3.60 இலட்சம் செலவில் அமைத்திட அரசு ஆணை வழங்கியுள்ளது.

**சித்தர் அறிவியல் வளர்ச்சிக் குழு**

சித்தர் அறிவியல் வளர்ச்சிக் குழு, 1973-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியில் பி. ஐ. எம். பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கும், மேல்நிலைப் பட்டப் படிப்பு பட்டம் (எம். டி. சித்தா) பெறும் மாணவர்களுக்குச் சித்த முறைப் பாடப் புத்தகங்களைத் தயாரித்து வெளியிடுதல், சித்த மருத்துவ ஓலைச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், அரிய அச்சிட்ட புத்தகங்கள் முதலியவற்றைத் திரட்டி உபயோகமானவற்றை அச்சிட்டு வெளியிடுவது இக்குழுவின் பொறுப்பாகும்.

திருப்பதியிலுள்ள அகில இந்திய யோகாமுறை ஆராய்ச்சி மற்றும் தொடர்பான சேவை நிலையத்திற்கு ரூ. 3 இலட்சம் நன்கொடையாக வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழகத்திலிருந்து யோகாமுறையில் இந்நிலையத்தில் பட்டயப் படிப்பிற்காக (ஒரு ஆண்டு) உரிமப் படிப்பு (Diploma Course and Certificate Course ) க்காகவும் மாணவர்களை அனுப்பிடவும் தீர்மானித்துள்ளது.

யோகாசன முறைகளில், ஆஸ்த்துமா, மஞ்சள் காமாலை முதலிய வியாதிகளுக்குக் குணமளிக்கும் வகையில் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொண்டிருக்கும் திருப்பதியிலுள்ள யோகாசனம் மற்றும் அதன் தொடர்பான விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்திற்கு அரசு நிதி உதவி செய்து வருகிறது.




# அனைத்து நாட்டு குழந்தைகள் ஆண்டில் குழந்தை நலத்திட்டங்கள்

ஒரு நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகள் அந்த நாட்டின் குழந்தைகளே ஆவர். ஆகையால் நாட்டின் வளத்தையும், வாழ்வையும் பெருக்க, குழந்தைகளின் வாழ்வையும், அவர்களின் உடல்-உள்ள வளத்தையும் நலத்தையும் பேணுதல் அவசியம். குழந்தையின் வாழ்க்கை, அது பிறப்பதற்கு 10 மாதங்களுக்கு முன்னரே, தாயின் வயிற்றிலேயே ஆரம்பிப்பதால் குழந்தைப் பாதுகாப்பு, தாயின் பாதுகாப்போடு இணைந்து கவனிக்கப்பட வேண்டும்.

மேலும், குழந்தைகள் குடும்பங்களில் ஏற்றி வைக்கப்படும் ஒளி விளக்கென கருதப்படுகின்றன. இல்லற வாழ்வு, மேற்கொள்ளும் ஒவ்வொரு கணவன் மனைவியரும் பிள்ளைப் பேற்றினைப் பெறற்கரிய பேறுகளின் ஒன்றாகக் கருதுவர். ஆகையால், கருவுற்றிருக்கும் ஒவ்வொரு தாயையும், பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் பராமரிக்கும் இன்றியமையாத நிலையில் நாம் இருக்கிறோம்

இதற்கென நகராட்சிகள் நகர்ப்புறங்களில் தாய் சேய் நல நிலையங்களையும், விடுதிகளையும் நிறுவி இருக்கின்றன. பயிற்சி பெற்ற மருத்துவப் பெண்களும் (ANM) பயின்ற சுகாதாரப் பார்வையாளர்களும் அங்குப் பணியாற்றுவதுடன், 44 நகராட்சிகளில் பெண் மருத்துவர்களும், தாய் சேய் நலப் பிரிவில் பணியாற்றுகின்றனர். இத்திட்டத்திற்கென நகராட்சிகளுக்கு அரசு மொத்தச் செலவில் நான்கில் ஒரு பங்கினை மானியமாக அளிக்கின்றது.



இதைத் தவிர ஊராட்சி ஒன்றியங்களின் சார்பில் 383 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அரசுச் செலவில் இயங்கி வருகின்றன. இதில் ஒவ்வொன்றிலும் நான்கு படுக்கைகள் பிரசவத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பதுடன், இந்நிலையங்களில் கர்ப்பிணிப் பராமரிப்பு, குழந்தை பராமரிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இவை தவிர 10,000 மக்கள் தொகைக்கு ஒரு கிளை தாய் சேய் நிலையம் என ஊராட்சி ஒன்றியங்களால் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு இன்று தமிழ்நாட்டில் அத்தகைய நிலையங்கள் 2880 செயலாற்றி வருகின்றன. இவை தவிர பின் தங்கிய பகுதிகளில் 95 தாய் சேய் நிலையங்களும், பூவைப் பகுதியில் 7 நிலையங்களும் பணியாற்றுகின்றன. இந்நிலையங்களைப் பராமரிக்கும் செலவில், முதல் மூன்று நிலையங்களுக்கு 3-ல் ஒரு பங்கினை மாநில அரசும், மற்ற நிலையங்களுக்காகும் மொத்தச் செலவினை மைய அரசும் மானியமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளித்து வருகின்றன. இந்நிலையங்களின் பணிகள் அனைத்தும் பொதுச் சுகாதாரத்துறை இயக்குநரின் பார்வையின் கீழ் ஆற்றப் பெற்று வருகின்றன

**தாய் சேய் நல நிலையங்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் குழந்தைகள் நலத்திற்காக நடைபெறும் பணிகள்.**

(1) கர்ப்பிணிப் பராமரிப்பு :

(அ) டாக்டரின் பரிசோதனை

(ஆ) ஊட்டமுள்ள உணவு அளித்தல் (Care Feeding)

(இ) இரத்தம், இரத்த அழுத்தம், சிறுநீர், எடை ஏற்றம் முதலியன பரிசோதித்தல்.

டாக்டர் திருமதி ஆர். விசாலாட்சி
உதவி இயக்குநர்,
மக்கள் நல்வாழ்வுத் துறை.

(ஈ) டெட்டனஸ் டாக்சாண்டு—சன்னி தடுப்பு ஊசி போடுதல் :

(உ) இரத்தசோகை ஏற்படாமல் இருக்க இரும்புச்சத்து மாத்திரைகள்வழங்குதல்.

(2) பிரசவ நேரப் பராமரிப்பு

(3) பிரசவத்தின் பின்னர் பராமரிப்பு

(4) குழந்தைகள் பராமரிப்பு —
சுகாதாரப் பார்வையாளர் வீடுதோறும் சென்று (1-5 வயது வரை உள்ள) குழந்தைகளைப் பார்வையிட்டு அறிவுரைகள் வழங்குகின்றனர். மேலும் :

(அ) மூன்று நோய்த் தடுப்பூசி போடுதல் (தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இழுப்புநோய் ஆகியவை)

(ஆ) மாலைக்கண் நோயினால் குழந்தைகள் பார்வை இழக்காமல் தடுக்க வைட்டமின் 'ஏ' சொட்டு மருந்து வழங்குதல்.

(இ) உடல் வளர்ச்சியும், உள்ள வளர்ச்சியும் சரிவர ஏற்பட சத்துள்ள உணவு வழங்குதல்; அதற்கான கல்வி விளக்கம் செய்தல்.

(ஈ) இரும்புச்சத்து மாத்திரை வழங்குதல்—

முதலான நடவடிக்கைகள் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. வாரமொருமுறை "5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கென கிளினிக்" சோதனை—சிகிச்சை நிலையம் நடத்தப்படுகிறது.

இவை தவிர, குழந்தைகள், காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கும், ஆங்காங்கே உள்ள ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவர்கள், தடுப்பூசிகள் போடுவதுடன் உடல் பரிசோதனையையும் செய்கின்றனர். மேலும், ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் திட்ட நடவடிக்கையாக (1) சிறப்புத் தடுப்பூசி திட்டமும், (2) பள்ளி மாணவர் பரிசோதனைத் திட்டமும் செயலாற்றப்படுகின்றன.

**சிறப்புத் தடுப்பூசி திட்டம் :**

இத்திட்டத்தின் கீழ், இப்பொழுது 110 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ஒரு கூடுதலான சுகாதாரப் பார்வையாளர் நியமிக்கப் பட்டுள்ளார். மேலும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட பொதுச் சுகாதாரச் செவிலியர் இப்பணியினை மேற்பார்வை இட நியமிக்கப்பட்டுள்ளார். இத்திட்டத்தில் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒன்று அல்லது 2 மாத இடைவெளியில் மும்முறை தடுப்பூசி (மூன்று நோய்) போடப்பட்டு, டிப்தீரியா, கக்குவான் இருமல், டெட்டனஸ் எனப்படும் மூன்று நோய்கள் வராமல் குழந்தைகள் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

77-78-ஆம் ஆண்டில் 2,51,445 குழந்தைகளுக்குத் தடுப்பூசி ஆரம்பச் சுகாதார நிலையங்களில் போடப்பட்டிருக்கின்றன. 78-79-ஆம் ஆண்டில் 2,80,915 குழந்தைகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

**பள்ளி மாணவர் பரிசோதனைத் திட்டம் :**

இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 83 ஆரம்பச் சுகாதார நிலையங்களில், ஒவ்வொரு ஆண்டும், 2,000 குழந்தைகளை (6-11 வயது வரை) பரிசோதனை செய்ய வேண்டும். இதற்கென இந்நிலையங்களில் கூடுதலாக ஒரு சுகாதாரப் பார்வையாளர் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளார்.

இதேபோல் 5 நகராட்சிகளிலும் பள்ளி மருத்துவப் பரிசோதனைத் திட்டம் நடைபெற்று வருகிறது. இதற்கென ஒரு தனி மருத்துவ அதிகாரியும், இரண்டு சுகாதாரப் பார்வையாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்படி ஆண்டொன்றுக்கு 10,000 மாணவர்கள் (6-11 வயது வரை) பரிசோதிக்கப்பட வேண்டும். இத்திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. பள்ளிக் குழந்தைகளுக்கு டிப்தீரியா, டெட்டனஸ் தடுப்பூசி போடப்படுவதுடன் நோயுற்ற குழந்தைகளுக்குச் சிகிச்சையும், சத்துணவும் கொடுக்கப்படுகிறது. பெற்றோர் ஆசிரியர்களுக்குத் தேவைப்படும் சுகாதாரக் கல்வி விளக்கங்களும் தரப்படுகின்றன.

77-78-ஆம் ஆண்டில் கிராமப் புறங்களில் 1073 பள்ளிகளும், நகர்ப்புறங்களில் 170 பள்ளிகளும் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு மொத்தம் 1,34,544 மாணவர்கள் பரிசோதிக்கப்பட்டு இருக்கின்றனர். இவர்களில் 63,300 குழந்தைகள் ஏதாவது ஒரு நோயால் பீடிக்கப்பட்டிருந்தனர். இவர்களிடையே வைட்டமின் குறைபாடு மட்டும் 35 சதவீதத்தினரிடம் காணப்பட்டது. 78-79-ஆம் ஆண்டில் 1,37,866 குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டனர்.

இருப்பினும், அளவின்றிப் பெருகி வரும் மக்கள் தொகையாலும் போதிய கல்வி அறிவு இன்மையாலும், ஊட்டச்சத்துணவு போதாமையாலும், ஏழ்மை நிலையாலும், சில வேண்டாத பழக்க வழக்கங்கள் காரணமாகவும், இன்று நம் தமிழக கிராமப்புறத்தில் குழந்தைகள் இறப்பு விகிதம், அதாவது 1000 குழந்தைகள் உயிருடன் பிறந்தால் 120 குழந்தைகள் 1 வயதுக்குள் இறக்கின்றன. (ஆனால் இதே விகிதம் இங்கிலாந்தில் 18 ஆகவும் ஸ்வீடனில் 12 ஆகவும் உள்ளது) இவை தவிர பிறந்த ஒரு மாதத்திற்குள் இறக்கும் பச்சிளங்குழந்தைகளின் எண்ணிக்கை மொத்த குழந்தை இறப்புகளில் 50 சதவிகிதமாகும். ஆகையால், குழந்தை பராமரிப்பு, தாயின் பராமரிப்புடனும், சத்துள்ள உணவு, சுகாதாரச் சூழ்நிலை, நோய்த் தடுப்பு ஆகிய திட்டங்களுடன் இணைந்து கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

இங்ஙனம் குழந்தைகளின் நலனுக்கு அளிக்க வேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்துதான் ஐக்கிய நாடு மகா சபை 1979-ஆம் ஆண்டை "சர்வ தேசக் குழந்தைகள் ஆண்டு" என அறிவித்திருக்கிறது. 1979-ஆம் ஆண்டு குழந்தை உரிமைகள் பிரகடனம் செய்த 20-ஆம் ஆண்டு நிறைவாகும். குழந்தை நலனுக்காக நெடுங்காலத்திற்குப் பயனளிக்க வல்ல நீடித்த நடவடிக்கையை ஆரம்பிப்பதே "குழந்தை ஆண்டின்" முக்கிய அம்சமாகும். மேலும், இவ்வாண்டின் ஏனைய இலட்சியங்களாவன:—

(1) குழந்தைகளின் சிறப்புத் தேவைகளின் உணர்வைப் பொதுமக்களுக்கும், திட்டங்கள் வகுப்போருக்கும் உயர்த்திக் காட்டுவது.

(2) இந்த ஆண்டை உடல் நலத்துடன் குழந்தைகளின் அறிவு, மன வளர்ச்சியையும் சேர்த்து வலியுறுத்த் ஒரு ஊக்குவிப்பு ஆண்டாகக் கொண்டாட வேண்டும்.

(3) மனம், உறுப்பு குறைபாடுள்ள குழந்தைகளுக்குச் சிறந்த கவனம், சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

(4) குழந்தைகளுக்கு நன்மை பயக்கும் நல்ல பல திட்டங்களை நடைமுறை சாத்தியமாக்கி, குழந்தைப் பிரச்சினைகளை அறிய ஆராய்ச்சித் தகவல்களை விரிவாகத் திரட்டவும், பரப்பிடவும் முயல வேண்டும்.

(5) குழந்தைகளின் உரிமைப் பட்டய சாசனத்தின் விதிகளை மென்மேலும் அமலாக்க ஒரு வாய்ப்பாக இந்த ஆண்டைப் பயன்படுத்த வேண்டும்.

இந்தக் கருத்துக்களையெல்லாம் மனத்தில் கொண்டுதான் நம் தமிழகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் ஒரு குழந்தைகள் நல வாரியம் அமைக்கப்பட்டு; அதன் முதற் கூட்டமும் கூட்டப்பட்டு, சர்வதேசக் குழந்தைகளின் ஆண்டில் எத்தகைய நல்ல திட்டங்களைக் குழந்தைகள் நலனுக்காக வகுக்கலாம் என்று வரையறுக்கப்பட்டது.

இதன் விளைவாக குழந்தைகளின் நலனுக்காக நிதி திரட்டுவதற்கென ஒரு சிறப்புப் பரிசுச் சீட்டு குலுக்கலையும், உடல் ஊனமுற்ற குழந்தைகள் இலவசமாக ஊர்திகளில் செல்ல அனுமதிச் சீட்டு வசதியும் முதற்கட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.


இதைத் தவிர, தடுப்பூசி போடுதல், வைட்டமின் ஏ, மற்றும் இரும்புச் சத்து மருந்து வழங்குதல் போன்ற குழந்தைகள் நலத் திட்டங்கள் அனைத்தும் தீவிரமாக அமலாக்கப்படும். பல நோக்கு சுகாதாரப் பணியாளர் திட்டம் விரைவில் விரிவுபடுத்தவும், பள்ளிக் குழந்தைகள் மருத்துவப் பரிசோதனை ஊட்டச் சத்து வழங்குதல், கிராமங்களில் சுத்தமான குடிநீர் வழங்குதல், சுகாதாரக் கல்வி வழங்குதல் முதலான திட்டங்களுக்கும் முக்கிய இடம் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பொதுமக்கள் அனைவரும் இந்த சர்வ தேசக் குழந்தைகள் ஆண்டில் தாங்கள் பெற்ற குழந்தைகளைக் கண்ணின் மணி போலக் காக்கவும், குழந்தைகள் உரிமைகள் குலையாமல் காத்திடவும், பிள்ளைக் கனியமுதை, பேசும் பொற்சித்திரத்தை, அள்ளக் குறையாத அன்புமணிப் பெட்டகத்தைப் பாதுகாத்து, அவைகள் நாட்டின் எதிர்கால நன்மக்களாக உருவாக்குவோம் என உறுதி பூண்டு அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்.




## பல் மருத்துவக் கல்லூரி

சென்னை மருத்துவக் கல்லூரியின் ஒரு பிரிவாக இயங்கி வந்த பல் மருத்துவப் பிரிவு (Dental Wing) அதனின்றும் பிரிக்கப்பட்டு, தனியாக ஒரு கல்லூரியாக (Madras Dental College) உயர்த்தப்பட்டுள்ளது. இந்திய பல் மருத்துவக் குழுமம் செய்துகொண்ட பரிந்துரையின் பேரில் தமிழ்நாடு அரசு இவ்வாறு முடிவு எடுத்துள்ளது.






# தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வி



**டாக்டர் எஸ். ஞானதேசிகன்**
**மருத்துவக் கல்வி இயக்குநர்**

தமிழகத்தின் மக்கட்தொகை சுமார் 500 இலட்சமாக இருக்கிறது. இம்மக்கள் சென்னை மதுரை, கோவை போன்றபெரிய நகரங்களிலும் நீலகிரி, கொடைக்கானல் போன்ற மலைப்பிரதேசங்களிலும், இராமநாதபுரம் போன்ற வறண்ட பகுதிகளிலும் கட்டை வண்டிகூடப் போகமுடியாத கிராமப் பகுதிகளில் வசிக்கிறார்கள், இப்படியாகச் சிதறிக் கிடக்கும் மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதி செய்து கொடுப்பதென்பது எளிதான செயலல்ல.

பெரு நகர்ப்புறங்களில் அரசு மருத்துவமனைகளை நிறுவி மக்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுப்பது ஒன்றும் கடினமான செயலல்ல. ஆயின், மேலே கூறிய மலைப்பிரதேசங்களிலும் கிராமங்களிலும் பட்டி தொட்டிகளிலும் வாழும் மக்களுக்கு மருத்துவ வசதிகளைச் செய்து கொடுப்பதுதான் ஓர் அரசின் திறமையைச் சோதிக்கக்கூடிய செயலாக இருக்கும். இருப்பினும் தமிழக அரசு இச் சவாலை ஏற்றுக் கொண்டு வெற்றிகரமாகச் செயலாக்கிக் கொண்டு வருகிறது. எக்காரியத்துக்கும் அடிப்படைத் தேவை பொருளாதாரம். எனவே, தமிழக அரசு அதிகமான விழுக்காடுகளை மக்கள் நல்வாழ்வுத் துறைக்கே ஒதுக்கியிருக்கிறது. இந்த அளவுக்கு வேறு எந்த மாநில அரசோ மைய அரசோ கூட அவரவர்கள் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கியதாகத் தெரியவில்லை.


அடுத்து, மருத்துவப் பணிக்கு முதற்கண் வேண்டியது தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், ஆய்வக நுட்புனர்கள் முதலானோர்.

இவர்கள் தத்தமது துறையில் முறையே பயின்று தேர்ச்சி பெறுவதற்குத் தமிழகத்தில் மொத்தம் எட்டு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. சென்னையில் மூன்றும் (சென்னை, ஸ்டான்லி, கீழ்ப்பாக்கம்), செங்கற்பட்டு, தஞ்சை, கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் ஒவ்வொன்றுமாக ஆக எட்டு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. இவை தவிர 'பல் மருத்துவத்துக்கெனவே' தனியே ஒரு கல்லூரியும் உண்டு. இப்பிரிவு இதுகாறும் சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டிருந்தது. தற்போது இது தனி பல் மருத்துவக் கல்லூரியாகவே இயங்கி வருகிறது.

இந்த மாநிலத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் 1015 மாணவர்கள் எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்புக்கென ஒவ்வொரு ஆண்டும் சேர்க்கப்படுகிறார்கள். இவற்றில் ஆறு கல்லூரிகளில் பட்ட மேற்படிப்புக்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வரும் ஆண்டு முதல் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியிலும் பட்ட மேற்படிப்பு ஆரம்பிக்கப்பட இருக்கிறது. பட்ட மேற்படிப்புப் பட்டம் பெற்றவர்கள் தனித் தேர்ச்சி பெற்று இருதயம், சிறுநீரகம் போன்ற உடல் உறுப்புகளில் உண்டாகும் நோய் நீக்க அவற்றில் சிறப்பான பட்டப்படிப்பு வசதிகள் சென்னை, மதுரை மருத்துவக் கல்லூரிகளில் உண்டு.

இப்படி மேற்படிப்பு, சிறப்புப் படிப்பு பட்டம் பெற்றவர்கள் பேராசிரியர்களாக மருத்துவக் கல்லூரிகளில் நியமிக்கப்படுகிறார்கள். எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் மாவட்ட மருத்துவ மனைகள், வட்ட மருத்துவ மனைகள், மருந்தகங்கள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் நியமிக்கப்படுகிறார்கள். காலப்போக்கில் இவர்களும் மேல்பட்டப்படிப்பு பெற்றபின் மேற்கூறிய மருத்துவமனைகளுக்கே பணியாற்றச் செல்வார்கள். இது நடைமுறையில் ஆரம்பமாகி இருக்கிறது. இந்நிலையை ஊக்குவிக்க அரசு மருத்துவர்களுக்குச் சிறப்பு மேல் படிப்புக்கெனவே 40 விழுக்காடு இடங்கள் ஒதுக்கியுள்ளது.

விரைவாக வளர்ந்துவரும் நல்வாழ்வுத் துறைக்குப் போதிய



செவிலியர்களெ, மருந்தாளுநர்கள் கிடைக்காததால் செவிலியர்கள் பயிற்சிப் படிப்புக்கு என திருச்சி, சேலம் ஆகிய இடங்களிலும் மருந்தாளுநர் பயிற்சிப் படிப்புக்குத் திருச்சியிலும் பள்ளிகள் இந்த ஆண்டு முதல் செயல்பட இருக்கின்றன.

படித்துப்பட்டம் பெற்றவர்கள் இருந்தால் மட்டும் போதாது. அப்படிப் படித்தவர்கள் மக்களில் 80 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் வசிக்கும் கிராமப்புறங்களுக்குச் சென்று சேவை செய்யத் தயாராக இருக்க வேண்டும். சுமார் 6 ஆண்டுகள் சென்னை, மதுரை போன்ற பெருநகரங்களில் மாணவர்களாகவே இருந்துவிட்டு திடீரென கிராமங்களுக்குச் சென்று மருத்துவம் செய்யத் தயங்குகிறார்கள். இந்நிலை ஏற்படக் காரணம், பாடத்திட்டத்தில் உள்ள சில குறைபாடுகளே ஆகும். எனவே, இவற்றை மறு ஆய்வு செய்து திருத்தி அமைக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதனையொட்டி ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் மூன்று ஆதார சுகாதார நிலையங்களை இணைத்துவிடத் திட்டம் உள்ளது. இந்த ஆதார சுகாதார நிலையங்களில் மாணவர்கள், ஆசிரியர்கள் சென்று தங்குவதற்கு வேண்டிய கட்டடங்களும் கட்டப்படும். மாணவர்களாக இருக்கும் போதும், இளநிலை மருத்துவர்களாக இருக்கும்போதும் அவர்கள் அங்கு மூன்று முதல் ஆறு மாதங்கள் வரை தங்கியிருந்து ஆசிரியர்களின் கண்காணிப்பின்கீழ் மருத்துவச் சேவை செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதால் நம் நாட்டின் உண்மையான நிலையையும் கிராமப்புற மக்களையும் கண்டு அறிந்து பழகிக் கொள்ள ஏதுவாகிறது. இம்முறை பழக்கத்துக்கு வந்துவிட்டால் மருத்துவர்கள் கிராமப்புறங்களுக்குச் சேவை செய்யச் செய்வதில் தயக்கம் காட்டமாட்டார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்தபடியாக, இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதார சுகாதார நிலையங்களிலிருந்து மாணவர்களும் ஆசிரியர்களும் மிகவும் பின்தங்கிய கிராமங்களுக்கு ஊர்ந்து திரியும் மருந்தகங்கள் (Mobile Clinics) கொடுக்கப்பட திட்டம் இருக்கின்றது. மருத்துவத்துக்குத் தேவையான எல்லா மருந்துகளும், அனைத்துக் கருவிகளும் இவ்வண்டியில் இருக்கும். நோயாளிகள் மருத்துவர்களைத் தேடிச் செல்லாமல், மருத்துவர்கள் நோயாளிகளை அணுகி மருத்துவம் பார்க்குமளவுக்கு இம்முறை ஏதுவாக இருக்கும்.

புற்றுநோய் ஒரு கொடூரமான நோய். இது முற்றியபிறகு தடுப்பதென்பது முடியாத காரியமாகும். எனவே, ஆரம்ப நிலையிலேயே புற்றுநோயைக் கண்டுபிடித்துக் குணப்படுத்த காஞ்சிபுரத்தில் 'அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம்' ஒன்று இயங்கி வருகிறது. இது உலக சுகாதார நிறுவனத்தின் உதவியுடன் (W.H.O.) தொடங்கப்பட்டது. புற்றுநோய்த் தடுப்பு-கண்டுபிடிப்புச் சிகிச்சை, பிணியாளர்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வருதல் ஆகிய பல்வேறு நிலைகளில் இவ்வியக்கம் செயல்படுகிறது. முக்கியமாக ஒரு வட்டாரத்தில் இருக்கும் அத்தனை மக்களையும் சோதனை செய்து புற்றுநோய்க்கான அறிகுறி இருக்கிறதா என்பதை அறிந்து, அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவற்றைச் செய்ய ஓர் ஆய்வு மையமும், நூறு படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையும் கட்டப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்லூரிகளில் பேராசிரியர்களும் மற்ற ஆசிரியர்களும் ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டுள்ளார்கள். அவர்கள் ஆராய்ச்சிகளின் முடிவில் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளை இந்தியா மற்றும் பிற நாடுகளுக்கும் அனுப்பி, அங்கு நடக்கும் ஆராய்ச்சியாளர் கூட்டங்களில் விவாதிக்கிறார்கள். இவர்கள் இந்தியாவுக்குள்ளும் வெளிநாடுகளுக்கும் செல்வதாக இருந்தாலும் அவர்கள் அவ்விதம் சென்றுவர அரசு எல்லாவிதங்களிலும் உதவி அளிக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதற்கெனவே ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் அரசு செலவிடுகிறது.

இத்துடன், பண்டைய மருத்துவ முறைகளான சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஏடுகளில் காணப்படும் ஏனைய மருத்துவ முறைகளையும் விஞ்ஞான முறைப்படி ஆராய்வதற்கும், அதன்மூலம் கண்டுபிடிக்கப்படும் மருந்துகளை நம் நாட்டிலேயே செய்துகொள்ள வழி முறைகளைக் கண்டுபிடிப்பதற்கும் ஓர் அமைப்பு சென்னை மருத்துவக் கல்லூரியில் உள்ளது.





# நல்வாழ்வு கிராமமக்களை நாடிச்செல்கிறது!

டாக்டர் வி. கபாலி
மக்கள் நல்வாழ்வு —தடுப்பு மருந்து இயக்குநர்

"உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும் சேரா தியல்வது நாடு''

என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. தமிழ்நாடு, வள்ளுவர் கூறிய அந்த இலக்கணத்துக்கு இலக்கியமாகத் திகழ வேண்டும் என்கின்ற நோக்கத்துடன் நமது அரசு, பசியையும், பிணியையும் அறவே ஒழிக்கத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக, நம் நாட்டு மக்கள் தொகையில் 70 சதவீதத்தினருக்கு மேல் வாழ்கின்ற கிராமப் பகுதிகளுக்கு நல்வாழ்வளிக்கின்ற பல்வேறு திட்டங்களைத் தமிழக அரசு வகுத்து நிறைவேற்றி வருகிறது.

கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய, பாதுகாக்கப்பட்ட நீர்வழங்குதல், கூட்டுறவு முறையில் நியாய விலையில் எல்லாப் பண்டங்களும் கிராம மக்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்தல் முதலியன அவற்றில் சில. கிராம மக்களின் சுகவாழ்வுத் தேவைகளை ஈடு செய்ய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

(1) மருத்துவ வசதிகள்

(2) பிறப்பு இறப்புப் புள்ளி விவரம் சேகரித்தல்

(3) தாய்-சேய் நலம் பேணுதல்

(4) குடும்ப நலம்

(5) பள்ளிச் சுகாதாரப் பணி

(6) தொத்து நோய்த் தடுப்பு

(7) சுற்றுப்புறத் துப்புரவு

(8) சுகாதாரக் கல்வி—

ஆகிய எட்டு அலுவல்களைச் செய்கின்றன.

தற்போது ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இந்த நிலையங்கள், ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எல்லா மக்களுக்கும் மேற்கூறிய அலுவல்களைச் செய்ய முயன்றாலும், மருத்துவ வசதிகள், தேவைப்படும் எல்லா நோயாளிகளுக்கும் கிடைப்பது கடினமாக உள்ளது. தொலைவின் காரணமாகவோ மற்ற காரணங்களுக்காகவோ நோயுற்றவர்கள் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு சிகிச்சை பெற வருவதில்லை. ஆகவே ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணிகளை மேலும் பலனளிக்கத் தக்கதாகவும், திறமுள்ளதாகவும் செய்வதற்கு நமது அரசு பல திட்டங்களை வகுத்துள்ளது.

## நடமாடும் சுகாதாரக் குழுக்கள்

இத்தகைய புதிய திட்டங்களுள், ஆரம்பச் சுகாதார நிலையங்களை மையமாகக்கொண்டு

செயல்படும் ''நடமாடும் சுகாதாரக் குழு''க் களை அமைப்பது குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

1977 செப்டம்பர் 15-ஆம் நாளில், அதாவது, பேரறிஞர் அண்ணா பிறந்த நன்னாளில் கிராம மக்களின் நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் இத்திட்டம் செங்கை மாவட்டம் திருக்கழுக் குன்றத்திலும், இராமநாதபுரம் மாவட்டத் தைச் சேர்ந்த பேரையூரிலும் தொடங்கப் பட்டது. பயிற்சி பெற்ற டாக்டர்களின் சேவை, நகர மக்களுக்குக் கிடைப்பதைப் போலவே கிராம மக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம மக்களின் வீடுகளைத் தேடி இத்தகைய பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர் குழு சென்று பணிபுரிவது இத் திட்டத்தின் தனிச் சிறப்பாகும்.

இத்திட்டத்தின் கீழ், ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் வரும் பகுதி மூன்றாகப் பிரிக்கப் பட்டு ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவர் ஒவ்வொருவரும், ஒவ்வொரு பகுதியை வாரத் தில் நான்கு நாட்கள் சுற்றுப்பயணம் செய்து கிராமங்களில் நல்வாழ்வுப் பணி புரிவார்கள். ஒரு டாக்டர், நிலையத்தில் காலையிலும், மாலையிலும் வெளி நோயாளிகள் மற்றும் தங்கிச் சிகிச்சை பெறுவோரைக் கவனித்துக் கொள்வார். ஏனைய இரண்டு டாக்டர்களும் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் கிராமங்களுக்குச் சென்று பணி புரிவார்கள். இவ்வாறு ஒரு வார காலத்தில், ஒவ்வொரு கிராமத்திற்கும் இக்குழு ஒரு முறை சென்று வரும்.

இந்த ''நடமாடும் சுகாதாரக் குழுக்கள்'' நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதுடன், நோய்த்தடுப்பு மற்றும் பல்வேறு நல்வாழ்வு மேம்பாட்டு நடவடிக்கைகளையும் மேற் கொள்ளும்; நோய்த் தடுப்பு ஊசி போடுதல், நல்வாழ்வுக் கல்வி விளக்கமளித்தல், ஊட்டச் சத்து பற்றி விளக்கமளித்தல், குடும்ப நல முறைகளை மேற்கொள்வதற்குக் கிராம மக் களைத் தூண்டுதல் முதலான திட்டங்களை இக்குழுக்கள் நிறைவேற்றும்.

இவ்வாறு தொடங்கப்பட்ட இத்திட்டம் 1977-78-ஆம் ஆண்டில் ஒரு முன் மாதிரித் திட்டமாக 24 ஆரம்பச் சுகாதார நிலையங் களில் செயல்படுத்தப்பட்டது.

### படிப்படியே..... தமிழ்நாடு முழுவதும்

இப்போது எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் இத்தகைய நடமாடும் சுகா தாரக்குழுக்களை அமைக்க அரசு திட்டமிட்டு உள்ளது. அதன்படி 1978-79-ஆம் ஆண்டில் 100 நிலையங்களிலும், 1979-80-ஆம் ஆண்டில் 125 நிலையங்களிலும், 1980-81-ஆம் ஆண்டில் 134 நிலையங்களிலும் இக்குழுக்களை அமைப்பதன் மூலம் 1981 இறுதியில் தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் நடமாடும் சுகாதாரக் குழு அமைக்கப்பட விருக்கிறது. இத்திட்டத்தைத் தீவிரமாக வும், திறம்படவும் செயல்படுத்துவதற்காக, இந்த ஆண்டுகளில் மொத்தம் 146 ஊர்தி களைப் புதியதாக வாங்கவும் அரசு திட்டமிட் டுள்ளது.

நடமாடும் சுகாதாரக்குழு, கிராமங்களில் பணிபுரியும்போது மேற்கொண்டு சிறப்புச் சிகிச்சையோ, பரிசோதனையோ, செய்யப் பட வேண்டிய நோயாளிகளை ஆரம்பச் சுகா தார நிலையத்துக்கு அல்லது அருகிலுள்ள பெரிய மருத்துவ மனைக்கு அனுப்பி வைக் கும். இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் நோயாளிகள் தனிக் கவனமும் சிகிச்சையும் பெறும் பொருட்டு ''தொடர்பு அட்டை'' ( Referral Card ) கொடுத்து அனுப்பப்படு வார்கள்.

நடமாடும் சுகாதாரக்குழு, கிராமங்களில் காசநோய், தொழுநோய், மலேரியா, யானைக் கால் நோய் முதலிய நோயுள்ளவர்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதிலும் தனிக் கவனம் செலுத்தும்; மேலும், இப்பணிகளி னால் அந்தந்த நோய் ஒழிப்புத் திட்டங்களில் பணிபுரியும் சிறப்புப் பணியாளர்களுக்கு இக் குழுவின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

அரசு மருந்தகம் அல்லது ஊராட்சி ஒன் றிய மருந்தகம் செயல்படும் கிராமங்களுக்கு இக்குழுக்கள் சிகிச்சைப் பணிக்கென்று செல்ல மாட்டா; என்றாலும் ஏனைய நோய்த் தடுப்பு மற்றும் சுகாதாரப் பணிகளுக்காக இக்குழு வினர் அக்கிராமங்களுக்குச் சென்று வரு வார்கள்.

### மக்களின் ஒத்துழைப்பு

நிலையத்திலுள்ள ஊர்திக்குள் ஒன்று கெட்டுவிட்டாலோ, மருத்துவ அலுவலர் களுள் ஒருவர் நீண்ட விடுப்பில் சென்றுவிட் டாலோ, இத்தகைய பிற காரணங்களினால் நடமாடும் குழுக்களின் வேலை தடைபடாமல் செயல்படுவதற்கு உடனடியான மாற்று ஏற் பாடுகளைச் செய்ய வகை செய்யப்பட்டிருக் கிறது. மருந்துகள், பெட்ரோல் முதலியன தட்டுப்பாடின்றி இவர்களுக்குக் கிடைக்க அரசு தேவையான ஏற்பாடுகளைச் செய்துள் ளது. எனவே, இக்குழுக்கள், எந்தத் தடை யும் இன்றி குறிப்பிட்ட நேரங்களில், குறிப் பிட்ட இடங்களுக்குத் தவறாமல் சென்று, அங்கு ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் கிராம மக்களுக்குச் சிகிச்சை மற்றும் நோய்த் தடுப்பு சுகாதாரப் பணிகளைச் செய்து மக் களின் ஒத்துழைப்பையும், நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் ஈட்டி கிராம மக்களின் நல்வாழ்வுக்குப் பாடுபடும் என்பது உறுதி.

மக்களின் ஒத்துழைப்பைத் திரட்டுவதி லும், குழுவின் பணியைக் கிராமத்தில் எளி தாக்குவதிலும் உள்ளூர் சுகாதாரப் பணியா ளர், கிராம மக்களிடையே நல்லுறவை ஏற் படுத்திக் கொண்டு, கிராம மக்கள் அடங்கிய சுகாதாரச் சங்கம் போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி எல்லா முன்னேற்பாடுகளையும் செய்து வைப்பார்.

நல்வாழ்வு கிராம மக்களை நாடிச் செல் கிறது. கிராம மக்கள் எல்லா நலன்களும் பெற்று முழுப் பயன் பெற வேண்டுமென்பதே அரசின் நோக்கமாக உள்ளது.

எனவே, இந்த நடமாடும் சுகாதாரக் குழுக்கள் கிராமங்கள்தோறும் நல்வாழ்வுப் பணிபுரியச் செல்லும்போது மக்களும் அவற்றை மனமுவந்து ஏற்றுக்கொண்டு எல்லா ஒத்துழைப்பையும் தருவார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.



# காது கேளாமை

டாக்டர் எஸ். காமேஸ்வரன்,
இயக்குநர்,
காது, மூக்கு, தொண்டை
மருத்துவப் பிரிவு
பொது மருத்துவ மனை
சென்னை

ஐம்புலன்களில் முக்கியமானது செவி. அச்செவியினால் நாம் பெறக் கூடிய கேள்வியின் உதவி யைக் கொண்டு இவ்வுலகத்தில் நாம் மொழி அறிவைப் பெறுகி றோம்.

கற்றறிவு இல்லாத மக்களுக்குச் செவிடு' என்பதும், 'காது நன்கு கேளாதவர்' என்பதும் ஒன்றா கவே தோன்றினாலும் உண்மை யில் அவை இரண்டும் ஒன்றல்ல. பலவித ஒலிகளைத் தோற்று விக்கக்கூடிய ஆடியோ மீட்டர் ( Audio meter ) என்னும் கருவியின் உதவி கொண்டு ஒருவ ருடைய கேள்வி நுட்பத்தைக் கண்டறிய முடியும். இக்கருவி யின் துணை கொண்டு கேள்வி நுட்பத்தின் அளவை நாம் ஒரு வரை படமாக வரையலாம். இந்த வரைபடத்திற்கு ''ஆடியோ கிராம்'' என்று பெயர். சாதா ரணமாக ஒருவரின் கேள்வி நுட் பத்தின் அளவை 'டெசிபெல்' ( Decibel ) என்கிற அலகி னால் அளக்கலாம். ஒருவருடைய கேள்வித்திறன் 30 டிபிக்குள் (DB) இருந்தால் அவருடைய கேள்வித் திறன் நன்கு உள்ளது என்று இச் சமூகத்தினரால் ஏற்றுக்கொள் ளப்பட்டது. கேள்வித்திறன் 30 டிபிக்கு மேல் இருந்தால் கேள் விக்குறை உள்ளவராகக் கருதப் படுவார்.


மருத்துவப்படி கேள்விக்குறை 60 டிபிக்கும் அதிகமாக உள்ள போது செவிட்டுத் தன்மை என் றும், 30 டிபி, 60 டிபி இவற் றுக்கு இடைப்பட்டதாக இருக்கு மேயானால் காது நன்குகேளாமை என்று இருவகையாகப் பாகுபடுத் தலாம். இதையே சான்றுடன் விளக்கினால், செவிட்டுத்தன்மை உள்ளவர்களைக் குருடர்களுக் கும், காது நன்கு கேளாதோரை மூக்குக்கண்ணாடி அணிந்தவர் களுக்கும் ஒப்பிடலாம். இத்தகை யோருக்கு உள்ள கல்வி முறை களைப் பற்றி ஆராயும் போது மேலே குறிப்பிட்டதை நன்கு மனத்தில் இருத்த வேண்டியது அவசியம். காது நன்கு கேளா தோரை செவிட்டுத் தன்மை உள்

ளோரிடத்திலிருந்து பிரித்துச் சாதாரண குழந்தைகளோடு சேர்ந்து கல்வி பயிலச் செய்யும் முறை தற்காலத்தில் உலகம் முழுவதும் ஒத்துக்கொள்ளப் பட் டிருக்கிறது.

காது கேளாமையை, ஒலி யைக் கடத்தும் உறுப்புக்களில் ஏற்பட்ட குறையினால் உண் டான காது கேளாமையென்றும், நரம்புத் தளர்ச்சியினால் உண் டான காது கேளாமை என்றும் இருவகைப்படுத்தலாம். இவற் றுள், முதல் வகையில் வெளிக் காதிலோ அல்லது நடுக்காதிலோ

பாதிப்பு இருக்கக்கூடும். எனவே, இவ்வகைக்கு அறுவைச் சிகிச்சை மூலம் சிகிச்சை அளிக்க வகை களுண்டு. ஆனால், இரண்டாவது வகையில் உட்காதிலோ அல்லது உட்காதிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்பிலோ பாதிப்பு இருப்பதால், இத்தகைய வகை களில்லை.

வேகமான நகர்ப்புற வளர்ச்சி மற்றும் தொழில் வளர்ச்சியினால் இந்நூற்றாண்டில் ஏற்கெனவே உள்ள செவிட்டுத் தன்மையின் வகைகளோடு, இரைச்சலால் உண்டாகும் செவிட்டுத்தன்மை என்ற புதுவகையும் சேர்ந்துள் ளது. இதனால் உடனடியாகச் சிக்கல்கள் ஏதுமில்லை என்றா லும் நாளாவட்டத்தில் இதனால் உண்டாகும் சிக்கல்கள் எண்ணில் அடங்கா. நம்முடைய ஆய்வு ஒன்றின்படி தொழிற்சாலையில்




1. செவி மடல் 2. சுத்தி எலும்பு 3. பட்டடை எலும்பு
4. அரைவட்ட புன்னியங்கள் 5. சுத்தி எலும்பு
6. நத்தை எலும்பு 7. செவிப் பறை 8. வெளிச் செவி

பணிபுரிவோரில் 21% க்கு இவ்வித செவிட்டுத்தன்மை உள்ளதென்றும், அச்செவிட்டுத்தன்மை நரம்புத்தளர்ச்சியினால் உண்டான செவிட்டுத் தன்மையின் வகையைச் சார்ந்ததென்றும் தெரிய வருகிறது.


தொழிற்சாலையின் இரைச்சலால் உண்டாகும் செவிட்டுத் தன்மையைப் பற்றி விவாதிக்கும் இங்கு, அதனுடன் தொடர்பு கொண்ட மூப்பினால் உண்டாகும் செவிட்டுத் தன்மையைப்பற்றியும் விவாதிப்பது அவசியம்.

சாதாரணமாக 20 முதல் 20,000 வரை அதிர்வெண்களை உடைய ஒலி அலைகளை மனிதனால் கேட்க முடிந்தபோதிலும், 500 முதல் 4000 வரை அதிர்வெண்களை உடைய ஒலி அலைகள் அவனது பேச்சுக்கு அத்தியாவசியமானது. ஆயினும், மூப்பினால் இந்த அளவானது குறைக்கப்படுவதால் வயதானவர்களுக்குச் செவி நுட்பம் மிகவும் குறைகிறது. 'சூடானைச்' சேர்ந்த 'மாபான்ஸ்' என்ற பழங்குடியினரின் செவி நுட்பத்தைப் பற்றிய அமெரிக்காவைச் சேர்ந்த சாமுவேல் ரோஸன் என்ற செவி நிபுணரின் கண்டுபிடிப்பு மூப்பினால் வரும் செவிநுட்பத்தைப் பற்றிய மேலே கண்ட நம்முடைய எண்ணத்தை மாற்றச் செய்து விட்டது. அங்கு வயது முதிர்ந்தோர்க்கும் இளைஞர்க்கும் செவிநுட்பத்தில் வேறுபாடு இல்லை என்பது அவருடைய கண்டுபிடிப்பு.


இக்கண்டுபிடிப்பிற்குப் பின் ஆண்டாண்டுக் காலமாக நகர இரைச்சல்களின் மத்தியிலேயே வாழ்வதால் செவி நுட்பத்திற்கு ஏற்பட்ட கேடே, தவறாக வயதினால் ஏற்பட்ட கேடாகும் என்று முன்பு எண்ணப்பட்டதாகப் புதிதாக விளக்கம் அளிக்க முடிந்தது. சுருங்கச் சொன்னால், பல்வேறு போக்குவரத்து மற்றும் தொழில் இரைச்சல்களிடையே வாழும் மனிதனின் செவிகளுக்கு அந்த இரைச்சல்களினால் நாளாவட்டத்தில் மெதுவாக உண்டான கேடே மூப்பினால் செவிட்டுத் தன்மை என்று முன்பு தவறாகக் கருதப்பட்டது. நீலகிரியின் பழங்குடி மக்களான தோடர்களிடையே நாம் நடத்திய செவி நுட்ப ஆய்வின் முடிவும், நம்முடைய புதிய விளக்கத்தையே உறுதிப்படுத்துகிறது.

தென்னிந்தியர்களிடையே குறிப்பாக பெண்களிடையே இளமைப்பருவத்தில் ஏற்படும் 'ஆட்டோஸ்கிளியரோசிஸ்' என்ற நோயின் விளைவாக ஏற்படும் செவிட்டுத் தன்மையைக் குறிப்







காது நன்கு கேட்கும் நிலை.




ஒலியைக் கடத்தும் உறுப்புகளில் ஏற்படும் குறையினால் ஆன காது கேளாமை.



நரம்பு தளர்ச்சியினால் உண்டாகும் காது கேளாமை



இரைச்சலால் உண்டாகும் காது கேளாமை



மூப்பினால் ஏற்படும் காது கேளாமை

பிடவேண்டும். தென்னிந்தியருள் பெரும்பான்மையினருக்குச் சொந்தத்திற்குள்ளேயே திருமணம் நடப்பதாலேயே அவர்களுள் பெரும்பாலோர்க்கு இந்நோய் வருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்விதச் செவிட்டுத் தன்மையானது கடத்தும் உறுப்புக்களில் ஏற்பட்ட பாதிப்பினால் உண்டான செவிட்டுத் தன்மையின் வகையைச் சார்ந்ததாகும். அதிருஷ்டவசமாக, இந்நோய் உடையோருக்கு அறுவைச் சிகிச்சையாலோ அல்லது காது கேட்கும் உபகரணத்தைப் பொருத்துவதாலோ செவி நுட்பத்தைத் திரும்பப் பெற முடியுமென்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

சென்னை பொது மருத்துவமனையில் காது கேட்கவில்லையென்று வந்தவர்களுள் 20% பேருக்கு இந்நோய் உள்ளதெனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அத்தகையோரில் 80% பேருக்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

தென்னிந்தியருள் மூவரில் ஒருவர் சொந்தத்தில் மணம் செய்து கொண்டவர். சென்னை மருத்துவமனைக்கு வந்த காதுகேளாதோரில் சுமார் 42% பேருக்குக் குடும்பத்தில் யாரேனும் ஒருவருக்கு காது கேளாதிருக்கிறதென்றும்; சுமார் 50% பேர் சொந்தத்தில் திருமணம் செய்து கொண்டவர் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.


சிறார்களுக்கு நெடுநாட்களாகக் காதில் சீழ் வடிவதால் ஏற்படும் காது கேளாமை; காது கேளாமை வகைகளில் கடைசியாகக் குறிப்பிட வேண்டியது. இந்தியாவில் இத்தகைய சிறார்கள் அதிகம். சாதாரணமாக சிறார்களிடையே இது காணப்பட்டபோதிலும், வயதானவர்க்கும் இந்நோய் காணப்படுவது அரிதல்ல. வேலூர் பள்ளிச் சிறார்களிடையே வை.வி. கபூர் என்பவர் நடத்திய ஆய்வின்படி இத்தகைய நோய் உடையோரில் 90%க்கு கடத்தும் உறுப்புக்கள் பாதிக்கப்பட்டதால் ஏற்பட்ட செவிட்டுத் தன்மை இருப்பதாகத் தெரியவருகிறது. அதுபோன்றே 196[illegible] [illegible]ஸ். காமேஸ்வரன் என்பவர் நடத்திய ஆய்வின்ப[illegible]க்கு இந்நோயா[illegible] காது [illegible]வில்லை என்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் சென்னை மருத்துவக்கல்லூரியில் காது, மூக்குத் தொண்டை இயல் நிலையத்தைச் சேர்ந்த கேள்வி மற்றும் பேச்சுப் பயிற்சித் துறைக்குச் சிகிச்சை பெற வந்தோரில் 805 பேர் காது கேளாதோர் என்பது தெரிய வருகிறது. அவர்களுடைய வயது முதலிய விவரங்கள் பின் வரும் அட்டவணையில் குறிக்கப் பட்டுள்ளது.

| வயது (ஆண்டுகளில்) | பாதிக்கப் பட்டோரின் எண்ணிக்கை. |
|---|---|
| 0-5 | 196 |
| 6-10 | 137 |
| 11-15 | 65 |
| 16-20 | 87 |
| 21-25 | 99 |
| 26-30 | 62 |
| 31-35 | 25 |
| 36-40 | 29 |
| 41-45 | 19 |
| 46-50 | 22 |
| 50க்கு மேல் | 64 |
| மொத்தம் | 805 |

மேலே கண்ட அட்டவணையிலிருந்து காது கேளாதோருள் பெரும்பான்மையினர் பள்ளி செல்லும் பருவத்திற்கும் அதற்கு முற்பட்ட பருவத்திற்கும் உட்பட்டவர் என்பதும், அத்தகையோருள் பெரும்பாலோர் நரம்புத்தளர்ச்சியினால் ஆன செவிட்டுத் தன்மை உடையவர் என்பதும் தெரியவருகிறது.

நம்மில் பலருக்கு இவ்வுலகம் முழுவதும் காது கேளாதோரே இல்லை என்ற உண்மை மிக வியப்பாக இருக்கும். காது கேளாதோர் என்று கருதப்படுவோரில் பெரும்பான்மையோருக்குக் கேட்கக்கூடிய மிகச் சிறிய காது கேட்கும் சக்தி உண்டு. காது கேட்கும் கருவிகளைப் பயன்படுத்திப்பேச்சு மற்றும் மொழி வளர்ச்சியைப் பெறுவதற்கு மிகவும் வாய்ப்புண்டு.



1578ல் ஸ்பெயினைச் சார்ந்த பெட்றோபான்தி லியான் (Pedro Bon De Leon) என்பவர் காது கேளாத, வாய் பேசாத நான்கு குழந்தைகளுக்குப் படிக்க பேச, எழுத பழகிக் காட்டினார். அவருக்குப் பின்பு 17ஆம் நூற்றாண்டில் ஜான்புல்ஓர்க் (John Bull Verg) என்ற ஆங்கிலேயர் இத்தகையோருக்கு வாய் அசைவைக் கொண்டும், கைகளால் சைகை காட்டியும் கல்வி கற்பித்தார். ஆயினும் 18ஆம் நூற்றாண்டில் தான் இவர்களின் கல்விக்கான சரியான முறைகள் வகுக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று பிரான்ஸைச் சேர்ந்த பாதிரியாரான எபி (L. Ebbe) என்பவர் கண்டு பிடித்த சைகை முறை (Sign Method) ஆகும். பேச்சு முறை Oral Method என்ற வகையை ஜெர்மனியைச் சேர்ந்த ஓத்திரன் பாதிரியாரான சாமுவேல்ஹேனிக் (Samuvell Henieka) என்பவரும் கண்டுபிடித்தார். இந்த இரண்டு வழிகளுமே உலக முழுவதுமே உள்ள இத்தகையோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நம் நாடு முழுவதிலும் இத்தகையோருக்கான சிறப்புப் பள்ளிகள் 153 மட்டுமே உள்ளன. அப்பள்ளிகள் முழுவதிலும் பத்தாயிரம் குழந்தைகள் படிக்கமுடியும். ஆனால், நம் நாடு முழுவதிலும் சுமார் பத்து இலட்சம் காது கேளாத குழந்தைகள் உள்ளன. எனவே, எஞ்சியுள்ள பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் படிக்க முடியாமல் உள்ளன. எனவே, தவிக்கின்றனர்.

காது கேளாதோருக்குக் கல்வி அளிப்பதற்கு மகாராட்டிரம் முதலிடத்தையும், தமிழ்நாடு இரண்டாவது இடத்தையும் அடைந்துள்ளது.

தமிழகத்திலுள்ள இப்பள்ளிகளில் சில உண்மையிலேயே நன்றாகப் பணியாற்றுகின்றன. அப்பள்ளிகளில் ஆரம்பக் கல்விக்கு முன்பு பயிற்சி அளித்து இத்தகைய குழந்தைகளைச் சாதனைப் பள்ளிகளில் சேர்க்கின்றனர். சிற்சில பள்ளிகளில் தொழிற்கல்வியையும் அளித்து அவர்களுக்குத் தகுந்த பணிகளில் அமர்த்துகின்றனர். பூ வேலை, தையல் வேலை, சிற்றுண்டிச்சாலைகளைப் பராமரித்தல் போன்ற வேலைகளில் காது கேளாத பெண்களும், அச்சகங்கள், தொழிலகங்கள், கல்விக் கூடங்கள் போன்ற [illegible]களில் காது கேளாத ஆண்களும் இவ்வாறு பயிற்சியளித்து வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஹைதராபாத், கான்பூர், பம்பாய், டெல்லி, லூதியானா மற்றும் ஜபல்பூர் போன்ற இடங்களில் இத்தகையோருக்குத் தொழிற் பயிற்சி அளிக்கும் இடங்கள் அமைந்துள்ளன; சென்னையில் கிண்டியிலுள்ள உடல் ஊனமுற்றோருக்கான வேலைவாய்ப்பு நிலையமும், அத்தகையோருக்கான சிறப்பு புனர்வாழ்வு நிலையமும், இவர்களைத் தகுந்த பணிகளில் அமர்த்தும் வேலையில் ஈடுபட்டுள்ளன.

காது கேளாதோருக்கான புனர்வாழ்வுக்காகப் பாடுபடும் மத்திய மற்றும் மாநில அரசுகளும் ஏனைய சமூகநல அமைப்புகளும் கல்வி, சுகாதாரம், சமூகநலம் போன்ற துறைகளில் ஒன்றுக்கொன்று ஒருங்கிணைந்து வேலை செய்தால் காது கேளாதோரும் மற்றவரைப் போல வாழ்க்கையில் முன்னேற முடியும். இவ்வளவு வழிகளில் முயற்சி செய்தும் காது கேளாதோருக்காக உண்மையாகவே உழைக்கும் ஒவ்வொருவர்க்கும் - இவர்களுக்காகச் செய்தது கையளவு, செய்யவேண்டியது உலகளவு என்ற எண்ணம் உதிப்பது திண்ணம்.



# தமிழகம் கண்ட பல் மருத்துவம்



டாக்டர் பி. பி. ராஜன்,
தலைவர்.
சென்னை பல் மருத்துவக் கல்லூரி

எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம் என்பதற்கிணங்க பொலிவு தரும் சிரசுப் பாகத்தில் புன்னகையின் பிறப்பிடமாம் 'வாய்' அமைந்துள்ளது. மனிதன் எண்ணுகின்ற எண்ணத்தை வார்த்தை அலங்காரங்களால் எடுத்துச் சொல்லவும், அவன் உண்ணுகின்ற உணவை உடலுக்குள் செலுத்தவும், உறுதுணையாக இருக்கும் உறுப்பே வாய். வாயின் உட்புறம் மேலும் கீழும் முத்துக்களைக் கோத்திருப்பது போல், முல்லை மலர்களைத் தொடுத்திருப்பதுபோல், வெண்ணிறப் பற்கள் செந்நிறப் படலத்தில் சிரித்த வண்ணம் இருக்கின்றன.

பற்களும் வாயின் மற்ற பகுதிகளும், ஏனைய உடல் உறுப்புக்களைப் போல், நோய்களுக்குப் பலியாவது இயற்கை விந்தைகளில் ஒன்று. பற்களிலும் வாயிலும் ஏற்படும் நோய்கள், வலி, வீக்கம் போன்ற தொல்லைகளைக் கொடுப்பதோடு, உடலுக்குள் பரவி, உடல் நோய்களையும் வரவழைக்கும் இந்த மாபெரும் உண்மையை மருத்துவ மேதைகள் நெடுங்காலமாக அறிந்து வந்தனர். பற்களில் சிதைவு ஏற்படும்போது, அவைகள் உருமாறி, நிறம் மாறி, நிலை மாறி முகத்தின் பொலிவைக் கெடுப்பதோடு, சொல் அலங்காரத்தையும் பாதிக்கும்.


இத்தகைய பல்நோய் தொல்லைகளிலிருந்து மனித சமுதாயத்தைக் காக்க, தமிழக அரசு 1953ஆம் ஆண்டு பல் மருத்துவத்துறையை ஒரு தனித்துறையாக அமைத்து மக்களின் பல் நலம் பேண வழி வகுத்தது.

**பல் மருத்துவக் கல்வி:**

ஆயகலைகள் அறுபத்து நான்கிற்கும் தாயகமாய்த் திகழ்வது தமிழகம். பல்மருத்துவக் கலையைப் போதிக்க, உலகப் புகழ் பெற்ற சென்னை மருத்துவக் கல்லூரியில் 1953ஆம் (B.D.S.) ஆண்டு பட்டப்படிப்பைத் தமிழக அரசு துவக்கியது.

தென்னகத்தில் முதன் முதலாகத் தோன்றிய இந்தப் பல்மருத்துவப் பட்டப் படிப்பு, தமிழகத்தின் தலைநகரில் துவங்கியது தமிழகம் கண்ட ஒரு தனிப் பெரும் முயற்சி. இரண்டு ஆசிரியர்களையும் பதினைந்து மாணவர்களையும் கொண்டு ஒரு சின்னஞ்சிறு பகுதியில் தோன்றிய இந்தப் படிப்பு, இன்று இருநூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு, உயர்ந்த ஒரு கட்டடத்தில் ஏறுநடை போடுகிறது என்றால், அது துறையின் வளர்ச்சியைக் காட்டுவதோடு அரசின் முயற்சியையும் காட்டுகிறது. சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் மருத்துவப் பகுதியில் பட்டம் பெற்ற மருத்துவர்கள், நாட்டின் பல்வேறு மருத்துவ மனைகளில், பேராசிரியர்களாகவும், கல்லூரித் தலைவர்களாகவும் விளங்குகின்றனர். இன்னும் சிலர், வெளி நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களிலும் மருத்துவமனைகளிலும் பணிபுரிந்து, தமிழகத்தின் பெருமையை உலகறியச் செய்து வருகின்றனர்.

பல் மருத்துவத்திலுள்ள பல்வேறு சிறப்புப் பிரிவுகளில் MDS என்னும் முதுநிலைப் பட்டப் படிப்பை 1966ஆம் ஆண்டு துவங்கி, மருத்துவர்களை அறிவியல் மேதைகளாக்கி வருவது பெருமைக்குரியது. இந்தப் பல் மருத்துவப் பகுதியில் பணிபுரியும் பேராசிரியர்கள் அயல்நாட்டு முறைகளையெல்லாம் கற்றறிந்த வல்லுநர்கள். வளர்ந்து வரும் இந்தத் துறையில் ஆண்டுதோறும் 35க்கு மேற்பட்ட மாணவர்களைப் பட்டப் படிப்புக்கும், 15 மாணவர்களை முதுநிலைப் பட்டப்படிப்புக்கும் அனுமதித்து பல் மருத்துவக் கல்வியை வளமடையச் செய்து வருகின்றனர். பத்துப் பேராசிரியர்களும், 25 உதவிப் பேராசிரியர்களும் இந்தப் புனிதப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



சென்னையில் கோட்டை இரயில் நிலையத்திற்கு எதிராகத் தனியாகப் பல்மருத்துவமனை பணி புரிந்து வருகிறது. பல்வேறு சிறப்புப் பகுதிகளைக் கொண்டு பணிபுரியும் இந்தப் பல் மருத்துவமனைக்குச் சில நாட்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நோயாளிகள் வருகின்றனர். வருகின்ற நோயாளிகளின் தொல்லைகளைக் கேட்டு நோய்க்குறிகளை அறிந்து பல்வேறு பரிசோதனைகளுடன் நோய்களை இன்னதெனக் கண்டறிந்து, அதற்கு வேண்டிய ஆலோசனைகளையும், மருத்துவ சிகிச்சையையும் அளிக்க "வாய் நோய் அறிதல்" என்னும் பகுதி சேவையை செய்படுகிறது.

பல் சொத்தையால் ஏற்படும் குழிகளையும் சிதைவுகளையும் செப்பனிட்டு இழந்த பகுதிக்கு வெள்ளி, தங்கம் ஆகிய உலோகங்களால் அடைப்புகள் செய்வது தேய்ந்த பற்களுக்குப் பிளாஸ்டிக்கில் குப்பிகள் செய்து பற்களின் அழகை நிலைநிறுத்துவது, பற்குழியில் ஏற்படும் சீழகட்டிகளை நீக்கி, பல்லைப் பாதுகாப்பதோடு அந்தச் சீழ்கட்டிகளில் உள்ள கிருமிகள், உடலுக்குள் பரவாமல் தடுத்து, உடல்நலத்தையும் பாதுகாப்பது ஆகிய பணிகளைப் ''பல் பாதுகாக்கும் பகுதி'' பக்குவமாய்ச் செய்து வருகிறது. மாறுபட்ட தாடைவளர்ச்சி, அதனால் ஏற்படும் நிலைமாறிய பற்கள், இவைகளைக் கம்பிகள் வைத்துச் சிகிச்சை செய்து அலங்கோலப் பற்களை அலங்காரப் பற்களாக்கும் அற்புதப் பணியைப் ''பல் சீரமைப்புப் பகுதி'' சிறப்புடன் செய்து வருகிறது.

பல் இழந்தோர் சொல் இழந்தோர்'' ஆவர். அது மட்டுமல்லாமல் பல் இழந்து உணவை அரைக்க முடியாத நிலையில் உள்ள, வயதானோர்க்கும், ஒரு சில வாலிப வயதினருக்கும், அவர் தம் குறைகளை நீக்க, செயற்கைப் பற்களைச் செய்து கொடுக்கும்பணியினைப் ''பல் கட்டும் பகுதி'' சீரிய முறையில் செய்துவருகிறது.

ஈறுகள் தடித்து இடைவிடாத இரத்தம் வருவதும், வாயிலிருந்து ஒருவிதமான வாடை வீசுவதும் பெரும்பாலோருக்குஉண்டு. ஈறு நோய்களைப் போககி, ஈறுகளைப் பலப்படுத்திப் பற்களை அசையாமல் பாதுகாக்க ''ஈறு நோய்ச் சிகிச்சைப்பகுதி'' இடைவிடாது பணிபுரிந்து வருகிறது.

நோயுற்ற பற்களையும், வலிக்கும் பற்களையும், எளிய முறையில், வலியே இல்லாமல் எடுப்பது, வாயிலும் தாடையிலும் ஏற்படும் வளர்ச்சிக் கட்டிகளை அறுவைச் சிகிச்சை மூலம் நீக்குவதும் ஆகிய பணிகளை ''அறுவைச் சிகிச்சைப் பகுதி'' கவனித்து வருகிறது.

மழலை மொழி பேசும் குழந்தைச் செல்வங்களின் பற்களைப் பேண, குழந்தைகளுக்கென்று ஒரு பல் மருத்துவப் பகுதி இயங்கி வருகிறது.

''நோய் நாடி, நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்'' என்னும வள்ளுவரின் பொன்மொழிக்கிணங்க பணியாற்றும் இந்த மருத்துவ மனையில், மருத்துவர்கள் காலை 7 மணிமுதல் 11 மணிவரை வேலை செய்து, புற நோயாளிகளின் பிணியினை, கவனித்து வருவதுடன், 11 மணியிலிருந்து மாலை 4 மணிவரை அவசரக் கேசுகளைக் கண்காணிக்கத் தனியாக ஒரு பகுதியும் செயல்பட்டு வருகிறது.

மாலையிலும் இரவிலும் அடிபட்டும், வேதனையுடனும் வரும் நோயாளிகளைக் கவனிக்க ஒரு பல் மருத்துவர் குழு சென்னைப் பொது மருத்துவமனையில் இரவிலும் பணியாற்றி வருகின்றனர். இருபத்து நான்கு மணி நேரமும் பல் மருத்துவத்தொண்டு நோயாளிகளுக்குக் கிடைக்க இந்தத் துறையில் தக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.



## மாவட்டங்களில் பல் மருத்துவத் தொண்டு:

புகழ்வாய்ந்த சென்னை மாநகரத்தில் மட்டுமல்லாமல், தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனையிலும், வட்டங்களின் மருத்துவ மனைகளிலும் இன்னும் சில கிராம மருத்துவ மனைகளிலும் தகுதி வாய்ந்த பல் மருத்துவர்களை நியமித்து அம் மருத்துவர்களின் வாயிலாக ஆங்காங்கு உள்ள நகர மக்களுக்கும் கிராம மக்களுக்கும் போதிய பல் மருத்துவ வசதிகளைத் தமிழக அரசு கொடுத்து வருகிறது.

தேவைப்படும்போது அம் மருத்துவர்கள் தலைமைப் பல் மருத்துவ மனையோடு தொடர்பு கொண்டுவிரிவான பல் மருத்துவ வசதிகளை மக்களுக்குச் செய்து கொடுத்து வருகின்றனர். தகுதி வாய்ந்த பல் மருத்துவர்கள் இல்லாமல் சிறிய ஊர்களில் மக்கள் பல் நோய்களால் தவித்த காலம் போய், தகுந்த பல் மருத்துவத்தைப் பெற்று நலமோடு வாழ அரசினர் வழி வகுத்துள்ளனா.

## பல்நோய் தடுப்புமுறைத் தொண்டு:

நோயை அறிந்து நோயைக் குணப்படுத்துவதோடு நோய் வராமல் தடுப்பதெப்படி என்பதற்கான அறிவுரைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதும் இம் மருத்துவமனைத் தொண்டுகளில் ஒன்று. நோய்த்தடுப்பு முறைகளைப் பற்றி அவ்வப்போது நோயாளிகளுக்கு நேரடியாக எடுத்துச்சொல்லப்படுகிறது. சிறுசிறு பதிப்புகளாகத்தொகுத்து வெளியிடுவதும் உண்டு. கண்காட்சிகளில், புகைப்பட வாயிலாகவும், மாடல்கள் வாயிலாகவும் மக்களுக்குச் சொல்வதும் உண்டு. மருத்துவர்கள் ஆங்காங்கு நடைபெறும் அறிவியல் கருத்தரங்குகளிலும் சொற்பொழிவுகளிலும், வானொலியிலும் நோய்த் தடுப்பு முறைகளைபற்றிப் விரிவுரை கொடுத்து வருகின்றனர்.

பல் சொத்தை வராமல் தடுக்க, இனிப்புப் பதார்த்தங்களைக் குறிப்பாக சாக்லெட், ஐஸ்கிரீம், மிட்டாய் முதலியவைகளை உண்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இவைகளை வாயில் வைத்துக் கொண்டே குழந்தைகள் தூங்குவது வழக்கம். இதைத் தவிர்க்க வேண்டும்.

பற்களின் குழிகளில் உணவுப் பொருள்கள் தங்காமல் இருமுறை பல் துலக்கிப் பற்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். 'புளோரைடு' கலந்த பற்பசை உபயோகிப்பதிலும், புளோரைடு திரவத்தைப் பற்களில் பல் மருத்துவர்களின் துணை கொண்டு தடவுவதிலும் பற்சொத்தை வராமல் தடுக்க முடியும். சொத்தை ஏற்பட்டால் அது பரவாமல் இருக்க அதை எடுத்துவிட்டு உலோகங்களால் அடைப்பு செய்துவிடவேண்டும். ஈறு நோய்கள், ஈறுகளில் ரத்தக் கசிவு, வாய்த் துர்நாற்றம் இவைகளைத் தடுக்க, பற்களில் படியும் காரைகளை எடுத்துச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். பல் துலக்கிகளைக் கொண்டு ஈறுகளை நன்றாக அழுத்தி விட வேண்டும். பல்லுக்கும் ஈறுக்கும் இடையிலுள்ள பகுதியில் தங்கும் கசடுகளையும், கழிவுப்பொருள்களையும் அகற்ற, மருந்துகளைக் கொண்டு வாய் கொப்பளிக்க வேண்டும். ஈறுகள் பாதிக்கப்படாமலும், நோய்கள் வராமலும் தடுக்க நவீன முறையில் பல் துலக்கும் முறைகளை நோயாளிகள் கையாள வேண்டும்.



தாடையும் பற்களும் நிலை மாறி அலங்கோலமாகக் காட்சி அளிப்பதைத் தடுக்க, விரல் சூப்புதல், வாயால் சுவாசித்தல், பென்சில் கடித்தல் போன்ற பழக்கங்களைத் தவிர்க்க வேண்டும். மருந்துகளால் ஏற்படும் வாய் ரணங்களைத் தடுக்க தைலங்களையும், எரிபொருட்களையும் வாயில் தடவக்கூடாது.

பற்சிதைவுகளைத் தடுக்க, கரி, சாம்பல், செங்கல், மணல் போன்ற பொருள்களைக் கொண்டு பல் துலக்குவதை நிறுத்தவேண்டும்.

வாய்ப்புற்று நோயைத்தடுக்க புகைப்பிடிப்பது, புகையிலைப் போடுவது, மது அருந்துவது, பொடியை வாயில் வைப்பது ஆகிய பழக்கங்களை விட்டொழிக்க வேண்டும்.

பற்கள் கூராக இருந்தால் அது குத்தாமல் இருக்க அதைச் சீராக்கிக்கொள்ள வேண்டும். பால்வினை நோய்கள் புற்றுநோயை வரவழைக்கும் தன்மையுடையவை. இந்த நோய்களை ஆரம்பகாலத்தில் குணப்படுத்தி புற்றுநோய் வருவதைத் தடுக்க வேண்டும்.

''வருமுன்னர் காவாதான்
வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்''

என்ற குறள் மணிக்கு இலக்காக அதற்கான தடுப்பு முறைகள் பல உண்டு.

## கிராம மக்களுக்குப் பல் மருத்துவத் தொண்டு:

உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி, கற்றோர் கல்லார் என்ற மாறுபாடின்றி, ஒவ்வொரு குடிமகனும் நவீன பல் மருத்துவ வசதிகளைப் பெற வேண்டும் என்ற இலட்சியத்தை முன்னிட்டு, கற்றறிந்த பல் மருத்துவர்கள், காலம் கிடைக்கும் போதெல்லாம் கிராமப்புறங்களில் முகாம், போட்டு கிராம மக்களுக்குத் தொண்டாற்றி வருகின்றனர்.

வலிகொடுக்கும் பற்களை எடுப்பது, சொத்தைப் பற்களுக்குத் தற்காலிக அடைப்பு செய்வது, வாய் இரணங்களுக்கு மருந்திடுவது, சீழ்கட்டிகளுக்கு ஊசிபோடுதல், பற்களில் தங்கியுள்ள காரைகளை எடுத்துச் சுத்தம் செய்வது, அவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு ஆலோசனைகள் சொல்வது ஆகிய மருத்துவ முறைகளைக் கிராம மக்களுக்குக் கிராமங்களிலேயே செய்வதில் பல் மருத்துவர்கள் பெருமையடைகின்றனர்.

கிராமங்களில் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பல் துலக்கிகளையும், பற்பசையும் வழங்குவதோடு அவற்றைத் தக்க முறையில் உபயோகிப்பது கற்றுத்தரப்படுகிறது. வாயிலும பற்களிலும் நோய்கள் வராமல் தடுப்பது எப்படி என்பதை 'ஸ்லைடுகள்' தயாரித்து திரைப்படம் காட்டுவதைப் போல உண்மைகளை எடுத்துச் சொல்லும் போது, கிராம மக்கள் உள்ளபடியே பெருமளவுக்கு உற்சாகமடைகின்றனர்.

பல் மருத்துவத்தின் உண்மைகளைத் தொகுத்து ''கிராம மக்களுக்குப் பல் மருத்துவ ஆலோசனைகள்'' என்னும் சிறு வெளியீடுகளை அவ்வப்போது ஆங்காங்கு கொடுத்து வருகிறோம். கிராம மக்களுக்குப் பல் மருந்து தொண்டு புரிவதைப் பெருமளவுக்கு அடிக்கடி செய்ய, நடமாடும் பல் மருத்துவ ஊர்திகளை உபயோகிக்க அரசின் துணை கொண்டு ஒரு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

தமிழக பல் மருத்துவத் துறையின் வெள்ளி விழாவையொட்டி தமிழகம் முழுவதிலும் பல் வேறு கிராமங்களுக்கு அனுபவம் வாய்ந்த பல் மருத்துவர்கள் சென்று பல் மருத்துவ முகாமிட்டு பெருமளவுக்குச் சிகிச்சை செய்த அருஞ்செயல், தமிழகம் கண்ட தனிப்பெரும் செயலாகத் திகழ்கிறது.



பொது நல இயக்கங்கள் நடத்துகின்ற கிராமத் தொண்டுகளில் பல் மருத்துவர்களும், பல் மருத்துவம் பயிலும் மாணவர்களும் பெருவாரியாகப் பங்கேற்று பல் மருத்துவத் தொண்டாற்றுவதன் மூலம் பல் வலியால் அவதிப்படும் கிராம மக்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. அது மட்டுமல்லாமல் மூடப் பழக்க வழக்கங்களுக்குச் செவி சாய்த்து வந்த கிராமமக்கள், எருக்கம்பாலைப் பல் வலிக்கு வைப்பதும், வீக்கத்திற்குச் சூடு போடுவதுமான பழக்கங்களைத் தற்போது தவிர்த்து வருகின்றனர்.

## பல் மருத்துவத்தில் ஆராய்ச்சி:

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றத்தில் ''அறிவியல் ஆராய்ச்சி'' இன்றியமையாதது. காரணங்கள் தெரியாத நோய்களின் காரணங்களைக் கண்டறிவதிலும், எளிய முறையில் புதிய சிகிச்சைகளை உருவாக்குவதிலும், நோய்களைக் குணப்படுத்த மருந்துகள் இல்லாத நிலையில், புதிய மருந்துகளைக் கண்டுபிடிப்பதிலும், புற்றுநோய் ஆராய்ச்சி, ஈறு நோய் ஆராய்ச்சி, பல் சொத்தை ஆராய்ச்சி, அறுவைச் சிகிச்சை செய்ய ஆராய்ச்சி என்றவாறு பல்வேறு ஆராய்ச்சிகளில் பிற மாநில மருத்துவமனைகளுடனும், வெளிநாட்டுப் பேராசிரியர்களுடனும் தொடர்புகொண்டு ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறோம். இந்த மருத்துவமனையில் நடைபெறும் பல் சிகிச்சைக்கான ஆராய்ச்சிகளின் முடிவுகளை, அமெரிக்கா, ஜெர்மன், இங்கிலாந்து, இலங்கை போன்ற நாடுகளில் நடைபெற்ற அறிவியல் கருத்தரங்குகளில் சமர்ப்பித்து தமிழகத்தின் பெருமையை அயலவர் வியக்க மற்ற நாடுகளிலும் தமிழக பல் மருத்துவர்கள் பரப்பியுள்ளனர்.

தமிழகத்தில் வெள்ளி விழாக் கொண்டாடிய பல் மருத்துவம் பிற நாட்டு அறிவியல் முறைகளுக்கு ஈடுகொடுத்து வெற்றி நடை போடுகிறது. நவீனப் பல் மருத்துவ முறைகளை நாட்டு மக்களுக்கு வாரி வழங்க பல் மருத்துவர்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள். இப் பல் மருத்துவத்தின் உண்மைகளையும், தத்துவங்களையும் புரிந்துகொண்டு, தமிழக மக்கள் பல் மருத்துவ வசதிகளைப் பெற்று நேரயற்ற பல்லே குறைவற்ற செல்வம் எனக்கருதி, பல் நலம் காப்பார்களாக!




# எதிர்நோக்கும் பெரு வெற்றி

வெ. நாமதேவன்,

துணை இயக்குநர் (குடும்ப நல விளம்பரம் )

"மக்கள் தொகைப் பெருக்கம் மதுவைப் போல் கேடுபயக்கும்"
'சிறப்பான வாழ்வுக்குச் சிறு குடும்ப நெறி ஏற்போம்'

என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் குடும்பநலக் கருத்துக்களுக்கு ஏற்ப, குடும்ப நலத்திட்டம் மக்களிடையே வேரூன்றி வருகிறது. குடும்ப நலத்திட்டம் தேவை-வாழ்வுக்கு இன்றியமையாதது - அளவான குடும்பம் அமைத்து வாழ்ந்தால் வளமாக வாழலாம் - தாய் சேய் நலமும், தந்தை நலமும் காக்க உதவுவது இத்திட்டம் - சமுதாயத்திற்குப் பொதுவான அமைதியையும், அரசின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளின் வாயிலாகக் கிட்டும் நன்மைகளால் ' மக்களுக்கு நிறைவான வாழ்வையும் கிட்டச் செய்யவல்லது குடும்ப நலத் திட்டம் என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமே இல்லை.

## தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும்

தனக்கே உரிய வல்லமையோடும், ஆற்றலோடும், சிறப்போடும் தமிழ்நாடு அரசு குடும்ப நலத்திட்டத்தைக் கட்டாயமில்லாமல், அச்சுறுத்தல் இன்றி மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது என்பது அனைவருமறிந்த உண்மையாகும். தமிழகத்தில் குடும்ப நலத்திட்டம் தங்குதடையின்றிச் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றால், அதற்குரிய செம்மையான பாதையமைத்துத் தந்த பெரும் புகழ் தந்தை பெரியார் அவர்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும் சாரும்.

தந்தை பெரியார் அவர்களைப் போலவே கடந்த செப்டம்பரில் நூற்றாண்டு விழாவுக்கு உரியவரான குடும்ப நலத்திட்டத்தின் உலக மூத்த தலைவரான திருமதி மார்கரட் சாங்கர் அவர்கள் உலக அளவில் பல எதிர்ப்புகளுக்கிடையே இத்திட்டத்தைப் பரப்பி வந்த நேரத்தில், இந்தியாவில் குடும்ப நலத்திட்டத்தை மக்களிடையே பரப்பிப் பெரும் பிரச்சாரம் செய்தவர் - 'கர்ப்ப ஆட்சி' என்ற புத்தகத்தைவெளியிட்டவர் - கட்டுரைகளையும், தலையங்கங்களையும், தான் நடத்திய நாளிதழில் எழுதியவர். தந்தை பெரியார் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கிராமங்களுக்கு நவீன வசதிகள் :

தேசியத் திட்டமாகக் குடும்ப நலத்திட்டம் அறிவிக்கப்பட்ட காலம் முதல் தமிழ்நாடு இத்திட்டத்தை உணர்வுப் பூர்வமாகச் செயல்படுத்தி வருகிறது. தற்காலிகக் கருத்தடை முறைகளைப் பின்பற்றுவதற்கும், குடும்பநல நிரந்தரச் சிகிச்சை செய்துகொள்வதற்கும், தாய் - சேய் நலம் காப்பதற்குமான மருத்துவ வசதிகளை அளிப்பதற்கும் அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள், உள்ளாட்சி






நிறுவனங்களைச் சார்ந்த மருத்துவமனைகள் அனைத்திலும், குறிப்பிட்ட தன்னியக்க நிறுவனங்களைச் சார்ந்த மருத்துவமனைகளிலும் இலவச ஏற்பாடுகளை, இந்திய அரசின் நூறு சதவிகித நிதி உதவியுடன் நம் அரசு செய்து தந்துள்ளது. அதேபோல் உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைத் திட்டமும் செயற்படுத்தப்பட்டு, அதற்குத் தேவையான கருத்தடை மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. தாய்மார்கள் பயிற்சிபெற்ற மருத்துவர்களிடம் இலவசமாகவும் ரகசியமாகவும் கருச்சிதைவு செய்து கொள்ள 117 அரசு மருத்துவமனைகளிலும், 24 தனியார் மருத்துவ நிலையங்களிலும் அரசு வசதி செய்து தந்துள்ளது. மருத்துவச்சிகள் (DAIS) பயிற்சித் திட்டத்தின் வாயிலாகக் கிராமப்புற மக்களுக்கு நவீன மருத்துவப் பேறுகால வசதிகள் கிட்டும்படி செய்துள்ளது அரசு. மகப்பேற்றிற்குப் பிறகு குடும்ப நலம் பேணும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இலக்கும் செயல்முறையும்:**

நடப்பு '79-80 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர்களைக் குடும்பநல நிரந்தரச் சிகிச்சை ஏற்குமாறு செய்ய வேண்டுமென்றும், 85 ஆயிரம் கருத்தடை வளையங்கள் பொருத்தியாக வேண்டுமென்றும், ஒரு இலட்சத்து 1200 பேர்களை மரபு வழியிலான தற்காலிகக் கருத்தடை முறைகளைப் பின்பற்றுமாறு செய்ய வேண்டுமென்றும், 32500 தாய்மார்களை, உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்தச் செய்ய வேண்டுமென்றும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வகுத்தளிக்கப்பட்டுள்ள இலக்கினையும் மீறி சாதனை ஏற்படுத்தத் தமிழகம் முனைந்துள்ளது.

வெற்றி ஈட்ட வேண்டும்-இலக்கினை எட்டவேண்டும் - இலக்கையும் மீறிய சாதனையை ஏற்படுத்த வேண்டும் என்பது இத்திட்டச் செயலாக்கத்தில் ஈடுபட்டுள்ளோரின் பெருநோக்கு. என்றாலும் கட்டாயமோ, அச்சுறுத்தலோ இன்றி இத்திட்டத்தை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என அரசு பண்ணிப் பண்ணிக் கூறிவருவதை நினைவில் நிறுத்திப் பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றன. மிகவும் குறிப்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டியது, ஆர்வம் மிகுதியால் தவறு எதுவும் நடைபெறாமல் மக்களே விரும்பி ஏற்கும் வகையில் இந்தப் பணி மிகமிக எச்சரிக்கையோடு நடைபெற வேண்டும் எனத் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பியுள்ள நேர்முகக் கடிதத்தில் கூறியிருப்பது கவனத்தில் கொள்ளப்பட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வகையில் குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றிட குடும்பநல - தாய் - சேய் நலக் கல்வியை முனைப்போடு பரப்பிட வேண்டியது அவசியமாகிறது. குடும்பநல விளம்பரப் பணிகளை விறுவிறுப்போடு செயல்படுத்திட வேண்டியது இன்றியமையாததாகிறது. காடு திருத்தி கழனியாக்கி, உரமிட்டு, நிலத்தைப் பண்படுத்திய பின், பயிரிட்டு அறுவடை வரையிலும் பாதுகாப்பது போன்ற அரும் பணி-கடுமையான பணி-குடும்ப நல விளம்பரப் பணியாகும்.

திட்டத்திற்கு எதிராக மக்களிடையே நிலவும் கருத்துக்கள், மத நம்பிக்கைகள், பழக்கவழக்கங்களின் குறுக்கீடுகள், ஐயப்பாடுகள், அச்ச உணர்வுகள், கூச்ச சுபாவம், 'நமக்கென்ன வந்தது' - 'நாமும் பின்பற்றியாக வேண்டுமா' என்ற நினைப்புகள் அனைத்தையும் மாற்றி -மக்கள் உள்ளங்களைப் பக்குவப்படுத்தி நித்தம் தாய்மார்களையும் தந்தைமார்களையும் சந்தித்து உரையாடி திட்டத்தின்பால் நம்பிக்கை ஏற்படுத்தி, குடும்ப நலத் திட்டத்தைத் தன்னிச்சையாக ஏற்க ஆரம்பச் சுகாதார நிலையம் அல்லது மருத்துவமனை வரை அழைத்து வந்து, ஏற்ற பின் முறையாக அனுப்பி வைத்து, தொடர்ந்த கவனிப்பை (Follow Up) நல்கிப் பணியாற்றிட வேண்டிய பெரும் பொறுப்பு (Motivational Staff) என அழைக்கப்படும் குடும்பநல விளம்பரப் பணியாளர்களைச்சாரும். இந்திய அரசின் வழிப்படுத்தலுக்கிணங்க தமிழ்நாடு அரசின் ஒப்புதலோடு குடும்பநல விளம்பரப்பணிகள் இங்கு செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**விளம்பரங்கள் :**


கடந்த ஆண்டிற்கு முந்திய ஆண்டு குடும்பநல விளம்பரப் பணிகளுக்கென்று மூன்று இலட்ச ரூபாய் ஒதுக்கிய இந்திய அரசு, கடந்த ஆண்டு ரூ.15.88 இலட்சம் தந்தது. இவ்வாண்டும் அதே அளவு நிதி வழங்கப்பட்டுள்ளது. அத்தொகை முழுவதும் செலவிடப்பட்டு குடும்ப நலத்திட்டப் பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டன. இதைத் தமிழ்நாடு அரசும், இந்தியஅரசும் பாராட்டியுள்ளன. மற்ற மற்ற மாநிலங்களைச் சார்ந்தோரும் தமிழகம் வந்து, குடும்பநலத்திட்ட விளம்பரப் பணிகள் எப்படி ஆற்றப்படுகின்றன - அதற்காகக் கடைப்பிடிக்கப்படும் உத்திகள் என்ன என்பதைக் கண்டறிய இருக்கின்றார்கள் என்றால், இந்தியாவிலேயே குடும்பநலத்திட்ட விளம்பரப் பணிகள் தமிழகத்தில் சிறப்பாக ஆற்றப்பட்டு வருகின்றன என்பது பொருள்.

நடப்பு ஆண்டில் இந்த விளம்பரப்பணிகளுக்கென இயல்,இசை, நாடகம் ஆகிய முத்தமிழின் வாயிலாகக் குடும்பநலத்திட்ட விளம்பரப் பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றன. கலைநிகழ்ச்சி, வில்லுப் பாட்டு, பொம்மலாட்டம், பொதுக்கூட்டங்கள், கருத்தரங்குகள், நாடகங்கள் போன்ற இன்னபிற முறைகள் முறையாகப் பயன்படுத்தப்படுகின்றன. சிறு சிறு கருத்துக் காட்சிகள் தொடர்ந்து நடத்தப்படுவதுடன், தமிழ்நாடு அரசு மாவட்டங்களில் நடத்தி வரும் கண்காட்சிகளில் பங்கேற்று சிறந்தமுறையில் குடும்பநல அரங்குகள் அமைத்து மக்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தொலைக் காட்சி, வானொலி உள்ளிட்ட தமிழகத்தில் இருந்து பணியாற்றி வரும் மத்திய அரசின் தகவல்-ஒலிபரப்புத்துறையினர் அனைவரும் நல்ல ஒத்துழைப்பு நல்கிவருகின்றனர். அவர்களோடு இணைந்து ஒருங்கிணைந்த பணிகள் விறுவிறுப்போடு ஆற்றப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் குடும்பநல விளம்பரப் பணிகள் மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தி, திட்ட வெற்றிக்கு உதவி வருகிறது. இதை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களே குறிப்பிட்டுள்ளார்கள்.




வாடிக்கையாளர்களுக்கு எமது இதயங்கனிந்த

தீபாவளி நல்வாழ்த்துக்கள் !





'கட்டாயமோ, அச்சுறுத்தலோ இல்லாமல் மக்கள் தாங்களாகவே மனமுவந்து முன் வந்து குடும்ப நலத்திட்டம் ஏற்பதற்கு மக்களிடையே குடும்ப நல விளம்பரப் பணிகளால் மனமாற்றம் ஏற்படுத்தப்பட்டு வெற்றி கிட்டச் செய்யப்பட்டிருப்பதுபோல், மனமாற்றத்தின் மூலம் மக்கள் மதுவிலக்குக் கொள்கையை ஏற்குமாறு செய்ய வேண்டும்'' என மாண்புமிகு தமிழக முதல்வர் திருஎம்.ஜி.ஆர். அவர்கள் கருத்தறிவித்திருப்பதே, குடும்பநலத் திட்ட விளம்பரப்பணிகள் ஆற்றப்படும் முறைகளுக்கும், அதற்கெனப் பின்பற்றப்படும் உத்திகளுக்கும் கிட்டிய நற்சான்றிதழ் எனக் கருதிப் பெருமைப்பட்டு ஊக்கத்தோடு தொடர்ந்து பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றன.

கடந்த செப்டம்பரில் இந்திய அரசு கூறிய'தற்கிணங்க வழக்கம்போல் குடும்பநல இருவாரவிழா சிறப்பாக எடுக்கப்பட்டுள்ளது

சிறப்பாக கிராம மக்களிடையே திட்டத்தைப் பரப்புவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிராம மக்களிடையே செல்வாக்குப் பெற்ற - கிராம மக்களின் நம்பிக்கையைப் பெற்ற கிராமத் தலைவர்கள், சமூக நலத்தொண்டர்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகத் தலைவர்கள், தாய்மார்கள் ஆகியோருக்கான குடும்பநலப் பயிற்சி முகாம்கள் 1025 இந்திய அரசின் நிதி உதவியோடு தமிழகத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. இப்படிப் பல்வேறு வழிகளில் திட்டத்திற்கு மக்கள் ஆதரவு திரட்டப்பட்டு சிறு குடும்ப நெறியை வாழ்வின் கூறாக மக்கள் தன்னிச்சையாக ஏற்குமாறு செய்யப்பட்டு வருகிறது. மருத்துவர்களும் அவர்களைச் சார்ந்தோரும் தொண்டுள்ளத்தோடு, கருணையும், கனிவும் காட்டி, இன்சொல் பேசி தாய்மார்களிடமும், தந்தைமார்களிடமும் குடும்பநலத் திட்டத்தின்பால் நம்பிக்கையூட்டி திட்ட வெற்றிக்கு உதவி வருகிறார்கள்.

இந்தியாவிலேயே முதன் முதலாக இத்திட்டக் கருத்துக்களை அனைத்துக் கட்சியினரும் ஒரே மேடையில் இருந்து ஆதரித்துப் பேசி ஆதரவு திரட்டியது தமிழகத்தில்தான். மத அடிப்படையில், வலுவான எதிர்ப்பு ஒன்றும் இங்கில்லை. எல்லா முனைகளிலிருந்தும் குடும்பநலத் திட்டத்திற்கு நல்லாதரவு கிட்டி வருகிறது.


இந்த ஆதரவுகளைக் கொண்டு நடப்பு ஆண்டில் இலக்கு மீறிய சாதனையை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குடும்பநல நிரந்தரச் சிகிச்சை ஏற்கும் தந்தைமார்களுக்கு ரூ.75 தாய்மார்களுக்கு ரூ. 85- ஈட்டுத் தொகை வழங்கப்படும் என அறிவித்துள்ள அரசு. சிறுகுடும்ப நல முகாம்களையும், குடும்பநல முனைப்பு இயக்கங்களையும் நடத்த மாவட்ட ஆட்சித்தலைவர்களை அனுமதித்துள்ளது.

மக்களின் தன்னிச்சையான பேராதரவுடன் இலக்கு மீறிய சாதனையை ஏற்படுத்தி இத்திட்டச் செயலாக்கத்தில் தமிழகம் பெருவெற்றியை ஈட்டும் என எதிர்நோக்கலாம்.

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத்துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித்தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI


# சர்க்கரை வியாதியா?

# பயப்பட வேண்டாம்!


**பேராசிரியர் டாக்டர்**
**பி. கிசார் அகமது**
**கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி**


பெரும்பாலும் சர்க்கரை வியாதி பணக்காரர்களுக்குத் தான் வரும் என்று அநேகம் பேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது சரியல்ல. இன்று நமது நாட்டில் மிகுந்து வரும் நோய்களில் ஒன்றாக சர்க்கரை வியாதி விளங்குகிறது. ஆனால் இந்த வியாதி புற்று நோயைப் போலக் கொஞ்சம் கொஞ்சமாக உடலை அரித்துச் சாப்பிடக்கூடியது அல்ல. மாரடைப்பு போல் திடீரென உயிரைப் போக்க வைக்கும் வியாதியுமல்ல.

சர்க்கரை வியாதி இதனால் தான் வரும் என்று குறிப்பிட்டுச் சொல்லும்படியாக எந்தக் காரணமும் இல்லை. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. மூல காரணங்களைக் கண்டுபிடிக்க உலகம் முழுவதும் ஆராய்ச்சி நடந்து கொண்டுதான் இருக்கிறது.

பொதுவாக சர்க்கரை வியாதியை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

**(1) நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படுவது:**

இவர்களுக்குச் சர்க்கரை வியாதி ஏற்பட உடல் பருமன், மனக் கவலை, உடலுக்கு அதிக வேலையின்மை, அதிக உணவு உட்கொள்ளுதல், சுற்றுப்புறத் தொந்தரவுகள் ஆகியவை காரணங்களாகின்றன. இவர்களுடைய உடம்பில் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும் இன்சுலின் (insulin) என்னும் திரவம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் சரியான முறையில் வேலை செய்வதில்லை. அதனால்தான் சர்க்கரை வியாதி வருகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு அலோபதி முறையைத் தவிர எந்த முறையில் சிகிச்சை அளிக்காலும் உடற்பயிற்சியும், உணவுக் கட்டுப்பாடும் அவசியமாகத் தேவை. அதேபோல் எந்தவித மருந்தும் இல்லாமல் உடற்பயிற்சி யோகாசனம் மூலம் சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்தலாம்.

சர்க்கரை வியாதி ஒருவருக்கு இருக்கிறதா இல்லையா என்பதைக் கீழ்க்கண்ட அறிகுறிகளின் மூலம் தெரிந்து கொள்ளலாம், அதிக தாகம், அதிக பசி, அதிகமான சிறுநீர் அடிக்கடி கழிப்பது, உடலில் அரிப்பு ஏற்படுதல், ஆண்மையின்மை, அதிகச் சோர்வு, கண் பார்வைக் கோளாறு, நெடுநாளாகப் புண், காயம் ஆறாமல் இருத்தல் ஆகியவை நீரிழிவு நோயின் முக்கிய அறிகுறிகளாகும். இதில் ஏதாவது ஒரு அறிகுறி உங்களுக்கு ஏற்பட்டாலும் மருத்துவமனையில் சென்று சோதனை பண்ணிக் கொள்வது மிக நல்லது.

**சிறுவர்களுக்கு ஏற்படுவது:**

இவர்கள் உடம்பில் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும் இன்சு





லின் திரவம் கொஞ்சம்கூடக் கிடையாது. இன்சுலின் இல்லாததற்குக் காரணம்:

(1) பரம்பரையாக ஏற்படுவது.

(2) ''வைரஸ்'' போன்ற கிருமிகளால் ஏற்படுவது.

(3) இன்சுலின் உற்பத்தியாகும் உறுப்பில் கல் உருவாதல்,

(4) புரதச் சத்துள்ள உணவு இல்லாமை,

இதல்லாமல் மற்ற காரணங்களையும் கண்டுபிடிக்க ஆராய்ச்சி நடந்து கொண்டுதான் இருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு வாழ்க்கை முழுவதும் இன்சுலின் மருந்து கொடுத்துத்தான் ஆக வேண்டும். சிறுவர்களுக்கு ஏற்படும் சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்த அலோபதி முறையைத் தவிர வேறு எந்த முறையிலும் மருந்து கிடையாது. சொல்லப் போனால் இன்சுலின் மருந்துக்குச் சமமாக வேறு எந்த வைத்திய முறையிலும், இதுவரை எந்த மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. சிறுவர்களுக்கு ஏற்படும் சர்க்கரை வியாதிக்கு ''ஜீவனைல் டயபடிஸ்'' (Juvenile Diabetes) என்று பெயர், அதிக பசி, அதிக தாகம், அடிக்கடி சிறு நீர் கழித்தல், எவ்வளவு அதிகமாகச் சாப்பிட்டாலும் எடை குறைந்து கொண்டே போகுதல் ஆகியவை சிறுவர்களுக்குச் சர்க்கரை நோய் இருக்கிறது என்பதற்கு அறிகுறிகளாகும். இவர்கள் சிறுநீரில் அதிகமாகச் சர்க்கரை இருப்பதால், சிறுநீர் கழித்த இடத்தில் எறும்புகள் அதிகமாக மொய்க்கும். சிறுவர்களும் மேற்கூறிய அறிகுறிகள் ஏதாவது இருந்தால் மருத்துவமனைக்கு உடனே சென்று பரிசோதனை பண்ணிக் கொள்வது நல்லது.

நகரிலுள்ள எல்லா மருத்துவமனைகளிலும் சர்க்கரை வியாதி உள்ளவர்களைக் கவனிப்பதற்கென்றே தனியாக பகுதி உள்ளது. குறிப்பாக, சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில், 'நீரிழிவு நோய் ஆராய்ச்சிக் கழகம்' ( Diabetic Research cell ) என்ற பெயரில் தனியாக ஒரு பகுதி ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது. 1969-இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பகுதி விடுமுறை நாட்களே இல்லாமல் இயங்கி வருகிறது.

இந்த நீரிழிவு ஆராய்ச்சிக் கழகத்துக்கு வருகின்ற நோயாளிகளில் கிட்டத் தட்ட 80 சதவீதத்தினர் ஏழைகளும், ஓய்வூதியம் பெறுபவர்களும் கிராமத்திலிருந்து வருபவர்களுமே, இரத்தச் சோதனைகளையும் மற்றும் சில சோதனைகளையும் செய்வதற்காகச் சோதனைக் கூடம் ( Laboratory ) ஒன்று அலுவலகம் செல்பவர்களுக்குச் சவுகரியமாக இருக்க வேண்டுமென்பதற்காகக் காலை 7 மணியிலிருந்து மதியம் 1 மணி வரை (விடுமுறை நாட்கள் தவிர) இங்கு இயங்கி வருகிறது. எல்லாச் சோதனைகளும் இங்கு இலவசமாகச் செய்யப்படுகின்றன. தூரத்திலிருந்து வருபவர்களுக்கு ஏதுவாக சோதனைகளின் முடிவுகளையும், சிகிச்சை முறையையும் அஞ்சல் மூலமாகத் தெரியப்படுத்தப்படுகிறது.

இன்சுலின் ஊசியையும், மாத்திரையையும் இலவசமாக வருடத்தின் 365 நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். இங்கு வரும் நோயாளிகளுக்கு ஒரு புத்தகம் கொடுக்கப்பட்டு அதில் அவருடைய இரத்தப் பரிசோதனையின் முடிவு, எடுத்துக் கொள்ள வேண்டிய மருந்து, உணவு முறை ஆகியவையெல்லாம் பதிவு செய்யப்படுகிறது. நோயாளி எந்த ஊருக்குச் சென்றாலும், தொடர்ந்து வேண்டிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள இது சௌகரியமாக இருக்கும்.

சர்க்கரை வியாதி உள்ள ஒருவர் மேற்கூறியபடி உணவுக் கட்டுப்பாடு மருந்து எடுத்துக் கொள்ளுதல். தேகப் பயிற்சி ஆகியவைகளைச் சரிவர செய்து வந்தால் சர்க்கரை வியாதியை அறவே கட்டுப்படுத்தி, ஒரு சாதாரண மனிதன் வாழ்கின்ற நாட்களை விட அதிகமாகவே வாழலாம். சிகிச்சையைச் சரிவர, முறைப்படி செய்யாவிட்டால் இந்த வியாதி உடலிலுள்ள எல்லாப் பாகங்களையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பாதித்து கடைசியில் சாகச் செய்து விடும். அதற்காகத்தான் இதை ஆரம்ப காலத்திலேயே கண்டுபிடித்து, தகுந்த சிகிச்சையை ஒழுங்காக எடுத்துக் கொள்ளுதல் மிகவும் நல்லது.

ஏறத்தாழ 10,000-க்கும்மேலாக நோயாளிகள் வருகின்ற இந்த ஆராய்ச்சிக் கழகத்திற்கு இன்னும் சிறந்த முறையில் பணியாற்ற போதிய வசதிகள் இல்லை. இந்த சர்க்கரை வியாதி ஆராய்ச்சிக் கழகத்திற்குத் தனியாக ஒரு கட்டடம் கட்ட 1973-இல் சர்வராயா சர்க்கரை கம்பெனி ரூபாய் 50,000 மும், 1978-இல் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்களின் ஏற்பாட்டில் ஸ்ரீ அனுமந்தராவ் தரும நலக் குழு ரூ. 1,50,000 மும் நன்கொடையாகக் கொடுத்தனர்.



தாயான ஒரு பெண், தான் பெற்றெடுத்த குழந்தை மிகப் பெரியதாகவும், அதிக எடையுடன் பிறந்ததாகவும் மற்றவர்களிடம் சொல்லி சந்தோஷப்படுகிறாள். அதனால் கேட்டவர்களும் சந்தோஷப்படுகிறார்கள். உண்மை என்னவென்று சொல்லப் போனால் இந்த மாதிரி பெரியதாக அதிக எடையுடன் குழந்தை பிறந்தால் பெற்ற தாய்க்குச் சர்க்கரை வியாதி இருக்க வேண்டும் அல்லது பிற்காலத்தில் எப்பொழுதாவது சர்க்கரை வியாதி வரக்கூடும் என்று அர்த்தம். எனவே, குடும்பத்தில் முன்னோர் யாருக்காவது சர்க்கரை வியாதி இருந்திருந்தால் சந்ததியில் வரக் கூடியவர்கள் தங்களுக்கு இந்த வியாதி வராமல் இருக்க என்ன செய்யவேண்டுமோ, அதைச் செய்து வர வேண்டும்.

உதாரணமாக, உடலுழைப்பைக் குறைக்கக் கூடாது. அடுத்த பஸ் ஸ்டாப் போவதற்குக்கூட பஸ்ஸிலேயே போவதைத் தவிர்த்து நடந்து செல்லுதல், தன்னுடைய துணியைத் தானே துவைத்தல், மாடிப்படி ஏறுதல், சமையல் வேலைகளைத் தானே செய்தல் இன்னும் மற்றும் அன்றாட வேலைகளை நாமே செய்து வந்தால் எந்த நோயும் வராது. இப்படி எதுவும் செய்ய சந்தர்ப்பம் இல்லையென்றால் ஒரு மணி நேரம் தினமும் நடந்தால்கூட போதும்.

அடுத்தது, உணவுக் கட்டுப்பாடு. மைதா மாவு, சர்க்கரை, பாலிஷ் செய்யப்பட்ட அரிசி, வனஸ்பதி போன்றவைகளை அதிகமாக, தவிர்க்க வேண்டும். கைக்குத்தல் அரிசி, கோதுமை, கேழ்வரகு, சோளம், கம்பு, வெல்லம் போன்ற பொருட்களை அதிகமாகச் சாப்பிட்டுப் பழகிக் கொள்ள வேண்டும், சாக்லேட், கேக், ஐஸ்-கிரீம், ஸ்வீட்ஸ் ஆகியவைகளைக் குழந்தைகளுக்கு எவ்வளவுக்கெவ்வளவு குறைத்துக் கொடுக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு உடலுக்கு நல்லது.

இந்த நாகரிக உலகில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் சுற்றுப்புறத் தொந்தரவுகள், மனக் கவலை, உணர்ச்சி வசப்படுதல், வீட்டுச் சூழ்நிலை போன்றவைகள் அதிகமாக ஏற்பட வாய்ப்புண்டு. மேற்கூறியவைகளேகூட சர்க்கரை வியாதியை உண்டு பண்ண ஒரு காரணமாக இருக்கலாம். மனக் கவலையை ஒழிக்க மூன்று வழிகள் உள்ளன.

(1) குடித்தல் (2) மருந்து உட்கொள்ளுதல் (3) தெய்வ வழிபாடு இதில் முதல் இரண்டும் சர்க்கரை வியாதிக்குக் கேடு விளைவிக்கும் செயலாகும். எஞ்சியிருக்கும் தெய்வ வழிபாடு—அதாவது அவரவர்கள் இந்த உலகத்தை மறந்து தங்கள் தெய்வங்களைத் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரம் நினைத்தாலே மனக்கவலை தன்னால் போய்விடும். சர்க்கரை வியாதியும் வராமல் போய்விடும்.

இதயமும், சர்க்கரை வியாதியினால் பாதிக்கப்படுகின்ற கண்ணும் எவ்வளவு ஒரு மனிதனுக்கு முக்கியம் என்பதை உணர்ந்து, தமிழக அரசும் தமிழ்நாட்டில் எத்தனைப் பேர் சர்க்கரை வியாதியினால் கஷ்டப்படுகிறார்கள் என்பதைக் கண்டு பிடித்து அவர்களுக்குத் தகுந்த சிகிச்சையை அளிக்கவும் உதவி செய்து வருகிறது.

மாறுபாடு இல்லாத உண்டி; மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

மாறுபாடில்லாத உணவை அளவு மீறாமல் மறுத்து அளவோடு உண்டால், உயிர் உடம்பில் வாழ்வதற்கு இடையூறான நோய் இல்லை. —திருக்குறள்.

# தொழுநோய் - சில உண்மைகள்

டாக்டர்
சி. எஸ். கங்காதரசர்மா
துணை இயக்குநர்
(தொழு நோய்)
மருத்துவத் துறை.

**தோ**ழுநோய் என்றவுடனே மக்களது உள்ளத்திலே உருவாவது, கை கால்களின் விரல்கள் குறைப்பட்டோ அல்லது வளைந்தோ தோன்றும் ஓர் உருவம்தான். சாதாரணமான எந்த விதமான அங்கக் குறைபாடுகள் இல்லாத மானிட உடலிலும் தொழுநோயின் அறிகுறி இருக்கலாம் என்ற எண்ணம் ஏற்படுவதில்லை. ஏனெனில் நீண்ட நெடுங்காலமாகத் தொழுநோய் என்றால் குறையும் தன்மை' வாய்ந்த நோய்; ஆதலின் அங்கக் குறைவுகள் இருந்தால்தான் தொழு நோயாக இருக்கும் என்ற ஆழமாக ஊடுருவிப்போன பழமையான மூட எண்ணம் மக்களது உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்ள்ளது.

மேலை நாட்டிலிருந்து வந்து சமூகப்பணியில் ஈடுபட்டு இருப்பவரும், மேலைநாட்டில் நிதி வசூலிப்பதற்காக விளம்பரச் சாதனங்கள் தயாரிக்கும் பொழுது அங்குள்ளோரின் கருணை உள்ளத்தைக் கவருவதற்காக முற்றிய நிலையில் உள்ள அங்கங்கள் இழந்து உருமாறி பரிதாபத்திற்குரிய, அருவருக்கக்கூடிய உடல் நிலை உள்ளோரைத்தான் படம் பிடித்துக் காட்டியுள்ளார்கள். அப்படங்களைப் பார்க்கும் போது கல்நெஞ்சம் படைத்தவர்கள்கூட மனம் இளகி நிதியை வாரி வழங்குவார்கள்.

ஆம், இந்நோய் மானிட உடலின் உறுப்பினைக் குறையச் செய்யும்சக்திவாய்ந்த தான். ஆனால் நோயின் அறிகுறி கண்டோர் அவ்வளவு பேரையும் அவ்வாறு செய்வதில்லை.

படம் ஒன்றினைக் (Fig 1) கவனித்துப் பாருங்கள். அழகிய ஒரு சிறுமியின் முகம். அவ்வழகிய முகத்திலே காணுவது ஒரு சிறு வட்டமான நிறமாற்றமுள்ள படை. சிந்தித்துப் பாருங்கள்! இது தொழுநோயின் அறிகுறியாக இருக்குமா? உங்களது உள்ளத்தில் இந்நோய்தான் என்பதற்கான எந்தவிதமான ஐயங்களும் உங்களுக்கு ஏற்படாது. ஏனென்றால் உங்களது எண்ணம் முழுவதும் தொழுநோய் உள்ளவர்கள் உடலிலே ஏதேனும் குறைவுகள் இருக்கும் என்ற ஆணித்தரமான மூட நம்பிக்கை தான்.



படம்-1

இத்தொழுநோய் ஓர் நுண்ணிய கிருமியால் உருவாகிறது. இந்நோய் எவ்வாறு பரவுகிறது. என்று நிச்சயமாகக் கூற இயலவில்லை. எவ்வாறெல்லாம் பரவலாம் என்று கூறுகிறார்களே அன்றி, எவ்வாறு பரவுகின்றது என்று மாபெரும் மருத்துவ மாமேதைகளாலும் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. இருப்பினும் நடுத்தர வயது(Middle aged) முதிர்ந்த வயது ( Old aged ) உள்ளவர்களை இந்நோய்க் கிருமி அணுகுவதில்லை. எப்படி என்றால், மேலை நாட்டிலிருந்து ஏராளமான மருத்துவர்களும், மருத்துவரில்லாப் பணியாளர்களும் இப்பணியில் பல ஆண்டுக் காலமாக ஈடுபட்டு உள்ளார்கள். இருப்பினும் இந்நோயின் அறிகுறி கண்டதாக எந்த விதமான தகவலும் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

ஏனென்றால், வயது வந்தவர்கள் உடலிலே இந்நோயினைத் தடுக்கும் உயிர் அணுக்கள் காணப்படுவதால், அவர்களை இந்நோய்க் கிருமிகள் உடலிலே உட்புகுந்தாலும் உடலில் எந்த விதமான மாறுதல்களையும் விளைவிப்பதில்லை. வயது வந்தவர்களின் உடலிலே இக்கிருமியை உட்செலுத்தினால் நோய் வருமா என்று 140-க்கு மேற்பட்ட பரிசீலனைகளைச் செய்தார்கள். இச்சோதனையில் அதிதீவிரத் தன்மை வாய்ந்த, ஏராளமாகக் கிருமிகள் காணப்படும் பகுதியை அறுத்து எடுத்து நோயில்லாதவர்கள் உடலின் தோலுக்கு அடியில் வைத்துத் தைத்து அவர்களுக்கு நோயின் அறிகுறி ஏற்படுகின்றதா என்று பத்துப் பதினைந்து ஆண்டுகள் கண்காணித்து வந்தார்கள். அவர்களில் எவர்களுக்குமே அந்நோயின் அறிகுறி காணப்படவில்லை. ஆதலின் நோய்க் கிருமிகள் பரவுவதற்குச் சமூகத்தில் வாய்ப்பு இருந்தாலும் நடுத்தர வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்நோய் வருவதில்லை என்று மேற்படி பரிசோதனை நிரூபிக்கிறது.

சிறு வயதில் உள்ளோர்களுக்கு எதிர்ப்பு அணுக்கள் உருவாக்கப்படாத தன்மையால் அவர்களுடைய உடலிலே இக்கிருமி உட்புகுந்தால், தொடக்கத்தில் அவர்களுடைய தோலில் நிறமாற்றத்தை ஏற்படுத்துகிறது.

இருப்பினும் பெரும்பாலோர் உடலில் இக்கிருமி புகுந்தவுடன் எதிர்ப்பு அணுக்களைத் தூண்டி விடுவதால், எதிர்ப்பு அணுக்கள் உருவாகிப் பலம் வாய்ந்ததாகப் பெருகி இக்கிருமிகளைக்கொன்று விடுகின்றது. இக்கிருமிகள் கொல்லப்படுவதால், இவைகளால் ஏற்பட்ட தோலின் நிறமாற்றம் மறைந்து விடுகிறது.

ஒரு சிலரிடம் எதிர்ப்பு அணுக்கள் உருவானாலும் அதற்கு ஏற்றாற்போல் கிருமியும் வலுவுள்ளதாய் வளர்ந்து இருப்பின் தோலிலே சிவந்த வறண்ட ரோமமற்ற, வியர்வையற்ற உணர்ச்சி அற்ற படைகள் தோன்றும். இவர்களது உடலில் இருக்கும் எதிர்ப்பு அணுக்களைப் பலப்படுத்தும் வகையில் அவர்களுக்கு மருந்து கொடுத்து வந்தால், அவர்களது உடலிலே உருவாக்கப்பட்ட படைகள் சீக்கிரமாக மறைந்து வடுவாக மாறி காணப்படும்.

ஒரு சிலருடைய உடலில் இக்கிருமிகள் புகுந்தாலும் எதிர்ப்பு அணுக்கள் உருவாகாத காரணத்தால், இக் கிருமிகள் மெள்ள மெள்ள வளர்ந்து இனவிருத்தி செய்து உடலெங்கும் பரவி, உடலில் ஒருவிதமான சிவந்த மினுமினுப்பான படையைத் தோற்றுவிக்கிறது. இவர்களுடைய தோலில் 5 மி.மீ.நீளம் 5மி.மீ. ஆழமான காயத்தை உருவாக்கி, அக்காயத்தைச் சுரண்டி எடுத்துப் பரிசோதனை செய்தால், கிருமி இருப்பதைக் கண்டு அறியக்கூடும். இவர்களும் மருந்து உட்கொண்டு வந்தால் கிருமிகள் அழிக்கப்பட்டு உடலில் மாற்றம் காணாமல் காப்பாற்றலாம்.

இந்நோய்க் கிருமி புகுவதும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் சாதாரணமாகப் பொதுமக்கள் அறியமாட்டார்கள். ஏனெனில் அது எந்த உபாதையையும் நமைச்சல், வலி போன்ற தொல்லையையும் கொடுப்பதில்லை. லின் மக்களும் அறியாமையில் அசட்டையாக விட்டு விடுகிறார்கள். மருத்துவர்களோ, அல்லது பயிற்சி பெற்ற மருத்துவப்பணியாளர்களோ கூறினாலொழிய இந்நோயினைப் பற்றி அறிய மாட்டார்கள்.

இன்னும் படித்த மக்களிடையே இது தனக்கு வராது, ஏழ்மை நிலையில் உள்ளோருக்குத்தான் வரும் என்ற தவறான நம்பிக்கையில் வாழ்ந்து வருவதால், இப்பணியில் ஈடுபட்டு உள்ள பணியாளர்கள் அம் மக்க



படம்-2

ளின குடும்பங்களில் யாருக்காவது இந்நோயின் அறிகுறி இருக்கின்றதென்று சொன்னால் இதனை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள். மறுப்பது மாத்திரமின்றி அசட்டையாகவும் விட்டு விடுகிறார்கள். பிற்பாடு அது வளர ஆரம்பித்த பிறகு எங்கெல்லாமோ சென்று அல்லல்படுகிறார்கள். ( Fig 2 )

இந்நோய் தொடக்கத்தில் எந்த விதமான தொந்தரவையும் கொடுக்காத காரணத்தினால், இந்நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் ஊழியர்கள் கிராமந்தோறும் சென்று வீடுவீடாக அங்கு நிரந்தரமாக வாழ்வோரைப்பரிசீலனைசெய்து நோயின் அறிகுறி இருப்பின் அவர்கள் இடத்திற்கு, அருகாமையில் மருத்துவம் அளிக்க வழிவகுக்கிறார்கள்.

நகர்ப்புறங்களில் படித்த மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும், மேற்படி அவர்களது ஒத்துழைப்பு கிடைப்பது கடினமாக இருப்பதாலும் நகர்ப்புறத்தில் பள்ளியில் படிக்கும் சிறார்களைப் பரிசீலனை செய்ய வழி வகுத்துள்ளோம். அம்மாதிரி பரிசீலனையில் யாருக்கேனும் நோயின் அறிகுறி காணின் அவர்களுக்குப் பள்ளியின் மூலமாக மருந்து அளிக்க வழி வகுத்துள்ளோம். தொடக்கத்திலேயே மருந்து அருந்திவந்தால் தோலில் காணப்படும் படைகள் மறைந்து விடும். வளர்ச்சிபெறும் படைகள் தடுக்கப்படும். நரம்புகள் தாக்கப்படாமல் காக்கப்பட்டு அங்கக் குறைவு ஏற்படுவதும் தவிர்க்கப்படும்.

ஆகவே, உங்களது இல்லத்திலே தெரிந்தவரிடமோ நமைச்சலற்ற ,உணர்ச்சியற்ற படை தோன்றினால் மருத்துவரிடம் ஆய்வுரை பெறுங்கள். உங்கள் வீட்டுக்கு யாராவது தொழுநோய்ப் பணியாளர்கள் வந்தால் அவர்களுடன் ஒத்துழையுங்கள். நமது தங்கத் தமிழகத்திலிருந்து இந்நோயினை விரட்ட வழி வகுப்போம்!

---

**மருந்து**


**மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று.**

மருத்துவ நூலோர் வாதம் பித்தம் சிலேத்துமம் என எண்ணிய மூன்றும் அளவுக்கு மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாக்கும்.

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்.**

முன் உண்ட உணவு செரித்த தன்மையை ஆராய்ந்து போற்றிப் பிறகு தக்க அளவு உண்டால், உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

**—திருக்குறள்.**



# முதியோர் மருத்துவம்

இப்பொழுது நம்நாட்டில் முதியவர்களைப் பற்றி நிறைய பேசுகிறோம். முதியோர் நலன், முதியோர் கல்வித் திட்டம், முதியோர் நல நிறுவனங்கள் என்பது பற்றியெல்லாம் பேசுகிறோம். மேலைநாடுகளில் முதியோர்கள் பற்றி பேசப்படும் பிரச்சினைகள் எல்லாம் இன்று நம்நாட்டிலும் பேசப்படுகிறது.

*இதற்குக் காரணம் என்ன?*

நம்நாட்டில் முதியவர்கள் எண்ணிக்கை நாளுக்குநாள் கூடுதலாகி வருவதுதான்.

இந்தியாவில் 1931-ஆம் ஆண்டில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் எண்ணிக்கை-மொத்த மக்கள் தொகையில் 2 சதவீதம். 1971-ஆம் ஆண்டில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை 6 சதவீதம்! இதுவே இன்னும் இருபது ஆண்டுகளில் 20 சதவீதமாகிவிடும். அதாவது இந்த நூற்றாண்டு இறுதிக்குள் நம் நாட்டின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பார்கள்.

நம்நாட்டு மக்கள் வாழும் சராசரி வயது உயர்ந்ததுதான் இதற்குக் காரணம். 1921-ல் ஓர் இந்தியனின் சராசரி வயது-20 ஆண்டு. 1971-ல் ஓர் இந்தியக் குடிமகனின் சராசரி வயது 52 ஆகும். எனவே முதியவர்களின் பிரச்சினைகளில் முழுக்கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

நம்நாட்டின் பெருமைக்கும் பழமைக்கும் எடுத்துக் காட்டாக இருந்த கூட்டுக் குடும்ப முறை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருகிறது. இளைய தலைமுறையினர் பொதுவாக முதியோரின் முதிர்ந்த எண்ணங்களை ஏற்பதில்லை. வயது அதிகமானதால் செய்யும் பணிகளில் இருந்து ஓய்வு பெறுகின்றனர். வருவாய் குறைகிறது. இதனால் மனச் சோர்வு; ஒருவகையான விரக்தி; மனைவியை இழந்ததால் வயதான காலத்தில் மனமுடைந்து இருத்தல்— கூட்டுக் குடும்ப முறையில் ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவை பலவித நோய்களை உண்டாக்குகின்றன!

மருத்துவர்கள், முதுமையை ''நோய்களின் மேய்ச்சல் காடு' என்கிறார்கள். உண்மைதானே! வயது ஆக ஆக பல பழைய நோய்களிடையே ஒரு சில புதிய நோய்களும் தலைதூக்கத் தொடங்குகின்றன. 'வயசானால் எல்லாமே வருவதுதான்' என்ற அலட்சியப் போக்கு முதியவர்களின் நோயை அதிகமாக்குகின்றன.

இப்படிப்பட்ட முதியவர்களின் நல்வாழ்வுக்கு உதவும் முதியோர் மருத்துவம் Geriatric என்று அழைக்கப்படுகிறது. முதியோர் மருத்துவப் பிரிவு நமது நாட்டில் முதன் முதலாக சென்னை பொதுமருத்துவ மனையில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது. இப்பொழுது டில்லி, ஹைதராபாத் ஆகிய நகரங்களிலும் முதியோர் மருத்துவப் பிரிவு இயங்கி வருகிறது.

'Geriatric மருத்துவ மனை' என்றே தனியாக மேலை நாடுகளில் முதியோர் மருத்துவ மனைகள் இயங்குகின்றன. ஆனால் நமது நாட்டில் தொடங்கப்பட்டுள்ள முதியோர் மருத்துவப் பகுதி புறநோய்ப் பிரிவாக இயங்கி வருகிறது.

சென்னை முதியோர் மருத்துவம் புறநோய்ப் பிரிவு வாரத்தில் திங்கட்கிழமை - வியாழக்கிழமை ஆகிய இரண்டு நாட்கள் இயங்குகிறது. காலை 11 மணி முதல் பகல் 1 மணி வரை இந்தப் புறநோய்ப் பிரிவு இயங்குகிறது. 60 வயதைத் தாண்டியவர்கள்-பெரும்பாலும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களே முதியோர் மருத்துவப் பிரிவுக்குச் சிகிச்சைக்காக வருகின்றனர்.

முதியோர் மருத்துவம் - புறநோய்ப் பிரிவு - பேராசிரியர் டாக்டர் எஸ். பால கிருஷ்ணன் அவர்கள் தலைமையிலும் டாக்டர் வி. எஸ். நடராஜன் அவர்கள் பொறுப்பிலும் இயங்குகிறது. அவர்களைச் சந்தித்து, 'முதியோர் மருத்துவம்' என்று தனியாக மருத்துவப் பிரிவு ஏன்? பொதுவாக உள்ள மருத்துமனையிலே முதியோர்களுக்குச் சிகிச்சை செய்யலாமே; தனியாக மருத்துவப் பிரிவு அவசியமா?'' என்று கேட்டபொழுது அவர்கள் சொன்னார்கள்.

''முதியோர்களுக்கு என்று வித்தியாசமான நோய்கள் உள்ளன. முதியவர் ஒருவர் தனக்கு அடிக்கடி மயக்கம் வருகிறது என்று சொன்னால் அவரைச் சோதித்துப் பார்த்தால் இரத்த அழுத்தத்தோடு-ஆரம்ப நிலையில் உள்ள பக்கவாதத்தினால் ஒரு கையும் காலும் இயங்காத நிலையும் தெரியும். கண்களில் புரைமூடி பார்வை குறைந்திருக்கலாம். சிறுநீர்ப் பையிலும் கோளாறு ஏற்பட்டிருக்கலாம் - இப்படி பல நோய்கள் தோன்றுவதற்கு-அடிப்படையான சூழல் அமைகின்றது.

''முதியோர்களுக்கு, அஜீரணத்திற்கு ஒன்று, மலச்சிக்கலுக்கு ஒன்று, மூட்டுவலிக்கு ஒன்று, தூக்கத்திற்கு ஒன்று, நீரிழிவு நோய்க்கு ஒன்று என்று பலவித மருந்துகளும் மாத்திரைகளும் கொடுப்பதுகூட பலவித கெடுதல்களைக் கொடுக்கின்றன. இதனால் இவைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

''மனத்தளர்ச்சி, மனக்குழப்பம், மனப்பதட்டம் மிக அதிகமாக முதியவர்களுக்கு வருவதுண்டு. இக் காரணங்களாலும் அவர்களுக்குத் தனியாகச் சிகிச்சை தேவைப்படுகிறது.

80 வயதான ஒரு முதியவர் மற்ற நோயாளிகளுடன் காத்திருந்து சிகிச்சை செய்து கொள்ள முடியாது... வயதானவர்களிடம் பேச்சுக் கொடுத்து சுலபத்தில் முடித்துக் கொள்ள முடியாது.''- இப்படி அடுக்கடுக்காக பல காரணங்களைச் சொல்லிக் கொண்டு போகலாம் என்கிறார்கள்.

முதியோர் மருத்துவம் புறநோய்ப் பிரிவில் கூடியுள்ளவர்களைப் பார்க்கும் பொழுது-'முதியோர் மருத்துவம்' எவ்வளவு முக்கியமானது என்பது விளங்குகிறது. 65 வயதுக்கு மேல் 90 வயது வரை உள்ளவர்கள் அங்கே குழுமியிருந்தனர்.

—அவர்களில் சிலரிடம் இந்த முதியோர் மருத்துவ முறையைப் பற்றி விசாரித்தேன். அவர்களில் ஒருவர் இராயப்பேட்டையைச் சேர்ந்த டி. வி. சம்பந்த முதலியார் என்பவர். அவர் சொன்னார்: 25 ஆண்டுகளாக இருந்த தலைவலிக்குநானும் எவ்வளவோ மருந்துகளை-25 வருஷமாக சாப்பிட்டேன். கடந்த 3 மாதத்துக்கு முன்பு இந்த முதியோர் மருத்துவப் பிரிவில் சிகிச்சைக்கு வந்தேன். இப்பொழுது குணமாகி விட்டது'' என்றார்.

''பரங்கிமலையைச் சேர்ந்த வி. டி. சாமி அவர்கள், ''இங்கு ஒருவருக்கு எல்லாவிதமான மருத்துவப் பரிசோதனைகளையும் செய்கிறார்கள். மிகப் பொறுமையாக நாம் சொல்வதைக் கேட்டுக் கொள்கிறார்கள். இந்த மருத்துவப் பிரிவு இருப்பது பலருக்குத் தெரியாது. நிறைய விளம்பரப் படுத்த வேண்டும்'' என்கிறார்.

கோடம்பாக்கத்தைச் சேர்ந்த மதனகோபால் என்பவரும் முதியோர் மருத்துவ முறை இயங்குவதையும் தமது நோய்க்கு சிகிச்சை அளித்துக் குணப்படுத்தியதையும் மிகப் பெருமையாகச் சொன்னார்.

இங்கு வரும் நோயாளிகள் யாரைக் கேட்டாலும் முதியோர் மருத்துவம்-புறநோய்ப் பிரிவுக்கு புகழ்மாலை சூட்டுகின்றனர். அந்த அளவுக்கு முதியோரைப் பெரிதும் கவர்ந்ததாக இந்த மருத்துவப்பகுதி உள்ளது.

இலண்டனில் நான்கு ஆண்டுகளுக்கு மேல் 'முதியோர் மருத்துவ இயலில்' பயிற்சி பெற்றுள்ள டாக்டர் நடராஜன் சொன்னார்:

''முதியோர் மருத்துவ இயல் சம்பந்தமாக நம்நாட்டில் ஆராய்ச்சி குறைவு. மேலைநாட்டிலுள்ள முதியவர்களின் நோய்களும் பழக்க வழக்கங்களும் நம் முதியவர்களிடமிருந்து பெரிதும் மாறுபடுகின்றன. ஆதலால் நம் நாட்டிலுள்ள முதியவர்களைப் பெற்றி ஆராய்ச்சிகளைத் தொடங்குகிறோம்.

இங்கு வரும் முதியவர்களில் அவர்களுக்குத் தெரியாமல் — அவர்கள் அறிந்து கொள்ள முடியாதிருந்த நோய்களை அறிந்து சிகிச்சை செய்துள்ளோம்''.

முதியோர் மருத்துவப் பிரிவில் முதியோர்களின் பலவித உடல் கோளாறுகளைக் கண்டறிந்து அந்தந்தத் துறைகளின் மூலம் சிகிச்சைக்குச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்.

குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை-எந்தவிதத் தொந்தரவு இல்லாமலிருந்தாலும் முதியவர்கள் உடல் பரிசோதனை செய்து கொள்வதன் மூலம் பல






நோய்களிலிருந்து வருமுன் காத்துக் கொள்ள முடியும். இதனை முதியோர் மருத்துவம்-புறநோய் பிரிவு செயல்படுத்தி வருகிறது.

முதியோர்கள் குறைந்த செலவில் எந்தெந்த உணவுகளை— சத்துணவுகளைச் சாப்பிடவேண்டும் என்பதையும் இங்கே சொல்லிக் கொடுக்கிறார்கள். ''மனக் கட்டுப்பாடு எதிலும் தேவை. முக்கியமாக உணவில் எது பிடிக்காதோ, எது எது ஒத்துக்கொள்ளாதோ அதை ஒதுக்கிவிடவும். டாக்டர்கள் ஆலோசனையின்றி எந்த மாத்திரைகளையும் தொடர்ந்து சாப்பிடாதீர்கள்'' என்றும் அறிவுறுத்துகிறார்கள்.

இந்தப் புறநோய் மருத்துவப் பிரிவுக்கு வரும் பலரிடமும் தனித் தனியாக கேட்ட தகவல்களைத் தொகுத்துப் பார்த்தபொழுது — முதியவர்களுக்கு—வருங்கால முதியவர்களுக்கு நாம் சொல்லும் ஆலோசனை இதுதான்.

''முதுமையில் நல்லதொரு வாழ்வுக்கு நல்ல நிதிவசதி அடித்தளம். அதைக் கவனத்தில் கொண்டு, வேலையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பே நமது முதுமைக்காலத் தேவைகளை நினைத்து, சேமித்து வைத்துக் கொள்ளவேண்டும். சிறிது நேர நடைப்பயிற்சி காலையிலும் மாலையிலும் மிகவும் அவசியம். உடலாலும் உள்ளத்தாலும் எப்பொழுதும் சுறுசுறுப்புடன் இருக்கவேண்டும்.

'முதுமை நோய்களின் மேய்ச்சல் காடு' என்பதை உணர்ந்து எப்பொழுதுமே செயல்படவேண்டும்.

சென்னை பொதுமருத்துவமனையிலுள்ள மருத்துவம் - புறநோய்ப் பிரிவைப் பார்க்கும் பொழுது இதுபோன்ற மருத்துவப் பிரிவுகளை எல்லா மருத்துவமனைகளில் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் நமக்குத்தோன்றுகிறது.

ஒரு புறநோய் மருத்துவப் பிரிவால் ஓரளவுதான் முதியவர்களின் நல்வாழ்வுக்கு உதவி அளிக்க முடியும். முதியோர் மருத்துவ இயல் வார்டும் - முதியோர் மருத்துவம் பகல் நேர மருத்துவ மனையும் (Day Hospital) அமைக்கப்பட்டால் நம் நாட்டு முதியவர்களுக்குப் பெருமளவில் மருத்துவ உதவிகள் அளிக்க முடியும்!

எனினும், இப்பொழுது சென்னை பொதுமருத்துவமனையிலுள்ள முதியோர் மருத்துவம்-புறநோய்ப் பிரிவு-புகழ்மிக்க சென்னை பொதுமருத்துவ மனைக்கு மேலும் புதிய புகழையும் பெருமையையும் அளிக்கும் வகையில் அருந்தொண்டு ஆற்றி வருகிறது!

**மருந்து**

**இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்**
**கழிபே ரிரையான்கண் நோய்.**

**குறைந்த அளவு இன்னதென்று உண்பவனிடத்தில் இன்பம் நிலை நிற்பதுபோல, மிகப் பெரிதும் உண்பவனிடத்தில் நோய் நிற்கும்.**

**தீயன வன்றித் தெரியான் பெரிதுண்ணின்**
**நோயள வின்றிப் படும்.**

**பசித்தீயின் அளவின்படி அல்லாமல், அதை ஆராயாமல் மிகுதியாக உண்டால், அதனால் நோய்கள் அளவில்லாமல் ஏற்பட்டு விடும். —திருக்குறள்.**

# மாரடைப்பு நோய் தவிர்ப்போம்!

பேராசிரியர்
**சொ. இலட்சுமிகாந்தன்,**
**தலைவர், மற்றும் பேராசிரியர்,**
**இதய இயல்துறை,**
**அரசினர் பொதுமருத்துவமனை.**

டாக்டர் செல்வராசன்,
**துணைப் பேராசிரியர்,**
**இதய இயல்துறை,**
**அரசினர் பொதுமருத்துவமனை,**
**சென்னை-**

**மா**ரடைப்பு நோயால் மாள்கின்ற மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. முதிய வயதினர்க்கும், முறை தவறி வாழ்பவர்க்கும், முதலாளிகளுக்கும் மட்டுமே வரும் மாரடைப்பு நோய் என்ற எண்ணம் மறைந்து, இன்று யாருக்கு வேண்டுமானாலும், எப்போதும் எந்த வயதிலும் வரலாம் என்கின்ற உண்மை நிலையை மருத்துவப் புள்ளியியல் நமக்கு உணர்த்துகின்றது. வாழ்க்கையில் விரைந்து, வேகமாக வளர்ந்து, முயன்று முன்னுக்கு வரத் துடிக்கும் நடுத்தர வயதினரையும் இந்த இதயநோய் விட்டு வைப்பதில்லை. உலகத்திலேயே இந்த நோயால் அதிகம் பாதிக்கப்படுகிறவர்கள், அறிவியல் துறையில் முன்னணியில் விளங்கும் அமெரிக்கர்கள் தாம் என்றாலும் இயந்திரம் போல் முன்னேறி வரும் இந்தியர்களிடையேயும், குறிப்பாக இளைய தலைமுறையினரையும் வெகு அளவில் ஆட்கொள்கிறது. மாரடைப்பு நோய் எப்படி வருகிறது, எதனால் வருகின்றது என்பதைப் புரிந்து கொண்டால் பெருமளவு அது வராமல் தடுத்துக் கொள்ள முடியும்; வந்தபின்னும்,வாழ்க்கையில் ஒரு நெறிமுறையையும், உணவில் விதி முறையையும் வழி வகுத்துக் கொண்டால் நீண்ட ஆயுளும் நிம்மதி வாழ்க்கையும் நிச்சயம் உண்டு எனலாம்.

**மாரடைப்பு நோய் என்றால் என்ன?**

நாம் உழைக்கும்போதும் உறங்கும்போதும், அதாவது இருபத்து நான்கு மணி நேரமும் நமது இதயம் வேலை செய்து கொண்டே இருக்க வேண்டும். நமது உயிர் இருக்கவும் உடல் இயங்கவும் நாள் முழுவதும் இரத்தம் இதயத்திற்குப் பாய்ந்து கொண்டே இருக்க வேண்டும். இதற்கென இரு முக்கிய இரத்த நாளங்கள் இதயத்திற்குச் செல்கின்றன. இரத்தக் கொழுப்பினங்களின் படிகங்களால் இவற்றில் அடைப்பு ஏற்பட்டால், இதயத்திற்கு இரத்தம் குன்றி விடலாம் அல்லது நின்றுவிடலாம். இதுதான் மாரடைப்பு நோய். குன்றிய நிலையிலேயே நோயின் குறிகள் தோன்றலாம். மார்பிலிருந்து மணிக்கட்டு வரை மாறுபட்ட தன்மைகளில் வலியும் மூச்சுத் திணறலும், முத்தான வியர்வையும், மரத்துப் போதலும், மயக்க நிலையும் அலட்சியப்படுத்தக் கூடாத அறிகுறிகளாகும். உழைப்பிலும், ஓய்விலும் ஏன் உறங்கும்போது கூட வரலாம். மூப்பதால்தானே வரும் முப்பதில் வராது என்று முடக்குச் சமாதானம் சொல்லாமல், முறையாக உடனே மருத்துவரைக் காணவேண்டும். நோயின் முதல் நிலையிலேயே காண்பது,நோயின் கடும் விளைவுகளைத் தவிர்ப்பதிலும், உயிரைக் காப்பதிலும் மருத்துவர்க்கு மிக அதிக வாய்ப்பை அளிக்கிறது.

**நோய் முதல் காரணங்கள் யாவை?**

ஏறத்தாழ எழுபதுக்கும் மேற்பட்ட காரணங்கள் ஏதோ ஒரு வகையில் இதய நோய்க்கு வழி வகுக்கும் மாற்றங்களை இதய நாளங்களில் ஏற்படுத்துகின்றன- மிக முக்கிய காரணங்களை இரு கூறாகப் பிரிக்கலாம். நிச்சயம் இவை ஊறு விளைவிக்கும் என்று அனுபவ, ஆய்வுகளால் அறுதி செய்யப்பட்டவை. **'விளைத்திடு காரணங்கள்'** எனவும், ஏதோ ஒரு வகையில் வினைதர விதையாய் செயல்படுபவை **'வித்திடும் காரணங்கள்'** எனவும் அழைக்கப் பெறும். மிக முக்கியமான சிலவற்றைச் சற்று ஆராய்வோம்.

**விளைத்திடும் காரணங்கள் :**

இது மாரடைப்பு நோய்க்கு நம்மை இலக்காக்கும் என்ற நிலையில் கூட, நாம் சில காரணங்களைத்தாம் தவிர்த்துக் கொள்ள முடியும்.

**தவிர்க்க இயலும் காரணங்களாவன :**

**(1) மிகுந்த இரத்தக் கொழுப்பினம்:** இதய நாளங்களின் உட்பரப்பில் இரத்தக் கொழுப்பினங்களின் படிகங்களும், நார் போன்ற திசுக்களின் சேர்க்கையும், சேர்ந்து செயல்பட்டு இதய நாளங்களின் இறுக்கத்திற்கு ஏதுவாக அமைந்து இரத்த ஓட்டம் அளவுக்கும் பாதகமாக அமைகின்றது. மாரடைப்பின் உருவகங்கள் மாறுபடினும் கருநிலை இதுதான். தீய உணவுப் பழக்கங்களும், பல்வேறு நோய்களும், கொழுப்பினங்களைக் கூட்டலாம் என்றாலும், சரியான அளவில் உள்ளவர்க்கும் கூட இந்த நோய் வரலாம். நோய்வாய்ப்படும் தன்மை இயல்பாகவே தோன்றலாம்.

**(2) உணவுப் பழக்கம்:** உணவில் மிதமிஞ்சிய உப்பு, மாவுப் பொருள் மற்றும் கொழுப்புப் பொருள் சேர்த்தல் கூடாது. உணவுக் கட்டுப்பாடு ஒன்றே, தோற்ற நிலையில் இந்த நாள மாற்றங்கள் உருவாவதைத் தவிர்க்க முடியும். தடுக்க முடியும். நெறிமுறையான உணவுப் பழக்கம் இளம் வயதிலேயே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**(3) இரத்த அழுத்த நோய் :** அதிக அளவு இரத்த அழுத்தம் நாளங்களின் நலிவுக்குத் துணையாகி, குறைவடர்த்திக் கொழுப்பினங்கள் அதில் சேர்ந்து இறுக்கவும், தட்டையணுக்களின் மிகுந்த ஒட்டுச் சேரும் தன்மை, நோயை மேலும் கடுமையாக்கவும் வழி செய்கிறது.

**(4) புகை பிடித்தல் :** புகைப் பிடிப்பவர்க்கு உள்செல்லும் 'நிகோடின்' மற்றும் கரிவாயுக்கள் இதயநாளங்களின் ஊடுருவல் தன்மையையும், உயிர்ச் சத்து சேர்க்கையையும் பாதிக்கும். 'கொலஸ்டிரால்' கொழுப்பினமும், தட்டை அணுக்கள் தாமாக ஒட்டிக் கொள்ளும் தன்மையும் அதிகமாகி அடைப்புக்கு வழியாகின்றது.

**(5) நீரிழிவு நோய் :** மேற்சொன்ன மாற்றங்கள் இந்த நோய் வந்தவர்களுக்கு அதிகம் நிகழ்வதற்குக் காரணம், அதிக மாவுச்சத்து ஏற்படுத்தும் மிகுந்த இரத்தக் கொழுப்பினங்களும், அதிக 'இன்சுலின்' சுரப்பதுவும் தான். இதயநாளங்களின் எல்லா இடங்களிலும் பாதகம் விளைவிக்கிறது.

**(6) உடல் பருமன் :** அதிக அளவு உடல் பருமன் ஆபத்து-

இரத்த அழுத்தம், நீரிழிவு, கொழுப்பின மிகுதி ஆகியவை இதன் உடன்பிறப்புக்கள். திட்ட மிட்ட சரிவிகித உணவு தினமும் உடற்பயிற்சி ஆகியவை நீண்ட ஆயுளையும் நிம்மதி வாழ்க்கையும் அளிக்கும்.

**(7) சோம்பிய வாழ்க்கையும், மென்மன அதிர்வுகளும்:** தவிர்க்கப்படல் வேண்டும். உணர்வு நரம்பு மண்டலம் உளைந்த நிலையில் எதுவும் ஏற்படலாம்.

சில முடியாத நம் சக்திக்கும் அப்பாற்பட்ட, தவிர்க்க இயலாத காரணங்களைக் காண்போம்.

**தவிர்க்க இயலாத காரணங்கள் :**

**(1) வயது:** முதுமையை யாரும் தடுத்துவிட முடியாது. மேலும், ஒவ்வாத உணவுப் பழக்கமுறை, உடல் ஓய்வு, மனச்சோர்வு இவைகள் முதுமையை ஆட்கொள்ளும் போது இதயநாளங்களின் இறுக்கம் இயற்கையாகவே ஏற்பட்டு விடுகின்றது.

**(2) பாலினம்:** ஆடவர்களை அதிகம் பாதிக்கும் நோய் பெண்டிரை அவ்வளவாக பாதிப்பதில்லை. காரணம் பெண்பாலினச் சுரப்பி நீர் இயல்பாகவே தரும் பாதுகாப்பு, புகைப்பிடித்தலின்மை, இரத்தக் கொழுப்பினங்களின் குறைவு ஆகியன.

**(3) வழிவழித் தோற்றம்:** சில குடும்பங்களில் குறிப்பாக இளைய வயதினரை வழிவழியாய் இந்த நோய் தாக்குகிறது. உயிர் அணுக்களில் வித்திட்டபடி, அதிக அளவு கொழுப்பினம் இரத்தத்தில் உண்டாகும்போது பரம்பரை நோயாக பால வயதினரையும் இது தாக்குகிறது.

**வித்திடும் காரணங்களாவன :**

நேர் விளைவிக்காமல், மறைமுகமாக மாரடைப்புக்கு வித்திடும் மாற்றங்களை நிகழ்த்த வல்ல சில காரணங்கள் இதோ:-

1 அதிக அளவு காபி, தேநீர் மதுபானங்கள் சீரண உறுப்புக்களையும் இதயத்தையும் பாதிக்கின்றன.


2 தாது உப்பு மற்றும் உயிர்ச் சத்துக்கள் குறைந்த நிலை

3 நாளமில்லாச் சுரப்பிகளின் நலிவு.

4 இரத்தத்தின் உயிரணுக்களின் மிகுந்த நிலை

5 மூச்சுப் பைகளின் முடங்கிய செயல்திறன்.

















6 அறிவியல் முன்னேற்றம் விளைவித்த சுற்றுப்புறச் சூழ்நிலை, சுகாதார மாறுபாடுகள்

7 மாமிச உணவுப் பழக்கம்.

8 மருந்துகள் அதிகம் உட்கொள்ளல் (குடும்பக் கட்டுப்பாடு மாத்திரைகள்)

**''இதயநோயைத் தவிர்ப்போம் இனியொரு விதிமுறை செய்வோம்''**

*(1)* எப்போதும் எளிய உணவுகளையே சாப்பிட வேண்டும். நம் உடல், வயது, உழைப்புக்கேற்ற சரிவிகித உணவு, பச்சைக் காய்கறிகள், கீரை வகைகள், பழவகைகள், கோதுமைப் பண்டங்கள், தயிர்-மோர் வகைகளிலேயே கிடைக்கின்றது. அளவோடு உண்டால் வளத்தோடு வாழலாம்.

*(2)* மாவு, சர்க்கரைப் பண்டங்களையும், கொழுப்புச் சத்து மிகுந்த மாமிச உணவையும் மிக மிகக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

*(3)* மிதமிஞ்சிய மதுபானங்கள், காபி, தேநீர் ஆகியவை இதயத்திற்கு எதிரிகள்.

*(4)* உப்பு உயிர்கொல்லி. உப்பு அதிகம் சேர்த்துக் கொள்வதைப் பொதுவாகவே மிகவும் குறைத்துக் கொள்ள வேண்டும். முப்பது வயதுக்கு மேல் கடைப்பிடிப்பது மிகமுக்கியம்.

*(5)* இரத்தக் கொதிப்பு, நீரிழிவு நோய் உள்ளவர்கள் 'கொலஸ்டிரால்' சத்துமிக்க ஈரல், முட்டை, வெண்ணெய், பாலாடை, பால்கட்டி, மீன், மாமிசம், தேங்காய், நெய் ஆகியவை அதிகம் சேர்க்கக்கூடாது.

—உணவுக்காக உடம்பு இல்லை உடம்புக்காகத்தான் உணவு.

—உயிரை குடிக்க உணவுஇல்லை உயிரைக் காக்கத்தான் உணவு.

—வயிற்றுக்காக உணவு இல்லை வாழத்தான் உணவு

—வாய்க்காக உணவு இல்லை வளரத்தான் உணவு.

*(6)* அளவுகடந்த அவசரம், பரபரப்பு, கவலை, பயம், அனாவசியக் கோபம், அதிர்ச்சி தரும் செய்தி ஆகியவற்றை வாழ்க்கையில் தவிர்த்திட வேண்டும். நகர வாழ்க்கையில் பெரும்பாலோர் விரைந்து விரைந்து வேலை செய்து, பரபரப்படைந்து, அமைதியிழந்து காலத்துடன் போட்டி போட்டு, பிறகு காலனுடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

*(7)* நடுத்தர வயதிலேயே தாமாக மருத்துவரை நாடி, உடற்பரிசோதனை செய்து கொள்ளல் வேண்டும். இரத்தம், சிறுநீர், இதய மின்படம் ஆகியவற்றைச் சோதித்து நோய் அறிகுறி இல்லையென உறுதி செய்தல் வேண்டும். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை செய்வது நலம்.

*(8)* பால்வினை நோய்கள், இரத்தக் கொதிப்பு, நீரிழிவு நோய் உள்ளவர்கள் மருத்துவரை அடிக்கடி கலந்தாலோசிக்க வேண்டும். அவர்கள் தரும் சரிவிகித உணவையும் மருந்துகளையும் பின்பற்றுவது மிகவும் முக்கியம்.

*(9)* கடுமையான உடற்பயிற்சி தேவை இல்லை. காலையில் இரண்டு முதல் மூன்று மைல்கள் நடப்பதோ, மெதுவாக ஓடுவதோ உடம்புத் தசைகளுக்கு நலல பயிற்சி. இரத்த ஓட்டம் சீராக அமைய யோகாசன முறைகள் குறிப்பாக தியானம், மற்றும் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஓய்வு கொடுக்கும் யோகாசனப் பயிற்சி முறைகளையும் கடைப்பிடிக்கலாம்.

*(10)* மலச்சிக்கல், மனச்சிக்கல் இரண்டும் கூடாது. இதற்காக தாமே மருந்துகளைத் தேர்ந்தெடுத்துத் தொடர்ந்து சாப்பிடக் கூடாது.

*(11)* புகை பிடிக்கக்கூடாது. பழக்கம் உள்ளவர்கள் உடனே நிறுத்திவிட வேண்டும்.

*(12)* மதுவுக்கும் இதுவே பொருந்தும். மரியாதைக்காகக் கூட மது அருந்தக்கூடாது.

*(13)* நாள் முழுவதும் எதையாவது ஒருபிரச்சினையை நினைத்து மனம் உளைந்து கொண்டிருக்கக் கூடாது. இதற்காக இரவில் வெகு நேரம் கண்விழித்துக் கொள்வதும் கூடாது.

*(14)* அதிக சிந்தனை உடலுக்கு நிந்தனை, சிரித்து வாழக் கற்றுக் கொள்ளவேண்டும். வாழ்க்கையைத் தத்துவக் கண்ணோட்டத்துடன் நோக்கவேண்டும்.


*(15)* சாப்பிட்டவுடன், நடப்பதோ உழைப்பதோ தீவிர சிந்தனையோ கூடாது. உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு.

*(16)* உடல் பெருக்காமல் இருக்கவும் மற்றும் உடல் பருமனைக் குறைக்கவும், உணவிலும் உழைப்பிலும் மருத்துவர் குறிக்கின்ற விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

''உழைப்புக்கும் அளவு உணவுக்கும் வந்தனை செய்வோம்

உப்பையும் கொழுப்பையும் நிந்தனை செய்வோம்''

*(17)* உணவில் மிதமிஞ்சிய வாசனைப் பொருள்களும், வெற்றிலை புகையிலை போடும் பழக்கமும் தவிர்க்க வேண்டும். இரத்த சோகை நோய்க்கும், தாது மற்றும் உயிர்ச்சத்துக் குறைவிற்கும் வழிவகுக்கும் வயிற்றுக் கோளாறுகளும் வாயுத் தொந்தரவும் ஓயாது தொடர்ந்து வருவதற்கு இவைகளும் காரணம்.




மாரடைப்பு விளைக்கின்ற இதய நாளங்களின் இறுக்கத்திற்கு வித்து, பிறவியிலேயே முளைவிடலாம். இளம் வயதில் வேர்விடலாம். நெறிமுறையற்ற பழக்கவழக்கங்கள், கட்டுப்பாடற்ற உணவுமுறை அவற்றிற்கு உரமிடலாம். கிளையைச் சாய்க்க எண்ணுவது பயன் விளைக்காது. முளையிலேயே கிள்ளி எறிய முனைவது அறிவுடைமை. வழி வழியாய்த் தோன்றும் கொழுப்பினநோய்கள் இந்த வகையில் கட்டுப்படாதெனினும், மேலும் கடுமையாகாதிருக்க உணவில் நெறிமுறை முகவும் தேவை. கீழ்க் காணும் அறிவுரைகள் இளையோர் கொள்ள வேண்டிய நெறிமுறைகள்:

*(1)* பாலர்களும் பருவ வயதினரும் தேவைக்கு மேல் உணவை உட்கொள்ளக்கூடாது. உடல் பருமன் உடன்பிறந்த எமன்.

*(2)* அதிக அளவில் பால், வெண்ணெய், பாலேடு, பாதாம், முந்திரி, பால்கோவா, நெய் முதலிய கொழுப்புப் பொருள்கள் மற்றும் சாக்லேட், இனிப்பு வகைகள் போன்ற மாவுப் பொருள்களையும் அடிக்கடி சாப்பிடுவதைத் தவிர்க்கவேண்டும்.

*(3)* புகை பிடிப்பது, புகையிலை போடுவது, இளம் வயதிலேயே இதயத்தையும் சுவாசப் பைகளையும் தாக்கும்.

*(4)* உடல் எடையில் கவனம் வேண்டும். சரிவிகித உணவும் சீரான உடற்பயிற்சியுமே இதற்கு விடை.

*(5)* காலையில் யோகாசனம் மனத்திற்கு நல்ல பயிற்சி. மாலையில் சிறிது விளையாட்டு உடலுக்கும் நல்லது.

*(6)* புத்தகங்கள் நல்ல பொழுது போக்கு.

# செயற்கை உறுப்புகள் சாதனங்கள் பொருத்தும் வட்டாரமையம்

— டாக்டர் தி. கோ. சண்முகசுந்தரம்

முடநீக்கு இயல்துறை பேராசிரியர்,
சென்னை மருத்துவக் கல்லூரி.


முடநீக்கு இயல்துறையிலும், எலும்பு முறிவு சிகிச்சையிலும் தமிழ்நாடு முன்னோடியாக நின்று மக்களுக்குப் புனர்வாழ்வு தருவதில் பெருமை கொள்கிறது. முடநீக்கு இயல்துறையில் பயிற்சிபெற்றுள்ள பல நிபுணர்கள் வட்டாரங்களில் உள்ள மருத்துவ மனைகளில் சிகிச்சை செய்கிறார்கள். எட்டு மருத்துவக்கல்லூரிகள் முடநீக்கு இயல் துறை, எலும்பு முறிவு சிகிச்சை துறைகளில் பட்டப்படிப்பு பட்டமேற்படிப்பு நிலைகளில் பயிற்சி தர வசதிகளைப் பெற்றுள்ளன. செயற்கை உறுப்புகள், சாதனங்களில் பயிற்சி - சிகிச்சை தருவதற்கான வசதிகள் சென்னை செயற்கை உறுப்புகள் பொருத்தும் மையத்தில் உள்ளன. இவற்றின் கிளை மையங்கள் மதுரை, கோவை, தஞ்சை ஆகிய இடங்களில் உள்ளன. இந்தப் பெருமை மிக்க பட்டியலில் சென்னை கோடம்பாக்கத்திலுள்ள அரசினர் புனர்வாழ்வு நிலையமும், செயற்கை உறுப்புகள், சாதனங்கள் பொருத்தும் மையமும் சேருகிறது.

இந்த நிலையம் எட்டு ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டுள்ளது. ஏறத்தாழ 25 லட்ச ரூபாய் செலவில் இங்குள்ள் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாக இதை விரிவு படுத்த வேண்டியும் உள்ளது.

அங்க முடமானவர்களின் முழுமையான புனர்வாழ்வுக்கான மையமாக இத்திட்டம் 1974-ல் உருப்பெற்றது. சென்னை செயற்கை உறுப்புகள் பொருத்தும் மையத்தை சென்னை செயற்கை உறுப்புகள் பொருத்தும் வட்டார மையமாக மாற்ற இந்திய செயற்கை உறுப்புகள் பொருத்தும் கழகத்தினிடமிருந்து பெற்ற மானியத்தைத் தமிழ்நாடு அரசு பயன்படுத்திக் கொண்டது. முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்தும் பண உதவி பெற்றது. இதைத் தொடக்க நினைத்து, செயல் முறையில்கொண்டு வந்த பெருமை முழுவதும் டாக்டர் எம். நடராஜன் அவர்களையே சாரும்.

1979 அக்டோபர் மாதத்திலிருந்து இந்நிறுவனம் செயல்படத் தொடங்கியது. உடலியல் மருத்துவத் துறை, 40 படுக்கைகள் கொண்ட பிரிவு, ஒரு அறுவை சிகிச்சை நிலையம், உறுப்புகள் பொருத்தும் மையம் ஆகிய வசதிகளை இந்நிறுவனம் பெற்றிருக்கிறது.

இன்று முக்கியமாகத் தேவைப்படுகின்ற பயிற்சி சிகிச்சை மற்றும் செயற்கை உறுப்புகள் சாதனங்கள் பொருத்தும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இந்நிலையம் பயிற்சி அளிக்கும்.




உடலியல் மருத்துவத் துறை, பயிற்சி சிகிச்சை, மின் சிகிச்சை, பயிற்சிக்கூடம், தொழிலியல் சிகிச்சை ஆகிய பகுதிகளைக் கொண்டது. இளம் பிள்ளை வாதம், மூளை முடக்கு வாதம், தசைநோய் ஆகியவைகள் சிறப்பாகக் கவனிக்கப்படுகின்றன. பி. எல். 480 உதவியின் கீழ் சென்னை பொது மருத்துவ மனையில், உடம்பின் கீழ்ப்பகுதி பக்கவாதத்திற்குச் சிகிச்சை அளிக்கும் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. அதற்கு இந்நிலையத்தில் அதிக முக்கியத்துவமும் அளிக்கப்படும். நோய்களைக் கண்டு பிடிக்க, சிகிச்சை அளிக்க, அறுவை சிகிச்சை செய்ய, ஊனமுற்றவர்களுக்குப் புனர்வாழ்வு தர வசதிகளையும் நிபுணர்களையும் இந்நிறுவனம் பெற்றிருக்கிறது.

செயற்கை உறுப்புகளைத் தயாரிப்பதற்கு பல வசதிகளையுடைய இரண்டு பெரிய தொழிற்கூடங்களை வட்டார செயற்கை உறுப்புகள் பொருத்தும் மையம் பெற்றுள்ளது. பொருத்திப் பார்க்கவும், மேற்பார்வையிடவும் வசதியாக இருக்க பொருத்தும் அறையும், மற்ற சிகிச்சைகளைச் செய்வதற்கான அறையும் சிகிச்சைக் கூடத்தை ஒட்டியே உள்ளன.

ஸ்டான்லி மேம்பாலத்தின் அடியில் 15 ஆண்டுகள் உழைத்த, செயற்கை உறுப்புகள் சாதனங்கள் பொருத்தும் மையத்தைச் சேர்ந்த 49 ஊழியர்களுக்கும் உள்ள கட்டிடம் ஒரு வரவேற்கத்தக்கஅம்சமாகும். அவர்களுடைய தகுதியும், தயாரிப்புக்களும் இனி மேம்பாடு எய்தும். ஓர் உடல்-பொறியியல் ஆய்வுக் கூடம் காலப்போக்கில் விரிவாக்கப்படும்.

அதே வளைவில் 1.5 இலட்ச ரூபாய் செலவில் செயற்கை உறுப்புகள், சாதனங்கள் பொருத்தும் பயிற்சிப் பள்ளிக்கான கட்டிடம், தொழில் நுணுக்கக் கல்வி இயக்குனர் அகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது இரண்டு வகுப்பறைகளையும், ஒரு தொழிற் கூடத்தையும், நிர்வாக பகுதியையும் கொண்டது. மாணவர்களுக்கான விடுதி அடுத்த கட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள உடல் ஊனமுற்றோருக்கு புனர் வாழ்வு தருவதில், இப்புதிய நிலையத்தை தொடங்குவதன் மூலம் எங்கள் சேவையை மக்களுக்கு வழங்குவதில் மேலும் ஒரு புதிய சகாப்தத்தில் நுழைகிறோம்.



# இதன் வயது 160

இந்தியாவின் மிகப் பழமையான கண் மருத்துவமனை சென்னைக் கண் மருத்துவமனையாகும். இந்தியாவின் முதல் கண் சேமிப்பு (Eye Bank) முறை தொடங்கப்பட்டதும் இந்த மருத்துவமனையில் தான்.

இன்று உலகப்புகழ் வாய்ந்த மருத்துவமனையாகத் திகழும் சென்னை எழும்பூரிலுள்ள அரசினர் கண் மருத்துவ மனையில் தான் 1926-ஆம் ஆண்டு கண்நோய் நிபுணருக்கான சான்றிதழ் முதுநிலைப் படிப்புத் தொடங்கப்பட்டது.

இன்று கண் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்பு வசதி வரை இங்குள்ளது.

இங்கு பயிற்சி பெற்ற கண் மருத்துவர்கள் தாம் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் கண் மருத்துவர்களாக முதலில் பணியாற்றியுள்ளார்கள். உலகின் பல நாடுகளிலிருந்தும் கண் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புக்காக இந்த மருத்துவமனைக்கு வந்து பயிற்சி பெற்றோரும் உண்டு.

சென்னையிலுள்ள மருத்துவக் கல்லூரிகளிலிருந்து ஏறத்தாழ 250 மாணவர்கள், ஆண்டுக்கு இருமுறை 3 மாதங்களாகப் பயிற்சிக்காக அனுப்பப்படுகிறார்கள். ஆண்டுக்கு இருமுறை முதுநிலைச் சான்றிதழ்ப் படிப்புக்காக மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

சென்னையிலுள்ள கண் மருத்துவமனை, கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகக் குழுவின் சார்பில் ராபர்ட் ரிச்சர்ட்ஸன் என்னும் மருத்துவ நிபுணரால் 1819-ஆம் ஆண்டில் ராயப்பேட்டையில் சென்னை கண்மருந்தகம் என்ற பெயரில் தொடங்கப்பட்...

கடந்த 160 ஆண்டுகளில் சென்னைக் கண் மருந்தகம் மகத்தான வளர்ச்சி அடைந்து இன்று உலகிலுள்ள மிகப் பெரிய கண் மருத்துவமனைகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

கண் மருத்துவமனைக்கான இடம்-சென்னை எழும்பூரில் இப்பொழுது கண் மருத்துவமனை அமைந்துள்ள இடம் 1884-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு 1886-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது.

பல்வேறு கட்டங்களில் வளர்ந்து இன்று இந்தியாவிலுள்ள புகழ் வாய்ந்த மருத்துவ மனைகளில் ஒன்றாகத் திகழும் இங்கு நாள் தோறும் 700 புறநோயாளிகள் கண் சிகிச்சைக்காக வருகிறார்கள்.

ஏறத்தாழ 500 நோயாளிகளுக்குப் படுக்கை வசதியுடன் இங்கே சிகிச்சை அளிக்க முடியும்.

புறநோயாளிகள் பிரிவில் ஆண்களுக்கென்று தனியாகவும், பெண்களுக்கென்று தனியாகவும் புறநோய்ப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கண் அழுத்தநோய்ப் பிரிவு (Glaucoma Clinic), மாறுகண் நீக்கு நிலையம் (Orthopic Clinic), விழியுடன் இணைந்த கண்ணாடிச் சிகிச்சைப் பிரிவு, (Contact Lens Clinic), நரம்பியல் கண்நோய்ப் பிரிவு (Neuro Ophthalmology) என்பவற்றுடன் கருவிழிமாற்று அறுவை முறையும் விழித்திரைச் சரிவுச் சிகிச்சை முறையும் இங்கே சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றன.

கண்ணில் உண்டாகும் படலம் அல்லது புரை குணப்படுத்தக் கூடிய ஒன்றாகும். புரை(Cataract) நன்கு முற்றி, அறுவைச் சிகிச்சைகாகப் பல மாதங்கள் காத்துக் கிடக்க வேண்டியிருக்கும் என்ற பழைய நிலை இப்போது மாறிவிட்டது. தற்காலக் குளிர்நிலை அறுவைச் சிகிச்சை - 'கிரையோ சர்ஜரி' முறையாலும், ஜோனலைசிங் என்ற மருந்தினாலும் மிக நேர்த்தியான நுண்ணிய நூலிழை



களின் உதவியாலும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. புரையினால் அசௌகரியம் ஏற்பட்டவுடனே புரை முற்றும் வரை காத்திருக்கும் நிலை தவிர்த்து, உடனே அறுவைச் சிகிச்சையை மிக வெற்றிகரமாக முடித்துவிட முடிகிறது என்றார்கள்.

கண்ணை அடியோடு பாதிக்கும் சக்தி இந்தக் கண் அழுத்த நோய்க்கு உண்டு. இந்த நோயை ஆரம்ப காலத்திலேயே கண்டு, முறைப்படி குணப்படுத்தாவிடில் ஈடுசெய்ய முடியாத பார்வை இழப்பில் முடியும்.

கண் அழுத்த நோய்ப் பிரிவைக் காணச் செல்கிறோம். இங்கேயுள்ள கண் அழுத்த நோய்ப் பகுதி நவீன சாதனங்களடங்கியது. புரொஜக்ஷன் பெரிமீட்டர், கோனியோ, ஸ்கோப், அப்ளனேஷன் டோனோ மீட்டர் என்பன போன்ற கருவிகள் அங்கே உள்ளன. ஒரு பெண்ணின் முகத்தைப் புரொஜக்ஷன் பெரிமீட்டரில் வைத்துக் கண் அழுத்தத்தின் தரத்தைக் கண்டறிகிறார் டாக்டர். இந்தக் கருவிகளின் உதவியால் ஆரம்ப காலத்திலேயே இந்த நோயைக் கண்டுபிடித்து வெற்றிகரமாக சிகிச்சை அளிக்க முடிகிறது. இந்த நவீன அறுவைச் சிகிச்சை முறைகளால் மேல்நாட்டுக்கு இணையாக இந்த நோயைக் குணப்படுத்த முடிகிறது.

''மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்ள விரும்பாதவர்களுக்கும் கண்ணாடி அணிவித்துச் சரி செய்ய முடியாத கண் கோளாறுகளுக்கும் கான்டேக்ட் லென்ஸ் முறை நல்வாய்ப்பாக அமைந்துள்ளது. இப்போதைய மூக்குக் கண்ணாடி விலையையும் மற்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த வகைக் கண் லென்ஸ்களுக்காகச் செலவிடப்படுவது சில நூறு ரூபாய் என்றாலும் பார்வையைப் பெற முடிகிறது.

''அதை அவரவர் விருப்பம் போல் கண் மருத்துவ மனையில் கான்டேக்ட் லென்ஸ் பொருத்திக் கொள்ள அனுமதிப்பதில்லை. அவசியம் பொருத்தப்பட வேண்டிய நபர்களுக்கும், பொருத்தினால் பலன் நீடித்திருக்கும் என்ற நோயாளிகளுக்கும் மட்டுமே கான்டேக்ட் லென்ஸ் பொருத்தப்படுகிறது. அவ்வாறு பொருத்திக் கொண்டவர் பிறர் உதவியின்றித் தாமே தேவைப்படும்போது கழற்றி மீண்டும் பொருத்திக் கொள்ளவும் பயிற்சி அளிக்கிறோம்'' என்று தெரிவிக்கிறார்கள்.

**மாறு கண் நீக்கும் பிரிவு:**

பொதுவாகக் கண்களிலுள்ள தசைகள், நரம்புகள் பாதிக்கப்படுவதால் இத்தகைய முறை ஏற்படுகிறது. இரண்டு கண்களும் ஒரு பொருளைப் பார்க்கும்போது அதன் பிம்பம் விழித்திரைகளில் சரியாக விழாமல் அரைகுறையாகத் தெரிவதே, மாறுகண் உண்டாக்கும் பெரும் குறையாகும். இந்த நோய்க்குச் சிகிச்சையளிக்கக் கண் பார்வையின் கோணங்களைக் கண் மருத்துவ நிபுணர் நன்கு ஆராய்கிறார். 30 டிகிரிக் கோணம் வரை இருந்தால், குணப்படுத்தச் சாத்தியமானது என்கிறார்கள். இந்த மருத்துவ மனையில் இந்தப் பிரிவு பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இந்தக் குறை ஏற்பட்டால் குழந்தைப் பருவத்திலும், சிறுவர் சிறுமியர் பருவத்திலும் சிகிச்சை அளித்தால் விரைவில் முழுமையாகக் குணம் பெறலாம். அவ்வாறில்லாமல் மாறுகண் அல்லது கருடப் பார்வையை அதிர்ஷ்டம் எனக் கருதி அதைப் பற்றி அவ்வளவாக அக்கறை எடுத்துக் கொள்ளாமலிருப்பது நல்லதல்ல. கோணல் கண் முகத்தைக் கொடூரமாக்கிக் காட்டும். எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாகச் சிகிச்சை ஆரம்பிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நன்மை தரும்.

'நியூரோ ஆப்தால்மாலஜி' என்றால் நரம்பியல் கண்நோய்ப் பிரிவு என்று பொருள். இப்பிரிவும் இங்கு உள்ளது. நரம்பு சம்பந்தப்பட்ட நோயாளிகளை நரம்பியல் நிலையத்திற்கு முன்பு தேவையான பரிசோதனைகளைச் செய்து நரம்பியல் நிபுணர்களுக்கு மிக அவசியமாகத் தேவைப்படும் குறிப்புகளை அளித்து, அவர்கள் சரியாக நோய்க் கூறுகளை அறிய இந்தப் பிரிவு உதவுகிறது.

**ரெட்டினல் டிடேச்மெண்ட்:** ரெட்டினா என்றால் விழித்திரை கண் அறுவைச் சிகிச்சையில் விழித்திரைச் சரிவு என்பதை ரெட்டினல் டிடேச்மெண்ட் என்கிறோம். சில ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் இந்த வகை நோயாளிகள் சிகிச்சைக்காக வெளிநாடுகளுக்கோ, உத்தரப் பிரதேசத்திலுள்ள சிதாப்பூருக்கோ சென்றுகொண்டிருந்தார்கள். ஆனால், இப்போது இந்த மருத்துவமனையிலுள்ள இலட்சக் கணக்கான விலைமதிப்புடைய போட்டோ கோயாகுலேட்டர் ( Photo Coagulator ) என்ற ஒளிக் கதிர் வீச்சுக் கருவிமூலம் திசுக்களை நாசம் செய்தும் குளிர் நிலை அறுவைச் சாதனத்தின் (கிரையோ ஸர்ஜரி) உதவியாலும் திசுவைப் பொசுக்கும் மற்றொரு







சாதனத்தினாலும் ( டையாதெர்மி) சுலபமாகக் கிடைக்கக் கூடிய சிலிகான் என்னும் பட்டைச் சுருள்களினாலும், உயர்ந்த ரக மயக்க மருந்துகளின் உதவியாலும் எல்லாவித விழித்திரைச் சரிவு நோய்களுக்கும் இங்கே வெற்றிகரமாகச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

''ஒரு நிமிடம் நின்று, பாதுகாப்பு உடை அணிந்து வாருங்கள்'' என்று சொல்லி நம்மை அழைத்துச் செல்கிறார் கண் மருத்துவமனைக் கண்காணிப்பாளர் திரு இ. டி. செல்வம் அவர்கள். அறுவைச் சிகிச்சைப் பணியை மேற்கொள்ள மாற்றுடை அணிந்து அவர் செல்வது போல, நாமும் உடை அணிந்து செல்கிறோம்.

''கண் தானம் வழங்குவது பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இப்போது தானம் வழங்கிய கண்ணைத் தேவைப்படுபவருக்குப் பொருத்துவதை நேராகவே பார்க்கப் போகிறீர்கள். அறுவைச் சிகிச்சை நடக்கும் இடத்திற்குச் செல்லுமுன் இப்படி உடையணிந்து பாதுகாப்பாகத்தான் செல்லவேண்டும். இந்த அறுவைச் சிகிச்சை முறைக்குக் கருவிழி மாற்று அறுவை முறை (கெரட்டோ ப்ளாஸ்டி) என்று பெயர்'' என்று விளக்கினார்.

''கண்களை யாருக்கு வேண்டுமானாலும் இவ்விதம் பொருத்த முடியுமா?''

''யாருக்கும் பொருத்தலாம். கண்ணின் கருவிழி மீது மாற்றுக் கண் கருவிழியை மட்டும் அறுவைச் சிகிச்சை மூலம் பொருத்துகிறோம். பொருத்திக் கொள்வோரின் கண்களின் உள்அமைப்பு அதிகம் சீர்கேடு அடைந்திருக்கக் கூடாது. கைக்கடிகாரத்தின் கண்ணாடியின் மேல் பல கீறல்கள் விழுந்து விடுகின்றன. அதை மாற்றிப் புதிய கண்ணாடியைப் பொருத்தினால் கடிகாரத்தின் முகப்பை நன்கு பார்க்கலாமல்லவா? கண்ணாடி மட்டும் புதியதாக இருந்து கடிகாரத்தில் உள் உறுப்புகள் மிகவும் சேதமடைந்திருந்தால் புதிய கண்ணாடி மாற்றுவதால் என்ன இலாபம்? அந்த உதாரணம் அப்படியே பொருந்தும் இங்கேயும்'' என்றார். ''வாருங்கள் ஆபரேஷன் தியேட்டருக்குச்செல்வோம்? அங்கு நோயாளி தயாராகிவிட்டார்'' என்று கூறியபடி விரைந்து சென்றார். நாமும் தொடருகிறோம். நான்கு உதவியாளர்களுடன் அறுவைச் சிகிச்சை துவங்கியது. இரண்டு கண்ணாடிக் குப்பிகளில் நோயாளிகளுக்குப் பொருத்த வேண்டிய இரு கண்விழிகள் - இறந்தவர் உடலிலிருந்து எடுக்கப் பெற்றவை.

மிகப் பொறுமையாகக் கவனத்தோடு ஐம்பது நிமிடகாலம் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. நோயாளியின் குறைபாடுள்ள கண் பகுதி தவிர மற்ற பகுதி முழுவதும் வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருந்தது. வேதனை கலந்த அந்த ஐம்பது நிமிடங்களுக்குப் பின் வெற்றிப் புன்னகையுடன் வெளி வந்த டாக்டர் தம் கடமையைத் திருப்திகரமாக முடித்தவிட்டதாகக் கூறினார். இரண்டு வாரங்களுக்குப் பிறகு நோயாளிக்குத் தையல் பிரிக்கப்படும், அதன் பிறகு குணம் அடைந்த கண்ணில் ஒளி பிறக்குமாம். இந்த வகை சிகிச்சையில் வெற்றி பெற்று மீண்டும் பார்வை பெற்ற இரண்டு பேர்களை சந்திக்கிறோம். ஊனக்கண் உடையவர்களாகவே அவர்களைக் காண முடியவில்லை. 'தானக்கண்' உதவியால் எல்லோரையும்போல் அவர்களும் சாதாரணமாகத் தங்கள் வேலைகளைச் செய்வதைக் காண்கிறோம்.

பார்வையளிக்காமல் முக விகாரத்தை மறைக்கச் செயற்கைக் கண்களையும் பொருத்துகிறார்கள். அந்த வகைக் கண்களுக்குக் 'காஸ் மெடிக் ஐ' என்று பெயர்.

''கொலைகாரனின் பார்வையிலும் இரக்கம் தென்படும். மனந்தான் அதற்குக் காரணம். உணர்ச்சிகள்தாம் பார்வை மூலம் வெளிப்படுகின்றன.

''பத்து வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுகிறேன். சென்னை, சென்ட்ரல் ஜெயிலில் விடியற்காலை ஒரு கொலைகாரரைத் தூக்கில் இட்டதும் எங்களுக்குத் தகவல் வந்தது. அந்தக் கொலைகாரர் தம் இரு விழிகளையும் தானமாக வழங்கச் சம்மதித்திருப்பதாகப் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தெரிவிக்கவே, நாங்கள் விரைந்து சென்றோம். தூக்குத் தண்டனை நிறைவேறிய பின் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் அந்த நபரின் கண்களை எடுத்து வந்தோம். பரிசோதித்தோம். பக்குவப்படுத்தினோம்.

''எங்கள் மருத்துவ மனையில் பட்டப் படிப்பு முற்றுப் பெறும் நிலையிலிருந்த ஒரு வாலிபர் சிகிச்சைக்கு வந்திருந்தார். வெடிமருந்தால் அவர் வீட்டுக் கிணற்றில் பாறையைத் தகர்த்தபோது பாறைச் சில்லுகள் அவர் கண்களைத் தாக்கிப் பார்வையைப் போக்கிவிட்டன. எங்கள் சிகிச்சை பலனளிக்காது போகவே அவரை இருக்கச் சொல்வதா, வீட்டுக்கனுப்புவதா என்ற நிலையில் நாங்கள் தவித்துக் கொண்டிருந்தோம். அந்த நிலையில் இந்தக் கொலைகாரரின் கண்கள் எங்களைத் தேடிவந்தன. அந்தப் பொன்னான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியதன் பலன், கண்ணிழந்த வாலிபர் பார்வை பெற்று மனமகிழ்வோடு வீடு திரும்பினார். ஆம்! கொலைகாரரின் கண்களென்று நாங்களோ, பொருத்திக் கொண்ட அவரோ தயங்கவில்லை!

''இந்தக் கெரட்டோபிளாஸ்டி என்ற கருவிழி மாற்று அறுவை முறை இங்கே எப்போது துவங்கியது?''

''1948ஆம் ஆண்டு டாக்டர் திரு முத்தையா அவர்கள் ஐக்கிய நாடுகளில் கல்விப் பயணம் முடிந்து வந்தவுடன் கண்சேமிப்பு ( Eye Bank ) நிலையத்தைத் துவங்கினார். இலங்கையிலிருந்தும் குறிப்பாகப் பௌத்த மதத்தினரிடமிருந்தும் அவர்கள் மறைவிற்குப்பின் எங்கள் கண் சேமிப்பு நிலையத்திற்கு விமானம் மூலம் கண்கள் வருவதுண்டு'' என்றார் திரு செல்வம்.

''கண்களைத் தானம் வழங்குவோர் முன்வந்தாலும் சட்டம் அதை ஆமோதிக்குமா?''

''நம் நாட்டில் சட்ட ரீதியான தடையினால் பிரதேசப் பரிசோதனையின்போது கண்கள் கிடைப்பதில்லை. இருந்தும் தாமாக விரும்பினால் குடும்பத்தாரின் சம்மதம் பெற்றுத் தம் மறைவிற்குப் பிறகு கண்களைத் தானமாக வழங்கலாம். அதற்கு உயிருடனிருக்கும் பொழுதே உயில் போல் எழுதி வைத்துவிடலாம்.

மறையும் பொழுதும் மற்றவர்களுக்கு நாம் உதவ வாய்ப்பளிக்கிறது 'கண்தானம்'



விழி இழந்தோருக்கு ஒளி வழங்க நமக்குக் கிடைத்த நல் வாய்ப்பு இது!

—[illegible]



# கோவையில் ஒரு திருவிழா!

தமிழகத்தில் புதிய சிந்தனையை—புதிய ஓட்டத்தை-தங்கள் நவீனங்களில் அறிமுகப்படுத்தும் எழுத்தாளர்கள் அண்மைக் காலத்தில் தோன்றியிருக்கிறார்கள். அவர்களது நூல்களைப் பெருவிருப்பத்துடன் படிக்கும் வாசகர் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. புகழ் பெற்று விளங்குகின்ற அத்தகைய எழுத்தாளர்களைச் சந்திக்கவோ-அவர்களுடன் உரையாடவோ வாய்ப்பில்லாமல்-அவர்களது நூல்களைப் படிப்பதன் மூலமே அவர்களை உணர்ந்து வரும் 'கோப்பெருஞ் சோழ' ரசிகர்களாகவே அவர்கள் இருக்கிறார்கள்.

அந்த ரசிகர்கள் எல்லாரும் தாங்கள் பெரிதும் விரும்பும் எழுத்தாளர்களைச் சந்திக்க வாய்ப்புப் பெற்றால்-அவர்களுடன் கலந்துரையாட அனுமதிக்கப் பெற்றால்-தங்களது உள்ளத்தில் எழும் வினாக்களை அந்த எழுத்தாளர்களிடம் கேட்டுப் பதில் பெறுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டால்-நிச்சயம் மகிழ்ச்சியுறுவார்கள் என்ற உண்மையை அறிந்து கொண்ட இரண்டு நண்பர்கள்-கோவையில் ஒரு புதிய முயற்சியினை மேற்கொண்டார்கள். அதன் விளைவுதான் கோவையில் 15-6-'79 முதல் 9-7-'79 வரை நடைபெற்ற 'வாசகர் திருவிழா' ஆகும்.

புகழ் பெற்ற 'எழுத்தாளர்களான சுஜாதா-சிவசங்கரி போன்றவர்கள் இந்த விழாவுக்கு நேரில் வந்திருந்தனர். வாசகர்கள் அவர்களிடம் கேட்க விரும்பும் வினாக்களை எழுதித் தங்கள் விலாசத்தையும் குறிப்பிட்டு-அதற்கென வைக்கப் பெற்றிருந்த கேள்விப் பெட்டியில் போட்டுவிட வேண்டும். குறிப்பிட்ட அந்த எழுத்தாளர்கள் விழாவுக்கு வரும் நாளன்று— கேள்விகள் அவர்களிடத்தில் கொடுக்கப்படும். அவற்றிற்குத் தகுந்த பதில்களை எழுத்தாளர்கள் அளிப்பார்கள். இதில் சுவையான செய்தி என்னவென்றால், கேள்விகளை எழுதியவர்களும் அரங்கத்தில் அமர்ந்திருக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. அதனால் கேள்வி கேட்டவர் யார் என அறிந்து கொள்ளத் துடித்த எழுத்தாளர்கள்-வினா விடுத்தவர்களை நேரடியாகப் பார்த்துக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

எழுத்தாளர் சுஜாதா அவர்கள் வருகை புரிந்தபோது - வாசகர்களின் கேள்விகள் அவரிடம் கொடுக்கப்பட்டன. அவற்றிற்கு அவர் பதில் அளித்தார்.

''சரித்திரக் கதைகளை எழுதும் எண்ணம் உண்டா?'' என்று ஒருவர் கேட்டிருந்தார்.

''எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் எனக்குச் சரித்திரத்தில் 30 மார்க்குதான் கிடைத்தது'' என்று நாசூக்காகப் பதில் சொன்னார் சுஜாதா.

''நல்ல புத்தகங்களைக் குறைந்த விலையில் கொடுப்பீர்களா?'' ஒருவர் கேட்டிருந்தார்.

'நல்ல புத்தகம் எது என்பது வாசகர்களாகிய நீங்கள் தீர்மானிப்பது, விலை, பதிப்பகத்தார் நிர்ணயிப்பது''-சுஜாதாவின் சுவையான பதில் இது.

''ஏற்கெனவே கேள்விப் பெட்டியில் கேள்வி எழுதிப் போடாவிட்டாலும், வாசகர் திருவிழாவில் எழுத்தாளர்களைச் சந்திக்க வருகை புரிந்திருந்த ரசிகர்கள் இப்போது கேள்வி கேட்கலாம்'' என்று அங்கே திடீரென்று அறிவிக்கப்பட்டவுடன், வாசகர்கள் நான், நீ என்று போட்டி போடத் துவங்கி விட்டனர். அதனால் குறிப்பிட்ட ஐந்து இளைஞர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப் பெற்று, கேள்வி கேட்பதற்கு அனுமதிக்கப்பட்டனர் - அவர்கள் சுஜாதாவைக் கேள்வி கேட்டனர். அவர் தக்க வகையில் பதிலளித்து அந்த ரசிகர்களையும் விழாவுக்கு வந்திருந்தோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

இப்படியே எழுத்தாளர் சிவசங்கரி, நா. பார்த்தசாரதி, வல்லிக்கண்ணன் ஆகியோரின் சந்திப்பு சுவையான கேள்வி - பதில்களுடன் நடைபெற்றது.

ரா. கணபதி, எழுதிய 'ஸ்வாமி' என்னும் நூலின் விமர்சன விழாவும்-சிவசங்கரியின் '47 நாட்கள்' என்னும் நூலின் வெளியீட்டு விழாவும் இந்த வாசகர் திருவிழாவிலேயே நடைபெற்றது.


வாசகர் திருவிழா-வாசகர்களின் மத்தியில் புதிய வரவேற்பைப் பெற்றதுடன்-ஏராளமான நூல்கள் விற்பனை ஆவதற்கும் வழிவகுத்தது. விழாவில் வைக்கப்பட்டிருந்த கருத்துப் பெட்டிகளின் உள்ளே நிறைந்திருந்த வாசகர் கடிதங்கள் அற்புதச் சிந்தனைகளின் வார்ப்படங்களாகத் திகழ்ந்தன.

இவ்வளவு பெருமைக்கும் காரணமான விழா அமைப்பாளர் திரு மு. வேலாயுதம்-புத்தகக் கண்காட்சி நிருவாகி எஸ். நல்லையன் இருவரையும் வாசகர்களும் எழுத்தாளர்களும் மனம் திறந்து பாராட்டினார்கள்.

ஆலை நகரமாக உள்ள கோவை நகரம்-வாசகர் திருவிழாவின் காரணமாக இலக்கியச் சோலை நகரமாக மாறியிருந்தது. கோவையில் முகிழ்த்துள்ள இந்தப் புதிய ஆர்வம் தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பரவினால்-வாசகர்களும் எழுத்தாளர்களும் - பதிப்பாளர்களும் ஒரே நேரத்தில் பயன்பெறுவார்கள் என்பது உறுதி; அதன் விளைவாக 'தமிழ் இலக்கியச் சோலை' மேலும் செழித்து வளருவது திண்ணம்.

—தமிழ்ப்பித்தன்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
முகவரி :



தந்தை பெரியாருடன் திரு வி. க; டாக்டர் வரதராஜுலு (நாயுடு)

தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா சந்திப்பு

பதிவு எண். M. 8676













# பெரியார் மாவட்டம் துவக்க விழா



ஈரோடு 24-9-1979

